சரசுவதி மகால் வெளியீடு எண். 336

# திருக்குறள்

**(ஜைன உரை)**

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

1991

விலை ரூ. 75-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண் 336

# திருக்குறள்

## (ஜைன உரை)

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் :

**கே. எம். வேங்கடராமையா**
முன்னாள் பேராசிரியர்,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

இயக்குநர்,
தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
**சரசுவதி மகால் நூல் நிலையம்,**
தஞ்சாவூர்.

கி. பி. 1991] [விலை ரூ. 75—00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | திருக்குறள் (ஜைன உரை) |
| பதிப்பாசிரியர் | : | கே. எம். வேங்கடராமையா |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் |
| வெளியீட்டு எண் | : | 336 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | டிசம்பர், 1991 |
| தாள் | : | 14. 2 கிலோ சேஷசாயி |
| நூல் அளவு | : | 21 x 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 580 |
| படிகள் | : | 1200 |
| எழுத்து | : | 10 புள்ளி |
| அச்சிட்டோர் | : | சிவகாமி அச்சகம், சிதம்பரம். |
| புத்தகக்கட்டு | : | ஆப்காலிகோ |
| பொருள் | : | நீதி இலக்கியம் |
| விலை | : | ரூ. 75—00 |

# வெளியிடுவோர் உரை

தமிழின் தொன்மைச் சிறப்பையும், தமிழரின் பெருமையையும் உலக அரங்கில் உயர்த்திக் காட்டுகின்ற சிறந்த நீதி இலக்கியமாகத் திருக்குறள் விளங்குகின்றது. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறள், நெடிய தமிழ் இலக்கிய வரலாற்றில் இன்றுவரை நிகரற்ற நூலாக நிலவி வருகின்றமை அனைவரும் அறிந்ததே.

திருக்குறளின் குறட்பாக்களுக்குக் காலந்தோறும் பற்பல அறிஞர்கள் புதிய புதிய கோணங்களிலும் குறள்களுக்குரிய உண்மைப் பொருளைக் கண்டு கூறும் வகையிலும் உரை வரைந்து தந்துள்ளனர். நூலொப்பவே உரைகளும், நூலாசிரியரொப்பவே உரையாசிரியரும் இலக்கிய உலகால் மதிக்கப்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

திருக்குறளுக்குப் பண்டைக் காலத்தில் உரை எழுதிய பதின்மரைப் பற்றிக் குறிப்பிடுகின்ற வெண்பா ஒன்று உள்ளது.

'தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமே லழகர் — திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்(கு)
எல்லையுரை செய்தார் இவர்'

என்பதே அவ்வெண்பாவாகும்.

இப்பதின்மரின் உரையோடு, மேலும் பலரின் உரைகள் திருக்குறளுக்கு எழுதப்பெற்றுள்ளன. இக்காலத்திலும் தேவநேயப் பாவாணர், புலவர் குழந்தை மு. வ., நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, கா. சு. பிள்ளை, வீ. முனுசாமி முதலியோர் உரை எழுதியுள்ளனர்.

இவ்வாறு பல்கிப் பெருகியுள்ள உரைகளுக்கு இடையில் இங்குத் 'திருக்குறள் ஜைன உரை' பதிப்பிக்கப்படுகின்றது. இந்நூல் நமது சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள, ஓலைச்சுவடியிலிருந்து படியெடுத்து வைக்கப் பெற்ற கையெழுத்துப் பிரதியில் (பிரதி எண். 1940) இடம் பெற்றுள்ளதாகும்.

இத்திருக்குறள் மூல - உரைப் பதிப்பு குறித்த விவரங்களையும், இவ்வுரையின் சிறப்புகளையும் இந்நூலைப் பதிப்பித்துள்ள அறிஞர் திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் தம் முகவுரையில் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

நடுவண் அரசின் நிதியுதவி பெற்று வெளியிடப்படுகின்ற இந்நூலைப் பதிப்பித்துள்ள அறிஞர் திரு. கே. எம். வேங்கடராமையா அவர்களுக்கும், நடுவண் அரசிற்கும் நூலகத்தின் சார்பாக என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்துள்ள சிதம்பரம் சிவகாமி அச்சகத்தார்க்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் அன்பர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பது திண்ணம்.

தஞ்சாவூர்,
26-10-91

**தி. சண்முக ராஜேஸ்வரன், இ. ஆ. ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
இயக்குநர் (பொறுப்பு)
சரசுவதி மகால் நூலகம்.

# எமது தமிழ் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | அதிரூபவதி கல்யாணம் | ... | 15—00 |
| 2 | அருணாசலேசர்மீது வண்ணம் | ... | 17—00 |
| 3 | அருணாசல புராணம் | ... | 24—00 |
| 4 | ஆத்திசூடி புராணம் | ... | 40—00 |
| 5 | அதிரியர் அம்மானை | ... | 16—00 |
| 6 | அரவான் களப்பலி நாடகம் | ... | 25—00 |
| 7 | ஆசிரிய நிகண்டு—பாகம் II | .. | 10—00 |
| 8 | சீவகசிந்தாமணி அம்மானை | ... | 19—00 |
| 9 | சித்ர புத்ர அம்மானை | ... | 26—80 |
| 10 | தாசபோதம்—பாகம் I | ... | 65—00 |
| 11 | தாசபோதம்—பாகம் II | ... | 60—00 |
| 12 | தருமநெறி நீதிகள் | ... | 7—00 |
| 13 | ததீசி புராணம் | ... | 7—06 |
| 14 | அரிச்சந்திர நாடகம் | ... | 9—00 |
| 15 | கும்பகோண புராணம் | ... | 40—00 |
| 16 | கூர்ம புராணம்—பாகம் I | ... | 105—00 |
| 17 | கூர்மபுராணம்—பாகம் II | ... | 105—00 |
| 18 | குசலவன் கதை | ... | 15—00 |
| 19 | கஞ்சனம்மானை | ... | 35—00 |
| 20 | குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் | ... | 23—00 |
| 21 | குடந்தை அந்தாதி | ... | 10—00 |
| 22 | காமாட்சி தவசு | ... | 12—00 |
| 23 | மார்க்கண்டேயன் அம்மானை | ... | 40—00 |
| 24 | மாலைத் தொகுப்பு | ... | 18—00 |
| 25 | நாராயண சதகம் | ... | 8—00 |

| | | |
|---|---|---|
| 26 | நீதிநூல் ... ... | 10—00 |
| 27 | நல்லூர் புராணம் ... ... | 50—00 |
| 28 | நாசிகேது புராணம் ... .. | 5—00 |
| 29 | நளச்சக்கரவர்த்தி கதை ... | 20—00 |
| 30 | பலஜாதிகம் — விகடம் ... | 28—00 |
| 31 | பரசமய கோளரியார் பிள்ளைத்தமிழ் | 14—00 |
| 32 | பார்சுவநாதர் அம்மானை ... | 6—00 |
| 33 | புல்லையந்தாதி ... ... | 12—00 |
| 34 | பிரயோக விவேகம் ... ... | 86—00 |
| 35 | பிரபோத சந்திரோதயம் ... | 153—00 |
| 36 | ராமர் அம்மானை ... | 22—00 |
| 37 | ராமய்யன் அம்மானை ... | 18—00 |
| 38 | சமாதிலிங்க பிரதிட்டை ... | 12—00 |
| 39 | சங்கற்ப நிராகரணம் ... | 23—00 |
| 40 | சிவப்பிரகாச விகாசம் ... | 23—00 |
| 41 | சோமயாகப் பெருங்காவியம் ... | 19—00 |
| 42 | சரசுவதி மகால் வழிகாட்டி ... | 7—00 |
| 43 | தமிழிசைப் பாடல்கள் ... | 12—00 |
| 44 | திரௌபதை அம்மானை ... | 18—00 |
| 45 | வண்ணத்திரட்டு ... | 19—90 |
| 46 | வீராகமம் ... | 11—00 |
| 47 | நீதித்திரட்டு ... | 85—00 |
| 48 | சிவபூஜாபத்ததி ... | 23—00 |
| 49 | சதாசிவ தியானம் ... | 7—00 |
| 50 | பாரத அம்மானை ... | 90—00 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

*தஞ்சாவூர்,*
*15—12—91.*

தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library.' It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

**DIRECTOR,**
Sarasvati Mahal Library, Thanjavur.

# ஆராய்ச்சி முன்னுரை

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

திருக்குறள் உலகப் பொது நூல்: தண்டமிழின் மேலாம் நிரம் என்று சிறப்பிக்கப் பெறுவது. கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் ஆங்கிலம், லத்தீன் முதலிய மேலை நாட்டு மொழிகளிலும், தெலுங்கு, மலையாளம், கன்னடம், முதலிய இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட தனிச் சிறப்புடையது. திருக்குறளைப் போற்றாத புலவர் இலர்: திருக்குறட் கருத்துக்கள் காணப் பெறாத நூல் இல்லை.

''ஒருவன் செய்தி கொன்றோர்க்குய்தி யில்லெனஅறம் பாடிற்றே'' - என்ற புறநானூறு 34 ஆம் செய்யுளில் ஆலத்தூர் கிழார் திருக்குறளை ''அறம்'' என்றே குறித்தார். குறள் வெண்பாவான் ஆக்கப்பட்டமையின் ''குறள்'' என்றும், அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்று மூன்று பால்கள் உடைமையின் ''முப்பால்'' என்றும் இந்நூல் வழங்கப் பெறும். வெள்ளி வீதியார் ''திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழி'' என்பர் (திருவள்ளுவமாலை 23); மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் ''வள்ளுவர் வாயுறை வாழ்த்து'' என்பர் (35) மணி மேகலை ஆசிரியர் ஆகிய சீத்தலைச் சாத்தனார் ''பொய்யில் புலவன் பொருளுரை'' என்றார் (மணிமேகலை - சிறை - 59 - 64)

'தேவர் குறளும்' என்ற ஔவையின் பாடல், திருவள்ளுவரைத் 'தேவர்' என்று குறிப்பிடும்; திருவள்ளுவமாலை 41 ஆம் செய்யுளும், ''தேவர் - திருவள்ளுவர் தாமும் செப்பியவே செய்வார் - பொருவில் ஒழுக்கம் பூண்டார்'' என்று திருவள்ளுவரைத் 'தேவர்' என்று கூறாநிற்கும். நச்சினார்க்கினியரும் 'தேவர்' என்றே குறிப்பிடுவர் (சீவகசிந்தாமணி செ 1891, 1927 உரை)

வெண்பாமுதற்பாவெனப்படும். அப் பாவால் நூல் செய்தமையின் 'முதற்பாவலர்' என்பர் திருவள்ளுவரை. ''முப்பால் மொழிந்த முதற்பாவலர்'' என்பது திருவள்ளுவமாலை 18 ஆம் செய்யுள்.

கவிகளாகிய தேனைச் சொரியும் செந்நாவினர் ஆகையால் ''செந்நாப் போதார்'' எனப் பெற்றார். ''மாதானு பங்கி மறுவில் புலச் செந்நாப் போதார் புனற் கூடற் கச்சு'' என்பர் நல்கூர் வேள்வியார் (செ. 21)

தொடித்தலை விழுத்தண்டினார் திருவள்ளுவமாலை (செ. 22. இல்) ''நாலும் மொழிந்த பெருநாவலரே நன் குணர்வார்'' என்ற விடத்துத் திருவள்ளுவரைப் 'பெருநாவலர்' என்றார்.

''புலவர் திருவள்ளுவர் அன்றி'' என்ற திருவள்ளுவமாலை 34 ஆம் செய்யுள், திருவள்ளுவர் ஒருவரையே 'புலவர்' எனல் வேண்டும் என்று குறிப்பிடும்.

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை''

என்புழிச் சீத்தலைச் சாத்தனார் திருவள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' என்றமை காணலாம்.

இங்ஙனம் புகழ்ந்தோதப்பெறும் திருவள்ளுவர் வாய் மொழியாகிய திருக்குறளைக் கற்றாலே போதும்; வேறு நூல்களைக் கற்றல் வேண்டா என்றனர் தமிழ்ப்புலவர்கள். புலவர் திருவள்ளுவரன்றிப் பூமேல் சிலரைப் புலவர் எனச் செப்புதல் கூடாது எனக் கருதினர்; வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்கு ஆய்தொறும் ஊறும் அறிவு என்று புகன்றனர்; ''எல்லாப் பொருளும் இதன் பால் உள' என மதிப்பீடு செய்தனர்; ''வந்திக்க சென்னி, வாய் வாழ்த்துக, நன்னெஞ்சம் சிந்திக்க, கேட்க செவி'' என்று வழுத்தினர்; ''சிந்தைக்கு இனிய செவிக்கு இனிய வாய்க் கினிய வந்த

இருவினைக்கு மாமருந்து'' என்று பாராட்டினர்; ''சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வல்லார் ஆர் வள்ளுவர் அல்லால்'' என்று வியந்தனர்; ''உள்ளுதொறுள்ளுதொறுள்ளம் உருக்குமே வள்ளுவர் வாய் மொழி மாண்பு'' என்று அனுபவித்து உரைத்தனர்; எல்லாப் பொருளும் இதன் பாலுள'' என்று துணிந்து கூறினர்; இந்நூலொன்றே ''வையத்துணை'' என்றனர்.

இங்ஙனம் பல்லாற்றானும் புகழப்பெற்ற திருக்குறளை ''உள்ளிருள் நீக்கும் விளக்கு'' என்றார் நப்பாலத்தனார். இத்திருக்குறளாகிய விளக்குக்கு அகல் - அறம்; திரி - பொருள்; நெய் - இன்பம்; செஞ்சொல் - தீ; தண்டு - குறட்பா; பின் வருவது அப்பாடல்:-

அறந்தகளி; ஆன்ற பொருள்திரி; இன்பு
சிறந்தநெய்; செஞ்சொல் தீ; தண்டு-குறும்பாவா;
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

இத்திருக்குறளை எல்லாச் சமயத்தினரும் தத்தம் சமயக் கோட்பாடுகளை உணர்த்தும் நூல் என்று கூறுவது எனினும் ஜைந சமயத்தவர் திருக்குறளை ''எம் ஒத்து'' என்று கூறுதலினின்றும் திருவள்ளுவரைச்சைன சமயத்தவர் என்று ஒருசாரார் கூறுவர். ஜைன சமய சித்தாந்தத்தின்படி திருக்குறளையியற்றியவர் ஸ்ரீகுந்த குந்த ஆசாரியர் என்பவர் ஆவர்.

ஆசார்ய ஸ்ரீ குந்த குந்தர் கி.மு. 52 முதல் கி.பி. 44 வரை வாழ்ந்தவர்.* இவர் 95 ஆண்டுகள் 10 திங்கள் 15 நாட்கள் உயிர் வாழ்ந்தார். இவருக்குப் பத்ம நந்தி, வக்கிர கிரீவர், கிருத்ர பிஞ்சர், ஏலாசாரியர் என்ற பெயர்களும் உண்டு; இவரைப் பற்றிய பாடல்கள் சிலாசாஸனமாகச் சிரவண பெல் கோலாவில் உள்ளன. (தி. ஆ. பக் கூசு - கூஎ) இந் நாளில் திருப்பாதிரிப் புலியூர் எனப்பெறும் ஊர் அந்நாட்களில் 'பாடலி

குந்த குந்தர் ஏலாசாரியர் என்னும் பெயர்களை யுடைய திருக்குறளாசிரியர் கி.பி: 108இல் குருபீடத்திற்கு வந்து கி.பி, 160 வரை இருந்திருக்கிறார். இவர் ஜனன காலம் கி,பி, 64. ·தி.ஆ. பக். அ௩.)

புரம்' என்று அழைக்கப்பட்டது. இப்பாடலில் ஒரு ஜைன சங்கம் அந்நாளில் சிறந்து விளங்கியது. இவர் அந்த ஜைந சங்கத்துக்குத் தலைவராகத் திகழ்ந்தார். இவர் ஜைந சமயக் கோட்பாடுகளைக் கரைகண்டுணர்ந்தவர். பிராகிருத மொழி யில் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் பஞ்சாஸ்திகாயம், பிரவசனஸாரம், ஸமயஸாரம் என்ற மூன்று நூல்கள் மிகச் சிறந்தவையாகும். இம்மூன்றும் 'பிரப்ருதத்திரயம்' என்று குறிக் கப்படும். இவ்வாசார்ய குந்தகுந்தர் தமிழில் எழுதிய நூல் திருக் குறள் ஒன்றேயாகும் என்று ஜைந சமயத்தார் கருதுவர். இவருக்கு ஏலாசாரியர் என்ற பெயரும் உண்டு என்று மேலே கூறப் பட்டது.

"ஏலாசாரியரால் சிருஷ்டிக்கப்பட்ட திருக்குறள்" என்று திரு T.S. ஸ்ரீபால் நயினார் அவர்களிடம் இருந்து பெற்ற திருக்குறள் ஜைநருரை கொண்ட ஓலைச்சுவடியில் காணப்படுவதாகப் பேராசிரியர் அ. சக்ரவர்த்தி அவர்கள் திருக்குறள் — கவிராச பண்டிதர் உரை நூலின் முகவுரையில் கூறுவது இங்கு அறிதற் பாலதாகும். எனவே திருக்குறளை இயற்றியவர் 'ஏலாசாரியார்' என்றும், ஆசார்ய ஸ்ரீ குந்த குந்தருக்கு ஏலாசாரியர் என்று பெயர் இருந்தமையின் ஆசார்ய ஸ்ரீ குந்த குந்தர் தமிழில் இயற் றிய நூல் திருக்குறள் ஆகும் என்றும், திருக்குறள் ஜைநசமயக் கோட்பாடுகளைக் கூறுவது என்றும் அறியப் பெறும்.

இவர் பிராகிருத மொழியில் இயற்றிய நூல்கள் 52 (ரி..ஆ பக் 92) இவற்றுள் 21 நூல்களைப் பற்றிச் சிறு குறிப்புக்கள் அருகன் தத்துவம் சுவடி 3, ஏடு 4,5, பக் 8—12 வரை தரப் பெற்றுள்ளன. (ஆண்டுக் காண்க).

ஏலாசாரியராகிய ஆசார்ய ஸ்ரீ குந்த குந்தர் அருளிய அற நூலாகிய திருக்குறளைக் கண்டு மகிழ்வெய்தி, ஆசாரிய ஸ்ரீகுந்த குந்தருடைய மாணாக்கர்களில் ஒருவரும் வானப் பிரஸ்தாஸ்ர மத்தை யுடையவரும் ஆகிய 'திருவுள்ளம் நயினார்'

''கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்''

என்று சிறப்பித்துப் பாடினார்.* ஸ்ரீகுந்த குந்தர் திருவுள்ளம் நயினாரின் நுண்ணிய அறிவை யறிந்து, இந்நூலை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றம் செய்யுமாறு பணித்தார். அங்ஙனமே திருவுள்ளம் நயினார் அரங்கேற்றுவித்தார்.

ஆசார்ய ஸ்ரீகுந்த குந்தர் தம் இறுதிக் காலத்தில் (வந்தவாசிக்கு அருகிலுள்ள) பொன்னூர் மலை (எனப் பெற்ற நீலகிரி) யில் தங்கியிருந்து மேற்படி மலையில் 'தேகவியோகமடைந்து சர்வார்த்த சித்தி யென்னும் பஞ்சநுத்தரத்தில் அக மிந்திரனாக அவதரித்தார்'' இவர் பொன்னூர் மலையில் தேக வியோகம் அடைந்ததால் அவருடைய நினைவாக அங்கு இரண்டு திருவடிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

இது காறும் கூறிய வாற்றான் திருக்குறளை இயற்றியவர் ஏலாசாரியர் எனப் பெற்ற ஆசார்ய ஸ்ரீ குந்த குந்தர் என்பதும், அவருடைய மாணாக்கர்களில் ஒருவராகிய திருவுள்ளம் நயினார் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றியவர் என்பதும் நன்கு தெரிய வரும். திருவுள்ளம் நயினாரே திருவள்ளுவர் என்று அழைக்கப்பட்டார்.

இத்திருக்குறளாகிய நூல், சைன சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்க வெழுந்ததாகும் என்பது சைனரின் கருத்தாகும்.

ஜைன சமயத்தில் கடவுள் வணக்க முறை நான்கு வகையாக அமையும். அருக சரணம், சித்த சரணம், சாது சரணம், தர்ம சரணம் என்பன அவை. சீவகசிந்தாமணி 382 ஆம் செய். 'நல்லறத் திறைவ னாகி நால்வகைச் சரணமெய்தி' என்ற பகுதிக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியரும் மேற்கண்ட நால்வகைச் சரணங்களைக் குறிப்பிடுகிறார் இந் நான்கையும் திருக்குறள் கடவுள் வாழ்த்தில் காணலாம்.

*இதனைப் பாடியவர் இடைக்காடர் என்று திருவள்ளுவ மாலையில் உள்ளது.

ஏழுசெய்யுட்களில் அருக சரணமும், ''கோளில் பொறியில்'' என்ற குறளில் சித்த சரணமும், ''பொறிவாயிலைந்தவித்தான்'' என்ற குறளில் சாதுசரணமும், ''அறவாழியந்தணன்'' என்ற குறளில் தர்ம சரணமும் அமைந்துள்ளன என்பர். (தி. ஆ. பக். 135) எனினும் கவிராஜ பண்டிதருரை (அச்சு நூல்) கடவுள் வாழ்த்து 10 ஆம் குறளுரை விளக்கவுரையில் இந்நூலைப் பதிப்பித்தவர்கள்.

''கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்துள் அருக சரணமும் சித்த சரணமும் அடங்கியுள்ளன வென்றும், நீத்தார் பெருமை யென்னும் அதிகாரத்துள் சாது சரணமும், அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரத்துள் தரும சரணமும் கூறப்படுள்ளன என்றும் ஜைன சமயப் பெரியோர் கூறுவர்'' — என்று எழுதியமை ஈண்டுக் கவனிக்கத்தக்கதாகும்.

ஆசார்ய ஸ்ரீ குந்த குந்தர், 'தசபக்தி' என்ற பிராகிருத நூலுள் நான்கு சரணங்களை (மங்கலகரமான பொருள்களைக்) கூறியிருக்கிறார். அவை சத்தாரி மங்களம் எனப் பெறும். சத்தாரி மங்களம் ஆவன அரண்ந்த மங்களம்; சித்த மங்களம்; சாது மங்களம்; கேபலிபண்ணத்தோ தம்மோ மங்களம் என்பனவாம்.

என் பாவம் நீங்க அருகனைத் தொழுகிறேன்
என் பாவம் நீங்கச் சித்தனைத் தொழுகிறேன்
என் பாவம் நீங்க முனிவர்களைத் தொழுகிறேன்
என் பாவம் நீங்க அறிவன் உரைத்த அறத்தைத் தொழுகிறேன்''*

என்பதும் அது. அந்த நான்கு மங்களங்கள்: அருகன், சித்தன், முனிவர் (சாது); அறம் (தர்மம்) என்பனவாம். இந்நான்கும் உலகத்தில் உத்தம மானவை என்றும் கூறப்பெறும்.

அருகர் சித்தர் ஆகியோர் உயர்ந்தவர்கள். இவர்களைப் 'பரமேட்டி' என்பர். எவர் இல்லறம் துறந்து துறவறம் ஏற்றுத் தன்சாதனை மூலமாக நான்கு காதி வினைகளை நீக்கி, அநந்த சதுட்டயம் (அநந்த தரிசனம், அனந்த ஞானம், அனந்த சுகம்,

* பகவதி ஜயராமன் - திருக்குறள் வழங்கும் செய்தி பக்கம் 84

அனந்த வீரியம்) வடிவில் இருக்கிறாரோ அவரே அருகர். எவர் இல்லற நிலையைத் துறந்து, துறவற சாதனை மூலம் நான்கு காதி வினைகளை நீக்கியபின் அநந்த சதுட்டயங்களைத் தோற்று வித்துக் கொண்டு, அகாதிவினைகளையும் வென்று, பிற பொருள் களின் தொடர்பு முற்றிலும் நீங்கிய பிறகு முழுமுத்தி நிலையை யடைந்தாரோ அவர் சித்தர். அவருக்கு எட்டுக் குணங்கள் கூறப் படும்.*

திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பகுதியில் இருக்கும் பாடல் கள் மேலே கூறிய அருக பரமனையும், சித்த பரமனையும் நோக்கிப் பாடிய பாடல்களேயாகும். எனவே அப்பகுதி அருக சித்த வணக்கப் பகுதி என்று உரைக்கத்தக்கது என்பதில் தவ றில்லை.‡ அருகனை வணங்குதல் அவன் உலகத்துக்கு வழங்கும் அறம் என்னும் கருணையின் பொருட்டாகும். சித்தனை வணங் குதல் அவன் நிலையே வாழ்க்கையின் இறுதியாகிய முடிந்தநிலை என்பதன் பொருட்டாகும். இந்த உண்மைகள் அடங்கியதே திருக்குறளின் கடவுள் வாழ்த்து.

அருக - சித்த வணக்கங்களுக் கடுத்து மூன்றாவது அதிகார மாகிய நீத்தார் பெருமை கூறுமுகத்தான் சாது சரணமும் நான் காவது அதிகாரமாகிய அறன் வலியுறுத்தலில் தர்மசரணமும் கூறப்பட்டன. எனவே "தன் வாழ்க்கையின் குறிக்கோளை யடைய வேண்டுபவன் இந்நான்கு மெய்ப் பொருள்களையும் சரணடைய வேண்டும்" என்பது பெறப்பட்டது.

தமிழில் சீவக சிந்தாமணியியற்றிய திருத்தக்க தேவரும் இந் நான்கு சரணங்களையும் கூறுகிறார். சீவக சிந்தாமணியின் உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர், 'மூவாமுதலா' என்னும் செய்யுளுரையில் "இது சித்த சரணம்" என்றும், "செம்பொன் வரைமேல்" என்ற செய்யுளுரையில் இது "அருக சரணம்" என்றும், "பன்மாண்" என்றதனுரையில் "இது தன்ம சரணமும் சாது சரணமும் கூறிற்று" என்றும் கூறியுள்ளார்

---

* ஆத்ம ஞானமலர் சுவடி 3, பக்கம் 4-6

‡ திருக்குறள் வழங்கும் செய்தி பக்கம் 83

இவ்வாற்றான் பாயிரப் பகுதி சைன சமயக் கோட்பாட்டிற் கேற்ப அமைந்தது என்று கொள்ளப் பெறும்.

கடவுள் வாழ்த்துப் பாடல்கள் பத்துள்ளும் காணப்படும் தொடர்கள் ஜைந சமயச் சார்புடையனவாம்.

முதற்குறளில் காண்பது ஆதிபகவன்: விருஷப தீர்த்தங்கரருக் குப் பிறகு இருபத்துமூவர் அவதரித்தனர். இவ்விருபத்து மூவர்க் கும் விருஷப தீர்த்தங்கரர் முதல்வர் ஆகையால், விருஷபதீர்த் தங்கரர் ஆதிபகவன் எனப்பட்டார். மேலும் இவர் கர்ம பூமியின் ஆதியில் மக்கள் உயிர்களுக்கு அக்ஷரம் கணிதம் (எழுத்தும் எண்ணும்) முதலானவற்றை உபதேசித்த ஆதி மூர்த்தி யாகை யால் ஆதிபகவன் எனப்பட்டார்.

''விருப்புறு பொன்எயிற்குள்
விளங்கவெண் ணெழுத்திரண்டும்
பரப்பிய 'ஆதிமூர்த்தி'' - என்றும்,
சொல்லிய யெழுத்தெண் ணெல்லாம்
தொல்லை நாள் எல்லையாக

நல்வகை யாக்கும் பிண்டி நாயகன்'' - என்றும் மண்டல புருடர் தம் நிகண்டு நாலாவது தொகுதியிலும், 12 ஆவது தொகுதியிலும் தெய்வ வணக்கத்தில் கூறியுள்ளார்.

''கோதிலருகன் திகம்பரன் எண்குணன் முக்குடையோன்
ஆதிபகவன் அசோகமர்ந்தோன் அறவாழி அண்ணல்

என்ற கயாதர நிகண்டு ''ஆதிபகவன்'' என்று அருகனைக் கூறும். சிலப்பதிகாரம் (நாடுகாண், கானல் வரி, 177) ''செறிவன் சிநேந்திரன் சித்தன் பகவன்'' என்று கூறும். ''ஆதி பகவனை அருகனை'' என்பது திருக்கலம்பகம் (செ. 109) எனவே ஆதி பகவன் என்பது அருக தேவனையே குறித்தலைக் காண்கிறோம்.

இரண்டாவது குறளில் காண்பது வாலறிவன் என்பது ஆகும். ''பகவன் என்ற சொல்லுக்கு அடியார்க்கு நல்லார் ''கேவல ஞானி'' என்று உரை வகுத்துள்ளார். கேவல ஞானம் என்றால் முற்றறிவு என்பது பொருள். எனவே முற்றறிவுடையவனை

"வாலறிவன்" என்ற தொடர் குறிப்பிடா நிற்கும்; சிலப்பதிகாரம் (நாடு காண் காதை வரி 176) "அறிவன் அறவோன்" என்றும், மேருமந்தரபுராணம் "அறிவினாலறியாத அறிவன் நீ" என்றும் கூறும் (செ. 630) "அறம் பகர்ந்த அறிவன்" என்பது சீவசம் போதனை (அத்தியாயம் 1, செ. 29).

மூன்றாவது குறள் மலர் மிசை யேகினான் என்ற தொடரையுடையது. இது அருகக் கடவுள் மலர்மேல் நடந்த செய்தியைக் கூறுவது. அருகக்கடவுள் திரு வடியின் கீழமைந்துள்ள தாமரை மலர் தவிரச் சமவசரணத்தின் மிசைச் செல்லும் போது முன்னேழு பின்னேழு தாமரைமலர்கள் தெய்வீக அதிசயத்தில் ஏற்படும்; அதன் மிசை அவர் நடப்பார். "மலர் மிசை நடந்தோன்" (சிலப், நாடு, வரி 204); "விரி பூந்தாமரை மேற் சென்ற திருவாரடி" (சீவக 2814); "கமல மீதுலவும் உனை" (மேரு மந்தர புராணம் செ. 66); "தண் தாமரை மலரின் மேல் நடந்தாய்" (சூளாமணி, துறவு, 71); "தாமரைப் பூவின் மேற் சென்றான் புகழ் அடி "அறநெறிச் சாரம் கடவுள் வாழ்த்து); "தன் தாமரைமேல் நடந்தான்" (நீலகேசி - 33) என்ற மேற்கோள்கள் இதனை வலியுறுத்தும். "போதில் நடந்தோன்" என்பது சுயாதரம்.

நான்காவது குறள் வேண்டுதல் வேண்டாமையிலான் என்ற தொடரையுடையது. வேண்டுதல் வேண்டாமை - ராகத்து வேஷங்கள் - விருப்பு வெறுப்புக்கள் இல்லாதவன் என்பது அருக பரமேஷ்டியைக் குறிக்கும். "வேண்டுதல் வேண்டாமை யில்லாத வீரன்" (திருக்கலம்பகம் 58); "ஆழ்த்துதி ஆர்வமும் செற்றமும் நீக்கிய அச்சுதனே" (திரு நூற்றந்தாதி செ. 20); "உவத்தல் காய்தல் உன் திருவுளத்து ஒன்றும் நீ இலை" (மேரு மந்தர புராணம் 178) ஆகியவற்றால் வேண்டுதல் வேண்டாமையிலான் அருகன் என்பது விளங்கும்.

ஆறாவது குறளில் கண்ட (பொறி வாயிலைந்து அவித்தான்) என்பது அருகக் கடவுளையே குறிக்கும். இக்கருத்து "ஐவரை வென்றோன்" (சிலப் 10-198) "பொறிவாயில் ஐந்த வித்த புனிதன் நீயே" (சீவசம் போதனை 1-29); "பொறிவரம்பாகிய புண்ணிய முதல்வன்" (சீவக சிந்தாமணி 2563) என்பவற்றால் உறுதியெய்தும்.

ஏழாவது ர்றளில் கண்ட தனக்குவமையில்லாதான் என்ற தொடர் ஆசா ய ஸ்ரீ குந்த குந்தர் தாம் பிராகிருத பாஷையில் இயற்றிய ''சமயசாரம்'' என்னும் நூல் கடவுள் வணக்கம் கூறுங்கால் ''அணோ வமம்'' (உவமையில்லாதவன்) என்ற தன் மொழி பெயர்ப்பாகவே கருதப்பெறும்.

எட்டாவது குறளில் கண்ட அறவாழியந்தணன் என்பது அருகனுகே கேயுரியது ''அறவாழியண்ணல் இவன் என்பார்'' என்பது சீவக சிந்தாமணி செ. 1611 அருளோடெழும் அறவாழி யப்பா' என்பது திருநூற்றந்தாதி செ. 7. ''அறவாழி கொண்டே வென்ற அந்தணனே என்பதும் அந்நூல் செ. 27 'கயாதரம், ''அறவாழியண்ணல்'' என்பதை ஜிநேசவரருடைய பெயர்களுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றது.

ஒன்பதாவது குறளில் கண்ட ''எண் குணத்தான்'' என்பது எட்டுக் குணங்களையுடைய சித்தபரமேஷ்டியைக் குறிக்கும். ''பண்ணவன் எண்குணன் பாத்தில் பரம் பொருள் ''(சிலப்-நாடு 18 )'' இரு நால்வினை கெடுத்து எண் குணணுமெய்தி'' (ஜீவசம்போதனை 1 இல்லை); ''இறைவனீ ஈசனீ எண்குணத் தலைவனீ'' (மேருமந்த்தர புராணம் செ. 1000) ஆகிய மேற் கோள்களால் அருகன் எண்குணனாதல் உறுதியெய்தும்.

இதுகாறும் கண்ட மேற்கோள்களால் கடவுள் வாழ்த்தில் கண்ட கடவுளைப்பற்றிய தொடர்கள் யாவும் அருக சித்த பரமேட்டிகளையே — ஜிநரையே குறித்தலால், திருக்குறள் ஆசிரியர் ஜைநர் ஆதலே உறுதி யெய்தும்.

''நீத்தார் பெருமை'' — யென்ற மூன்றாவது அதிகாரத்தின் முதற்குறள்,

'ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பணிவற் றுணிவு'' — என்பதாகும். ''பரமாக மத்தின் துணிவு, நீத்தாருடைய பெருமை மேலான பத்துத் தரு மங்களை வேண்டும்'' — என்பது இக்குறட்குக் கர்ண பரம்பரை யாக ஜைநர் கூறும் உரையாகும். விழுப்பத்து — உத்தமமாகிய

பத்து — உத்தமக்ஷமை முதலாகிய பத்துத் தருமங்கள். அவை யாவன: 1. உத்தம க்ஷமை; 2. உத்தம மார்த்தவம்; 3. உத்தம ஆர்ஜவம்; 4. உத்தம சத்தியம்; 5. உத்தம சவுசம்; 6. உத்தம சம்யமம் 7. உத்தம தபசு; 8. உத்தம ஆகிஞ் சண்யம், 9. உத்த மதியாகம்; 10. உத்தம பிரமசரியம். இவை முறையே 1. பொறையுடைமை; 2. மென்மை; 3. செம்மை; 4. மெய்ம்மை; 5, நன்மை; 6. அடக்கம்; 7. தவம்; 8. ஒன்றின்மை; 9. துறத்தல் 10. திறம்பாமை என்பனவாம். (விளக்கம் அச்சு நூல் பக்கம் 16-17 காண்க) இந்தப்பத்தினையே திறக்குறளாசிரியர் கொண் டிருக்க வேண்டும் என்பது, ஜைநருடைய அழுத்தமான நம்பிக்கை யாகும்.

இவ்வதிகாரத்தின் ஐந்தாவது குறள்,

''ஐந்தவித்தா னாற்றல் அகல் விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங்கரி''

என்பதாகும். இக்குறள் ''முற்றுந் துறந்த மகாமுனிவர்கள் ஐம்புலன்களையு மடக்கித் தவஞ்செய்து சாதிகர்மங்களைக் கெடுத்துக் கேவல ஞானத்தை யடைந்ததின் பெருமையை அவதி ஞானத்தாலறிந்த இந்திரன் அவர்க்குக் கந்தகுடி என்னும் ஜிநாலயத்தை நிர்மித்துக் கொடுத்ததைக் குறித்தது என்பதை யும், ஆசிரியர் நீத்தார் பெருமையில் முனிவர் அடைந்த கேவல ஞானத்தின் உயர்வை உணர்த்தற்கு இந்திரன் சாக்ஷியாவான் எனக் கூறினார் என்பதையும் விளக்கும்'' (தி.ஆ பக்-195)

பஞ்சேந்திரியங்களையும் ஜெயித்தவனைத் தேவேந்திரன் முதலிய தேவர்கள் பூமிக்கு வந்து ஸமவ ஸரண மண்டலம் அமைப்பித்து வணங்கி அவனுக்குச் சிறப்புச் செய்கிறார்கள் என்பது ஜைன சமயக் கொள்கை. இங்ஙனம் இந்திராதி தேவர் கள் கேவலபூசை செய்தற்கு வருதலை,

''ஆயிரங் கண்ணினானை யதிபதியாகச் சூழ்ந்து
மாயிரு விசும்பும் மண்ணும் மறைய வானவர்கள் வந்தார்',

எனவும்,

"பிண்டியும் குடையுஞ்சிய வளையுஞ்சா மரையு மற்றும்
அண்டவர்க் கிறையமைத்தான் அன்னவர்க்குரிய வாற்றான்"

எனவும் வரும் மேருமந்தர புராணம் 1386, மற்றும் 389 ஆம் செய்யுட் பகுதிகளால் அறியப் பெறும்.

இங்ஙனம் இந்திரனுக்குப் பெருமை தேடித் தருவதாக ஜைந சமயத்தில் கூறியிருக்கப் பரிமேலழகர், சாபமெய்திய வாற்றை இந்திரனோடு தொடர்பு படுத்திக் கூறியது பொருந்தா தென்று கூறும் ஜைநர் கூற்றுச் சிறந்திருத்தல் கண்கூடு.

"செயற்கரிய" என்ற குறளில் செயற்கரியவாவன தானம், தருமம், விரதம், தபசு என்பனவாம். இத்திறம் ஜைந சமயக் கோட்பாட்டுக்கே உரித்தாதல் உறுதி. மேலும்,

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" 30 - என்ற குறள்

ஜைநசமயக் கோட்பாட்டுக்குரியதாகவேயுளது என்பது ஜைநர் கொள்கை. இதில் கூறப்பட்ட அந்தணர் என்பது வருணாசிரம தருமத்தைக் கடைப்பிடிக்கும் பிராமணரைக் குறிக்காது. ஜைநர்கட்குரிய ஸ்ரீபுராண நூலும் கூறப்பட்ட பிராமணர் அல்லது அந்தணர்களைக் குறிக்கும்; ஒருவன் பிறப்பினால் பிராமணன் ஆகான்; குணத்தாலே தான் ஆவன் என்பதை இக் குறள் கூறுகிறது. பரத சக்கரவர்த்தி ஆட்சி செய்யுங்கால் தாம் ஈட்டிய பொன்பொருளைத் தானம் செய்ய வெண்ணி ஷட்கர்மத் தொழில்களிலே ஈடுபட்டுள்ளவர்களை அழைத்துக் கொண்டு பௌர்ணமி நாளில் வருக என்று நரபதிகளுக்கு ஆணை பிறப்பித்தான்; அந்த நாளில் நன் மலர்களையும் மொட்டுக்களையும், தளிர்களையும் கனிகளையும் தன் அரண்மனை வெளியில் பரப்பினான். அரசர்கள் பரிவாரங்களுடன் அரண்மனையுட் புகுந்தனர். மகாஜனங்களை வெளியே நிறுத்தினர். பரத சக்கரவர்த்தி மகா ஜனங்களை உள்ளே வருமாறு பணித்தார், சிலர் உட்புகுந்தனர். சிலர் வரவில்லை. வராத சிலரை வேறுவழியால் அரசாணையின்படி அழைத்துச் சென்றனர். சக்கரவர்த்தி அவர்களைப்பார்த்து

நீங்கள் முன்பக்கமாக வாராததேன் என்று வினவ, அன்னோர் ''அங்கே, வழிமுழுவதும் மலர்களாலும் தளிர்களாலும் பரப்பப் பட்டிருந்தது. அவை ஏகேந்திரிய ஜீவன்கள். நாங்கள் ஏகேந்திரிய ஜீவனையும் ஹிம்சை செய்யாதிருக்கும் ஒழுக்கம் உடையவர் அல்லோம் எனினும், இன்று பருவம் ஆகையாலும் உபவாச விரதத்தையுடையராய் இருக்கின்றமையாலும் அவ்வழிவரின் ஏகேந்திரிய ஜீவ ஹிம்சை உண்டாகும் என்று கருதினோம்'' என்றனர். பரதசக்கரவர்த்தி, இவர்கள் அணு விரததாரிகள் என்றுகருதி, இவர்கட்கு ஒன்று முதலாகப் பதினொரு சூத்திரம் ஈறாக யக்ஞோபவீதம் இட்டுச் சன்மானம் பண்ணி ஆரிய ஷட்கர்மங்களை உபதேசித்தான். (அணுவிரத மாவது ''பெரிய கொலை பொய் களவொடு காமம், பொருளை வரைதலோடைந்து'' என்ற அருங்கலச் செப்பால் உணரலாம்). ஆரியஷட் கருமமாவது,

> ''ஓதலே ஓதுவித்தல் உடன் வேட்டல் வேட்பித்திட்டல் *
> ஈதலே யேற்றலாறு மேற்கும் அந்தணர் தொழிற்பேர்''

எனச் சூடாமணி நிகண்டால் அறியலாகும்.

இங்ஙனம் சிராவண சுத்த பூரணையில் சிரவண நட்சத்திரம் கூடிய நாளில் பிராமணர்களை உண்டாக்கினார் என்பது போதரும். எனவே எல்லாச் சீவன்களிடத்திலேயும் அன்பும் அருளும் பூண்டு, கொல்லாமை முதலிய தர்மங்களைக் கடைப் பிடிக்கும் ஒழுக்க முடையவர்களே அந்தணர் என்பவர் ஆவர் என்பதும், இத்தகைய பண்புகள் படைத்தவர்களே ஜைந சமயக் கோட்பாட்டின்படி அந்தணர் என்று அழைக்கப்படுவர் என்ப தும் அறியப்படும்.

பொருட்பால் - (55) செங்கோன்மை என்னும் அதிகாரம் மூன்றாவது குறள் (543)

> ''அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
> நின்றது மன்னவன் கோல்''

---

* வேட்டல் - ஓமம் செய்தல்; வேட்பித்தல் - ஓமம் செய்வித்தல் (வேட்டல், யாகம் செய்தலன்று.)

— என்பதாகும். இதிற்காணும் 'அந்தணர் நூல்' என்பது ஜைந் சம்பிரதாயத்தின்படி பகவான் அருளிய பரம ஆகமங்களை. அவற்றை வகைப்படுத்தி நான்கு அனுயோகங்கள் என்பர். அவை 1. பிரதமானுயோகம்; 2. கரணானு யோகம்; 3. சரணானு யோகம்; 4. திரவியானு யோகம் என்பனவாம். (விரிவிதி. ஆ. பக் 88-89 காண்க) இவற்றை நாடோறும் ஓதுதலை நியமமாகக் கொள்வர் ஜைநர்; இந்நாளில் இவற்றை ஓதுதல் அருகியது என்று தெரிகிறது.

திருக்குறளைப் பன்னிரண்டடிகளில் வைத்து மேற்கோட் செய்திகளை முன்னிரண்டடிகளில் அமைத்துப் பாடிய முது மொழி வெண்பா நூல்கள் தமிழில் பல உள்ளன. அவற்றுள் ஒன்று முதுமொழி மேல் வைப்பு என்பது. இதன் ஆசிரியர் வெள்ளியம் பலவாண முனிவர் ஆவர்; இவர் 17 ஆம் நூற்றாண் டில் வாழ்ந்தவர். தருமபுர ஆதீன அடியார் கூட்டத்தில் திகழ்ந்த முனிபுங்கவர்களுள் ஒருவர். இவர்தம் நூல் 89 ஆம் பாடலில்,

> ''அந்திவண்ணன் நூலால் அருகர்பிறர் கோள்சிதைய
> வந்த திருவள்ளுவர்தம் வாய்மொழிகேள்-இந்த நிலத்து
> அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
> நின்றது மன்னவன் கோல்''

என்பதாம்.

இதில் 'அந்தணர் நூற்கும்' என்பது வடமொழி வேதங் களைக் குறிப்பதாகக் கொண்டு பாடினார். ஆனால் அந்தணர் என்போர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணரையே குறிப்பதால், இங்கும் அந்தணர் நூல் என்று மேற்படி அந்தணர்கள் ஓதும் நான்கு அநுயோகங்களையே யென்று கொள்ளுதல் பொருந்தும்.

மேலும் முதுமொழி மேல் வைப்பில் (செ. 158).

> ஒருவர் செயவேண்டா உலகியல்பா மென்னும்
> அருகர் பிறர்கோள் சிதைக்குமாற்றால்-வருவது
> இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான். (1062)

— என்ற பாடலில் 'உலகம்' பற்றிய ஜைந சமயக் கருத்தை மறுத்துக் கூறுவதாகக்குறள் 1062 உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

ஜைநசமய வேதம்; ஜீவ புத்கல முதலான ஷட்திரவியங்கள் நிறைந்தது லோகமென்றும், லோகமானது ஒருவரால் சிருஷ்டிக்கப்பட்டதல்ல என்றும், அநாதியாகவுள்ளது என்றும் கூறும். (தி.ஆ.பக் 192) ஆகவே உலகம் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதன்று என்பது ஜைந சமயக் கொள்கையாகும் என அறியப் பெறும். எனினும், ''உலகியற்றியான்'' என்றகுறளிலிருப்பது, ஜைந சித்தாந்தத்துக்கு முரண் செய்வதன்று. உலகியற்றல் என்பது சைவத்துக்கும் ஜைநத்துக்கும் பொதுவாக நிற்பது. முறைப் பாட்டில் இரண்டிற்கும் வேறுபாடுண்டு. விருஷபதேவர் உயிர்கட்குத் தொழில் முதலியவறறை ஒழுங்குபட இயற்றினார் என்று ஜைநநூல்கள் கூறுகின்றன. உலகியற்றுதல் என்பது உலகில் பல தொழில்களை நியமித்தலாகும். அததொழில்களைச செய்தால் இரத்தல் வேண்டாதம்தொன்று. ஆகவே உலகியற்றியான் என்பது ஜைநசமயக் கோட்பாட்டின்படி அமைந்ததாதல் கண்டுகொள்ளலாம் என்பர் திரு. வி. க (தி. ஆ. முன்னுரை)

உலகில் ஒருவன் உயிர்வாழ்தற்கு இரத்தலே வழி என்பதும் பொருந்தாது. மக்கள் தமக்கென விதிக்கப்பட்ட உழவு, வாணிபம் முதலிய ஷட் கர்மங்களைச் செய்து உயிர்வாழலாம். அங்ஙனம் செய்யாமல் இரத்தல் தமக்குத்தாமே உண்டாக்கிக் கொண்டசெயலாம். எனவே, ஏழ்மையும் அதனான் இரத்தலும் மனிதன் தானே உண்டாக்கிக் கொண்டதேயன்றி, வேறொருவர் உண்டாக்கியதன்று. ஆகவே உலகத்தில் இரத்தல் தொழிலை தன் சோம்பலால் கொண்டவன் (உலகின் கண் இயற்றியவன் — உண்டாக்கிக் கொண்டவன்) யான் — அவன் அழிக என்பதே இக்குறட் கருத்தாகும்.

''மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்'' (134)

— எனும் குறள் வேதம் ஓதுதலும் பிறப் பொழுக்கமும் பற்றிக் கூறும். அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் என்ற தொல்

காப்பியத்தானும் வேதம் ஓதுதல் அந்தணர்க்குரிய ஒழுக்க மாதல் பெறப்படும். பரத சக்ரவர்த்தியும், ஓரறிவுடைய ஜீவன் களையும் இம்சை செய்யக்கூடாது என்ற கொள்கையுடையாரை அந்தணர் என்று அழைத்தார் என்று மேலே கூறப்பட்டது. ஆகவே அன்னோர்க்கு எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழு குதல் "சிறப்பொழுக்கம் ஆயிற்று. அதுவே அவர்கட்கு எனப் பிறப்பிக்கப்பட்ட ஒழுக்கமுமாயிற்று. யார்யார் ஓரறியுவுர்கட்கும் தீங்கு புரியாத ஒழுக்கம் உடையவர்களோ அவர்களெல்லாம் அந்தணரே யாவர், அவ்வந்தணர்களும் ஜைந வேதங்களை ஓதும் கடப்பாடுடையர். இங்குக் கண்ட பார்ப்பான் - அந்தணன் என்ப வனுக்குரிய ஒழுக்கம் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண் டொழுகுதலாகும். இங்ஙனம் செந்தண்மை பூண்டொழுகுதல் சமயச் சாரித்திரம் என்று ஜைந சமயக் கோட்பாடு குறிப்படும்.

> ''ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
> காவலன் காவான் எனின்'' (560)

எனும் குறளிலும் 'அறுதொழிலோர்' குறிக்கப்படுகின்றனர். இவ்வறு தொழிலோரும் 'அந்தணர்' என்ற அறவோரையே குறிக்கும். நூல் என்பதும் ஜைந சமயிகட்குரிய பிரதமாநுயோகம் முதலிய நான்குமாம்.

> ''வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது'' (377)

எனும் குறளில், 'வகுத்தான்'' என்ற சொல் மயக்கம் தருவதாக உள்ளது. 'வகுத்தான்' என்பது ஊழ் என்ற அதிகாரத்தில் இருப்ப தால் வகுத்தான் என்பது ஊழையே குறிக்கும். ஊழ் என்னும் ஆற்றலையே இங்கு ஒரு தெய்வமாக உருவகித்து வகுத்தான் என ஆண்பால் முடிவாகக் கூறினார் ஆதல் கூடும். வகுத்தான்— கருமங்களை வகுத்தருளியவனாகிய அருகக் கடவுள் என்றும் கூறுவர் (தி.ஆ.பக் ௩௨)

> "மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
> தாஅய தெல்லாம் ஒருங்கு'' (610)

எனும் குறளில், 'அடியளந்தான்' என்பது திருமாலைக் குறிக்கும் என்பர். அடியளந்தான் என்பது கேவல ஞானியைக் குறிக்கும். கேவலஞானி எல்லாவுலகங்களையும் நன்கறியும் ஆற்றல் பெற்றவன். "அடியளந்தான் தாஅயது" என்பது கேவல ஞானியாலே அறியப்பட்ட உலகு என்று பொருள்படும். அது திருமாலைக் குறிக்காது என்பது ஜைநசமயக் கோட்பாடு. அடியளந்தான் என்பதற்குச் "சகலலோகத்தையும் அறிந்த சுவாமி" என்பது இந்நூலிற் கண்ட உரை.

"தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு" (*1103*)

எனும் குறளில், 'தாமரைக்கண்ணான்' என்று திருமாலும் அவனது உலகமாகிய சுவர்க்கமும் குறிப்பிடப் பெற்றுள்ளன. தாமரைக் கண்ணானுலகு என்பதை இந்திரன் உலகு என்று குறிப்பிடுவோருமுளர் என்று பரிமேலழகர் கூறித் 'தாமரைக் கண்ணான் என்பது இந்திரனைக் குறிக்காது' என்பர். மணக்குடவரோ 'இந்திரர் உலகு' என்பர்.

இந்திரர் வாழும் உலகத்துள்ளவர்கள் ஆங்கு இன்பம் நுகர்ந்து பின் இவ்வுலகத்தில் மனிதனாகப்பிறந்து சம்சாரத்தில் இருந்து, தவம் செய்து மோட்சம் பெறலாம். இந்திரர் உலகத்தவர் அங்கிருந்தே மோட்சத்துக்குச் செல்லவியலாது.

"நீ சுவர்க்கம் பெறுவதற்குரிய முயற்சியைவிட்டு இங்ஙனம் காதல் வயப்பட்டு இருத்தல் உன் பெருமைக்குப் பொருந்தாதது" என்று கூறிய பாங்கனை நோக்கிக் "காதலியின் மென்தோளில் துயிலுதலைக் காட்டிலும் சுவர்க்க வின்பம் பெரிதாகுமோ" என்று தலைவன் கூறியதாக இக்குறள் அமைந்துள்ளது. சுவர்க்க வின்பம் பெரியதன்று. அவ்வின்பம் நுகர்ந்தபிறகு மீண்டும் உலகத்துப் பிறந்து தவம் செய்தே மோட்சம் பெறவியலும். எனவே இங்குக் கூறிய தாமரைக் கண்ணான் என்பது இந்திரனைக் குறித்ததாகவே கொள்ளலாம்.

இந்திரனுக்கு ஆயிரங்கண் உண்டு என்பதும் ஜைநர் கொள்கை. பகவான் அடைந்த கேவல ஞானப் பேரொளியைக் கண்டு

களிக்க இந்திரன் விழைந்தான்; அதற்கு இருகண்கள் போதா வென எண்ணினான்; ஆயிரங்கண்களால் காண வேண்டும் என விழைந்தான்; எண்ணியவாறு எய்தும் தனக்குரிய சரீரத்தின் ஆற்றலால் தன் உடலெங்கும் கண்களையுண்டாக்கிக் கொண் டான். பகவானைக் கண்டு போற்றி மகிழ்ந்தான்; இக்காட்சி யைக் கண்ட பெருமக்கள் இந்திரனை ஆயிரங்கண் உடையான் என்று வாழ்த்தினர். (பக்கம் 12. திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதி பகவன்)

இதுகாறும் ஓரளவு ஐயப்பாட்டுக்குரிய குறட்பகுதிகளைப் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனான் திருக்குறளிற் கண்ட அவ்வப்பகுதிகள் ஜைந சமயக் கோட்பாடுகட்குரிய வாய் அமைந்துள்ளன என்பது தெள்ளிதின் விளங்கும்.

> ''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றின் நின்ற துணை'' (41)

எனும் குறளில் இயல்புடைய மூவர் ஆவார் - பிரமசாரி, வானப்பிரத்தன், தவசி என்று காகிதக் கையெழுத்துச் சுவடியில் உள்ளது; வானப்பிரத்தனைப் பெண்சாதி மாத்திரத்துடனே கூட வனத்தில் இருப்பவன் என்று கூறுவர். அச்சுநூலில், ' உச்சிஷ்ட பிண்ட விரதம்'' என்ற பதினோராம் நிலையில் கௌபீன மாத் திரத்துடனே கூடி ஜிநஸ்துதியிலே யிருக்கிற க்ஷுல்லகர்'' என்று உள்ளது.

வானப்பிரத்தம் பற்றிய ஜைநர்தம் கொள்கை ஈண்டு அறிதல் தகும். வேதமார்க்கத்தில் கண்ட வண்ணம் வானப் பிரத்தமாவது தன் மனைவி மக்களோடு காட்டிலிருந்து தவம் செய்வது. இல்லறத்தார் ஊர்களில் வசிப்பர். இவ்வானப்பிரத்தர் காட்டின்கண் உறைவர். உறைவிட வேறுபாடு தவிர வேறு எதுவும் இல்லை. இவ்வகையினர் ஜைனசமயக் கோட்பாட்டின் படி வானப்பிரத்தர் ஆவார்.

ஆனால் ஜைனர் கோட்பாட்டின்படி வானப்பிரத்தர் ஆவார் உத்யானத்திலும் காட்டுப் பகுதியிலும் இருந்து, முனி சங்கம் அமைத்து அச்சங்கத்துத் தலைவரும் அவரது மாணாக்கர் களும் தங்கிச் சமயக் கோட்பாடுகளைக் கற்பித்தும் கற்றும்

அதற்குத்தக நிற்பவரும் ஆவர். இந்நிலையினர் தாம் உயிர் வாழ்வதற்குரிய உண்டிக்கும், நோய்க்கு மருந்திற்கும் இல் வாழ்க்கையுடைய சம்சாரியை எதிர்நோக்கியே இருக்க வேண்டிய வர் ஆவர். இங்ஙனம் வாழும் முனிசங்கத்தவரே வானப் பிரத் தர் ஆவர். (பேரா. சக்கரவர்த்தி - குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு விசேடவுரை)

இதுபற்றி தி. ஆ. பக்கம் ௬௬ இல் அடிக்குறிப்பாக எழுதப் பட்டதும் அறிதற் பாலதாகும். "வானப்பிரஸ்தாஸ்ரம மென்பது, தர்மார்த்தங்களை அனுபவித்து இல்லறத்தினின்று விலகி வனத்தில் சென்று முற்றுந்துறந்த முனிவரிடம் அடைந்து அவருக்கு சிஸ்ருஷை செய்து கொண்டு அவரிடம் தவத்திற்குரிய சில தத்துவங்களை யுணர்ந்து ஒழுகுவதாகும். இதில் இரண்டு விதமாம். முதலாவது, கௌபீனமும் கண்ட வஸ்திரமும் அணிந்து கமண்டலத்துடன் கூடியிருப்பதாம். இரண்டாவது கௌபீன மாத்திரம் உடைத்தாகிக் கமண்டலமும் பிஞ்சமும் கொண்டிருத்தலாம்" (திருவுள்ளம் நயினார் கௌபீன கமண்டல பிஞ்ச தாரியாயிருந்து முற்றுந்துறந்தவர் ஆவர்)

> "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்
> றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை', (43)

எனும் குறளில் 'தென்புலத்தார்' என்பது பிதிரர்களைக்குறிக்கும் என்பர் பரிமேலழகர். காகிதக் கையெழுத்துச் சுவடியிலும் பிதிரர் என்றுள்ளது. அச்சு நூலில் "உயிர் துறக்கும் தறுவாயில் உள்ள முதியவர்கள்" என்று காணப்படுகிறது.

பிதிரர் ஆவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப் பட்டதோர் கடவுட்சாதி என்பது பரிமேலழகருரை. பிதிரர்க்குத் தருப்பணம் கொடுப்பது இங்குக்குறிக்கப்படுகிறது. பிதிரர்க்குத் தருப்பணம் கொடுப்பது ஜைநரிடத்துவழக்கில் இல்லை எனினும் பேராசிரியர் சக்கரவர்த்தி அவர்கள் தம் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பில் பக்கம் 45-இல் " The pitru darpana lis not altogether unkrown in the South Indian Society of Jains தென்னிந்திய ஜைந சமூகத்தாரிடம் பித்ருதர்ப்பனம்முழுமையும் அறியாத தொன்றல்ல என்று கூறியுள்ளார். (ஜைநச்சார்பான உரை அச்சுநூலில் காண்க).

'வான்சிறப்பு' என்ற அதிகாரம் பற்றியும் இங்குக் குறிப்பிடல் தகும். ஜைந சம்பிரதாயப்படி வான்சிறப்பு என்ற அதிகாரம் நான்காவதாக இருத்தல் வேண்டும் என்று கருதப்படுகிறது. கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்துள் அருகசரணம் சித்த சரணம் ஆகிய இரண்டும், நீத்தார் பெருமையுள் சாதுசரணமும், அறன் வலியுறுத்தலில் தரும சரணமும் கூறப்பட்டன என்றும் ஜைநசமயச் சான்றோர் கூறுவர். எனவே இம்மூன்றும் முறையே அமைந்த பிறகே 'வான்சிறப்பு' என்ற அதிகாரம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சிலப்பதிகாரத்திலும் ''மாமழை போற்றுதும்'' என்று வான் சிறப்புக் கூறப்பட்டது.

இங்ஙனம் மழையின் சிறப்பைக் கூறியவர் உழவர்க்கு இன்றியமையாத மழையினது நன்மையைக் கூறியவர்- 'உழவு' என்ற அதிகாரத்தில் உழவனைப்பற்றிக் கூறியவர் - உழவுத் தொழிற்குரிய வேளாளர்களை ''உழுவார் உலகத்தார்க்காணி'' ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்று சிறப்பித்தமை யோடு '' உழந்தும் உழவே தலை'' என்று உழவுத் தொழிலையே சிறந்த தொழில் என்றார்.

ஜைந ஆகமத்தின்படி முன்பு இப்பூமி போக பூமியாக இருந்தது. மக்கள் உழைப்பின்றித் தாம் வேண்டியவற்றை வேண்டியாங்கு கற்பதருமூலம் பெற்று வாழ்ந்தனர். துடுமெனக்கற்ப தருக்கள் மறைந்தன. உணவுப் பொருட்கள் இல்லையாயின. ஆகவே விருஷப தேவர் மக்களுட் சிலரை உழுதுபயிரிடுமாறு பணித்தருளினார். இத்தொழில் செய்பவர் வேளாளர் எனப்பட்டனர், பயிரிட்டுப்பெற்ற உணவுப் பொருள்களைப் பலரும் பெறுதற் பொருட்டு வாணிபத் தொழில் நியமித்தார். இத் தொழிலைச் செய்பவர் வணிகர் எனப்பட்டனர். உலகு நன்கு நடைபெறச் சிலரை ஆட்சியாளர் ஆக நியமித்தார். இங்ஙனம் உலகம் கருமபூமி ஆயிற்று. எனவே செய் தொழிலால் மக்கள் மூன்று வகையாயினர். இவர்களுக்குள் வேறுபாடு இல்லை: வருணாசிரம தருமத்தின்படி உழுபவர் தாழ்ந்தவராகக் கருதப்பட்டனர் நான் காவது வருணத்தினர் ஆயினர். பிற்காலத்தில் உழூஉண்பார் உழுவித் துண்பார் என்ற பாகுபாடுகளும் தோற்றம் பெற்றன. ஆனால் குறளின் படி நோக்கின் உழுபவர் உலகத்திற்கு அச்சாணி

போன்று இன்றியமையாத பெருஞ்சிறப்புடையவர் ஆவர். ஜைநசமயக் கோட்பாட்டின்படி மக்கட் சமுதாயத்தில் உழுபவர் சிறந்த இடம் பெறுபவர் ஆவர். இச்சிறப்பு ஜைநசமயக் கோட்பாட்டிற்கேயுரியது.

''பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை'' (குறள் 345) என்ற தத்துவமும் உன்னுதற்குரியது. அபரிகிரஹம் (பொருள் நீக்கம்) என்ற கோட்பாடு தவம் செய்வார்க்குரியது. பொருளுடைமை தவசிக் குரியதன்று. மனத்தாலும் பொருள் வேண்டும் என்று கருதுதல் தவசிக் கில்லை சம்சாரிக்கே ''பரிமிதபரிக்கிரகம்' வேண்டிய அளவு பொருளுடைமையுண்டு. தவசிக்குப் பொருளே வேண்டியதில்லை. தவசிக்கு வேண்டிய யாவற்றையும் தந்து காத்தற்கே சம்சாரி இருக்கிறான் என்பதைத்

''துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார் கொல்
மற்றை யவர்கள் தவம்'' (263) - எனும் குறள் கூறுகிறது.

எனவே தவசிக்குரியது ''அபரிக்கிரகம்'' என்றும், சம்சாரிக்குரியது ''பரிமித பரிக்கிரகம்'' என்றும் கொள்ளல் வேண்டும். ''செய்க பொருளை'' என்பது குறள் 759.

''அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீ தின்றி வந்த பொருள்'' (754) - என்பதும் அறிதற்பாலது,

இங்ஙனம் பொது அறங்களோடு, சில விடங்களில் ஜைந சமயத்துக்கேயுரிய கோட்பாடுகளைக் கூறும் நூலாகவே திருக்குறள் காணப்படுகிறது. அக்கோட்பாடுகளுள் சிகரம் வைத்தாற் போன்றமைவது ''கொல்லாமை'' என்னும் அறமாகும். அஹிம்ஸா பரமோ தர்ம : என்பது முழுமையாக ஜைந சமயக் கோட்பாடு, வேதநெறியினருள், வேள்வி செய்பவர், வேள்வியில் கொலை செய்பவராகவே கருதப்படுவர்.

''அவிசொறிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத் துண்ணாமை நன்று'' (259) - என்பது

குறள்: பௌத்த சமயத்தினரோ எனின், தாம் கொல்லார், எனினும் ஊனை விலைக்குப் பெற்றுண்பர். இதுவும் தவறு ஆகவே;

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" (260) - என்று குறள்

கூறுவதாயிற்று. பிறிதொரு கோட்பாடும் நம் சிந்தனைக் குரியது ஆகும்.

ஒருவன் முன்னே செய்த நல்வினை தீவினைகள் செய்தவனையே வந்து பொருந்தும் என்பது ஜைந சமயக் கோட்பாடு. அஃது எங்ஙனம் எனின், பசுக்கள் திரளாயிருக்கிற இடத்திலே ஒரு கன்றைத் தொலைவான இடத்தில் விட்டால் அந்தக்கன்று தன் தாயான பசுவையே வந்து சேரும். அது போலச் செய்த வினையும் செய்தவனையே வந்தடையும். இதனைப்,

"பல்லாவுள் உய்த்துவிடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப்
பழ வினையும் அன்ன தகைத்தே தற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு"

என்ற நாலடியார் செய்யுள் 101 கூறும். வினை செய்தவனைத் தொடர்ந்து சென்று பயன் எய்துவிக்கும் என்ற கருத்துப் பின் வரும் திருக்குறளில் சொல்லப்பட்டுள்ளது.

"எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்" (207).

வினையாகிய பகை உயிர் செல்லும் இடந்தோறும் உடன் சென்று தன் பயனைக் கொடுக்கும் என்பது கீழ்வரும் சீவக சிந்தாமணி (2876 ஆம்) செய்யுளாலும் நன்கு புலப்படும்.

"அல்லித் தாளற்ற போதும் அறாதநூ லதனைப் போலத்
தொல்லைத்தம் உடம்பு நீங்கத் தீவினை தொடர்ந்து நீங்காப்
புல்லிக்கொண் டுயிரைச் சூழ்ந்து புக்குழிப் புக்குப் பின்னின்
றெல்லையில் துன்ப வெந்தீச் சுட்டெரித்திடுங்கள் அன்றே."

கூடாவொழுக்கம் என்னும் அதிகாரத்தில் தவம் மறைந்து அல்லவை செய்து ஒழுகுதல் - பற்றற்றேமென்பார் படிற்றொழுக்கம் பற்றிப் பேசப்படுகின்றது. அக்குறள்களுள் ஒன்று பின் வருவது:

''மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்'' *(278)*

என்று, நீராடும் துறவிகளின் வஞ்ச மனத்தைப் பற்றிப் பேசப் பட்டுள்ளது. 'மழித்தலும் நீட்டலும் வேண்டா'' (280) என்பது இந்து, பௌத்தத் துறவிகளைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஆனால் ''நீராடி மறைந்தொழுகு மாந்தர்'' என்பது இந்து சமயத் துறவிகளையே குறிக்கும். நீரிற் பலகால் மூழ்கல் அவர்க்கே யுரியதாகையால் சமண சமயத் துறவிகளைக் குறிக்காது. இங்ஙனம் துறவிகளின் கூடாவொழுக்கத்தைச் சாடிய திறன் தூய்மையைக் கடைப்பிடித்தொழுகும் ஜைந சமயக் கோட்பாட்டுக்கு அச்சாணி போன்றமைகின்றது.

இல்லற நிலையில் உள்ளவர் எட்டு மூல குணங்களைக் கைக் கொள்ள வேண்டும். அவையாவன: கள் உண்ணாமை, ஊன் உண்ணாமை, தேன் உண்ணாமை, (ஐந்து அநு விரதங்களாகிய) கொல்லாமை. பொய்யாமை, கள்ளாமை, பிறன் மனை விழையாமை, மிகு பொருள் விரும்பாமை (வெஃகாமை) என்பனவாம். மேற்கண்ட ஜைந நூல் துணிபுகள் அஃதாவது ஒழுக்கங்கள் எட்டில் தேன் உண்ணாமை தவிர்த்து மற்ற ஏழும் திருக்குறளில் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.

'த்ரிகுப்தி'' என்பது ஜைந சமயக் கோட்பாடுகளுள் ஒன்று. த்ரிகுப்தியாவது காயத்தின் அடக்கம், வாக்கினடக்கம், மனோவடக்கம் என மூன்றுமாம். அடக்கமுடைமை என்னும் 13 ஆம் அதிகாரம் இதனை நன்கு விளக்கும். 'செறிவறிந்து' (123) என்பது காயத்தின் அடக்கம். ''ஒன்றானும் தீச்சொல்'' (142) என்பது வாக்கின் அடக்கம். கதங்காத்து (130) என்பது மனோவடக்கம்.

பஞ்சேந்திரிய விஷய ஜெயம் (தி. ஆ. பக் 146) என்பதும் ஜைநசமயக் கோட்பாடுகளில் சிறந்த தொன்று. இதனை

உரனென்னும் என்ற 24 ஆம் குறள் கூறும். ''ஒருமையுள் ஆமைபோல்'' என்ற 126 ஆம் குறளும், 'அடல்வேண்டும்' என்ற 343 ஆம் குறளும் இதற்கு மேற்கோளாம்.

ஆதிபகவன் ஷட்கர்மத் தொழில்களைச் செய்யுமாறு பணித்தார் என்று மகாபுராணம் கூறும். அந்த ஆறு தொழில் களாவன, அஸி ஆயுதம் தாங்குகிற தொழில்); மஷி, (எழுத் தெழுதும் தொழில்); கிருஷி (உழுதுபயிரிடுதல்); (வைத்தியம் முதலிய) வித்தை; வாணிஜ்யம் (வாணிகம்); சிற்பம் (பல தொழில்கள்) என்பனவாம். அஸியாவது அரசியல் ஆகும். மஷியாவது கல்வி; கல்விகல்லாமை ஆகிய அதிகாரங்களிற் காணலாம்; கிருஷி பற்றியதே உழவு என்ற அதிகாரம்; மருந்து முதலியன வித்தை; வாணிகம்-தனியதிகாரம் இன்றேனும்.

''வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்'' (120) - என்ற குறள்

இதற்கு எடுத்துக்காட்டு. சில்பம் ஆவது ஆள்வினையுடைமை, தெரிந்து செயல் வகை, வினைசெயல் வகை முதலியவற்றான் அறியப்படும். (தி. ஆ. பக்கம் 48).

சம்யத்தரிசனம் அடைந்த எதிகள் மோக்ஷம் அடைவார்கள் என்பதும், ஆன்றோர் சங்கை முதலிய 25 குற்றங்களும் நீங்கி நிச்சங்கை முதலிய எட்டு அங்கங்களை யுடையவர் என்பதும் ஜைன சமயக் கோட்பாடுகளில் ஒன்றாகும். இது மெய்யுணர்தல் என்ற 36 ஆவது அதிகாரத்தில் இரண்டாவது பாடல் நன்கு விளக்குவதாகக் கவிராஜ பண்டிதர் கருதுகிறார். (இக்குறட் குரிய குறிப்புரையையும் காண்க) (குறள் 352).

தயா மூலதன்மம் - எவ்வுயிர்க்கும் அன்பாயிருத்தல் - ஜைனத்தின் மூலதர்மம் ஆகும். இதனை விளக்க - வற்புறுத்த எழுந்த அதிகாரங்கள் - அன்புடைமை, இனியவை கூறல், இன்னாசெய்யாமை, முதலியவையாம்.

கொல்லாமை யென்னும் அறம் - உயிர்கட்குச் செந்தண்மை பூண்டொழுகும் செம்மையறம் - உலகில் நிலவுதல் வேண்டும்

என்று கொல்லாமை, புலால் மறுத்தல் என்ற அதிகாரங்களில் வற்புறுத்தியமை திருவள்ளுவரின் ஜைநசமயக் கோட்பாட்டை வலியுறுத்தும்.

''தேவர் குறளும்'' என்றதனுள் திருவள்ளுவர் தேவர் எனப்பட்டார். தேவர் என்பது சைனமுனிவர்களைக் குறிக்கும் சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர்; சூளாமணி ஆசிரியர், தோலாமொழித்தேவர்; திருக்கலம்பக ஆசிரியர் - உதீசித்தேவர். எனவே திருக்குறள் ஆசிரியர் ஜைந முனிவராதல் தெளிவு.

நச்சினார்க்கினியர் திருக்குறள் ஆசிரியரைத் தேவரென்றே குறிப்பிடுகின்றார். சீவகசிந்தாமணி 1891 ஆம் செய்யுள் உரையில் ''நன்னார், அழுதகண்ணீரும் அனைத்து என்றார் தேவரும்'' என்றுள்ளது. மேலும் 1927-1928 ஆகிய செய்யுட்களின் உரையில், ''பகல் வெல்லும் கூகையைக் காக்கை என்றும், ''காலாழ்களரின் நரியடும்'' என்றும் தேவரும் கூறினார் என்றமை காணப்படுகின்றது. இதனால் திருக்குறள் ஆசிரியரைத் ''தேவர்'' என்றல் அந்நாள் மரபென்றும், தேவர் என்பது ஒரு ஜைநமுனிவர் என்றும் கொள்ள இடம்தருகிறது.

ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று 'நீலகேசி' யென்பது. இதற்கு வாமன முனிவர் என்பார். 'சமயதிவாகரம்' என்ற ஒருரை எழுதியுள்ளார். இவர் திருக்குறளை மேற்கோள் காட்டியுள்ள இடங்களில் திருக்குறளை ''எம் ஓத்து'' என்று கூறியுள்ளார்.

''.... வெயினிலை முதலாயினவும் வநசரராய் நின்று சகல வியாபாரங்களும் துறந்து ஒருவழி நிற்றல் இருத்தல் செய்து ஞான தியானங்கள் பயில்வுழி வெயிலும் மழையும் காற்றும் முதலாயின வந்தால் அவற்றைச் சக்திக்குத் தக்கவாறு பொறுத்தாம். என்னை.

''உற்ற நோய், நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற் குரு''

என்பது எம்மோத்தாகலின் (353) ஆம் செய்யுளுரை).

''ஒருத்தன் அவ்வாறு ரக்ஷிக்க வேண்டுமானால் எமக்குக்கை காட்டியும் நிலம் காட்டியும் வஞ்சனையாற் சொல்ல வேண்டுவ தில்லை; என்னை,

''பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்'' (292)

என்பது எம்மோத்தாகலின், பிராணி பிடாநிவ்ருத்தி அர்த்தமாகப் பொய்யுரைத்தலும் ஆவதாதலினென்பது (326 ஆம் செய்யு ளுரை).

வாமனமுனிவர் ஜைநர்; அவர் குறளைத் தம் ஓத்து வேதம் என்கிறார்; ஆகவே குறளை ஜைந நூலாகவே கொள்ளல் தகும்.

தமிழில் பிரமோத சந்திரோதயம் என்றொரு நாடக நூல் உள்ளது. இது சமஸ் கிருதத்தினின்று தழுவப்பட்ட நூலாகும். இதில் பல்வேறு சமய பாத்திரங்கள் நாடக அரங்கில் தோன்றித் தத்தம் சமயப் பெருமையைக் கூறுகின்றனர். சைனச் சார்பினன் அரங்கில் ஏறியதும்,

''அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செத் துண்ணாமை நன்று'' (259)

என்ற குறளைக் கூறிக்கொண்டே வருகிறான். இந்நூலாசிரியர் ஜைநமதத்தவரல்லர். எனினும் இவர் திருக்குறளை ஜைந நூலாகவே கருதுகிறார் என்பது அறியப் பெறும் என்று பேரா அ. சக்கரவர்த்தி அவர்கள் எழுதியுள்ளார். பிரபோத சந்திரோதயம் என்னும் நூல் தஞ்சை சரசுவதி மகால் வெளி யீடாக 1988 இல் அச்சிடப் பெற்றுள்ளது அந்நூல் 180 ஆவது சமணனாதியர் சருக்கம் (செ.ச) (செ. 680) பின்வருவது:-

''அவிசொரிந் தனலில் வேள்வி
ஆற்றுதும் எனவூன் உண்ணும்
புவிமிசை பசுவைக் கொன்று
புன்றொழில் இயற்றுந் தீயோர்

எவரையும் இசைந்து காஸில்
இருவிழி புதைத்துத் திங்கு
நவில். மறை நுழைவு றாமல்
நாம செவி சேமம் செய்தும்.

இப்பாடலில் அவிசொரிந் தென்ற குறளின் ஒரு பகுதியிருத்தல் காணலாம்.

சென்னை-இராயப்பேட்டை சாது அச்சுக் கூடத்தில், 1949 இல்பாரதீய ஞானபீடம்; தமிழ் வரிசை எண் 1 ஆக திருக்குறளுக்குக் கவிராஜபண்டிதர் உரை என்ற பெயரால் பேராசிரியர் அ. சக்கரவர்த்தி என்பார் ஓர் அரிய வுரையை அரிதின் முயன்று அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அப்பேராசிரியர் பயன்படுத்திய ஏட்டுச் சுவடிகள் ஆறாகும். அவற்றுள் எதிலும் உரையாசிரியர் பெயர் குறிக்கப்பட்டதாகத் தோன்றவில்லை. சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள சுவடியிலும் உரையாசிரியர் பெயர் குறிக்கப்படவில்லை. பேரா. அ. சக்கரவர்த்தி அவர்கள் குறித்தது போல் எல்லிஸ் அவர்கள் தம் ஆங்கிலப் பொழிப்பு-விளக்கங்களுடன் உள்ள நூலில் இரண்டிடங்களில் ஜைநச் சார்பான உரை எழுதியவர் கவிராச பண்டிதன் என்கிறார். எண் குணத்தானைப்பற்றிக் கூறுங்கால் பக்கம் 19இல்

"The attributes are similarly enumrated with the exception of the last in the following explanation of the couplets in the commentary on the Curals in use among the Jains attributed to *Cavlraja Panditer* (அழியா வியல்பு என்ற விடத்துக் கவிராச பண்டிதருரையில் சகல சம்யக்த்வம் என்று உள்ளதை நோக்கி மேற்கண்ட ஆங்கிலப் பகுதி எழுதப்பட்டது).

மேலும் 25ஆம் குறளாகிய "ஐந்தவித்தானாற்றல்" பற்றி எழுதிய எல்லிஸ்,

"The Jains however disputing the authority of mythological story give it a very different interpretation. Caviraja Pandither accordingly thus renders the couplet: ஐம் பொறிகளையும் ஆசையின் வழியே அடக்கினவனுடைய வல்லமைக்கு"

என்றமையாலும் ஜைநச் சார்பானவுரை எழுதியவர் கவிராச பண்டிதர் எனத் தெரிய வருகிறது.

Francis Whyte Ellis (ஃப்ரான்ஸிஸ் வைட் எல்லிஸ்) என்பவர் 1796 முதல் 1819 வரை சென்னையில் ஆங்கில அரசாங்கத்தில் வருவாய்த்துறையில் உயர் பதவியில் இருந்தவர். இவர் காலத்தில் ஜைநச் சார்பான உரையியற்றியவராகக் கவிராச பண்டிதர் கருதப்பெற்றார். இந்நாட்டில் வாழ்ந்த பிற அறிஞர்கட்கு எக் காரணத்தாலோ இந்த ஜைநச் சார்பான உரை தெரியாமலிருந்தது எப்படியோ இது 1949இல் அச்சேறலாயிற்று. ஜைநச் சார்பான உரையாகிய கவிராஜ பண்டிதருரை அச்சிடுவதற்குப் பயன்பட்ட ஓலைச்சுவடிகள் ஆறு என்று அவ்வச்சு நூல் முகவுரையில் சொல்லப்பட்டுள்ளது. அவையாவன:

**1. மேலச் சித்தாமூர் மடத்துச் சுவடி:** மேலச் சித்தாமூரில் ஜீந காஞ்சிமடம் என்று ஒரு சிறந்த ஜைநத் திருமடம் உள்ளது. அந்த மடத்துத் தலைவர் அவர்களுக்குக் கவிராஜ பண்டிதர் உரை கொண்ட ஏட்டுச் சுவடியிருக்கிறதா என்றெழுதினேன். பதில் இல்லை.

**2. பெருமண்டூர்ச் சுவடி:** கவிராஜ பண்டிதர் பிறந்தவூராகக் கருதப்படுவது, பெருமண்டூர். இவ்வேட்டுச் சுவடிபற்றிக் கேட்டபொழுது அவ்வூரிலிருந்த சுவடிகள் திருடு போய் விட்டன என்று கூறப்பட்டது.

**3. வீடுரிலிருந்து:** இரண்டு சுவடிகள் தமக்குப் பயன்பட்டன என்று பேரா. அ. சக்ரவர்த்தி அவர்கள் தம் முன்னுரையில் குறித்துள்ளார். அச்சுவடிகள் புராண சந்திர நாயனாருடையவை. அவற்றுள் ஒரு சுவடி திருநறுங் குன்றத்திலிருந்த ஏட்டுச்சுவடியைக் கண்டு செப்பனிடப்பட்டது என்றும் தெரிய வருகிறது. அச்சுவடிகளைப்பற்றித் தக்கவர்கட்கு எழுதியபொழுது அச்சுவடி இல்லை யென்று பதில் வந்தது.

4. சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்துச்சுவடி. இது செப்பமான சுவடி. இது ருத்கோத்காரிவருஷம் அற்பிச மாதம் 10 ஆம் தேதி குருவார நாள் வீராசாமி என்பவரால் எழுதப்பட்டதுஎன்ற குறிப்புடையது. இதில் 70 அதிகாரங்கட்கு மட்டும் உரையுண்டு. எஞ்சிய பகுதி குறள் மூலம் மட்டும் உள்ளது. இது திருக்குறள்

வகுத்துரை என்று சுவடிக்கட்டையின்மேல் மையால் எழுதப் பட்டுள்ளது.

5. திரு. T.S. ஸ்ரீபால் நயினார் அவர்கள் செஞ்சியினின்று கொணர்ந்த குறைச்சுவடி இதில் "ஏலாசாரியரால் சிருஷ்டிக்கப் பட்ட திருக்குறள்" என்று எழுதப்பட்டுள்ளதாகப் பேரா. அ. சக்கரவர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். திரு T.S. ஸ்ரீபால் அவர்களுடைய நூல்கள் திருப்பணமூரில் சேகரித்து அண்மையில் வைக்கப்பட்டுள்ளன. அத்தொகுப்பில் ஜைநச்சார்பான வுரை யுடைய திருக்குறள் ஏட்டுச்சுவடி இல்லை என்று தெரிய வருகிறது.

1949 இல் சிறந்தமுறையில் அச்சிடப்பெற்ற நூலில் (கவிராஜ பண்டித ருரை) அதன் பதிப்பாசிரியர் ஆகிய பேரா. அ. சக்கரவர்த்தி அவர்கள் ஆங்கிலத்தில் சிறந்ததொரு முன்னுரை வரைந்துள்ளார்கள். திருவள்ளுவமாலையில் கண்ட பாடல்களுள் நக்கீரருடையதாகக் கருதப்படும் "தானே முழுதுணர்ந்து" (செ 7) மாமூலனாருடையதாகிய "அறம் பொருள் (செ.8), கல்லாட ருடைய "ஒன்றேபொருள் (செ.9,) நல்கூர் வேள்வியார் பாடிய "உப்பக்கம் நோக்கி" (செ. 21) என்ற நான்கு பாடங்களை ஆய்வு செய்து திருக்குறளாசிரியருடைய ஜைனச் சார்புபற்றி விளக்கமாக எழுதியுள்ளார்"

"தானே முழுதுணர்ந்து தண்டமிழிற் வெண்குறளால்
ஆனா அறமுதலா அந்நான்கும் - ஏனோருக்கு
ஊழி னுரைத்தார்க்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழி யுலகென்னாற்று மற்று"

என்பது நக்கீரர் பாடல்.

இப்பாடலினின்று திருக்குறளாசிரியர் "முழுதுணர்ந்தவர்" அதாவது எல்லாப் பொருள்களைப் பற்றியும் முழுதும் உணர்ந்த ஞானி என்று அறியப் பெறும். இவர் தமிழில் இந்நூல் செய்துள் ளார் என்பதும் குறிக்கொண்டு நோக்கத் தக்கது. மேலும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களை

யும்' தமிழில் பாடினார்'' என்று கூறியிருப்பதால், இந் நூலாசிரியர் அந்நான்கு பற்றியும் தம்முடைய கருத்துக்களைப் பிறமொழியிலும் கூறியுள்ளார் என்றும் அவற்றை அப்பிற மொழியில் கற்றுணரமாட்டாதவர்க்குத் தமிழில் எழுதினார் என்றும் கொள்ளக் கிடக்கிறது. இங்ஙனம் கொள்ளாக்கால் ''தண்டமிழில்'' உரைத்தார்- ''ஏனோர்க்கு'' உரைத்தார் என்று கூறுவது செறிவுடைய கருத்தாகாது. எனவே குற ளாசிரியர் அறமுதலா அந்நான்கு பொருள்கள் பற்றித் தமிழல் லாத பிறமொழியிலும் எழுதினார் ஆதல் வேண்டும். எனவே ஜைநருடைய கொள்கைக்கு ஏற்பக் குறள் ஏலாசாரியரால் தமிழில் எழுதப்பட்டிருத்தல் கூடும் என்றும், அவ்வேலா சாரிய ராகிய ஸ்ரீ குந்த குந்தர் பிராகிருதத்தில் ''ப்ரப்ருத்ரயம்'' எனப் படும் பஞ்சாஸ்திகாயம், ப்ரவசனஸாரம், ஸமயஸாரம் என்றும் மூன்று நூல்கள் எழுதினார் என்பதும் கொள்ளப்படும். ''தானே முழுதுணர்ந்து'' என்று கூறியமைக்கு ஏற்ப ஸ்ரீ குந்த குந்தரும் ''கலிகாலசர்வக்ஞர்'' எனப்பெற்றார் என்பது அறியப்பெறும்.

> உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான்
> உத்தர மாமதுரைக்கு அச்சென்ப - இப்பக்கம்
> மாதானு பங்சி மறுவில் புலச் செந்நாய்
> போதார் புனற்கூடற் கச்சு!

என்பது நல்கூர் வேள்வியார் பாடிய பாடலாகும்

உபகேசியின் தோள் மணந்தவன் உத்தர மதுரையில் சிறந் தோன் ஆயினான். அங்ஙனமே இப்பக்கம் மாதாநுபங்கி எனப் படுகிற குற்றமற்ற அறிவுடைய செந்நாப் போதார் தென் மதுரைக்கு அச்சாணியாவார் என்பது இப்பாடலின் பொருள்.

''மாதாநுபங்கி'' என்ற தொடருக்குப் பேரா. அ. சக்கரவர்த்தி சிறந்த ஆய்வுரை தருகிறார். இத்தொடர் மாதா, அநு, பங்கி என்ற மூன்று சொற்களால் ஆயது. இதில் அநு என்பது சைன சமயக் கோட்பாட்டில் பயன்படுத்தப்படும். ஒரு முன் ஒட்டு. ஜைநாகமங்கள் நான்கு அவை பிரதாமாநு யோகம், கரணாநு யோகம், சரணாநு யோகம், திரவ்யாநு யோகம் என்பனவாம். அநுயோகம் என்பதில் அநு என்ற முன் ஒட்டு ஜைநசம்பிர

தாயத்துக்கு ஏற்ப உள்ளது. ஜைநசமயத்துக்கொள்கை அத்தி நாத்தி, சப்தபங்கி, அல்லது பங்கி என்ற பெயர்களால் குறிக்கப்படும். எனவே அநுயங்கி என்பது மேற்கூறிய அத்திநாத்தி அல்லது சப்தபங்கியைக் குறிக்கும். அங்ஙனம் ஆயின் மாதாநுபங்கி என்பது அநுபங்கி அல்லது சப்தபங்கிக்கு உரியவர் எனப்பொருள்படும். மாதாநுபங்கி என்பது எதுகை நோக்கி மாதாநுபங்கி என முதல் நீண்டதாகக் கொள்ளலாம். மேலும் வாதாநுபங்கி என்பதே ஏடெழுது வோரால் மாதாநுபங்கி என்று (வகாரத்துக்கு மகரம்) எழுதப்பட்ட தாதலும் கூடும். அங்ஙனமாயின் குறள் ஆசிரியர் அநுபங்கி வாதத்தைச் சார்ந்தவர் என்று பொருள்படும். எனவே மாதாநு பங்கி என்பது வாதாநுபங்கி என்பதால் கூடும் என்றும், சப்த பங்கி அல்லது அத்தி நாத்தி வாதத்தைக் குறிக்கும் என்றும், செந்நாப்போதார் சப்த பங்கி வாதத்துக்கு உரியவர் என்றும், இதனானே திருக்குறள் ஆசிரியர் ஜைந சமயத்தவர் ஆதல் கூடும் எனவும் அறியப்பெறும்.

கவிராஜ பண்டிதருரையுடன் கூடிய திருக்குறள் நன்கு அறிமுகப்படுத்தப் பெறவில்ல. 1949 இல் இது முதன் முதலில் அச்சிடப் பெற்றது; ஆகலின் தருமபுர ஆதீனத்தில் வெளியிடப் பெற்ற திருக்குறள் உரைவளத்தில் இடம் பெறவில்லை. திருக் குறள் உரைவளம் தயாரித்த மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் மதுரை — காமராசர் பல்கலைக் கழகத்தின் வாயிலாக வெளியிட்டுவரும் திருக்குறள் உரைக் களஞ்சியத்தில் இவ்வுரை இடம் பெற்றுள்ளது.

கவிராஜ பண்டிதருரை வெளியிட்ட பேரா. அ. சக்கரவர்த்தி அவர்கள் M A ,I.E S ஆங்கிலத்தில் திருக்குறளை மொழிபெயர்த் துச் சிறந்த விளக்கவுரைகளுடன் 1953 இல் அச்சிட்டு வெளி யிட்டார், இம்மொழிபெயர்ப்பும் விளக்கவுரையும் திருக்குறளின் ஜைநச் சார்பைத் திறம்பட விளக்குவனவாய் மிளிர்கின்றன. இப் பேராசிரியர் அரிதில் விளக்கவுரைகளுடன் வெளியிட்ட கவி ராஜ பண்டிதருரையும், இவரால் எழுதி வெளியிடப்பட்ட திருக்குறள் மொழி பெயர்ப்பும் இந்நாளில் கிடைத்தற்கரிதா யுள்ளன.

மேற்கண்ட ஆங்கில மொழிபெயர்ப்பு நூலுக்கு ஒரு சிறந்த முகவுரை உண்டு, "அம்முகவுரை சைன சமயத்தைக் குறித்தும், இந்து சமயத்தைக் குறித்தும், உலகத்தத்துவங்களைக் குறித்தும், தமிழ் வடமொழி இலக்கியங்களைக் குறித்தும் மிகுதிப்பட்ட அரிய கருத்துக்களைக் கூறுவதாக உள்ளது" அம்முகவுரையைத் "திருக்குறள் வழங்கும் செய்தி" என்ற தலைப்பில் 1959 இல் பகவதி ஜெயராமன் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்து வழங்கியுள்ளார்கள். (இந்நூலும் இந்நாளில் கிடைத்தற்கரிதாயிற்று)

மேற்கண்ட நூல்கள் வெளிப்படுவதற்கு முன்னரே திருக்குறள் ஜைநச் சார்பானநூல் என்ற கருத்தைப் பல மேற்கோள்களுடன் எழுதி அச்சிட்டு வெளியிட்டவர் காஞ்சிபுரம் தி. அ அனந்தநாத நயினார் அவர்கள் ஆவர். இவர் 1932 இல் திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைந சமய சித்தாந்த விளக்கமும் (முதற் பாகம்) என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். இந்நூற்குத் தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களின் அரிய முன்னுரையும் உண்டு. இந்நூல், திருக்குறள் ஆசிரியர், ஜைந சமயத்தவரே என்ற கொள்கையை வலியுறுத்துவது; அதற்கு ஏற்பப் பலமேற்கோள்கள் கொண்டு விளங்குவது. இதனானே இந்நூற்குத் தகவுரை எழுதிய ஆர்முகஞ் சேர்வை அவர்கள் இந்நூலாசிரியரை "மேற்கோண்மாரிப் பெரும்புயல்" என்று போற்றினார். இவர் திருக்குறள் கடவுள் வாழ்த்துக்குறள்கட்குத் தந்துள்ள விளக்கவுரைகளும், பிறவும் படித்துப் பயன் பெறுவதற்தரியனவாம். இவர் இந்நூலை யெழுதுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எல்லையில்லை எனலாம். இம்முயற்சி போற்றுதற்குரியது. இவர் ஜைநச் சார்பாகவே எழுதியுள்ள உரைப்பகுதி மட்டும் தொகுத்துப் பிற்சேர்க்கை I இல் கொடுத்துள்ளேன். ஆண்டுக் காண்க. இவர் திருக்குறளுக்கு ஜைநச் சார்பாகவே, பரிமேலழகர் உரையெழுதியது போன்று, உரையெழுதி அச்சிட்டிருந்தால் அது பொன்மலர் நாற்றமுடையது போலச் சிறக்கும்; தமிழுக்கும், திருக்குறளுக்கும், ஜைநத்துக்கும் செய்த பெருந்தொண்டாகவும் அமைந்திருக்கும்.

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பருதி பரிமேலழகர் — திருமலையர்
மல்லன் பரிப்பெருமான் காலிங்கர் வள்ளுவர் நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்"

என்ற வெண்பாவால் திருக்குறட்குப் பதின்மர் உரைசெய் தனர் என்பது போதரும். இவற்றுள் தருமர் என்பாருடைய உரை ஜைனச் சார்புடையது என்று பேரா. அ. சக்கரவர்த்தி கருதுகிறார். தம்மிடம் சிலர் தருமருரை எனற பெயரில் சில ஏடுகளைத் தந்ததாகவும் அவை ஜைனச் சார்புடையன அல்ல எனவும் அவர் கூறுகிறார். தருமர் யார் என்று ஈண்டு உரைப் பது பொருத்தமாகும்.

தென்னார்க்காடு மாவட்டத்துச் சிற்றூர்களில் ஒன்று திரு வாரூர். இவ்வூரில் வேளாண்குடியில் புகழனார் மாதினியார் எனும் இருவருக்கும் மருணீக்கியார் என்றொருவர் தோன்றி னார்; இளமையிலேயே பெற்றோர்களை இழந்த இவர்,

> ''காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
> மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
> நாவலர்க்கு வளம்பெருக நல்கியும் நாவிலத்துள்ளோர்
> யாவருக்குந் தவிராத ஈகை வினைத் துறை நின்றார்.''*

மேலும் இவர் வாழ்க்கை நிலையாமையை நன்குணர்ந்தார்; சமயங்கள் ஆனவற்றின் நல்லாறு தெரிந்துணர விழைந்தார்; 'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின் சாரப் பொய் யாமை நன்று'' (323) என்ற குறள் நெறியை அறிந்தார்; கொல் லாமையைக் கடைப் பிடித்து ஒழுகும் சமண சங்கத்தார் வாழ்ந்த பாடலிக்கு (திருப்பாதிரிப் புலியூர்க்கு)ச் சென்றார் சைன சமய நூல்களைக் கற்றார். தயா மூல தன்மம் என்னும் தத்துவத்தின் வழி நின்றார்; அவர்களுள் மேலோராகித் தரும சேனர் என்று சிறந்து விளங்கினார். இவர் பாடலியில் வாழ்ந்த நாட்களில் திருக்குறட்கு உரையியற்றியிருத்தல் கூடும். அவ்வுரையே ''தருமருரை'' யெனப் பெற்றது. இவ்வூகம் சரியான தெனில், அவ்வுரை கிடைக்குமெனில் - அதுவே ஜைன சமயச் சார்பான உரையாதல் உறுதி. அவ்வுரை கிடைக்காமை தமிழர் செய்த போகூழேயாகும், தவக் குறை யென்னலுமாம்.

இனி, இங்கு அச்செய்தும் உரைச்சுவடி. காகிதக் கையெழுத் துச் சுவடியாகத் தஞ்சை மகாராஜா சரபோஜி சரசுவதி மகால்

---

* பெரிய புராணம் — திருநாவுக்கரசர் புராணம் - செ 36.

நூல் நிலையத்தில் 880 பக்கங்கள் கொண்ட 1940 என்ற எண் உடைய சுவடியாகவுள்ளது. இது தஞ்சைக்கருகிலுள்ள கருந்தட்டான் குடி, கரந்தைப் புலவர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக விருந்த திரு. அடிகளாசிரியருக்குச் சொந்தமான ஓலைச் சுவடியைப் பார்த்துப்படியெடுக்கப்பட்டது. படியெடுத்து முடித்தது 12-4-1968. இதன் மூல ஓலைச் சுவடி திரு அடிகளாசிரியர்க்கே திருப்பியளிக்கப் பட்டு விட்டது. ஒப்பீடு செய்ய அந்த ஓலைச் சுவடியைக் கேட்ட பொழுது அது தம்மிடம் இல்லையென்றும் யாரிடம் கொடுக்கப் பட்டது என்ற செய்தி நினைவில் இல்லையென்றும் அவர் கூறினார்.

இந்தக் காகிதக் கையெழுத்துச் சுவடியை 19-2-1968 முதல் 20-4-68 வரை சரசுவதி மகால் தமிழ்ப்பண்டிதர் திரு.வி. சொக்கலிங்கம் அவர்கள் மூலச்சுவடியுடன் ஒப்பீடு செய்து பல இடங்களில் உரைமாற்றம் செய்துள்ளார். மாற்றம் செய்தவை எச் சுவடியை நோக்கிச் செய்யப்பட்டவை என்று கேட்ட பொழுது 'நினைவில் இல்லை' என்று கூறினார். சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள ஓலைச் சுவடியோடு நான் ஒப்பீடு செய்த பொழுது மாற்றம் செய்தன யாவும் அச் சுவடியில் இருத்தல் காணப்படலாயிற்று. எனவே அடிகளாசிரியர் சுவடியில் இருந்தவை - முதலில் படியெடுக்கப் பெற்றவை-யாவும் திரு அ- சக்கர வர்த்தி அவர்கள் 1949 இல் அச்சிட்டு வெளியிட்ட கவிராச பண்டிதருரைப் பிரதியோடு பெரும்பாலும் ஒன்றியிருப்பது அறியப்பட்டது.

சரசுவதி மகாலில் உள்ள கையெழுத்துச் சுவடியில் பல இடங்களில் உரை குறையாக இருத்தல் காணப்பட்டது. அக் குறைப் பகுதிகளும் பேரா. சக்கரவர்த்தி அவர்கள் வெளியிட்ட அச்சு நூல் பார்த்து நிறைவு செய்யப் பட்டன. மேலும் 'தம்மிவிருந்து'' என்ற 1107 ஆவது குறள்வரையில் தான் அடிகளாசிரியர் சுவடியில் இருந்தது என்றும் எஞ்சிய குறள்களுக்குரிய உரை பேரா. அ. சக்கரவர்த்தி அவர்கள் வெளியிட்ட கவிராஜ பண்டிதர் உரையுள்ள அச்சு நூலிலிருந்து நிறைவு செய்யப் பெற்றது என்றும் ஒரு குறிப்பு காகிதக் கையெழுத்துச் சுவடியில்

(பக்கம் 740 - இல்) எழுதியிருக்கிறது. காகிதக் கையெழுத்துச் சுவடியில் விடுபட்ட உரைப்பகுதிகளும் அந்தக் கவிராஜ பண்டித ருரை கொண்ட அச்சுநூலை நோக்கியே நிறைவு செய்து இந் நூல் வடிவில் அச்செய்துகிறது.

இவ்வுரைக்கு இன்றியமையாத இடங்களில் ஜைனச் சார் பான பகுதிகளுக்குக் குறிப்புகள் தரப் பெற்றுள்ளன. (பிற் சேர்க்கை II காண்க)

இவ்வுரை எளிமையாக வுள்ளது. பேச்சு வழக்குத் தமிழில் அமைந்துள்ளது. இயல் அதிகாரங்களும் குறள் நிரலும் பரிமே லழகர் கொண்டனவேயாகும். ஜைனச் சார்பான

இடங்கள் தவிர்த்துப் பெரும்பாலான இடங்களில் பரிமேலழக ருரையை ஒத்துள்ளது. திருக்குறள் காமத்துப்பால் குறள்கட்குத் தந்த குறிப்புப் பரிமேலழகருடையதாகவே உள்ளது. பரிமேலழ கருக்கும் கவிராஜ பண்டிதருக்கும் முன்னதாகச் ஜைனச் சார்பான ஒருரை யிருந்திருத்தல் வேண்டும் என்றும் பரிமேலழகர் தமக்கு வேண்டிய இடத்தில் மாற்றியமைத்துக் கொண்டனர் என்றும், இக்கவிராஜபண்டிதருரையாகிய ஜைனச் சார்பானவுரை அப்பழைய உரையை எளிமைப்படுத்தி யெழுதியதாகலாம் என்றும் பேரா. சக்கரவர்த்தி கருதுவர்.* இது பொருந்தாத கூற்றெனவே தோன்றுகிறது. பரிமேலழகர் உரையை நன்கு கற்ற கவிராஜ பண்டிதர் பரிமேலழகருரையை எளிமைப்படுத்தி வேண்டிய அளவு மட்டும் எடுத்துக் கொண்டார் என்றும், ஜைனச் சார்பான முறையில் எழுத வேண்டிய இடங்களில் தம் கருத்தை எளிமையான தமிழில் எழுதினார் என்றும், பிறவிடங்களில் தன், கருத்துக்கேற்ப எளிமையாக எழுதினார் என்றும் கொள்ளலாம். எங்ஙன மாயினும் ஜைனச் சார்பான இவ்வுரை எளிய தமிழில் தரப் பட்டதே என்பது தெளிவு.

இந்தச் சுவடியின் மொழிநிலை பற்றி இங்குச் சில கூறுவது இன்றியமையாததாகும்.

---

* அச்சுநூல் - ஆங்கில முன்னுரை - பக்கம் xxxiii

சந்திப்பிழைகளும் சொற்பிழைகளும் மலிந்து இருந்த இச்சுவடியில் அவையாவும் திருத்தப்பட்டன. எனினும்,

உண்ணப் பட்டவர்களுக்கு (12) (உண்பவர்க்கு) அறியப் பட்ட (27) - (அறிகிற)

உண்டாக்கப்பட்ட (100) - (உண்டாக்குப்) என்றாற் போன்ற இடங்களில் செயப்பாட்டு வினைச் சொற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

வருகிறதற்கு, செய்கிறதற்கு என்பவை வருகிறத்துக்கு (51) செய்கிறத்துக்கு (26) என்று விரித்தல் விகாரம் பெற்ற சொற்கள் பற்பல பயன்படுத்தப்பட்டுள்ளன.

நினைச்சு (நினைத்து) (22), கோபிச்சு (கோபித்து) - (135) என்ற போலிச் சொற்கள் பெரும்பான்மை.

சரி என்ற சொல் சமானம் என்ற பொருளிலும்,

ஆனபடியினாலே என்ற சொல்லும், இப்போ (இப்பொழுது) அத்தை (அதனை), எத்தை (எதனை) என்றாற் போன்றனவும் இச்சுவடியில் நிறைய உண்டு. மிகவும் என்ற பொருளில் மெத்த என்ற சொல்லும், வேண்டும் என்ற விடத்தில் வேணும் என்பதும் பெரும் பான்மையாகவுள்ளன.

பிறத்தியிலே, பிறத்தியார், பெண்சாதி (மனைவி). இது களை (இவற்றை) இது முதலானதுகளை, நினைத்ததுகள் என்பவை நிறையப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தன்னுடைய என்ற விடத்துத் தன்னிடவென்றும்,

செய்கிற — செய்யுற என்றும்,
போகிற — போற என்றும்,
விற்கிற — விக்கிற என்றும்
கேட்கிற — கேழ்க்கிற என்றும்
மாம்சம் — மாங்கிசம், மாங்கிஷம் என்றும்
வம்சம் — வங்கிஷம் என்றும்
இருக்கிறது — இருக்குது என்றும்

பல விடங்களில் காணப்படுகின்றன.

பரஸ்திரி, பரஸ்ரீ, ஸ்ரீகள், ஸ்திரீகள் என்று இவ்வடியிலேயே காணப்படுகின்றன.

காக்காவிட்டால் என்பது காராவிட்டால் என்றே காணப் படுகிறது.

இல்வாழ்க்கை இல்வாட்கையாகவுள்ளது. மனை வாழ்க் கையும் மனைவாட்கையே.

ஒருகால் என்பது ஒருக்கால் என்றுள்ளது. அழுக்காறு என்பதற்குப் பொறுப் பற்றுப்படுதல் என்பது புதுவகையான விளக்கம் (35, 135).

போக்குடிக்கப் போகாது, சொல்லப் போகாது, கடக்கப் போகாது என்ற வட்டார வழக்குச் சொற்றொடர்களும் உண்டு.

இங்ஙனம் பேச்சுவழக்குத் தமிழிலே இவ்வுரை அமைந்திருக் கிறது என்பது இவ்வுரை பற்றிக் கூற வேண்டியுள்ளது.

நன்றியுரை;- திருக்குறட்கு ஜைனச் சார்பான வுரை கூறு கிற இந்தக் காகிதக் கையெழுத்துச் சுவடியைச் செப்பனிட்டு ஆய்ந்து அச்சுக் கேற்ற வகையில் குறிப்புரை முன்னுரை முதலி யன எழுதும் இப்பணிக்குப் பல அன்பர்கள் எளியேற்க்கு உறு துணையாயிருந்து ஊக்கமளித்துள்ளார்கள். அவர்கள் யாவர்க்கும் நன்றி செலுத்துவது முதற் கடமையாகும்.

இச் சுவடி ஆய்வுப் பணியை எளியேனுக்கு 7 - 3 - 1987 இல் அளித்தவர், அந்நாளில் நிர்வாக அதிகாரியாய் இருந்த திரு அ. பஞ்ச நாதன் M.A.; BLib. Sc., அவர்கள் ஆவர். அவர் கட்கு முதற்கண் நன்றி.

காலதாமதம் ஆயினும் இப்பணியைச் செவ்வனே நிறை வேற்றுதற்கு வேண்டிய ஊக்கங்களை அளித்த இந்நாள் நிர்வாக அதிகாரியும் துணை ஆட்சியரும் ஆகிய திரு.சி. கிருஷ்ணன் அவர்கட்கு என் நன்றியுரியதாகுக.

இவ்வாய்வுக்கு வேண்டிய நூல்களையும் பிறவற்றையும் தந்து அவ்வப்பொழுது உதவி புரிந்த தஞ்சை சரசுவதி மகால் நூலகர், உதவி நூலகர்கள், தமிழ்ப்பண்டிதர் ஆகியோர்க்கும் என் நன்றி.

இந்தச் சுவடியை ஒப்பீடு செய்வதற்குக் கவிராஜ பண்டிதர் உரை கொண்ட அச்சுநூல் தேவைப்பட்டது. பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. ''மாரி மாட்டு என்னாற்றுங் கொல்லோ உலகு'' என்ற குறட் கேற்ப எளியேன் கேட்டதும் பண்டிதர் உரை பொருந்திய அச்சு நூலையும், ஜைன சமயக் கோட்பாடுகள் பற்றி அறிந்து கொள்வதற்குரிய சில நூல்களையும் கொடுத்து உதவியவர், தஞ்சை, கருந்தட்டான் குடி ஜிநாலயத் தெருவில் வாழ்பவரும், திரு. ஜி.ந. குமரன் என்னும் ஜைனப் பெரியாருடைய வாழ்க்கைத் துணைவியாரும், ஜைன சமயக் கோட்பாடுகளைக் கசடறக் கற்று'' நிற்க அதற்குத்தக'' என்ற வள்ளுவத்துக் கேற்ப நடக்கின்றவர்களும், ''அறம் கூறும் அன்னை'' என்ற சிறப்புப் பட்டம் உடையவர்களுமான திருமதி ராஜலக்ஷ்மி ஜி ந. குமரன் அவர்கள் ஆவர், அவர்களுடைய சமய அறிவும் பிற நற் பண்புகளும் போற்றற்குரியன. அவர்கள் தந்த ஊக்கத்தாலேதான் இச் சுவடியை அச்சிடற் கேற்ற வகையில் அமைக்க முடிந்தது. அவர்கள் ''ஞானமும் மாட்சியும் ஒழுக்கமும் நிறைந்து'' வாழ்க என வாழ்த்தி அவர்களுக்கு மனமார்ந்த நன்றி செலுத்துகிறேன்.

ஏதேனும் ஓலைச் சுவடியுடன் ஒப்பீடு செய்ய வேண்டுமென நினைத்த பொழுது, சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் ஒரு சுவடியிருப்பதை யறிந்து, அங்குச் சென்று ஒப்பீடு செய்தேன். அப்பொழுது சுவடியைத் தந்து உதவிய அந்நூலகத் துக் காப்பாளர், தமிழ்ப்பண்டிதர் ஆகியோருக்கு யான் நன்றி யறிதலுடையேன்.

சென்னையில் சில ஜைன அன்பர்களோடு இவ்வுரைபற்றி யறிய விழைந்தேன். அவ்வமயம் ஜைன நூல்களில் வல்லவரும், காவல் துறை (சிறை) Inspector General ஆக விளங்குபவரும் ஆகிய உயர் திரு S, ஸ்ரீபால் அவர்களைக் கண்டேன். அவர்கள்

சில ஐயங்களைப் போக்கியதுடன் தி. நகர் போக்சாலையிலுள்ள ஜைன இளைஞர் சங்கத்தினரிடம் ஆற்றுப்படுத்தினார். ஆகவே உயர்திரு S. ஸ்ரீபால் அவர்கட்கும் ஜைந இளைஞர் சங்கத்தவர் களுக்கும் என் நன்றி.

திருக்குறளை எழுதியவர் ஆசாரிய ஸ்ரீகுந்தகுந்தர் என்பது ஜைனருடைய கருத்து என்பது இம் முன்னுரை தொடக்கத்தி லேயே சொல்லப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாலட்டம் வந்த வாசிக்கு அருகில் பொன்னூர் மலை என்றொரு மலையுள்ளது. அம்மலையின் உச்சியில் ஸ்ரீ குந்த குந்தருடைய திருப்பாதங்கள் அமைத்துப் பூசிக்கப்படுகின்றன. அவ்வூரில் ஆசாரியர் குந்த குந்தர் தத்துவப் படிப்பு மையம் நடை பெறுகிறது. ஜைநச் சமயத் தொடர்பான பல தொண்டுகள் அங்கு நடைபெறுகின்றன. அவற்றை முன்னின்று நடத்தும் அன்பர் புலவர் சிவ. ஆதிநாதன் என்பவர் ஆவர். இவ்வன்பர் எனக்கு இப்பணியில் ஊக்கம் அளித்தமையோடு ஜைந சமயத் தத்துவங்களை அறிந்து கொள் வதற்குப் பல நூல்களை அளித்தும், பலரிடத்து ஆற்றுப் படுத்தி யும், பல ஐயங்களைத் தீர்த்தும் எனக்கு உதவி புரிந்தருளினார். அவர்கட்கும் என் மனமார்ந்த நன்றி.

முச்சக நிழற்றும் முழுமதி முக்குடை அச்சுதனடி தொழும் ஆன் றோர் வாழியர்!

திருப்பனந்தாள்
15-6-1989

கே. எம். வேங்கடராமையா
(முன்னாள் முதல்வர் - செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்;
முன்னாள் பேராசிரியர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர்

| நூலோதி: | Bibliography |
|---|---|
| 1. அநந்த நாதநயினார் தி.அ. | திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைந சமய சித்தாந்தமும் (முதற் பாகம்) ஸ்ரீ ஆதிமூலம் அச்சியந் திரசாலை சென்னை (1932) |
| 2. ஆசார்யகுந்தகுந்தர் கல்வி நிறுவனம் | 1—5 ஆகம ஞானமலர், குந்த குந்த நகர், 604502 |
| 3. இளங்கோவடிகள் | சிலப்பதிகாரம் மூலமும் உரையும் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு (1950) |
| 4. ஏகாம்பரநாதன் | கல்வெட்டில் சமணம், ஜைந இளைஞர் மன்றம், 3. போக் சாலை, சென்னை 17 (1979) |
| 5. காமாட்சிஸ்ரீநிவாசன் | குறள்கூறும் சமயம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, (1979) |
| 6. சக்கரவர்த்தி பேரரசு | தேவர்திருக்குறள் — கவிராஜ பண்டிதர் உரை. சாதுஅச்சகம், ராயப்பேட்டை சென்னை (1949) |
| 7. சீத்தலைச்சாத்தனார் | மணிமேகலை, உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு, சென்னை |
| 8. சங்கப்புலவர். | திருவள்ளுவமாலை (திருக்குறள்) உரைக்கொத்து காமத்துப்பால், ஸ்ரீகாசிமடம் திருப்பனந்தாள் |
| 9. ,, ,, | புறநானூறு. உ. வே. சாமிநாதையர் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம் (1985) |
| 10. தண்டபாணிதேசிகர், ச. மகாவித்துவான் | திருக்குறள் உரைக்களஞ்சியம் அறத்துப்பால் பாயிரவியல் 1921 |

| | | |
|---|---|---|
| 11. | தை | அறத்துப்பால் இல்லறவியல் 1983 மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை |
| 12. | திருத்தக்கதேவர் | சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியர் உரை, உ.வே. சாமிநாதையர் பதிப்பு (1969) |
| 13. | திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் | திருக்குறள் மடக்குடவருரை (1973) |
| 14. | ஷ் | திருக்குறள் உரைக்கொத்து<br>அறத்துப்பால் 1969<br>பொருட்பால் (1960)<br>காமத்துப்பால் (1971) |
| 15. | நேமிநாதசித்தாரந்த சக்கரவர்த்தி, ஆசார்யஸ்ரீ | திரவிய சங்கிரகம், மூலமும் உரையும் (உரையாசிரியர் T.S. பரத சக்கரவர்த்தி ஜெயி சாஸ்திர) வெளியீடு, ஸ்ரீ குந்த குந்த கவிதன் திகம்பரஜைன தீர்த்த சுரக்ஷரடிரஸ்ட் பம்பாய்; அச்சிட்டோர், குந்தகுந்த அச்சுப் பயிற்சி நிலையம், குந்தகுந்த நகர் 604502 (1987) |
| 16. | பகவதி ஜெயராமன் | திருக்குறள் வழங்கும் செய்தி, பாரி நிலையம், சென்னை (1959) |
| 17. | பரத சக்கரவர்த்தி ஜெயின் சாஸ்திரி | தர்மத்தின் பத்து லக்ஷணங்கள், இந்தி மூலம், ஹரகம் சாந்பாரில்லர், ஸ்ரீ குந்த குந்த சஹரன் சரகூர டிரஸ்ட், 15, சந்திரப்ப முதலிதெரு, சென்னை (1981) |
| 18. | பிரபோத சந்திரோதயம் | தஞ்சை சரசுவதிமகால் பதிப்பு (1988) |

19. பூரணசந்திரசாஸ்திரி — கிரியாகலாபம். தமிழுரையுடன் ஆதிபகவான் அறநூற்பதிப்பகம், இராயப்பேட்டை சென்னை, 14, (1963)

20. மயிலைசீனி. வேங்கடசாமி — சமணமும் தமிழும் (முதற்பகுதி), திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை - 1 (1980)

21. வாமனமுனிவர் — நீலகேசி, அ. சக்கரவர்த்தி, தமிழ்ப் பல்கலைக்கழகம், 1985

22. — மேருமந்தர புராணம்

23. வெள்ளியம்பல வாண முனிவர் — முதுமொழிமேல்வைப்பு ஸ்ரீகாசி மடம், திருப்பனந்தாள் (1968)

24. வேங்கடராமையா, கே.எம். — திருக்குறள் பரிப்பெருமாளுரை அண்ணாமலைப் பல்கலைக் கழகம், (1988)

25. வேங்கடராஜலு ரெட்டியார் — ஸ்ரீ புராணம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

26. ஜிநேந்திரவாணி, பிர. — சமணக் கோட்பாட்டில் மெய்ப் பொருளியல்பு முதல்தொகுதி (1987)

27. ஷை — ஷை இரண்டாம் தொகுதி 1987 ஆசாரியர்குந்தகுந்தர் தத்துவபட்டாப்பு மையம், குந்த குந்தநகர் 604502

28. ஜெகன்னாதனார், மு. — அருகன் தத்துவம், திங்களிதழ் சுவடி 3, ஏடு 4,5 (1989)

29. ஜைனஇளைஞர் மன்றம் — சைவழிபாடுதோத்திரத்திரட்டு, ஜைனஇளைஞர் மன்றம், சென்னை 17 (1988)

30. ஸ்ரீபால், T.S. ஜீவ பற்று — திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன், திருத்தக்க தேவர் இலக்கிய மன்றம் 34, சுப்ரமணிய முதலி, தெரு, சென்னை 1 (1964)

31. Chakravarthi Prof A. — *Jaina Literature in Tamil* (revised Edition) by K.V. Ramesh, Bharatyas Janpath New Delhi-1 (1974)

32. do — *Tirukkural*, English Translation, Commentary & Introduction, Printed at Diozesan press, Verify, Madras (1953)

33. Ellis f. w. — *Tirukkural* on Virtue, Commentary first Edition (1812) available at Maramalai Adikal Library, Madras (*No* R.O.T. 32)

34. Gajapath iJains — *Glimpses of Jaina Philosophy* Jain youth Madras 17 (1988)

35. Subramanyam Kaa, Naa — *Trruvalluvar His Tirukkural* (Bharatya Janpnith New Delhi-1 (1987)

# அதிகாரப் பெயர் அகரநிரல்


| பெயர் | நிரல் எண் | பெயர் | நிரல் எண் |
|---|---|---|---|
| அடக்கமுடைமை | 13 | ஒப்புரவறிதல் | 22 |
| அமைச்சு | 64 | ஒழுக்கமுடைமை | 14 |
| அரண் | 75 | ஒற்றாடல் | 59 |
| அருளுடைமை | 25 | கடவுள்வாழ்த்து | 1 |
| அலரறிவுறுத்தல் | 115 | கண்ணோட்டம் | 58 |
| அவர்வயின்விதும்பல் | 127 | கண்விதுப்பழிதல் | 118 |
| அவாவறுத்தல் | 37 | கயமை | 108 |
| அவையஞ்சாமை | 73 | கல்லாமை | 41 |
| அவையறிதல் | 72 | கல்வி | 40 |
| அழுக்காறாமை | 17 | கள்ளாமை | 29 |
| அறன்வலியுறுத்தல் | 4 | கள்ளுண்ணாமை | 93 |
| அறிவுடைமை | 43 | கனவுநிலையுரைத்தல் | 122 |
| அன்புடைமை | 8 | காதற்சிறப்புரைத்தல் | 113 |
| ஆள்வினையுடைமை | 62 | காலமறிதல் | 49 |
| இகல் | | குடிசெயல்வகை | 103 |
| இடனறிதல் | 50 | குடிமை | 96 |
| இடுக்கணழியாமை | 63 | குறிப்பறிதல் (பொருள்) | 71 |
| இரவச்சம் | 107 | குறிப்பறிதல் (காமம்) | 110 |
| இரவு | 106 | குறிப்பறிவுறுத்தல் | 128 |
| இல்வாழ்க்கை | 5 | குற்றங்கடிதல் | 44 |
| இறைமாட்சி | 39 | கூடாநட்பு | 83 |
| இனியவைகூறல் | 10 | கூடாவொழுக்கம் | 28 |
| இன்னாசெய்யாமை | 32 | கேள்வி | 42 |
| ஈகை | 23 | கொடுங்கோன்மை | 56 |
| உட்பகை | 89 | கொல்லாமை | 33 |
| உழவு | 104 | சான்றாண்மை | 99 |
| உறுப்புநலனழிதல் | 124 | சிற்றினஞ்சேராமை | 46 |
| ஊக்கமுடைமை | 60 | சுற்றந்தழால் | 53 |
| ஊடலுவகை | 133 | சூது | 94 |
| ஊழ் | 38 | செங்கோன்மை | 55 |

| பெயர் | நிரல் எண் |
|---|---|
| செய்ந்நன்றியறிதல் | 11 |
| சொல்வன்மை | 65 |
| தகையணங்குறுத்தல் | 109 |
| தவம் | 27 |
| தனிப்படர்மிகுதி | 120 |
| தீநட்பு | 82 |
| தீவினையச்சம் | 21 |
| துறவு | 35 |
| தூது | 69 |
| தெரிந்து செயல்வகை | 47 |
| தெரிந்து தெளிதல் | 51 |
| தெரிந்து வினையாடல் | 52 |
| நடுவுநிலைமை | 12 |
| நட்பாராய்தல் | 80 |
| நட்பு | 79 |
| நலம்புனைந்துரைத்தல் | 112 |
| நல்குரவு | 105 |
| நன்றியில் செல்வம் | 101 |
| நாடு | 74 |
| நாணுடைமை | 102 |
| நாணுத்துறவுரைத்தல் | 114 |
| நிலையாமை | 34 |
| நிறையழிதல் | 126 |
| நினைந்தவர் புலம்பல் | 121 |
| நீத்தார் பெருமை | 3 |
| நெஞ்சொடு கிளத்தல் | 125 |
| நெஞ்சொடு புலத்தல் | 130 |
| பகைத்திறந்தெரிதல் | 88 |
| பகைமாட்சி | 87 |
| பசப்புறுபருவரல் | 119 |
| படர்மெலிந்திரங்கல் | 117 |
| படைச்செருக்கு | 78 |
| படைமாட்சி | 77 |
| பண்புடைமை | 100 |
| பயனில் சொல்லாமை | 20 |
| பழமை | 81 |
| பிரிவாற்றாமை | 116 |
| பிறனில் விழையாமை | 15 |
| புகழ் | 24 |
| புணர்ச்சிமகிழ்தல் | 111 |
| புணர்ச்சிவிதும்பல் | 129 |
| புதல்வரைப் பெறுதல் | 7 |
| புலவி | 131 |
| புல்லறிவாண்மை | 85 |
| புலவிநுணுக்கம் | 132 |
| புலால் மறுத்தல் | 26 |
| புறங்கூறாமை | 19 |
| பெண்வழிச்சேறல் | 19 |
| பெரியாரைத் துணைக்கோடல் | 45 |
| பெரியாரைப் பிழையாமை | 90 |
| பெருமை | 98 |
| பேதைமை | 84 |
| பொச்சாவாமை | 54 |
| பொருள் செயல்வகை | 76 |
| பொழுது கண்டிரங்கல் | 123 |
| பொறையுடைமை | 16 |
| மடியின்மை | 61 |
| மருந்து | 95 |
| மன்னரைச்சேர்ந்தொழுகல் | 70 |
| மானம் | 97 |
| மெய்யுணர்தல் | 36 |
| வரைவின் மகளிர் | 92 |
| வலியறிதல் | 48 |

| | | | |
|---|---|---|---|
| வாய்மை | 30 | வினைத்திட்பம் | 67 |
| வாழ்க்கைத் துணைநலம் | 6 | வினைத் தூய்மை | 66 |
| வான்சிறப்பு | 2 | வெகுளாமை | 31 |
| விருந்தோம்பல் | 9 | வெஃகாமை | 18 |
| வினைசெயல்வகை | 68 | வெருவந்த செய்யாமை | 57 |

| சுருக்கமும் | விளக்கமும் |
|---|---|
| 1. அச்சுநூல் | பேரா. அ. சக்கரவர்த்தி அவர்கள் 1949 இல் அச்சிட்ட குறள்- கவிராஜபண்டிதருரை. |
| 2. காகிதக்கையெழுத்துச் சுவடி | இப்பொழுது அச்சிட்டுவெளியிடப் பெற்ற திருக்குறள் ஜைனருரைக்கு மூலச்சுவடியாக விளங்கும் சரசுவதிமகால்சுவடி எண் 1940 |
| 3. தி.ஆ. | திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும் - முதற்பாகம் - தி.அ. நந்தநாத நயினார் (1949) |
| 4. சிலப் | சிலப்பதிகாரம் |

வந்தவாசிக்கு அருகிலுள்ள பொன்னூர் மப என்ற ஊரில் உள்ள ஆசாரியரு குந்தகுந்தரின் திருவடிகள் வைத்துவணங்கும் மலை

# தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த

# குறள்

## 1. கடவுள் வணக்கம்*

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

என்பது

எழுத்துகளுக்கெல்லாம் அகாரவெழுத்து முதலாயிருக்கிறாப் போலே உலகத்துக்கெல்லாம் சருவக்கியனான சுவாமியே முதலென்றவாறு. க

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழா[1] ரெனின்

என்பது

எல்லா நூல்களையும் கற்றாலு மந்த நூல்களுடைய அர்த்தங்களை யறிந்தாலும் நல்ல[2] அறிவினையுடைய சுவாமி டாங்தகளைத் தோத்திரம் பண்ணாவிட்டா லவனுக்கு ஒரு பலனுமில்லை யென்றவாறு உ

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

என்பது

மலரின்[1] மேலே நடந்த சருவக்கியனுடைய நல்ல பாதங்களைச் சேர்ந்த பேர்க ளெல்லா வுலகத்துக்கும் மேலாயிருக்கப் பட்ட மோட்சத்திலே போய் ஒரு காலமு மழியாமல் வாழ்வார்களென்றவாறு ௩

4. வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில

---

* வாழ்த்து என்பது பிறர்கொண்ட பாடம்.

1. ''டொழா அ'' என்றிருத்தல் வேண்டும் உ'கேவல' என்பது அச்சு நூல்

1. தேவமலரின் என்பது அச்சுநூல் (தேவர்களால் இடப்படும் தாமரைமலர்

என்பது

ஒரு பொருளை வேண்டுகிறதும் வேண்டாதது மில்லாத சுவாமி பாதங்களைச் சேர்ந்தவர்களுக்கு எந்தக் காலத்திலேயும் பிறவியாகிற துக்கங்களில்லை என்றவாறு ௪

5. இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு ௫

என்பது

நல்வினை தீவினை[2] யென்னு மிரண்டு வினையுஞ் சேராது,[3] மெய்யா யிருக்கிற சுவாமியுடைய கீர்த்தியை விரும்பித் தோத்திரம் பண்ணுகிறவர்களுக் கென்றவாறு. ௫

6. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார்

என்பது

உடம்பு வாய் கண் காது மூக்கு என்று சொல்லப்பட்ட ஐந்து இந்திரியங்களின் வழியாக உடைய ஆசையை[2] அறுத்தவன் சொன்ன குற்றமில்லாத நெறியிலே வழுவாமல் நடந்தவர்கள் ஒரு காலமும் அழிவில்லாமலிருக்கிற மோட்சத்திலே எந்தக் காலமு மழிவில்லாமல் வாழ்வார்க ளென்றவாறு. ௬

7. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது

என்பது

ஒரு வஸ்துவுந் தனக்குச் சரியல்லாமலிருக்கிற சருவேசுவரனுடைய[3] பாதங்களைச் சேர்ந்தவர்களுக்கு மனசு துக்கங்களைப் போக்கடிக்கலாம்; சேராதவர்களுக்கு மனத்துக்கங்களைப் போக்கடிக்கப் போகாதென்றவாறு ௭

---

1. பொறிகளை 2. மித்யை என்பன (அச்சுநூல் மித்யை-அஞ்ஞானம்)
3. ஜினேசுவரனுடைய என்பது அச்சுநூல்
3. சேரா என்க உ. காதிவினை அகாதிவினை என்பது அச்சு நூல் குறிப்புரை

8. அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது

என்பது

தர்மத்தைச் சமுத்திரமாக* உடையனாயிருக்கிற சர்வேசு வரனுடைய பாதங்களைச் சேர்ந்தவர்களுக்குப் பிறப்பென்னுங் கடலைக் கடக்கலாம்; சேராத பேருக்குப் பிறவிக் கடலைக் கடக்கப் போகா தென்றவாறு அ

9 கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை

என்பது

எட்டுக் குணங்களுடைய சர்வக்கினன் பாதங்களை வணங் காத் தலை பிராணனில்லாமல் செத்துக் கிடக்கிற பிணத்தோடே சரியென்றவாறு. சுவாமிக்கு எட்டுக் குணங்களாகிறது அனந்த ஞானம் (க) அனந்த தெரிசனம் (உ) அநந்த வீரியம் (ங) அநந்த சுகம் (ச) நிர் நாமம் (ரு) நிர் கோத்திரம் (சு) நிராயு ஷியம் (எ) சகல சம்மியக்தவம் (அ) என்றவாறு. (௯)

10. பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்[1]

என்பது

சுவாமியுடைய பாதங்களைச் சேராதபேர் பிறப்பென்னுங் கடலைக் கடக்கமாட்டார்கள்; சுவாமி பாதங்களைச் சேர்ந்த பேர் பிறவிக்கடலைக் கடப்பார்க ளென்றவாறு. ௰

முற்றும்

---

1. தவர் எவ்பது அச்சநூல்

## 2. வான் சிறப்பு

என்பது, ஆகாசத்திலே மேகங்கள் வந்து பெய்யப்பட்ட மழையினது நன்மையைச் சொல்லுகிறோ மென்றவாறு.

11. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிர்த* மென்றுணரற் பாற்று

என்பது

மழை காலங்களிலே பெய்து வருகிறபடியினாலே பூலோகம் நன்றாயிருக்கும்; ஆனபடியினாலே அந்த மழை இந்த வுலகத்துக்கு அமிர்தமென்று சொல்லப்படு மென்றவாறு

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூவும்[1] மழை

என்பது

உண்ணப்பட்டவர்களுக்கு[2] உண்ணத்தக்க வஸ்துவை நல்லவுணவு[3] உண்டாக்கி அத்தை[4] யுண்கிறவர்களுக்கு முணவாக நிற்கும் மழை யென்றவாறு. உ

13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி

என்பது

மழை வேண்டிய காலத்தில் பெய்யாமல் போனால் சமுத்திரஞ் சூழ்ந்திருக்கப்பட்ட[5] பூமியிலே யிருக்கிற மனுஷரைப் பசி வாதிச்சுக்[6] கொல்லு மென்றவாறு ங

14. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்

என்பது

மழை பெய்யாத காலத்திலே உழுகிற பேர்கள் ஏராலே உழுகிறது முதலான காரியங்களைச் செய்யமாட்டார்களென்றவாறு. ச

---

* அமிர்தம்—அமிழ்தம் என்பது பிறர் பாடம்

1. "தூஉ" என்பதே சரியானபாடம் 2. உண்பவர்க்கு என்க. 3. வுணவாக 4. அதை 5. சூழ்ந்திருக்கும் 6. வாதித்து.

15. கெடுப்பதூஉவும்[1] கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லாம் மழை

என்பது

பூமியிலே வாழ்கிற பேரை மழை பெய்யாமல்[2] கெடுக்கிறதுங் கெட்ட பேரைத் திரும்பப் பிழைக்கத் தக்கதாக[3] மழை பெய்து ரட்சிக்கிறத்துக்கும்[4] வல்லது மழை யென்றவாறு. ௫

16. விசும்பிற் றுளிவீசி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது

என்பது

ஆகாசத்திலே யிருந்து மழைத்தூற்றல்[3] விழுந்தா லல்லாமற் பூமியிலே பச்சைப் புல்லைக் காண்கிறதும் அருமை யென்றவாறு

௬

17. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்

என்பது

அளவில்லாம லிருக்கிற சமுத்திரமும் மழை பெய்யாக் காலத்திலே குறைந்துபோம்; மழைபெய்தால் நிறைந்திருக்குமென்றவாறு. ௭

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு

என்பது

மழைபெய்யாத காலத்திலே சுவாமிகளுக்குந் தேவர்களுக்குஞ் சிறப்பும் பூசையும் நடவா; ஆனபடியினாலே சகலமான பேருக்கும் மழை வேணு[1] மென்றவாறு. ௮

19. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்

என்பது

---

1. "தூஉங்" என்பதே சரியான பாடம்* அதிகமாகம் பெய்து என்பது அச்சுஷ்ல் 2. தக்கவராக லை ஆல் 3. ரட்சிக்கிறதற்கும் 4. தூறல்

ஆகாசத்திலே யிருந்து மழை பெய்யாவிட்டால் இந்த லோகத்திலே தானமுந் தவசு[2]மில்லாமல் போய்விடு மென்ற வாறு சா

20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு

என்பது

எப்படிப்பட்டவர்களுக்குந் தண்ணியை [3] யல்லாமல் ஒரு காரியமு மாகாது; அந்தத் தண்ணியு மாகாசத்திலே மேகங்கள் கொடுத்தாலல்லாமல் இல்லை யென்றவாறு. (1)

வான்சிறப்பு முற்றும்.

## 3 நீத்தார் பெருமை

என்பது, ஆசாபாசங்களையும் விட்டுத் துறந்து தபசு பண்ணு கிற முனியீசுவரர்களுடைய பெருமையைச் சொல்லுகிறதாம்.

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு

என்பது

தவசுக்குரியதான நல்ல ஒழுக்கங்களிலே நின்று தவசு பண்ணுகிறவர்கள் பெருமையைப் பெரியதாயிருக்கிற வஸ்துக் களுள்ளுந் தவசே பெரியதென்று சகலமான நூல்களுஞ் சொல்லு மென்பதாம்.

க

22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று

என்பது

---

1. வேணும் - வேண்டும்
2. தவசு-தபன்-தவம்
3. தண்ணீரை
4. யில்லாமல்

1. வஸ்துக்கள் - பொருள்கள்

ஆசையை விட்டுத் துறந்தவர்கள் பெருமைக்கு உவமை சொல்லப்போனால் வேத சாத்திரத்திலே சொல்லி முடியாது; பின்னை எப்படி யென்றால் ஆசையை விடாமல் சங்காரத்திலே[1] யிருந்திறந்து கெட்டுப்போன பேரை நினைச்சுக்[2]கொள்ள வென்பதாம். உ

23. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு

என்பது

சங்கார[3] மோட்ச மென்கிற இரண்டினுடைய வகையையுந் தெரிந்து ஆராய்ந்து குற்றமுள்ள சங்காரத்தைக் கெடுக்கிறதுக்காகத்[4] தவசைப் பண்ணப்பட்டவர்கள் பெருமையே யிந்த வுலகத்திலே அதிகமென்பதாம். ௩

24. உரனென்னுந் தோட்டியா னோரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர்[6]வித்து

என்பது

மனசென்கிற பெலத்தினாலே ஐம்புலனாகிய மெய்வாய் கண் மூக்குச் செவி ஆசையின் வழியே போகவொட்டாம லடக்கிக் காக்கிறவன் எல்லா வுலகத்துக்கும் மேலா யிருக்கிற மோட்ச நிலத்துக்கு ஒரு விரை[1]யா மென்றவாறு ௪

25. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி

என்பது

ஐம்புலன்களையும் ஆசையின்வழியே போகவொட்டாம லடக்கினவனுடைய[2] வலுமைக்குத்[3] தேவலோகத்திலே தேவர்களுக்

---

1. சம்சாரத்திலே – இல்வாழ்க்கையிலே 2. நினைத்து 3. சம்சாரம் - பிறப்பு என்று 4. கெடுக்கிறதற்காக 5. பண்ணியவர்கள் 6. வைப்பிற்கோர் என்பது பிறர்பாடம்

1. விரை-விதை-வித்து 2. அடக்கினஎஜநனுடைய னென்பது அச்சுநூல் 3. வலுமை-வலிமை பெருமை என்பது. அச்சுநூல்

கெல்லாம் ராசாவாயிருக்கப்பட்ட, தேவேந்திரனே சரி,[5] பின்னை யொருவருஞ் சரியல்ல[6] வென்பதாம். ரு

26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

என்பது

மனுஷ சென்மத்திலே பிறந்துஞ் செய்கிறத்துக்கும்[1] அருமையாயிருக்கிற தானம் தர்மம் விரதந் தபசு இதுகளைச்[2] செய்கிறவர்கள் பெரியவர்கள்; இதுகளைச்[2] செய்யமாட்டாமலெளிதாயிருக்கிற சங்கார[3] காரியங்களைச் செய்கிறவர்கள் சிறியவர்களென்பதாம். சூ

27. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு

என்பது

சுவையை அறியப்பட்ட[4] "நாவும், ஒளியை அறியப் பட்ட[4] கண்ணும், மேலே தட்டுப்பட்டதை யறிகிற உடம்புஞ், சப்தத்தைக் கேழ்க்கிற[5] காதும், வாசனை அறியப்பட்ட[4] மூக்கும் என்றும் சொல்லப்பட்ட ஐம் புலன்களுடைய வகையை அறிகிறவனிடத்திலே யிருக்கும் உலகம்[6] என்றவாறு

ஐம்புலன்களின் வகை தெரிதலாவது, வாயினாலே தேன் கள்ளு, சாராயம் மாங்கிஷம்[7] இது முதலானதுகளைப் பொசி[8]யாமல், நல்லவஸ்த்துக்களைப் பொசிக்க வேணும்; கண்களினாலே பரஸ்திரீ[1] பரதனங்கள் முதலான பாபத்துக்குக் காரணமானதுகளைப்[2] பாராமல் புண்ணியத்துக்குக் காரணமான தெய்வப் பிராமணர்[3] முதலானவர்களைப் பார்க்க வேணும்; உடம்பாகிய கைகால்களினாலே பாவத்துக்குக் காரணமானதுகளைச்[4] செய்யாமல் புண்ணியத்துக்குக் காரணமான காரியங்களைச் செய்ய வேணும்; காதுகளினாலே பாபத்துக்குக்காரண

---

4. யிருக்கும் 5 சாட்சி 6. சாட்சியல்ல

1செய்கிறதற்கும் 2. இவற்றை 3. சம்சார 4. அறிந்த 5. கேட்கிற 6. உலகம் 7. மாங்கிஷம் - மாமிசம் 8. பொசி - புசி

1. பிறர் மனைவி 2. காரணமானவற்றை 3. தேவபூஜை முனீசுவரர் என்பது அச்சு நூல் 4. காரணமான காரியங்கள்

மான வார்த்தை கதை[5] முதலானதுகளைக் கேளாமல் புண்ணியத்துக்குக் காரணமான வார்த்தைகளையுந் தர்மகதை முதலானதுகளையுஞ் சுவாமி பேரில் தோத்திரங்களையுங் கேழ்க்க வேணும், மூக்கினாலே யோக்கியமா யிருக்கிற சுகந்தங்களை யறிய வேணும், துர்க்கந்தங்களை அறிய வொண்ணாது - இப்படி நடக்கிறவர்களுக்காக மழைபெய்து உலகம் நிலைபெறுமென்றவாறு. ௭

28. நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டி விடும்

என்பது

மெய்யான வசனத்தை யுடைய முனியீசுவரர்[1] பெருமை அவர்களாலே சொல்லப்பட்ட சாத்திரங்கள் காட்டும்; அதெப்படி என்றாலவர்கள் சொன்ன சாத்திரம் பிரத்தியட்சமான[2] திஷ்ட்டாந்திரமாய்ப்[3] பரிக்குமென்றவாறு

29. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது

என்பது

தபசு சத்தியம் ஆசையில்லாமை என்னப்பட்ட நல்ல குணமான மலையின் பேரிலே யேறிநின்ற முனிகளுக்குக் கோபம் வர நடந்தா லந்தக் கோபத்தை யொருவராலும் ஒரு க்ஷண மாத்திரப் பொழுதும் பொறுத்திருக்க மாட்டார்கள், அப்படி நடந்தவன் நாசமாய்ப் போவா[4]னென்றவாறு ௯

30. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்பது

எல்லா சீவன்களிடத்திலே தயையுண்டாய்க் கொல்லாமை முதலாகிய தர்மங்களை யுடையவர்களா யிருக்கிறவர்களாய் விரதங்களை யுடையவர்களே அந்தணரென்றுஞ் சொல்லப் படுவா ரென்றவாறு. ௰

ஆகக் கவிமுப்பது.

---

5. விகதை என்பது அச்சு நூல் விகதை-தீயகதை

1. முனிவர்கள் 2. பிரத்தியட்சம் - காணத்தக்கது 3. திஷ்ட்டாந்திரம்-பிரமாணம் 4. அழிவான்

## 4. அறன் வலியுறுத்தல்

என்பது, மகா முனீசுவரர்களாலே சொல்லப்பட்டதாய் இம்மையிலே கீர்த்தியும் மறுமையிலே மோட்சமுங் கொடுக்கப் பட்ட[1] தர்மத்தின் நன்மையைச் சொல்லுகிறது.

31. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தி னூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு

என்பது

இம்மையிலே கீர்த்தியையுஞ் செல்வத்தையுங் கொடுத்து மறுமையிலே மோட்சத்தையுங் கொடுக்கிறது தர்மமானபடியி னாலே அந்தத் தர்மத்தைப் பார்க்கிலு மதிகமான பொருளிந்த வுலகத்திலே யில்லை யென்றவாறு.

32. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூஉங்கில்லை கேடு

என்பது

ஒருவற்குத் தர்மத்தைச் செய்கிறத்தைப்[1] பார்க்கிலு மதிகமான செல்வமு மில்லை; தர்மத்தைச் செய்யாமலிருக்கிறத்தைப்[1] பார்க்கிலுங் கேடு வேறே யில்லை; தர்மஞ் செய்யாவிட்டால் கெட்டுப்போவார்க ளென்றவாறு. உ

33. ஒல்லும் வகையா லறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்

என்பது

தனக்கியன்ற மாத்திரம் மேலான[3] தர்மத்தை விடாதே[4] செய்யவேணு மென்பதாம்; தர்மத்தைச் செய்யாதவனுக்கு ஒரு பிரயோசனமுமில்லை யென்றவாறு. ௩

34. மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர்மை[5] பிற

என்பது

---

1 கொடுக்கும்

1. செய்கிறதை 2. இருக்கிறதை 3. எல்லாம் என்பது அச்சுநூல் 4. ''செல்லும்வாய்'' என்பதற்கு உரையில்லை 5. நீர என்பது பிறர் பாடம்

ஒருவன் தன்னுடைய மனதிலே குற்ற மில்லாம லிருந்தானாகி லவனுக்கு அதுவே தர்மமாவது; மற்றதெல்லாம் வேஷமாத்திர மென்றவாறு. ௪

35. அழுக்கா றவாவெ குளி யின்னாச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்

என்பது

பிறருடைய செல்வத்தைப் பார்த்துப் பொறுப்பற்றுப்படுகிற அழுக்காறும், மனம், பொறிவழியாகப் போகிற ஆசையாகிற அவாவும், ஒரு பொருள் நிமித்தமாகக் கோபிச்சுக்[1] கொண்டு கடினவசனத்தைப் பேசுகிற கோபமும், துர்வசனங்களைப் பேசுகிறதும் இந்த நாலு மில்லாமலிருக்கிறதே தர்ம மென்பதாம்; இதுகளுடனே[2] யிருக்கிறவன் செய்யுரது[3] தர்மமல்ல பென்ற வாறு. ரு

36. அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை

என்பது

நாமிப்போ[1] சிறியவ னினிமேல் அனித்திய[2] காலங்களிலே தர்மத்தைப் பண்ணுகிறோமென்று எண்ண வேண்டாம்; அதே னென்றால் ஆயிசு நிர்ணயமில்லை; ஓட்டைப்பானையிலே வார்த்த தண்ணீரைப் போலே போய்விடு மானபடியினாலே நாள்தோறுந் தர்மத்தையும் விரதத்தையும் பண்ண வேணும் தர்மத்தைப் பண்ணினால் சாகிற காலத்துக்குக் கெடையாத[3] துணையா மென்றவாறு. சு

37. அறத்தா றிதுவென வேண்டாஞ்[4] சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை

என்பது

தர்மத்தின் பலனெப்படி யென்று சாத்திரத்தினாலே சொல்ல வேண்டாம்; தண்டிகையைச் சுமக்கிறவன் தர்மத்தைப் பண்ணாதவன்; தண்டிகையிலேயேறிக் கொண்டு போகிறவன் தர்மத்தைப் பண்ணினவனென்றவாறு எ

1. கோபித்து 2. இவற்றுடன் 3. 'செய்கிறது'

1. நாமிப்பொழுது 2. அந்திய என்பது அச்சுநூல் 3. கெடாத;

4. 'வேண்டா' என்பதே பிறர் பாடம்.

38. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்

என்பது

ஒருவன் தான் வாழு நாளை விருதாவிலே[1] கழியாமல் நாள் தோறும் தர்மத்தைச் செய்வானாகி லந்த தர்ம மவனாயிசு போகத்தக்கதாக[2] யமன் வருகிற வழியை அடைக்கப்பட்ட[3] கல்லா மென்றவாறு. அ

39. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில

என்பது

தர்மத்துடனே கூடிவருகிறதே ஒருவனுக்கு இன்பம்; அதுவல்லா மல் பாபத்துடனே வருகிறதெல்லாஞ் சுகமில்லை; கீர்த்தியு மில்லை; மறுமைக்கு நரகத்தை யடைவிக்கு மென்றவாறு சூ

40. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி

என்பது

ஒருவனுக்குச் செய்யத்தக்க காரியமாவது தர்மமே; செய்யாமல் விடுகிற காரியமாவது பாபத்துடனே கூடின தென்பதாம். ய

ஆக அதிகாரம் ச; பாட்டு சய
அறன் வலியுறுத்தல் முற்றும்

இப்பால் 5. இல்வாழ்க்கை

என்பது, பெண்சாதியுடனே கூடி வீட்டிலேயிருந்து தர்மத் தைப் பண்ணிக் கொண்டு வாழ்கிற தென்பதாம்.

41. இல் வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை

என்பது

இல்லறமாகிய சமுசாரத்திலேயிருந்து வாழ்கிறவன், பிரம சாரியாய் ஆச்சாரியாரிடத்திலே படிக்கிறவர்களுக்கும்*, வானப்

---

1. வீணாக 2. மோக்ஷத்திற்கு ஏறுகிறதற்குத் தடையாகின்ற அச்சு நூல் 3. அடைக்கும்.

1. முதனியவற்றை *முதல்வர்: உத்திஷ்ட பிண்ட விரதம் பதினோராம்

பிரத்தனாய்ப் பெண்சாதி மாத்திரத்துடனே கூடவனத்திலேயிருக்கிறவர்களுக்கும், *சகலமான ஆசாபாசங்களை விட்டுத் துறந்து தபசு பண்ணுகிறவர்களுக்கும் ஆகாரமும் அவுஷதமும் இருப்பிடமும் வஸ்த்திரமும் முதலானதுகளைக்[1] கொடுத்து அவர்கள் விரதங்களைக் குறைபட ஒட்டாமல் நடப்பிக்க வேணும்; அப்படி நடப்பிச்சால் அந்த மூன்று பேருக்கும் துணை என்றவாறு க

42. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் துணை

என்பது

தபசு பண்ணுகிறவர்களுக்கும் முந்தின செனமத்திலே தான தர்மங்களைப் பண்ணாமல் தரித்திரராய்ப் பிறந்த பேர்களுக்கும், ஒருவருமில்லாமல் வந்துஇறக்கிற பேர்களுக்குஞ் சமுசாரியாயிருக்கிறவன் ஆகார முதலானதுகளைக் கொடுத்து ரட்சிக்க வேணும். இப்படிக் கொடுத்து நடத்தினால் வனந்த மூன்று திறவருக்குத் துணையா மென்றவாறு உ

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை

என்பது

பிதிர்கள்[1] தேவதைகள்[2] விருந்தாய் வந்தவர்கள், தாயாதிகள், தான் இந்த அஞ்சு[3] பேர்களுக்கும் உபகாரங்களைப் பண்ணி ரட்சிக்கிறது முந்தின தர்ம மென்றவாறு. இவர்களுக்கு உபகாரம் பண்ணுகிறதாவது, பிதுர்க்களுக்குத் தர்ப்பணம்; தேவதைகளுக்குப் பூசை திருநாள்; விருந்தாகிறது. பரதேசத்திலுமிருந்து அறியாமல் வந்து கேட்ட பேர்களுக்கும் அன்னம் வஸ்த்திரம் கொடுக்கிறது; தன்னை அறிஞ்சு[4] வந்தவர்களுக்கு வஸ்த்து வஸ்த்திரம்[5] அன்னம் முதலானதுகளைக்[6] கொடுக்கிறது; இந்தத்

---

நிலையில் சௌனபீன மாத்திரத்துடனே ஜீனேஸ் துதியிலேயிருக்கிற க்ஷு ல்லகர்களுக்கும் என்பது அச்சு நூல்

1. உயிர் துறக்கும் தறுவயில் உள்ள முதியவர்கள்-அச்சுநூல் (குறிப்புரை காண்க) 2. தேவர்கள் 3. அச்சுநூல் ஐந்து 4. அறிந்து 5. பொருளும் ஆடையும் 6. முதலியவற்றை

தர்மங்களைப் பண்ணுகிறத்துக்காகத்[7] தன்னைப் போஷித்துக் கொள்ளுகிறது; இந்த அஞ்சு வகைகளையும் செய்கிறவன் உத்தமான[8] சமுசாரியாமென்றவாறு. ௩

44. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயி னில்வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்

என்பது

திரவியம் தேடுகிற காலத்திலே பாபத்துக்குப் பயப்பட்டு நல்ல வழியே தேடின பொருளை முன்சொன்ன அஞ்சு[1] பேருக்குங் கொடுத்தானாகிலவன் வங்கிஷம்[2] பூமியிலே எந்நாளும் நிலை பெற்று நிற்கும்; பாவத்தினாலே வந்த பிறன் பொருளைத் தான தர்மம் பண்ணித் தானுமுண்டானாகி லந்தத்தர்மம் திரவிய முடையவனுக்கும் பாபமவனுக்குமா மென்றவாறு ௪

45. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது

என்பது

சமுசாரம் பண்ணுகிறவன் தன்பெண்சாதி பேரிலே தயையும் பிறர்க்குக்[3] கொடுத்த லாகிய தர்மமு முண்டா யிருந்தால் அந்த சமுசாரத்துக்கு அதுவே பலனா மென்பதாம். பெண்சாதி பேரிலே பரி பூரணமான பட்ச [5]மில்லா விட்டால் தர்மம் நடவாது; ஆன படியினலே மனையாளும் கணவனு மொத்திருந்தால் சகல தர்மமும் நடக்கு மென்றவாறு. ௫

46. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத் தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்

என்பது

சமுசாரியா யிருக்கிறவன் இல்லறத்தின் வழியே சொன்ன தர்மத்தைப் பண்ணாமல் விட்டு மற்ற அதர்மமான வழியே நடந்து என்ன பலனைப் பெறுவா னென்றவாறு ௬

---

7. பண்ணுகிறதற்காக 8. சிறந்த

என்பது

1. ஐந்து 2. வமிசம் 3. யதிகள் என்பது அச்சுநூல் 4 அன்புடைமை பண்பு அறனுடைமை பயன் என்க 5. முழுமையான அன்பு

47. இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

என்பது

இல்லறமாகிய சமுசாரத்திலே யியல்போடு கூடிச் சொன்ன தர்மத்தின்வழியே நடக்கிறவன் புலன்களையும் மாசையையு மடக்கித் தபசு பண்ணுகிறவர்களுக்கு எல்லாந் தலைவனா[1] மென்றவாறு ஏ

48 ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து

என்பது

தபசு பண்ணுகிறவர்களுக்கு ஆகாரத்தைக்[1] கொடுத்தும் பசி முதலானவற்றை நீக்கி அவர்களைத் தபசின் வழியே நடக்கப் பண்ணித் தானு மில்லறத்தினுடைய வழி தப்பாமல் நடக்கிற சமுசாரி[2] அந்தச்[3] சன்னாசிகளைப்[4] பார்க்கிலு மதிகமான விரத[5] முடையவ னென்பதாம் அ

49. அறனென்னப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று

என்பது

இல்லறத் துறவறம் என்னப்பட்ட இரண்டிலேயும் இல்லறமே தர்மமாவது; மற்றத் துறவறமும் பிறராற் பழிக்கப்பட்ட குற்றங் களில்லாமலிருந்தால் நல்லதென்பதாம் கூ

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்பது

இல்லறத் தியல்புடன் கூடி வாழ்கிற சமுசாரி மனுஷனே யானாலும் அவன் ஆகாசத்திலே யிருக்கப்பட்ட தேவர்களுடனே சரியா மென்னப்படு மென்பதாம்.

---

1. முதல்வனாம் என்பது அச்சு நூல்

1. உணவு 2. இல்லறத்தான். 3. அந்தி என்பது அச்சு நூல்
4. தவஞ்செய்வார் 5. விரதம்

துறவற மனத்தையும் பொறிகளையு மடக்க வேணும்; சமுசாரி மனத்தையும் பொறிகளையும் வாதை பண்ணாமல் நடக்கிறபடியினாலே தெய்வத் தோடொக்கு மெனலா மென்றவாறு ய

ஆக அதிகாரம் ரு ; பாட்டுருய.
இல்வாழ்க்கை முற்றும்.

இப்பால் 6. வாழ்க்கைத் துணைநலம் என்பது.

இந்த இல்வாழ்க்கை யாகிற சமுசாரத்துக்குத் துணையாயிருக்கிற மனையாளுடைய தன்மையைச் சொல்லுகிறது.

51. மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

என்பது

இல்லறத்துக்குத் தக்க நல்ல குணங்களை நல்ல செய்கைகளை யுடையவளாய்த் தன்னுடைய புருஷன்[1] தேடி வருகிறத்துக்குத்[2] தக்க செலவு பண்ணிக்கொண்டிருக்கிறவள் அந்தப் புருஷனுக்குத் துணையாமென்றவாறு.

நற்குணமாகிறது, துறந்த பேர்களுக்கு ஆகாரங் கொடுக்கிறதும், விருந்து வந்தவர்களுக்குச் சந்தோஷத்துடனே உபகாரம் பண்ணுகிறதுந் தரித்திரர் பேரிலே தயையுண்டாயிருக்கிறதுமாம். நல்ல செய்கையாவது, சமுசாரத்துக்கு வேணுமென்றது முன்னே தானே தேடிக்கொள்ளுகிறதும், நன்றாய்ச் சமைக்கிறதும், அசலகத்தா[2] ரெண்ணிக் கொள்ளத்தக்கதாகிறதுமாம். தேடி வருகிறத்துக்குத்[3] தக்க செலவாகிறது, முதலழியாமல் வைச்சுக்[4] கொண்டு மற்றது செலவழிக்க வேணுமென்றவாறு. சு

52. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்[1]கை
யெனை மாட்சித் தாயினு மில்

என்பது

சமுசாரத்துக்குத் தக்க நற்குண நற்செய்கைகள்

---

1. கணவன் 2. அயலார் 3. வருகிறதற்கு; தேடினவரவுக்கு என்பது அச்சுநூல் 4. வைத்து

ஒரு பெண்சாதி யிடத்திலே யில்லாவிட்டா லந்த வீட்டிலே எத்தனை அபிசுவரியங்களுண்டா யிருந்தாலும் ஒருவருக்குப் பிரயோசன மாகாத படியினாலே ஒன்றுமில்லாத வீட்டுடனே சரியா மென்றவாறு. உ

53. இல்லதெ னில்லவள் மாண்பானா லுள்ளதெ
னில்லவள் மாணாக் கடை

என்பது

ஒருவனுடைய இல்லாள் நற்குண நற்செய்கைகளை யுடையவளானா லந்த மனையிலே யில்லாதது ஒன்று மில்லை; சகல வஸ்துக்களு[1] முண்டாயிருக்கிறாப் போலேயாம். அந்த இல்லாளிடத்திலே நற்குணம் நற்செய்கைகளில்லாவிட்டால் லந்த மனையிலே சகல பாக்கியமும்[1] மிருந்தாலும் ஒன்று மில்லையென்பதாம்; ஆகையினாலே சமுசாரத்துக்குத் துணையாகிறது இல்லாளுடைய குணமே வேணுமென்றவாறு. ௩

54. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்

என்பது

ஒருவன் தேட வேண்டின பொருள்களிலே பெண்சாதியைத் தேடிக் கொள்ளவேணும். அதிலும்[1] பெரிய பொருளொன்றுமில்லை. அந்தப் பெண்சாதியும் நற்குண நற்செய்கைகளுடனே கூடப் பதிவிருதை யென்னப்பட்ட விருத[2] முள்ளவளானாலவளே பெரிய திரவிய மென்றவாறு ச

55. தெய்வந் தொழாஅள்*கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்பது

பிறிதொரு தெய்வத்தைத் தொழாள், தன்தெய்வமாகிய தன்புருஷனையே தோத்திரம் பண்ணிக் கொண்டு நித்திரை

1. எல்லாப் பொருள்களும்

* ''தொழாள்'' என்பது காகிதச் சுவடி.

1. ''அவளைவிட'' என்பது அச்சுநூல் 2. திடவிரத என்பது அச்சுநூல் 3. தொழுகிறதற்கு

விட்டெழுந்திருப்பாள், அப்படிப்பட்ட பதி விருதையானவள் மழைபெய்யச் சொன்னவுடனே பெய்யுமென்பதாம்.

தொழுதெழுவா ளென்றது தெய்வங்களைத் தொழுகிறத் துக்கு[3] மனது தெளிவா யிருக்கிறது. நித்திரையை விட்டெழுந் திருக்கிற பொழுதான படியினாலே, ராத்திரி நித்திரை பண்ணிக்[1] காலமே[2] யெழுந்திருக்கிறது[3] முதலான[4] தெய்வங் களைத் தொழவேணு மென்பதாம் ரு

56. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

என்பது

பதிவிருதா பாவத்தை[1] வழுவாமற் காத்துத் தன்னைக் கொண்ட புருஷனைப் போசன முதலான காரியங்களாலே நன்றாய்ப் போஷித்து இரண்டுபேரிடத்திலேயும் நல்ல கீர்த்தி வரத்தக்கதாக நடந்து நற்குண நற்செய்கைகளை விடாமல் நடந்து கொள்ளுகிறவளே பெண்சாதி யென்றவாறு. சு

57. சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை

என்பது

ஸ்ரீகளைப் புருஷன் வீடுவாசல் காவல் காரர் கோட்டை கொம்மை[3] முதலானதுகளாலே [4] காக்கின்ற காவல் என்ன

பலனுண்டாம் அந்த ஸ்ரீகள் தங்கள் மனசைக் காக்கிறதே உத்தமமான காவலென்பதாம். மனசு வேறே நினைச்சால்[1] மற்றக் காவல்களாலே ஒருபயனுமில்லை யென்பதாம். எ

58. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு

என்பது

---

1. இரவில்தூங்கி 2. காலையில் 3. எழுந்திருக்கிறபோது 4. முதலாகத்

1. தர்மத்தை 2. என்பது 3. அச்சுநூல் 4. கொத்தளம் 5, முதலானவை

ஸ்ரீகள் தங்களைக் கொண்ட புருஷன் சொன்னபடியே நடந்து, நற்குணங்களை யுடையவர்களாயிருந்தால் மறு சென் மத்திலே[1] தேவலோகங்களிலே பிறந்து தேவர்களாலே பண்ணப் பட்ட பெரிய சிறப்பைப் பெறுவ ரென்றவாறு. அ

59. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை

என்பது

நல்ல பதிவிருதத்தையுங் கீர்த்தியையுமுடைய[2] பெண் சாதியையில்லாதவனுக்குத் தன்னை யிகழ்ந்து பேசுகிறவர் கள் முன்னே ஆண்சிங்கத்தைப் போலே பயப்படாமல் நடக்கத் தக்கதில்லை யென்பதாம். கூ

60. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு

என்பது

ஒருவருக்கு நல்லதென்று சொல்லுகிறது நல்ல குணங்களை யுடைய பெண் சாதியை; அதினிலும் நல்ல பிள்ளைகளைப் பெறுகிறது நல்ல பூஷணமாம்[1]; அந்தத் தாய் தகப்பனுக் கென்ற வாறு ௱

ஆக அதிகாரம் ௬ ; பாட்டு ௬௰

இப்பால் 7. புதல்வரைப் பெறுதல்

என்பது, பிராமணர், ராஜாக்கள் வயிசியர் இந்த மூன்று பேராலும் விறுக்க[1]த்தக்க கடன் மூன்று, அது முனிவர் தேவர் பிதாக்கள் கடனாம் இதிலே முனிவர் கடனாவது, தபசுக்கு இடையூறு வராமலாதார மவுஷதஞ் சாத்திர மிதுகளாலே பரிகரித்தல். தேவர்கடன் பூசை திருநாளாலும், பிதாக்கள் கடன் தர்ப்பணம்[1] முதலானதுகளி னாலேயு[2] மிறுக்கப்படு

---

1. பிறவியில் 2. ''இல்லாத'' 3. என்பது 4. காகிநச்சுவடி 5 பெண்கள் 6. மனத்தை 7. நினைத்தால்

1. அணிகலமாம் 1. விறுக்க – இறுக்க என்று படிக்க. (இறுக்க செலுத்த)

மாதலா விந்தக் கடனிறுக்கிற நிமித்தியம் நல்ல புத்திரர் களைப்[3] பெறுதலென்பதாம்.

61. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற

என்பது

ஒருவன் பெற வேண்டிய பேறுகளிலே அறிவுடனே கூடியிருக் கிற நல்ல பிள்ளை பெறுகிற தல்லாம விதிலுமதிகமான பேறு கள் யாமறிந்த தில்லை யென்பதாம். அறிவுண்டாயிருக்கிற பிள்ளைகளைப் பெற்றா லந்தப் பிள்ளைகளாலே யிம்மையிலே கீர்த்தியு மறுமையிலே உறுதியான தர்ம போதனையு முண்டா மென்றவாறு. க

62. எழு பிறப்புந் தீயவை தீண்டாப்[1] பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

என்பது

வினை வசத்தினாலே பிறக்கப்பட்ட பிறப் பேழினிடத்திலேயுந் தீவினைகள் வந்து சேராமலிருக்கப்பட்ட காரியங்களைச்செய்து பழிகளைச் செய்யாமல் நன்மை யுண்டாயிருக்கிற காரியங்களைச் செய்யப் பட்ட நல்ல புத்திரரைப் பெற வேணுமென்பதாம்.

எழுபிறப்பாகிறது. ஓரறிவுயிரிரண்டு, ஈரறிவு உயிரொன்று; மூன்றறிவுயிரொன்று, நாலறிவு யிரொன்று; ஐந்தறிவு யிரிரண்டு ஆக எ. தந்தை தாயார் தீவினை தேய்தலாவது அவரை நோக் கிப் புதல்வர் சேரப்பட்ட[1] நல்லதர்மங்கள்[2] என்றவாறு. உ

63. தம்பொரு ளென்பர்[3]தம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்

என்பது

தன்[4] புதல்வரைத் தம்முடைய பொருளென்பர்; அதெப்படி யென்றா லந்தப்பிள்ளைகளு மந்தப்பிதா[5] பண்ணின புண்ணி

1. தருமகுணம் என்பது அச்சு நூல் 2 முதலியவைகளாலேயு 3. பிள்ளை களை என்பது அச்சு நூல் 4. 'தீண்டா' என்பது பிறர் கொண்ட பாடம்

1. செய்த 2. தர்மங்களால் என்பது அச்சு நூல் 3. 'என்ப' என்பது பிறர் எல்லாம் கொண்டபாடம் அச்சுநூலும் அங்ஙனமே 4. தம் 5, செய்கிற தந்தை

யத்தினாலே வரும்; அந்தப் பிள்ளைகள் செய்யுற[6] நன்மையினாலே இம்மையிலே கீர்த்தியும் மறுமைக் குறுதியாகிய தர்ம போதனையா மென்றவாறு. ௬

64. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்

என்பது

அதிக ருசியை யுடைத்தாயிருக்கிற அமிர்தத்தைப் பார்க்கிலும் மெத்த நன்றாயிருக்கும் தன்[1] பிள்ளைகள் சிறுகையினாலே யளையப்பட்ட கூழென்றவாறு. ரு

65. மக்கள்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு

என்பது

ஒருவன் தன்னுடம்புக்குச் சுகமாவது தன்புத்திரருடைய சரீரத்தைத் தீண்டுகிறதே சுகம்; காதுக்கின்பமாகிறது தன் பிள்ளை சொல்லுகிற வார்த்தையைக் கேட்கிறதே யின்ப மென்றவாறு. ரு

66. குழலினிது யாழினி தென்பர்[2] தம் மக்கள்
மழலைசொற் கேளா தவர்

என்பது

தன் பிள்ளையுடைய மழலை வசநத்தைக் கேளாதவன் குழலோசை நன்றாயிருக்குது[1], அதிலும்[2] நன்றாயிருக்கு மென்பான்; அந்த மழலைச் சொல்லைக் கேட்டவர்கள் குழலிசை யாழிசை முதலான தெல்லா மதுக்குச்[3] சரியல்ல என்பதாம். சா

67. தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்

என்பது

---

1. 'தம்' என்று இருத்தல்தகும் 2. 'தெனப' என்பது பிறர் பாடம்

1. யிருக்கிறது 2. 'அதிலும்' என்பதையடுத்து "யாழோசை" என்பதைச் சேர்க்க. 3. அதற்கு 4. 'சரியல்ல' என்பதையடுத்து "என்பர்" என்பதைச் சேர்க்க.

தகப்பன் பிள்ளைக்குச் செய்கின்ற நன்மையாவது அந்தப் பிள்ளை வித்துவான்கள் கல்வியையுடையவர்களிருக்கிற சபையிலே வந்தா லவனை யந்தச் சபையிலே யிருக்கிறவர்கள் வாரு மிருமென்று சொல்லப் பண்ணி வைக்கிற[5] கல்வியை அதிகமாக உண்டாகப் பண்ணுவிக்கிற தென்பதாம்.

திரவிய முதலானதுகளை[6] யதிகமாக உண்டாகப் பண்ணினால் துக்கம் வருமென்றவாறு. எ

68. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது

என்பது

தகப்பனைப் பார்க்கிலும் பிள்ளை நல்லறிவுடனே கூடியிருந்தால் பூமியிலே யிருக்கப்பட்ட[1] சனங்களுக்கெல்லாம் நன்மையாமென்றவாறு.

நன்மையாகிறது ஒருவருக்குத் தீங்கு செய்யாமலிருக்கிறது என்றவாறு. அ

69. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்

என்பது

தாயானவள் பிள்ளையைப் பெற்றபொழுதிருந்த சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிகமான சந்தோஷத்தை யடைவா ளந்தப் பிள்ளையை நல்லவனென்று பெரியோர்கள் சொல்லக் கேட்டபொழுதென்பதாம். சு

70. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்

என்பது

---

5. பண்ணுகிறதான என்பது அச்சுநூல் 6. முதலியவற்றை

பிள்ளையைக் கல்வியுடையவனாகச் செய்த தகப்பனுக்குப் பிள்ளை செய்யுற[1] நன்றியாவது, தான் நல்ல ஆசாரத்துடனே யும் நல்ல வணக்கத்துடனேயும் நல்ல விரதத்துடனேயும் நடந்தா லதைக்கண்ட பேர் இப்படிப்பட்ட பிள்ளையைப்பெற்ற தகப்ப னென்ன தபசு பண்ணினானோ வென்று சொல்லிக் கொள்ளுவார்க ளென்ற வாறு. ய

ஆக அதிகாரம் எ கவி எய
புதல்வரைப் பெறுதல் முற்றும்

இப்பால்

8. அன்புடைமை

என்பது வாழ்க்கைத் துணையாகிய பெண்சாதி பேரிலே தன்மை இல்லாவிட்டால் இல்லற தர்மம் நன்றாய் நடவாது

71. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்

என்பது

ஒருவர் மேல் ஒருவர் தயையாயிருக்குறத்தைப் பிற ரறியாமல் மூடிவைக்கிறத்துக்கு ஒரு கதவுமில்லை;

அந்த அன்பை மறைத்துக்கொண்டிருக்கிறோம்.

என்றாலுமிராது; அதெப்படி யிராதென்றால் தான் தயை பண்ணப்பட்ட பேர் துக்கப் படுகிறத்தைக்[1] கண்ட வுடனே தன் கண்ணிலே கண்ணீர் பெருகும்; அந்தக் கண்ணீரே யறியப் பண்ணுவிக்கு மென்றவாறு. க

72. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு

என்பது

---

1. இருக்கும்

1. செய்கிற 2. பிற்சேர்க்கையில் குறிப்புரை காண்க 3. இருக்கிறதை
4. வைக்கிறதற்கு

தயை யில்லாதவர்கள் தாங்கள் தேடின வஸ்து வெல்லாந் தங்களுக் குரியதா[2] யிருப்பார்கள்; அன்புடையார் தங்கள் பொருளுஞ் சரீரமும் பிறர்க் குரியதா[3] யிருப்பர்.

சரீரம் பிறர்க் குரித்தாய்[4] சிறிது பொருளையுங் கொடுத்துத் தங்கள் கையிலே எண்ணிக்கொண்டு எடுக்கிறதும் பிடிக்கிறதுஞ் செய்வார்க ளென்றவாறு.

உ

73. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு

என்பது

பெறுதற்கரிய மனுஷ சரீரத்தைப் பற்றி வருகிற தொடர்ச்சியை அன்பினாலே வந்ததென்று சொல்லுவரறிந்தோ ரென்றவாறு.*

ங

74. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு

என்பது

ஒருவனுக்குத் தயை யுண்டா யிருந்தாலது சந்தோஷத்தை யுண்டாக்கும்; அந்தச் சந்தோஷமே அவனுக்குப் பகைவரும் பிறத்தியாரு[1] மில்லாமல் சகலமான பேரையுஞ் சினேகம் பண்ணுவிக்கு மென்றவாறு.

ச

75. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு

என்பது

அன்புடைய வர்களே யில்லறத் தோடு பொருந்திய நெறியினை யுடையவர்கள்; உலகத்திலே சுகத்தை அனுப விக்கிற பேர் முந்தின சென்மத்திலே தயையுடையவர்களா யிருந்தவர்க ளென்பதாம். தயை யுடையவர்களுக்குப் பாபம் வராது.

1. படுகிறதைக் 2. குரியவரா 3. குரியரா 4. குரியராயிருக்கிறது என்பன அச்சுநூல்

பிறசேர்க்கை குறிப்புகாண்க 1. புறத்தாரு

புண்ணியமே வரும்; அந்தப் புண்ணியத்தினாலே நல்ல நெறியை[1] யடைவார்க ளென்றவாறு. ௫

76. அறத்திற்கே யன்புசார் பென்ப ரறியார்[2]
மறத்திற்கு மஃதே துணை

என்பது

தர்மத்திற்கே அன்பு துணை யென்று சிலர் சொல்லுவர்; அவர் களறியாதவர்கள்; பாபத்துக்கு மந்த அன்பே துணையா மென்ற வாறு. பாபத்துக்கு அன்பு துணையாகிற தெப்படி யென்றால். ஒருவன் செய்த பகையை மனதிலே வைத்தால் பாபம்[3]; அவன் மேலே சிநேகம் பண்ணித் தயை வைத்தாலந்தப் பகையும் பாபமும்போ மென்றவாறு ௬

77. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்

என்பது

எலும்பில்லாத வுடம்பை வெய்யில் காய்ந்து கொன்றாற் போல[1] அன்பில்லாத சீவனைத் தர்ம தேவதை காய்ந்து கெடுக்கு மென்றவாறு. அன்பில்லாதவனை[2] அறக்கடவுள் காய்கிறது, தர்மந்தானஞ் சேராமல் பாவத்தையும் பழியையும் சேரப்பண்ணி நரகங்களிலே விழப்பண்ணு மென்றவாறு ௭

78. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பார்க்கண்[3]
வற்றன் மரந்தளிர்த் தற்று

என்பது

மனதிலே அன்பில்லாத மனுஷன் இல்லறத்திலேயிருந்து வாழ் கிறது, கடினமாயிருக்கிற நிலத்திலே வற்றியிருக்கிற மரம் தளிர்த் தாற் போலு மென்றவாறு ௮

---

1. நல்ல கதியை என்பது அச்சுநூல் 2. என்ப அறியார் என்பது பிறர் பாடம் 3. பாபம் வரும் என்பது அச்சுநூல்

1. கொல்வது போல 2. அன்பில்லதனை 3. வன்பாற்கண் என்பது அச்சுநூல்

79. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு

மனசிலே தயையுடனே கூடியிருந்து இல்லறத்தினைச் செய்யாதவர்களுக்குப் புறத்துறுப்பாகிய இடமும் பொருளும் ஏவல் செய்வாரும் என்ன பலனைக் கொடுக்கு மென்பதாம். தயையில்லாதவர்களுக்குச் செல்வத்தினாலே ஒரு பலனுமில்லை யென்றவாறு.

சுள

80, அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு

என்பது

அன்புடனே கூடியிருக்கிறவனே யுயிருடனே யிருக்கிறவன்; அன்பில்லாதவன் எலும்புகளைக் கூட்டித் தோலினாலே போர்த்துவைத்த வுடம்புக்குச் சரி யென்பதா மென்றவாறு.

ய

ஆக அதிகாரம் அ; குறள் அய

இப்பால் 9. விருந்தோம்பல்

என்பது, விருந்தாக வந்தவர்களைச் சந்தோஷத்துடனே யழைத்து நன்றாய் அன்ன வஸ்திரங்களினாலே போஷிக்கிறது.

81. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்பது

பெண்சாதி யுடனே கூடிச் சமுசாரத்திலே யிருந்து பொருள்களைத் தர்மத்தின் வழியே தேடிக்கொண்டு வாழ்கிற தெல்லாம் விருந்தினர்களைப் போற்றி அவர்களுக் குபகாரஞ் செய்கிற நிமித்திய மென்பதாம். பொருள்களைப் போற்றி வாழ வேணும்; பொருளைப் போற்றுகிறது முதலழியாமற் செலவிட வேணு மென்றவாறு.[1]

க

1. குறிப்புரை காண்க

82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

என்பது

சாகாம லிருக்கிற மருந்தாகிய அமிர்தத்தை யுண்ணப் போகச் சில விருந்து வந்தால் அவர்களைப் புறம்பாக விட்டுத் தானே யுண்ண வேண்டாம், அவர்களையும் கூடவே வைத்துக் கொண்டு சாப்பிட வேணு மென்றவாறு. உ

83. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று

என்பது

நாள்தோறும் வருகிற விருந்தினர்க்கு[1] உபகாரங்களைச் செய்கிறவனுக்கு அயிசுவரியம் போய்த் தரித்திரம் வருகிற தில்லை; விருந்தினர்க்கு உபகாரஞ் செய்யவே அயிசுவரியம் நாள்தோறும் வளருமென்றவாறு ௩

84 அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்

என்பது

சந்தோஷத்துடனே விருந்தினர்க்கு உபகாரஞ் செய்கிறவன் வீட்டிலே மகாலட்சுமியுஞ் சந்தோஷத்துடனே யவன் மனையை விட்டுப் போகாமலிருப்பாள். சந்தோஷமா யிருக்கிறத்துக்குக் காரணந்தான் செல்வம் நல்ல வழியே செலவழிக்கிறதினா லென்பதாம்; செல்வ மதிகமாகிறத்துக்குக் காரணம் ஞானமா சார மதிகமாகிற தென்பதாம்[2] ச

85. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்

விருந்தினர்க்கு முந்திச் சாப்பாடிட்டுத் தான் பிறகு சாப்பிடு கிறவன் பயிரிடுகிற புலத்துக்கு விதைவிதைக்க வேண்டாம்;

1. பிற்சேர்க்கை குறிப்புரை காண்க 2. ஷ ஷ

1. முனீந்திரர்க்கு என்பது அச்சுநூல் 2. பிற்சேர்க்கை குறிப்புரைகாண்க

என்பது

விருந்தினர்க் குபகாரஞ் செய்யுறவனுக்குத் தானே அயிசுவரியம் வளருமென்றவாறு. ரு

86. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு

என்பது

வந்த விருந்தினர்க்கு[2] அசன[3]மிட்டு இனிமேல் விருந்து வரப்போகு தென்று பார்த்திருந்து[4] அதன் பிறகு தான் சாப்பிடுகிறவன் மறுபிறப்பிலே தேவலோகத்திலே பிறந்து தேவர்களுக்கு நல்ல விருந்து போல் இருப்பா னென்றவாறு சா

87. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்

என்பது

விருந்தைப் பொசிக்கிற தாகிய[1] யாகத்தின் பல னிம்மாத்திர மென்று பிரமாணஞ் சொல்லப்போகாது[2] வஸ்து கொஞ்சமானாலும் நல்லவர்களுக்குக் கொடுத்தால் தேவபோகங்களை யடைவிக்கு மென்றவாறு. எ

88. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்

என்பது

நிச்சயமில்லாத் திரவியங்களைத் தேடிப் புதைத்து வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அந்தப் பொருளை யிழந்து போய் விசாரப்படுகிறவர்கள்[3] விருந்தினர்க்கு பகாரஞ் செய்யாதவர்க ளிழந்து போன பிறகு உபகாரஞ் செய்யாமற் போனோமென்று நினைப்பார்க ளென்றவாறு. அ

---

1. பிற்சேர்க்கை குறிப்புரை காண்க 2. ருஷீந்திரருக்கு என்பது அச்சு நூல் 3. அசனம்-உணவு 4. ரக்ஷித்து இனிமேல் வரப்போகிற அதிதிகளை எதிர் பார்த்திருந்து என்பது அச்சுநூல்

89. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு

என்பது

திரவிய முண்டாயிருக்கிற காலத்திலேயு மில்லை யென்று சொல்லப்பட்டவர்கள்[1] விருந்தினர்க்குபகாரஞ் செய்யாதவர்க ளென்பதாம். உண்டாயிருக்கச்சிலேயும்[2] தர்மங்களைப் பண்ணாதவர்கள் அறிவில்லாதவர்க ளென்றவாறு. கூ

90. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

என்பது

அனிச்சப்பூ முகந்தால்[3] வாடிப்போம்; விருந்தினரும் முகங்கோணைப் பார்த்தால் வாடி மனது நோவார்க ளென்பதாம்.

அனிச்சப்பூ முகந்தா லல்லாமல் வாடாது, விருந்தினர் கடின சித்தமாய்ப் பார்த்தவுடனே வாடுவார்களான படியினாலே அனிச்சம்பூவினும் விருந்தினர் மெத்தென்றவ ரென்றவாறு ώ

ஆக அதிகாரம் கூ; குறள் கூய

இப்பால் 10. இனியவை கூறல்

என்பது. மனதிலே யிருக்கிற சந்தோஷத்தை அறிவிக்கிற தாகிய நல்ல வார்த்தைகளைச் சொல்லுகிறது.

91. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்

என்பது

இன்சொல்லாவது தயையொடு கூடி வஞ்சனை யில்லாம லிருக்கிற தர்மத்தினை யறிந்தவர்கள் வாயிற் சொற்களென்பதாம்.

---

1. விருந்தினரைப் போஷிக்கிறதாகிய; 2. அது தேவ லோகங்களை என்பது அச்சு நூல் 3. விசாரப்படுவார்கள் “ என்பது அச்சு நூல்.

1. சொல்லப்படுவார்கள் என்பது அச்சு நூல் 2. யிருக்கலகயிலேயும் மோந்தால்

தயையுடனே கூடி நல்ல வார்த்தைகளைச் சொல்லுகிறவர் களிடத்திலே கொலையும் பொய்யுங் களவு மில்லை யென்ற வாறு. க

92. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
இன்சொல னாகப் பெறின்

என்பது

மனசு சந்தோஷத்துடனே ஒருவற் கொருபொருளைக் கொடுக்கிறத்திலும்[1] நல்லது, இரக்கிறவனைக் கண்ட பொழுதே முகமலர்ந்து நல்ல வசனங்களைச் சொன்னாலென்றவாறு.

நல்ல வசனங்க ளில்லாமற் கடின வசனங்களைச் சொல்லிக் கொடுக்கிறதினாலே[1] பலனில்லை; நல்ல வசனஞ் சொல்லிப் பிரியத்துடனே கொடுத்தால் பலனா மென்றவாறு. உ

93. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மினிசொ லினதே[2] யறம்

என்பது

கண்ட பொழுதே முகமலர்ந்து சந்தோஷமாகப் பார்த்து மனதிலே தயவுடனே கூடி நல்ல வசனங்களைச் சொல்லுகிறதே தர்மமென்றவாறு.

நல்ல வசனத்தினாலே புண்ணிய முண்டா மென்பதாம். ௩

94. துன்புறாவுந்[1] துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறாவு[2] மின்சொ லவர்க்கு

என்பது

நல்ல வசனங்களைச் சொல்லுகிறவர்களுக்கு எல்லாரிடத் திலேயும் உறவும் நன்மையுமுண்டாம்; எல்லாரும் நன்மை

1. கொடுக்கிறதிலும்

1. கொடுக்கிறதினாலே 2. லினஃதே என்பது அச்சு நூல்

1. துன்புறாஉந் 2. மின்புறாஉ என்பனவே சரியான பாடம் 3. அவர்கள்

செய்தால் அவனுக்குத்[3] தரித்திரமில்லாமலுந் துக்கமில்லாமலுஞ் சுகமே யிருப்பார்க ளென்றவாறு. ௪

95. பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற

என்பது

ஒருவனுக்கு ஆபரணமாகிறது, தன்னை வணங்குகிறவர்களுக்குத் தானும் வணங்கி எல்லாரிடத்திலும் நல்ல வசனங்களைச் சொல்லுகிறதே; இதல்லாத மற்ற ஆபரணங்களெல்லாம் ஆபரணமல்ல வென்றவாறு. ௫

96. அல்லவை தேய வறம் பெருகும் நல்லவை
நாடி யினிய சொலின்

என்பது

ஒருவனுக்கு நன்மை வரத்தக்க நல்ல சொற்களை யாராய்ந்து பார்த்துச் சொல்லு மாயின் அவனுக்குப் பாவங்கள் கெட்டுப் போய்த் தருமமு வளரு மென்றவாறு.

97. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்

என்பது

இம்மைக்கு நீதியை' யுண்டாக்கி மறுமைக்குத்தர் மத்தையு முண்டாக்கும், ஒருவற்குப் பொருளா லுதவி செய்து நல்ல வசனத்தையுஞ் சொன்னா லென்றவாறு.

பொருள் வறுமையால் பிறருக்கு உபத்திரவம் பண்ணாம லிருக்கிறதே நல்ல தர்மமென்றவாறு. ௭

98. சிறுமையு ணீங்கிய வின்சொல் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்

என்பது

திரவிய வலுமையால் பிறருக்கு வாதை பண்ணாத நல்ல

வார்த்தை சொல்லுகிறவனுக்கு இம்மையிலே கீர்த்தியையு மறுமையிலே வெகுவான சுகத்தையுங் கொடுக்கு மென்ற வாறு.

அ

99. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது

என்பது

பிறர்சொல்லுகிற நல்ல வார்த்தை தனக்கு நன்மையைக் கொடுக்க அனுபவித்தறிந்தவன் அந்த நல்ல வார்த்தையைத் தானுஞ் சொல்லாமற் பிறரிடத்திலே பொல்லாத வார்த்தை யைச் சொல்லுகிறது என்ன பலன் பெற வேண்டியோ? பொல்லாத வார்த்தை பிறருக்கும் பொல்லாது தனக்கும் பொல்லாது ஆன படியினாலே அந்தப் பொல்லாத வார்த்தை யைச் சொல்ல லாகா தென்றவாறு

கூ

100. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

என்பது

தர்மத்தை யுண்டாக்கப்பட்ட[1] நல்ல வசனங்கள் தனக்குண்டா யிருக்க அதனைச்[2] சொல்லாமல் பாவத்தை வரப்பட்ட[3] இன் னாத வசனங்களை ஒருவன் சொல்லுகிறது எப்படிப்போலே யென்றால், நெல்லிக்காய்[4] தன்கையிலே யிருக்க அத்தைந்[5] தின்னாமல் எட்டிக்காயைத் தின்றாற் போலுமென்றவாறு.

எட்டிக்காய் தின்றவன் பிராணன் இழந்தாற் பொல்லாத வார்த்தைகளைச் சொல்லுகிறவனும் தனக்குத்தானே கேடு தேடிக் கொள்ளுகிறதென்றவாறு.

ய

ஆக அதிகாரம் ய; குறள் எ.

---

1. நிதியை என்பது அச்சுநூல்; ''நீதி-உலகத்தோடு பொருந்துதல்-பரி மேலழகருரை

1. உண்டாக்கி 2. அவற்றைச் 3. தரும் 4. ''இழந்தாற்போல'' 5. கனி 6. அதனை

இப்பால் 11 செய்நன்றி[1]யறிதல்

என்பது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமல்[2] இல்லறம் வழுவாமல் நடந்து நல்லவசனங்களைச் சொல்லுவாற் குச் செய்த நன்றியை மறவாம லிருக்க வேணும்.

101. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது

என்பது

தனக்குமுன்னே ஒருவன் உதவி செய்யாதிருக்க ஒருவன் பிறருக் குச் செய்த வுதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகமுங் கொடுத்தா லுஞ் சரியொவ்வாதென்றவாறு,

செய்யாமற் செய்த வுதவிக்கு என்றது செய்தவுபகாரத்துக்கு மப்படிச் செய்ய மாட்டாதாருக்குச் செய்த தென்பதாம்[3] க

102 காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

என்பது

ஒருவனுக்கு இடையூறு வந்த காலத்திலே ஒருவன் செய்த வுதவி கொஞ்சமா யிருந்தாலும் அந்தக் காலத்தைப் பார்த்தால் அது பூலோகத்தினும் பெரிதென்றவாறு

அந்தக் காலத்தைப் பார்க்கிற தல்லது பொருளைப் பார்க்க வேண்டாமென்பது. உ

103. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது

என்பது

ஒருவன் தனக்குப் பிறகு செய்யப் போற[1] வுபகாரத்தை யாரா யாதே அவனுக்குச் செய்த வுபகாரத்தை யாராய்ந்து பார்த் தால் அந்த நன்மை கடலினும் பெரியதா மென்றவாறு. ௩

1: ''செய்ந்நன்றி'' என்றிருத்தல் தகும் 2, மறவாமை. 3, பிற் சேர்க்கை குறிப்புரை காண்க

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்

என்பது

ஒருவன் தினையத்தனை யுபகாரத்தைப் பண்ணினாலும் அதனைப் பனையத்தனைப்பெரிய உபகாரமாக நினைப்பர். உபகாரத்தின் பலனை யறிந்த பெரியோரென்றவாறு. ச

105. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

என்பது

ஒருவ னுபகாரஞ் செய்ய அவனுக்குப் பிறத்தியுபகாரம் பண்ணின உதவிகாரணத்தினாலேயும் பொருளாலேயுங் காலத்தினாலேயு மாகிய மூன்று வகையாலும் பார்த்தால் அவன் செய்தவுபகார மாத்திரமே யல்ல. செய்வித்துக் கொண்டவன் பெருமையாகிய நற்குணங்க ளெத்தனை யுண்டோ அத்தனையும் பெரியதென்ற வாறு. ரு

105. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு

என்பது

துக்கப் படுகிற காலத்திலே தனக்குச் சினேகமா யிருந்தவர்களுறவை விடாமலிருக்கவேணும்; அறிவினாலு மாசாரத்தினாலுங் குற்றமற்றாரது கேண்மை மறக்க வேண்டா மென்றவாறு. சா

107. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு

என்பது

தங்களுக்கு வந்த துக்கத்தினை நீக்கினவருடைய சினேகத்தைத் தாங்கள் பிறக்கிற ஏழேழு[1] சென்மங்களிலேயும் நினைப்பார்கள் நல்லோர்களென்றவாறு. எ

1. போற - போகிற என்க.

108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

என்பது

ஒருவன் செய்த நன்மையை மறந்துபோறது[3] நல்ல தல்ல ஒருவன் செய்த தீமையை யப்பொழுதே மறப்பது நன்மை யென்றவாறு.
அ

109. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்று நன் றுள்ளக் கெடும்

என்பது

தனக்கு முன் னொருநன்மை செய்தவன் பிறகு கொல்லுகிறத்தைப் போலே யொத்த பொல்லாங்குகளைச் செய்தாராகிலும் அதுகளெல்லா[2] முன் செய்த ஒரு நன்மையை நினைக்கில் பொல்லாங்கெல்லாம் நன்மையாய்ப்[3] போமென்றவாறு
கூ

110. எந்நன்றி கொன்றாற்கு[1] முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி[2] கொன்ற மகற்கு

என்பது

பெரிய தர்மங்களைக் கெடுத்தாற்கும் பாவம் நீங்கத்தக்க வழியுண்டு; ஒருவன் செய்த நன்றியைக் கெடுத்தவனுக்குப் பாவம் போகத் தக்கதாக வழியில்லை யென்பதாம்.

பெரிய தர்மங்களைக் கெடுக்கிறதாகிறது, பசுவின் முலையை யறுக்கிறதும், ஸ்திரீகள் கெற்பத்தைக் கெடுக்கிறதும் பிராமணரை[3] யபவாதம் பண்ணுகிறது முதலாகிய பாதகங்களைச் செய்தால் இதிலுஞ்[1] செய்நன்றியைக் கெடுக்கிறது அதிக பாவமென்றவாறு.
ய

ஆக அதிகாரம் ய௧; குறள் ளய

1. வேண்டும் 2. ஏழு என்பது அச்சு நூல் 3. போகிறது

1. ''கொன்றார்க்கு'' என்பதே பிறர் பாடம் 2. 'செய்ந்நன்றி' ஷெ: 3. தான் பிறரை என்பது அச்சு நூல் 1. சொல்லுகிறதை 2. அவைகளெல்லா 2 இன்மையாய் என்பது அச்சு நூல்.

. அயலார்.

இப்பால் 12. நடுவு நிலைமை

என்பது பகைவர் பிறத்தியார்[2] சினேகித ரென்று மூன்று பேரிடத்தினும் வழுவாமல் நிற்கப்பட்ட லட்சணத்தைச் சொல்லுகிறது.

111. தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட் டொழுகப் பெறின்

என்பது

நடுவுநிலைமை யென்று சொல்லப்பட்டது[1] பகைவர் பிறத்தியார்[2] சினேகிதர் என்று சொல்லப்பட்ட மூன்று பேரிடத்தினும்[3] அவரவர்கள் முறையறிந்து நடந்து கொள்ள வேணு[5] மென்றவாறு. க

112. செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து

என்பது

பகைவர் பிறத்தியார்[1] சினேகித ரென்கிறவர்களிடத்திலே நடக்கத்தக்க முறையை யறிந்து நடக்கிறவனுடைய அயிசுவரியம் பிறர் செல்வம்போல் அழிவில்லாம லவனுக்கு மவன்பிள்ளைக்கும் பேரன் முதலாகிய வங்கிஷத்தாருக்கும் வலுமையைக் கொடுக்கு மென்றவாறு.

தர்மத்துடனே கூடி நடந்தபடியினாலே அழிவில்லாமல் நிற்கு மென்பதாம். உ

113. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்

என்பது

நன்மையக் கொடுக்கிற தானாலும் நடுவு நிலைமையாகிய தர்மத்தை[2] அல்லாமல் வருகிற அயிசுவரியத்தை யப்பொழுதே விட்டுவிட வேணு மென்றவாறு. ௩

---

2. கருமத்தால்

1. இதனினும் என்பது அச்சுநூல் 2, அந்நியர் என்பது அச்சு நூல் 3. சொல்லப்பட்ட ஒன்று நல்லது - என்பது அச்சு நூல் 4. அயலார் 5. இறத்தவரிடங்களிலேயும் ,, ,,

114. தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தால் காணப் படும்.

என்பது

இவர் சருமம் உடையவர் இவர் தரும மில்லாதவர் என்கிற விசேஷம் அவரவர்களுடைய பிள்ளைகள் நன்மையாலும் தீமை யாலும் அறியப்படும் என்றவாறு.

தர்மத்தை யுடையவர்களுக்கு நல்லபிள்ளை யுண்டாகிறதும் தர்ம மில்லாதவர்களுக்கு நல்லபிள்ளை இல்லையாகிறதும் ஆம்; இரண்டு திறத்தவரையும் அறிகிறதற்கு இதுவே அடையாள மாம். சு

115. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி

என்பது

தீவினை செய்தவன் கெடுக்கிறதும் நல்வினை செய்தவன் பெருக்க வாழ்கிறதும் முன்னேதானே யுண்டாயிருக்குது[1] அப்படி யறிந்து மனதிலே கேடு நினையாம லிருக்கிறதே அறிவுடைய வர்களுக்கு ஆபரணமா மென்றவாறு ரு

116. கெடுவல்யா னென்பதறிகதன் னெஞ்சம்
நடுவொரீ[2] யல்ல செயின்

என்பது

ஒருவன் தன்னெஞ்சம் நடுவு நிற்றலை யொழிந்து தர்ம மல்லாத காரியத்தைச் செய்ய நினைக்குமாயினந்த நினைவு தன்னைக் கெடுக்கத்தக்கதாக வந்த தென்றறிய வேணும் என்றவாறு

நினைத்தாலும் செய்தாற்போ லென்றவாறு. சா

117. கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு

என்பது

1. யிருக்கின்றன 2. வொரீஇ என்றிருத்தல் வேண்டும்.

நடுவுநிலைமை என்று சொல்லப்பட்ட தருமத்தின் கண்ணே நின்று தரித்திரப்பட்டவனைப் பெரியோர்கள் தரித்திரவா னென்று சொல்லார்களென்றவாறு. எ

118. சமன்[1]செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி

என்பது

முன்னேதான் சரியாக நின்று பின்தன்னிலே வைத்த பாரத்தை நிறுக்கிற தராசுக் கோல்போலத் தான் இலக்கணமாயிருந்து ஒரு சேட்டையும் நினையாம லிருக்கிறது சான்றோர்களுக்கு அழகான ஆபரணமாம் என்றவாறு. அ

11". சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்

என்பது

நடுவு நிலைமையாவது கொடுமையான வசனங்களைச் சொல் லாதது; அந்தக் கொடுமையான நினைவை மனத்திலே நினை யாம லிருக்கப்பெற்றால் அதுவே பெரிய தருமம் என்றவாறு. கூ

120. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்

என்பது

பிறர்பொருள்களையும் தன்னிட[2] பொருள் போலப் பார்த்து வாணிகஞ் செய்கிறவர்களுக்கு நன்றாய் வியாபாரம் பலிக்கு மென்றவாறு.

பிறவுந்தம போற் செய்தலாவது, கொள்ளுகிறது அதிகமும் விக்கிறது[1] குறையுமாகாமல் சரியாய் விடுகிறதாம்[2]

ஆக அதிகாரம் யஉக்குக் குறள் ளஉய

1. சமன் என்பது பிறர் பாடம்

1. தம்முடைய

1. விற்கிறது 2. சரியாய்க்கொள்ளுகிறதும் விற்கிறதுமாம் - என்பது

இப்பால் 13. அடக்கமுடைமை

என்பது, சரீரங்களும் வசனங்களும்[3] மனசும் பொல்லாத வழியே போகாம லடக்கிக் கொள்ளுகிறது.[4]

121. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்
என்பது

ஒருவனுக்கு[5] அடக்கமாகிய தர்மம் பிறகு தேவலோகத்திலே சேர்க்கும்; அடங்காமையாகிய பாவம் பெரிய இருளையுடைய நரகலோகத்திலே சேர்க்கு மென்றவாறு. க

122. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு
என்பது

சீவன்களுக்கு அடக்கத்திலும் பெரிய செல்வமில்லை: ஆன படியினாலே அந்த அடக்கத்தை யுறுதியான பொருளாக வெண்ணி அழியாமற் காக்க வேணுமென்றவாறு உ

123. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்
என்பது

அடங்கிறதே[1] நமக்கு அறிவான தென்றறிந்து ஒருவன் சாத்திரத்தின் வழியே அடங்கப் படுவனாகில்[2] அந்த அடக்கம் நல்லோரா லறியப்பட்டு அவனுக்குப் பெருமையைக் கொடுக்கு மென்றவாறு

சம்சாரிக்கு அடக்க மாகிறது, மெய்வாய் கண் மூக்குச் செவி யென்று சொல்லப்பட்ட வைம்புலனும்[3] தன்வச மாதலா லென்பது. ந

அச்சு நூல் 3. வாக்கும் என்பது அச்சு நூல் 4. கொள்ளுகிற குப்தி (குப்தி யடக்கம்) அச்சு நூல் 5. ஒருவனை

1. அடங்குகிறதே 2. பெறுவானாகில் 3. ஐந்தன் புலனும்

124. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது

என்பது

தான்கொண்ட விரதஞ் சீலங்களின் வழியே நின்று அடங்கின வனுடைய பெருமை மலையைப் பார்க்கிலும் பெரிய தென்ற வாறு. ச

125. எல்லார்க்கும் நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து

என்பது

பெருமை யில்லாமல் அடங்கி நடக்கிறது எல்லாருக்கும் நல்ல தாம்; அதிலேயும் அயிசுவரியவான்களடங்கி நடந்தா லந்த அடக்கம் பின்னையுமொரு அயிசுவரிய முண்டானாற் போலு மென்றவாறு.

கல்வி குடிப்பிறப்பு முடையார் அடங்கி நடந்தால் மிகவும் நன்றென்றவாறு. ரு

126. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து

என்பது

ஒருபிறப்பிலே ஒருவன் ஐம் பொறிகளையும் அடக்க வல்ல வனாயி னந்த வடக்க மவனுக்கு ஏழுபிறப்பிலேயும் நன்மை யைத் தருமென்றவாறு, ஆமை மனுஷரைக் கண்டவுடனே பொறிகளை யடக்கிறாப்[1] போலே பாவங்கள் வரவொட்டாமல் பொறிகளை யடக்க வேணு மென்றவாறு. சா

127. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

என்பது

தன்னாலே காக்க வேண்டின ஐம்பொறிகளையுங் காக்க மாட்டா விட்டாலும் நாவொன்றையுங் காக்க வேணும்; அதனைக் காரா[2] விட்டால் சொல்லுகிற வசனத்தினுடைய

1. அடக்குவது 2. காவா

குற்றத்தினாலே தாங்களே துக்கங்களை யடைவார்க ளென்ற வாறு. எ

128. ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும்

என்பது

பிறருக்குத் தீங்கு வருகிற வார்த்தை ஒன்றுண்டானாலும் அவனுக்கு மற்றத்தர்மங்களாலே ஒருபலனு மில்லை யென்ற வாறு

ஆனபடியினாலே நாவைக் காத்துப் பேச வேணு மென்பதாம் அ

129. தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு

என்பது

ஒருவன் ஒருவனை நெருப்பினாலே சுட்டபுண் உடம்பிலே யிருந்தாலும் மனதிலே யப்பொழுதே யாறும்; அப்படியல்லாமல், ஒருவன் நாவினாலே சொன்ன கடினமான வார்த்தையாகிறவடு உடம்பிலே தெரியாவிட்டாலும் மனத்திலே யெப்பொழுதும் மாறாமலிருக்குமென்றவாறு. கூ

130. கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து

என்பது

மனத்திலே கோபந் தோன்றாமல் காத்துக் கல்வியுடையவனாய் அடங்க வல்லவனை அறக்கடவுள் வந்து சேருகிறதற்கு வழியைப் பார்த்திருக்கும் என்றவாறு.

அடங்குதலாவது, மனம் பொறிவழியே போகாமல் அறத்தின் வழியே நிற்றல். இப்படிப்பட்டவனுக்குத் தர்மம் தானே வந்து சேரும் என்பதாம். ய

ஆக அதிகாரம் யங-க்குக்குறள் ளஙய.

இப்பால் 14. ஒழுக்கமுடைமை
என்பது

அந்தந்த சாதிக்கும் ஆசாரநிலைக்கும் சொல்லப்பட்ட ஆசாரத்தின் வழியே நடக்கிறதாம்.

131. ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்
என்பது

ஆசாரமாய் நடக்கிறது எல்லாருக்கும் பெருமையைக் கொடுக்கிற படியினாலே, அந்த ஆசாரத்தைப் பிராணனைப் பார்க்கிலும் அதிகமாகப் பார்த்துக் காக்கவேண்டும் என்றவாறு

பிராணன் எல்லாவற்றிலும் பெரியதானாலும் ஆசாரத்தைப் போல மறுமைக்கு உறுதி செய்யமாட்டாது; ஆனபடியினாலே ஆசாரத்தையே காத்து ரக்ஷிக்க வேண்டும் என்பதாம். க

132. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை
என்பது

ஒழுக்கத்தை ஒன்றினாலேயும் அழிவு படாமல் போற்றி வருந்திக்காக்க; பலதர்மங்களையும் ஆராய்ந்து பார்த்தால் ஒழுக்கத்தைப் போல் இம்மை மறுமை இரண்டிற்கும் துணையாகத்தக்கதில்லை; ஆனபடியினாலே ஆசாரத்தைச் செய்ய வேணும் என்பதாம் என்றவாறு. உ

133. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்
என்பது

எல்லாருக்கும் ஆசார முண்டாயிருக்கிறதே நல்ல குலமாம். அந்த ஆசாரம் கெட்டால் அதுவே தாழ்ந்த ஜாதியாம் என்றவாறு.

உயர்ந்த ஜாதியிலே பிறந்தவர்களானாலும் ஆசாரமில்லாவிட்டால் தாழ்ந்த ஜாதியராவர்; தாழ்ந்த ஜாதியிலே பிறந்

தாலும் ஆசாரம் விரதம் உண்டாயிருந்தால் உயர்ந்த குலத்தவராவர். ரூ

134. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்
என்பது

தான்கற்ற வேத சாஸ்திரங்களை மறந்தாலும், ஆசாரம் கெடாமலிருந்தால், திரும்ப சாஸ்திரம் படித்துக் கொள்ளலாம்; பிராமணன்ஜாதி ஆசாரம் தப்பி நடந்தால் கெட்டுப் போவான் என்றவாறு.

பெரிய ஜாதியான பிராமணனைச் சொன்ன படியினாலே எல்லா சாதிக்கும் ஒக்கும் என்பதாம். ச

135. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு
என்பது

பிறர் ஐஸ்வரியத்தைப் பார்த்துப் பொறுப்பற்றுப்படுகிற[1] வனுக்கு ஐஸ்வரிய மில்லாதது போல ஆசாரமில்லா தவனுக்குப் பெருமையில்லை, கீர்த்தியு மில்லை என்பதாம். ரு

136. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து
என்பது

பெரியோர்கள் தாங்கள் கொண்ட விரதம் ஆசாரம் இவைகளை நடக்கிறதற்கு அருமை என்று விட்டு விடார்கள் விட்டால் குற்றமும் இழிகுலமும் வருமென்று அறிந்து ஒழுக்கத்தை விடார்கள் என்றவாறு. சு

137. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி
என்பது

சகலமான பேரும் ஆசார வொழுக்கத்திலே பெருமையும்

1. பொறாமைப்படுகிற 35 ஆம்குறள் காண்க. 161 ஆம்குறட் குரிய அடிக் குறிப்பைக் காண்க.

கீர்த்தியும் அடைவர்; அந்த ஆசார ஒழுக்கத்தை விட்டால் பொல்லாத பழியை அடைவர் என்றவாறு. எ

138. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

என்பது

ஒருவனுக்கு நல்ல ஆசாரம் நன்மைக்குக் காரணமாய் இருமையினும் சுகத்தைக் கொடுக்கும்; பொல்லாத ஒழுக்கம் பாபத்துக்குக் காரணமாய் இருமையினும் துக்கத்தைக் கொடுக்கும் என்றவாறு. அ

139. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாதே[1] தீய
வழுக்கியும் வாயாற் சொலல்

என்பது

ஆசார முடையவர்கள் மறந்தும் பொல்லாத வார்த்தைகளை வாயாற் சொல்லுதல் இயலாது என்றவாறு.

பொல்லாத வார்த்தைகளாவன, பிறருக்குத் தீங்குவரும் பொய் முதலாயினவும், தங்கள் குலத்திற்கு அடாதனவுமாம். கூ

140. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

என்பது

பெரியோர்களோடு ஒக்க நடவாதவர்கள் பல நூல்களைக் கற்றாலும் அறிவில்லாதவர்கள் என்றவாறு.

பெரியோர்களோடு ஒத்த நடக்கிறது, கொலை பொய் முதலானவற்றை விட்டுத் தர்மத்தின் வழியே நடக்கிறதாம். ய

ஆக அதிகாரம் யச; குறள் யசய

1. "ஒல்லாவே" என்பது பிறர்பாடம்

இப்பால் 15. பிறனில் விழையாமை

என்பது, காமபோக[1] வாஞ்சை[2] மயக்கத்தினால் அயலாருடைய ஸ்திரீகளை விரும்பி ஆசைப்படாமல் இருக்கிறது.

141. பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்கண் இல்

என்பது

பிறனுக்குரியளான பெண்சாதியை வாஞ்சித்துக்கொண்டிருக்கிற அறிவில்லாமை, உலகத்திலே தர்மசாஸ்திரங்களையும் நீதி நூல்களையும் கற்றறிந்தோர்களிடத்திலே இல்லை என்றவாறு க

142. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரில் பேதையார் இல்

என்பது

காம விகாரம் காரணமாகப் பாவத்தைச் செய்தவர்கள் எல்லாரிலேயும், பிறன் இல்லாளை விரும்பி அவன் வாசலிலே போய் நின்றவர்களைப்போல், அறிவில்லாதவர்கள் இல்லை என்றவாறு.

காம வாஞ்சையினாலே வேசியரைச் சேருகிறவர்களுக்குத் தருமமும் பொருளும் இழக்கிறதல்லாமல் பயமில்லை; பிறன் இல்லாளை விரும்பினவர்கள், அறனும் பொருளும் இழந்து பயத்தினாலே தாங்கள் நினைத்தசுகமும் கெடுவர் என்பதாம். உ

143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்

என்பது

தம்மைச் சந்தேகப்படாமல் விசுவாசமாய் நம்பினவருடைய பெண்சாதியிடத்திலே பாவங்களைச் செய்ய விரும்பினவர், பிராணனுடனே யிருந்தாலும் செத்தவரோடே யொப்பர் என்றவாறு.

அறம் பொருள் இன்பங்களாகிய பலனை அடையாத படியினாலே செத்தாரோ டொப்பர் என்பதாம். ௩

1. காமத்தை நுகர்தல் 2. விருப்பம்

144. எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்

என்பது

எத்தனை பெருமை யுடையவ னானாலும் தன் குற்றத்தைச் சற்றும் எண்ணாமல் பிறனுடைய இல்லாளை விரும்புகிறவனுக்கு அவைகள் என்ன பயனைச் செய்யும்; ஒரு பலனு மில்லாமல் போய்விடும் என்றவாறு.

பிறன் இல்லாளை விரும்புகிறவன் எல்லாப் பொருளையும் இழப்பன் என்பதாம். ௪

145. எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி

என்பது

பிறனுடைய பெண்சாதியைச் சேருகிறது எளிதென்று சேருகிறவன், எக்காலத்திலேயும் கெடாத பழியையும் பகைமையையுமடைவனென்றவாறு ௫

146. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்

என்பது

பிறனுடைய வில்லாளை வாஞ்சிக்கிறவனுக்குப் பகையும் பாவமும் பயமும் பழியுமென்று சொல்லப்பட்ட இந்த நாலும் அதிகமாகவுண்டா[1] மென்பதாம்.

பகைபழிபாவம் பயங்களுண்டாகவே யிம்மை மறுமைப் பயனை யிழப்ப னென்பதாம் ௬

147. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்

என்பது

பிறனுடைய பெண்சாதி யழகை விரும்பாதவனே தர்மத்துடனே கூடி வாழ்கிற சம்சாரியென்பதாம்.

---

1. நீங்காவாம் என்பது அச்சுநூல்

இல்லறத்துக் குரித்தானவன் அவனே யென்பதாம். ஏ

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு

என்பது

பிறன் மனையாளை விரும்பாதவனுடைய ஆண்மை, பெரியோர்களாலே யெண்ணப்பட்ட தர்மமுமாய் நிறைந்த ஆசார முமா மென்றவாறு.

பிறத்தியிலே[1] வருகிற பகையை யடக்குகிறவனுக்கும் உட்பகையாகிய காமத்தை யடக்குதலரிதாதலால் காம விகாரத்தை யடக்குறதே[2] பெருமை யென்பதாம். அ

149. நலக்குரியார் யாரெனி னாம நீர் வைப்பிற்
பிறர்க்குரியா டோடோயா தார்

என்பது

சமுத்திரஞ்[3] சூழ்ந்திருக்கிற பூமியிலே எல்லா நன்மைகளுக் குரித்தானவர்கள் யாரென்றால் பிறருக்குரித்தான பெண்சாதியுடைய தோளைச் சேராதவர்களென்றவாறு.

பர ஸ்ரீகளைச் சேராதவர்க ளிம்மையிலே கீர்த்தியும் மறுமையிலே தேவ லோகங்க ளடைவ ரென்பதாம். சு

150. அறன்வரையா னல்ல செயினும் பிறன் வரையாள்
பெண்மை நயவாமை நன்று

என்பது

ஒருவன் தனக்குரித்தாகத்[1] தருமங்களைச் செய்யாமல் பாவங்களைச் செய்தானாயினும், பிறனுடைய பெண்சாதியை விரும்பாம லிருந்தா லதுவே பெரிய தர்மமாமென்றவாறு.

சகல தர்மங்களிலும் பிறனுடைய பெண்சாதியை வாஞ்சியாமலிருக்கிறதே பெரிய அறமாமென்பதாம். ய

ஆக அதிகாரம் யரு; குறள் ளருய

---

1. புறத்திலே 2. அடக்குகிறதே 3. கடல்

இப்பால் 16. பொறையுடைமை

என்பது, ஒருவன் ஒரு குற்றங்[2] காரணத்தினாலே தனக்குக் குற்றஞ் செய்தால், தானு மவனுக்குக் குற்றஞ் செய்யாம லவன் செய்த குற்றங்களைப் பொறுக்கிறதாம்.

151. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

என்பது

தன்னை வெட்டுகிறவனை விழாமல் தாங்கப்பட்ட பூமியைப் போலத் தம்மை யிகழ்ந்து பேசுகிறவர்களைப் பொறுக்கிறதே முந்தின[1] தர்மமென்றவாறு. க

152. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று

என்பது

ஒருவன் செய்த குற்றங்களைப் பொறுக்கிறது நல்லது; அந்தக் குற்றங்களை மனதிலே வையாம லப்பொழுதே மறக்கிறது, அந்தப் பொறுமையிலும் நல்ல தென்றவாறு.

பொறுத்தலும் மனதிலே நினையாமல் மறக்கிறதும் நல்ல தென்பதாம்[2] க

153. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை

என்பது

ஒருவனுக்குத் தரித்திரத்திலுந் தரித்திரமாவது, விருந்தாய் வந்தவர்களுக்கு உபகாரம் பண்ணாமல், இல்லை யென்கிறது; நன்மையிலும் நன்மை[1] யாவது, ஒருவன் செய்த குற்றங்களைப் பொறுக்கிறதென்றவாறு. ௩

1. தனக்குரியவான - என்பது அச்சு நூல் 2. குற்றம் - இது வேண்டாதசொல்

1. தலையாய 2. பிற்சேர்க்கை குறிப்புரை காண்க.

154. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்

என்பது

ஒருவன், நன்மை தன்னைவிட்டு நீங்காம லிருக்கவேணு மென்றால், பொறுமையை விடாமற்காக்க வேணு மென்றவாறு: பொறுத்தாலல்லது நன்மையில்லை யென்பதாம். ௪

155. ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து

என்பது

ஒருவன் செய்த குற்றங்களைப் பொறாமல் திரும்ப அவனுக்குப் பொல்லாங்கு செய்கிற பேரைப் பெரியோர்கள் எண்ணார்கள்; பொறுத்த பேரைப் பொன்னைப் போலே பிரிய மாக வெண்ணி வைத்துக் கொள்வார்களென்றவாறு. ரு

156. ஒறுத்தாற் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்

என்பது

தனக்குத் தீங்கு செய்தவனைத் தெண்டம்[1] பண்ணின வனுக்கு அப்பொழுது மாத்திரமே சுகமுண்டாம்; அந்தக் குற்றங் களைப் பொறுத்தவர்களுக்கு உலக மழியு மளவுங் கீர்த்தி யுண்டா மென்றவாறு. சா

157. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.

என்பது

ஒருவன் தனக்குச் செய்யத்தகாத பொல்லாங்குகளைச் செய்தாலும், அவனுக்கு வரப்போகிற குற்றத்துக்குத் தான் விசாரப்பட்டு அவனுக்குப் பொல்லாங்கு செய்யாமலிருக்கிறதே நன்றென்றவாறு. எ

1. 'வன்மையிலும் வன்மை' என்று படிக்க "நன்மையிலும் நன்மை" என்றே அச்சு நூலிலுமுள்ளது.

1. தண்டனை

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.
என்பது

மன வலுமையினாலே ஒருவன் தனக்குத் தீங்கு செய்தால வனுக்குத்[1] தன்னுடைய பொறுமையினாலே வெல்ல வேணு மென்றவாறு.

குற்றங்களைப் பொறுத்தால் பெருமை யுண்டாய்ப் பலரும்[2] எண்ணப்படுவ ரென்பதாம். அ

159. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தூர்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர்
என்பது

சங்காரத்திலே[3] யிருந்தாலும் அறிவில்லாதவர்கள் சொன்ன பொல்லாத வார்த்தைகளைப் பொறுத்தால், துறந்தவர்களைப் பார்க்கிலும் நன்மை யுடையவர்களா மென்றவாறு. கூ

160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்
என்பது

பெரியோர்கள் விரதங்களா லுண்டியைக் குறைத்து அதி னாலே வந்த நோவைப் பொறுப்பார்; பிறர் சொல்லப் பட்ட வார்த்தைகளைப் பொறுக்கிறவர்கள்[1], அவரிலும் பெரியோரா மென்றவாறு ம

ஆக அதிகாரம் ய கூ; குறள் ளகூய

இப்பால் 17. அழுக்காறாமை

என்பது, ஒருவன் செல்வத்தைக்கண்டு பொறுப்பற்றுப் படுகிறது அழுக்காறு; அஃது இல்லாதிருத்திருத்தல் அழுக்காறமை)

161. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்ற னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு
என்பது

---

1. அவனை 2. பலராலும் 3. சம்சாரத்திலே

ஒருவன் தன் மனசிலே அழுக்கா றென்னப்பட்ட பொறுப் பற்றத்தை[2] வையாமலிருக்க வேணும்; அந்தப்பொறுப்பற்றமை யைத் தான் காக்கப்பட்ட[3] விரதங்களைப் போலே பார்த்துக் காக்க வேணும் என்றவாறு க

162. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்

என்பது

எவர்களிடத்திலேயும் அழுக்காறாகிய பொருட்பற்றுப் படுகிற தில்லாம விருந்தால் அவனுக்கு அதிலு மதிகமாய்ப் பெறவேண்டின தொன்றில்லை யென்றவாறு.

அழுக்காறு பகைவரிடத்திலேயுமாகா தென்பதாம். உ

163. அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்

என்பது

மறுமைக்கு மிம்மைக்கும் பலனாகிய தர்மமுங் கல்வியுஞ் செல்வமுந் தனக்கு வேண்டாதவன், பிறர் செல்வங் கண்டு சந்தோஷப் படாமல் அழுக்காற்றைச் செய்கிறது னென்றவாறு.

ஒருவன் அயிசுவரியத்தைக் கண்டு பொறுப்பற்றுப் பட்டால் தனக்குக் கேடு வருமென்பதாம். ௩

164. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து

என்பது

அறிவுடையவர்கள் பிறன் செல்வங்கண்டு பொறுப்பற்றுப் படார்கள்; பொறாமைப் பட்டால் தங்களுக்குக் குற்றம் வரும் என்று அறிந்து என்றவாறு.

1. பொறுக்கிற உத்தம க்ஷமையுடையார் என்பது அச்சுநூல் 1. பொறா மைப்படுதல் 35, 135 ஆம் குறள்கள் காண்க 2. பொறாமையை எங்க 3. காக்கும் *அச்சுநூல் பக்கம் 70 காண்க

அழுக்காறாவது. செல்வம், கல்வி முதலாயின வுடையார்க்குத் தீங்கு நினைத்தலும் சொல்லுதலும் செய்தலுமாம். ௪

165. அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது

என்பது

அழுக்கா றுடையவரைக் கெடுக்கிறதற்குப் பகைவர் வேண்டா, அந்த அழுக்காறே அவரைக் கெடுக்கும் என்றவாறு.

அழுக்காறுடையவர், செல்வமுடையார்க்குப் பொல்லாங்கு செய்து அதனால் கெடுவரென்பதாம். ௫

166. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்

என்பது

ஒருவன் பிறருக்குக் கொடுப்பதைக் கண்டு அவர்களுக்கு ஏன் கொடுக்கிறான் என்று பொறாமைப்பட்டால், அவனும் தன் சுற்றத்தாரும் உண்ணவும் உடுக்கவும் இல்லாமல் கெட்டுப் போவார்கள் என்றவாறு.

பிறர் மீது பொறாமைப்பட்டால் தானும் தன் சுற்றத்தாரும் கெடுவர் என்பதாம். ௬

167. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்

என்பது

பிறர் செல்வங்கண்டு பொறாமைப்படுகிறவனை மகாலட்சுமியும் பொறாது தன் தமக்கையாகிய மூதேவியைக் காட்டி விடுவாள் என்றவாறு.

அழுக்காறுடையானிடத்தில் இலட்சுமி இராள் என்பதாம். ௭

168. அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்

என்பது

அழுக்கா றென்று சொல்லப்பட்ட ஒரு பாவி, தன்னை யுடையவனுக்கு இம்மையிலே செல்வத்தைக் கெடுத்து மறுமை யில் அவனை நரகத்தில் சேர்த்துவிடும். அ

169. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

என்பது

குற்றமுடைய மனதுடையவன் ஐஸ்வரியமா யிருக்கிறதும், செவ்வையாயிருக்கிறவன் கெட்டுப் போகிறதும், முன்செய்த தீவினை[1]ப் பயன் என்றவாறு.

முன் செய்த வினையே முந்தவரும் என்பதாம். கூ

170. அழுக்கற் றகன்றாரும் இல்லையஃ தில்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரு மில்

என்பது

ஒருவனைப் பொறாமைப் பட்டதினாலே பெரியவர்களான பேர்களு மில்லை; அந்தப் பொல்லாங்கு செய்யாமல் கெட்டுப் போனவர்களு மில்லை என்றவாறு.

இதனால் கேடும் நன்மையும் வருகிறதற்கு இலக்ஷணம் சொல்லப்பட்டது. ய

ஆக அதிகாரம் யஎக்குக்குறள் ளஎய.

இப்பால் 18. வெஃகாமை

பிறருடைய பொருள்களைத் தான் அபகரித்துக் கொள்ளா மையும், பிறர் செல்வங்கண்டவழிப் பொறாமையின்மையும் என்பதாம்.

171. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்

என்பது

---

1. 'தீவினை' என்ற விடத்து 'வினை' என்றலே சாலும்.

பிறர் பொருளை எடுத்துக் கொள்ளுகிறது தருமமல்ல என்றும் நீதியல்ல வென்றும் எண்ணாமல் எடுத்துக் கொண்டால், அஃது அவன் குடியைக் கெடச் செய்து அவனுக்கு வெகு குற்றங் களையும் தரும் என்றவாறு. க

172. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்

என்பது

பிறர் பொருளை வேண்டிப் பொல்லாங்குகளைச் செய்யார், பகை பழி பாவங்களுக்கு அஞ்சுபவர்[1] என்றவாறு உ

173. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்

என்பது

பிறர் பொருளை அபகரித்துக் கொண்டதினாலே வருகிற நிலையில்லாத சுகத்தை விரும்பித் தருமம் அல்லாத பொல்லாத காரியங்களைச் செய்யார், மறுமைக்கு நிலையான சுகத்தை வேண்டுகிற பேர் என்றவாறு. ந

174. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம் வென்ற
புன்மையில் காட்சி யவர்

என்பது

நாம் தரித்திரரென்று நினைத்துப் பிறர் பொருள்களை விரும்பி எடுத்துக் கொள்ளார், ஐம்புலன்களையும் வென்று இரு பத்தைந்து குற்றமில்லாத சமயத் தரிசன[2] முடையவர்கள் என்ற வாறு. ச

175. அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்

என்பது

நுண்ணிதாக எல்லா நூல்களையும் கற்றதினால் உண்டா கிய பரந்த அறிவு என்ன பயத்ததாம், எல்லார் மாட்டும்

---

1. அஞ்சுகிறபேர்-என்பது அச்சுநூல் 2. குறிப்புரை காண்க.

பொருளை விரும்பி அறிவொடு பொருந்தாத செயல்களைச் செய்வா ராயின் என்றவாறு. ரு

176. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்

என்பது

அருளாகிற தருமத்தை விரும்பி அதற்கு வழியாகிய இல்லறத்தின்கண் நின்றவன், பிறன் பொருளை விரும்பி அதனைத் தான் கைக்கொள்ளத்தக்க பொல்லாங்குகளைச் செய்தால் அந்தத் தருமம் கெட்டுப்போ மென்றவாறு.

இல்லறத்திலே இருந்து அறிவு முதிர்ந்தால் அல்லாமல் துறக்கப் படாதென்பதாம், சு

177. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்

என்பது

பிறர்பொருளை விரும்பிக்கொண்டு அதனால் வருகிற செல்வத்தை விரும்ப வேண்டாம்; பிறர்பொருளை விரும்பினால் பிறகு அனுபவிக்கிற துக்கம் வெகுவாக உண்டாகும் என்றவாறு. எ

178. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்

என்பது

தன் ஐசுவரியம் குறைபடாமலிருக்க வேண்டு மென்றால் பிறனுடைய பொருள்களை விரும்பாமலிருக்க வேண்டும் என்றவாறு. அ

179. அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்தாங்கே திரு

என்பது

அறத்தை யறிந்து பிறர் பொருளை விரும்பாதவர்களை மகாலட்சுமி தான்வந்து சேருகிறதற்கு வழியறிந்து வந்துசேரும் என்றவாறு.

மகாலட்சுமி சேருகிறது தருமமும் நீதியும் உள்ளவிடத்து என்பதாம். கூ

180. இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை என்னும் செருக்கு

என்பது

பின்வருகிற குற்றங்களையறியாமல் ஒருவன் பிறர் பொருளைக் கைக்கொள்ள நினைத்தால் அந்த நினைவு அவனுக்குக் கேடு தரும்; பிறர் பொருளை வேண்டாம லிருந்தால் செல்வத்தையும் வெற்றியையும் கொடுக்கு மென்றவாறு. ய

ஆக அதிகாரம் ய அக்குக்குறள் ளஅய

(இப்பால்) 19. புறங்கூறாமை

என்பது, பிறரைக் காணாதவிடத்திலே அவரை யிகழ்ந்து பேசாம லிருப்பது என்பதாம்.

181. அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது

என்பது

ஒருவன் தருமங்களைச் செய்யாமல் பாவங்களைச் செய்தாலும், பிறரை இகழ்ந்து பேசான் என்று உலகத்தார் சொன்னால், அதுவே நல்லது என்றவாறு.

புறங்கூறாதவன் பாவங்களால் அழிக்கப்படான் என்றவாறு. க

182. அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை

என்பது

தரும மென்கிற தொன்றில்லை யென்று அழித்துச் சொல்லிப் பாவங்களைச் செய்கிறதைப் பார்க்கிலும் பொல்லாது. ஒருவனைக் காணாத விடத்திலே அழியப் பேசிக் கண்டவிடத்திலே அவனோடு பொய்யாக உறவாடுகிறது என்றவாறு. உ

183. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்
என்பது

பிறனைக் காணாத விடத்திலே இகழ்ந்து பேசிக் கண்ட பொழுது அவனுக்கு 'நல்லவனாகப் பொய்யுபசாரம் செய்து பிழைப்பதைப் பார்க்கிலும் சாகிறதே நல்ல தருமமாம் என்றவாறு.

புறங்கூறாமலிருந்தவன் மறுபிறப்பிலே வெகு செல்வத்தை உடையவனாவான் என்றவாறு ௩

184. கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்
என்பது

ஒருவன் எதிரே நின்று தயையில்லாமல் இகழ்ந்து பேசினாலும் அவனைக் காணாத விடத்திலே இகழ்ந்து பேசல் ஆகாது என்றவாறு. ௪

185. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையால் காணப் படும்
என்பது

பிறரை இகழ்ந்து பேசுகிற ஒருவன் தருமத்தைச் சொன்னாலும் நல்ல மனத்தனாய்ச் சொல்பவனல்ல என்று அந்தச் சொற்களாலே அவன் குற்றம் அறியப்படும் என்றவாறு ௫

186. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன் தெரிந்து கூறப் படும்
என்பது

பிறன் பழியை எல்லாரும் அறியச் சொல்லுகிறவன் தன் பழியையும் ஆராய்ந்து தனக்குக் குற்றம் வராமல் பார்த்துக் கொண்டு சொல்ல வேண்டுமென்றவாறு.

பிறர் பழியைச் சொன்னால் தன் பழியைப் பிறர் சொல்லி இகழப்படுவான் என்பதாம். ௬

187. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்

என்பது

பகையான வார்த்தைகளைச் சொல்லிச் சுற்றத்தாரையும் விட்டுப் போகப் பண்ணுகிறவர், சந்தோஷமான வார்த்தை சொல்லித் தன்னோடு கூடி மகிழ்ந்தால், அவரை நம்ப வொண்ணாது என்றவாறு.

புறங் கூறுவார்க்கு எல்லாரும் பகைவராவர் என்பது. ௭

188. துன்னியார் குற்றமும் தூற்று மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு

என்பது

தம்முடனே கூடிச் சினேகித ராயிருந்தவர் குற்றத்தைப் புறத்தியாருடனே சொல்லுகிறவர், பிறருடை குற்றத்தைச் சொல்லாதிரார் என்றவாறு.

அவரால் ஒரு பயனும் இல்லை என்பதாம். ௮

189. அறனோக்கி ஆற்றுங்கொல் ஒவ்வியம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை

என்பது

பிறர் போனபிறகு அவர் குற்றங்களைச் சொல்லுகிறவனைப் பொறுக்கிறது, பூமிக்கு வெகுபாரம்; அவனைச் சுமக்கிறதே தனக்குத் தருமம் என்று பூமி சுமக்கின்றது என்றவாறு.

பிறன் சொல்லுகிற குற்றங்களைப் பொறுத்தலே தன்மமென்பதாம். ௯

190. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

என்பது

பிறர் குற்றங்களைப் பார்த்துச் சொல்லுகிறது போலத் தம்முடைய குற்றத்தையும் பார்த்தா ராகின் அவருக்கு ஒரு பாவமும் வாராது என்ற வாறு.

தாமறியாமல் செய்த குற்றங்களை நினைத்துப் பச்சாத் தாபப் பட்டாராகில் அவருக்குப் பாவமில்லை என்றவாறு. ௰

ஆக அதிகாரம் ௧௯-க்குக் குறள் ௧௯௰

(இப்பால்) 20. பயனில சொல்லாமை

என்பது, தனக்கும் பிறருக்கும் அறம்பொருள் இன்பம் என்று சொல்லப்பட்ட பொருள்கள் ஒன்றிலும் பிரயோஜன மில்லாத வார்த்தைகளைச் சொல்லாதது.

191. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்

என்பது

அறிவுடையார் பலரும் கேட்டு வெறுக்கத்தக்கவாய் பிரயோஜன மில்லாத வார்ந்தைகளைச் சொல்லுகிறவனை எல்லாரும் இகழ்ந்து பேசுவார்கள் என்றவாறு. ௧

192. பயனில பல்லார்முன் சொல்லில் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது

என்பது

பிரயோஜன மில்லாத வார்த்தையை அறிவுடையார் முன்னே சொல்லுவது, நன்மையில்லாத பொல்லாத காரியங் களைத் தன்னுடைய சினேகிதருக்குச் செய்வதைப் பார்க்கிலும் பொல்லாதது என்றவாறு. ௨

193. நயனிலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித் துரைக்கும் உரை

என்பது

பயனில்லாத வார்த்தைகளை ஒருவன் விரித்துச் சொன் னால் அவ்வசனங்களே, இவன் அறிவும் நீதியும் இல்லாதவன் என்று சொல்லி அறிவிக்கும் என்ற வாறு ௩

194. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில் சொல் பல்லார் அகத்து

என்பது

பிரயோஜன மில்லாதனவாய் நன்மையுமில்லாத வசனங் ஙங்களை ஒருவன் பலரிடத்திலேயும் சொன்னால் அவைகள் அவனுடைய நன்மைகளையும் நீதியையும் போக்கிவிடும் என்ற வாறு ச

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை உடையார் சொலின்

என்பது

நல்ல பெரியோர்க ளானாலும் பிரயோஜன மில்லாத வார்த்தைகளைச் சொன்னால், அவர்களுடைய பெருமையும் நற் குணங்களும் அந்த வார்த்தைகளினாலே போய்விடும் என்ற வாறு. ரு

196. பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்

என்பது

பயனில்லாத வார்த்தைகளைப் பலகாலும் சொல்லுகிறவனை மனுஷனென்று சொல்லலாகாது; மனுஷருக்குள் பதர் என்று சொல்ல வேண்டும் என்றவாறு.

நல்ல அறிவில்லாத படியினாலே பதர் என்று சொல்லப்படும்.

சா

197. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று

என்பது

பெரியவர்கள் நீதியில்லாத வசனங்களைச் சொன்னாலும், பயனில்லாத வார்த்தைகளைச் சொல்லாமலிருந்தால் அது நல்லது என்றவாறு.

நன்மையில்லாத வசனங்களிலும் பிரயோஜனமில்லாத வசனம் பொல்லாதென்பதாம். எ

198. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்

என்பது

அறிதற்கரியவான பயன்கள் ஆராயவல்ல அறிவையுடைய வர்கள் மிகுந்த பயனில்லாத சொற்களைச் சொல்லுவார்கள் என்றவாறு.

அறிதற்கரிய பயனாவன, மோக்ஷத்தை அடைகிறதும் நற் கதியிலே பிறக்கிறதுமாம். அ

199. பொருள்தீர்ந்த பொய்ச்சாந்தும்[1] சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்

என்பது

பயனில்லாத வசனங்களை மறந்தும் சொல்லார், மயக் கத்தின் நீங்கிய நல்ல அறிவினையுடையவர்கள் என்றவாறு.

குற்றமற்றவர் பொல்லாத வசனங்களைச் சொல்வார் என்ப தாம். கூ

200. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்

என்பது

சொல்ல வேண்டினாற் பிரயோஜன முடைய வசனங்களைச் சொல்லுக; பயனில்லாத வார்த்தைகளைச் சொல்லவேண்டாம் என்றவாறு.

பயனில்லாத சொல் ஒருவருக்கும் ஆகாது என்பதாம். ம

ஆக அதிகாரம் உயக்குக்குறள் உள

## இப்பால் 21. தீவினையச்சம்

என்பது, பாபங்களைச் செய்யப் பயந்து செய்யாமலிருப்பது என்பதாம்.

201. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு

என்பது

பொல்லாத காரியங்களைச் செய்வதற்கு முன் தீவினை

1. பொச்சாந்தும் என்பதே சரியான பாடம்

செய்தவர்கள் பயப்பட மாட்டார்கள்; தீவினை செய்யாதவர்கள் பொல்லாங்குகளைச் செய்வதற்குப் பயப்படுவார்கள் என்றவாறு.

முன் செய்து அறிந்தவர்கள் பயப்படார்கள், முன்தீவினை செய்யாதவர்கள் அறியாதபடியினாலே பயப்படுவார்கள். க

202. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

என்பது

தனக்கு இன்பம் வருவதற்காகச் செய்யப்பட்ட பொல்லாங்குகள், பின்பு தனக்கே தீமைகளைச் செய்கிற படியினாலே, நெருப்பைப் பார்க்கிலும் அதிகமாகப் பயப்பட வேணும் என்றவாறு.

அது எப்படி என்றால், பின்னையொரு காலத்திலேயும் பிறிதோர் தேசத்திலேயும் பிறிதோருடம்பிலேயும் தீயானது சுடுகிறது இல்லை. தீவினை யாகிய* நெருப்பைப் பார்க்கிலும் தீவினைக்கு அஞ்ச வேண்டும் என்பதாம். உ

203. அறிவினுள் எல்லாம் தலை என்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்

என்பது

தனக்கு உறுதி பயக்கப்பட்ட[1] அறிவுகளுக்கெல்லாம் தலையாய அறிவு என்கிறது. தன் பகைவர்களுக்கும் பொல்லாங்கைச் செய்யாம லிருக்கிறது என்றவாறு.

பொல்லாங்கு ஒருவருக்கும் செய்யலாகாது என்பதாம். ௩

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு

என்பது

பிறருக்குக் கேடு வரும் வினைய மறந்தும் நினைக்கவேண்டாம்; நினைத்தால் அவனுக்குத் தருமதேவதை கேடு நினைக்கும் என்றவாறு.

---

* தீவினையாகிய நெருப்போ மறுபிறப்பிலே பாதை பண்ணுகிறதினாலே — அச்சுநூல் பக்கம் 81 1. பயக்கும்

அறக்கடவுள் கேடு செய்தலாவது, தருமம் அவனைவிட்டு நீங்கும் என்பதாம். ௪

205 இலன் என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து
என்பது

தான் தரித்திரன் என்று நினைத்து அந்தத் தரித்திரம் தீர்கிற தற்காகப் பிறருக்குத் தீவினைகளைச் செய்யவேண்டாம்; தீவினையைச் செய்தால் பின்னையும் தரித்திரவான் என்றவாறு.

ஒரு பிறப்பிலே செய்த தீவினை ஏழேழு பிறப்பும் தொடரு மென்பதாம். ரு

206. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னையடல் வேண்டா தான்
என்பது

துன்பங்களைச் செய்யும் குற்றமாகிய பாவங்கள் தன்னை வருத்தாமல் இருக்க வேண்டும் என்றால், பொல்லாத காரியங் களைப் பிறருக்குத்தான் செய்யாமலிருக்க வேணுமென்றவாறு. சா

207. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்
என்பது

எப்படிப்பட்ட பகையுடையவர்களும் ஒருவகையால் தப்பிப் பிழைப்பார்கள்; தீவினையாகிய பகையுடையவரை அஃது எந்த விதத்திலேயும் தப்பாமல் பின் தொடர்ந்து சென்று கொல்லும் என்றவாறு. எ

208. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று
என்பது

பிறருக்குத் தீங்கு செய்தவர்கள் கெட்டுப் போகிறது எப்படி யென்றால், ஒருவனுடைய நிழல் அநேக தூரம் போனாலும்

அவனை விடாமல் வந்து அவனடியிலே அடங்குகிறாப் போலே என்றவாறு.

தீவினையும் செய்தவனை விடாமல் கூட இருந்து தன் காலம் வந்தபோது கெடுக்கும் என்பதாம். அ

209. தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்

என்பது

ஒருவன் தன்னைத்தான் வேண்டினவனானால் எந்த ஜீவனிடத்திலேயும் சற்றும் தீவினைகளைச் செய்யாமலும் நினையாமலும் இருக்கவேண்டு மென்றவாறு.

பிறருயிர்களுக்குத் தீங்கு செய்தால்தானே கெடுவான் என்பதாம். சு

210. அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்

என்பது

ஒருவன் பிறரிடங்களிலே போய் அவர்களுக்குத் தீங்கு செய்யாமலிருந்தால் அவனுக்குக் கேடில்லை என்றவாறு. ய

ஆக அதிகாரம் உயகக்குக்குறள் உளய

இப்பால் 22. ஒப்புரவறிதல்

என்பது, உலகத்திற் கேற்ற நடத்தையை அறிந்து செய்வது. உலக நடத்தையாவது, தருமசாஸ்திரங்களிலே சொல்லப்பட்ட தருமத்தின் வழியே நடப்பதென்பதாம்.

211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு

என்பது

உலகத்திற்கு மழைபெய்து இரக்ஷிக்கின்ற மேகங்களைப் போல ஒருவனுக்குச் செய்கிற உபகாரத்திற்குப் பிரதியுபகாரம் அவன் செய்ய வேணுமென்று நினையாமல் செய்கிறதே உபகாரம் என்றவாறு.

செய்த உபகாரத்திற்குப் பதில் உபகாரம் வேணுமென்று நினைத்தால் கடன் கொடுத்து வாங்குவது போலேயா மென்றவாறு. க

212. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்பது

நல்லவர்கள் நல்ல உத்தியோகங்களைப் பண்ணித் தேடின திரவிய மெல்லாம், சத்பாத்திரர்களாகிய முனிகளுக்கு[1] உபகாரம் செய்கிறதற்கு என்றவாறு.

முனீசுவரர்களுக்கு[2] உபகாரம் செய்யவே தமக்கு இன்பம் பெருகும் என்பதாம். உ

213. புத்தேள் உலகத்து மீண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற

என்பது

தேவ லோகத்திலே பிறந்த பேர் திரும்பவும் தேவலோகத்திலே பிறக்க மாட்டார்; அது ஏனென்றால் தேவருலகத்தில் ஏற்கிற பேருமில்லை; இடுகிற பேரும் இல்லை; எல்லாரும் சரியாயிருக்கிற படியினாலே தான தருமங்களைப் பண்ணுகிறதில்லை; தான தருமங்களைப் பண்ணின பேர்களுக்கல்லாமல் மற்றப் பேர்களுக்குத் தேவ லோகம் இல்லை யானபடியினாலே, பூலோகத்திலே பிறந்தவர்கள் தானதருமங்களைப் பண்ண வேணும் என்றவாறு. ங

214. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்

என்பது

உலக வியற்கையை யறிந்து நடக்கின்றவனே உயிருடனே இருக்கிறவன்; உலகவியற்கையை அறிந்து நடவாதவன் பிராண

1. கையெழுத்துச் சுவடியில் 'சத்பாத்திரர்களாகிய முனிகளுக்கு' என்பது அடிக்கப்பட்டுப் 'பிறருக்கு' என்றும் 2. 'முனிசுவரர்களுக்கு' என்பது அடிக்கப்பட்டுப் 'பிறருக்கு' என்றும் எழுதப்பட்டுள்ளது.

னுடனே இருந்தாலும் செத்துப் போனவர்களோடு ஒப்பான் என்றவாறு ௪

215. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

என்பது

உலக இயற்கை யினை அறிந்து செய்யப்பட்ட அறிவினை யுடையவன் செல்வம், ஊரிலே இருக்கிற பேர் எல்லாராலும் மொள்ளப்பட்ட நல்ல தண்ணீர்க் குளம் நிறைந்தாற் போலும் என்றவாறு.

அறிவுடையவன் செல்வம் பாழ் போகாமல் எல்லாருக்கும் உதவும் என்பதாம். ௫

216. பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்

என்பது

பயன் கொடுக்கிற மரம் ஊர் நடுவே யிருந்து பழுத்தாற் போலும், அறிவுடையவர் பலருக்கும் உதவும் செல்வம் என்றவாறு.

அறிவுடையவன் செல்வம் எல்லாருக்கும் எளிதாய்ப் பயன் கொடுக்கும் என்பதாம். ௬

217. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்

என்பது

அறிவுடையவனுக்கு ஐசுவரியம் வந்தால் எல்லாருடைய உபத்திரவங்களையும் தீர்ப்பான், வியாதிகளைத் தீர்க்கும் மருந்து மரத்தைப் போல என்றவாறு. ௭

218, இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்

என்பது

ஆகமப் பொருளின் தன்மையை அறிந்து குற்றத்தின் நீங்கிய நற்காட்சியை யுடையவர்[1], தகுதியில்லாத காலத்தும் தான தருமம் செய்யத் தளரார் என்றவாறு. அ

219. நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயு நீர்மை
செய்யா தமைகலா வாறு

என்பது

நயங்களது வளமை யறிந்தவன் தனக்குப் பெரியதும் ஐசுவரியம் இல்லாதது பூர்வத்தில் ஒரு நிலைமையுடன் அநேக விதப் புண்ணியம் செய்யாதது என்றறிந்து வருந்தாது விவேகத்துடனே யிருப்பான் என்றவாறு.

உலக வியற்கையை அறிந்து செய்யாதவர்கள் செல்வமுடையவராயிருந்தாலும் தரித்திரவான்களா வார்கள் என்றவாறு. சு

220. ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து

என்பது

ஒப்புரவாகிய உலக வியற்கையைச் செய்தலினாலே ஐசுவரிய மெல்லாம் போய்த் தரித்திரம் வரும் என்று சொன்னாலும், அந்த ஒப்புரவை விடாமல் செய்ய வேண்டுமென்றவாறு.

தரித்திரனாய் ஒரு பொருளுமில்லா விட்டாலும் தன்னை விற்றுக் கொண்டாகிலும் உலக வியற்கையான காரியங்களைச் செய்ய வேணும் என்பதாம். ய

ஆக அதிகாரம் உயஉக்குக்குறள் உளஉய

இப்பால் 23. ஈகை

என்பது, தரித்திரராய் வந்து ஏற்கிறவர்களுக்கு இல்லை என்னாமல் தானம் கொடுக்கிறது.

1. குறிப்புரை - குறள் 174 காண்க

221. வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து

என்பது

தரித்திர ரான பேர்கள் கேட்ட பொருளை அவர்களுக்குக் கொடுக்கிறதே பிறர்க்குக் கொடுக்கிறதாகிறது; அஃதல்லாமல் ஐசுவரிய வான்களுக்குக்கொடுக்கிற தெல்லாம் தான் கொடுத்ததைப் பார்க்கிலும் அதிகமாய் வாங்கிக் கொள்ள வேண்டி என்றவாறு. க

222. நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று

என்பது

ஏற்கிறது மேலுலகத்திற்கு நன்றென்று சொல்வாராயினும் ஏற்கிறது பொல்லாது என்பது; கொடுக்கிறவர்களுக்குத் தெய்வ லோகம் இன்று என்று சொல்பவர் உண்டாயினும் கொடுப்பதே நன்மையும் தன்மமுமாம் என்றவாறு

'சிலபிரதிகளில் நல்லார் என்று பாடங்கொண்டு பின்வரும் உரை உளது' (உரை[1] காகிதப் பிரதியில் தரப்படவில்லை) மேலும் மேற்கண்டவை முழுமையாக அடிக்கப்பட்டுப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:—

ஏற்கிறது மேலுகத்திற்கு நல்லதென்று சொல்லுகிறவர்கள் உண்டானாலும் கொடுக்கிறதே நல்லதென்றவாறு. மற்ற தர்மங்கள் எல்லாவற்றிலும் கொடுக்கிறதே நல்லதர்மம் என்றதாம். உ

223. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள

என்பது

ஞான தியானம் பொருள் பந்துக்கள் முதலியன இல்லையே எனத் துன்பத்தோடு மொழியாத தன்மை ஈகையினாலே வரும்; அதுவும் உயர்ந்த குலமுடையவர்களிடமே யுளது என்றவாறு.

1. அவ்வுரையைக் குறிப்புரையில் காண்க

உயர்ந்த குலமுடைய வீட்டில் பிறந்து அதிதி[1]களுக்கு[ஷி] தானம் கொடுத்தால் ஐசுவரியத்தோடே ஞானம் கிடைக்கும்; அவர்களுக்குக் குறைச்சல் எதுவும் இல்லை என்பதாம். கூ

224. இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணு மளவு

என்பது

*கருணையுடைய இனிய முகத்தினின்று கூறும் தருமவசன முடைய அதிதி[1]வருமளவும் பரிதாப[2] முடையவர் போலே மன மிரங்கக் காட்டி, முனிகள் வந்தால் பக்தியில்லாது இருக்கிறது பொல்லாங்கு என்றவாறு.

பிறர் மெச்ச மாயத்தால் காட்டுகின்றது பாவமும் துர்க்கதி யுமாம் என்பதாம்.*

குறிப்பு: *முதல் *வரை அடிக்கப்பட்டுப் பின்வருமாறு காகிதச் சுவடியில் எழுதப்பட்டுள்ளது: —

இரக்கிறது பொல்லாதென்று சொல்லுவர்கள் இரக்கிறவர் களுடைய முகத்தைக் கண்டவிடத்திலேயே யென்றவாறு. இரக் கிறவர்களும் இரக்கிறது பொல்லாதென்று சொல்லுவர்கள் தான் கேட்ட பொருள் வருமளவு மென்பதாம்.

225. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலின் பின்

*[என்பது

தபம் பண்ணுகிற வர்களுக்கு வலிமையாவது, உபவாசம் இருந்து பசிப்பிணியைப் பொறுக்கிறது; அத்தகைய உத்தமர் களுக்குக் கொடுத்த தானபுண்ணியத்திற்குப் பிறகே மற்றத் தருமங்கள் என்றவாறு]*

---

1. அதிதி-புதியவர் 2. இரக்கம்

* முதல் * வரை: காகிதச்சுவடியில் உரையில்லை: அச்சுநூலிற் கண்டு எழுதியவை.

தவற்றாற்றவசு[1] பண்ணுகிறவர்களுக்கு வலுமையாவது, தம்முடைய பசியைப் பொறுக்கிறது; அந்த வலுமையும் பொறுக்கிறத்துக்கு[2] அருமையாயிருக்கிற பசியைக் கெடுக்கிறத்தினாலே[3] போக்கடிக்கப்பட்டவர்களுடைய வலுமைக்குப் பிறகென்றவாறு. தாங்களும் பசித்துப் பிறருடைய பசியையுந் தீர்க்கமாட்டாதவர்கள் வலுமையைப் பார்க்கிலுந் தாங்களும் பசியாமற் பிறர் பசியையுந் தீர்க்கிறவர்கள் வலுமையே நன்றென்றவாறு.

*(உத்தமதானம் கிடைப்பது மஹாதுர்லபம்; அப்படிக் கிடைத்தால் மோக்ஷம் தவறாது. ஆதலால் மேன்மை எல்பதாம்.)*

226. அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

என்பது

துறந்தவர்களிட[4] பசியைத் தன்பொருளைக் கொடுத்துத் தீர்த்தால் அவன் தேடின பொருள் கெட்டுப்போகாமற் பதனம் பண்ணி வைத்துக் கொள்ளுகிறது[5] என்றவாறு.

227. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டல் அரிது

என்பது

எந்நாளும் பசித்தவர்களுக்கு அன்னமிட்டுப் பிறகு தான் சாப்பிடுகிறவனை எந்நாளும் பசியும்[6] வியாதியுந் தீண்டாதென்றவாறு.

---

1 தவத்தால் தபசு என்று படிக்க

2. பொறுக்கிறதற்கு

3. கெடுக்கிறதினாலே

* முதல் வரை : காகிதச்சுவடியில் இல்லை, அச்சுநூலிற் கண்டவை

4. துறந்தவர்களுடைய என்க; இதற்குமுன் 'பற்றறத்' என்பது அச்சுநூலில் உள்ளது 5. 'மறுஜென்மத்துக்காகின்றது' என்பது அச்சுநூலில் ஆகும்.

6. பசியாகிற கொடிய என்பது அச்சுநூல்

பசியுடம்பிலே யிருந்தால் ஞான வொழுக்கங்களையு மறிவையுங்[1] கெடுக்குமென்பதாம் எ

228. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்

என்பது

தம்முடைய பொருளைப் புதைத்து வைத்து இழந்துபோனவர்கள் அறிவுந்தயையு மில்லாதவர்களாய்த் தரித்திரர்களுக்குத்[2] தாங்கள் தேடின பொருளைக் கொடுத்து அதனால் வருஞ் சுகத்தை யனுபவிக்கிறவர்களைக் கண்டறியார்க ளென்றவாறு.

அறத்தாற்றாமுமப்படியே கொடுத்து இன்பத்தை யெய்துவர்களென்பதாம். அ

229. இரத்தலி னின்னாது மன்ற நிரம்பிய[3]
தாமே தமிய ருணல்

என்பது

பொருட்குறை நிறையவேணு மென்று தரித்திரராயிருக்கிற பேர்களுக்குக் கொடாது தான் தேடிய பொருளைச் சும்மாய் வைக்கிறது. இரக்கிறத்திலும்[4] பொல்லா தென்றவாறு.

இரக்கிறவர்களுக்கு நல்குரவான தரித்திரமில்லை; சுற்றத் தாருண்டு பொருளைத்தேடிப் புதைக்கிற பேருக்குத் தரித்திர முண்டு; சுற்றத்தாரில்லை யென்றவாறு. சு

230. சாதலி னின்னாத தில்லை யிஃரிததூஉ
மீத லியையாக் கடை

என்பது

ஒருவற்குச் சாகிறத்தைப்போலப் பொல்லாதது வேறொன் றில்லை; அந்தச் சாவுந் தரித்திரருக்கு[1] ஒருபொருளைக் கொடுக்க மாட்டா விட்டா லப்பொழுது சாகிறது நல்லதா யிருக்கு மென்ற வாறு.

---

1. அது
2. 'அதிதிபுத்திரர்களுக்கு' என்பது அச்சுநூல்
3. 'நிரப்பிய' என்பது பிறர்பாடம்
4. இரக்கிறதிலும்

பிறருக்கு உபகாரம் பண்ணாத வுடம்பை விடுகிறதே நல்ல தென்பதாம்.
௰

ஆக அதிகாரம் உயஉக்குக் குறள் உஉய

இப்பால் 24. புகழ்

என்பது, இல்வாட்கை[1] முதலாக ஈகை இறுதியாகச் சொல்லப் பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப் பயனாகவே உலகத்திலே விளங்கப்பட்ட கீர்த்தி என்பதாம். கீர்த்தி பெரியோர்களால் கொண்டாடப் பெறுவது.

231. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதியம் இல்லை உயிர்க்கு

என்பது

தான் தேடிய பொருளை அதிதி, யதி, புத்திரர் தருமம் முதலான வற்றிற்குக் கொடுத்துக் கீர்த்தியுடனே வாழ்கிறது மனுஷ ஜீவன்களுக்குப் பலனாம் என்றவாறு.

அப்படி யில்லாவிட்டால் தருமத்துரோகமாய் இலாபமும் இல்லாது போகும் என்றவாறு.

குறிப்பு: மேலே கூறப்பட்ட உரை முழுவதும் அடிக்கப் பட்டு 'தரித்திர ரான பேருக்குப் பொருளைக் கொடுத்துக் கீர்த்தி யுடனே வாழ்கிறது மனுஷ ஜீவன்களுக்குப் பலனாகிறது. அதல் லாமல் பேறொன்றில்லை என்றவாறு'' என்று எழுதப் பட்டுள்ளது.
க

232. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்தும் புகழ்

என்பது

லோகத்தார் சொல்லுகிற சொல் லெல்லாந் தரித்திரரா யிருக் கிற பேருக்கு அவர் கேட்ட பொருளைக் கொடுக்கிறவர்களுக்கே

1. அதிதிபுத்திரர்களுக்கு - என்பது அச்சுநூல்
2. இல்வாழ்க்கை என்க

கீர்த்தியா மென்றவாறு. கீர்த்தியாகிறது பலருங் கொண்டாடு கிற மதென்பது.[1] உ

233. ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்

என்பது

பெரிதான உலகத்திலே பிரகாசமான கீர்த்தி பெறுகிறது அல்லாமல் பின்னை யொரு பொருளும் போகாமல் நிற்கிற தில்லை யென்றவாறு.[2] ங

234. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு

என்பது

ஒருவன் பூமியிலே பெரியதாகியதாய்க் கெடாமலிருக்கப் பட்டத்தைச்[3] செய்தானாகில் தேவலோக மவனை யல்லாமல் ஞானிகளைப் போற்றா தென்றவாறு.

புகழுடையவனுக்கு இவ்வுலகத்திலே கீர்த்தி யுண்டான படியினாலே தேவலோகத்திலேயும் போகமுண்டா மென்பதாம்.[4] ச

2 5. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது

என்பது

புகழுடையவர்களுக்கு அரிதாகிய கேடுஞ் சாக்காடு முண்டானாலும் அறிவுடையவர்கள் ராத்திரிப் பொழுது போலே நிலையல்ல வென்றெண்ணுவார்களென்றவாறு.

அறிவுடையவர்கள் செல்வத்தையும் தரித்திரத்தையும் நிச்சயமென்று நினையார்களென்றவாறு.[5] ரு

1. குறிப்புரையில், அச்சுநூல் உரைகாண்க.
2. அச்சுநூலுரை - குறிப்புரையில் காண்க
3. பட்டதை
4. அச்சுநூலுரை - குறிப்புரையில் காண்க
5. அச்சுநூலுரை - குறிப்புரையிற்காண்க

236. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று

என்பது

மனுஷனாகப் பிறந்தால் கீர்த்திக் கேதுவாகிய குணத்தோடுங் கூடப் பிறக்கவேணும்; அந்த நற்குணமில்லாத பேர் மனுஷனாக பிறக்கிறதிலும் விலங்காய்ப் பிறக்கிறது நல்லதென்றவாறு.

மனுஷனை நற்குணமில்லாவிட்டால் இகழ்ந்து பேசுவார்கள், விலங்குசாதியாய்ப் பிறந்தாலிகழார்களென்பதாம். ௬

237. புகழ்பட வாழாதார் தந்நோவார்[1] தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்

என்பது

தமக்குப் புகழுண்டாக வாழமாட்டாதவர்கள் தம்மை யிகழ்கின்றவர்களை நாம் கீர்த்தி தேடிக்கொள்ள மாட்டாத படியினாலே நம்மையிகழ்கிறார்க ளென்று தம்மைத்தாம் நொந்து கொள்ளாதே தம்மை யிகழ்கிறவர்களை நோகிற தென்ன காரியங்கண் டென்றவாறு.

புகழ் பெறலாயிருக்க அது பெறமாட்டாத படியினாலே யிகழ்வார்களென்பதாம் ௭

238. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறாஅ விடின்

என்பது

புகழென்னும் பிள்ளையைப் பெறலாயிருக்க அந்தப் புகழைப் பெறமாட்டா விட்டால் உலகத்தார்க் கெல்லாம் அதுதானே குற்றமாயிருக்கு மென்றவாறு. ௮

239. வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்

என்பது

1. தந்நோவார் என்பதே சரியான பாடம்

புகழில்லாதவ னுடம்பைச் சுமந்த நிலம் பழிப்பில்லாத விளைவு குன்றிக் கெடு மென்றவாறு,

விளைவு குன்றிக் கெடுதற்குக் காரணம், பாவியாகிறவன் சரீரத்தைச் சுமக்கிறோ மென்கிற வெறுப்பினாலே நன்றாய் விளையா தென்பதாம். கூ

240. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்

என்பது

தங்களுக்குக் குற்றம் வராமற் பார்த்துக் கொண்டு கீர்த்தி யுண்டாக வாழ்கிறவர்களே வாழ்கிறவர்கள்; கீர்த்தியில்லாமல் அபகீர்த்தியுடனே வாழ்கிறவர்களே செத்தவர்க ளென்றவாறு

குற்றம் வாராது கீர்த்தியுண்டாகவே; கீர்த்தி யுண்டானால் இம்மையிலே பெண்ணிக்கையும் மறுமையிலே தேவலோக[1]மு முண்டாம்; சகலமான தர்மங்களிலேயுங், கொடுக்கிறதே பெரிய தென்பதாம் ய

இல்லற வியன் முற்றும்

ஆக அதிகாரம் உய-க்குக் குறள் உஎசய

இப்பால் துறவறம் 25, அருளுடைமை என்பது இனித் துறவறம் சொல்லுகிறார். துறவறமாவது, முன் சொன்ன இல்லறத்தின் வழியே தப்பாமல் நடந்து, அறிவுடையவர்களாய்ப் பிறந்திறக் கிறத்துக்கு[2] பயப்பட்டு மோட்சம் பெறுகிறத்தின்[3] பொருட்டுத் துறவறத்துக்குரிய[4] தான தர்மம், அது கர்மம் கெடுக்கிறதின் பொருட்டு அவர்களாலே காக்கப்பட்ட விரதம்; அது இன்ன தர்மஞ் செய்ய வேணுமென்றும் இன்ன பாவஞ் செய்யாம லிருக்க வேணு மென்றுமாம், அந்த விரதங்களாலே ஞான முண்டாய் வீடு பெறலாம். அந்த விரதங்கள் அநேக மாதலின் அதிலே[5] சிறப்புடையன சிறிதெடுத்துக் கொண்டு முதல் அருளு டைமை கூறுகின்றான். அருளாவது, ஒருவரிடத்திலே ஆசை

1. தேவபோகம் என்பது அச்சு நூல்

2. இறக்கிறதற்கு 3. மெலுகிறதின் 4. துறக்கிறவர்களுக்கு என்பது அச்சு நூல் 5. அவற்றுள்

வையாமலெல்லாச் சீவன்கள் பேரிலேயும் சுபாவமா யுண்டாகிய கருணை. அது இல்லறத்திற்கு அன்புடைமை போலத் துறவறத்திற்கு அருளுடைமை பெரியதாதலால் முன்னே சொல்லப்பட்டது.

241. அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள

என்பது

செல்வங்களுக் கெல்லாம் தேடி எடுக்கப்பட்ட செல்வம் அருட் செல்வ மாகிய தயையே; அஃதல்லாத பொருட்களால் வரும் செல்வம் நீசரிடத்திலேயும் உண்டு என்றவாறு.

அருட் செல்வமாவது, சகல சீவன்களிடத்திலேயும் தயை யுண்டாயிருக்கிறது. அதுவும் பெரியவர்களிடத்திலே யுண்டாம் பொருட் செல்வம் சிறந்த தல்ல என்றவாறு. க

242. நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினு மஃதே துணை

என்பது

நல்ல வகையாலே தயையைத் தேடிக் கொள்ள வேண்டும்; பற்பல விதங்களாலே ஆராய்ந்து பார்த்தாலும் அந்த அருளென்கிற தயையே துணை என்றவாறு.

இம்மை மறுமையினும் உயிரை விட்டு நீங்காத படியினாலே துணை யென்பது. உ

243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல்

என்பது

தயையுடனே கூடியிருக்கிற நெஞ்சை யுடையவர்கள் இருளாயிருக்கப்பட்ட பொல்லாத நரகத்திலே போற[1]தில்லை யென்றவாறு. ஙு

---

1. போகிற

244. மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை

என்பது

நித்தியமா யிருக்கிற சீவன்கள்மேல் தயையை வைத்து நடக்கிற வர்களுக்குத் தங்கள் சீவன் பயப்படத் தக்க பாபங்கள் உண்டாகா என்றவாறு ச

245. அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி

என்பது

அருளுடையவர்களுக்கு இம்மை மறுமை இரண்டிலேயும் ஒரு துக்கமும் உண்டாகாது. அதற்குக் காரணம் காற்றுப் பாவப்பட்ட பெரிய பூமியிலே வாழ்கிறவர்களும் அருகனும்[1] சாட்சி யென்றவாறு.

இம்மைக்கு உலகிலுள்ள சான்றோரும் மறுமைக்குத் திரிகால ஞானியாகிய அருகனும் சாட்சி

குறிப்பு: மேலே இங்குக் கீழ்க்கோடிட்டவை காகிதச் சுவடியில் அடிக்கப்பட்டுள்ளன. மேலும் ''வாழ்கிறவர்களும் அருகனும்'' என்ற இடத்தில் ''அவர்களே'' என்றுளது. ரு

246. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்

என்பது

சீவன்களிடத்திலே செய்யப்பட்ட தயையை விட்டுத் தீவிரத் துக்கக் கொடுமைகளை[2]ச் செய்கிறவர்களை முந்தின ஜென்மத்திலே தமக்குறுதியான தருமங்களைச் செய்யாமல் துக்கப்படுகிறதை மறந்தவர்கள் என்று சொல்லுவார்கள் அறிவுள்ளவர்கள் என்றவாறு. சா

1. அருகன்: பவண, வியந்தர, ஜோதிஷ்க கல்பவாசிகள் முதலான வர்களால் பூஜிப்பதற்குரியனாதலால் அருகன் என்பது (பக்கம் 110 திருக்குறள் ஆராய்ச்சி)

2. 'தவிரத்தக்க கொடுமைகளை' என்று காகிதச் சுவடியில் திருத்தப்பட்டுள்ளது.

247. அருளில்லார்க்* கவ்வுலகம் இல்லை பொருள்இல்லார்க்*
இவ்வுலகம் இல்லாகி யாங்கு
என்பது

சீவன்கள் மேலே அருள் இல்லாதவர்களுக்கு வீட்டுலகத்தின் இன்பமில்லை, பொருளில்லாதார்க்கு இந்த உலகத்திலே இன்பமில்லை யானாற்போல் என்றவாறு.

இவ்வுலகத்தின்பத்திற்குப் பொருள் காரணமானாற்போல, அவ்வுலகத்தின்பங்களுக்கு அருள் காரணம் என்றவாறு. எ

248. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது
என்பது

முன்செய்த தீவினையால் தரித்திரரான பேர்கள் அந்தத் தரித்திரம் போய்ப் பிறகு ஒரு காலத்திலே ஐசுவரியவான்களாவார்கள்; அருளில்லாதவர்கள் பாவந்தொலையாமல் அழிந்து நரகத்திற் போகிறதல்லாமல் பின்னையொருகாலத்திலும் பாபம் போய்ப் புண்ணிய வான்களாகிறது அருமை என்றவாறு. அ

249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரின்
அருளாதான் செய்யு மறம்
என்பது

சீவன்க ளிடத்திலே தயை யில்லாதவன் செய்கிற தருமத்தை ஆராய்ந்து பார்த்தால் சமயக்* ஞானம் இல்லாதவன் நிச்சயமாயிருக்கிற சீவன்முதலிய ஆறு வித* வஸ்து[1] ஸ்வரூபத்தைச் சொன்னாற்போலும் என்றவாறு.

ஞானமில்லாதவன் ஒருபொருளை அறிந்தால் அதனைத்திட ஞான மில்லாதபடியினாலே தானே அழித்து விடுவன்; அப்படிப் போல அருளில்லாதவன் செய்த தருமமும் அவனுக்குத் தயை யில்லாத படியினாலே தானே அழித்துப் போடுவான் என்பதாம்.

* அருளலார்க்'' என்பது பிறர் கொண்ட பாடம்.

* கோடிடப்பட்டவை காகிதச் சுவடியில் அடிக்கப் பட்டுள்ளன

1. குறிப்புரை காண்க

ஆகவே சகல தருமங்களுக்கும் தயையே முந்தின தருமமென்ற வாறு. க

250. வலியார்முற் றன்னை நினைக்க நான்தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து

என்பது

தன்னினும் பலவானானவன் தன்னை வாதை பண்ண வருகிற போது அவர்கள் முன்னே தான் பயப்பட்டு நிற்கிற நிலையை நினைத்துக் கொள்ள வேண்டும், தான் தன்னிலும் ஏழையான பேரை வாதை பண்ணப்போகிற போது என்றவாறு. அதன் நடுக்கத்தை நினைத்தால் எதிராளிக்கும் இப்படி யல்லவோ இருக்கும் என்று தயையுண்டாம். ய

ஆக அதிகாரம் உயிருக்குக்குறள் உள ருய

இப்பால் 26. புலால் மறுத்தல்

என்பது மாங்கிசம்[1] தின்கிறதை விட்டுவிடுகிறது. மாங்கிசம் சீவன்களைக் கொல்லாமல் வாராது; சீவன்களைக் கொல்லுகிற வர்களுக்குத் தயை யென்பதிராது. தயையில்லாதவன் என்ன தர்மம் பண்ணினாலும் ஒரு பலனு மில்லாமல் சாம்பலிலே வார்த்த நெய்போலாம் என்பதாம்,

251. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை யூன்றின்ப வர்க்கு*

என்பது

பொருளினால் பலன் கொள்ளுகிறவர்களுக்கு அந்தப் பொருளைக் காத்து ரக்ஷியா விட்டால் பலனில்லை; அதுபோல அருளினால் பலனாகிய நற்கதி யடைய வேணுமென்றவர்கள் மாங்கிசம் தின்னாமல் இருக்க வேணும். மாங்கிசம் தின்றால் தயையும் நற்கதியும் இல்லாமற் போகுமென்றவாறு. க

1. மாமிசம் - ஊன்

* பரிமேலழகர் உரையில் இது 252 ஆம் குறள்.

252. தன்னூன் பெருக்கற்குத் தான் பிறி தூனுண்பா
னெங்ஙனம் ஆளும் அருள்*

என்பது

தன்னுடம்பு பெருக்கிறதற்காகத் தான் பின்னையொரு சீவனுடைய சரீரத்தைத் தின்கிறவன் எப்படித் தயையுடையவனாகப் போகிறான்? ஒருபலனு மில்லாத வுடம்பைப் பருக்க வேண்டுமென்று கொடிதான பாபங்களைச் செய்கிறவனே அறிவில்லாதவன் என்றவாறு. ௨

253. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்றின்
உடல்சுவை யுண்டார் மனம்

என்பது

கொல்லத்தக்க ஆயுதத்தைக் கையிலே பிடித்தவர் மனசு அந்த ஆயுதத்தாலே செய்யப்பட்ட கொலையையே செய்யப் பார்க்கு மல்லாமல் தயையைப் பாராது; அதுபோல ஒரு சீவன் உடம்பைத் தின்றவன் மனது மாங்கிசத்தினையே தின்ன வேணு மென்று எண்ணுகிற தல்லது தயையை நினையாது என்றவாறு. ௩

254. அருளல்லதி யாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்

என்பது

தயை யாகிறது ஏதென்றால் ஒரு சீவனையும் கொல்லாமல் இருக்கிறது; அருளல்லாதது ஏதென்றால் சீவன்களைக் கொல்லு கிறது; கொன்ற சீவன்களுடைய மாங்கிசங்களைத் தின்கிறதே பாவமென்றவாறு. ௪

255. உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு

என்பது

மாங்கிசங்களைத் தின்னாமலிக்கிறதே தருமம்; அந்தத் தரும முண்டானவன் மறுசன்மத்திலே வியாதியில்லாத நல்ல

* பரிமேலழகருரைப்படி இது 251 ஆம் குறள்

சரீரத்தை எடுத்துச் சுகமாயிருப்பான்; மாங்கிசங்களைத் தின்கிற பேர் வியாதியையும் துர்க்கந்தங்களையு முடைய சரீரங்களை யெடுத்து நரகத்திலே வெகு கோடிகாலம் வாதைப்படுவார்கள்; ஒரு காலத்திலேயும் நரகத்தைவிட்டு வரமாட்டார்கள் என்ற வாறு. ரு

256. தினற்பொருட்டாற் கொள்ளா[1] துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்

மாங்கிசத்தைத் தின்னுகிற நிமித்தமாக உலகத்தார் கொள்ளாரென்றால் விற்கிற நிமித்தமாய் மாங்கிசங் கொண்டு வருகிற பேர்கள் ஒருத்தரும் இல்லை என்றவாறு.

தின்கிறபேர் இல்லாவிட்டால் கொல்லுவார்களுமில்லை என்பதாம். சு

257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்

என்பது

மாங்கிசத்தை ஒரு சீவனுடைய புண்ணென்றறிந்து அதனைத் தின்னாமலிருக்கிறவர்களே அறிவுடையவர்களும் புண்ணியவான்களும் ஆவர் என்றவாறு.

அந்த மாங்கிசத்தைத் தின்கிறவர்களே அறிவில்லாதவர்களும் பாபிகளும் ஆவர் என்பதாம். எ

258. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த வூன்

என்பது

மயக்க மாகிய குற்றத்தின் நீங்கிய நல்ல அறிவையுடையவர்கள் ஒருயிரினின்றும் வாங்கின மாங்கிசங்களைத் தின்னார்கள் என்றவாறு. அ

259. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று

என்பது

1. இது மணக்குடவர் பாடம்; கொல்லா என்பது பிறர் பாடம்

நெருப்பிலே நெய் முதலானவைகளை வார்த்து ஆயிரம் ஓமம் பண்ணினாலும் ஒரு சீவனைக் கொன்று அதனுடலைத் தின்னாம லிருக்கிறதே நன்மை என்றவாறு.

அந்த யாகங்களாலே வருகிற பலனிலும் கொல்லாத விரதத் தினாலே வருகிற பலன் அதிகம் என்பதாம். சூ

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிரும் தொழும்
என்பது

சீவனையும் கொல்லாதவனாய் மாங்கிசங்களைத் தின்னாதே என்ற ஜினனைச்[1] சகலமான சீவன்களும் கைகுவித்துத்தோத் திரம் பண்ணும் என்றவாறு.

கொல்லாததும் தின்னாததும் மாகிய இரண்டு விரதங் களுடையவர்களுக்கல்லது ஒன்றினாற் பலனில்லை; இந்த விரத முடையவன் மறுப்பிறப்பிலே தேவர்களைப் பார்க்கிலும் பெரிய சித்தனாம்[2] என்பதாம்.

[குறிப்பு: கோடிட்ட இடங்களில்(1) ''தின்னாதவனை'' என்றும் (2) பெரியவனாம் என்றும் காகிதச் சுவடியில் அடித்து எழுதப்பட்டுள்ளன.] ம

ஆ௪ அதிகாரம் உயசூக்குக்குறள் உளசூய.

இப்பால் 27. தவம்

என்பது, இந்திரியங்களின் வழியே மனசு போகாமல் நிற் கிறத்துக்காக[2] விரதங்களாலே பொசிக்கிற[3] வஸ்துக்களைக் குறைச்சுக்[4] கோடைக்காலத்திலே வெய்யிலிலே[5] நின்றும், மழைக் காலத்திலே மரத்தின் கீழே நின்றும் தவஞ்செய்தும், பனிக்காலத் திலே தண்ணீர்க்கரையிலே நின்றும் இது முதலான விரதங்களைக்

1. கர்மநிர்மூலம் செய்கையினால் ஜிநன் எனப்படுவர்; ஜெயிப்பவன் என்பது பொருள் (பக் 110, திருக்குறள் ஆராய்ச்சி)

2. நிற்கிறதற்கா. 3. புசிக்கிற 4. குறைத்துக் 5. பர்வதங்களின்மேல்

கெட்டியாய்க் காத்து அதனாலே தன்னிட[1] சீவனுக்கு வருகிற துக்கங்களைப் பொறுத்துப் பிறவுயிர்கள் மேலே தயையுடைய வர்களாயிருக்கிறது. இது சீவன்களைக் கொல்லாமலும் மாங்கி சங்களைத் தின்னாமலும் இருந்தாலல்லாது கூடாதென்பதாம்.

261. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு
என்பது

தவசாகிறது போசனங்கள்[2] முதலானதுகளை[3] விரதங் களாலே குறைக்கிறதும், பிறவுயிர்களுக்குத் தீங்கு செய்யாமை யுமா மென்றவாறு. க

262. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது
என்பது

தவசு பண்ணிக் கொள்ளுகிறதும் முந்தின சென்மத்திலே தவசு பண்ணின பேர்களுக்கே கூடும்; அந்தத் தவசும் முன் புண்ணிய மில்லாத பேர் செய்யப்போனால் அவத்தமாய்[4] போ மென்ற வாறு.

புண்ணிய முண்டாகவே யெல்லா நன்மைகளும் வருமென்ப தாம்.
உ

263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்
என்பது

இல்லறத்திலே இருக்கிற பேர் துறந்தவர்களுக்கு அசனமும்[5] மருந்தும் இருப்பிடமும் கொடுக்க வேண்டுமென்று தாங்கள் தபசு பண்ணுகிறதை மறந்தார்கள் போலும் என்றவாறு.

264. ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும்
என்பது

1. தன்னுடைய 2. உண்டல் 3. முதலானவைகளை. 4. அபத்தம் - பொய் 5. உணவும்

தங்கள் தவத்திற்குப் பகையாய் அழிவுசெய்தார் கேடுறுதலும் அந்தத் தவசுக்குச் சந்தோஷப்பட்டவர்கள்ரக்ஷிக்கப்படுதலும்* ஆராயின்அந்தத் தவத்தால் வரும் முற்றுந்துறந்த மகா முனிகளுக்கு இகழ்தலும் புகழ்தலும் ஒன்றே யாதலின் அவர்கள் இகழ்ந்தாரைக் கெடுக்கவும் புகழ்ந்தாரை ரஷிக்கவும்[1] நினையார். ஏனெனில் அவர்கள் உத்தம க்ஷமை முதலிய பரிணாமங்களாகிய[2] பத்துத் தர்ம[3] குணங்களோடு பொருந்தி மோக்ஷத்தை அடைவிக்கும் தவசில் நிற்பதாம் என்றவாறு.

[குறிப்பு : மேல்கோடிட்ட 'தங்கள்'* என்பதுமுதல் ''ரக்ஷிக்கப்படுதலும்*'' என்பது வரை பின்வருமாறு காகிதச் சுவடியில் மாற்றி யமைக்கப்பட்டுள்ளது;.

''தாங்கள் தவத்திற்குப் பகையாய் அழிவு செய்தாரைக் கெடுக்கவும் அந்தத் தவசுக்குச் சந்தோஷப் பட்டவர்களை ரக்ஷிக்கவும் நினைத்தாலவர்கள் தவசுபலத்தினாலே அவர்களுக்குண்டாமென்றவாறு. மேலும் * ''ஆராயின்'' என்றது முதல் எஞ்சிய பகுதிமுழுவதும் அடிக்கப்பட்டுள்ளது.]

௯

265. வேண்டிய வேண்டி ாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்

என்பது

தபசு பண்ணுகிறவர்கள் வேண்டிய வேண்டியபடியே மறுமையிலே பெறலாம்; ஆனபடியினாலே செய்ய வேண்டிய தபசை இம்மையிலே செய்யவேண்டும் என்றவாறு.

மேற்கதி மோக்ஷம் தபசினாலே யல்லாமல் பெறலாகாதென்பதாம்.

௱

266. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு

என்பது

துறந்து தபசு பண்ணுகிறவர்களே தங்கள் கருமம் செய்கிறவர்கள்; அதல்லாமல் பொருளின்பங்களைச் செய்கிறவர்கள்

1. காக்கவும் 2. வேற்றுமைகளையுடைய 3. குறிப்புரை காண்க.

பொருளின்பங்களின் ஆசையாகிற வலையிலே அகப்பட்டுத் தங்களுக்குக் கேடு செய்து கொள்ளுவார்கள் என்றவாறு.

அநித்தியமாகிய[1] சரீரத்திற்கு வருத்தம் வருமென்றுபயப் படாமல் தபம் செய்தால் பிறப்புப்பிணி மூப்புச் சாவுகளால் துக்கமடைந்து வருகிற வுயிர் தபசினாலே ஞானம் பிறந்து வீடு பெறும் என்பதாம். சு

267. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

என்பது

நெருப்பிலே பொன்னைச் சுட்டாற் றன்னோடு கூடிய குற்றம் நீங்கி யொளி மிகுத்தவாறு போலத் தவசு பண்ண வல்லவர்களுக்குச் சரீரம் வருந்தினாற்[2] றங்களோடே கூடின பாவங்கள் நீங்கி ஞான மிகு மென்றவாறு. எ

268. தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்

என்பது

தன்னுயிரைத் தனக்குரித்தாகப் பெற்றவனை யுலகத்திலே யுண்டான சீவன்க ளெல்லாந் தோத்திரம் பண்ணு மென்றவாறு.

தன்னுயிரைத் தனக்குரித்தாகப் பெறுதலாவது, தவமாகிய தன் கருமஞ் செய்தல்;[3] அதிலும் பெரிய காரியமில்லை. தவசு பண்ணினால் சீவனை வருத்தப்படாமல் சுபத்தை யடையும்;[4] தவசினாலே சாபமும் அனுக்கிரகமு முண்டா மாதலால் எல்லாரும் வணங்குவார்களென்பதாயிற்று. அ

---

1. நிலையாததாகிய

2. 'சரீரம் வருந்தினால்' என்ற விடத்தில், அச்சுநூலில் 'சுக்கிலத் தியானம் என்ற பெருந்தீயினால்' என்பவை உள்ளன (குறிப்புரை காண்க

3. இவ்வாக்கியத்துக்குப்பதில் 'தபத்தின் முக்கியத்தினால் கருமம் செய்தல்' என்பது அச்சுநூல்

4. சீவனைத்துர்க்கதி போகாமல் சுபகதி அடைவிக்கும் - என்பது அச்சுநூல்.

269. கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு

என்பது

கூற்றுவனாகிய யமனைக் கடந்து போக வேணுமென்றாலுங் கடந்து போகலாம், தவசுலே தலைப்பட்டு நல்ல தவசு பண்ணு கிறவர்களுக் கென்றவாறு. கூ

270 இலர்பல ராகிய காரணம் நோற்பார
சிலர்பலர் நோலா தவர்

என்பது

உலகத்திலே தரித்திரவான்கள் அதிகமாக இருக்கிறதும் ஐஸ்வரிய வான்கள் கொஞ்சமாயிருக்கிறதும் ஏனென்றால், தவசு பண்ணுகிறவர்கள் கொஞ்சமும் தபசு பண்ணாத வர்கள் அதிகமுமாம்; ஆனபடியினாலே தபசு பண்ணுகிறவர்க ளெல்லாம் ஐஸ்வரிய வான்களாய்ப் பிறக்கிறார்கள்: தபசு பண் ணாதவர்கள் எல்லாரும் தரித்திர ராகப் பிறப்பார்கள் என்ற வாறு.

தபசு பண்ணாதவர்களுக்கு இம்மையிலே சம்சார துக்கமும் மறுமையிலே பிறவித் துன்பமும் உண்டு. ய

ஆக அதிகாரம் உ௰எ; குறள் உளஎ௰.

இப்பால் 28. கூடாவொழுக்கம்

என்பது, தாங்கள் விட்ட காம வின்பத்தைப் பின்னையும் விரும்பி அதன் மேலே நினைவாய்த் தபசை மனது சுத்தமாகப் பண்ணாமல் இருக்கிறது.

271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளஞ்சு மனத்தே[1] நகும்

என்பது

1. ஆசைப்பட்டால் என்பது அச்சு நூல்

மனதிலே கபடம் வைத்துக்கொண்டு கள்ளாசாரம் பண்ணி நடக்கிறவனை அவன் சரீரத்திலே யிருக்கிற பஞ்சபூதங்களுஞ் சிரிக்கு மென்றவாறு.

கபடமாகிறது மனசிலே யொன்றை நினைத்துக் கொண்டு வெளியிலே யிருக்கிற பேருக்கு அது தெரிய வொட்டாமல் ஆசார வான்போலே யிருக்கிறது. க

272. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்

என்பது

ஒருவனுக்கு ஆசாரத்தைப் போலு முயர்ந்த தவசு வேஷம் என்ன பலனைக் கொடுக்கும், தான் குற்றமென்று விட்ட வஸ்துவின் மேலே தன்னெஞ்சு ஆசை பற்றினால்[1] ஒரு பலனை யுங் கொடுக்க மாட்டா தென்றவாறு. அறியாமற் செய்த குற்றம், தபசு பண்ணினால் பரிகாரமாய்ப் போம்; அறிஞ்சு செய்த குற்றம், என்ன தபசு பண்ணினாலும் அனுபவியாமற் போகா தென்றவாறு. உ

273. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று

என்பது

மனத்தைத் தன்வழிப் படுத்தி அடக்க மாட்டாதவன் தபசைப் பண்ணுகிறேனென்று வேஷத்தைப் போட்டுக் கொண்டு இருக்கிறது பயிரைக் காக்கிறவர்கள் பயப்பட்டு ஓட்டிவிடாமல் இருக்க வேண்டுமென்று ஒரு எருதுக்குப் புலித் தோலைப் போர்த்துப் பயிரிலே மேய விட்டாற் போலு மென்றவாறு.

விவேக மில்லாதவர்கள் பயப்பட்டுச் சும்மா விருந்தாலும் அறிவுடையவர்கள் புலி புல்லைத்தின்னாது *இது பொய் வேஷம் என்றறிந்து துரத்துவது போல். முனி வேஷம் பூண்டும் மோகத்தால் பெண்ணாசை அடங்காதவன் தவசியல்ல வென்று துரத்தி விடுவார்கள் என்பதாம்.

---

1. ஊைந்து மகத்தே என்பது பிறர் பாடம்

[குறிப்பு . *இது என்பது முதல் * பெண்ணாசை என்பது வரை காகிதச் சுவடியில் அடிக்கப்பட்டு 'என்னாதும் ஆசை' என்பவை எழுதப்பட்டுள்ளன] உ

274. தவமறைந் தல்லவை செய்தல் புதன் மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று

என்பது

மாயத்தினால் தபோ[1] வேஷத்தைத் தரித்துக் கொண்டு அந்த வேஷ மஹிமை[2]யினாலே தபத்திற் கேலாத[3] காரியங்களைச் செய்தல், வேடன் புதருக்குள் தழையால் தன்னை மறைத்துப்[4] பட்சிகளைப் பிடிப்பது[5] போல் என்றவாறு. தபசுக்கு ஏலாத[6] காரியமாவது, காமக்குரோத லோபங்களுடனே கூடிப் பரஸ்த்ரீ பரதனங்களைத் தன் வசமாகப் பண்ண நினைக்கிறது.

[குறிப்பு 1. மாயத்தினால் தபோ — தவசு; 2. மஹிமை — வலிமை; 3. கேலாத — கேறாத; 4. புதருக்குள் தழையால் தன்னை மறைத்து — செடிக்குள்ளே மறைந்திருந்து; 5. பிடிப்பது — பிடிக்கிறாப்; 6. ஏலாத — ஏறாத என்றிங்ஙனம் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.] ச

275. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்

என்பது

தன்னைப் பிறர் பெரியவ னென்று சொல்லிக் கொள்ள வேணுமென்று ''நான் ஆசை யற்றவன்' என்று சொல்லுகிறவனுடைய பொய்யொழுக்கும், அப்போதைக்கு நன்றாயிருந்தாலும். பிறகு அறியாமற் சொன்னோமென்று தானே விசாரப் படத்தக்கதாக அவனுக்கு அநேகம் துக்கங்களைத் தரும் என்றவாறு.

சிறியதாய இன்பத்தைக் கருதிப் பெரியதாகிய பொய் வார்த்தையினாலே வெகுபாபம் வந்து, மறுபிறப்பிலே நரகத்திலே பிறந்து துக்கங்களை அனுபவிக்கிறபோது, அப்போது அறியாமல் பாபத்தைக் கருதிப் பெரியதாய்ச் செய்தோம் என்றழுவார்கள் என்றவாறு. ரு

276. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்

என்பது

மனதிலே ஆசை அறாமல் வைத்துக்கொண்டு துறந்த சன்னாசியைப் போலத் தானம் கொடுக்கிறவர்களை வஞ்சித்துப் பிழைக்கிறவர்களைப் போலக் கடின சித்தர் உலகத்திலே இல்லை என்றவாறு.

தானம் செய்வாரை வஞ்சித்தலாவது, கொடுக்கிறவர்கள் இத்தபசிக்கு ஆஹாரம் அவுஷதம் [1]முதலானவைகளைக் கொடுத்து மறுமையிலே தேவர்களாக வேணும் என்கிறவர்களைத் தாங்கள் அவாசாரம் பண்ணுகிறதினாலே இழிகுலத்தினராக்ததல் என்பதாம். தமக்கு நல்லது செய்கிறவர்களுக்கு ஆகாத காரியத்தை உண்டாக்குகிறதினாலே கடின சித்தர் என்பதாயிற்று. ௬

277. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து

என்பது

குன்றிமணியின் மேலேயிருப்பது போலே சிவப்பாய் நல்ல வேஷத்தைத் தரித்தாலும், குன்றிமணியின் அடியிலே கருத்திருக்கிறாப்போலே மனதிலேகபடமா யிருக்கிற பேர்களும் உண்டென்றவாறு. ௭

278. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்

என்பது

மனத்திலே கபடத்தை வைத்துக் கொண்டு தபவேஷத்தைப் போட்டுக் கொண்டு பிறர் தன்னை மதிக்கத் தக்கதாக நீரிலே முழுகிக் காட்டிக் கள்ளாசாரம் செய்கிறவர்கள் உலகத்திலே பல பேர்கள் என்றவாறு.

மனது கபட மாகிறது காம வெகுளி மயக்கம். ௮

---

1. அவிழ்தம் என்பது அச்சுநூல்

279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்

என்பது

அம்பு செவ்வையா யிருந்தாலும் வெகுகொடுமையைச் செய்யும்; யாழ் வளைந்திருந்தாலும் நல்ல இசையைக் கொடுக்கும் அப்படிப் போல், தபசு பண்ணுகிறவர்களையும் வடிவினாலே நல்லவர்கள் பொல்லாதவர்கள் என்று எண்ணாமல் அவர் செய்கைகளினாலே நல்லார் பொல்லார் என்று அறிய வேண்டும் என்பதாம்.

280. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்

என்பது

தபசு பண்ணுகிறவர்களுக்குத் தலைமயிரைச் சிரைத்து மொட்டை யாக்குகிறதும் சடையாக்குகிறதும் செய்ய வேண்டாம் என்பதாம்.

பெரியோர்கள் தபசுக்கு ஆகாதென்று ஜிநாகமத்துச்[1] சொன்னவைகளைத் தாங்களும் கடிந்து விடுகிறதே செய்ய வேணும் என்றவாறு. மனசு சுத்தமாயிருந்தால் வேஷம் வேண்டாம் என்பதாம்.

(குறிப்பு; 1. 'ஜிநாகமத்து' என்பது கையெழுத்துச் சுவடியில் அடிக்கப்பட்டுள்ளது )

ஆக அதிகாரம் உ௰அ; குறள் உள௮௰

இப்பால் 29. கள்ளாமை

என்பது, பிறருடைமையாயிருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக்கருதாமை. நினைத்தலும் செய்தலோடொக்கும். இல்வாழ்கிற சம்சாரியானாலும் சுற்றத்தார்களுடனே விளையாட்டிற்காகவும் ஒரு பொருளைத் திருடுகிறதும் பாபத்திற்குக் காரணமாதலால், அதுவும் செய்யலாகாது

தபசியான பேர்களுக்குக் களவை நினைத்தாலும் பாபம் வரும்; ஆதலால் களவு ஒருத்தருக்கும் ஆகா தென்றவாறு.

281. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு

என்பது

மோக்ஷ வீட்டை இகழாமல் வேண்டுவா னிவனென்று தவத்தோரால் நன்றாய் எண்ணப்படுபவன், யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக் கொள்ள[1] நினையாமலிருக்கிறவன் என்றவாறு.

ஞானத்திற் கேதுவாகிய சாத்திரங்களானாலும் திருடலாகாது என்பதாம். க

282. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்

என்பது

துறந்தவர்கள் பொல்லாத காரியங்களை மனத்திலே நினைத்தலும் பாவம்; ஆகையால் பிறர் பொருளை அவர்களறியாமல் வஞ்சனை பண்ணி எடுத்துக் கொள்ள வேணு மென்று நினையாமலிருக்க வேணும் என்றவாறு. உ

283. களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்

என்பது

களவினால் வருகிற பொருள் விருத்தி ஆகிறாப்போலேயிருந்து வகையறக் கெட்டுப் போம் என்றவாறு.

வகையறக் கெடுதலாவது, திருடினவனுடைமையைக் கண்டால் ராசாங்கத்தார் அவனுடைமையெல்லாம் எடுத்துக்கொள்

1. இதற்கடுத்து "காரணம் காரியம் என்றிரண்டு விதக்களவையும்" என்பது அச்சுநூலில் காணப்படுகிறது

வார்கள்; சரீர வாதையும் பண்ணுகிறதினாலே பாவமும் பழியும் வரும் என்பதாம்.

284. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்
என்பது

பிறன் பொருளைத் திருடிக் கொள்கிறபோது சந்தோஷமாய் இருக்கும்; அந்தப் பாபம் வருகிறபோது வெகு துக்கமாய் இருக்கும் என்றவாறு.

களவினாலே பாவமும் பழியும் அதிகமாய் வரும் என்பதாம்.

285. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்
என்பது

அருளினது பெருமையை அறிந்து அன்புடையவர்களாய் நடக்கிறது, பிறர் பொருளை வஞ்சித்துக் கொள்ள நினைக்கிறவர்களுக்கு இல்லை என்றவாறு.

தமக்கு உரித்தான பொருள் தமக்குத் தங்காமல்[1] போகிறது கண்டும்[2] பிறன்பொருளை வஞ்சித்துக் கொள்ள நினைக்கிறது என்ன பலனைக் கருதி என்பதாம்.

286. அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர்
என்பது

சீவனுக்கு ஈடேற்றமாகிய விரத சீலங்களிலே நின்று நடக்கமாட்டார் களவு செய்கிறதில் வெகு ஆசையை யுடையவர்கள் என்றவாறு.

விரதசீலமாவது, நல்லறத்தைச் செய்து பொல்லாதவற்றை விடுதல்.

1. தக்காமல் என்றும், 2. போகிறதுண்டு என்றும் காகிதச் சுவடியில் திருத்தப்பட்டுள்ளன.

287. களவென்றுங் காரறி வாண்மை யளவென்று
மாற்றல் புரிந்தார்க ணில்

என்பது

களவு எனப்பட்ட கபட மனசு அளவறிந்தார்களிடத்தில் இல்லை என்றவாறு.

அளவாகிறது, உலகப்பிரமாணங்களையும் சீவஸ்வரூபத்தையும் யோகஞானங்களையும் அறிந்து அதனால் பலனாகிய வீடுபேற்றை அறிகிறதென்பதாம். ஏ

288. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு

என்பது

உலகம் முதலானதுகளைப்[1] பிரமாணங்களால் அறிந்தவர்கள் நெஞ்சிலே தர்மம் நிலையாய் இருக்கிறாப்போல், களவையே பயின்றவர் நெஞ்சிலே வஞ்சனையும் நிலையாய் இருக்கும் என்றவாறு.

உயிர்முதலானதுகளை[2] அறிந்தவர்களுக்குத் துறவறம் சலியாமல் நிற்கும் என்பதாம். அ

289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்

என்பது

களவு செய்ய அறிந்தவர்கள் அந்தப் பொல்லாத நினைவுகளை நினைத்த போதே கெடுவார்கள் என்றவாறு.

பொல்லாத நினைவுகளாவன: பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், வஞ்சனையால் கொடாததைக்[3] கொள்ளுமாறும், அதனால் பலன்களை அனுபவிக்குமாறும் முதலாயின என்பதாம். கூ

---

1. முதலானவற்றை. 2. உயிர்முதலானவை- ஷட்திரவியம்; குறள் 249க்குரிய குறிப்புரை காண்க.

3. "கொடாததைக்" என்பது அது என்று பிறரால் திருத்தப்பட்டுள்ளது; (பரிமேலழகருரை காண்க.)

290. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு

என்பது

களவு செய்கிறவர்களுக்குத் தங்கள் உடம்பும் துணிந்து போம்; களவு செய்யாதவர்கட்குத் தேவலோகம் தப்பாமல் வரும் என்றவாறு.

உடம்பு துணிந்து போகிறதாவது, திருடினவனை அரசர்கள் தண்டித்துக் கையைக் காலை அறுப்பர் என்பதாம்.

ஆக அதிகாரம் உய கூ; குறள் உள கூய

இப்பால் 30. வாய்மை

என்பது, காமமும் பொருளும் வேண்டிப் பொய் சொல்லுகிறதை விலக்கிச் சத்தியமாய் இருக்கிற நன்மையைச் சொல்லுகிறது.

291. வாய்மை எனப்படுவ தி யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்

என்பது மெய்யென்று சொல்லுகிறது எது என்று கேட்டால், பின்னை ஒரு சீவனுக்குச் சற்றும் பொல்லாங்கு வாராத சொற்களைச் சொல்லுதல் என்றவாறு.

சீவன்களுக்குப் பொல்லாங்கு வரச் சொல்லுகிறது தப்புரை என்பதாம்.
க

292. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்
என்பது

குற்றமில்லாத நன்மையை உண்டாக்குகிறதானால் பொய்யான வார்த்தையும் மெய்யாம் என்றவாறு.

குற்றம் தீர்ந்த நன்மை யாவது தருமம். * அதனைப் பயத்த

லாவது கேட்டையோ அல்லது சாக்காட்டையோ அடையப் போகும் ஒரு சீவன் அச் சொற்களின் பொய்ம்மையாலே அதனின் நீங்கி யின்புறுதல். உ

[குறிப்பு * இக்குறியிடப்பட்டதினின்றுள்ளவை பின் வருமாறு மாற்றி எழுதப்பட்டுள்ளன :—

அதனைச் செய்கிறவழி பொய்யான வார்த்தையும் மெய்யாம் என்பது. அறமாவது கொல்லாதது; சத்தியம் திறம்பாமல் இருக்கிறது; பரஸ்திரீகளை வாஞ்சியாமலிருக்கிறது! கோபமும் லோபமும் இல்லாமலிருக்கிறது; இதுவே தர்மம். இதனைச்செய்கிற வழி பொய்யான வார்த்தையும் மெய்யான வார்த்தையும் மெய்யாமென்பதாம். உ

293. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்

என்பது

ஒருவன் தன் நெஞ்சு அறிந்தவற்றைப் பிறர் அறியார்கள் என்று பொய் சொல்லவேண்டாம்; பொய் சொன்னால் அதனை அறிந்த தன் நெஞ்சே தன்னைச் சுடும் என்றவாறு.

தன்னைச் சுடுதலாவது. அசத்தியம் சொன்ன தோஷத்தினால் நரக துக்கங்களை அனுபவிக்கிறபோது நெஞ்சு கூடநின்று அனுபவிக்கும் என்பதாம். ௩

294. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன்

என்பது

ஒருவன் தன் மனத்திற் கேற்கப் பொய்யாம லிருந்தானாகில் அவன் பெரியோர்கள் மனசுகளிலே எல்லாம் இருப்பான் என்றவாறு

பெரியோர்கள் அவன் பொய் சொல்லாதபடியினாலே அந்த அருமையைப் பார்த்து அவனை நினைப்பார்கள் என்றவாறு ச

295. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை

என்பது

ஒருவன் தன்மனத்துக்குச் சரிபோக மெய் சொல்லுவானாகில், அவன்தபசும் தானமும் பண்ணுகிறவர்களைப் பார்க்கிலும் பெரியவன் என்றவாறு. மனசுடனே கூடிச் செய்கிற காரியமே பலனுடையதாம் என்பதாம். ரு

296. பொய்யாமை யன்ன புகழில்லை பொய்யாமை[1]
யெல்லா வறமுந் தரும்

என்பது

ஒருவனுக்குப் பொய் சொல்லாம லிருக்கிறத்தை[2]ப் போலக் கீர்த்தியில்லை; அந்தச் சத்திய விரதமே மறுமைக்கு வேண்டிய செல்வங்களைக் கொடுக்கப்பட்ட[3] சகல தர்மங்களையுங் கொடுக்குமென்றவாறு.

இல்லறத்துக்குப் பொருள் தேடுகிற வருத்தமும், துறவறத்துக்கு உண்ணாமலிருக்கிற வருத்தமும் அனுபவியாமல் இந்த இரண்டு வகை யறமும்[4] தானே வருமென்பதாம். சா

297. பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

என்பது

ஒருவன் பொய்யாமையாகிய சத்திய விரதத்தைத் தப்பாமல் செய்ய வல்லவனானால் அவன்பின்னை வேறு தருமங்களைச் செய்ய வேண்டாம்;* பல தருமங்களையும் செய்கிற வருத்தத்தினாலே சில தப்பினால் குற்றம் வரும்; ஆதலின் சகல தருமங்களையும் கொடுக்கப்பட்ட சத்தியத்தைச் சொல்ல வேணும் என்பதாம். எ

[குறிப்பு: *'பலதருமங்களையும்' என்பது முதல் உள்ளவை காகிதச் சுவடியில் அடிக்கப்பட்டுள்ளன.]

1. எய்யாமை என்பது பிறர் பாடம் 2. இருக்கிறதைப் 3. கொடுக்கும்
4. அறத்தின் பயனும் என்பது அச்சுநூல்

298. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்
என்பது

ஒருவனுக்கு உடம்பு சுத்தமாகிறது நீரினாலேயாம்; மனசு சுத்த மாகிறது வாய்மையாகிய மெய்சொல்லுகிறதினாலே யுண்டாம் என்றவாறு.

உடம்பு சுத்தமாகிறதற்குத் தண்ணீரில்லாமல் வேறொன்றும் இல்லாததுபோல், மனசு சுத்தமாகிறதற்குச் சத்தியமில்லாமல் வேறொன்றும் இல்லை என்பதாம். அ

299. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு
என்பது

வெளியிலே இருக்கிற இருளைப் போக்கடிக்கிறதான விளக்குக்களெல்லாம் விளக்காகா; பெரியோர்களுக்கு விளக்காவது மனத்திலே இருக்கிற இருளைக் கடியப்பட்ட பொய்யாமை யாகிய விளக்கே விளக்காம் என்றவாறு.

உலகத்திற்கு விளக்காகிறது சூரியன் சந்திரன் நெருப்பு; இவைகளாலே போக்கடிக்கப்படாத உள் இருளைப் போக்கடிக் கின்றதால் பொய்யா விளக்கே விளக்காமென்பதாம். சூ.

300. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற
என்பது

நாம் கண்ட மெய்நூல்[1]களான சகல சாஸ்திரங்களிலேயும் சத்தியத்தைப் பார்க்கிலும் அதிகமாகச் சொல்லப்பட்ட தருமம் ஒன்றுமில்லை என்றவாறு.

மெய்நூல்களாவன, காமம் வெகுளி மயக்கம் என்று சொல்லப்பட்ட முக்குற்றங்களும், பிறப்புப்பிணி மூப்புச் சாக்காடு

1. மெய் + நூல் = மெய்ந்நூல் என்றிருத்தல் வேண்டும்.

என்பனவும் இல்லாத சுவாமியாலே செய்யப்பட்ட நூல்கள் என்பதாம். ய

ஆக அதிகாரம் ௩௰க்குக்குறள் ௩ள

இப்பால் 31. வெகுளாமை

என்பது

ஒருவன் மேலே கோபம் வந்தவிடத்தில் அந்தக் கோபத்தை அடக்கிக் கொண்டு அவன்மேலே பகை வையாமல் இருக்கிறது

301. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்

என்பது

தன்கோபம் பலிக்கிற விடத்திலே அந்தக் கோபம் வாராமல் தடுக்கிறதே தயையுடையவனாய்த் தடுக்கிறது; தன் கோபம் செல்லாத விடத்திலே அந்தக் கோபத்தைப் பொறுத்தாலென்ன, பொறாவிட்டாலென்ன என்றவாறு.

தான் பலவந்த[1]ரிடத்திலே கோபித்தால்தானே கெடுவன் என்பதாம். க

302. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனிற் றீய பிற

என்பது

ஒருவன் கோபம் தன்னிலும் பலவானிடத்திலே எழுந்தால் தனக்கே கேடு வரும்; எளியார் மேல் கோபம் எழுந்தாலும் தனக்கே கேடாம் என்றவாறு.

எளியாரிடத்திலே கேடுவருவது பழியும் பாவமும் உ

303. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்த லதனால் வரும்

என்பது

எல்லாரிடத்திலும் கோபத்தைச் செய்யப் போகாது; அந்தக் கோபத்தினாலே எல்லாப் பொல்லாப்பும் வரும் என்றவாறு.

1. வலிமையுள்ளவர்

வலியார் எளியார் சமானர் என்று சொல்லப்பட்ட மூவரிடம் திலேயும் கோபமாகாது என்பதாம் ௩

304. நகையும் உவகையுங் கொல்லும் சினத்திற்
பகையு முளவோ பிற

என்பது

முகத்திலே நகையையும் மனத்திலே சந்தோஷத்தையும் கொடுக்கப்பட்ட கோபத்தைப் போலப் பகையான தொன்றில்லை என்றவாறு.

துறந்தவர்க்குப் புறப்பகை இல்லையாயினும் சினம் உட்பகையாய் நின்று நற்குணங்களைக் கெடுத்துப் பிறவித்துன்பங்களை எய்துவிக்கும் என்பதாம். ஆகையால் அவருக்குக் கோபத்தை விடப் பெரியபகை இல்லை என்பதாம். ச

305. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்

என்பது

தன்னைத் துக்கப்படாமல் இருக்கக் காத்துக் கொள்ள வேணுமென்று நினைத்தால் தன்மனத்திலே கோபம் வராமல் காக்க வேணும்; கோபம் வந்தால் அது தன்னைத் தானே கெடுக்கும் என்றவாறு.

தன்னைக் கெடுக்கிறதாவது, துறந்தவர்களானாலும் பிறரைச் சபிக்கிறதனாலே தபசு கெட்டுப் போய்ப் பிறவித்துன்பங்களை உண்டாக்கும் என்பதாம். ரு

306. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்

என்பது

கோப மென்கிற நெருப்புத் தன்னைச் சேர்ந்தவனைக் கொல்லுகிறதல்லாமல் அவனுக்கு இனமான பேரையும் கெடுத்துப் பகையாக்கும் என்றவாறு.

சினமானவனைச் சுடுகிறதாவது, அவன் மனத்தைப் பேதிக்கப் பண்ணிப் பகையாக்கும் என்பதாம். சா

307. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று

என்பது

கோபத்தை நமக்குப் பொருளென்று நினைத்துக் கொண்டவனுக்குக் கேடுவருகிறது. தரையை அடித்தவன் கை தப்பாமல் நிலத்திலே படுகிறாப் போல் தப்பாமல் கேடுவரும் என்றவாறு. எ

308. இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று

என்பது

மெத்த எரிகிற நெருப்பிலே விழுந்தாற்போலொத்த பொல்லாங்குகளை ஒருவன் செய்தாலும், அவனைக் கோபித்துக் கொள்ளாமல் இருக்கிறதே நல்லது என்றவாறு.

கோபம் வராமல் அடக்கினால் வேண்டிய காரியங்களையெல்லாம் முடிக்கலாம். இம்மையிலே கீர்த்தியும் மறுமையிலே தேவலோக போகங்களையும் பெறலாம். அ

309. உள்ளிய வெல்லாம்[1] உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின்

என்பது

தன் மனத்திலே நினைத்த தெல்லாம் நினைத்தபடியே வந்து கைக்கூடும், மனத்திலே கோபத்தை நினையாமலிருந்தால் என்றவாறு.

கோபம் அடங்கினவனுக்கு இம்மை மறுமைப் பயனும் மோக்ஷமும் எய்தும் என்பதாம். கூ

---

1. தெல்லாம் என்பதே சரியான பாடம்

310. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை

என்பது

அதிகமான கோபத்தை யுடையவன் உயிருடனே இருந்தாலும் செத்தவனோ டொப்பான்; கோபத்தைக் கடிந்தவன் சாகிறவனே யானாலும் நெடுங்காலம் இருக்கிறவனோடு ஒக்கும் என்றவாறு.

கோபத்தை உடையவனுக்கு ஞானம்பிறவாது; கோபத்தை விட்டவனுக்கு ஞானம்பிறந்து அதனாலே மோக்ஷம் அடைந்து நெடுங்காலம் நிற்கும் என்பதாம். ய

ஆக அதிகாரம் ௩ய௧ க்குக்குறள் ௩ளய

(இப்பால்) 32. இன்னா செய்யாமை

என்பது, தனக்கு ஒருபயனை நோக்கியாதல் கோபம் பற்றியாதல் ஒரு சீவனுக்கும் பொல்லாப்புச் செய்யாமலிருக்கிறது.

311. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்

என்பது

பெரியதாகிய செல்வங்களைப் பெறலா மாயினும் பிறருக்குப் பொல்லாங்குகளைச் செய்யாமல் இருக்கிறது, குற்ற மற்ற பெரியவர்கள் செயல் என்றவாறு. பிறருக்குப் பொல்லாங்கு செய்து செல்வம் பெறுகிறதிலும், அதனைச் செய்யாமல் தரித்திரனாய் இருக்கிறது நல்லதென்பதாம். க

312. கறுத்தின்னா செய்தவர்[1] கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்

என்பது

தன்மேல் கோபத்தினால் தனக்குப் பொல்லாத காரியங்களைச்

1. "செய்தவக்" என்பது பிறர்பாடம்

செய்தவனுக்குத் தான் திரும்பவும் பொல்லாத காரியங்களைச் செய்யாமலிருக்கிறது குற்றமற்றவர்கள் செயல் என்றவாறு

313. செய்யாமை[1] செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும்

என்பது

தானொருவனுக்குப் பொல்லாத காரியங்களைச் செய்யாமலிருக்கத் தன்மேற் கோபங்கொண்டு பொல்லாத காரியங்களைச் செய்தால், அது அவனுக்கு ஒருகாலத்திலேயுந் தீராத துக்கத்தைக் கொடுக்கு மென்றவாறு.

314. இன்னா செய்தாரை ஒறுத்த லவர்நாண
நன்மையே[2] செய்து விடல்

என்பது

தமக்குப் பொல்லாங்கு செய்தவர்களைத் தண்டித்தலாவது, அவர்கள் தாங்களே வெட்கித் தலையை தாழ்த்திக் கொள்ளத் தக்கதாக அவர்களுக்கு நன்மையே செய்து விட வேணும் என்றவாறு.

இப்படிச் செய்தால் இத்தகைய நன்மை செய்தபெரியவர்களுக்கு அறியாமற் பொல்லாங்கு செய்தோமே என்று தங்கள் மனதைத்தாமே நொந்து கொள்வார்கள் என்றவாறு.

315. அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்[3] போல் போற்றாக் கடை

என்பது

துறந்து வருத்தப்பட்டு அறிந்த ஞானத்தினாலே பலன் என்ன உண்டாம், பிற உயிருக்கு வருகிற பொல்லாங்கைத் தன்னுயிருக்கு வந்ததுபோலப் பார்த்துப் பரிகரியாமலிருந்தால் என்றவாறு.

1. ''செய்யாமல்'' என்பது பிறர் பாடம்
2. 'நன்னயஞ்' என்பதே பிறர்பாடம் 3. 'தந்நோய்' என்பது பிறர்பாடம்

* பிற உயிர்களுக்கு வருகிற குற்றங்களாவன, நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலான தொழில்களைச் செய்கிற விடங்களிலே சீவன்களுக்கு உண்டாகும் வாதைகளாம் என்றவாறு. அவற்றை முந்தி அறிந்து வாராமற் காக்கிறது அறிவினால் ஆம் பயனாம் என்பதாம்.

குறிப்பு * மேல் ''பிறஉயிர்களுக்கு'' என்பது முதல் உள்ளவை, பின்வருமாறு காகிதச் சுவடியில் திருத்தப்பட்டுள்ளன:-

பிற உயிர்களுக்கு வருகிற குற்றமாவது; தான்நடக்கிறது இருக்கிறது நிற்கிறது உண்கிறது முதலான தொழில்களைச் செய்கிற விடங்களிலே சீவன்களுக்கு வரப்போகிறவாதைகளை முந்தியறிந்து வாராமற் காக்கிறது. ரு

316. இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்

என்பது

பொல்லாத காரியம் என்று அறிந்தவற்றைப் பிறருக்குச் செய்யாமல் இருக்க வேண்டும் என்றவாறு.

தருமமும் பாவமும் மனசு முன்னாக இருந்து அறிய வேணும்; ஆன படியினாலே தான் குற்றம் என்று அறிந்தது பிறருக்கும் குற்றம் என்று அறிய வேண்டும் என்பதாம். சு

317. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணாசெய் யாமை தலை

என்பது

மனசுக்குச் சரி போகாமல் பொல்லாததா யிருக்கிற செயல்களை எக்காலத்தும் யாவருக்கும் சிறிதும் செய்யாமல் இருக்கிறதே முந்தின தருமம் என்றவாறு.

மனத்திலே பொல்லாங்கை நினையாமலிருந்தால் பாவம் இல்லை என்பதாம். எ

318. தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்

என்பது

பிறர் செய்த பொல்லாப்பைத் தான் அனுபவித்து அறிந்தவன் தன்னைப் போல் ஒத்த உயிர்களுக்குத் தான் பொல்லாங்கு செய்கிறது என்ன காரியம் என்றவாறு.

தனக்குப் பொல்லாங்கு செய்தால் தான் துக்கப்படுகிறாப் போலப் பிற உயிர்களும் துக்கப்படும் என்று அறிந்து பொல்லாங்கு செய்யாமலிருக்க வேண்டு மென்பதாம். அ

319. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றானே வரும்

என்பது

ஒருவன் பிற வுயிர்களுக்குப் பொல்லாத காரியத்தை காலத்தால் செய்தால் அவனுக்குப் பொல்லாங்கு அந்திக்குத் தானே வரும் என்றவாறு. கூ

320. நோயெல்லா நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்

என்பது

பொல்லாத வியாதி முதலானவையெல்லாம் பிற வுயிர்களுக்குப் பொல்லாங்கு செய்தார் மேலேயாம்; அதனாலே தனக்குப் பொல்லாங்கு வேண்டாதவர்கள் பிறவுயிர்களுக்குப் பொல்லாங்கு செய்யாமலிருக்க வேண்டும் என்றவாறு.

நிலத்தில் எந்த விதையை விதைத்தானோ அவன் அந்தப் பலனையே அடைவது போல், புண்ணிய பாவமாகிற நன்மை தீமைகளைச் செய்தவர்களும் அந்த அந்தப் பலனையே அடைவார்கள் என்பதாம். ய

ஆக அதிகாரம் கூ௨க்குக்குறள் கூ௱௨௱

இப்பால் 33. கொல்லாமை

என்பது, ஓரறிவுடைய உயிர் முதலாக ஐயறிவுடைய உயிர் இறுதியாகச் சொல்லப்பட்ட ஏழு[1]வித உயிர்களையும் கொல்லாமல் இருக்கிறது. இது சகல தர்மங்களிலும் பெரிய தருமம்; ஆனபடியினாலே சகலமானபேரும் கொல்லா விரதத்தையே கைக்கொண்டு நடக்க வேண்டும்.

321. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்

என்பது

தர்மமாகிறது ஏதென்று கேட்டால், ஒரு சீவனையுங் கொல்லாமலிருக்கிறதாம்; சீவன்களைக் கொல்லுகிறதே சகலமான பாவங்களையும் கொடுக்கும் என்றவாறு.

கொல்லாமை யல்லாத பாவங்கள் செய்தால் செய்த மாத்திரம் பாவம் ஒழிய அதிகம் வராது; கொல்லுகிறதினாலே[2] வெகுபாவமும் பழியும் பிராணகாஸி[3]யும் வருமென்பதாம். க

322. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத லூர்லோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை

என்பது

தான் சாப்பிடுகிறதை[4] யாகிலும் பசித்த பேருக்குப் பகுந்து கொடுத்து, ஐவகை யுயிர்களையும் காக்கிறது, சாத்திரங்களை யறிந்த பேர் சொன்ன தர்மங்களிலே யெல்லாந் தலையான தர்மமென்றவாறு.

ஓம்புதலாவது மறந்துங் கொல்லாத படியாய்க் காத்தலென்பது. உ

323. ஒன்றாக நலது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று

என்பது

---

1. குறிப்புரை காண்க.

2. கொல்லுகிறதினாலே 3. உயிருக்குக்கேடு 4. சாப்பிடுகிறதை (குறிப்புரை காண்க

சாஸ்திரங்களிலே சொன்ன தருமங்களிலே முந்தின தரும மாவது, கொல்லாத தருமமே; அந்தத் தர்மத்தின் பிறகு பொய் சொல்லாமலிருக்கிறது நல்லதென்றவாறு.

கொல்லா விரதமில்லாதவன் என்ன தர்மம் பண்ணினாலும் பலனில்லை யென்றவாறு. ௩

324. நல்லா றெனப்படுவ தி யாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி

என்பது

மோட்சம் பெறுகிறத்துக்கு[1] நல்லவழி யேதென்று கேட்டால், யாதொரு சீவனையும் கொல்லாம லிருக்கிறதே நல்ல நெறி யென்றவாறு. ச

325. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை

என்பது

சம்சார[2] நிலைக்குப் பயப்பட்டுப் பிறவாமையை வேண்டித் துறந்தவர்க்குளெல்லாம் கொல்லுதற்குப் பயப்பட்டுக் கொல்லாத தருமத்தைக் கைக்கொண்டு நடக்கிறவனே பெரியவன் என்றவாறு. ரு

326. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று

என்பது

கொல்லாமை யாகிய விரதத்தைக் கைக்கொண்டு நடக்கிறவனுடைய உயிரை எமன் கொண்டு போக மாட்டான் என்றவாறு.

அதிகமாகிய பாவங்களைச் செய்தவர்களும் அதிகமாகிய புண்ணியங்களைச் செய்தவர்களும் இம்மையிலே தானே அந்தப் பலன்களை அனுபவிப்பார்கள் என்பதாம். சு

---

1. பெறுகிறதற்கு 2. ''சங்காரத்து'' என்று காகிதச் சுவடியில் திருத்தப்பெற்றுள்ளது

327. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை

என்பது

தன்பிராணன் போனாலும் தான் பிறிதொரு சீவனைக் கொல்லாமல் இருக்கவேணும் என்றவாறு.

தன்னை ஒரு சீவன் கொன்றாலும் தான் அந்தச் சீவனைக் கொல்லாமல் இருக்க வேணும் என்னுமாம். தன் சீவன் போகிறது நிற்கவேண்டு மென்று பிறிதொரு சீவனைக் கொல்லலாகாது என்றுமாம். தேவதைகளுக்குப் பலியாகவும் சீவனைக் கொல்லப் போகாது என்பதாம்.

எ

328. நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை

என்பது

தேவர்கள் பொருட்டாக யாகத்திலே சீவனைக் கொன்றால் வெகு செல்வம் வருமென்றாலும், அறிவுள்ளவர்களுக்குப் பாபம் வந்து கடையான பிறப்பிலே பிறப்பிக்கு மென்றவாறு.

அறிவுள்ளவர்கள் சீவன்களைக் கொல்லார்க ளென்றவாறு.

அ

329. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து

என்பது

கொலைத் தொழிலையுடைய மனுஷர்கள், குற்றங்களைத் தெரிந்தவர்களுக்குப், புலையர்களா மென்றவாறு.

கொல்லுகிற தொழிலை யுடையவர்களே பறையரென்பதாம்.

கூ

330. உயிருடம்பி னீக்கியா ரென்பர்[1] செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்

என்பது

---

1. 'ரென்ப' என்பது பிறர்பாடம்.

சீவன்களைக் கொன்றபேர், பார்க்கப் போகாத வியாதியை யுடையவர்களாய்க் கைகால்கள் குறைந்து போகிற பெருவியாதியும் நீசமான தொழில்களையு முடையவர்களாய்ப் பிறப்பார்களென்றவாறு. ட

இப்போது பொல்லாத வியாதிகளை யுடையவர்கள் முற்பிறப்பிலே வெகு சீவன்களைக் கொன்று தின்றவர்க ளென்றவாறு ய

ஆக அதிகாரம் கூ௩க்குக் குறள் ௩௩௰.

(இப்பால்) 34. நிலையாமை

என்பது, தோற்றமாயிருக்கப்பட்ட[1] செல்வம் புத்திரர் உறவின் முறையார் பெண்சாதி ஆடையாபரணம் முதலானதுகளை நில்லாதென்று[2] அறிகிறது. இதுகளை[3] நிலையென்று நினைக்கிறது, கானலைத் தண்ணீரென்று நம்புகிறாற்போலேயாகும், புத்திரமித்திர களத்திராதிகளை நன்றாய் விசாரித்துப் பார்த்தா லொன்றும் நிலையாயிருக்கிறதில்லை. இதுகளை[3] நிலையல்ல. வென்றறிந்தல்லாமல் ஞானம் பிறக்கிறதில்லை. ஞானமாகிய அறிவு பிறந்தாலல்லாமல் பற்றுவிட்டு நீங்கி வீடு பெற முடியாது. ஆதலால் சகல வஸ்த்துக்களையும் நிச்சயமல்லவென்றெண்ண வேணு மென்பதாம்.

331. நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை

என்பது

நிலையில்லாத புத்திரமித்திரகளத் திராதிகளையும் செல்வங்களையும் நிச்சயம் என்றும், தனக்கு உதவும் என்றும் நினைக்கிறவர்கள் அறிவில்லாத மூடர்கள் என்றவாறு.

நில்லாத வஸ்த்துக்களின்மேலே ஆசைவைக்கிறது பிறவித் துன்பத்துக்குக் காரணமாம் என்றவாறு. க

---

1. தோன்றுகிற 2. முதலானவைகளை நில்லா வென்று 3. இவைகளை

332. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று

என்பது

ஒருவனுக்கு ஐசுவரியம் வருகிறபே । கூத்தாடுகின்ற இடத்திலே மனிதர்வந்து கூடுகிறாப்போல வந்துகூடும்: அந்த ஐசுவரியம் போகிறபோது கூத்து முடிந்தவுடனே அந்த மனிதர்கள் எல்லாம் ஒரு க்ஷணத்திலே போனாற் போலப் போம் என்றவாறு.

ஐசுவரியம் வருகிறபோது கொஞ்சங் கொஞ்சமாய் வந்து சேரும் போகிற போது நாலாவகையாலும் ஒரு க்ஷணத்திலே போய்விடும் என்பதாம். உ

333. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல்

என்பது

நில்லாத இயல்பினையுடையது செல்வம்; அந்தச் செல்வத்தைப் பெற்றபோதே அதனால் செய்யப்பட்ட தருமங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்றவாறு.

செல்வம் நில்லாது என்று அறிந்து தருமங்களைச் சீக்கிரமாகப் பண்ண வேண்டும் என்றவாறு. ௩

334. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்

என்பது

நாழிகை நாள் மாதம் வருஷமென்று சொல்லப்பட்டது. ஆதித்தனுடைய பிரமாணத்தினாலே; அந்த நாள் என்கிறதைக் காட்டி உலகத்திலேயுள்ள சீவன்களுடைய சரீரங்களை வாளாலே அறுத்துக் கொண்டுபோகிறானென்று எண்ணிக் கொள்வார்கள், அறிவுள்ளோர்கள் என்றவாறு,

அறிவில்லாதார், நமக்குப் பொழுது போகிறது என்று சந்தோஷப்படுவார்கள்; தங்கள் ஆயுசு மாண்டுபோகிறதை அறியார்கள் என்பதாம். ௪

335. நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்

என்பது

பேசவொட்டாமல் நாவை அடக்கி விக்கல் பிறக்கிறதற்கு முன்னே, மோட்சத்துக்குக் காரணமாகிய நல்ல தருமங்களைச் செய்ய வேண்டும் என்றவாறு. ௫

336. நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை பிறங்கிற் றுலகு[1]

என்பது

ஒருவன் நேற்று இருந்தான், இன்று செத்துப் போனான் என்று சொல்லுகிற பெருமையையே யுடையது உலகம் என்றவாறு.

ஆதலின் இன்றிருந்தவன் நாளையிருப்பான் என்கிற நிச்சயம் இல்லையென்பதாம். ௬

337. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல

என்பது

தம்முடம்பும் உயிருங் கூடி ஒருநாளாகிலும் இருக்கும் என்கிறதை நிச்சயமாக அறியார்; நினைக்கிறது கோடியு மல்லாமல் பின்னையும் அதிகமாக நினைப்பார்கள் என்றவாறு.

நினைக்கிறதாவது, பொறிகளாலே அனுபவிக்கப்பட்ட இன்பநுகர்ச்சியும், அதற்குக் காரணமாகிய பொருள் கூட்டு மாறும், அதற்கு வந்த இடையூறுகளைப் பரிகரிக்கு மாறும், அதனைக் காக்கு மாறும் என்பதாம். ௭

1. ''யுடைத்திவ் வுலகு'' என்ற பிறர் பாடம் இங்கும் காகிதச் சுவடியில் வரிபிளந்து எழுதப்பட்டுள்ளது.

338. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு

என்பது

முட்டையுடனே கூடியிருக்கிற உயிர் பக்குவம் வந்த போது அந்த முட்டையைப் போட்டுவிட்டுப் பறந்து போனாற்போலே, சரீரத்தில் இருக்கிற சீவனும் அந்தச் சரீரத்தை விட்டுப்போம் என்றவாறு.

இப்படி நிலையில்லாத உடம்பை நிலை என்று நினைக்கிறவர்கள் அறிவில்லாதவர்கள் என்பதாம் அ

339. உறங்கு வதுபோலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு

என்பது

சீவன்களுக்குச் சாவு வருகிறது, நித்திரை வருகிறாற் போலே இருக்கும்; பிறப்பு வருகிறது. நித்திரை போய் விழித்துக் கொண்டாற் போலாகும் என்றவாறு.

தூங்குகிறதும் விழிக்கிறதும் சீக்கிரமாக வருகிறாற்போலச் சாவும் பிறப்பும் சீக்கிரமாக வருமென்பதாம். ஃ

340. புக்கி லமைந்தின்று கொல்லோ உடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு

என்பது

வாயு பித்தம் சிலேஷ்மம் இவைகளாலே நிலைபெற்ற உடம்புக்குள்ளே யிருந்த உயிருக்கு எந்நாளும் இருக்கப்பட்ட ஒரு உடம்பு இல்லை; எந்த உடலை எடுத்தாலும் சரீரம் நாச மாகிப் போம்; சீவனுக்கு நாசமில்லை என்றவாறு.

குறிப்பு:- *''எந்நாளும்'' என்பது முதல் பின்வருமாறு காகிதச் சுவடியில் மாற்றி எழுதப்பட்டுள்ளது:-

''இந்த உடம்பு எந்நாளும் இருக்கப்பட்ட வீடு; இந்த வீடும் நிலையல்ல வென்றவாறு. சீவனுடனே கூடி நிலையாய் இருக்கப் பட்டது ஒரு உடம்பும் இல்லை; எந்த உடலை எடுத்தாலும் சரீரம் நாசமாகிப்போம்; சீவனுக்கு நாசமில்லை என்றவாறு] ὑ

ஆக அதிகாரம் நயசக்குக்குறள் ௩௱௪௰

(இப்பால்) 35. துறவு

என்பது புறமாகிய ஐஸ்வரியத்தின் கண்ணும் உள்ளாகிய யாக்கையின் கண்ணும் உண்டாகிய ஆசாபாசங்களை விட்டுத் தபசு பண்ணுகிறது.

341. யாதனின் யாதனி னிங்கியா னோத
லதனி னதனி னிலன்
என்பது

ஒருவன் யாதொரு பொருளை விட்டு நீங்கினான் அந்தப் பொருளாலே அவன் நோகிறதில்லை என்றவாறு.

நீங்குகிறது, ஒருபொருளைத் தனக்கு வேண்டாம் என்று விட்டுவிடுகிறது. அதனாலே நோகிறதில்லை[1] அந்தப் பொருள் அரசனாலேயாவது[2] கள்ளரா லாவது[3] அக்கினியினா லாவது[4] தாயாதிகளினா லாவது[5] போனால் விசாரம் வாராது என்பதாம்.

342. வேண்டி னுண்டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல
என்பது

சகல வஸ்துக்களையும் துறந்துவிட்டால் அவனுக்கு இம்மையிலே அந்த வஸ்துக்களாலே உண்டாக்கப்பட்ட பலனிலும் பத்துக் கோடி அத்தனைப்பலன் உண்டாம் மறுமையிலே என்றவாறு.

சம்சாரத்தை விட்டுத் துறந்து தபசு பண்ணினவனுக்கு மறுமையிலே வேண்டுமென்று நினைத்ததுகள்[6] எல்லாம் வந்து கூடுமென்பதாம். உ

343. அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு
என்பது

உடம்பு முதலாகிய ஐந்து பொறிகளுக்கு உரித்தாய் இருக்கிற ஐந்து புலன்களையும் கொடுக்க வேண்டும்; அவைகளைக்

1. நோகிறது 2. ராசாவினாலே யாகுதல், 3. லாகுதல் 4. லாகுதல்
5. லாகுதல் - எனக் காகிதச் சுவடியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.
6. நினைத்தவை

கெடுக்குங்காலத்து அவற்றாலே அனுபவிக்கிறதற்குத்தாங்கள் தேடின பொருள்களையெல்லாம் ஒருகாலே விடவேண்டும் என்றவாறு.

தாங்கள் தேடின பொருள்களைத் தாமே அனுபவிக்க நினைத்துக் கொண்டிருந்தால் துக்கமும் பாவமும் வரும்; வீட்டு நெறியாகிய தெரிசன[1] ஞானங்கள் வாரா; அந்தக் காரணத்தி னாலேயே பொறிகளையடக்கிப் புலன்களைக்கெடுக்க வேண்டும்; புலனுகர்ச்சிமேல் ஆசைவைத்தால், விறகு அதிகமாகப் போட்ட நெருப்புப் போலப் பின்னையும் அதிகமாகிற தல்லாமல் அடங்காது என்பதாம். ௩

344. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து
என்பது

தபசு பண்ணுகிறவர்கள், ஒரு பொருளின் மேலேயும் பற்றில் லாமல் துறந்து தபசு பண்ணினால், மோட்சம் அடைவார்கள்; இகத்துக்கும்[2] நன்றாய் இருக்கும்; பொருள்கள்மேல் ஆசை யுடையவனாய் வேஷத்துடனே கூடியிருந்தால், அந்த ஆசை யினாலேயே மயக்கம் வந்து செய்த தபசும் கெட்டுப் போய்த் தாழ்ந்த கதியிலே பிறந்து துக்கப்படுவார்கள் என்றவாறு. ச

345. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை
என்பது

பிறப்பை யறுத்து மோட்சத்தை யடையவேணுமென்கிற வனுக்குத் தன்னுடம்பும் தன்னு தல்லாம லிருக்கையிலே, பின்னையொரு பொருளின் மேலே யாசை வைக்கிறது[3] என்ன பலன் கருதி யென்றவாறு.

1. ''யோக'' என்று காகிதச்சுவடியில் திருத்தப்பட்டுள்ளது 2. இம்மைக் கும்

3. ''தன்ன; தன'' என்க

உடம்பெனவே† ஔதாரிகம் முதலிய ஐவகையுள்† உரு உடம்பு அருஉடம்பு என இரண்டு வகைப்படும். அவற்றுள் உரு உடம்பாவது* தசப்பிராணனோடு கூடியது. பத்துவகைப் பிராணனாவது; இந்திரியங்கள் ஐந்து கரணம் மூன்று, உச்வாச நிச்வாசம் ஒன்று, ஆயுஷ்யம் ஒன்று*‡ கதிகள் தோறும் ஆத்மனை விட்டுப் பிரியாமல் அதனோடு செல்லும் சரீரம் கார்மண சரீரம் அல்லது சூக்ஷ்மதேகம் அல்லது அருஉடம்பு எனப்படும். சரீரத்தின்மேல் ஆசைவைத்தால் பிறவி அறாமல் துக்கம் வந்து சேரும்‡ இதன்மேல் ஆசையை க்ஷண மாத்திரமும் வையாமலிருந்து மோட்சத்தை அடைகின்றது அருகரது மதம்** என்றவாறு

குறிப்பு † ஔதாரிகம் முதலாகிய ஐவகையுள் † என்பன, காகிதச் சுவடியில் அடிக்கப்பட்டுள்ளன.

*''தசப்பிரணனோடு'' என்பது முதல் *''ஆயுஷ்யம் ஒன்று*'',

என்பது வரை அடிக்கப்பட்டுப் பின் வருபவை எழுதப் பட்டுள்ளன:-

பத்துவகை இந்திரியங்களும் ஐந்துவகை வாயுக்களுடன் கூடி காம விகாரங்களோடு கூடிய மனம். இதனை சூட்சும தேகம் என்று சொல்லுவர்கள். இதன் மேல் ஆசையெல்லாம் பிறவி யருமற்றுகம் வந்து சேரும்.

‡''கதிகள்தோறும்'' என்பது முதல் ''வந்து சேரும்'' ‡ என்பது வரை அடிக்கப்பட்டுள்ளன.

**அருகரதுமதம்** என்பதில் ''கரதுமதம்'' என்பது அடிக்கப்பட்டு ''உடம்பாம்'' என்பது எழுதப்பட்டுள்ளது. ரு

346. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்

என்புது

தானல்லாத உடம்பைத் தான் என்றும், தன்னோடு கூடாத பொருளை எனது என்றும் கருதி அவற்றினிடத்திலேயே ஆசை உண்டாக்கப்பட்ட மயக்கத்தைக் கெடுத்தவன், தேவர்களுக்கும் புகுதற்கரிதாகிய மோட்சத்தை அடைவன் என்றவாறு.

உ. ''வைக்கிறத்துக்கு என்று காகிதச் சுவடியில் உளது

மயக்கமாகிறது அறியாமை; அதனைக் கெடுக்கிறது குரு *ஆகம தெய்வபக்தியினாலும் மித்யாத்வத்தின் நீங்கிய மார்க்கங் களாலும் யான் என தென்று நினையாமல் இருக்கிறதாம்.

(குறிப்பு மேல் என்பது முதல் கீழ்க்கோடிட்டபகுதி அடிக்கப் பட்டு, ''உபதேசத்தினாலும் யோக'' என்பவை எழுதப் பட்டுள்ளன.

சா

347. பற்றி விடா அ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடா அ தவர்க்கு

என்பது

அகப்பற்றாகிய தன் உடம்பு முதலியவற்றின் மேல் ஆசை யையும் புறப்பற்றாகிய பொருள் மேல் ஆசையையும் ஆகிய இருவகைப் பற்றையும் இறுகப்பற்றின ஆசையை விடாதாரைப் பிறவித்துன்பம் இறுகப்பற்றி நீங்காது.

அவ்விருவகைப் பற்றையும் இறுகப் பற்றுதலாவது, அவற்றை விடாமல் இருக்கிறது. ஆசையை விடாமல் இருக்கிற பேர்களுக்கு மோட்சமில்லை என்றவாறு. எ

348. தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்

என்பது

சகலமான ஆசாபாசங்களையும் துறந்து விட்டபேர்கள் மோட்சத்தை அடைந்தார்கள்; ஆசையைத் துறவாத பேர்கள் மயங்கிப் பிறவியாகிய வலையிலே அகப்பட்டார்கள் என்ற வாறு. அ

349. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப்படும்

என்பது

ஒருவன் இரண்டு வகை ஆசையும் அற்றபோதே பொல் லாத பிறப்பை அறுப்பான்; அந்த ஆசையை விடாத போது நிலையில்லாத தாகிய பிறவிச் சமுத்திரத்தைக் காண்பான் என்றவாறு

50. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

ன்பது

ஆசையாகிய பற்றை விடுகிறதற்குச் சகல ஆசா பாசங்களையும் அறுத்துவிட்ட ஜினேஸ்வரனுடைய பாதங்களையே பற்றாக ம்பி அவர் சொன்ன ஆகம சாஸ்திரத்தின் வழியே நடக்க வண்டும்; அந்தப்படி நடவா விட்டால் ஆசை அறாது என்ற ாறு,

ஆசை யுடைய தேவர்களை நம்பினால் அவர்கள் தங்க நடைய ஆசா பாசங்களை அறுக்க மாட்டாமல் இருக்கையிலே வறொருவர்[1] ஆசையை எப்படி அறுப்பார்கள் என்பதாம். ய

ஆக அதிகாரம் ௩௰௫க்குக் குறள் ௩௪௰,

இப்பால்) 36. மெய்யுணர்தல்

ன்பது, பிறப்புக்களையும் மோட்சத்தையும் அவைகளை டைய வேண்டிய காரணங்களையும் விபரீத வகையா லல்லா ல் உண்மையினாலே அறிகிறது. இதனையே தத்வக் ஞானம் ன்றும் சொல்வார்கள் கிரந்த சரஸ்திரக் காரர்.

51. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானா மாணாய் பிறப்பு

ன்பது

மெய்ப்பொருள் அல்லாத புத்திரர் மித்திரர்[1] களத்திரம்[2] தனம் ானியம் வஸ்து[3] ஆபரணங்கள் இவை முதலானவைகளை மய்யென்று அறியப்பட்ட விபரீத உணர்வினாலே மயங்கிப் றப்பினாலே வெகு துக்கம் உண்டாம் என்றவாறு.

விபரீத உணர்வாவது, மறுபிறப்பும் இருவினைப்பயனும் டவுளும் இல்லை யென்று சொல்லும் பொய்ந்நூல் வடிக்குக் ளை மெய்யென்று இருத்தல் இதனாலே பிறப்பு இடையறாமல் றாமென்பதாம். க

1. "பின்னையொரு" என்றுதிருத்தப் பட்டுள்ளது

1. "வஸ்திர" என்று மாற்றப்பட்டுள்ளது 2. மனைவி 3. நண்பர்

352. இருணீங்கி யின்பம் பயக்கும் மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு

என்பது

மெய்யுணர்வாகிய நல்ல நெறிகளை யுடையார்க்கு அந்த மெய் யுணர்வு பிறப்பை நீக்கி மோஷமாகிற அனந்தசுக[1]த்தைக் கொடுக்கும் என்றவாறு.

* சங்கை முதலிய இருபத்தைந்து குற்றங்களும் நீங்கி நிச்சங்கை முதலிய எட்டு அங்கங்களையுடைய க்ஷாயிக சம்யக் தரிசனம் அடைந்த எதிகள் மோக்ஷம் அடைவது நிச்சயமாகும் என்றவாறு இருள்நீங்கி என்பது நாலுகதியும் நீங்கி என்பதாம்[1]

[குறிப்பு: "''சங்கை'' என்பது முதல் ''நீங்கி என்பதாம்''* என்பது மை அடிக்கப்பட்டுப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளன:- குற்றமற்ற ஞானத்தை உடையவர்கள் நரகத்தினை நீங்கி அனந்த சுகத்தை அனுபவிப்பார்கள். உ

353 ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து

என்பது

மறுபிறப்பும் இருவினையும் கடவுளும் உண்டோ இல்லையோ வென்று சந்தேகப் படாமல், உண்டென்று தெளிந்த க்ஷாயிக சம்யக்தவமுள்ள[2]வர்களுக்குப் பூமியைப் பார்க்கிலும் இனிமேலடையத்தக்க தேவலோகம் பெரிய தென்பதாம்; சந்தேகப் பட்டால் பிறப்பு இடையறா தென்றவாறு. ந

354. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

என்பது

சக்ஞி பஞ்சேந்திரிய சீவனாகித் தர்மக்ஷேத்திரத்திலே பிறந்தும் நல்ல ஞானமும் தெரிசனமும் இல்லாவிட்டால் பிரயோசனம் இல்லை என்றவாறு.

1. ''மாகிற அனந்தசுக''— இவை அடிக்கப்பட்டுள்ளன
2. க்ஷாயிக சம்யக்வமுள்ள - என்பது காகிதச் சுவடியில் சுமக்கப்பட்டுள்ளது.

உத்தம சரீரம் முதலிய எல்லாம் கூடிவந்தும் நற்காட்சி யாகிற தெரிசனம் இல்லாவிட்டால் சம்சாரம் கெடாது என்பதாம்.

[குறிப்பு: மேற்கண்ட உரை முழுவதும் அடிக்கப்பட்டுப் பின் வருமாறு எழுதப்பட்டுள்ளது:- ஐந்தாகிய புலன் வேறுபாட்டால் ஐந்துணர்வையும் அடக்கித் தன்வசம் பண்ணினாலும் மெய்யாகிய தத்துவ ஞானங்களை அறியாதவர்களுக்கும் ஒரு பலனுமில்லை என்றவாறு. தத்துவஞானமாகிற சிவ சொரூபத்தை அறியாவிட்டால் மோட்சமில்லை என்றவாறு] ச

355. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்பது

சிவாதி பொருள்கள் பலவிதமாக இருந்தாலு அவற்றுள் சுத்தாத்ம ஸ்வரூபமும் கேவலக் ஞானமுமே உபாதேய மாகையால் ஞானதரிசன சாரித்திரத்தால் அடையும் மோக்ஷத்தை இச்சிப்பது மெய்யறிவாகும் என்றவாறு

[குறிப்பு: மேற்கண்ட உரை முழுவதும் அடிக்கப்பட்டுப்பின் வருமாறு எழுதப்பட்டுள்ளது:- எந்தப் பொருள் எப்படி யிருந்தாலும் அத்தைக் கண்டுவிட்டால் அந்தப் பொருளிலே நின்று ஆராய்ந்து மெய்யான பொருளைக் காண்கிறதே அறிவாவதென்றவாறு. பொருள்களுடனே உலகத்தார் கற்பித்துக் கொண்டு வழங்குகின்ற கற்பனைப் பொருளை நீக்கி யுண்மையான பொருளைக் காண்கிற தென்பதாம்.] ரு

356. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி

என்பது

இந்த மனுஷப்பிறப்பிலே உபதேச வார்த்தைகளை அனுபவமுடைய குருவினிடத்திலே கேட்டதினாலே மெய்யான தத்துவ ஞானங்களை அறிந்தவர்கள் திரும்பவும் இந்த மனுஷப் பிறப்பிலே பிறவாத நெறியை யுடைய மோக்ஷ வீட்டை அடைவர் என்றவாறு.

மனுஷ ஜென்மத்திலே அல்லாமல் மற்றொரு ஜென்மத்திலே வீடு பேறில்லையாம் என்றவாறு ௬

357. ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு
என்பது

அப்படிக் கேட்ட மெய்ப்பொருளாகிய உபதேச மொழிப் பொருளை மனத்திலே தரித்து நன்றாய் ஆராய்ந்து அதனால் முதற்பொருளான பரப்பிரம்ம சொரூபத்தை அறிந்தவனுக்கு மறுபிறப்பில்லை என்றவாறு. ௭

358. பிறப்பென்னும் பேதைமை நீங்கிச்[1] சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு
என்பது

பிறப்புக்குக் காரணமான அஞ்ஞானத்தினால் உண்டாகும்[2] ஆசை கெட்டுப்போக வீட்டிற்கு நிமித்த காரணமாகிய மெய்ப்பொருளைக் காண்கிறதே அறிவு என்றவாறு.

மெய்ப்பொருளாவது மோட்சவீட்டுக்கு நெறியாகிய நல்ல அறம் என்பதாம். ௭

359. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்
என்பது

ஒருவன் எல்லாப் பொருளுக்கு முதலாயிருக்கப்பட்ட தர்ம நெறிகளை யறிந்து, இருவகைப் பற்றினையும் அறுத்தொழுக வல்லவனாயின், அவனை முன் சாரக்கடவதாய்நின்ற தீவினைகள் அந்த ஆசாரங்களைக் கெடுத்து அவனைச் சேரமாட்டாதென்றவாறு.

சாரக்கடவதாகிய தீவினைகளாகிறது, முந்தின சென்மத்திலே செய்த பாவங்களென்பதாம். ௬

1. ''நீங்கச்'' என்பது பிறர்பாடம் 2. ''அஞ்ஞானத்தினால் உண்டாகும்'' என்பது அடிக்கப்பட்டுள்ளது.

360. காமம் வெகுளி மயக்க மிவைமூன்றி
னாமங் கெடக்கெடு நோய்

என்பது

ஒருவனுக்கு ஆசையுங் கோபமும் மயக்கமும் என்று சொல்லப்பட்ட மூன்று குற்றங்களுடைய பேருங்கூட இல்லாமல் ஒருவனுக்குக் கெட்டால்* அந்தக் குற்றங்களாலே வரப்பட்ட வாதை யவனுக்குண்டாகாதென்றவாறு.

அனாதியாய் மயக்கமும், அந்த மயக்கத்தினாலே நான் என்னுமகங்காரமும், அகங்காரத்தினாலே எனக்கிது வேண்டுமென்னும் அவாவும், அந்த அவாவினாலே வரப்பட்ட ஆசையும், அந்த ஆசையினாலே யப்பொருள் பெறாவிடிற் கோபமும், இவை அஞ்சென்று கிரந்த சாத்திரத்தார் சொல்லுவர்கள். அதிலே அகங்காரத்தை மயக்கத்திலேயும், அவா ஆசையினிடத்திலேயும் அடங்குதலால் மூன்று குற்றமென்றார்; இந்த முக்குற்றங்களும் கெட்டவனுக் கல்லது மோட்சமில்லையென்றவாறு. ய

ஆக அதிகாரங்கள் ; குறள்

இப்பால் 37 அவாவனுத்தல்

என்பது. முன்னும் பின்னுந் தொடரப்பட்ட வினைத் தொடர்ச்சியை யறுக்கப்பட்டவர்களுக்கு நடுவு நின்ற உடம்பும் அத்துடன் கூடிய வினையினாலே பிறக்கப்பட்ட ஆசையும் பிறவிக்கும் வித்தாமாகலின் அதை சுறுக்கிறதாய்*

361. அவாவென்ப வெல்லா உயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து

என்பது

எல்லாச் சீவன்களுக்கும் எந்தக் காலத்திலேயு மாசையென்னப்பட்டதே பிறவிக்கு வினை[1]யென்னப்பட்டதென்றவாறு.

---

* கீழ்க்கோடிடப்பட்டவை அக்கநூலிற் கண்டுதிருத்தி எழுதப்பட்டன

* கீழ்க்கோடிடப்பட்டது அச்சு நூல் பார்த்து திருத்தி எழுதப்பட்டதாம்

1. விதை

சீவன் உடம்பைவிட்டுப் போகிற காலத்திலே எத்தை[1] நினைக்குதோ[2] அந்த ஆசையினாலே அவனுக்குப் பிறப்புவிடாமல் தொடர்ந்துவரும். ஆபத்துக்காலங்களிலே சுவாமி பாதத்தை நினைத்தால் மோட்ச மடையலாம்[3] என்றவாறு. ௧

362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை[4] வேண்ட வரும்

என்பது

பிறப்பு துக்கமென்றறிந்தவன் ஒருபொருளை வேணுமென்றால் பிறவாமல் இருக்கிறதையே[5] நினைக்க வேணும். பிறவாமல் இருக்கிறதுக்கு[6] ஒரு பொருளின் பேலேயும் ஆசை வையாமலிருக்க வேணும்; ஆசையுண்டானால் பிறப்புத்துன்பம் வியாதி மூப்பு மரணங்களுமுண்டாம்; ஆசையில்லாதவனுக்கு மோட்சமுண்டாமென்றவாறு. ௨

363. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்

என்பது

ஒரு பொருளையும் விரும்பாமையைப் போல் ஒத்த பெரிய செல்வம் இந்த உலகத்திலே யில்லை; துறவிலே[1] யும் இதுக்குச் சரியான விரத[2]மில்லை யென்றவாறு.

மனுஷர் செல்வமும் தேவர் செல்வமும் பார்த்தால் ஒருத்தருக் கொருத்தரதிகமாயிருக்கும். இணையில்லாத செல்வமாகிய ஆசையில்லாதவனே[3] பெரிய செல்வமுடையவன் என்பது. ௩

364. தூஉய்மை என்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்

என்பது

---

1, 2, 3 பாடபேதம்- குறிப்புரை காண்க

1. எதை 2. நினைக்கிறதோ 3. இவ்வாக்கியம் அச்சு நூலில் இல்லை. 4. ''வாய்மை'' என்பது காகிதச் சுவடியிலுள்ள பாடம் 5. இருக்கிறதையே. 6 இருக்கிறதற்கு

ஒருவனுக்கு மோட்சமென்று சொல்லப்படுகிறது ஆசையில்லாமை; அந்த ஆசையில்லாமை[1] மெய்மையை[2] வேண்டிச் சத்தியமாய் நடந்தால் தானே வரு மென்றவாறு.

மோட்சமாகிறது சீவன்மயக்கமில்லாமலிருக்கிறது. ச

365. அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர்

என்பது

பிறப்புப் பிணிமூப்பு மரணங்களை யறுத்தவ ரென்று சொல்லப்படுவர்கள், ஆசையை யறுத்தவர்களே; ஆசையை விடாமல் மனை வாட்கை[1] முதலானதுகளைத் துறக்காத பேர் பிறவியை யறாதவர்களென்றவாறு.

ஆசையினாலே பிறப்பு மென்மேலு முண்டாமென்று. ரு

366. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா

என்பது

பயப்படத்தக்கது ஆசையே[2]; அந்த ஆசை சகல தர்ம விரதங்களைச் செய்தாலும் ஆசையுடையவனாயிருக்கிறவன் பிறவித்துன்பங்களிலே யழுந்துவானென்றவாறு. ஆசை சகல விரதங்களையும் அழிக்குமென்பது. சா

367. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்

என்பது

ஒருவ னாசையை நன்றா யறுத்துவிட்டானாகில், அவனுக்கு ஒரு காலத்தினு மழியாத வினையாகிய மோட்சந் தப்பாமல் வருமென்றவாறு.

ஆசையற்றவனுக்கு நினைத்த கருமமெல்லாம் முடியுமென்றவாறு. எ

---

1, 2. குறிப்புரை காண்க

1. வாழ்க்கை 2. ஆசைக்கே என்பது காகிதச்சுவடி

368. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றயாஅது மேன்மேல் வரும்.
என்பது

ஆசையில்லாதவர்களுக்கு வரக்கடவதொரு துன்பமு மில்லை; ஆசை யுடையவர்களுக்குச் சகலமான துக்கங்களுத் தப்பாது, மேன்மேல் வருமென்றவாறு. அ

369. இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்
என்பது

ஆசை யென்னப்பட்ட பெரியதுக்கம் ஒருவற்குக் கெட்டால், அவனுக்குச் சுகம் குறைபடாமல் எந்நாளு முண்டாமென்றவாறு.

எந்நாளுமென்றது இம்மை மறுமையிலேயு முண்டாமென்பதாம். சூ

370. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.
என்பது

ஒரு காலத்திலேயும் நிறையாததாயிருக்கிற ஆசையை விட்டா லவனுக்கு ஒரு காலத்திலேயும் பிரியாத நிலையாய் எந்நாளுஞ் சரியா யிருக்கப்பட்ட பெரிய இன்பத்தைக் கொடுக்குமென்றவாறு.

நிறையாததாகிறது, நிலையில்லாத பொருள்களின் மேல் ஆசைவைத்து அதுகளைத்[1] தேடின போது எத்தனைப் பொருள் வந்தாலும் பின்னையும் வேணுமென்கிறதொழிய, அமையுமென்கிற புத்தியில்லாதது. இப்படி ஆசையற்றவனைக் கிரந்த சாத்திரத்தாஞ் சீவன் முத்தன் என்று சொல்லுவார்கள். ம

ஆக அதிகாரம் ௩௰ எக்குறள் ௩௱௭௰

இப்பால் துறவறம் முற்றும்

1. அவைகளை 2. சீவகமுத்தன் என்பது காகிதச்சுவடி.

இப்பால் 39. ஊழ்

என்பது, ஒருவன் முன்செய்த நல்வினை தீவினை யிந்தச் சென்மத்திலே வந்தடைகிறது; அந்தவினையும் தன்னைச் செய்தவனையே வந்தடையும். அதெப்படிப் போலே என்றால், பசுக்கள் திரளாயிருக்கிற விடத்திலே ஒரு கன்றைத் தூர இருந்து விட்டால், அந்தக் கன்று தன் தாயான பசுவையே வந்து சேரும்; அதுபோலே செய்த வினையும் செய்தவனையே வந்தடையும் என்பதாம்*

371. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி

என்பது

ஒருவனுக்குக் கைப்பொருள் வந்து கூடுகிறத்துக்குக்[1] காரணம். முன்செய்த புண்ணியத்தினாலே முயற்சி யுண்டாம்; கைப் பொருள் போறத்துக்குக்[2] காரணம். முன்செய்த வினையாலே மனது மடிவு வருமென்றவாறு.

ஒருவனுக்கு நன்மையும் தீமையும் முன்செய்த வினையாலே யுண்டா மென்றவாறு. க

372. பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை

என்பது

ஒருவனுக்குச் சகலமான வறிவும் விவேகமுண்டாயிருந்தாலும் கைப் பொருளிழந்துபோகத் தக்கவூழ் வினை வந்துற்றா லந்த வறிவையெல்லாம் மயங்கப் பண்ணுவிக்கும்; அறிவில்லாமலிருந் தாலுங் கைப்பொருள் வந்து சேரத்தக்க ஊழ்வினை வந்துற்ற விடத்து அவனை யறிவுடையவனாகப் பண்ணுவிக்கு மென்ற வாறு. உ

373. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்த
னுண்மை யறிவே மிகும்

எபதுன்

---

* ''பல்லாவுள் உய்த்துவிடினும்'' என்ற நாலடியார் இங்கு நினைவு கூர்க.

1. கூடுகிறதற்குக் 2. போகிறதற்குக்

அறிவைக் கெடுக்கப்பட்ட வூழ்வினை யுடையவன் நுண்ணியதா யிருக்கிற பொருள்களை யுடைய பல நூல்களைக் கற்றாலு மவனுக்குப் பின்னையுந்தன் வினைவழியே வரப்பட்ட வறிவில் லாமையே யுண்டா மென்றவாறு. ரு

374. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு

என்பது

உலகத்திலே யூழ்வினை யிரண்டு வகைப்படும். அதெனெனில்,*, அயிசுவரிய முண்டாக வேணுமென்று நல்வினை செய் கிறதும் அறிவு[1] உண்டாக வேணுமென்று செய்கிறதுமாம். செல்வமுண்டாக வேண்டிச் செய்தவர்களுக்கு அறிவு[1]வாராது; அறிவு[1] யுண்டாகச் செய்தவர்களுக்குச் செல்வம் வாராது; ஆன படியினாலே செல்வமும் அறிவும் வேண்டித் தவஞ்செய்ய வேணு மென்றவாறு.

375. நல்லவை யெல்லாந்[2] தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு

என்பது

செல்வஞ் செய்தற் கேதுவாகிய நல்ல காரியங்களெல்லாம் பொல்லாதனவாம்; கேடுசெய்ய நினைத்த பொல்லாத காரியங் ளெல்லாம் நல்லனவாம்; ஊழ்வினை வசத்தினாலே யென்ற வாறு. ௬

ஊழ்வினையே பெரிய தென்பது

376. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம

என்பது

தனக்கு ஊழ்வினை வசத்தால் பிராப்தி யில்லாத பொருளை வருந்திக் காத்தாலும் நில்லாது; தனக்குப் பிராப்தி யுண்டா

* அது என்னெனில்; அவையாவை எனில்

1. 'வெற்றி' என்பது காகிதச் சுவடி 2. 'யெல்லா அந்' என்றனபேடை இருத்தல் வேண்டும்

யிருக்கிற பொருளை வெளியிலே யெறிஞ்சிப்[1]போட்டாலும் போகா தென்றவாறு.

பொருள்களிருக்கிறதும் போறதும்[2] ஊழ்வலியாலல்லது கார்க்கிறதினாலேயும்[3] காக்காததினாலேயுமல்ல வென்பதாம். சா

377. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது
என்பது

ஐம் பொறிகளால் நுகரப்படும் பொருள்கள் கோடி கோடி தேடிவைத்தாலும் தெய்வமவனுக்கு அமைத்த மாத்திர மல்லாம லதிக மனுபவிக்கப் போகா தென்றவாறு.

ஒருவன் செய்த நன்மை தீமை[3] யவனுக்கே யல்லாமற் பின்னை யொருவனுக்கும் வாரா தென்பதாம். எ

378. துறப்பார்மன் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்
என்பது

தரித்திரத்தினாலே யுண்ண வுடுக்க வில்லாதவர்கள் துறந்து போகத்தக்க புத்தி யுடையராவார், முன் செய்த தீவினை வந்து சேரா விட்டா லென்றவாறு.

முன் செய்த தீவினை வந்துற்றால் நல்ல வழியிலே நிற்க வொட்டா தென்பதாம். அ

379. நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன்
என்பது

நல்வினை யுதையமான காலத்து அதன் விளைவாய இன்பங்களை வேண்டா மென்று தள்ளாமல் இது நல்லதென்று அனுபவித்தவர்கள், மற்றத் தீவினை விளையுங்காலத்து அதன்

1. இவைநல்லவை யென்று

1. எறிந்து 2. போகிறதும் காக்கிறதினாலேயும் 3. தீமை

விளைவாய துன்பங்களையுமப்படி யனுபவியாமல் துன்பங் களைப் போக்கடிக்க வேணு மென்று விசாரப்படுகிற தென்ன காரியமென்றவாறு.

தான் செய்த வினையைத் தானே யனுபவியாயல் ஒன்றுக் கிசைந்து ஒன்றுக்கிசையாது வருந்துத லறிவன்றென்பதாம். ௬௯

380. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்
என்பது

வினையை விலக்க வேணு மென்று அதற்கு மாறுபாடாகிய உபாயங்களைச் செய்தாலு மந்த உபாயத்துக்கு முன்னே வினை வந்து நிற்குமென்றவாறு.

ஊழ்வினையினும் பெரியதொன்றில்லை யென்பது. ம

ஆக அதிகாரம் ௩௰௮ க்குக்குறள் ௩ளஅ௰.

அறத்துப் பால் முற்றியது.
அறம்மறவற்க; அறமேதுணை; அல்லது
வேறு துணையில்லை

இப்பால் பொருட்பால்

என்பது, இனி இல்லறத்து வழிப்படுவதாய்ப் பொருளின் பங்களுளிருமையும் பயப்பதாய் பொருள் கூறுவான் றுடங்கி[1] யதற்குக் காரணமாய அரசனீதி கூறவே யடங்கும். அரசனீதி யாவது காவலை நடத்து முறைமை. அதனை யரசியல் யிதவியல்[2] ஒழிபியலென மூன்றுவகைப்படுத்தி யுலகத்துக்குப் பிராணனாக விருக்கிற அரசனியல்பு இருபத்தைந்ததிகாரத் தாற் கூறுவான் றுடங்கி[3] முதற்கணிறைமாட்சி கூறுகின்றார்.

39. இறை மாட்சி

1. றொடங்கி 2. அமைச்சியல் எனக 3. அரசனுடைய

இறை மாட்சியாவது அரசனிட நற்குணநற்செய்திகளை. லோக ரட்சகனாக நின்று காத்தலின் அரசனை இறை யென்றார்.

381. படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா ரைசரு ளேறு

என்பது

சேனைகளும் குடிகளும் பயிரும் மந்திரிகளுஞ் சினேகிதரும் அரணாகிய கோட்டை கொம்மை துர்க்கங்களு[1] முடையவன் ராசாக்களுக் கெல்லாஞ் சிங்கத்தைப் போலே சொத்தவ[2] னென்ற வாறு.

ஆதங்கங்களிலே யொன்றில்லாவிட்டாலும் ராச்சியஞ் செல்லா தென்பது

382. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தர்க்[3] கியல்பு

என்பது

அரசனுக்கு லட்சணமாகிறது தீரத்துவமும் கொடுக்கிறதும் அறிவும் உற்சாகமு மென்னு மிந்த நாலு குணமும் விடாம லிருக்க வேணுமென்பதாம் உற்சாகம். கருமஞ் செய்கிறத்துக்கு[4] மனவெழுச்சி அறிவு, ஆறங்கத்துக்கு முரியது. கொடுக்கிறத்தி னாலே[5] சேனையுண்டாம். தீரத்துவத்தினாலே செய்கிற காரி யங்கள் முடியும். இவைகளில்லா விட்டாலரசனுக்குக் கேடுவரு மாதலால், இவைகள் விடாமலிருக்க வேணு மென்பதாம்.

383. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு[1]

என்பது

பூமியை யாளப்பட்ட ராசாக்களுக்குக் காரியங்களில் உற் சாக முடைமையுஞ் சபையை யறிந்து பேசத் தக்க கல்வியுடை

1. துரங்களும் என்பது காகிதச் சுவடி 2. போலெத்தவ 3. வேந்தற் 4. செய்கிறதற்கு பொருந்தும் 5. கொடுக்கிறதனாலே

1. 'பவற்கு' என்பது பிறர் பாடம்

மையு மாண்மை யுடைமையு மாகிய விம் மூன்று குணமும் ஒருக் காலும்[1] விடாமலிருக்க வேணு மென்ற வாறு. ௫

384. அறனி ழுக்கா தல்லவை நீக்கி மறனி ழுக்கா
மான முடைய தரசு

என்பது

ராசனீதிக்குச் சொல்லிய தர்மத்தின் வழியே தப்பாமல் நடந்து தன்னிட[2] நாட்டிலே தர்ம மல்லாம விருக்கிற காரியத்தைச் செய்ய வொட்டாமல் தெண்டிச்சு[3]ச் சவுரியத்திலே[4] குறைபடாம லிருக்கிறவனே யரச னென்றவாறு.

அரசனீதியாவது, ஓதல் ஒருபொருளை வேண்டுதல் கொடுத்தல் - இந்த மூன்றும் பொதுத் தொழில் ஆயுத வித்தை கற்கிறது. சகல சீவன்களிடத்திலேயுஞ் சமானமாய்ப் பார்க்கிறது, பகையை விசாரித்து வெல்லுகிறது - இந்த மூன்றும் சிறப்புத் தொழில், இந்த ஆறுவகைத் தொழிலுந் தப்பாமற் செய்கிறதாம். ௬

385. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு

என்பது

தனக்குப் பொருள் வரும் வழிகளை மென்மேலு[1] முண்டாக்கலும், வந்த பொருளை நல்ல விடத்திலே வைத்தலும், வைத்த பொருள்களைப் பிறர் கொள்ளாமற் காத்தலும், காத்த பொருள்களைத் தர்மார்த்த காமங்களாகிய அறம் பொருளின்பங்களின் பொருட்டு விடுதலும் வல்லவன் ராசா வென்ற வாறு.

பொருள் வரும் வழிகளை யுண்டாக்கிற தாகிறது, சத்துருக்களைச் செயிக்கிறதும். காணிக்கை வாங்கிக் கொள்ளுகிறதும், தன்னிட[2] தேசத்திற் குடிகளுக்குக் கல்வி கொடுத்துத் தப்பாமல் நடப்பிக்கிறது.

---

1. ஒரு காலும் 2. தன்னுடைய 3. தண்டித்து 4. வீரம்

1. மேன்மேலும் 2. தன்னுடை

முதலானது;[1] பிறர் கொள்ளாமற் காக்கிறது: பகைவர் கள்ளர் சுற்றத்தார் பரிசாரகர் எடுத்துப் போகாமற் காக்கிறதாம். தர்மத்தின் வழியே சிலவிடுகிறது[1]: தேவர்கள் பிராமணர் வித்துவான்கள் (தரித்திரர்)கள் இவர்களுக்குக் கொடுக்கிறதாம். பொருள்வழியிலே[2] சிலவிடுகிறது[3] யானை குதிரை மனுஷர் நாடு கோட்டை ஆகியவற்றுக்கும், பகைவரைப் பிரிவு செய்யுற[4] வர்களுக்கும், தன்னைவிட்டுப் போறவர்களை[5]ப் போகவொட்டாமல் நிறுத்துகிறவர்களுக்குங் கொடுக்கிறதாம். இன்பத்தின் வழியே சிலவிடுகிறது.[5] கிணறு குளந்தோட்டஞ் செய்கிறவர்களுக்குந் தானுண்ண வுடுக்கிறத்துக்குங்[6] கொடுக்கிறதாம்.

ரு

386. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்

என்பது

சேனங்கள் வந்து காண்கிறத்துக்கு[7] எளியனாய்க்கடின வார்த்தைகள் சொல்லாதவனுமாயிருக்கிற ராசாவினுடைய ராச்சியத்தை எல்லா ராச்சியங்களிலு மதிக மென்று சொல்லுவர்களுலகத்தாரென்றவாறு.

காண்கிறவர்கள், பலவந்தராலே வாதைப்பட்டவர்களும், தரித்திரத்தினாலே நொந்தவர்களும் ஆம் இவர்கள் காண்கிறத்துக்கு[1] எளிதாயிருக்கிறதும், கடுஞ்சொல்லனல்லாம லிருக்கிறதும், கோள் சொன்னத்தைக்[2] கேட்டுத் தெண்டியாமல் நன்றாய் விசாரித்துத் தெண்டிக்கிறதும், உத்தியோகம் பண்ணுகிறத்திலே[3] கோபம் பண்ணாமலிக்கிறதும், அதிகமாகச் சொல்லுகிறதும்,[4] இப்படிப்பட்ட ராசாவினிட ராச்சியம் பசிபிணி பகையில்லாமலிருந்து வந்தடைந்தவர்களுக்குப் பேரின்பத்தைக் கொடுத்தா லென்பது[5].

சா

1. செலவிடுகிறது 2. வழியே 3 செலவிடுகிறது 4. செய்கிற 5. போகிறவர்களைப் 6. வுடுக்கிறதற்கும் 7. காண்கிறதற்கு

1. காண்கிறதற்கு 2. சென்னதைக் 3 ணேணுகிறதிலே 4 அதிகமாகச் சொல்லுகிறதும் என்ற விடத்தில் - 'என' என்று மட்டும் அச்சு நூல் வற்றும் 5. கொடுத்தலால் அதை எல்லா நிலங்களிலும் உயர்த்திக்கூறு மூலவ் மென்பது என்பது அச்சு நூல் 1. முதலானவை

387. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றான்கண் டனைத்திவ் வுலகு
என்பது

நல்ல வார்த்தைகளுடனே பொருளைக் கொடுத்து ரட்சிக்க வல்ல (ராசா)வுக்கு இந்த வுலகமவன் கீர்த்தியைத்தான் சுமந்து கொண்டு அந்த ராசா வேண்டிய வஸ்துக்களையெல்லாங் கொடுக்கு மென்றவாறு.

ரட்சிக்கிறது, வலியாரெளியாரை நலிய வொட்டாமல் காக்கிறது.

388. முறை செய்து காப்பாத்து[1] மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்
என்பது

தான் நியாயந்தப்பாமல் நடத்திப் பிறர் நலிய வொட்டாமல் கார்க்கப்பட்ட[2] ராசா மனுஷனே யானாலும் தெய்வமென்று சொல்லப்படு மென்றவாறு.

நியாயந் தப்பாதது, அறநூலும் நீதிநூலுஞ் சொன்ன படியே தப்பாமல் நடக்கிறது. பிறர் நலியாதது, வலவந்தர்[3] எளியவர்களை வாதை[4] பண்ணாமல் காக்கிறது. அ

389. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீட்டங்கு[5] முலகு
என்பது

தன்னை யதட்டிச் சொல்லப்பட்ட சினேகிதருடைய சொற்களைத் தன் செவி பொறாததாகச் சொன்னாலும் அதனுடைய பலனையறிந்து பொறுக்கப்பட்ட குணமுடைய ராசாவினது குடை நிழலின் கீழே யுலகந் தங்கியிருக்கு மென்ற வாறு.

கவிகைக் கீழ்த்தங்குதலாவது, சகல ஜனங்களுமவனையே யாசரிப்பர்க[1] ளென்பது
சா

---

1. 'காப்பாற்று'' என்று திருத்துக 2. காப்பாற்றுறெ'' 3. பலவந்தர்
4. வதை என்பது அச்சு நூல் 5. கீட்டங்கு - கீழ்த்தங்கு (குறிப்புரை காண்க)
1. ஆசரிப்பார்கள் - கொண்டாடுவர்

390. கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி
என்பது

வேண்டினவர்கள் வேண்டின வஸ்த்துக்களைக் கொடுத்தலும், எல்லார்க்குந் தயை செய்தலும், முறைமை தப்பாமல் நடக்கிறதும். தளர்ந்த குடிகளைப் பேணுதலும் இந்த நான்கு குணங்களுமுடையவன் ராசாக்களுக் கெல்லாம் விளக்கா மென்றவாறு.

தயை செய்கிறது, முகமலர்ந்து நல்ல வசனங்களைச் சொல்லுகிறது. தளர்ந்த குடிகளைப் பேணுகிறது, ஆறிலொன்று கடமை கொள்ளுகிறதும் வறுமை நீங்கினாற் கைக்கொண்டும் வறுமையுற்ற வழி விட்டு விடனுமாம் ௰

ஆக அதிகாரம் ௩௰௯ க்குக்குறள் ௩௱௯௰

இப்பால் 40. கல்வி

என்பது அரசனாலே கற்க வேண்டின நூல்களைக் கற்றல். நூலாவது அற நூலும் நீதி நூலும் யானை குதிரை ஆயுத வகைகள் என்றி வற்றின் நூல்கள் முதலாயின. அரசனறிவுடையவனானால் தன்னுயிர்க்கே யல்லாமற் சகலமான ஜீவன்களுக்கும் பயன்படுவன். இந்தக் கல்வி யாவர்க்கு முறுதிபயத்தலிற் பொதுப்படக் கூறுகின்றார்.

391. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக
என்பது

கற்க வேண்டின சாத்திரங்களைப் பழுதில்லாமல் நன்றாய்க் கற்க வேணும். அப்படிக் கற்றாலந்த நூல் சொன்ன வழியே நிற்க வேணு மென்றவாறு.

கற்க வேண்டின நூலாவது, அறம் பொருளின்பம் வீடென்னு முறுதிப் பொருளை யறிவிக்கப்பட்ட நூல்கள்; இது வன்றி[1]

1. இவையன்றி

மயக்கமான நூல்களைக் கற்கலாகாது. கசடறக் கற்கிறதாவது அந்தச் சாத்திர அர்த்தமொரு வழியாயிருக்க தானொரு வழித்தையைச் சொல்லாமல் மெய்யான பொருளை நல்லோர்களிடத்திலே பலகாலுங் கேட்கிறது. நிற்றலாவது, சம்சாரத்திலே இருந்தால் நல்ல உத்தியோகங்களைச் செய்து அதன் வழியே வந்த பொருளை யறம் பொருளின்பங்களின் வழியே விடுதல்; துறந்தால் மெய்ப்பொருளை யுணர்ந்து ஆசையையறுத்தல். இப்படி நின்றால் பிறவியற்று வீடு பெறு மென்பதாம். ௫

392. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு

என்பது

அறியாதவர்கள் எண்ணென்றும் எழுத்தென்றுஞ் சொல்லுவர்கள்; அறிந்தவர்கள் எண்ணாகிய கணக்கும் எழுத்தும் இவையிரண்டுமறிவுடைய சீவனுக்கு இரண்டு கண்ணென்று சொல்லுவார்கள்.

எண்ணுமெழுத்தும் முதற் பொருளாகிய பரப்பினுமத்தைக் காண்கிறத்துக்கு வழியான படியினாலே கண்கள் என்று சொல்லப்பட்டன.

ஆதி முதலொழிய அல்லா தனவெண்ணின்
நீதி வழுவா நிலைமையவான் -மாதே
யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
திறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு[1]

என்பது, ஆதி முதலாகிய சறுவக்கிய னொன்றுமே எண்ணப்படாதது; மற்றதெல்லாம் உலகத்திலே[2] யடங்கினபடியினாலே, எண்ணறியாதவன் அறம் பொருளின்பம் வீடென்னப்பட்டது முதலானதுகளை[3] யறியமாட்டா னென்றவாறு.

எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் -மொழித்திறத்
தின்

1-3 இப்பாடல்கள் இக்குறட்குப்பரிமேலழகர் உரையில் கண்டவை, 2. லக்கத்திலே என்பது அச்சுநூல் 3. முதலானவற்றை

முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்[3]

என்பது. எழுத்தறிந்தாற் குற்றந்தீரும்; குற்றந் தீர்ந்தால் வசனங்களைத் திருத்தறுப்பான்; வசனங்களைத் திருத்தமாகப் பேசுகிறவன் மெய்ப் பொருளையறிந்து பிறவித்துன்பங்களை யறுத்து மோட்சத்தை யடைவ னென்றவாறு. ௨

393. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்

என்பது

கண்களை யுடைவர் களென்று சொல்லப்படுகிறது, கல்வியைக் கற்றவர்களையே. கல்லா தவர்கள் கண்களையுடையவர் களல்லர்[1] புண்ணுடையவர்களென்று சொல்லப்படுமென்றவாறு.

கல்வியினாலே பரப்பிரும சுருபத்தையுங் காலங்களையு மறியப்பட்ட ஞானக் கண்ணுடையவர்களே கண்ணுடையவர் கள்; அறிவில்லாதவர்களே[2] புண்ணுடையவர்க ளென்பதாம். ௩

394. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்

என்பது

எல்லோரும் வந்து தன்னைச் சேருமாறு தயை பண்ணி அவர்கள் பிரிந்துபோறோ[3]மென்றால், இனியவர்களை யெங்கே காணப் போறோ[3] மென்று நினைத்து விசாரப்படுகிறதே வித்து வான்கள் தொழிலென்றவாறு.

புலவர் தொழிலாவது, தாம் நல்வழியொழுகல், பிறருக்குறுதி யான வார்த்தை சொல்லுதல் இவற்றால் கற்றாரிடத்திலே யெல்லாரு மன்புடையராவரென்பது ௪

---

1 யுடையவர்களல்லா - என்பது அச்சுநூல் அதிகமாகவுளது 2. அறில் லாதவர்களே என்பது அச்சுநூல் 3. போகிறோ

395. உடையார்முன் இல்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்

என்பது

வருத்தப்பட்டாகிலுங்கற்கிறது நல்லது. கற்றால் அவர்கள் முன்னே கல்லாதவர்கள் நிற்கிறது எப்படிப்போலே என்றால், அயிசுவரியவான்கள் முன்னே தரித்திரவான்கள் ஏக்கற்று நிற்குறாப்[1]போலே, கற்றவர்களைப் பார்த்துக் கல்லாதவர்கள் நாணித் தலையிறக்கிக் கொள்ளுவார்களென்றவாறு.

ஏக்கற்று நிற்கிறது, ஆசையாலே தாழ்ந்து நிற்குறதாம்[2]. ௫

396. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு

என்பது

மணலிலே கிணறு எம்மாத்திர மாழந்தோண்டினால் அம்மாத்திரம் தண்ணீர் சுரக்கும், அப்படிப்போலே மனுஷர்களும் எம்மாத்திரம் நூலைக்கற்றாலும் அம்மாத்திரமறிவுண்டாமென்றவாறு.

சிறிது கற்று விடாமல் மென் மேலுங்கற்கவேண்டுமென்பதாயிற்று. ௬

397. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

என்பது

கல்வியைக் கற்றவனுக்கு யாதொரு நாடுந் தன்னாடாம்; யாதொரு ஊருந்தன்னூராம். இப்படியாகிற தறிந்திருந்துஞ் சாகிறபரியந்தங் கல்லாமல் நாளை விறுதாவிலே[1] கழிக்கிறது என்ன காரியத்தினாலே யென்றவாறு.

கற்றவனுக்குத் தன்னாடுமூரும் போலப் பிறநாடு மூரும் பலன் கொடுக்கு மென்பதாம். ௭

---

1. நிற்கிறாற்போலே. 2. நிற்கிறதாம்.

1. வினாக

398. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவர்க்[1]
கெழுமையு மேமாப் புடைத்து
என்பது

ஒருவனுக்குத் தான் ஒரு பிறப்பிலே கற்ற கல்வியேயெழு பிறப்பினுஞ் சென்று உதவுமென்றவாறு.

எழுபிறப்பிலேயு முதவுகிறதாவது, ஒரு சன்மத்திலே கற்ற கல்வியினாலே யறிவு பிறந்து அந்த அறிவினாலே புண்ணியத் தைப் பண்ணுவன்; அதனாலே நற்கெதியுண்டாம்; அந்தக் கெதி யிலேயும் நல்லறிவு பிறக்கும், மென் மேலும் நல்லகெதியே வரு மென்பதாம். அ

399. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்
என்பது

தாங்க ளின்பத்தை யடைதற் கேதுவாய கல்வியைக்கண்டு உலகத்தா ரின்புறுவர்கள்; சந்தோஷப் படுகிறத்தைக்[2] கண்டு கற்றறிந்தார் மென்மேலுங் கற்க விருப்புவ ரென்றவாறு.

தாங்க ளின்புறுதலாவது, சொல்லினுடைய பொருளை யறிந்து சந்தோஷப் படுகிறதும், இம்மையிலே கீர்த்தியும் திரவிய மும் வெகுமானமும் அடைகிறதும், மறுமையிலே மோட்சமடை கிறதுமாம். உலகத்தா ரின்புறுதலாவது, கற்றறிந்தவர்களுடனே கூடி யறியாதன வெல்லாமறிந்து சந்தோஷப்படுகிறது. சா

400. கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை
என்பது

ஒருவனுக்கு அழிவில்லாத செல்வமாகிறது கல்வியே; இதல்லாத மணியும் பொன்னு முதலான வெல்லாம் செல்வமல்ல வென்ற வாறு.

---

1. யொருவற் என்பதே சரியான பாடம்.
2. படுகிறதைது

கல்வி அழிவில்லாததாவது, தாயாதிகள், கள்வர், வலியார், ராசாக்கள் இவர்களாலே பறித்துக்கொள்ளப் போகாமலாலும், தன்னை வணங்கினவர்களுக்குக் கொடுத்தபோது குறைபடாமலாலுஞ் சீர்மையையுண்டாக்கலாலுமாம்.[1] பொருள் செல்வமல்லவென்றது, காத்தலாலும் இழந்து போறத்தினாலும்[2] துக்கம் வருதலாலும்[3] பலரையும் பகையாக்கலாலும், அந்தப்பொருளை அறிவுடையார் காமமுறாமையாலுமாம். ய

ஆக அதிகாரம் சய்க்குக்குறள் சள

இப்பால் 41. கல்லாமை

என்பது, வித்தையைக் கல்லாதவனுடைய குற்றத்தைச் சொல்வது.

401. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்
என்பது

ஒருவன் எல்லைகுறியாமற் செண்டாடினாற் போலும். நல்ல அறிவுரைகளைக் கொடுக்கப்பட்ட நூல்களைக் கல்லாமல் ஒரு சபையிலே போய் ஒரு வார்த்தையைச் சொல்ல நினைக்கிறதென்றவாறு.

எல்லை குறியாமற் செண்டாடுகிறது. பேய்ச்செண்டாம். நூலைக்கல்லாதவன் சபையிலே சொல்லுகிற வார்த்தையும் பேய் பிதற்றுகிறாப் போலே இருக்குமென்றவாறு. க

402. கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.
என்பது

---

1. வெள்ளத்தாற் போகாது வெந்தழலால் வேகாது வேந்தராலும் கொள்ளத் தான் முடியாது கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ மிகவெளிது கல்வியென்னும் உள்ளபொருள் உள்ளிருக்கப் புறம்பாகப் பொருள்தேடி உழல்கின்றாரே என்ற தனிப்பாடலை இங்கு நினைவு கூர்க. 2. போகிறதினாலும் 3. "ஈட்டலுந்துன்பம்" என்ற நாலடியாரை இங்கு ஒப்புநோக்குக

கல்வி யில்லாதவன் ஒரு சபையிலே போயொன்றைச் சொல்ல நினைக்கிறது. சுபாவமான முலையிரண்டு மில்லா தவளொருத்தி பெண்மையை வேண்டினாற் போலுமென்றவாறு.

பெண்மையாவது பலருந்தன்னை விரும்பும் பெண் தன்மை ௨

403. கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்

என்பது

கல்வி யில்லாதவரும் நல்லவர்களாய்த் தோன்றுவர், கற்றவர் களிட[1] சபையிலே யொன்றையுஞ் சொல்லாதிருந்தா லென்றவாறு.

கற்றவர்கள் முன்னே கல்லாதவன் சொன்னால் அறிவில்லாததைத் தெரிந்து இகழ்வார்கள்; சொல்லாமலிருந்தால் இவனு மறிவுடைய னென்றிருப்பார் களென்பதாம். ௩

404. கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்

என்பது

கல்வி யில்லாதவ னுடைய சிநேகம்[2] நன்றாயிருந்தாலு மறிவுடையா ரவனுடனே சிநேகம் பண்ணார்களென்றவாறு.

கல்வியில்லாதவனுக்கு நுண்மையான அறிவில்லையான படியினாலே அறிவுடையவர்கள் அறிவில்லாதவனுடனே சிநேகம் பண்ணார் ௪

405. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்

என்பது

நூல்களைக் கல்லாதவன் யானறிவுடையேனென்று

1, கற்றவர்களுடைய 2. உறவு என்பது அச்சுநூல்

தன்னைப் பெரியவனாகச் சொல்லுதல்[1], கற்றவன் அவனைக் கண்டு வார்த்தை பேசினால் அவன் பெருமை[2] கெட்டுப்போ மென்றவாறு.

ஒருவார்த்தை சொல்லுமளவுமே நிற்பது; சொன்னவுடனே யறிவில்லாதவ னென்பது தெரியு மென்பதாம். ரு

406. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்

என்பது

கல்லாதவர்கள் மனுஷராயிருக்கிறார்க ளென்கிற மாத்திரமே; தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் விளையாத களர் நிலத்தோ டொப்ப ரென்றவாறு.

களர்நிலத்தை யொருவரும் பேணார்; களர் நிலம் ஒருவருக்கும் பலன்களைக் கொடாது; அது போலக் கல்லாதவரும் ஒருவராலேயுங் கொண்டாடப் படார்கள், பிறர்க்கு உபகாரங்களுஞ் செய்யா ரென்பதாம். சா

407. நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று

என்பது

நுண்ணியதாய நூல்களைக்கற்று மாட்சிமைப்பட்ட அறிவில்லாதவனுடைய அழகும் ஆபரணங்களும் மரப் பாவைக்குப்பூட்டிய ஆபரணங்கள் போலேயா மென்றவாறு.

அறவிற்த மாட்சிமையாவது, பொருள்களைக் காண்கிறதும் அவற்றை மறவாமையுமாம். எ

408. நல்லார்[3]கட் பட்ட வறுமையி னின்னாதே
நல்லார்கட் பட்ட திரு

என்பது

---

1. மதிக்கும்மதிப்பு என்பது அதிகமாக அச்சுநூல் உரை.

2. அவன் பொருமை - என்பது அச்சுநூலில் இல்லை.

3. கல்லார்'' என்று காகிதப் பிரதியில் காணப்படுகிறது; 'கற்றார் ள்எறிருக்கலாம்; பிறர்பாடம் நோக்கி ''நல்லார்'' என்றே திருத்தப்பட்டது.

நூல்களைக் கற்றாரிடத்து நின்ற வறுமையினுங் கல்லாதாரிடத்து நின்ற செல்வம் பொல்லா தென்றவாறு.

கற்றவர் வறுமையுற்றாலு மிழிவான காரியங்களைச் செய்யார்; கல்லாதவர்களுக்குச் செல்வம் வந்தாற் பலருக்குமுபத்திரவங்களைப் பண்ணி, ஆகாத காரியங்களைச் செய்து, தாங்களுங் கெடுவ ரென்பது. அ

409. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு

என்பது

கல்வி யில்லாதவன் உயர்ந்த சாதியிலே பிறந்தவனானாலுங் கீழான சாதியிலே பிறந்து கல்வியைக் கற்றவனுடனே சரியல்லவென்றவாறு. உடலொழிந்து[1] போற[2] சாதியிலும் உயிரோடு நின்று நல்ல வறிவையும் நற்கெதியையுங் கொடுக்கப்பட்ட கல்வியே பெரிய தென்றவாறு. கூ

410. விலங்கொடு மக்க ளனைய ரிலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்

என்பது

மிருக சாதியும் மனுஷ சாதியும் பார்த்தா லொன்றிற் கொன்று எத்தனை நன்மை யுடையவர், அத்தனை நன்மையுண்டு. கற்றவர்களுக்குங் கல்லாதவர்களுக்கு மென்றவாறு.

மிருக சாதியைப் பார்க்கிலு மனுஷ சாதிக்கு அறிவு மிகுதியாக வுண்டாம்; அதுபோலக் கல்லாதவர்களைப் பார்க்கிலும் கற்றவர்களுக்கு அனேக மறிவுண்டான படியினாலே கல்லாதவருங் கற்றவரும் ஒத்த[3] சாதியல்ல வென்பதாம். ய

ஆக அதிகாரம் சுமக க்குக் குறள் சளய

1. உடலோடழிந்து என்பது அச்சு நூல் 2. போகிற 3. ஒரு என்பது அச்சு நூல்

இப்பால் கேள்வி[1]

என்பது, கேட்க வேண்டிய சாத்திர நூல் களைக் கற்றறிந்தவர் சொல்லக்கேட்டல் கற்றவனுக்குக் கல்வியினா லான அறிவைக் கெட்டி பண்ணலுங் கல்லாத வனுக்குங் கேள்வி[1] யாலறிவுண்டாக்கலுமா மென்பது.

411. செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை

என்பது

ஒருவனுக்கு அதிகமான செல்வ மாவது, செவியால் நூல் களைக் கேட்கிறதே; அந்தக் கேள்வி[1] சகலமான அயிசுவரியங் களிலுந் தலையாய செல்வ மென்றவாறு.

கேள்வி[1]யினாலே எல்லாப் பொருளையு மறிதலாலதுவே பெரிய செல்வம்; பொருளாலே வரப்பட்ட செல்வம் நிலையில் லாத படியினாலேயுந் துக்கங்களை யுண்டாக்கிறத்தினாலேயுந்[2] தலையான செல்வ மல்ல வென்பதாம். க

412. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்

என்பது

செவிக்குண வாகிய கேள்வி[1] யில்லாத பொழுது வயிற்றுக்குச் சாப்பிடுகிறத்திலே[3] சிறிது விட்டு விட வேண்டு மென்றவாறு.

அதிகமான ருசியும் பிறிதொரு பொருளைத் தனக்குண் டாக்குகிறது முள்ள கேள்வி யுண்டான போது பல வஸ்த்துக் களையும் வெறுத்து விடுவன்; அந்தக் கேள்வியில்லாத போது பல பொருளையுந் தனக்கு வேணு மென்று நாடித் தேடுகிற துக்கமும் அந்த வஸ்த்துக்களையும் பொசிக்கிறதினாலே[4] வியாதியுங் காமமும் பெருத்து வாதைப் படுவ னென்பதாம். உ

413. செவியுணவிற் கேள்வியுடையா ரவியுணவி
னான்றா ரோ டொப்பர் நிலத்து

என்பது

1. கேழ்வி என்று காகிதச் சுவடியிலுள்ளது 2. உண்டாக்குகிறதினாலேயுந்
3. சாப்பிடுகிறதினாலே 4. புசிக்கிறதினாலே

செவியுணவாகிய கேள்வியினை நன்றாய்க் கேட்டறிந்தவர் கள், பூமியிடத்து மனிதரே யாயி னும்,அவியுண வினை யுடைய தேவரோ டொப்ப ரென்ற வாறு.

அவியாகிய உணவு தேவர்களுக்கு ஓமத்தீயிற் கொடுக்கப் பட்டது. அறிவால் நிறைந்த பேர்களென்றுந் துன்ப மறியா ராகலின் தேவரோடொப்ப ரென்றுங் கூறினார், இப்பாட்டுக் கேள்வியுடையாரது சிறப்புக் கூறப்பட்டது. ௩

414. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
 கொற்கத்தி னூற்றாந் துணை

என்பது

உறுதியாகிய நூல்களைத் தான் கல்லாத போதுங் கற்றறிந்த பெரியோர்களிடத்திலே கேட்டறிந்திருக்கில், அது அவனுக்கொரு தளர்ச்சி வந்த விடத்து ஊன்று கோலா மென்றவாறு.

தளர்ச்சி, அறிவில்லாமையாலுந் தரித்திரத்தினாலுந் துன்பப் பட்டு மனந்தளர்தல்; அந்தத் தளர்ச்சியைக் கேள்வி நீக்கு மாகலின் ஊன்றுகோலா மென்றார். ௪

415. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
 யொழுக்க முடையார்வாய்ச் சொல்

என்பது

வழுக்குத லுடைய சேற்று நிலத்து நடந்து போவாற்கு ஊன்று கோலுதவுவதுபோல், ஒழுக்கமுடைய கற்றறிந்த பெரியோர் களாற் கேட்டறிந்தவர்களுக்கு அந்தக் கேள்வியொருகாலத்துந் தவறு வராமற் காக்குமென்றவாறு.

கல்வி யுண்டாயிருந்தும் ஒழுக்கமில்லாத பேர்கள் அறிவில்லா ராதலின் அவர்கள் சொல்லைக் கேட்கப் படாதென்பது தோன்ற ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் என்றார். ஒழுக்க மாகிய ஆசாரமுடைய பெரியவர்கள் வாய்ச் சொல்லே கேட்ட றிய வேண்டு மென்பதாம். ரு

416. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்

என்பது

ஒருவன் நல்ல ஆசாரமுடைய பெரியோர்க ளிடங்களிலே யுறுதி யான நூல்களைச் சிறிது கேட்டிருந்தானாயினு மந்தக் கொஞ் சங் கேட்ட பொருளே யவனுக்கு நிறைந்த பெருமையைத் தருமென்றவாறு.

நல்ல கேள்வி கொஞ்சங் கேட்டிருந்தாலும், அது மழைத் துளிபோல் நிறையவந்துதவிச் சகலமுங் கற்றவ னென்றெண்பிக்கு மென்பதாம். ௬

417. பிழைத்துணர்ந்தும் பேதமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்

என்பது

நூல்களின் பொருள்களை நன்றாக வாராய்ந்தறிந்த பெரியோ ரிடத்திற் கேட்கப்பட்ட கேள்வி சிறிதாயினும், நல்ல கேள்வித் திறமை யுடையவர் தமக்குக் குற்றம் வரத்தக்க சொற்களைச் சொல்லா ரென்றவாறு.

ஒரு காலத்திற் தாமத குணத்தான் மயங்கினா ராயினும் அவ்வா றல்லது சொல்லா ரென்பதாம்.

இந்த நான்கு பாட்டினாலுங் கேட்டாற்கு வரும் நன்மை களைச் சொல்லப்பட்டது. ஏ

418. கேட்பினுங்[1]கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி

என்பது

நல்ல சாத்திரங்களாற் பெரியோரிடத்திற் கேள்வியைக் கேளாத செவி நல்ல செவியல்ல, செவிடான செவி யென்றவாறு.

1. ''கேழ்ப்பினுங்'' என்று காகிதச் சுவடியில் காணப்படுகிறது.

சகலமான பேச்சுவார்த்தைகளையுங் கேட்பினும் நல்ல நூல்களைக் கேட்டறிதற்குக் காது கருவியாதலிற் கேள்வி கேட்கப்பட்ட செவியே நல்ல துவார முடைத்தான செவி அல்லாத செவிகள் துவாரமிருந்துங் கேளாத செவிக ளென்ப தாம்.

௮

419. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது

என்பது

நுண்ணிதாகிய கேள்வி யுடையா ரல்லாதார் சகலமாண பேர்க்கும் வணக்கமான வசனங்களைச் சொல்லமாட்டார்க ளென்ற வாறு.

நூல்களின் பொருள்களை நன்றாக வாராய்ந்துணர்ந்த பெரியோர்களிடத்திற் கேள்வியா லறியாமை யென்னுமயக்கங் கள் போய் நல்ல தெளிந்த வசனங்களே பேசுதலால் கேள்வியில் லாதவர் தம்மைப் புகழ்ந்து சொல்வ ரென்பதாம். தம்மைப் புகழ்ந்து சொல்லவே வணக்கமில்லை யென்பதாயிற்று. ௯

420. செவியிற்[1] சுவையு ணரா வாயுணர்வின்[2] மாக்க
ளவியினும் வாழினு மென்

என்பது

செவியாற் கேட்டுச் சகலமான ருசிகளையு மறியாத பேர் வாயுணர்வாகிய[3] ருசி பதார்த்தங்களைப் பொசித்து[4] வாழ்ந்திருந்தாலென்ன, இறந்தாலென்ன வென்றவாறு.

செவியாற் கேட்டறியப்பட்ட ருசிகளாவன, சொல்லும் பொருளுமாகிய அர்த்தங்களை நன்றாகக் கேட்டறிதல்; சொற் சுவை; குணமு மலங்காரமுமாம். பொருள்சுவை: காமம் நகை கருணை[1]வீரம் ருத்திரம் அச்சம் இழிப்பு[2] வியப்பு சாந்த

1. செவியாற; 2. வாயுணவின் என்பன அச்சு நூற்பாடம். 3. வாயுணவாகிய என்பது அச்சுநூல் 4. புசித்து

1. "குணம்" 2. "அழிப்பு" என்று காகிதச் சுவடியிலுள்ள அச்சு நூலை நோக்கிக் 'கருணை' என்றும் "இழிப்பு" என்றும் மாற்றப்பட்டன.

மென்பன. இவைகளை அறியவே சகலமானமயக்கங்களும் நீங்கிய பெரியோர்களிருத்தல் பூமிக் கழகென்பதாம். ஆகவே கேள்விகேட்டறியாதார் குற்ற மிந்த மூன்று பாட்டாலுங் கூறப் பட்டது. ய

ஆகஅதிகாரம் சயஉக்குக்குறள் சளஉய

இப்பால் 43. அறிவுடைமை

என்பது, கல்விகற்றுங் கேள்வி கேட்டு மறிகிறவறிவோடு நல்லபுத்தியாகிற வறிவுடையனாத யென்றவாறு.

421. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்

என்பது

ஒருவற்கு அறிவென்பது குற்றம் வராமற் காக்கப்பட்ட பொருளாம்: அதுவுமல்லாமல் சத்துருக்களா லழிக்கப்படாத வுள்ளரணுமா மென்றவாறு.

அறிவென்னும் பொருளிருக்கவே ஒரு குற்றமும் வராமற் காத்துக் கொள்ளலாம்; ஆகவே ராசாவாய்ப்[1] பகையாளிகளா லழிக்கப்படாத பலமு முண்டா மென்பதாம். இதனாலறிவினது சிறப்புக் கூறப்பட்டது. க

422. சென்ற விடத்தாற் செலவிடாத் தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு

என்பது

அறிவாவது, மனசைப் போனவழியே போகவொட்டாமற் றடுத்து நன்மை தீமைகளை யாராய்ந்து பொல்லாததை நீக்கி நல்ல காரியத்திலே செலுத்துவதாம் என்றவாறு.

குதிரையை நிலமறிந்து நடப்பிக்கும் குதிரைப் பாகனைப் போல, மனத்தை வேறாக்கி நல்லகாரியத்திலே செலுத்துவது

1. அரசராகிய என்பது அச்சுநூல்

அறிவே யாதலின். உயிர்கட்கு உறுதியான பொருளறிவென்ப தாம்.

௨

**423.** எப்பொருள் யார் யார் வாய்க் கேழ்ப்பினும்[1] அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்பது

யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்டாலும், அந்தப் பொருள்களில் நல்ல பொருளைக் கைக்கொண்டு நடக்கவல்ல தறிவென்றவாறு.

மனிதற்குக் குணங்கள்[2] மாறி மாறி வருதல் சுபாவமான படியினாலே நல்லபொருளைப்[3] பொல்லாதவர் வாயாற் கேட்கிலும் பொல்லாதபொருளை நல்லவர் சொல்லக்கேட்கிலும், உறுதியாகிய பொருள் பகைவர் வாயிற் கேட்கிலும், கெட்டபொருள் சினேகிதர் வாயிற் கேட்கிலும், அதனை அவர்கள் குணதோஷங்களாற் சொன்னாரென்றறிந்து அக்காலத்துக்கேற்றபடியே நடத்தலறிவென்பதாம்.

௩

**424.** எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு

என்பது

தான் சொல்லப்படா நின்ற பொருள்க ளரிதாயினும்[4] அதனை[5] எளிய பொருள் போலக் கேட்போர்கள் மனங்கொள்ளச்* சொல்லிப் பிறர் வாயாற் கேட்கப்படா நின்ற சொற்களில் நுட்பா நுட்பம் தெரிந்து பொருள்களைக் காண வல்லதே அறிவு என்றவாறு.*

சொல்லுகிற வசனங்களைத் திருத்தமாகச் சொல்லிக் கேட்கிறவர்கள் வழுவச் சொன்னாலும் அதனுடைய பொருள்களைக் காண வேண்டு மென்பதாம்.

௪

1. 'கேட்பினும்' என்க.

2. குணமூன்றும் என்பது அச்சநூல் 3. சுபாவமானபடியினாலே நல்ல பொருளை — அச்சு நூலினின்று சேர்க்கப்பட்டன. 4. அரியவாயினும் 5. அவற்றை *முதல் *வரையுள்ளவை அச்சு நூலினின்று எடுத்துச் சேர்க்கப் பட்டவை

425. உலகந் தழீஇய தொட்பம் மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு
என்பது

ஒருவனுக்கு உலகத்தை நட்பாக்குவது அறிவினாலே;[1] நட்பின்கண் முன்மலர்தலும் பின் சுருங்குதலு மின்றி ஒரு நிலையேயாம், நல்லறிவையுடைத்தானவர்கட்கு என்றவாறு.

உலகமென்பது கற்றறிந்த பெரியோர்களை. அவர்களோடு நட்புக் கொண்டபேர் கயப்பூப்போல் வேறுபடாது கோட்டுப்பூப் போல[2] ஒரு நிலையே நட்பாயினான், எல்லாவின்பமும் எய்து மாகலின், அதனை யறிவென்றார். இதனைச் செல்வத்தின் மலர்தலும் நல்குரவிற் கூம்பலுமில்ல தென்றுரைப்பாருமுளர்[3]. ௫

426. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு
என்பது

உலகம் யாதொரு வழியாய் நடக்குதோ[4] அந்தப்படியே நின்று தானும் நடத்தி வருதல் அரசனுக்கு நல்ல அறிவென்றவாறு.

உலகத்தை யெல்லாம் யான் நியமித்தலா லென்னை நியமிப்பா ரில்லை யெனக் கருதித் தானினைந்த படியே நடக்கிற பாவமும் பழியு மாதலான் அவ்வா றொழுகுதல் அறிவன்று என்று விலக்கிய வாறாயிற்று.

இவை யைந்து பாட்டாலும் நல்லறிவுடையோர் இலக்கணம் கூறப்பட்டது. ௬

427. அறிவுடையா ராவ தறிவார் அறிவிலா
ரஃதறி கல்லா தவர்
என்பது

---

1. அறிவே என்பது அச்சு நூல் 2. கோட்டுப்பூப்போல-இது அச்சுநூல் 3. யாரென்று தெரியவில்லை 4. நடக்கிறதோ நோக்கிச் சேர்க்கப்பட்டது

அறிவுடையா ராவார் தமக்கு மேல் வருங் காரியங்களை யறிய வல்லவர்; அறிவில்லாத பேர்களாவார் அதனை முன்னறிய மாட்டாதா ரென்றவாறு.

முன்னறிதல் முன்னே யெண்ணி யறிதல்; அறிவில்லாமை யாவது வந்த பிறகு அறிதல். எ

428. அஞ்சுவ தஞ்சாமை பேதமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்
என்பது

அஞ்சப்படுவதனை யஞ்சாதிருத்தல் பேதமை[1]யாம். அஞ்சத்தக்க காரியங்களுக்குப் பயந்து நடத்தல் அறிவுடையோர் தொழிலா மென்றவாறு.

பாவம் பழி கேடு முதலானவை அஞ்சப்படுவன. அஞ்சாமை, எண்ணாது செய்து நிற்றல்; அஞ்சுதல், எண்ணித் தவிர்தல். இது காரியமல்ல வென்றிகழப் படாதென்று சொல்லுவர் அறிவுடையோ ரென்பதாம்[1]. அ

429. எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்
என்பது

தமக்கு வருந் துன்பங்களை முன்னேயறிந்து வராதபடி காத்துக் கொள்ள வல்ல அறிவுடையார்க்கு ஒரு காலத்திலும் அவர் பயப்படத்தக்க துன்பம் வருவதில்லை யென்றவாறு.

இதனாற் காக்கலாங் கால மறியப்பட்டது. வருங்கால மறிந்து விலக்கவே அவற்குப் பொல்லாங்கு வராதென்பதாம். கூ

430. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்
என்பது

---

1. பேதைமை

1. சொல்லுவார் 'அறிவரர் தொழில்' என்றார்-என்று அச்சுநூலில் உள்ளது.

அறிவுண்டா யிருக்கப்பட்ட பேர்களுக்கு ஒன்று மில்லாதிருந் தாலும் அந்த அறிவாலே சகல பதார்த்தமும் உண்டாயிருப்பார் அவர்[1]; அறிவில்லாதபேர்கள் வெகுதனங் களை யுண்டாயிருந் தாலும் ஒன்று மில்லாத பேராவ ரென்றவாறு.

செல்வங்களெல்லா மறிவாற் படைக்கவும் காக்கவும் படு தலின் அஃதுடையாரை யெல்லா முடையவ ரென்றும், வெகு அயிசுவரியம் முன்னே தானே யுண்டாயிருந்தாலும் அது கெட்டுப் போகாமற் காக்கிறத்துக்கும்,[2] தெய்வங்கள் ராசாக் களால் அந்த அயிசுவரியம் போன காலத்தும் அறிவாலே பயப் படாமலிருந்து, இது முன்பு செய்த தீவினை யென நினைந்து, திரும்பத் தேடிக் கொள்ளத் தக்க அறிவில்லாத படியினாலே *என்ன உண்டாயிருந்தாலும் ஒன்று மில்லா ரென்பதாம்‡; ஆன படியினாலே சகல ஜனங்களுக்கு மறிவே காரண[3] மென்பதாம். ய

ஆக அதிகாரம் சமங; குறள்சளஙய

இப்பால் 44. குற்றங்கடிதல்

என்பது, காமம் லோபம் கோபம் மானம் ஆங்காரம் உவகை என்னப்பட்ட குற்றங்களாறினையுந் தன்னிடத்து வராமற் காத்தல் ராசாவுக்குச் சிறப்பா மென்பது.

431. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து

என்பது

மதமும் கோபமும் காமமுமாகிய குற்றங்களில்லாத அரசரது செல்வம் மெத்த நல்ல பெருமையுடைய செல்வ மென்றவாறு.

மதமாகிய ஆங்காரமும், செல்வக் களிப்பாகிய அதிக சந்தோஷமும், மட்டுமித மில்லாத சினமும் காமமுஞ் சிறியோர் செயலாகலின் இதனை[3] விடவேண்டு மென்பதாம். க

---

1. யிருப்பராவர்-என்பது அச்சுநூல் 2. காக்கிறதற்கும் 3. பிரதானம் அச்சுநூல் *முதல் வரை ''என்னுடைய ரேனுமிலர் என்றுங் கூறினார் அச்சுநூல்

1. இவற்றை

432. இவறலு மாண்பிறந்த மானமு மாணா
வுவகையு மேத மிறைக்கு

என்பது

தன்னை வந்து கேட்ட பேர்களுக்குக் கொடாமல் இல்லையென்கிறதும், நல்லகாரியங்களை விட்டுவிடுகிற அபிமானமும், மட்டுமிதமில்லாத சந்தோஷமும் இந்த மூன்று குணமும் ராசாக்களுக்குக் குற்றமென்றவாறு.

நல்ல காரியங்களை விட்டு விடுகிற அபிமானமாவது,

பிராமணர் அறிவாலுயர்ந்த பெரியோர் நல்லதவசிகளையுடையவர்கள் தனக்கு மூத்தபேர்கள் தகப்பன் தாய் இவர்களை வணங்காமலும், தங்களால் முடிப்பியாத காரியங்களை நாம் நினைத்தது முடியாது விடப்போகாதென்று கெட்டியாய் முடிப்பிக்கிறதுமாம்.

இந்த இரண்டு பாட்டாலுங் குற்றங்களிது[1] வென்று சொல்லப்பட்டது.

433. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்

என்பது

பழியை யஞ்சி நடக்கிற பெரியோர்களிடத்திற்றினையத்தனை குற்றம் வந்த தாயினும் அதனை ஒரு பனையத்தனையாக வெண்ணுவ ரென்றவாறு.

உயர்ந்த சாதியாகிய பெரியோர்க்குக் குற்றம் பொறுக்கப் போகாதாயினும் தினையத்தனை என்று பொறார்; அந்தக் குற்றத்தைப் பனையத்தனையாகக் கொண்டு வருந்திப் பின் அது வாராமற் காத்துக் கொள்வ ரென்பதாம்.

434. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தருஉம் பகை

என்பது

---

1. இது - இவை

ஒருவனுக்குப் பொல்லாங்கு பண்ணுகிறது பகையாகிற குற்றமேயாகலான், அந்தக் குற்றம் தன்னிடத்திலொருக்காலும்[1] வராமற் காத்துத்திரிகிறதே பலனென்றவாறு.

இம்மை மறுமைக்குப் பொல்லாப்பைத் தருகிற படியினாலே, அந்தக் குற்றம் வராமற் காக்கிறதே நல்லவர் தொழிலென்பதாம். ச

435. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்

என்பது

ராசாவானவன், தனக்கொரு குற்றம் வருவதை முன்னே யறிந்து, அது வராமற் பரிகரிக்க வேணும்; அப்படிப் பரிகரியாதவ னரசு, நெருப்பு எதிராக விருந்த வைக்கோற்போர் போல் அழிந்துவிடு மென்றவாறு.

குற்ற மிகச்சிறிதானாலும் வரத்தக்க காலமறிந்து காராமற்[2] போனால் அதனாற் பெரிய செல்வ மழிந்துவிடுமென்பதாம். ரு

436. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு

என்பது

முன்னே தனக்கு வரக்கடவ குற்றங்களைக் கண்டு பரிகரித்துப் பின்பு பிறர்க்கு வருங் குற்றங்களைக் காணவல்ல அரசனுக்கு இம்மை மறுமைக்குங் குற்றமே யில்லை யென்றவாறு.

குற்றங்களைப் பார்த்துப் பரிகரிக்க வல்ல அரசனே முறை கேட்டற் குரித்தானவன் என்பதாம். சா

437. செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.

என்பது

---

1. ஒருகாலும் 2. காக்காமல்

தன்னாற் தேடப்பட்ட பொருள்களாற் றனக்கு இம்மை மறுமைக்குச் செய்து கொள்ள வேண்டிய காரியங்களைச் செய்து கொள்ளாது பணத்தைச் செலவு[1] பண்ணாமற் கெட்டியாய்த் தேட வேணுமென்று வைத்தவன் செல்வம் வெகு சீக்கிரத்திலே கெட்டுப்போ மென்றவாறு.

கொள்ளவேண்டிய காரியங்களாவது[2], தானதர்ம பரோப காரங்கள் தனக்கு உணவு முதலியன செய்து கொள்ளல், திரவி யத்தை நாள் தோறும் வளரப்பண்ணுதல்-இப்படிச் செய்து கொண்டராசாவுக்கு ஒரு காலமும் குற்றம் வராதென்பதாம். எ

438. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.
என்பது

பொருள்களைச் சிலவு[1]பண்ணு மிடத்து ஆசை யென்னப் படா நின்ற லோபம் குற்றங்கள் எல்லாவற்றிலும் பெரிய குற்ற மென்றவாறு.

அந்த லோபமென்பது சகலமான குணங்களை யெல்லாங் கீழ்ப்படுத்தி, நல்லவன் என்கிற பேரையுங் கெடுத்து விடுமென்ப தாம். ஆகவே சற்றும் லோபமாகா தென்பதாம். அ

439. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை
என்பது

தான் சகல குணங்களாலும் நிறைந்திருந்த பெரியோனே யாயி னும் அந்த மதத்தாற் றன்னை நன்கு மதியா தொழிக; தனக்கு நல்லதல்லாத காரியங்களை மனத்தினும் நினையாமலிருக்க வென்றவாறு.

தன்னைத்தான் பெருமையா யெண்ணுங்காலத்துத் தனக்கு வரப்பட்ட குற்றங்களை நினைத்து விலக்கக் கூடாதாம்; ஆகவே தன்னைத்தான் புகழ்ந்து கொள்ளலாகாதென்பது. கூ

1. செலவு 2. ஆவன.

1. செலவு

440, காதல காத லறியாமை யுய்க்கிற்பின்
ஏதில வேதிலார் நூல்*

என்பது

தன்னால் விரும்பப்பட்ட ஸ்த்திதி[1] முதலான பொருள்களை அவர்களாசை யறியாம லனுபவிக்க வல்லவனாயின் பகையாளியன் தன்னை வஞ்சிக்க நினைக்கிற நினைவு பழுதாமென்றவாறு.

தன்னா லாசைப்படப்பட்ட பொருள்களைப் பகைவர் அறிந்தாராகில் அது மூலமாக வஞ்சித் தழிப்பரென்பதாம். ஸ்திதி[1]களாலும் தன்னாசை யறியாம லனுபவிக்க வேண்டு மென்பதாம். ராசாக்கள் முதலான பேர்களுக்குக் காமம் வெகுளி யுவகை யென்பன நன்றாக விடப்பட்ட குற்றமல்லாமையால் பெரும்பாலு மிதுகளைப்[2] பாராட்டாமை கூறினார். ம

ஆக அதிகாரம் சயிசக்குக்குறள் சளசம

இப்பால் 45. பெரியாரைத் துணைக்கொளல்[3]

என்பது காமக்குரோத லோபமோக மத மாற்சரிய மென்னப் பட்ட குற்றங்களை நீக்கி அரசாளுகிற ராசாவாலே[4] பொல்லாத நெறிகள் விலக்கி நல்ல நெறிகளிலே செலுத்தப்பட்ட அறிவுடைய பெரியோரைத் தனக்குத் துணையாகக் கொள்ள வேணுமென்பதாம்.

441. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்

என்பது

தர்மத்தினுடைய வழியை நன்றாக வறிந்து தன்னிலும் பெரிய அறிவுடையோரது கேள்விகளை[1] நன்றாகக் கேட்டறிந்து கொள்ளுதலே அரசற்குச் சிறப்பென்றவாறு.

---

1. கேண்மை என்ற சொற்குக் ''கேள்வி'' என்ற பொருள் தரப்பட்டுள்ளது. (கேள்விகளை) 1. முதலானவைகளினாலே

* அச்சுநூலில் காதல என்பது 439 ஆகவும், வியவற்க 440 ஆகவும் உள்ளன.

1. ஸ்திரீ என்பது அச்சுநூல் 2. இவைகளை 3. துணைக் கோடல் என்பது அச்சுநூல்; பிறரெல்லாமும் 4. ராசா என்பது அச்சுநூல்

அறிவுடையார், நீதியையும் உலகியலையு மறிந்த பெரியோர். திறனறிதலாவது, பெரியோர்களை யறிந்து கொண்டாடுதல் வணங்குதல் தனதான்னியங்கள் முதலானதுகளிலே[1] சகாயம் பண்ணுதல். க

442. உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்

என்பது

தெய்வத்தால் மனிதரால் தனக்குவந்த பொல்லாங்குகளை நீக்குமுபாய மறிந்து நீக்கிப்பின் அப்படி வராமல் முன்னே யறிந்து காக்கவல்ல அறிவுடைய பெரியோரை அவர்கள் மனசு சந்தோஷமாகும் படிச்செய்து துணையாகக் கொள்க வென்றவாறு.

தெய்வத்தால் வருந்துன்பங்களாவன, மழையில்லாமற் போகை மிகுத்துப்பெய்தல் தீ பிணி; இது[1]முதலான கேடுகள் வந்த காலத்துத் தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்து ஓம சாந்தி போசனங்களால் நீக்கப்படும். மனிதரால் வரும் துன்பங்களாவன, பகையாளியன் திருடர் உறவின் முறையார்களால் வந்த குற்றம். இதுகளுக்குச்[2] சாமபேத தானதண்டங்களாகிய நாலுவகையுபாயங்களினால் விலக்கப்படுவன. வருவதன்முன்னே காத்தலாவது, தெய்வங்களால் வருமவற்றை யுற்பாதங்களாலறிந்து சாந்திகளாற் காத்தலும், மனிதரால் வரப் போற[3] பகையை அவரவர் மனங்களையறிந்து சிநேகமாக்கிக் காத்தலுமாம். இப்படிப்பட்ட குற்றங்களை வராமல் காக்கவும்[4] வந்தாலதனைப்[5] பரிகரிக்கவும் வல்ல மந்திரி புரோகிதர் முதலான அறிவான் மிகுந்த பெரியோரைத் துணையாக்கிக் கொள்ள வேண்டுதலே ராசக்கள் முதலான பேர்களுக்கென்பதாம். உ

443. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்

என்பது

---

1. இவை 2. இவற்றுக்கு 3. போற-போகிற 4. கார்க்கவும் என்று காகிதச் சுவடியிலுள்ளது 5. அவற்றை

முன்சொன்ன மந்திரி முதலான பெரியோர்களை அவர்கள் மனது சந்தோஷமாம் படி செய்து தமக்கு மெத்த சினேகித ராகப் பண்ணிக் கொள்ளுகிறது. ராசாமுதலான பேருக்கு அருமையான பொருள் எல்லாத்திலும்[1] அருமை யென்றவாறு.

உலகத்திலே அரிய பொருள்களெல்லாம் ராசாக்கள் பெற வேண்டுவதாதலின் இப்படிப்பட்ட பேர்களைச் சினேகிதராக்கிக் கொள்ளவே சகலமுவருமென்பதாம். ௩.

**444** தம்மிற் பெரியோர் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை

என்பது

அறிவு முதலான நல்லகாரியங்களிலே தன்னிலும் பெரிய வர்களைத் தமக்கு உறவாகப் பண்ணிக் கொள்ளுதல், அந்தப் பெரியவர் சொற்படி கேட்டு நடத்தல், ராசாக்களுக்குச் சகல பெலத்திலும் மிகுந்த[2] பலனென்றவாறு.

திரவியஞ் சேனை நல்ல பத்திரமான இடம் இதுகளைப்[3] பார்க்கத் தனக்குவந்த குற்றங்களெல்லாத்தையும்[4] தீர்க்கப் பட்ட பெரியவர்களிட[5] வுறவே மெத்த நல்லதென்பதாம் ௪

**445.** சூழ்வார் கண்ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்

என்பது

ராசா மந்திரிகளைத் தன்கண்போலப் பார்த்து நடத்தி வருதல் முறைமை; அப்படிப்பட்ட மந்திரிகளை யாராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ளுக வென்றவாறு.

ராசா தானே சகலமான காரியங்களையு மறிந்து நடப் பிக்க வல்லவனாகிலும், மந்திரிகளை யல்லாமல் நடவாதென்பது கொண்டு, கண்போலப் பார்க்க வேண்டுமென்பதாம். ரு

---

1. எல்லாவற்றிலும் 2. 'மிகுத்து' என்று சுவடியில் உள்ளது 3. இவை களைப் 4. எல்லாவற்றையும் 5. பெரியவர்களுடைய

446. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்

என்பது

முன் சொல்லப்பட்ட பேர்களைத் தனக்குறவாகிய இனங் களாகப் பண்ணித் தானும் மேல் வருங்காரியங்களை நன்றாக விசாரித்து அறிந்து நடக்கவல்ல ராசாவைச் சத்துருக்களாலே ஒரு காலத்திலும் ஒன்றுஞ் செய்யக்கூடாதென்றவாறு.

தக்காரென்பது, அறிவு ஆசாரம் முதலானது[1] தப்பாமல் நடந்து தர்மசாத்திரப்படி யறிந்து நடப்பிக்கவல்லவர்கள். செற்றாராகிய சத்துருக்களாவர், சிநேகிதரைப் பிரிப்பிக்க வல்லவர் பகையாளியல்லாத பேரைப் பகையாக்குகிற[2] பேர்கள். இப்படிப்பட்ட தொழில்களாலும் தங்கள் பலத்தாலும் பலபல விதங்கள் சத்துருக்களாற் செய்யப்பட்டதானாலும் அதுகளைத்[1] தானும் நன்றாக ஆராய்ந்தறிந்து பெரியோர்கள் சொல்வழியுங் கேட்டு நடக்க வல்ல பேர்களிடத்திலொன்றும் வராதென்ப தாம்.

447. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்

என்பது

தீயனவாகிய பாவங்களும் நீதியல்லனவும் வராதபடி சொல்லி நடப்பிக்க வல்ல பெரியோர்களைத் தனக்குச் சிறந்த தோழராக வுடைய ராசாவைக் கெடுக்கப்பட்ட பேர்களுலகத்தில் யாவரு மில்லை யென்றவாறு.

448. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்

என்பது

தனக்கு நீதியறிந்து சொல்லப்பட்ட மந்திரி புரோகிதர் முதலான பெரியோர்களைத் தனக்குத் துணையாகக் கொள்ளா

1. முதலானவை 2. பகையாக்குகிற

1. அவைகளைத்

மையின், காவலில்லாத ராசாவானவனைக் கெடுப்பாரொருவரு மில்லாவிட்டாலுந் தானே க்கெட்டுப்போவனென்றவாறு. தானே கெடுதலாவது பாகனில்லாத யானை போல நெறியல்லாத நெறிச்சென்று கெடும் என்பதாம். அ

449. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை

என்பது

முதற் பொருளாகிய கையிருப்பில்லாத பேர்க்கு அதனாற் படைக்கப்பட்ட லாப மில்லாதது போலத் தம்மைத் தாங்குவதாகிய துணைகள் இல்லாத போது ராசாக்களுக்கு ஒரு பொருளும்[1] நிலையில்லா தென்றவாறு.

முதற் பொருளாகிய பணங் காசு கையிலிருந்தே லாபம் பெற வேண்டுமாறு போலத் தாங்குபவராகிய பெரியோர்களிருந்தே அரசாளுகிறது நிலை பெற வேண்டுமென்பதாம்.

நிலைபெறலாவது, அரச பாரத்தோடு சலியாது நிற்றல். கூ

450. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்

என்பது

தான் தனியனாய்ப் பலபேர்களுடனும் பகையா யிருக்கிறத்திலும்[1] பத்தத்தனை பொல்லாதாம், பெரியாரோடு நட்புக் கொள்ளா தொழித லென்றவாறு.

பலபேர்கள் பகையாயிருந்தாலும் தான் பெலவானானால் எப்படியாகிலும் பிழைத்தல் கூடும். நல்லாராகிய பெரியோர்கள் சினேகத்தை விட்டுவிட்டால் எந்த விதத்திலும் பிழைத்தல் கூடாது. ஆனபடியினாலே அந்தப் பகையைப் பார்க்க இது பத்தத்தனை பொல்லா தென்றார். ஆகவே பெரியோராகிய பேர்களுடனே சினேகம் பண்ணுகிறதே ஒரு காலத்திலும் அழியாத பொருளென்பதாம்.

ஆக அதிகாரம் ௪ ௰ நிக்குக்குறள் ௪ ௱ ௫ ௰

1. இருக்கிறதிலும்

இப்பால் 46. சிற்றினஞ் சேராமை

என்பது, சிறிய வினங்களைப் பொருந்தாமை, சிறியவின மாவது நல்ல பொருள்களினுடைய நன்மையும், பொல்லாத பொருள்களினுடைய நன்மையும் பொல்லாங்குகளுந் தெரியாம லொன்றுமில்லை யென்பவரும், அடங்காத காளைகளும்[1] எக் காலமும் பொல்லாத தொழில்களே செய்யப்பட்ட தூத்தரும்[2] கூத்தாடி முதலாகிய கூட்டங்களுமாம். இப்படிப்பட்ட பேர் களுடனே சினேகம் பண்ணினால் எந்த விதத்திலு மறிவைக் கெடுத்து இம்மையிலே பொல்லாதவன் என்பிச்சு[3] மறுமையிலே பொல்லாத கெதியிலே விடுமாதலால் இப்படிப்பட்ட பேர் களுடைய உறவு ஒருகாலத்திலு மாகா தென்பதாம்.

451. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடல்[1]

என்பது

பெரியோர்களுடைய வியல்பு சிறிய வினமாகிய ஈனரை யஞ்சவேண்டும்; அந்தச் சிறிய வினங்களைச் சேரவேயப் பொழுதே யவர்களையே சுற்ற மாக்கிப் பெரியோர்கள் சேரார்க ளென்றவாறு.

சிறிய வினங்களைச் சேரவே நல்லறிவு கெட்டுச் சகல துன்பங்களும் வந்தடையும்; ஆகவே பெரியோர் சொல் இகட்சியாய்[2] நிற்கும்; இதனாற் சிறிய வினம் பெரியோர்க ளாகா தென்பது கூறப்பட்டது.
க

452. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு

என்பது

தண்ணீராவது எந்த நிலத்தைச் சேருதோ[3] அந்தப்படியாய் நின்று தன் குணங் கெட்டுப்போம்; அது போல மனிதர்க்குத்

1. காலைக்கும் என்று காகிதச் சுவடியில் உள்ளது 2. தூர்த்தர் - வஞ்சகர் 3. எண்பித்து என்பது அச்சுநூல்

1. விடும் என்பதே பிறரெல்லாம் கொண்டபாடம் 2. இகழ்ச்சியாய் 3. சேருகிறதோ

தான் சேர்ந்த வினங்களாலே யறிவு திரிந்து[1] அந்த வினங் களுடைய வறிவே வர்த்திக்கு[2] மென்றவாறு. தண்ணீர் நல்ல நிலத்தைச் சேரவே நல்ல ருசியாயிருக்கும்.

மனிதரும் நல்ல அறிவுடையாரைச் சேரவே நல்ல அறிவுண்டாம். பொல்லாத வினங்களை யொருகாலத்திலும் அறிவுடைய பேர்கள் சேரலாகா தென்றவாறு. உ

453. மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்னா னெனப்படுஞ் சொல்

என்பது

உலகத்து மனிதர்க்குப் பொதுவான வறிவுதம் மனங் காரணமாக உண்டாம்; சகல செனங்களாலும் நல்லவன் பொல்லாதவ னென்கிற பேர் தங்களைச் சேர்ந்த இனங் காரணமாக உண்டா மென்றவாறு.

சுபாவமான அறிவுடையவன் நல்லினங்களைச் சேரின் அச்சேர்க்கை[1] நல்ல அறிவு கொடுத்து இம்மை மறுமைக்குப் புகழும் புண்ணியமு முண்டாக்கும். தீயவினங்களைச் சேரில் நாள் தோறும் தன்னுடைய நல்ல அறிவு கெட்டுப் பொல்லாத குணமாய்க் கெடுத்துவிடும். ஆகவே ஒருகாலத்தினுஞ் சிற்றினங் களைச் சேரலா காதென்பதாம். ௬.

454. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு

என்பது

நல்ல விசேஷமாகிய அறிவுடன் கூடியிருந்த பேர்களிடத்திற் சிற்றினமாகிய தூர்த்தர் கூடவே யிவனுடைய நல்ல வறிவும் அந்த வினங்களறிவுடனே கூடிவிடு மென்றவாறு.

---

1. 'தெரிந்து' என்று காகிதச் சுவடியிலுள்ளது 2. இருக்கும்.

1. அச்சுநூலிற்கண்டது

தன்னிடத்தி லெத்தனை நல்ல வறிவிருந்தாலும் தீயினங்களைச் சேரவே நாள்தோறும் அந்த நல்ல வறிவைக் கெடுப்பரென்பதாம். இனம் நல்லதானால் எல்லா நற்குணங்களுமுண்டாமென்பது. சு

455. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்

என்பது

அந்த நல்ல வறிவு பயன்படுதற் கிடனாகிய மனது சுத்தமாகிறதும் ஒருவன் செய்யப்படுங் காரியங்கள்[1] நல்லதாகிறதும் இந்த இரண்டு காரியமும் நல்ல இனங்களைச் சேர்ந்தாலல்லதில்லை யென்றவாறு.

மனந்தூயனாதலாவது, அறியாமை யாகிற பொல்லாங்கு நீங்கி நல்ல வறிவுகளை யறிகிறது. வினை தூயனாதலாவது, தான் பேசுகிற பேச்சும் செய்யப்பட்ட காரியங்களும் அறிந்து செய்தல். இனந்தூயனாவது, வெகு சினேகிதர் போல நல்ல காரியங்களைச் செய்விப்பர் போலவே காலம் பார்த்துப் பொல்லாத காரியங்களிலே சேர்த்து விடுகிற தீயினங்களை விட்டு நல்லினங்களையே சேர வேண்டுமென்பதாம். ரு

456. மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை

என்பது

மனது சுத்தமா யிருந்தபேர்களுக்கு அல்லது நல்ல உத்தம குணமான புத்திர ரில்லை; இனந்தூயராயினார்க்கு நன்றாய் முடியாத காரியமு மில்லை யென்றவாறு.

ஆகவே நல்லினங்களாற் சேர்ந்தவனுக்கு நல்ல புத்திரரும் நல்ல காரியங்களு முண்டாயிருக்கும்; தீயினங்களைச் சேரவே யிதுக[1] ளொன்று மில்லையென்பதாம். சா

457. மனநல மன்னுயிர்க் காக்கம் இனநல
மெல்லாப் புகழுந் தரும்

1. செய்யுங்காரியம்

1. இவைகள்

என்பது

எக்காலமும் நிலைபேறுடைய உயிர்கட்கு மனத்தின் நன்மை செல்வத்தைக் கொடுக்தும்; இனத்தின் நன்மை அந்தச்செல்வத்துடனே எல்லாப் புகழையுங் கொடுக்கு மென்றவாறு.

மனது நன்றாதல் தானே சகல தர்மமுமாகலின் அதனைச் செல்வந் தருமென்றும், புகழையே கொடுத்தற்குரிய நல்லோர் தாமே எக்காலமு முறவாகலின் எல்லாப் புகழுந் தருமென்றுங் கூறினார்; ஆகவே மன நன்மையின் இன நன்மையே பெற வேண்டுமென்பதாம். எ

458. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
இனநல மேமாப் புடைத்து

என்பது

தாம் முன் செய்யப்பட்ட நல்வினையாலே நல்ல மனத்தை யுடையராயினும், அதற்குத் துணையாக இன நன்மையைத் தேடுவதே கரும மென்றவாறு.

தான் முன்பு செய்த நல்வினை யுள்ள (வழி) நாடோறு மந்த நல்வினையைப் போகவொட்டாமல் வளர வைத்துக் கொண்டு வருகிற படியினாலே நல்லினங்களைச் சேரவே பெருமையுண்டாம்; தீயினங்களைச் சேரவே முன்பு செய்த புண்ணியத் தால்வந்த அயிசுவரியம் முதலானது களை[1]யுங் கெடுத்து விடுவதென்பதாம். அ

459. மன நலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து

என்பது

ஒருவனுக்கு மனது நன்மையாயிருக்கவே மறுமைக்கு வேண்டின செல்வமெல்லாம் உண்டாம்; அந்தச் செல்வமுண்டாகிறத்துக்[2]குப் பலமாவது நல்ல அறிவுடைய பெரியோர்கள் சொல்லப் பட்ட வழியைக் கேட்டு நடக்கவேணு மென்றவாறு.

---

1. முதலானவைகளை 2. உண்டாகிறதற்கு

ஒருவழி தாமத குணத்தாலே மனதுகெட்டுப் போனாலும் அது போனபடியே விடாது நல்ல தர்மங்களைச் சொல்லித் திரும்பி நல்ல நிலையிலே நிறுத்தி விடுவர், நல்லினமாகிய பெரியோர்க ளென்பதாம். கூ

460. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்

என்பது

ஒருவனுக்கு நல்லினஞ் சேர்தலை யொத்த துணையு மில்லை தீயினஞ் சேர்தலை யொத்த பகையு மில்லை யென்றவாறு; நல்லினம் அறியாமையை நீக்கி யிம்மை மறுமைக்குந் துக்கம் வராதபடி காத்தலின் அதனைத்துணை யென்றும், தீயினம் அறிவைக் கெடுத்துத் துக்கம் அனுபவிக்கப் பண்ணுகிற படியி னாலே அதனைப் பகையென்றுங் கூறினார்; ஆகவே சிநேகிதர் களிடத்திலே பொல்லாத நடக்கையைக் கண்டவுடனே அவன் சிநேகத்தை விட்டு நல்ல நடக்கையிலே யிருக்கிற பெரியோர்கள் சிநேகங்களையே பெறவேண்டு மென்பதாம். ௰

ஆக அதிகாரம் ௪௰௬க்குக்குறள் ௪௱௬௰,
இப்பால் 47. தெரிந்து செயல்வகை

என்பது, ராசாவானவன் தான் செய்யப்பட்ட காரியங்களை நன்றாக ஆராய்ந்தறிந்து பெரியோர்களையுந் துணையாக வைத்துக்கொண்டு செய்யுந்திறம்; அப்படிச் செய்தாற் குறை யில்லாமல் முடியுமென்பதாம்.

461. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்

என்பது

காரியங்கள் செய்யுமிடத்து அந்தக் காரியங்களா லழிந்து போறதும்[2] போனபிற்பாடு ஆகிறதுமாய் நின்று பிற்பொழுது தரும் லாபத்தையும் நன்றாக வாராய்ந்து செய்வதாகிற் செய்வதென்ற வாறு.

2. போகிறதும்

தான் செய்யுற[1] காரியங்களிலாகிறது மாகாததும் நன்றாக விசாரித்து லாபமில்லாதாயினும்செய்ய வேண்டும்; செய்யவே இரண்டு காலத்தும் பயனுடைமை தெரிந்து செய்க வென்ப தாம். சு

462. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்

என்பது

நன்றாகச் செய்த காரியந் தவிரக் காரிய மறிந்து செய்விக்கத் தக்க வினைத்துடனே செய்யத்தகும் வினையை யாராய்ந்து பின் தானு மந்தக் காரியத்தை நன்றாக வாராய்ந்தறிந்து செய்து முடிக்கவல்ல ராசாக்களுக்கு ஆகாத காரியங்க ளொன்று மில்லை யென்றவாறு.

வினையாவது, மேல்வருவதாகிய நன்மைகளை யறிந்து செய்யப்படுந்தொழில்கள். அப்படி யறிந்து செய்யுற[2] காரியங்கள் தவறாமல் முடிதலின் அரிய பொருள்களெல்லாம் எளிதாக முடியு மென்பதாம். உ

463. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்

என்பது

தான் செய்யுங் காரியங்களிலே, வரப்பட்ட லாபத்தினைப் பார்த்து லாபம் வருதென்று[3] முன் தன்னிடத்திலிருந்த முதலாகிய திரவியங்களை யிழந்துவிடுகிற காரியங்களைச் செய்யா ரறிவு டையா ரென்றவாறு.

திரவிய வாஞ்சையாலே வெகுலாபம் வருகுதென்று[4] கை யிருப்பு முதலில்லாமல் பணங் காசுகளெல்லாம் இழந்து விடல், காலங்களையறியாமல் பிறருடைய மண்ணைக் கொள்வான் சென்று தம் மண்ணையு மிழத்தல் போலவாம்; ஆகவே முன் செய்த தீவினையால் அப்படிப் புத்தி விளைந்து விடினும் அறிந்து

1, 2. செய்கிற

3, 4. வருகிறதென்று

செய்யுற[1]பேர்களுக்கு அதுவும் விலக்கலாமென்பது பெற்றாம்.
௬௩

464. தெளிவி லதனைத் தொடங்கா[2]ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்

என்பது

நல்ல இனத்துடனே தனித்தும் ஆராய்ந்தும் துணிதலில்லாத காரியங்களைச் செய்யார், நல்ல பேர்கள்தமக்கு[3] இளிவரவாகிய குற்றம் வரப்போகுதென்று அஞ்சி நடப்பவரென்றவாறு.

செய்யத் தொடங்கவே[4] நடுவே குற்றம் வருமென்று யோசனையில்லாத காரியங்களைச் செய்யாரென்பதாம். ௬௪

465. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு

என்பது

ராசாக்கள் முதலான பேர்கள், பகைவர்மேற் செல்லுங் காலத்து, 'இந்த வேளை பகையாளிகள் மேற்போனாலிப்படியாம்' என்குறத்தை[5] நன்றாக ஆராய்ந்தறியாது, சிறிது ஆலோசனை யானவுடனே போனால் அது அவர்களுக்கு[6]வளருநிலத்திலே நிலைபெறச் செய்வதொரு நெறியா மென்றவாறு.

வளருநிலமென்பது, நாலு திசையும் ஆணை[7]யையுடைய நிலம். ஆராய்ந்தறிதலாவது, வலிகாலம் இடமென இதுகளாலே[8] தனக்கும் பகைவர்க்கும் உளவாய நிலைமைகளும் போர் தொடங்குமாறும் அதற்குவரு மிடையூறுகளும் அவற்றை நீக்குமாறும் வெல்லுமாறும் அதனாற் பெறப்பட்டபயனும் முதலாயின. இதுகளிலே[9]சிறிது உபாயமில்லாமற் பகையாளியை வெல்லுதல் அவர்களுக்கு நல்ல அரணான நிலத்தைக் கொடுத்தாற்போல வென்பதாம். ஆகவே எதிராளிகள் பெலங்களை நன்றாகவறிந்து வெல்லுங்காலம் பார்த்து வெல்லவேணு மென்பதாம். ௬௫

---

1. செய்கிற 2. துடங்கார் என்று காகிதச் சுவடியிலுள்ளது.

3. இது அச்சு நூலில் இல்லை 4. துடங்கவே என்று காகிதச் சுவடியிலுள்ளது 5 என்கிறதை 6. பகைவர்களுக்கு 7. ஆணை யென்பது அச்சு நூல் 8. இவைகளாலே

9. இவைகளிலே

466. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்
என்பது

ராசா வானவன் தான் செய்யத்தகுவன வல்லாத காரியங்களைச் செய்யவே கெடும்; தன்னாற் செய்யப்பட்ட காரியங்களைச் செய்யாதிருக்கினும் கெடும் என்றவாறு.

செய்தக்க வல்ல வாவன; பெரிய முயற்சியவும், செய்தாற் பயனில்லனவும், அது சிறிதாயினவும், ஐயமாயினவையும், பின் துயர் விளைவிப்பனவும் என இவை, செய்யத்தக்க வாவன; அவற்றின் மறுதலையாயின.[1] இச் செய்யாமைகளால் அறிவு ஆண்மை பெருமை என்னும் மூன்று மில்லாத விடத்துப் பொருள் படையென விருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கெளியனாமாகலின் இரண்டுங் கேட்டிற் கேதுவாயின, ஆகவே செய்யத் தக்க காரியங்களை யறிந்து செய்து, செய்யத் தகாத[2] காரியங்களைத் தவிரவேணு மென்பதாம். சு

467. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு
என்பது

செய்யத்தக்க காரியங்கள் முடிவுற[3] வுபாயங்களை நன்றாக வெண்ணிச் செய்க. உபாயங்களை யறியாமற் செய்து பின்னுபாயந் தேடிக் கொள்வோ மென்பது குற்றமா மென்றவாறு.

உபாயமாவது; பொருளைக் கொடுத்தல், நல்சொற்களைச் சொல்லுதல், விசேஷங்களாற் கண்டித்து வேறுபடுத்தல், தெண்டித்தல் என இவை தான சாமபேத தண்ட மென்பன. இந்த வுபாயங்களாலாய்ந்து செய்ய வேணு மென்பதாம். எ

468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப்[4] படும்
என்பது

---

1. அவற்றின் மறுதலையாயின - அச்சுநூலில் உள்ளது
2. செய்யாத 3. முடியுற 4. பெற்றுப் என்று காகிதச் சுவடியிலுள்ளன.

முடியுமு பாயத்தை யறியாது கருமங்களைச் செய்ய நினைக்கிறது செய்யுறது,[1] துணைவராகிய பெந்து செனங்களனேகம் பேர் நின்று புரைவராமற் காத்தாலும் புரை வந்து முடியாது கெட்டுப்போ மென்றவாறு.

முடியுமுபாயத்தை யறிகிற[2]தாவது, பொருளாசை யுடையவனுக்குப் பொருள்களைக் கொடுத்தும், செப்ப முடையவனான[3] புத்தியாளன் பூததயையுள்ளவன் பிற ராசாவொடு போர் செய்து நொந்தவன் என விவரங்களுக்குப் பொருளுடன் நல்ல வசனங்களைச் சொல்லியும், துணைப்படையான் நல்ல சேவகருடையவன் எதிராளிகளை என்னத் தனை யில்லை யென்று இகழ்கிறவன் இவர்களுக்குக் கோபமாய்க் கண்டிக்கிற பேத வசனம் சொல்லியும், இந்த மூன்றுபாயங்களிலு மாகாத கீழ்மக்கள் ஆனவர்களைத் தெண்டித்தும் வெல்லும் ஆற்றான் முயறல் இந்த உபாயத்தினாலே வெல்ல மாட்டாத அரசன் எத்தனை சேனையுண்டா யிருந்தாலும் பகையாளிகளை வெல்ல மாட்டா னென்பதாம்.

அ

469. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை
என்பது

பகையாளிகளிடத்திற் செல்லுமிடத்து நன்றான உபாயங்களால் அறிந்து செல்லினும் குற்றமுண்டாம், அவரவர் குணங்களை யாராய்ந்தறிந்து அந்தக் குணங்களுக்குத் தக்க காரியங்களைச் செய்யாவிடி னென்றவாறு

நன்றான உபாயமாவது, கொடுத்தலும் நல்ல விசேஷஞ் சொலலுதலுமாம். இது அவரவர்கள் குணங்களை யறிந்து செய்யவேணுமென்பதாம்.

கூ

470. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு
என்பது

1. செய்கிறது 2. அறியுற என்று காகிதச் சுவடியிலுள்ளது
3 செப்பம்-நடுநிலைமை

ராசாக்கள் செய்யுங் கருமம் முடிக்கிறபோது தன்னிலை யோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வாராயின் உலகம் தம்மை யிகழா நிற்குமாதலால், அப்படி யுலகத்தாரிகழாத வுபாயங் களை யறிந்துசெய்க வென்றவாறு.

தன்னிலையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது, தாம் மெத்த வல்லவராயிருந்தும் தமக்குச் சமானமில்லாத பேர்க்குக் கொடுத்தல் முதலிய மூன்றினையுஞ் செய்தலும், தான் மெத்த ஏழையாயிருந்தும் தம்மிலும் பெலத்த பேர்க்கு ஒறுத்தலைச் செய்கிறதுமாம்.[1] இந்த இரண்டும் அறிவிலார் செய்வன வாகலின் உலகங் கொள்ளா தென்றார். சாம பேத தான தண்ட மென்னப்பட்ட நாலுவகையு மவரவர்களை யறிந்து செய்யவேணு மென்பதாம். ய

ஆக அதிகாரம் சஎக்குக் குறள் சஎ0

இப்பால் 48. வலியறிதல்

என்பது, இப்படிச் சொல்லப்பட்ட உபாயங்களாலே செய்கிற[2] ராசா நாலுவகை வலியையு மறிய வேணு மென்றவாறு.

471. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்

என்பது

தான் செய்யக் கருதிய வினைவலியையும், இதனைச் செய்து முடிக்குந் தன்வலியையும், அதனை விலக்குகிற[3] மாற்றான் வலியையும், இருவர்க்குந் துணையானவர் வலியையும் சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க வென்றவாறு.

வலியென்பது பெலம். மாற்றான் வலி யதிகமானாற் செயலாகா தென்பதாம் க

1. செய்யுறதுமாம் 2. செய்குற 3. விலக்குற என்று காகிதச் சுவடியில் உள்ளன.

472. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்
என்பது

தனக்கான காரியமும் அந்தக் காரியத்துக்கு வேண்டிய வறுமை களையு மறிந்து, எப்பொழுதும் மனதை அந்தக் காரியத்தின் மேல் வைத்துச் செய்யவல்லவர்களுக்கு முடியாத காரியமில்லை யென்றவாறு.

வினைவலியும் மனவலியும் அதிகமானால் எல்லாக் காரியமு முடியு மென்பதாம். உ

473. உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்
என்பது

தங்களுடைய பெலத்தை யறியாமல் மனசு உற்சாகத்தி னாலே தன்னிலும் பெலவானுடனே பகையைச் செய்து கொண்டு அவர்கள் வறுமையினாலே கெட்டுப் போன பேர் லோகத்திலே யநேகம்பே ருண்டென்றவாறு. ஆகவே தம் வலியறிந்து தொடங்குக[1] வென்பதாம். ௩

474. அமைந்தாங் கொழுகான் அளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்
என்பது

அசலிலே[2] யிருக்கிற ராசாக்களுடனே சினேகம் பண்ணிக் கொண்டு மிரான், தன்னுடைய பெல வலுமையு மறிந்து செய் யாமற் றன்னைத் தானே பெரியவனாக நினைச்சுக்[3] கொண்டு பகை பண்ணிக் கொண்டவன் கொப்பெனக்[4] கெட்டுப் போவா னென்றவாறு.

அசல்[5] ராசாக்களுடனே சினேகமாயிருக்கிறது பகையாயிருக் கிறது இரண்டிலுந்தான் பெலவானானால் பகையாகவும் மெலிய

1. துடங்குக - என்பது காகிதச் சுவடியிலுள்ளது

2. அயலிலே 3. நினைத்து 4. கொப்பு-விரைவு 5. அயல்

னானால் நட்பாகவுஞ் செய்ய வேணு மென்பதாம். ச

475. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டம்
சால[1] மிகுத்துப் பெயின்

என்பது

மயிலிறகை யேற்றின வண்டியும் இருசு ஒடிஞ்சு[2] போம், அந்த மயிலிறகையும் வண்டி பொறுக்குமட்டல்லாமல் அதிகமா யேற்றினா லென்றவாறு.

எளியவர்களென்று பலரோடும் பகை பண்ணிக் கொண்டவன் அந்த எளியவர்கள் பலருங் கூடி வலியராய் அவர்களழிக்கக் கெடுவ னென்பதாம். ரு

476. நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்

என்பது

ஒரு மரத்தினுடைய நுனிக்கொம்பிலே ஏறினவன் அது மட்டிலே நில்லாமல் தன்னுடைய நினைவினாலே[3] பின்னையும் உயரவேற நினைச்சால்[4] அந்த நினைவு அவனுயிருக்கிறுதியாகிப் பிராணகானியைக் கொடுக்குமென்றவாறு.

பகைவர் மேற் செல்வான் தன்னளவு சென்று நில்லாது மனது உற்சாகத்தினாலே பின்னையும் போவானாகில் அந்த நினைவு அந்தப் பகையை முடிக்க மாட்டாமல் தன் பிராணனைப் போக்கு மென்பதாம். சு

477. ஆற்றி னளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி

என்பது

பொருளைக் கொடுக்கிறவன் தனக்குள்ள பொருளினளவறிந்து அதுக் கேற்கக் கொடுக்க; அப்படிக் கொடுக்கிறது பொருளை ரட்சிக்கிற வழியா மென்றவாறு.

---

1. சால்பின் என்று காகிதச் சுவடியில் உள்ளது 2. ஒடிந்து

3. நினைவினாலே - ஊக்கத்தினாலே 4. நினைத்தால்

பொருளுக் கேற்கக் கொடுக்கிறதாவது, தனக்குள்ள பொருளை நாலுபங்காக்கி ரெண்டு[1]பங்கு தன்சிலவு[2]க்கும் ஒரு பங்கு மேல் வருகிற இடையூறு நீக்குதற்கும் வைத்து நின்ற வொரு பங்கைக் கொடுக்க வேணு மென்பதாம். எ

478. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை
என்பது

அரசனுக்குப் பொருள் வருகின்ற வழி கொஞ்சமானாலும் கேடில்லை, பொருள் சிலவழிகிற வழி வருகிறத்திலும்[3] அதிக மாகாதிருந்தா லென்றவாறு.

ஆதாயத்திலும் சிலவதிகமானாற் கேடுவருமென்பதாம். அ

479. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்
என்பது

தனக்குள்ள பொருளை யிம்மாத்திரமென்றறிந்து அதற்குத் தக்கதாய் வாழாமல் அதிகமாகச் சிலவழிக்கிறவன் வாட்கை[4] இருக்கிறாப்போலே[5] யிருந்து ஒன்றுமில்லாமல் கெட்டுப்போ மென்றவாறு.

பொருளுக்குத் தக்கதாய் வாழ்கிறதாவது, தனக்கு வருகிறத் திலும்குறையச் சிலவிட்டாலும் சரியாகச் சிலவுபண்ணவேணு மென்பதாம்.
சுூ

480 உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக்[6] கெடும்
என்பது

தனக்குள்ள பொருளை யறியாமற்!சிலவு பண்ணின கீர்த்தி யால் அவன் செல்வம் வகையறக் கெடுமென்றவாறு.

---

1. இரண்டு 2. செலவு 3. வருகிறதிலும் 4. வாழ்க்கை 5. இருக்கிறாற் போலே 6 வல்லை - விரைவில்

பொருளிருந்த மட்டும் சிலவுபண்ணி அப்புறம் இல்லாமற் போய்விட்டால் முன் படைத்த கீர்த்தியும் ஒன்று மில்லாமற்போ மென்பதாம். பொருளை வளரவைத்து வரவறிந்து சிலவு பண்ண வேணு மென்பதாம். உ

ஆக அதிகாரம் சஅ ருக்குக்குறள் சஎஅ

இப்பால் 49. காலமறிதல்

என்பது, பெலத்தினாலே யதிகமான ராசா பகைவர் மேற் செல்லுமிடத்து அதற்கேற்ற காலமறிந்து செய்யவேணுமென்ப தாம்.

481. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை பிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது
என்பது

தன்னிலுமதிக பெலத்தையுடைய கோட்டானைக் காக்கை பகலிலே வெல்லும்; ஆனபடியினாலே பகைவரை வெல்ல நினைக் கிறவர்களுக்கு அதற்கான காலம் வந்தாலொழிய வெல்லப் போகாதென்றவாறு.

காலமாவது, வெய்யிலுங்குளிரும் சரியாய் வியாதிவராம லிருக்கவும் தண்ணீரும் உணவுமுதலியன உடையதாய்ச் சேனை வருந்தாமல் இருக்கிறதாங் காலம். அல்லாவிட்டால் சேனை யாலே பிரயோசனமில்லையென்பது. க

482. பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு
என்பது

அரசன் காலத்தொடு பொருந்தக் காரியஞ்செய்கிறது ஒரு வரிடத்திலும் நில்லாத செல்வத்தைத் தன்னைவிட்டு நீங்காமற் கட்டப்பட்டகயிறா மென்றவாறு.

காலத்தொடுபொருந்துதல், காலம் தப்பாமற் செய்தல்,

காலந்தப்பாமற் செய்தால் அதனால் வருகிற[1] செல்வம் எந் நாளும்விட்டு நீங்காமல் நிற்கும் என்பதாம். உ

483. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
காலமறிந்து செயின்
என்பது

ராசாக்களாலே செய்கிறதற் கரிதான காரியங்களுண்டோ, அந்தக் காரியங்களைச் செய்து முடிக்கிறத்துக்கான[2] ஆயுதங் களுடனே அதற்கேத்த[3] காலமறிந்து செய்தாலென்றவாறு.

ஆயுதங்களாவன, மூவகையாற்றலும் நால்வகையுபாயமு மாம். மூவகையாற்றலாவன[4]: பிரபு சத்தி, மந்திரிசத்தி, உற் சாக சத்தி. நால்வகையுபாய மாவன, சாமபேததான தண்ட மென்பன. ௩

484. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்
என்பது

ஒருவன் பூமியெல்லாந் தானே யாளக் கருதினா னாகிலும் அப்படியே வந்து கைகூடும். அதற்குச் செய்ய வேண்டிய காரி யத்தைக் கால மறிந்து செய்தாலென்றவாறு. காலமறிந்து செய் தால் கூடாத காரியமும் கூடுமென்பதாம். ச

485. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்
என்பது

தப்பாமல் பூமியெல்லாம் தான் கொள்ள நினைக்கிறவர்கள் தங்கள் பெலம்[5] அதிக மானாலும் அத்தை[6] யெண்ணாமல் அதற் கேற்ற காலம் பார்த்துக் கொண்டிருந்து அந்தக் காலம் வருமள வும் பகைவர் மேலே தண்டெடார்கள் என்றவாறு.

1. வருகிற

2. முடிக்கிறதற்கான 3. அதற்கேற்ற 4. மூவகையாற்றல்-அறிவு ஆண்மை பெருமை என்பர் பரிமேலழகர் (செய்தக்கவல்ல என்ற 466 ஆம்குறளுரை)

5. பெலம் - பலம் வலிமை 6. அதனை

தப்பா தென்றது, நினைத்தபடியே கொள்ளுதல். காலமறிந்து செய்தால் பெலம் அதிகமாய் வர்த்திக்கும். கால மறியாமற் செய்தால் பெலமுங் கீர்த்தியுங் குறைந்து வருத்தப்படுவரென் பதாம். (ரு)

486. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து

என்பது

அதிக பெலமுடைய ராசா பகைவர் மேலே தண்டெடாமல் காலம் பார்க்கும்; பார்த்துக் கொண்டிருக்கிற இருப்பு எப்படிப் போலே என்றால், பாய்ச்சலுக்கு நிற்குற[1] ஆட்டுக்கிடாய் தன் பகை யெல்லாந் தீரப் பாய்கிறத்துக்காக[2]ப் பின் இடைஞ்சு[3] போறத்தோடு[4] ஒக்குமென்றவாறு. சு

487 பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்

என்பது

அறிவுடையவர்கள் தன் பகைவர் குற்றஞ் செய்த பொழுதே அவர்களறியக் கோபிச்சுக்[5] கொள்ளார்; அவர்களை வெல்லு கிறத்துக்கான[6] கால மறிந்து அந்தக் காலம் வருகிற பரியந்தம் மனதுக்குள்ளே தானே கோபிச்சுக்[7] கொண்டிருப்பார்களென்ற வாறு.

பகைவரறியக் கோபிச்சுக் கொண்டால் தங்களைக் காத்துக் கொள்வார்கள்; காத்துக் கொண்டால் வெல்லுகுறது[7] அரிதாம். கோபமிகுத்தால் குற்றஞ் செய்யாம லடக்கக் கூடா தென்பதாம். எ

488. செறுநரைக் காணிற் சுமக்க இறுவரை
காணிற் கிழக்காந் தலை

என்பது

1. நிற்கிற 2. பாய்கிறதற்காக 3. இடைந்து 4. போகிறதோடு
5. கோபித்து 6. வெல்கிறதற்கான 7. வெல்கிறது.

தாங்கள் வெல்ல வேணு மென்று நினைக்கிறவர்கள் பகை, வற்று முடியுங் காலம் வருமளவும் அவரைக் கண்டால் வணங்க வேணும்; அந்தக் காலம் வந்தால் அவர்கள் பெருமை யில்லாமற் கெடுவ ரென்றவாறு.

பகை தீர்த்துக் கொள்ள வேண்டி மிகவுந் தாழ்வார்கள்; அப்படி வணங்கித் தாழ்ந்தாலவர்கள் தம்மைக் காராமல்[1] இருப்பார்கள்; அதனாலே தப்பாமற் கெடுவரென்பதாம். அ

489. எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்

என்பது

பகையை வெல்ல நினைக்கிறவர்கள், தங்களா லெய்துதற் கரிய காலம் வந்து கூடினால், அந்தக் காலம் கழிக்கிறத்துக்கு[2] முன்னே செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து கொள்ள வேணு மென்றவாறு.

காலம் பக்குவம் போனால் திரும்பி வாரா தென்பதாம். கூ

490. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து

என்பது

பகைவர்மேற் காரியஞ் செய்யாதிருக்கு மளவுங் கொக்கைப் போலே சுப்பா டாத்துக்[3] கொண்டிருக்க; அந்தக் காரியஞ் செய்து முடிக்குங் காலம் வந்தாற் கொக்கு மீனைப் பிடிச்சுக் கொள்ளுமாறு போலத் தப்பாமற் செய்க வென்றவாறு. ௰

ஆக அதிகாரம் ௪௰க்குக்குறள் ௪௯௰

இப்பால் 50. இடனறிதல்

என்பது, வலியுங் காலமு மறிந்து பகைவர் மேலே தண்டு போற[4] அரசன் தனக்கேற்ற நிலத்தையறிந்து செல்ல வேணு மென்றவாறு.

1. காவாமல்
2. கழிகிறதற்கு 3. பார்த்துக் 4. பிடித்துக் போகிற்

491. தொடங்கற்க[1] எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது
என்பது

சத்துருக்களைச் செயிக்கத்தக்க இடங்கண்ட பிறகல்லாமல் அதற்கு முன்னே பகைவர் மேலே யொரு காரியத்தையும் செய்ய வேண்டாம்; அவர்களைக் கொஞ்ச மென்று இகழ வேண்டாம் என்றவாறு.

இடமாவது, வாசல்களாலும் திட்டிகளாலும் சத்துருக்கள் வாராததாய்ச் சேனைகள் இருக்குறத்துக்கு[2] யோக்கியமாய் நீரும் நிழலு மரணுமுடையது. இப்படிப்பட்ட இடம் பெற்றால் பகை முடிக்கத் துடங்குக[3] என்பதாம். க

492. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்
என்பது

அதிக பெலத்தினை யுடையவர்க்கும் அரணாகிய இடத்தைச் சேர்ந்தால் அநேகம் நன்மைகளைக் கொடுக்கு மென்றவாறு.

முரண்சேர்ந்தவர்களாவது, பூமி ராச்சியம் எல்லார்க்கும் பொதுவென்றெண்ணாமல் நம்முதுபோகுது[4] என்கிற மனசுடையவர்களாம். உ

493. ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின்
என்பது

பெலவான் களல்லாதாரும் பெலவான்களாய் வெல்வர். அதற்கேற்ற இடத்தினையறிந்து சேர்ந்து தம்மைக் காத்துக் கொண்டு பகைவர் மேலே காரியம் பண்ணினா லென்றவாறு.

---

1. துடங்கற்க என்று காகிதச் சுவடியிலுள்ளது. 2. இருக்கிறதற்கு 3. தொடங்குக 4. நமது போகிறது

தம்மைக்காத்தலாவது, பகைவர்களாலே உபத்திரவம் வராமற் காத்துக் கொள்ளுகிறதாம். ௩

494. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்
என்பது

தாம் பகைவரைச் செயிக்கிறத்துக்கு[1] ஏற்ற விடத்தினை யறிந்து சென்று அரணாகிய காவலைப் பொருந்தி நின்று செய்தால் அவரை வெல்குறோம்[2] என்று நினைந்திருந்த ராசாக்கள் அந்த எண்ணமிழந்து போவார்களென்றவாறு.

தன்னைக் காத்துக் கொண்டு வினை செய்தால் எந்தக் காரியமும் வெல்லு மென்பதாம். ௪

495. நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி,
னீங்கி னதனைப் பிற
என்பது

முதலை யாழமான தண்ணியிலே[3] யிருந்தால் எல்லாச் சீவன்களையும் வெல்லும்; அந்தத்தண்ணியை[4] விட்டு வெளியே வந்தால் மற்றச் சீவன்களெல்லாம் முதலையை வெல்லுமென்றவாறு.

ஆனபடியினாலே யெல்லாரும் தங்கள் நிலையிலே யிருந்தால் பெலவான்களாய் வெல்லுவர்கள்; நிலையைவிட்டுப் பிரிந்தால் பெலகீனராய் வெல்ல மாட்டார்கள். பகைவர்பேரிலே சண்டை பண்ணப் போறவர்களும்[5] தமக்கு நிற்குறத்துக்கு[6] அரணாகிய இடமறிந்துபோய்ப் பகைவர் நிற்குறத்துக்குப் பொருந்தாத விடமறிந்து சென்று வெல்கவென்பதாம். ரு

4 6. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து
என்பது

---

1. செயிக்கிறதற்கு 2. வெல்வோம்

3. தண்ணீரிலே 4. தண்ணீரை 5. போகிறவர்களும் 6. நிற்கிறதற்கு

நிலத்திலே (ஓடப்பட்ட) வெகுகால்களையுடைய தேர்கள் கடலிலேயோட மாட்டா; கடலிலே ஓடப்பட்ட கப்பலும் பூமியிலே யோடமாட்டா என்றவாறு.

பகைவர் மேற் செல்லுகிறவர்களும் தன் பெலத்தினை யெண்ணாமல் இடத்தினையறிந்து செல்ல வேணுமென்பதாம்.

497. அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்
என்பது

பகைவரிடத்து உயித்தியம்[1] செய்யவேண்டின் அவன் அதற்கு வேண்டின கருவி காரியங்களை யெல்லாம் குறைபடாமலெண்ணி அதுகளை[2] ராசாக்களுடனே பொருந்தச் செய்தால் அவனுக்குத் துணை வேண்டாமென்றவாறு.

திண்ணியராய் நின்று மனவலுமை யாலே செய்து முடிக்கவேண்டுமென்பதாம் எ

498. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையான்
ஊக்க மழிந்து விடும்
என்பது

வெகுசேனையுடைய ராசா கொஞ்சமான சேனையுடைய வனைக் கொல்ல நினைச்சு[3] அரணாகிய விடத்திலே சென்றால் அந்தத்தல வலுமையினாலே வெகு சேனைகளு மழிந்து அந்த ராசாவுங் கெடுவ னென்றவாறு.

எளியரானவர்களை வலியார் கெடுக்க நினைத்து. அவர் அரணையடையின் தாமே கெடுவரென்பதாம். அ

499. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது
என்பது

1. உயுத்தம் - போர் 2. அவற்றை 3. நினைத்து

காவல் மிகுதியும் வலுமையு மில்லாதவர்களானாலும் அரணாகிய விடத்திலே யிருக்கிறவர்களுடனே சென்று பொரு கிறது அருமை யென்றவாறு.

ஆண்மை யுடையவர்களைச் சிறியரென்றெண்ண வேண்டா மென்பதாம்.

500. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு
என்பது

பாகனாகிய மாவட்டியற்கு[1] அடங்காததாய் வேலைப்பிடித் திருக்குறவர்களைப் பாய்ந்து கொம்பிலே கோத்துக் கொண் டிருக்கிற யானை, சேற்றுக்குள்ளே யகப்பட்டுக் கால் புதைச்சுக் கொண்டால் அந்தயானையை (நரி) நீரில் கொல்லுமென்றவாறு.

ஆண்மையும் பெருமையு முடையவர்களுந் தமக்குப் பொருந்தாத விடத்திலே போனால் தங்கள் பெலம் பிரையோ சனத்துக்கு வாராமல் மிகவும் எளியவர்களால் நலிவுபட்டு அழிவரென்பதாம்

ஆக அதிகாரம் ருயக்குக் குறள் ருள.

இப்பால் 51. தெரிந்து தெளிதல்

என்பது, மந்திரிகள் புரோகிதர்கள் சேனாபதிகள் முதலானவர்களுடைய பிறப்புக் குணம் வலி முதலானவைகளையுஞ் செயல்களையு மாராய்ந்து தெளிதல்.

501. அறம்பொரு ளின்ப முயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்
என்பது

அரசனாலே தெளியப்படுவானொருவன் தர்மமும் பொருளு மின்பமும் பயமும் என்னும் நான்கு வகையாலவன் மனவியல்பை யாராய்ந்து தெளியப்படுமென்றவாறு.

---

1. மாவட்டியன் - மாவுத்தன் - யானைப்பாகன் 2. புதைந்து

அவற்றுள் அறந்தாற் றெளிதலாவது, புரோகிதனையும் தர்மவான்களையும் அனுப்பி 'இந்த ராசா தர்மவானல்ல; இவனைத் தள்ளிவிட்டுத் தர்மமும் நீதியு முடையானொருத் தனை வைக்கவேணு மென்று நினைத்தோம்; இது எல்லாருக்குஞ் சம்மதம்; உன்புத்தியென்' என்று சொல்லிக் கேட்கிறது[1].

பொருளாற் றெளிதலாவது, சேனாபதியையும் அவனோடி சைந்த பேரையும் விட்டு அவர்களாலே "இந்த ராசா மெத்த லோபி; ஒருவருக்கும் ஒருகாசு வீசம் கொடுக்கிறவனல்லன்; இவனைத் தள்ளிவிட்டுக் கொடுக்கிறதும் நீதியுமுடையவன் ஒருவனை ராசபட்டங்கட்ட நினைச்சோம்;[2] இது எல்லோருக்கும நல்லது; உன்புத்தி என்" என்று கேட்கிறது.

இன்பத்தாற் தெளிதலாவது, பெரியவராய் வயது சென் றவளாயிருக்கிற வொருத்தியை அனுப்பி "ஒரு ஸ்ரீ உன்னைக் கண்டு மோகிச்சு[1] உன்னுடனே கூட வேணுமென்று என்னைந் தூதனுப்பினாள்; அவளைக் கூடினால் உனக்குப் பேரின்பமும் பெரும் பொருளும் கைகூடும்" என்று சொல்லு விக்கிறது. பயத்தாற் றெளிதலாவது ஒருகாரியத்தை முன் வைச்சு[2] ஒரு மந்திரியை அனுப்பி[4] இந்த ராசா நேரம்[3] சுமத்தி நம்மைக் கொல்ல நினைக்குறான்;[4] அதற்கு முன்னே நாம் எச்சரிக்கைப் பட்டு நமக்கானவனாயொரு ராசானவ வைக்க நினைச்சோம்[5]; இது எல்லார்க்கும் நல்லது; உன்புத்தி என்" என்று கேட்குறது[6]; இந்த நாலு வகையிலேயும் மனசு பேதியாமலிருந்தால் இனி மேலுங்கேடு நினைக்கிறவனல்ல னென்று தெளிக வென்பதாம்

க

502. குடிப்பிறந்துங்[7] குற்றத்தி னிங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு

என்பது

---

1. கேட்கிறது 2. நினைத்தோம்

1. மோகித்து 2. வைத்து 3. நேரம்-குற்றம் 4. நினைக்கிறான் 5. நினைத்தோம் 6. கேட்கிறது 7. 'குடிப்பிறந்து' என்பது பிறர்பாடம்

உயர்ந்த குடியிலே பிறந்து குற்றத்தினீங்கி நமக்குக் குற்றம் வரப் போகுது[1] என்று பயப்பட்டு நடக்கிறவனையே தெளிக என்றவாறு.

குற்றங்களாவன, பொய் களவுகாமம். நாணாவது, இழிவான தொழில்களைச் செய்ய நினையாமலிருக்கிறது. உ

503. அரியகற் றாசற்றார் கண்ணும் தெளியுங்கால்
இன்மை யரிதே வெளிறு

என்பது

கற்கவேண்டிய நூல்களைக்கற்றுக் குற்றங்க ளில்லாதவர்களிடத்திலே நன்றாக வாராயுமிடத்து அறிவில்லாமல் இருக்தறது[1] அரிதென்றவாறு.

அறிவுள்ளவர்களையே தெளிகவென்பதாம். ௩

504. குணனாடிக்[2] குற்றமும் நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்பது

ஒருகுணங்களு மில்லாதவர்கள் லோகத்திலே யில்லை; ஒரு குற்றமுமில்லாதவர்களுமில்லை; ஆனபடியினாலே ஒருவன்குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து குணமதிகமாயிருந்தாற் றெளிக வென்றவாறு.

குற்றமுடையவனை நம்பவொண்ணாதென்பது. ௪

505. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்

என்பது

பிறப்பு குணம் அறிவு என்பனவற்றால் மனுஷர்களெய்தும் பெருமைக்கும் சிறுமைக்கும் அவர்கள் செய்கிற காரியங்களேயல்லாமல் வேறொன்றில்லை யென்றவாறு.

---

1. போகிறது

1. இருக்கிறது 2 குணநாடி என்பது பிறர்கொண்ட பாடம்

ஒருவன் பெருமையுஞ் சிறுமையு மறிகிறவர்களுக்கு வேறே யுபாயங்களிருந்தாலும் அவர்கள் தொழில் தானே போது மென்பது. ரு

506. அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி

என்பது

சுற்றத்தா ரில்லாதாரைத் தெளிய வேண்டாம்; சுற்றமில்லாதார் உலகத்தோடு பொருந்தார்; பழிக்கஞ்சார் என்றவாறு.

உலகத்தார் பழிக்கிறத்தை[1]த் தவிருகிறதும், விரும்பினதை[2]ச் செய்கிறதுமாகிய உலகவியற்கை சுற்றமில்லதார்க்கில்லை யாதலின் அவரைத் தெளியப்போகா தென்பதாம். சா

507. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்

என்பது

ஒருவன் மேலே தயையே காரணமாக வெண்ணிக்கொண்டு, அறியத்தக்க வற்றை அறியாதாரைத் தெளிந்தால், அந்த ராசாவுக்கு எல்லா வறுமையும் வருமென்றவாறு.

தனக்குச் சினேக மானவன் என்று அறிவில்லாதவன் கையிலே உத்தியோகத்தைக் கொடுத்தால், அறிவில்லாதவன் ஆனபடியினாலே, அந்த ராச்சியம் கெடும்; அது கெட்டால் அவனுக்கு மாத்திரமே யல்லாமல் ராசாவுக்கும் கேடுவருமென்பதாம். எ

508. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்

என்பது

தன்மேலே பட்சமில்லாதவனைப் பிறப்பு முதலான வற்றாலும் செய்கையாலும் தெளிந்த அரசனுக்கு, அந்தத் தெளிவு, தன் வம்ச பரம்பரையினும் நீங்காத் துக்கத்தைக் கொடுக்கு மென்றவாறு.

---

1. பழிக்கிறதை 2. விரும்பினதை

ஆனபடியினாலே சினேகமும் தெளிவும் இரண்டு வகையும் வேண்டு மென்பது. அ

509. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்

என்பது

எவர்களையும் ஆராயாமற் றெளிய வேண்டாம்; ஆராய்ந்து தெளிந்த பிறகு அவர்கள் பேரிலே சந்தேகம் வேண்டா மென்றவாறு.

தெளிந்த பிறகு சந்தேகப்பட்டால் தீராத குற்றம் வருமென்பதாம். கூ

510. தேரான் தெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்

என்பது

ஒருவனை யாராயாது தெளிதலும், ஆராய்ந்தவனைச் சந்தேகப் படுகிறதும், இந்த விரண்டுந் தீராதகுற்றங்களைக் கொடுக்கு மென்றவாறு

தெளிந்து உத்தியோகத்தைக் கொடுத்தபிறகு ஒரு குற்றமுங் காணாமல் ஐயுறவு[1]பட்டால், அந்த ஐயுறவை[2] அவனறிந்து இனி இந்த உத்தியோகம் நில்லாதென் றிகழ்ந்து விடுவன்; அதுவுமல்லாமற் பகைவராலே யெளியதாய்ப் பிரிக்கப்படும்; அவர் பிரிந்தால் பகைவரை வெல்லப்போகாது. ஆனபடியினாலே தெளிந்தவனிடத்திலே சந்தேகமாகா தென்பதாயிற்று. ய

ஆக அதிகாரம் ருயக்குக் குறள் ருளய.

இப்பால் 52. தெரிந்து வினையாடல்

என்பது இப்படித் தெளியப் பட்டவர்களை யவர்கள் செயலையுங்[1] காரியங்களையு மறிந்து ஆளவேணுமென்பது.

---

1. அய்யிரவு 2. அய்யிரவை என்று சுவடியில் உள்ளது
1. செய்ய வல்ல என்பது அச்சு நூல்.

511. நன்மையுந் தீமையு நாடி நலம் புரிந்த
தன்மையா னாளப் படும்

என்பது

ராசா முதல் ஒரு காரியத்தைத் தன் வசத்திலே வைத்தால், தன்னாலே யாகிறது மாகாததுமான செய்கைகளை யாராய்ந் தறிந்து அதிலே யாகிறத்தையே[1] செய்க வென்றவாறு.

எனவே சேனைகளை யறிந் தேவ வேணுமென்பதாம். ௩

512. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை

என்பது

பொருள் வரப்பட்ட[2] வழிகளை விஸ்த்தாரமாகச் செய்து அந்தப் பொருளாலே செல்வங்களை வளர்த்துப் பொருள் வருகிற வழிக்கும் பொருளுக்கும் செல்வத்துக்கும் வரப்பட்ட விடையூறுகளை நாடோறு மாராய்ந்து விலக்க லல்லவன் அரசனுக்கு உத்தியோகம் பண்ண வேணு மென்றவாறு.

வழியாவன உழவு பசுக்காவல் வியாபாரமென்னுந் தொழில்களாம். செல்வ மாவன, முன் வந்த திரவியமும் மேல் வரக்கடவ திரவியமும். இடையூறுகளாவன, வேலை செய்கிறவர்கள்[1] சுற்றத்தார் கள்ளர் பகைவர் இவர்களால் வரப்பட்ட குற்றங்கள். இதுகளைப் பரிகரிக்கிறவனே[2] வேலை செய்யக் கடவன் என்பதாம். ௨

513. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு

என்பது

ராசாவினிடத்திலே தயையும், அவனுக்கானவற்றை யறிவு மறிவும் சனங்கள் சொல்லுகிறதைச் செய்கிறதுக்[3] குள்ளா

---

1. யாகிறதையே 2. வசப்பட்ட

என்று காகிதச் சுவடியிலுள்ளது

1. செய்கிறவர்கள் 2. இவைகளைப் பரிகரிக்கிறவனே 3. செய்கிறதற்

காமையும், உத்தியோகத்திலே தன் கையிலே வந்த பொருள்மே லாசையுறாமையும் ஆகிய இந்த நாலு குணங்களையுங் கெட்டி யாக வுடையவன் மேலே ராச்சிய பாரத்தை விட்டு இருக்கலாகு மென்றவாறு.

இந்த நாலு குணங்களுமுடையான் செய்கிற காரியத்தை யாராய வேண்டா மென்றவாறு ௩

514. எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர்.

என்பது

எல்லா வகையானு மாராய்ந்து தெளிந்து ராச்சிய பாரத்தை வைத்த பிறகு அந்த ராச்சியத்தினுடைய வாசையினாலே வேறே நினைவாய்க் குணங்கெட்டுப் போறவர்கள்[1] அனேகம் பேருண் டென்றவாறு கட்டியங்காரனைப் போல்[2] ராச்சிய பார ஆசை யினாலே ராசாவைக் கொன்று கெட்டுப் போனார் பலர்; ஆன படியினாலே முதற்கண் கொஞ்சமான உத்தியோகத்தைக் கொடுத்து அதனாலே தெரிந்து கொள்ள வேணுமென்ற வாறு. ௪

515. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று

என்பது

ஒருவன் குணங்களை யாராய்ந்தறிந்து, செய்கிற காரியங் களுடைய இடையூறுகளையு மாராய்ந்து. செய்யவேணு மல்லா மல், இவன் நம்முடைய பேரிலே அன்புடையவனென்று காரியங் களைச் செய்யச் சொல்லப் போகா தென்றவாறு.

அறிவினாலே யல்லாம லன்பினாலே செய்து முடியா தென் பதாம். ரு

516. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்

என்பது

---

1. போகிறவர்கள் 2 சீவக சிந்தாமணி நாமக ளிலம்பகம் காண்க

செய்கிறவனை முதற்கண் ஆராய்ந்தறிந்து' செய்யப்பட்ட காரியத்தை அதன்பின் னாராய்ந்தறிந்து, பிறகு இந்தவிரண்டினையுங் காலபக்குவத்தோடே யாராய்ந்து, இயன்றதாகிற் செய்க வென்றவாறு.

செய்கிறவன் லட்சணங்களையும் காரியத்தினுடையலட்சணமுமினிமேற் சொல்லுகிறோம்.[1]

காலத்தோடெய்த வுணர்தலாவது, இந்தக்காலத்திலேயிந்த லட்சணங்களுடையான் இந்தக்காரியஞ் செய்தால் முடியு மென்றறிகிறது. ஃ

517. இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
அதனை யவன்கண் விடல்

என்பது

இந்தக் காரியத்தை யிந்த வகையா லிவன் முடிக்க வல்லவனென்றாராய்ந்து, மூன்றுவகையு மொத்ததானால், அந்தக் காரியத்தை யவன் மேலே விடலா மென்றவாறு.

அவன்கண் விடுகிறது அந்தக் காரியத்துக்கு அவனைக் கர்த்தனாகப் பண்ணுதல் அ

518. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்

என்பது

ஒருவனைத் தன் காரியஞ் செய்தற்குரியவனாக வாராய்ந்து துணிந்தால், பிறகு அவனைக் காரியஞ் செய்கிறத்துக்[1]குரியனாம்படி பெருமை பெறச் செய்க வென்றவாறு.

பெருமை பெறச் செய்கிறதாவது, அந்தக் காரியஞ் செய்கிறதுக்கு வேண்டியது கொடுத்தல்; அதில்லாத வழி முடியாதென்பதாம். எ

1. "மேற் சொல்லப்பட்டன" என்றிருத்தல் தரும்; பரிமேலழகருரை காண்க; செய்வானது இலக்கணம் இவ்வதிகாரத்து முதல் மூன்று குறள்களிலும் வினையியல்பு ஐந்தாவது குறள்களிலும் கூறப்பட்டன.

519. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு

என்பது

எப்பொழுதுந் தன்காரியத்திலே முயற்சியுடையான், அந்தக் காரியத்தினாலே தனக்குறவா யிருக்கிறவர்களைக் கண்டு பொறாதபேர் சொல்லுகிறதை[2]க் கேட்டு, வேறாக நினைத்தால் லட்சுமி யவனை விட்டுப்போ மென்றவாறு.

உறவாயிருக்கிறதாவது, அவனுக்கு வேண்டிய கருமங்களை யெல்லாஞ் செய்தல். அப்படிப் பட்டவன் மேலே அனுமானப்[1] பட்டாற் பின்னை யொருவருமுளப் பட்டு நிற்பாரின்மையின் தன் செல்வங் கெடு மென்பதாயிற்று. கூ

520. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு

என்பது

உத்தியோகம் பண்ணுகிறவன் பொல்லாதவனல்லாவிட்டால் உலகமும் பொல்லாதது ஆகாது; ஆனபடியினாலே அரசன் காரியம் செய்கிறவனைத் தினமு மாராய வேணு மென்றவாறு.

அவனை மாத்திர மாராய்ந்தால் அவன் வசமாயிருக்கப்பட்ட ராச்சிய மெல்லாம் ஆராய்ந்தாற் போலேயாம், இப்படி ஆராய்ந்தால் வினை செய்கிறவன் தன்னுரிமை யழியாமல் ஆராய்ந்து ஒழுகுக என்பதாம். ய

ஆக அதிகாரம் ருய௨க்குக்குறள் ருளஉய

இப்பால் 53. சுற்றந்தழால்

என்பது, ஒருவன் தன் சுற்றந்தாரைத் தன்னைவிட்டு நீங்காமல் அணைத்தல்.

---

1. செய்கிறதற் 2. சொல்லுகிறதைக்

1. அனுமானம்-சந்தேகம்

521. பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள
என்பது

ஒருவன் செல்வம் தொலைந்து[1] போய்த் தரித்திரனான போதும், விடாமற் பழமையைப் பாராட்டு மியல்பு, சுற்றத்தாரிடத்திலே யுண்டென்றவாறு.

பழமையாவது, முன்தமக்குச் செய்த நன்றி, அதனை நினைந்து அவன் தரித்திரனான போதும் விடாமலுபகாரஞ் செய்வர் சுற்றத்தார் என்பதாம். க

522. விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
வாக்கம் பலவுந் தரும்
என்பது

ஒருவனுக்கு அன்பறாத சுற்றம் வந்தெய்து மாயினவனுக்குப் பெருக்கமறாத செல்வங்கள் பலவற்றையுங் கொடுக்கு மென்றவாறு.

உட்பகையை நீக்கதற்குத் தன் மேலாசை யறாத சுற்றமுண்டாக வேணும்; அப்படி உட்பகையை நீக்கினால் பெரிய செல்வம் வந்தெய்து மென்பதாம். உ

623. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர் நிறைந் தற்று
என்பது

ஆசையறாத சுற்றத்தாருடனே சினேக மில்லாதவன் வாட்கை.[1] குளவிசாலங்[2] கரையில்லாது தண்ணீர் நிறைந்தாப் போலே[3] யென்றவாறு.

சுற்றமில்லாதவன் செல்வங் கரையில்லாத குளத்திலே நீர் போலே நாலுவழியும் புறப்பட்டுப் போமென்பதாம். ந

1. துலைந்து என்று காகிதச் சுவடியில் உள்ளது.

1. வாழ்க்கை குளவிசாலம் - குளம்பரப்பு 2. நிறைந்தாற்போலே

524. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்

என்பது

செல்வம் பெற்றதனாலே யொருவன் பெற்ற பலனாவது, தன் சுற்றத்தார் தன்னைச் சூழப்படும் வகை செய்த லென்வாறு.

தன் செல்வம் பலர்க்கும் பயன்பட்டால், இம்மையிலே கீர்த்தியும் மறுமையிலே அதிகப் போகமும் உண்டென்பது. ௪

525. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்

என்பது

ஒருவன் சுற்றத்தார்க்கு வேண்டியது கொடுத்தலும் நல்ல வசனங்கள் சொல்லுதலு முடையனாகில், பலவகைச் சுற்றங்களு மவனைத் தாங்களே சூழ்ந்துகொள்ளுவார்க ளென்றவாறு.

இந்த வுபாயங்களை வடநூலார் தானமு சாமமு மென்பர். ரு

526. பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்

என்பது

ஒருவன் மிகுத்த கொடையையு முடையவனாய்க் கோபத்தை விரும்பாதவனு மானால் அவனைப் போலச் சுற்ற முடையவர்க ளிந்த வுலகத்திலே யில்லை யென்றவாறு.

மிகுத்த கொடையாவது, ஒருவன் வேண்டினதெல்லாம் ஒருவகை யாலுங் குறை படாமற் கொடுக்கிறது. சு

528. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள

என்பது

காக்கை தனக்கு இரை கண்டால் அத்தை[1]த்தான் மாத்திரந் தின்னாமல் தன்னினத்தை யழைத்து அதனோடே கூட உண்ணும். நல்ல சுற்றத்தை யுடையவன் செல்வமு மப்படிப் பலருடன் கூட வுண்ணப் படுமென்றவாறு.

அப்படி யுண்டவனுக்குப் பகையில்லாமற் பெருஞ்செல்வமு மெய்துமென்பது. எ

528. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்

என்பது

எல்லாரையு மொரு சரியாய்ப் பாராமல் அவரவர்கள் மரியாதி[1] யறிந்து நடப்பித்தா லதைக்கண்டு அவனை விடாமல் வாழப் பட்ட[2] சுற்றத்தார் பலரென்றவாறு.

எல்லாரையுஞ் சரியாய்ப்[1] பார்த்தாற் பெரியவர்கள் விட்டுப் போவார்கள்; ஆனபடியினாலே அவரவர்கள் மரியாதி[1]யறிந்து நடப்பிக்க வேணு மென்பதாம். அ

529. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்

என்பது

முன்பு தன்னோடு சுற்றமா யிருந்து, பின்பு யாதானு மொரு காரணத்தினாலே தன்னைவிட்டுப் பிரிந்துபோனவர்கள் திரும்ப வந்து உறவாயிருக்கிறது, தன்னிடத்திலே குற்றமில்லா விட்டா லென்றவாறு.

முன்பு முற்றமுண்டாயிருந்த படியினாலே விட்டுப்பிரிந்தார். குற்றமாவது, நெறியல்லாத[1] காரியங்களைச் செய்தல், வெறுக்கத் தக்க வசனங்களைச் சொல்லுதலென்பது. இந்தக்குற்ற மில்லாவிட்டாற்றாமே வந்து சேருவ ரென்பதாம்.

---

1. அதனை

1. மரியாதை 2. வாழும்3 3. ஒருதன்மைராக

530. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தாளை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்
என்பது

ஒரு காரண மில்லாமற் றன்னிடத்திலேயிருந்து விட்டுப்போன வன், பின்பு ஒரு காரணத்தாலே திரும்பி வந்து தன்னைச் சேர்ந்தால், அவன் வந்த காரியத்தைச் செய்து, பிறகு ஆராய்ந்து, குற்றமில்லா விட்டா லவனுடனே சினேகம் பண்ணவேணும் என்றவாறு.

அவன்வந்தவுடனே ஆதரியா விட்டால், பகைவருடனே கூடி உபத்திரவம் பண்ணுவான் என்றவாறு. ൦

ஆக அதிகாரம் ௫௰௩-க்குக் குறள் ௫௱௩௰

இப்பால் 54. பொச்சாவாமை

என்பது, தன்னுடைய ரூபமுஞ் செல்வமும் பலமும் இது முதலானதுகளை[4]க்கண்டு மகிழ்ந்து தன்னைக்காத்துக் கொள்ளு கிறதும் பகைவரை யழித்தது முதலாகிய காரியங்களைச், சோர்தலைச் செய்யாமலிருக்கிறது.

531. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு
என்பது

மிகுத்த சந்தோஷ மகிட்சி[1]யினாலே வந்த மறப்பு அளவில் லாத கோபத்தினும் பொல்லாததென்றவாறு.

மிக்க சந்தோஷமாவது, பெருஞ் செல்வத்தாலும் பெரிய இன்பத்தாலும் வருவது; அதனால் வந்த மறப்புத் தனக்குக் கேடு விளைவிக்குமென்பதாம். க

---

1. யில்லாத என்று காகிதச் சுவடியிலும் அச்சுநூலிலும் உள்ளது
2. நூலிற் கண்டது 3. இவைமுதலியவற்றை 4. காரியங்களில் என்பது அச்சுநூல்.

1. மகிழ்ச்சி

532. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு

என்பது

ஒருவன் புகழினை யவன் மறப்புக் கெடுக்கும்; அதெப்படிப் போலே யென்றால் அறிவைத் தரித்திரங் கெடுத்தாற்போலே யென்றவாறு.

தரித்திரமறிவைக் கொல்லுதலாவது, இரப்பினாலே வருத்தப்பட்டுத் தன்வயிறு நிறைத்தல்; இது அறிவுடையவர்களுக்குண்டானால் அவர்களைக் கொஞ்சமாய்ப் பார்த்து இகழ்வார்கள்; அதனாலே அறிவு பிரகாச மாகா தென்பதாம். உ

533. பொச்சாப் பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பாலு லோர்க்குந் துணிவு

என்பது

பொச்சாப்பாகிய மறப்புடையவர்களுக்குக் கீர்த்தியில்லை அந்தக் கீர்த்தி நூலுடையவர்களுக்கே யுண்டென்றவாறு.

இது ராசாக்களுக்கே யல்லாமல் தர்ம தானங்களுடனே கூடின பேருக்கெல்லாஞ் சரி யென்பதாம். ங

34. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு

என்பது

காடும் மலையுங் கோட்டையு முதலாகிய அரணான விடத்திலே யிருந்தாலும், மனசிலே பயமுடையவர்களுக்கு அந்த அரண்களாலே பயனில்லை; அப்படிப்போலே எல்லாச் செல்வமுடையவரானாலும் மனசிலே மறப்புடையவர்களுக்கு அந்தச் செல்வத்தாற் பலனில்லை யென்றவாறு.

பயமுடையவனின்ற வரண் அழியுமாறு போல, மறதியுடையவன் செல்வங்களு மழியுமென்பதாம். ச

1. மகிழ்ச்சி

1. குறிப்புரை காண்க

535. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்
என்பது

தன்னாலே காக்கப்பட்ட[1] துன்பங்களை அவை வருவதற்கு முன்னே யறிந்து காராமல்[2] மறந்திருந்தவன், பின்பு அந்தத் துன்பங்கள் வந்தால், தன் மறப்பை நினைந்திரங்கிக் கெடுவ னென்றவாறு

காக்கப் படுந் துன்பங்களாவன, மறந் திருக்கிற வேளை பார்த்துப் பகைவர்,கள்வர் இவர்களாற் செய்யப்படுவன வென்பதாம். ௫

536. இழுக்காமை யார் மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில்
என்பது

மறவாமைக் குணமை எல்லாரிடத்திலேயும் எப்பொழுதையுங்[3] குற்றங்களைச் செய்யாமல் நன்மையையும் நல்ல வசனத்தையும் செய்யுமாயின் அவனுக்கு அதிலும் வேறே நன்மையில்லை என்றவாறு. ௬

537. அரியவென் றாகாத வில்லைப்பொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்
என்பது

இந்தக் கருமஞ் செய்கிற தருமை, இது முடிக்கப்போகா தென்கிறதில்லை; மறவாத மனசிலே யெண்ணிச் செய்தா லென்ற வாறு.

இடை விடாத நினைவும் தப்பாத சூட்சி[1]யு முடையவர்களுக்கு எல்லாக் காரியங்களு மெளிதாய் முடியு மென்பதாம். ௭

1. கார்க்கப்பட்ட என்று காகிதச் சுவடியிலுள்ளது 2. காவாமல் 3. எப்பொழுதும்

538. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்

என்பது

நீதி நூலுடையார் இவை யரசற்குரியன வென்று சொல்லப் பட்ட செயல்களைச் செய்ய வேண்டும்; அப்படிச் செய்யாமல் மறந்து விட்டவர்களுக்கு ஏழேழு பிறப்புக்களிலேயும் நன்மை யில்லை யென்ற வாறு.

அந்தச் செய்கைகளாவன: மூவகை யாற்றல்[2] முதலாயின[3] மறப்புடையார்க்கு நரக மல்லது வேறொன்றில்லை யென் றதாம்.

அ

539. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்த
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

என்பது

அரசர் தங்களிட[1] மகிட்சி[2] யினாலே மயக்கமுறுகிற போது முன்பு வந்த மகிட்சி[2] யினாலே கெட்டவர்களை[3] நினைக்க வென்றவாறு.

கெட்டவர்களை நினைச்சால் நாமு மப்படிக்குகெட்டுப் போவோ மென்றெண்ணி மகிட்சி[2]யினை யடையாரென்பதாம்.

கூ

540. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்

என்பது

அரசர்க்குத் தாங்கள் பெற நினைத்த பொருளை நினைத்த படியே பெறுகிற தெளிதாம், நினைத்த பொருளை மறவாமல் பின்னையும் நினைக்கக் கூடுமாயி னென்றவாறு.

---

1. சூழ்ச்சி 2. 467ஆம் குறளுரை காண்க. 3. முதலாயின' நால்வகை யுபாயம் (467 ஆம் குறள்) ஐவகைத் தொழில் (466, 471) அறுவகைச்குணம் முதலாயின (485ஆம் குறளுரை) .

பின்னையும் நினைத்தலாகிறது. வேறொரு பொருளின் மேலே நினைவாய் முந்தி[4] நினைத்த பொருளை மறவாமல் நினைக்கிறது.

ஆக அதிகாரம் ௫௰௪க்குக் குறள் ௫௱௪௰

இப்பால் 55. செங்கோன்மை என்பது, அரசனாலே செய்யப்பட்ட முறைமையினுடைய நன்மை[1] அந்நன்மையும் செவ்வை தப்பாமல் நடக்கிற படியினாலே செங்கோலென்பதாம்.

541. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந்து யார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை

என்பது

தன் கீழே வாழ்வார் குற்றஞ் செய்தாலந்தக் குற்றத்தைப் பார்த்து, ஒருவரிடத்திலேயும் பக்ஷபாதம் வையாமல், எல்லாரையுஞ், சரியாகப் பார்த்து அந்தக் குற்றத்துக்குச் சொன்ன தெண்டனையைச் சாத்திரங் கற்றவர்களுடனே கூடவாராய்ந்து, குற்றத்துக்குந் தக்கதாகத் தெண்டிக்கிறதே முறைமையென்றவாறு.

தனக்குச் சிநேகிதர் பகைவரென்றெண்ணாமல் எல்லாரையுஞ்சரியாய்த் தெண்டிக்கிறதே யரசனுக்கு நீதியாமென்பதாம். க

542. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி

என்பது

உலகத்திலே [1]யுண்டான சீவன்களெல்லாம் மழையுண்டானாலுண்டாமென்றாலும், குடிகளெல்லாம் அரசன் செங்கோலுண்டானாலுண்டாமென்றவாறு.

மழை சீவன்களை ரட்சிக்குறாப்போலே[1], அரசன் செங்கோலனானால் குடிகள் நன்றாயிருப்பார்களென்பதாம் உ

---

1. தங்களுடைய 2. மகிழ்ச்சி 3. குறிப்புரை காண்க 4. முந்தி - முன்னர்

1. தன்மை என்பர் பரிமேலழகர்

543. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்

என்பது

அந்தணருக் குரித்தான வேதத்திற்கும் அந்தவேதத்தினாலே சொல்லப்பட்ட தர்மத்திற்குங் காரணமாய் நின்றது மன்னவன் செங்கோலாகிய நீதி யென்றவாறு.

ராசா நீதியாய் நடத்தினால் வேதமும் தர்மமும் வர்த்திக்கு மென்றவாறு. ௩

544. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு

என்பது

தன்னாட்டிலே யிருக்கிற குடிகளையும் ரட்சிச்சுக்[1] கொண்டு செங்கோலை முறைமை தப்பாமல் நடத்தப்பட்ட[1] ராசாவை யுலகத்தார் விடாம லிருப்பாரக ளென்றவாறு.

ரட்சிக்கிறதாவது நல்லவசனஞ் சொல்லுதலும் வறுமை யானபோது வேண்டுவன கொடுத்தலுமாம். ௪

545. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு

என்பது

முறைமை தப்பாமல் நடத்தப்பட்ட[2] மன்னவனாட்டிலே மழையும் விளைவும் நிறைந்திருக்குமென்றவாறு.

அரசன் செங்கோலனானால் அவனாட்டிலே யெல்லாச் செல்வங்களு முண்டென்றவாறு. ௫

546. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்

என்பது

1. ரட்சிக்கிறாற்போலே, ரட்சித்துக்
2. நடத்தும்

ராசாவுக்குச் சண்டையிலே செயத்தைக் கொடுக்கிறது. அவனாலே யெறியப்பட்ட வேல்வாளிதுகளல்ல[1] அவனடத்தப் பட்ட[2] செங்கோல் முறைமை யென்றவாறு.

அரசன் நீதியாய் நடந்தால் அவன் சத்துருக்கள்[3] தானே கெடுவ ரென்பதாம். ௬

547. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்

என்பது

பூமியை யெல்லாம் ராசா காப்பன்;[4] ராசாவையவன் செங் கோல் காக்கும்[5]; அந்தச் செங்கோல் கோணாமல் நடந்தாலென்ற வாறு.

செங்கோல் கோணாதாவது, நீதிமுறைமையாய் நடக்க வேணு மென்பதாம். ௭

548. எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தான் தானே கெடும்

என்பது

முறையிடுபவர்களுக்கு எளியவனாய், அவர்கள் சொன் னத்தை[6]க்கேட்டு நீதிமான்கள் பலரோடு யாராய்ந்து, அதற் கேற்கச் செய்யாத வரசன், தாழ்ந்த விடத்திலே நின்று தானே கெடு மென்றவாறு.

தாழ்ந்த விடமாவது[7] முறையிடுபவர்கள் காணாதவிட மென்பதாம். ௮

549. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்

என்பது

---

1. வாளிவைகளல்ல 2. அவனடத்தும் 3. பகைவர்

4. காற்பன்; 5. காற்கும் என்று காகிதச் சுவடியிலுள்ளது 6. சொன் னதை 7. குறிப்புரைகாண்க

குடிகளைப் பிறர் வாதை பண்ணாமற் காத்துத்தானும் நலியாது பேணி, அவர்மாட்டுக் குற்றம் நிகழின், அதனைத் தண்டனையா லொழித்தல், வேந்தனுக்குப் பழியன்று, நல்லதா மென்றவாறு.

தன்கீழ் வாழ்வாரைக் குற்றத்துக்குத் தக்க தண்டனை செய்து, அவரை யந்தக் குற்றஞ் செய்ய வொட்டாமல் அடக் கிறது[1] நீதியா மென்றவாறு.

550. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்

என்பது

அரசன் கொடியவர்களைத் தெண்டித்து நல்லவர்களைக் கார்க் கிறது[2] எப்படிப்போ லென்றால், பயிரிடுகிறவன் பயிருக்குள்ளே யிருக்கிற புல்லைப்பிடுங்கிப் போட்டுப் பயிரை ரட்சிக்குறாப்போ[3] லென்றவாறு.

கொடியவர்களாவார். தீக்கொளுத்துகிறவர், நஞ்சிடுவார், ஆயுதங்களாலே கொல்லுகிறவர்கள், கள்ளர், ஒருவர் மேலே பகையாய்த் தூற்றுகிறவர்; கொள்ளையிடுகிறவர்கள், பிற னுடைய இல்லாளைச் சேருகிறவர்கள். இவர்களைத் தெண்டியா விட்டாற் புல்லதிகமாய்ப் படர்ந்த பயிர்போல் நலிவு படுவார்க ளென்பதாம்.

ஆக அதிகாரம் ருயருக்குக்குறள் ருளருய

இப்பால் 56 கொடுங்கோன்மை

என்பது, அரசன் நீதிமுறை தப்பிச் குடிகளை அநியாயம் பண்ணு கிறது.

551. கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும் வேந்து

என்பது

---

1. அடக்குகிறது 2. காக்கிறது 3. ரட்சிக்கிறாற்போ

பகையை வைத்துக் கொல்லுகிறவர்களிலும் பொல்லாதவனாம், பொருள் மேலாசை யுடையவனாய்க் குடிகளை வாதை பண்ணி முறைமை யல்லாத காரியங்களைச் செய்யப்பட்ட[1] ராசா வென்றவாறு.

பகையாளி செய்கிறது ஒரு நாளைத் துன்பம் பொல்லாத ராசா செய்கிறது எப்பொழுதும் துன்பமாகலின், அவனிலும் அரசன் பொல்லாதவ னென்பதாயிற்று. க

552. வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு

என்பது

வழி போறவர்களை[2]ப் பறிக்கிறத்துக்கு[3] வேலாயுதம் எடுத்துக் கொண்டு வழியிலே நின்று, வழி போறவர்களை உன் கையிலே யிருக்கிற பொருளைத் தாவென்று சொல்லுதலோடொக்கும், பொல்லாதவனான ராசா குடிகளைப் பொருள் தாவென்று கேட்கிறது என்றவாறு

கொடாவிட்டாற் கொல்லுவ னென்பதாயிற்று. உ

553. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறு நாடு கெடும்

என்பது

தன்னாட்டிலே யுண்டாகிற தீமைகளைத் தினமு மாராய்ந்து, அதற்கேற்ற[4] முறைமையைச் செய்யாத வரசன், நாள்தோறும் நாட்டை யிழந்து போவானென்ற வாறு.

இழக்கிறதாவது, பலனில்லாமற் போறதாம்[5]. ௩

554. கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு

என்பது

1. செய்யும்

2. போகிறவர்களை 3. பறிக்கிறதற்கு 4. அதற்கேத்த என்று காகிதச் சுவடியிலுள்ளது 5. போகிறதாம்

மேலே வரப் போறத்தை[1] எண்ணாமல் முறைமை தப்பச் செய்த ராசா, அந்த அநியாயத்தினாலே முன் தேடின பொருளையு மிழந்து, பின் பொருளைக் கொடுக்கப்பட்ட[2] குடிகளையு மிழந்து விடுமென்றவாறு.

முன்தேடின பொருளை இழக்குறத்துக்குக்[3] காரணம் மேல் வருங் கவியிற் சொல்லுகுறோம்[4]. ச

555. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை
என்பது

அரசன் முறை செய்யாத படியினாலே குடிகள் துக்கப்பட்டு அந்தத் துக்கத்தைப் பொறுக்க மாட்டாமல் அழுதகண்ணீர், கொடுங் கோலனாகிய மன்னவன் செல்வத்தைக் கெடுக்கிற ஆயுதமா மென்றவாறு.

ஆயுதத்தைப் பார்க்கிலும், துக்கப்பட்டழுத கண்ணீர் கொடிய தாகையினால், செல்வங் கடிதில் தேய்ந்துபோ மென்ற வாறு. ரு

556. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்
மன்னாவா மன்னர்க் கொளி
என்பது

ராசாக்களுக்குக் கீர்த்தி யுண்டாகிறது, செங்கோன் முறைமை யாலே யாம்; அந்தச் செங்கோல் முறைமை யில்லாவிட்டால், அந்த ராசாவுக்குக் கீர்த்தி யுண்டாகா தென்றவாறு.

கொடுங்கோலனானால் அபகீர்த்தி[5] வருமென்பதாம். சா

557. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு
என்பது

மழையில்லா விட்டாற் பூமியிலே யிருக்கிற சீவன்களுக்கு எத்தனைத் துக்க முண்டோ அத்தனைத் துக்க முண்டாம்,

1. போகிறதை 2. கொடுக்கும் 3. இழக்கிறதற்கு 4. சொல்லுகிறோம்
5. பழி

அரசன் நீதி முறைமை தப்பி நடந்தால் அவன் நாட்டிலே யிருக் கிற குடிகளுக் கென்றவாறு.

மழையில்லாத போது பசியாலும் வெய்யிலினாலும் வருந்து கிறாப் போலே[1] அரசன் நீதியாய் நடத்தா விட்டாற் குடிகளுக் கெல்லாத்துக்க முண்டா மென்றவாறு. மl

558. இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்

என்பது

நீதி முறைமையாய் நடவாத ராசாவின் கீழே வாழ்கிற குடிகளுக்குத் தரித்திரத்திலும் பொல்லாதது அய்சுவரிய முண்டா யிருக்கிற தென்றவாறு.

அரசன் றனக்குரித்தான வரிப்பணத்தை வாங்கிக் கொண் டிராமற் பின்னையும் பொருளை விரும்பி முறை தப்ப நடந்தாற் றெண்டனை முதலாகிய வுபத்திரவம் வருகிறது பொருளுடைய வர்களுக்கான படியினாலே யாதலாற்[2] செல்வம் பொல்லா தென்பதாயிற்று. அ

559. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்

என்பது

மன்னவன் றான் செய்யப்பட்ட காரியங்களை முறைதப்பச் செய்தால், அவன் நாட்டிலே மேகங்கள் பக்குவத்துக்கு[3] மழை பெய்யா தென்றவாறு.

பக்குவத்துக்கு மழையில்லா விட்டாற் சகலதுக்கமு முண் டாம். சீ

560. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்

என்பது

---

1. வருந்துகிறாற்போலே

2. யாதலாற்-இது வேண்டாத சொல் 3. பருவத்திற்கு-பெய்யுங்காலத்தில்

உலகத்திலே யிருக்கிற பிராணிகளைக் காத்து ரட்சிக்கப் பட்ட[1] ராசா காராவிட்டால்[2] அவன் நாட்டிலே தனமில்லா மலும்[3] பசுக்கள் பாலில்லாமலும் போம்; அந்தணரும் வேத சாத்திரங்களை மறந்து விடுவார்க ளென்றவாறு.

அறுதொழிலாவன: ஓதல், ஓதுவித்தல், ஓமம் பண்ணுதல், ஓமம் பண்ணுவித்தல்,[4] கொடுத்தல், ஏற்கிறது; இவைகளை யுடைய பிராமணர் வேத சாத்திரங்களைப் படியாமல் விட்ட படியினாலே பக்குவத்துக்கு[5] மழை பெய்யாது; ஆனபடியினாலே கொடுங்கோலனாகிய ராசா ராச்சியத்திலே பொல்லாங்குக ளெல்லாம் குடியாயிருக்கு மென்பதாம் ௰

ஆக அதிகாரம் ௫௰௬ க்குக்குறள் ௫௱௬௰

இப்பால் 57 வெருவந்த செய்யாமை என்பது குடிகளஞ்சுவதும், பகுதி கொடுக்கிறவர்களஞ்சுவதும், சேனை[6] அஞ்சுவதுமான தொழில்களைச் செய்யாமை; செய்தாற் கொடுங்கோல னென்பதாம்[7].

561. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து

என்பது

ஒருவன் தனக்கு எளியனானவனை உபத்திரவம் பண்ணி னால் அதனை யரசன் கேட்டு இரண்டு பேரையும் சரியாகப் பார்த்து[7] ஆராய்ந்து, குற்ற முள்ளவனை யதற்கேற்கத் தெண் டிக்கிறவனே யரச னென்றவாறு.

குற்றத்திற் கேற்கத் தெண்டனை பண்ணினாற் பிறகு அந் தக் குற்றங்களைச் செய்யா ரென்பதாம். ௧

1. ரட்சிக்கும் 2. காவாவிட்டால் 3. தருமமில்லாமலும்; இப்பொருட் குக் குறளில் சொல் இல்லை 4. வேட்டல் வேட்பித்தல் இங்ஙனம் இவ்வுரை யிலுள்ளன. 5. பருவத்துக்கு 6. தான் என்பது அச்சு நூல் 7. இவை செய்தல் கொடுங்கோல்மை என்பது அச்சு நூல் 8. பாத்து என்று காகிதச் சுவடியிலிருக்கிறது

562. கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்
என்பது

குற்றத்துக்குத் தக்க தெண்டனை பண்ணத் துடங்கிற போது வெகுவாய்த் தெண்டனை பண்ணப் போறாப்[2] போலே கோபிச்சு[3]க் கொண்டு, தெண்டிக்கிறபோது பிரமாணம் தப்பாமல்[4] செய்க, செல்வம் தன்னை விட்டு நீங்காமல் நிற்க வேண்டினவர் என்றவாறு.

வெகுவாகத் தெண்டனை பண்ணப் போறாப் போலே கோபிச்சுக் கொள்ளுகிறது. குற்றஞ் செய்கிறவர்கள் பயப்பட வேண்டி; மட்டாகத் தெண்டிக்கிறது, எவர்களும் பயப்படாத படிக்கு.

உ.

563. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்த மொல்லைக் கெடும்
என்பது

குடிகள் பயப்பட்டு நடுங்கத் தக்க செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோல னான[5] ராசா சீக்கிரத்தில் கெட்டுப்போவானென்றவாறு.

பொல்லாங்கு செய்தவர்கள் கொப்பெனக்[6] கெட்டுப் போவார்களென்பதாம்.

ங

564 இறைகடிய னென்றுரைக்கும் இன்னாச்சொல்[7] வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்
என்பது

குடிகளாலே தம்முடைய[8] ராசா பொல்லாதவ னென்று சொல்லப்படுகின்ற வார்த்தையை யுடைய ராசா ஆயுசுங்

1. தொடங்குகிற 2. போகிறாற் 3. கோபித்து 4. அளவுகடவாமல்
5. னாயின் 6. விரைவில் 7. 'இல்லாச்சொல்' என்று காகிதச் சுவடியிலுள்ளது 8. நம் என்பது அச்சுநூல்

குறைந்து செல்வமும் கொப்பெனக் கெட்டுப்போம்[1] என்ற வாறு. ௬

565. அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து

என்பது

தன்னைக் காண வேண்டினவர்களுக்குக் காணக் கிடையாதவனாய்க் கண்டவர்களுக்குப் பொல்லாத முகத்தையுடையனான ராசாவுடைய பெரிய செல்வம் பேயைக் கண்டாற் பயப்படுமாறு போலக் குற்ற முண்டா மென்றவாறு.

இப்படிப்பட்டவனைச் சேர்வாரில்லாத படியினாலே அவன் செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன் படா தென்பதாம் ரு

566. கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும்

என்பது

கடிய சொல்லையும் தயை யில்லாமையையும் உடையவன் செல்வம், நெடுநாள் நில்லாமல் அப்பொழுதே கெட்டுப்போ மென்றவாறு.

நெடுஞ் செல்வமாகியது, அநேக நாளே தொட்டு வர்த்திச்சு[2] வருகிற செல்வம்; அது இவன் பொல்லாமையாலே கடுகக் கெட்டுப்போ மென்றவாறு சா

567. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் டேய்க்கு மரம்

என்பது

கடினமான வார்த்தையும் குற்ற மிகுத்த[3] தெண்டமும்

---

1. 'கெடப்போ' என்று காகிதச்சுவடியிலுள்ளது; இழக்கும் என்பது அச்சுநூல்.
2. வர்த்தித்து - இருக்கிற 3. முகுற்ற என்று சுவடியிலுள்ளது; குற்றத்தின் மிக்க என்பது அச்சு நூல்.

ராசாவினுடைய பெலத்தைக் கெடுக்கு மென்றவாறு.

அரமானது இரும்பைத் தேய்க்குறாப்[1]போலே கெடுக்கு மென்பதாம். 61

568. இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு

என்பது

அரசன் ஒரு காரியத்தைச் செய்கிறபோது மந்திரிகளுடனே யுந் தன்சுறறத்தாருடனேயும் ஆலோசனை பண்ணிச் செய்யாமல், தன் கோபத்தினாலேயும் கெறுவத்தினாலேயும்[2] எண்ணாமற் செய்தால், அந்தக் காரியந்தப்பிதமாய்; அதினாலே அவன் செல்வங் கெடு மென்றவாறு.

மூர்க்க புத்தியினாலே தூரம்[3] விசாரியாமற் கெடுவனென்பதாம். ௬௨

569. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்

என்பது சண்டை வருகிறத்துக்கு[4] முன்னே தனக் கரணாகிய காவலைப் பண்ணிக் கொள்ளாத ராசா, சண்டை வந்தபோது அரணில்லாத படியினாலே பயப்பட்டுச் சீக்கிரத்திலே கெட்டுப் போவா னென்றவாறு.

அரணில்லாவிட்டாற் றன்னைச் சேர்ந்தவர்கள் விட்டுப் போவார்கள்; போனாற்றான்றனியனாயிருந்து கெடுவன் என்பதாம்,

570. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை

என்பது

கடுங்கோல னான ராசா நீதிநூல் முதலானதுகளைக் கல்லாத பேரைத் தனக்குத் துணையாகக் கூட்டிக் கொள்வன்;

---

1. தேய்க்கிறாற் 2. கர்வத்தினாலேயும் 3. தூரம் என்று காகிதச் சுவடியிலும் அச்சுநூலிலும் உள்ளது. தீர என்று இருக்கலாம்.

4. வருகிறதற்கு

அந்தக் கூட்டத்தைச் சுமந்து கொண்டிருக்கிற பூமிக்கு வெகு பாரமென்றவாறு.

கடுங்கோலனாவது மிக்க தெண்டனை யாலென்பது[1] தனக் கிசைந்தாரையல்லது கூட்டாமையா லவர்களைச் சுமக்கிறது வெகு பாரமாயிற்று.

ஆக அதிகாரம் ௫௰ க்குக்குறள் ௫௱எ௰

இபபால் 58. கண்ணோட்டம்

என்பது, தன்னுடனே சிநேகம் பண்ணின பேர் சொன்ன காரியங்களை மறுக்க மாட்டாமை, இது அவர்கள்மேற் கண்ணோட்டமாகிய தயை யுண்டான படியினாலே கண்ணோட்ட மென்பதாம்;

571. கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு

என்பது

கண்ணோட்ட மென்று சொல்லப்படுகின்ற தயை அரசரிடத் திலே[2] யுண்டான படியினாலே யிந்த வுலகஞ் சுகமாயிருக் கின்ற தென்றவாறு.

அரசர் தயை யில்லாவிட்டால் லோகத்துக்குச் சுகமில்லை யென்றவாறு. க

572. கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை

என்பது

உலகவியற்கை கண்ணோட்டத்தினாலே யுண்டாம்; அந்தக் கண்ணோட்ட மில்லாதவர்க ளுண்டாகிறது பூமிக்குப் பார மென்றவாறு.

---

1. கடுங்கோல் என்பது மிக்க தண்டலன - அச்சுநூலிற்கண்டது.

1. ஆசாரியரிடத்திலே என்று காகிதச் சுவடியிலுள்ளது.

உலகவியற்கையாவது, பெரியோர்கள் சொன்ன முறைமை தப்பாமல் நடக்கிறது, ஒருவர் செய்த குற்றங்களைக் பொறுக்கிறது முதலானது. இவை செய்யாத மனுஷர் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பதாம்.

573. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல் கண்ணென்னாங்
கண்ணோட்ட மில்லாத கண்
என்பது

ராகம் பாடுகிறவன் பாடுகிறத்தினுடைய[1] லட்சணங்களை யறியாவிட்டா லந்த ராக[2]மென்ன பலனுண்டாம்; அதுபோலக் கண்ணோட்ட மில்லாத கண்களென்னபயனைச் செய்யு மென்றவாறு

பாடுகிற லட்சணமாவது: யாழ்குழலாகியதும், நெஞ்சினுள்ளாகிய மிடற்றிலே எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பித்தல் குடிலமென வைந்தும், பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பு வண்ணமென்னும் ,வண்ணங்கள் எழுபத்தாறுமாம்.[3] இதுகளோடு[4] கூடாத ராகத்தினாலே பலனில்லாதது போலக் கண்ணோட்டமாகிய தயையோடு கூடாவிட்டாற் கண்ணாலே பலனில்லையென்பதாம்

574. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண்
என்பது

கண்டவர்களுக்கு முகத்திலே கண்கள் இருக்குறாப்போலே[5] காண்பிக்கிற தல்லாமல் வேறொன்று மில்லை, அளவில்லாத கண்ணோட்டமில்லாத கண்கள் ஒருபலனையுஞ் செய்யமாட்டாவென்றவாறு.

575. கண்ணுக் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்
என்பது

---

1. பாடுகின்றதின் 2. ராகத்தால் 3. பிற்குறிப்புக்காண்க 4. இவைகளோடு 5. இருக்கிறாற்போலே

ஒருவன் கண்ணுக்கு ஆபரணமாவது கண்ணோட்டம்; அந்தக் கண்ணோட்ட மில்லாவிட்டால் அந்தக் கண்கள் அறிவு டையவர்களாலே புண்ணென்று சொல்லப்படுமென்றவாறு. ரு

576. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோ டா தவர்

என்பது

ஒடுதற்குரிய கண்ணோட்ட மில்லாதவர்கள் நடந்து திரிந் தாலும் மண்ணோடே பொருந்தி நிற்கிற மரத்துக்குச் சரி யென்ற வாறு

மனுஷனுக்குத் தயையில்லாவிட்டால் மரத்தோடொப்ப ரென்பதாம். சா

577. கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில்

என்பது

கண்ணோட்ட மில்லாதவர் கண்ணுண்டாயிருந்தாலும் கண்ணுடையவர்களல்லர்; கண்ணுடையவர் கண்ணோட்ட மில் லாம லிருக்கிறதுமில்லை யென்றவாறு.

கண்ணுடையவர்கள் ஆனதற்கு[1] லட்சணம் காட்சிக்கண் உண்டாகவேணு மென்பதாம். எ

578. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு

என்பது

முறைசெய லாகிய தங்கள் தொழில் அழியாமற் கண்ணோட வல்ல வேந்தர்களுக்கு உரிமை உடையது இவ்வுலக மென்ற வாறு.

ராசாக்களுடனே சினேகமான பேர் பிறரை வாதைப்படுத்தி னால் அவர்கள் பேரிலே பட்சம் வையாமல் தண்டித்தலும்,

1. ஆனத்திற்கு என்று காகிதச்சுவடியிலுள்ளது.

முறை சிதையாதவழிக் கண்ணோடலும், ஒருவற்கு இயல்பாகலின், இவ்விரண்டுமுடைய ராசாக்களுக்கு உலக முழுதும் தம் வசமா மென்பதாம். அ

579. ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை

என்பது

தம்மை யொறுக்கு மியல் புடையா ரிடத்துங் கண்ணோட்டமுடையார் அவர்செய்த குற்றத்தைப் பொறுக்கிறதே அரசர்க்குத் தலையான இயல்பென்றவாறு. சூ

580. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

என்பது

தன்னுடனே சினேகிதமான பேர் நஞ்சையிட்டாலும் அவர்கள் மேற்கண்ணோட்டத்தினாலே அந்த நஞ்சைத் தள்ள மாட்டாமல் உண்டு பின்னையு மவர்களுடனே சினேகமா யிருப்பார்கள், எல்லாராலும் விரும்பப்பட்ட கண்ணோட்டத்தை யுடையவர்களென்றவாறு.

நாகரிக மென்பது கண்ணோட்டம். நடாத அரசராலு முண்பர்[1] அரசர் தம்மாட்டுக் குற்றஞ் செய்தாரை ஒறாது கண்ணோட்டஞ் செய்யவேண்டுமென்பதாம். ய

ஆக அதிகாரம் ருஅ க்குக்குறள் ருளஅய

இப்பால் 59. ஒற்றாடல்

என்பது, பகைவர், பிறத்தியார், சிநேகிதர் என்னும் மூன்று திறத்தாரிடத்திலேயும் நடந்த காரியங்களை அறிகிறதற்கு ஒற்றரை ஆளுகிறது முன் சொன்ன லட்சணத்தை யுடைய அரசர்கள் ஒற்றரை யாளவேண்டும் என்பதாம்.

1. இவ்வாக்கியம் விளங்குவதாக இல்லை; இது அச்சுநூலில் இல்லை.
2. பிறர்

581. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்

என்பது

தூதரையுங் கீர்த்தியுடனே கூடின நீதி நூலையும் இந்த விரண்டையு மரசன் றன்கண் களிரண்டு மென்று தெளிக வென்றவாறு.

ஒற்றுத் தன்கண் செல்லமாட்டாத பரப்பெல்லாம் போய்க் கண்டு, அங்கங்கே நடந்த காரியங்களை யெல்லாஞ் சொல்லு கிறத்தினாலேயும்[1]. நீதிநூல் நடந்த காரியங்களுக்கு நன்மை தீமை அறிவிக்கிறத்தினாலேயும்[2] இந்த விரண்டையுந் தனக்கு ஞானக்கண்ணாகவும் ஊனக்கண்[3]ணாகவும் தெளிந்து கொண்டு நடக்க வேணு மென்பதாம் க

582. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்

என்பது

எல்லாரிடத்திலேயும் நடக்கிற காரியங்களை யெல்லாம் நாள் தோறும் ஒற்றராலேயறிதல், அரசனுக் குரித்தான தொழி லென்றவாறு.

எல்லாரு மென்றது, பகைவர் பிறத்தியார் சினேகிதரென்னப் பட்ட மூன்று திறத்தாரையும். எல்லா மென்றது. நல்லதும் பொல்லாது மாகிய சொல்லுகளை[4]யும் செயல்களையும், அவை நிகழ்ந்த போதே அதற்குத்[5]த்தக்க வழியாகப் பரிகரித்தலாம். உ

583 ஒற்றினா லொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்

என்பது

ஒற்றினாலே எல்லார்கண்ணும் நடக்கிற காரியங்களை யறிந்து அதனாலெய்தும் பலன்களை யறியாத வரசன் வெற்றியடையக் கிடந்தது வேறொரு நெறியில்லை யென்றவாறு.

---

1. சொல்லுகிறதினாலேயும் 2. அறிவிக்கிறதினாலேயும் 3. ஊனக்கண் ஞானக்கண் என மாறுக.

4. சொற்களை 5. அவற்றிற்கு

அவர்கள் அவர்கள் நடக்கிறதுஞ் சொல்லுகிறதும் அறியாமற் பகைவற் கெளியனாவன்; ஆனபடியினாலே யொற்று வேண்டு மென்பதாம். ௩

584. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று.

என்பது

தன் காரியஞ் செய்வார், சுற்றத்தார், பகைவரென்று சொல்லப்பட்ட அனைவரையுஞ் சொற் செயல்களா லாராய்வானே யொற்ற னாவா னென்றவாறு.

தன் காரியஞ் செய்கிற பேர் செய்கிறத்தையும்[1] சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்துஞ் செய்கிறத்தையும் பகைவர் தன் அற்றம்[2] ஆராய்தலும், பகைவராகச் செய்வனவும் அறிந்தாராய்ந்து அவற்றிற் கேற்றன செய்ய வேண்டுதலின் இம்மூவகை யாரையும் பயப்படாமலாராய வேண்டு மென்பதாம். ௪

585. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று

என்பது

ஒற்றப் பட்டார் கண்டால் சந்தேகப் டாத வடிவோடு பொருந்தி, அவர்களண்டையிலே யிருக்கச்சிலே[3] அவர்கள் கடினமாகப் பார்க்கிற பார்வைக்குப் பயப்படாமல் மனத்திடமாயிருந்து, மறவாமற் கேட்டிருக்க வல்லவனே ஒற்றனாவா னென்றவாறு

சந்தேகப்படாத வடிவாவன. பார்ப்பார் வணிகர் முதலாயிருக்கிற வடிவு ௫

586. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று

என்பது

சகலத்தையுந் துறந்தவர்களாயும் விரதசிலாசாரங்களுள்ளவர்களாயும் உள்புகுதற்கரிதான விடங்க ளெல்லாம் உள்

1. செய்கிறனதயும் 2. சோர்வு 3. இருக்கச்சே -. இருக்குங்கால்

புகுந்து, ஆராய வேண்டியத்தை[1]ஆராய்ந்து அறியச்சிலே[2] அவர்கள் கண்டு பிடித்துக் கொண்டு எத்தனை வாதைப்படுத்திக் கேட்டாலுந் தன்னை யின்னானென்று வெளிப்படுத்தாதவனே யொற்றனாவா னென்றவாறு.

விரத வொழுக்கங்க ளுள்ளவர்களே கபடஞ் செய்யாரென்று காவல்[3] விடுவரென்பதாம். சு

587. மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
 யையப்பா டில்லதே யொற்று

என்பது

ஒற்றப்பட்டார் மறையச் செய்த காரியங்களை யவர்க்கு உள்ளாயினா ராற் கேட்க வல்லவனாய்க் கேட்டறிந்த செயல்களிற் பின்னை ஐயப்படாது துணிய வல்லவனே யொற்றனாவா னென்றவாறு.

மறைந்தவை[4] சொல்லுகிறவர்களை யறிந்து அவர்கள் உபத்திரவம் பண்ணாமற்றானே கேட்டதாகச் சொல்லி அதற்கேற்ற சொல்லாகச் செயலாக முன்னே விளைத்துக்[5] காரியங்களைத் தான் கேட்டுச் சொல்லுகிறபோது சந்தேகப்படாமற் சொல்ல வேணுமென்பது. அய்யப்பட்டுச் சொன்னால் அதற்கேற்ற செயல்களைச் செய்யப்போகாது. எ

58‹. ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
 ரொற்றினா லொற்றிக் கொளல்

என்பது

ஓரொற்றன் கண்டுவந் தறிவித்த காரியத்தைப் பின்னேயோரொற்றவனை விட்டுப் பாத்து[6] வரச் சொல்லிப் பிறகு தெளிக வென்றவாறு.

ஒருவ னொற்றினால் அவர்களோடு மாறுபடக் கூறுமாகலின் ஒருவன் மாற்றந் தேறப்படா தென்பதாம். அ

1. வேண்டியதை 2. அறியச்சிலே - அறியுங்கால் 3. துன்பஞ்செய்யாது என்பது அச்சு நூல் 4. இரகசியங்கள் 5. விளைத்து - உண்டாக்கி 6. பார்த்து

589. ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
 சொற்றொக்க தேறப் படும்
என்பது

ஒற்றரை யாளுமிடத்து ஒருவனை ஒருவன் அறியாம லாள்க. அப்படி யாண்ட வொற்றர் மூவரையும் ஒரு பொருண் மேல் வேறுவிட்டால், மூன்றுபேர் சொல்லுகுறதும்[1] பயனா லொத் திருந்தால், மெய்யென்று தெளியப்படு மென்றவாறு.

ஒருவனை யொருவ ரறிந்தால் மூன்று பேரும் பேசிக் கொண்டு சரியாய்[2] சொல்லுவர்[3] என்பதாம். கூ

590. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
 புறப்படுத்தா னாகு மறை
என்பது

மறைந்து நின்று கேட்டு வந்து சொன்ன வொற்றனுக்குச் செய்யுஞ்சிறப்பைப் பிறரறியச் செய்ய வேண்டாம்; பிறரறியச் செய்தால் தன் மனதிலே வைத்திருக்கிற ரகசியத்தைப் பிறரறியப் பண்ணினதா மென்றவாறு.

ரகசியமாவது, அவனொற்றனாவதும் அவன் சொன்னது மாம். சிறப்புச் செய்கிறத்தை[4] யறிந்தால் சிறப்புப் பெற்றவன் யாரென்றும் பெறுதற்குக் காரணம் யாதென்றும் கேட்பாரும் கேட்டாலதற்கு விரோதம் பண்ணுவாருமாம். ய

ஆக அதிகாரம் ருயகூ க்குக்குறள் ருளகூய

இப்பால் 60. ஊக்கமுடைமை

என்பது, மனஞ்சலியாமற்[5] காரியஞ் செய்கிறத்தினாலே[6] முயற்சி யுடையராதல்.

591. உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லார்
 உடைய துடையரோ மற்று
என்பது

1. சொல்கிறதும் 2. ஒரேமாதிரியாக 3. ஆகவே உணராமை யாள்க 4. செய்கிறதை 5. தளராமல் 6. செய்கிறதினாலே

ஒருவரை யுடைய ரென்று சொல்லப்பட்டது அறிவுடைய வர்களையே[1]; அந்த அறிவில்லாதவர்கள்[2] மற்றதென்ன வுண்டாயிருந்தாலு மில்லாதவர்க ளென்றவாறு.

பொருள் முதலாகிய துண்டாயிருந்தாலும் அத்தைக்[3] காத்து ரட்சிக்கந்தக்க அறிவு[4] இல்லாவிட்டாலழிந்து போவரென்பதாம் க

592. ஊக்க முடைமை[5] யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.
என்பது

ஊக்க மாகிய அறிவுடைமையே யொருவற்கு நிலை நின்ற வுடைமையாவது; மற்றைப் பொருள் முதலான வுடைமைகள் நில்லாமல் விட்டு நீங்கிப் போமென்றவாறு.

ஊக்கம் உள்ளத்துப் பண்பாதலின் அதற்கு நிலை நிற்றலும் பொருளுடம்பினும் வேறாயழிதலின் நிலை நில்லா தென்றும் சொல்லப்பட்டன.

593. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார்
என்பது

பொருளை யிழந்தாராயினும் யாம் கைப் பொருளை யிழந்தோமென்று அங்கலாயார்[6]. நிச்சயமான அறிவைக் கைப் பொருளாக வுடைய ரென்றவாறு.

பொருள் வந்த போதே ஒளியாமல் தன்பால் பண்ணவேணு மென்பது. அறஞ் செய்யாதவர் பொருளிழந்து போவா ரென்றவாறு.

594. ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
வூக்க முடையா னுழை
என்பது

1. ஊக்கமே 2. ஊக்கமில்லாதவர்கள் 3. அதனைக் 4. ஊக்கம் - என்பது அச்சுநூல் 5. உள்ளமுடைமை என்பது பிறரெலாம் கொண்ட பாடம் 6. மனங்கலங்கார்

அசை வில்லாத வூக்கத்தை யுடையானிடத்திலே பொருள் தானே வழிகேட்டுக் கொண்டு வருமென்றவாறு.

அசைவில்லாத வூக்கமாவது வறுமை முதலான வற்றாற்றளராமை. ச

595. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு
என்பது

நீர் நின்ற வளவினவாம், நீர்ப்பூக்களுடைய காம்பு; அது போல மனுஷர்க்குந் தங்க ளறிவுக்குத் தக்க வுயர்ச்சி யுண்டா மென்றவாறு.

உயர்ச்சி பொருள் படைகளால் மிகுத லென்பதாம். ரு

596. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து
என்பது

ஒருவ னினைக்கிற தெல்லாந் தன்னிட[1] வுயர்ச்சியையே நினைக்க; அந்த வுயர்ச்சி வந்தெய்தாமற் போனாலும் பெருமை யுடைய தென்ற வாறு.

நினைத்த கருமம் நல்ல தானா லவை யாகா விடினும் பெரியோர் பழியா ரென்பது. சு

597. சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு
என்பது

யானை கூரிய அம்பாற் காயம் பட்டவிடத்தும் தளராது தன் பெருமையை நிலை நிறுத்தும்; அதுபோல வூக்க முடையார் தாம் கருதிய உயர்ச்சிக்குத் தப்பு வந்தாலும் தள்ளாமல்[2]

1. தன்னுடைய 2. தளராமல்

தம் பெருமையை நிலை நிறுத்துவ ரென்றவாறு. தாங்கள் நினைத்த கருமத்துக்கு விக்கினங்கள்[1] வந்தாலும் அறிவுடையார் அவற்றைப் பரிகரித்து முடிப்பரென்பதாம். எ

598. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு

என்பது

ஊக்க மில்லாதவர்கள் இந்த வுலகத்தாருக்குள்ளே நாம் வண்மை யுடையோமென்று தம்மைத் தாம் மதித்தலைப் பெறா ரென்றவாறு.

ஊக்க மில்லா விட்டால் முயற்சி பொருள் கொடை செருக்கு இதுகள்[2] முறையே யில்லாமற் போம்; இவை யில்லா விட்டால் சந்தோஷ மில்லை யென்பது. அ

599. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெருவும்[3] புலிதாக் குறின்

என்பது

எல்லா மிருகத்துக்குள்ளேயும் பெரியது யானை; அது கூர்மையான கொம்பை யுடையதாயினும் புலி எதிர்ப்பட்டாற் பயப்படு மென்றவாறு.

புலியின் மிக்க வுடம்பும் கூரிய கொம்பு முடைய யானை ஊக்க மில்லாத படியினாலே ஊக்கமுடைய புலிக்கஞ்சு மாறுபோல, வலியுஞ் சேனையு முடையவர்கள் ஊக்க மிலராயின் அஃதுடைய வர்களுக் கஞ்சுவரென்பதாம். சு

600. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு

என்பது

---

1. தடைகள் 2. இவைகள் 3. வெருஉம் என்பது பிறரெல்லாங் கொண்ட பாடம்

ஒருவனுக்கு அறிவு மிகுத்ததே பொருளாவது: அந்தப் பொருளில்லாதார் மனுஷராகார்; மரங்களோ டொப்பர். வடிவு மாத்திரமே யல்லாமல் லறிவு பேதமில்லை யென்றவாறு,

மனுஷ யாக்கைக் கேற்ற அறிவில்லாத படியினாலே மரமென்றும், மரத்திற்குள்ள பலனில்லாத படியினாலே வேற்று மனுஷரென்றும் சொல்லப்பட்டது. ம

ஆக அதிகாரம் ௬ய க்குக்குறள் ௬ள

இப்பால் 61. மடியின்மை

என்பது நினைத்த காரியங்களைச் செய்கிற போது சோம்பறை[1] யாயிராமல் திடமாயிருக்குறது.[2]

601. குடியென்றுங் குன்றா விளக்கம் மடியென்னு
மாசூர மாய்ந்து விடும்

என்பது

ஒருவன் தான் பிறந்த குடியென்னப்பட்ட விளக்குத் தன்னிடத்திலே மடியென்னப் பட்ட சோம்பறையாகிய இருள் வந்தடையு நந்திக் கெட்டுப் போ மென்றவாறு.

ஒருவன் உலகத்துக் கேற்க நடக்கிற காலமெல்லாம் தன் வம்சம்[3] பிரகாசமா யிருக்கும்; உலக வியற்கை தப்ப நடந்தால் அவன் வம்சம் பிரகாச மில்லாமற் கெட்டுப்போ. மென்றவாறு. க

602. மடியை மடியா[4] வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்

என்பது

தான் பிறந்த குடியை மெத்த மெத்த அதிகமாகச் செய்ய வேண்டினவன் மடியைக் கெட்டுப் போக நடக்க வேணு மென்றவாறு.

---

1. சோம்பேறி 2. யிருக்கிறது

3. வங்சய என்று சுவடியிலுள்ளது 4. மடிய என்பது அச்சுநூல் பாடம்.

மடி கெடுகிறது, முயற்சியோடு கூடி நடந்தால் கெடும். மடி யைப் பார்க்கிலும் பொல்லாதது பின்னை யொன்றில்லை. அந்த மடியைக் கெட்டுப் போக நடந்தால், நாமும் பெருமை யுடை வர்[1] குடியு முயரு மென்பதாம்.

603. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து

என்பது

விட்டுவிடத்தக்க மடியைத் தன் மனசிலே வைத்திருக்கப் பட்ட அறிவில்லாதவன் பிறந்தகுடி, அவனுக்கு முன்னேதானே யழிந்து போமென்றவாறு.

மடியைக் கொண்டவனு மழிவ னென்பதாம்[2] ௩

604. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட வுஞற்றில வர்க்கு

என்பது

மடியின் கண்ணே விழுந்து நல்ல முயற்சி யில்லாதவர் களுக்கு அவர்கள் குடியுங் கெட்டுப் போயக் குற்றமும் பெருகு மென்றவாறு.

நல்ல வறிவு விவேக மில்லாதவர்களுக்குக் குற்ற மதிகமாம் என்பது ச

605. நெடுநீர் மறவி மடிதுயி லான்குங்
கெடுநீரார் காமக் கலம்[3]

என்பது

கெர்ப்பெனச்[4] செய்யுற[5] காரியத்தை மெத்தெனச் செய் குறோமென்குறதும்[6] மறப்பும் மடியும் நித்திரையுமாகிய இந்த

1. யுடையவர் என்று காகிதச் சுவடியிலுள்ளது.

2. மடியைக் கைக் கொண்டவன்குடி அழிவில் முற்படும் என்பது - அச்சுநூல்

3. கலன் என்பது பிறரெலாம் கொண்டபாடம்.

4. விரைந்து 5. செய்கிற 6. செய்கிறோ மென்கிறதும்

நாலும் சாகவேணு மென்கிறவர்களும் கெட்டுப் போகவேணு மென்கிறவர்களும் ஏறப்பட்ட கப்பலென்றவாறு.

இந்த நாலு காரியங்களை யுடையவர்கள் கெட்டுப்போவார்கள் என்பதாம். ரு

606. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பய னெய்த லரிது

என்பது

ஒருவனுக்குப் பூமி முழுதும் ஆண்டவர்களுடைய செல்வந்தானே வந்தெய்திய விடத்தும். மடியுடையவன் அதனால் வரப்பட்ட பலனை யடைகிறது[1] அரிதென்றவாறு.

மடியுடையவனுக்குப் பெரிய செல்வம் வந்தாலும் அந்தச் செல்வத்தை ரட்சிக்கத்தக்க முயற்சியில்லாத படியினாலே அந்தச் செல்வ மழியும்; அழியவே யவன் துன்பம் நீங்காதெனற வாறு. சா

607. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர்[2] மடிபுரிந்து
மாண்ட ஞுவுற்றில வர்

என்பது

மடியை விரும்பி நல்ல குணங்களை விரும்பாதார் தம்முடைய சுற்றத்தார் முன்னே ஆகாத விசேஷங்களைப் பேசி[3] அவர்களாலே யிகழ்ந்து பேசத்தக்க வார்த்தையைக் கேட்பர்களென்றவாறு

முன்னிகழ்ந்து பேசினபடியினாலே, பின் அவர்கள் பேசுகிறத்துக்கு[4] மாத்திரம் சொல்லக் கூடாத படியினாலே கேட்பர் என்பதாம். எ

1. யடையிறது என்று காகிதச்கவடியிலுள்ளது. 2. கேழ்ப்பர் என்று காகிதச்சுவடியிலுள்ளது.

3. முன்கழறுதலை மிகச் செய்து பின்-அச்சுநூல் (குறிப்புரை காண்க
4. பேசுகிறதற்கு 5. மாறுத்தரம்

608. மடிமை குடிமைக்கட் டங்கித்தன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும்

என்பது

மடிமை நல்ல வங்ச[1] வானிடத்திலே தங்கி யிருந்தால் அது அவனுடைய சத்துருக்களுக்கு அவனை அடிமையாகப் பண்ணி விடும் என்றவாறு.

அடிமையாவது, அவர்களாலே வரப்பட்ட காரியங்களைத் தாழ்ந்து செய்த லென்பதாம். அ

609. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்

என்பது

ஒருவன் தன் மடிமையை யொழித்து விட்டால், அவன் குடியிலேயும் ஆண்மையிலேயும் வந்த குற்றங்கள் கெட்டுப்போ மென்றவாறு.

மடியை யல்லாமல் வந்த குற்றங்களும் மடியை விடவே யெல்லாக் குற்றங்களும் போமென்பதாம். கூ

610. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு

என்பது

மடிமை யில்லாத வரசன், சகலலோகத்தையு மறிந்த சுவாமி கடந்த பரப்பெல்லாம், வரிசை யல்லாமல் ஒருங்கே யடையு மென்றவாறு.

மடியில்லாதவன் சகல போகங்களையுமடைவனென்பதாம். ய

ஆக அதிகாரம் கூய௲கக்குக் குறள் கூளய

இப்பால் 62. ஆள்வினை யுடைமை

என்பது, இடைவிடாத மெய்ம் முயற்சி யுடையனாதல்: இது ஆள்வினையென்று சொல்லப்பட்டது.

1. வமிச

611. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்
என்பது

தன்சிறுமையை நோக்கி நாமிந்தக் காரியத்தை முடிக்கிறது அருமை என்று நினைச்சு[1] விசாரப்படாமலிருக்க வேணும்; அந்தக் காரியத்துக் கேற்ற பெருமையே தமக்கு முயற்சி யுண்டாக்கு மென்றவாறு.

ஒரு காரியஞ் செய்ய வேண்டின் அத்தை[2] விடாது முயலவே தாம் பெரியராவர்; பெரிய ரானால் அரிதான காரியங்களும் எளிதின் முடியுமென்றவாறு.

612. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு
என்பது

காரிய மாகிய வினைக்குறையைச் செய்யாது விட்டாரை உலகமும் விடும்; அதனாற் செய்யப்பட்ட[3] காரியங்களை விடாமற் செய்ய வேண்டு மென்றவாறு.

வினைக்குறையாவது, தாம் வாழ் நாள் குறைபடாமல் நிற்கும் வண்ணம் புண்ணியத்தைச் செய்தல் என்பதாம். உ

613. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு
என்பது

முயற்சியென்று சொல்லப்படுகின்ற வுயர்ந்த குணத்தின் கண்ணே நின்றது, எல்லார்க்கும் உபகாரஞ் செய்தலென்னும் மேம்பா டென்றவாறு.

பொருளுடையவர்கள் பிறருக் குபகாரஞ் செய்தால் முயற்சி யுடையா ரென்பார் மேம்பாடென்றார். ௩

1. நினைத்து 2. அதனை 3. செய்யப்படும்

614. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்

என்பது

முயற்சி யில்லாதவன் உபகாரம் பண்ணவேணுமென்று நினைக்கிறது, படையைக் கண்டாலஞ்சும் பேடி தன்கையில் வாளை யாளுதற்றன்மைபோல இல்லையாமென்றவாறு.

பேடி வாளையெடுத்துக் கொண்டு சத்துருவைச் செயிக்குறோம்[1] என்கிற புத்தி யுண்டாயிருந்தாலும்,[2] பயத்தாற் செயிக்க மாட்டாதவாறுபோல, முயற்சி யில்லாதவன் உபகாரஞ் செய்ய நினைத்தாலும் தன் வறுமையாற் கூடாதென்பதாம். ச

615. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்

என்பது

ஒருவன் றனக்குச் சுகத்தை விரும்பாமல் காரியங்களை முடிக்கிறத்தை[3] விரும்புவான் தன் சுற்றத்தார்[4] ஆகிய பாரத்தினுடைய துன்பத்தினை நீக்கி அவர்களைத் தாங்கும் தூணாமென்றவாறு.

காரியத்தை வாஞ்சியாமற் காரணத்தை வாஞ்சிக்கிறவன் எல்லாப்பொருளும்[5] எய்தும் என்பதாயிற்று. காரியமாகிறது, வரப்போகிறது; காரணமாகிறது முன் செய்தது. ரு

616. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்

என்பது

ஒருவனிடத்திலே யுண்டான முயற்சியாவது அவன் செல்வத்தினை வளர்க்கும்; முயற்சி யில்லாதது தரித்திரத்தை யடைவித்துவிடு மென்றவாறு.

---

1. செயிக்கிறோம் 2. என்று கருதிச்சென்றாலும் - அச்சுநூல்

3. முடிக்கிறதை 4. 'சுத்தத்தார்' என்று காகிதச் சுவடியிலுள்ளது. 5. பயனும் என்பது பரிமேலழகருரையிற் கண்டது

வறுமை வந்துற்றால் எல்லாராலும் நலிவு வாதைப் படுவர்[1] என்றவாறு ௬

617. மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்

என்பது

மடியுடையவனிடத்திலே மூதேவி யிருப்பாள்; மடியில்லாமல் முயற்சி யுடையவனிடத்திலே மகாலட்சுமி விட்டுப் போகாம லிருப்பளென்றவாறு. ௭

618. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி

என்பது

பலனைத் தருவதாய வழி[2]யில்லாதது ஒருவற்குப் பழியன்று; அறியவேண்டுமவற்றை யறிந்து காரியஞ் செய்யாததே பழியாவ தென்றவாறு.

அறிய வேண்டுவன வாவது, வலிமுதலாயவற்றை; அறிந்து விடாது முயலவே பயனாமென்பது கருத்து. ௮

619. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்

என்பது

முயன்ற வினைவகையால்[3] நினைத்தபடிக்குப் பலன்தாரா விட்டாலும், முயற்சியினாலே தன்னுடம்பு வருந்தினாற் கூலி யாகிலும் வரும்; விருதாவாய்ப் போகாதென்றவாறு.

தெய்வம் ரட்சிக்குமென்றிராமல் முயற்சியாகக் காரியஞ் செய்யவேண்டு மென்பதாம். ௯

620. ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்

என்பது

---

1. எல்லாராலும் துன்புறுவான் அச்சுநூல்

2. விதி என்க 3. வினை விதி வகையால் - அச்சுநூல்

பலனை விலக்குவதாய வூழ்வினையையும் புறந்தள்ளுவர் அந்த விலக்குக்கு இளையாமல் வினையை விடாமல் முயலுபவ ரென்றவாறு.

ஊழ்வினை யொருகா லிருகா லல்லது பலகால் விலக்காமை யின் பலகால் முயலுபவர் பயன் எய்துவரென்பது, தெய்வத்தா லிடுக்கண் வரினும் அதற்கு மனங்கலங்காமல் முயற்சி விடாம லிருக்க வேணு மென்பதாம். ய

ஆக அதிகாரம் சுயஉக்குக்குறள் சுளஉய

இப்பால் 63. இடுக்கணழியாமை

என்பது, வினையின்கண் முயல்வான் தெய்வத்தாலாதல் பொருள் இல்லாதத்தினாலே[1] யாதல் உடம்பு வருத்தத்தானாதல் தனக்கு உபத்திரவம் வந்தால் அதற்கு மனசு கலங்காமல் இருக்குறது.

621. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃ[3]தொப்ப தில்

என்பது

ஒருவன் செய்த வினையால் தனக்கு உபத்திரவம் வந்தால், அதற்கு மனது கலங்காது சந்தோஷப் பட வேணும்; அந்த உபத் திரவத்தை மேன்மேலுங் கெடுக்க வல்லது சந்தோஷத்தைப் போல் வேறொன்று மில்லை யென்றவாறு.

சந்தோஷ முண்டாகவே துக்கம் கெடுமென்பதாம். க

622. வெள்ளத் தனைய விடும்பை அறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்

என்பது

வெள்ளத்தைப் போல அளவில்லாத துக்கங்க ளெல்லாம், அறிவுடையவன் தன் மனதிலே யொன்றை நினைத்த வுடனே கெடு மென்றவாறு.

1. இல்லாததினாலே 2. இருக்கிறது 3. 'தகு' என்று காகிதச் சுவடியி லுள்ளது.

ஒன்றை நினைக்கிறது, முன் செய்த தீவினை என்பது உ

623. இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்

என்பது

ஒரு காரியத்தைச் செய்கிற காலத்திலே அதற்கு[1] வந்த துன்பத்துக்கு வருந்தாதவர் அந்தத் துன்பந்துக்குத் தாங்கள் துன்பம் விளைப்பர் என்றவாறு.

வருந்துதல், இளைத்து விட நினைத்தல் ௩

624. மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து

என்பது

வண்டி விலங்கின விடத்திலே யதனை விலங்காம விழுப் பிக்கும் பகடுபோலத் தானெடுத்துக் கொண்ட காரியத்தை முடிக்க வல்லவனை வந்தடைந்த விடுக்கண் தானே துக்கப்படு மென்றவாறு.

பகடாவது வண்டி யிழுக்கச் சிலே[2] தாங்கிற மரம் தான் னுணியை யூன்றியும் தன் மேலே வண்டியை யேற்றுக் கொண்டு சேற்றுக்குத் தாண்டி விக்கிறதுமாய்[3] இப்படி வருத்தப்பட்டுக் காரியத்தைச் செய்கிறவனுக்கு இடையூறு வாரா தென்பது; வந் தாலும் விலங்கிப் போமென்பதாம். ச

625. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்

என்பது

இடைவிடாது மேன்மேலு மிடுக்கண் வந்தன வாயினும், தன் மனசு திடம் விடாதவனுக்கு அந்த இடுக்கண்கள் தாமே

---

1. 'காலத்தி லெய்திக்கு' என்று காகிதச் சுவடியிலுள்ளது; திருத்தம் அச்சு நூல்.

2. இழுக்குங்கால் 3. இவ்வாக்கியம் தவறு படவுள்ளது குறிப்புரை காண்க

கெட்டுப்போ மென்றவாறு.

626. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர்

என்பது

வறுமைக் காலத்து யாம் வறிய மாயினம் என்று மனதிலே விசாரப் படுவார்களோ, செல்வக் காலத்து அயிசுவரியம் வந்துதென்று[1] சந்தோஷப் படாத பேரென்றவாறு.

பொருள் வந்து சந்தோஷப் படாத பேர் வறுமைக் காலத்தும் விசாரப் படா ரென்பதாம் சு

627. இலக்க முடம் பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதா மேல்

என்பது

தேவகெதி மனுஷகதி விலங்கு கெதி நரகர்[2] கெதி யென்று சொல்லப்பட்ட நாலு கெதிகளிலு முள்ள வுடம்புகள் துக்கமென்னும் வாளுக்கு இரை யென்று கருதித் தமக்கு வந்த துக்கந்தைத் துக்க மாக நினையார் அறிவுடையா ரென்றவாறு.

அறிவுடையார் சரீரம் அநித்தியம் என்று துக்கத்துக்கு விசாரப்படா ரென்பதாம். எ

628. இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
துன்ப முறுத லிலன்

என்பது

தன்னுடம்புக்கு இன்பமானவற்றை விரும்பாதே காரியத்தினாலே துக்கப்படுகிறதே யியல் பென்று தேறியிருப்பவன் தன் முயற்சியினாலே துக்கப்படா னென்றவாறு. அ

629. இன்பத்து ளின்பம் விழையாதான் துன்பத்துட்
டுன்ப முறுத லிலன்

என்பது

தான் செய்த காரியத்தினாலே தனக்கின்பம் வந்தபோது அதனை அநுபவியா நின்று மனத்தால் மிகவும் விரும்பாதவன், துன்பம்

---

1. வந்ததென்று 2. நாத என்று காகிதச் சுவடியிலுள்ளது

வந்த போதும் அதனை யனுபவித்து மனத்தால் வருந்தா னென்றவாறு

இன்பத்தை விரும்பாதபடியினாலே துன்பத்தை யனுபவித் தாலும் துக்கப்படா னென்பதாம். சூ

630. இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு

என்பது

ஒருவன் காரியஞ் செய்யுமிடத்து முயற்சியான் வந்த துன்பம் தன்னையே தனக்கின்பமாகக் கற்பித்துக் கொள்ளுவனா யின்[1] அதனாற் றன்பகைவர் தன்னை மெய்யண்ணத் தக்க வுயர்ச்சி யுண்டா மென்றவாறு.

துன்பத்தை யின்பமாகக் கொண்டால் தொடங்கிய காரிய முடிப்ப னென்று பகைவரஞ்சுவ ரென்பதாம். ய

ஆக அதிகாரம் சுயரு க்குக் குறள் சுளருய

அரசியல் முற்றும்

இப்பால் அமைச்சியல் 64. அமைச்சு

என்பது அரசியல் நடத்தற் கேதுவாகிய அங்கங்களின் இயல்பு 'முப்பத்திரண்டு[2], அதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி முதற்கண் அமைச்சன தியல்பு பத்ததிகாரத்தாற் கூறுகின்றார். முதற்கண் அமைச்சுக் கூறுகின்றார். அஃதாவது மந்திரியுடைய குணலக்ஷணங்களைச் சொல்லுகிறது.

631. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு

என்பது

காரியம் செய்யுமிடத்து அதற்கு வேண்டின ஆயுதங்களும் அதற்கேற்ற காலங்களும், அந்தக் காரியஞ் செய்கிற போது

1. கொள்ளுவனாகி என்று காகிதச்சுவடியிலுள்ளது
2. முப்பத்திரெண்டு என்று காகிதச்சுவடியிலுள்ளது

இப்படிச் செய்தால் முடியு மென்பதும், அதனாற் பெறும் பலனும் அறிந்து செய்கிறவனே மந்திரியாவா னென்றவாறு.

632. வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு

என்பது

ஒரு காரியஞ் செய்யுமிடத்திலே சலியாமலிருக்கிறதும் குடிகளை ரட்சித்தலும், நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும், உற்சாகமும்,[1] கருவி[2] காலஞ் செய்கை முடிவு[3] பலனென்று சொல்லப்பட்ட வைந்துடனே கூடிச் செய்யவல்லவனே யமைச்சன் என்றவாறு. உ

633. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு

என்பது

பகை வந்த காலத்திலே பகைவர்க்குத் துணையாயினாரைப் பிரித்தலும், தன் மனுஷரைப் போக வொட்டாமல் பிரியஞ் சொல்லி நிறுத்திக் கொள்ளுகிறதும், முன்னே தன் ராசாவை விட்டுப் பிரிந்துபோனவரைக் கூட்ட வேண்டிற் கூட்ட வல்லவனு மானவனே மந்திரி யென்றவாறு.

634. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு

என்பது

ஒரு காரியஞ் செய்ய வேண்டின பொழுது பலவகையாலோசனை தோன்றினால், அதிலே[4] ஆகத்தக்கதாராய்ந் தறிகிறதும், அது செய்கிற போது அதனால் வருகிற பலனை யறிந்து செய்கிறதும், ஒருத்தரைப் பிரிக்கிறத்தினாலேயும்[5] அவர்களுக்குத்

1. ஆள்வினை என்பதற்கு இங்கு உற்சாகம் என்று பொருள் தரப்பட்டுள்ளது. 2. கருவி என்றவிடத்து அச்சு நூலில் தானையும் பொருளும்'' என்றுள்ளது; 631 ஆம் குறள் சிறப்புரையில் பரிமேலழகர் இவ்வனம் கூறியுள்ளார். 3. ''செய்கை முடிவு'' என்ற விடத்து அச்சுநூலில் செய்யுமாறு என்றுளது.

4. அவற்றுள் 5. பிரிக்கிறதிலேயும் கூட்டுகிறதிலேயும்-அச்சுநூல்

துணிவு பிறக்க யிதுவே செய லென்று சொல்லுகிறதும் வல்ல வனே மந்திரி யென்றவாறு. ச

635. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை
என்பது

அரசராலே செய்யப்பட்ட தருமங்களையு மறிந்து, தனக்கு வேண்டின கல்வி கேழ்வி[1] யாலே நல்ல வார்த்தையை யுடைய வனாய், எக்காலமும் காரியங்கள் செய்கிற திறமையை யறிந்த வன் அரசற்கு நல்ல துணையா மென்றவாறு. ரு

636. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை
என்பது

தனக்குச் சுபாவ மாகிய அறிவைச் சாத்திரங்களுடனே கூட்டி வச்சிருக்கிற[1] மந்திரிகளுக்கு மிகுந்த சூட்சத்தை[2] யுடைய காரியங்கள் யாதொன்று மில்லை[3] யென்றவாறு.

எல்லாக் காரியங்களும் எளிதாயிருக்கு மென்பதாம். சு

637. செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்
என்பது

சாத்திரப் பிரகாரத்தினாலே காரியஞ் செய்யும் வகையறிந்த போதும் உலகத்திலே அப்போழுது நடக்கிற இயற்கையை அறிந்து அதற்கேற்சுச் செய்ய வேணு மென்றவாறு. எ

638. அறிகொள் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்
என்பது

1. கேள்வி

2. வைத்திருக்கிற 3. சூக்குமத்தை; நுட்பத்தை (அச்சுநூல்) 3. காரி யங்கள் யாதொன்று மில்லை-சூழ்ச்சிகளாய் முன் நிற்பனயாவுள (அச்சுநூல்)

அறிந்து சொன்னவரது வசனத்தையுங் கேளாமல் தானு மறியாவிட்டாலும் அந்தக் குற்றத்தினாலே அவனை யிகழ்ந்து விடாமல், அந்த ராசாவுக்கு உறுதியான வார்த்தை சொல்லு கிறது, மந்திரிகளுக்கு முறைமை யென்றவாறு. அ

639. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வ[1]
ரெழுபது கோடி தலை[2]
என்பது

ராசாவி னண்டையிலே யிருந்து கொண்டு தப்பு நினைக்கிற மந்திரி யொருவனும் எழுபது கோடி சத்துருக்களுக்குச் சரி யென்றவாறு.

எதுத்த[3] சத்துருக்களை வெல்லலாம்[4]; அண்டையிலே யிருந்து கொண்டு கேடு[5] நினைக்கிறவர்களை வெல்லப் போகா தென்பதாம். க

640. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்
என்பது

செய்ய வேண்டிய காரியங்களை முந்தி யடைவாக நினைச்சுக்[6] கொண்டிருந்தும், நிறைவேறச் செய்யாமல் விட்டுவிடுவார்கள், திறமை யில்லாதவர்க ளென்றவாறு.

திறமை யாவது மேலே வரப் போற[7] விகாதங்களை[8] யறிந்து பரிகரிச்சுக்[9] கொண்டு செய்கிறதும் தாங்கள் பயப்படாமல் கெட்டியாய் இருக்கிறதுமாம். ய

ஆக அதிகாரம் சுயச க்குச் குறள் சுளசய

இப்பால் 65. சொல்வன்மை

என்பது, தான் நினைத்த காரியம் முடிக்கிறத்துக்கு[10] ஏற்ற வார்த்தை சொல்ல வல்ல னாதல்

---

1. டெவ்வோ; 2. யுறும் - அச்சு நூல், பரிமேலழகர் பாடம் 3. எதிர்த்த 4. யெல்லாம் - காகிதச் சுவடி 5. கேடு என்ற சொல் அச்சு நூலில் 6. நினைத்துக்
7. போகிற 8. விகாதம் - இடையூறு 9. பரிகரித்து 10. முடிக்கிறதற்கு

641. நாநல மென்னும் நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ள தூஉ மன்று

என்பது

பெரியவர்களாலே நல்ல வார்த்தையை யுடையவனென்று சொல்லப்பட்ட நா நல முடையவனே நல்லவன்; அந்த நாநலம் உலகத்தை யெல்லாம் தனக்குச் சினேகமாகப் பண்ணு மென்ற வாறு.

நாவினுடைய நலம் எந்த நலத்தினுடனே யுஞ் சரியல்ல[1] என்ற வாறு. க

642. ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு

என்பது

தனக்கும் தன்னையுடைவர்க்குஞ் செல்வமு மழிவுந்தன் வசனத்தால் வருமாதலால், அப்படிப் பட்ட சொல்லிலே சோர் வுகளைத் தங்களிடத்திலே வராமற் காக்க வேணு மென்றவாறு.

நல்ல வார்த்தை செல்வத்துக்குக் காரணம்; பொல்லாத வார்த்தை கேட்டிற்குக் காரண மென்பது. உ

643. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்

என்பது

சினேகமானவர்கள் கேட்டால் விட்டுப் போகாமலும்[1] பகை யானவர்கள் கேட்டால் முந்தின பகையை விட்டுச் சினேகம் வைத்துக் கேட்கத்தக்க தாய்ச் சொல்லத்தக்கதே சொல்லாவ தென்றவாறு.

சொல்லாவது: வவுதலில்லாதது, கொஞ்சமாயிருக்கிறது[2] பிரியமாயிருக்கிறது, நல்ல பலன்களைக் கொடுக்கிறது, இது[2] முதலாயினதுகளை[3] யுடையதாம். ரு

---

1. எந்த நலத்தினுடனே யும் சரியல்ல - பிற நலம் எல்லாவற்றினும் மிக்கது - அச்சு நூல்

1. சினேகமானவர்கள் வேறுபடாமல் பிணிக்குங் குணங்களை அவாவி- அச்சுநூல் 2. இது-இனிதாயிருப்பது, அச்சுநூல் 3. முதலானவற்றை

644. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூங்[1] கில்

என்பது

நல்லதாகிய சொற்களைக் கேட்கிறவனுடைய திறமையை யறிந்து சொல்லுக; அந்தச் சொல்லுக்கு மேற்பட்ட அறமும் பொருளு மில்லை யென்றவாறு.

திறமை யறிந்து சொல்லுதலாவது, சொல்லுகிற வசனத்தினாலே தமக்கு மவர்க்கு முண்டான ஏற்றக் குறைச்சல் அறிந்து சொல்லுதலாம்.

645. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து

என்பது

தான் சொல்ல நினைத்த சொல்லைப் பின்னை யொரு சொல்லாலே வெல்லவல்ல தொரு சொல் இல்லாமையையறிந்து பிறகு சொல்லுக வென்றவாறு.

பின்னையொரு சொல்லாவது, பகைவர் சொல் என்பதாம்.

ரு

646. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர் சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்

என்பது

பிறருக்குத் தான் சொல்லுங்கால் அவர் பின்னையும் விரும்பிக் கேட்குமாறு சொல்லி, அவர்கள் தனக்குச் சொல்லுங்கால் அந்தச் சொல்லினுடைய பயனை யறிந்து கொள்ளுகிறது, மந்திரிகளிலே குற்ற மற்றவர்[1] என்றவாறு.

பிறர் சொற்களிலே குற்ற முளவாயிருந்தாலும் இகழாரென்பது.[2]

சா

1. 'மனிதனூஉங்' என்பது பிறர் கொண்டபாடம்

1. குற்மற்றவர் இயல்பு; 2. அவை நோக்கி இகழார்-அச்சுநூல்

647. சொலல்[1] வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது
என்பது

தானினைத்த காரியங்களைப் பிறர்க் கேற்கச் சொல்ல வல்லவனாய் வெகு சபை கூடியிருந்த விடத்திலே சோர்வில்லாதவனாய்ப் பயப்படாதவனு மானவனைச் சுபாவமாய்[2] வெல்லுதல் எப்படிப்பட்டவர்களுக்கும் அருமை யென்ற வாறு. சொல்ல வல்லவ னாவது[3], தான் நினைத்த காரியங்களை மறவாமற் சொல்லுதலாம். எ

648. விரைந்து தொழில் கேட்கு ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்
என்பது

சொல்ல வேண்டிய காரியங்களை வரிசையாய்த் தப்பாமற் சொல்ல வல்லவர்களைக் கண்டால் உலகத்தார்* எதிரே வந்து அழைத்துக் கொண்டு போய் வைத்துக் கொள்ளுவார்கள் என்ற வாறு. அ

649. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்
என்பது

குற்ற மில்லா தனவாயிருக்கிற சிறிது[4] வார்த்தைகளை முன் பின் அறிந்து வரிசையாய்ச் சொல்ல மாட்டாதவர், வெகுவான[5] காரிய[6] வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவார்க ளென்றவாறு. கூ

650. இணருழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்
என்பது

---

1. சொல் என்பது காகிதச்சுவடி 2. மாறுபாட்டில்-அச்சுநூல் 3. சோர் விலனாவது-அச்சு நூல் *முதல் வரை: அவற்றை விரைந்து ஏற்றுக் கொள்வர்-அச்சுநூல்

4. சில 5. பலவாய்-அச்சுநூல் 6. காரிய-அச்சுநூலில்லை

தான் கற்ற நூல்களைப் பிற ரறியத் தக்கபடி விரித்துச்சொல்ல மாட்டாதார், மலர்ந்தும் மண மில்லாத பூவோ டொப்ப ரென்ற வாறு.

மலர்ந்தாலும் மணமில்லாத பூவை முடிக்கப்படாத வாறுபோல நூல்களைக் கற்றாலும் பிறருக்குத் தெரிய விரித்துச் சொல்ல மாட்டாதவர்கள் நல்லவர்கள் எண்ணப்படா[1]தென்பதாம் ௰

ஆக அதிகாரம் ௬௫ க்குக் குறள் ௬௫௰

இப்பால் 66. வினைத்தூய்மை

என்பது செய்யப்பட்ட காரியங்கள் பொருள் காரண மென் றெண்ணாமல் அறமும் புகழும் கொடுத்து நல்லவன் என்னப் பட்ட காரியங்களே செய்ய வேண்டு மென்பது.[1]

651. துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்

என்பது

ஒருவனுக்கு நல்ல துணை யுண்டானா லது செல்வமொன்றை யுங் கொடுக்கும்; செய்யப்பட்ட வினை நல்லதானால் அவன் வேண்டிய தெல்லாங் கொடுக்கு மென்றவாறு. ௧

652. என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை

என்பது

தனக்கு இம்மையிலே புகழும் மறுமையிலே தர்மமும் கொடாத காரியத்தை யென்றைக்குஞ் செய்யாமல் விட்டு விட வேணு மென்றவாறு. ௨

653. ஓஒதல் வேண்டு மொளி மாழ்குஞ் செய்வினை
ஆஅது மென்னு மவர்

என்பது

1. நன்கு மதிக்கப்படார் - அச்சுநூல் 2. திருத்தம் - குறிப்புரை காண்க

மேலே செல்வம் வரவேணு மென்று நினைச்சுக்[1] காரியம் செய்கிறவர்கள், தங்கள் கீர்த்தி கெடத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டாம் என்பது

செல்வம் நிலையற்றது, புகழ் எந்நாளும் நிற்கும்; ஆனபடியினாலே புகழ் கெடத் தக்க காரியங்களைச் செய்ய வேண்டாம் என்பதாம்[2] ௩

654. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்
என்பது

தமக்குத் துக்கம் வந்தாலும் அது தீரத்தக்கதாய்[3], குற்றம் வரத் தக்க காரியங்களைச் செய்யார், நல்ல நெறிகளை யுடையவர்கள் என்ற வாறு.

சிறிது பொழுதிலே விட்டுத்[4] துக்கத்துக்காக நெடுங்காலம் சுப கீர்த்தி[5] நிற்கத்தக்க காரியங்களைச் செய்யலாகா தென்பதாம். ௪

655. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று
என்பது

நாமென்ன காரியஞ் செய்தோ மென்று பின் தானே விசாரப் பட்ட காரியங்களைச் செய்யாம லிருக்க வேணும்;

*அல்லாமல் மயங்கி அறிவில்லாமல் ஒரு காற் செய்தால், பின் அவ்விரங்கல்களைச் செய்யாமல் இருக்க வேணும் என்ற வாறு*

என்ன காரியஞ் செய் தோமென்று விசாரப்பட்டால், அது தீர்க்கும் வழி யறியாதவனென்றும் மனசு திடமில்லாதவ

1. நினைத்துக்

1. செய்யாமல் தவிர்க - அச்சு நூல் 2. இச்சிறப்புரை அச்சு நூல் 3. தீரும் பொருட்டு 4 விட்டுப் போகிற 5. பழி முதல் வகை அச்சு நூல்.

னென்றும், பயனில்லாத காரியஞ் செய்தானென்றும், தன் பழியைத் தானே தூற்றுகின்றா னென்றும், எல்லாராலும் இகழப்படுதலின்[1] இரங்கி விசாரப்படாமலிருக்கிறதே நல்லதென்பதாம்.

656. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

என்பது

தன்னைப் பெத்த[2] தாயானவள் பசித்திருக்கக் கண்டாலும் அதற்காகப் பெரியோர்கள் பழிக்கத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டா மென்றவாறு.

657. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை

என்பது

பழியும் பாவமும் வரத்தக்க காரியங்களைச் செய்து செல்வத்தை யனுபவிக்கிறத்திலும்[3] பெரியோர்களாயிருந்து தரித்திரத்தை யனுபவிக்கிறதே நல்ல தென்றவாறு.[4]

58. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்

என்பது

பெரியோர்கள் ஆகாதென்று சொன்ன காரியங்களைத்தாமு மாகாதென்று விடாமல், பொருளுக்காக ஆகாத காரியங்களைச் செய்து முடித்தாலும், அவை பிறகு துக்கத்தைக் கொடுக்குமென்றவாறு.

659. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை

என்பது

---

1. இகழப்பட்டுதல் என்று கர்கிதச்சுவடி 2. பெத்த-பெற்ற 3. யனுபவிக்கிறதிலும் 4. அச்சு நூலில் பரிமேலழ கருரையேதரப்பட்டுள்ளது.

ஒருவன் பொல்லாத காரியங்களைச் செய்து பிறர் விசாரப் படத்தேடின பொருளெல்லாம், இம்மையிலேதானே அவன் விசாரப் படத்தக்கதாய்ப் போய்விடும்; நல்ல காரியங்களைச் செய்து தேடின பொருள்கள், முன்னே யிழந்து போனாலும், பின் வந்து பலன்களைக் கொடுக்கு மென்றவாறு. சூ

660. சலத்தாற் பொருள்செய் தேமார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீ[1] யற்று
என்பது

ஒருவன் பொல்லாத காரியங்களைச் செய்து பொருளைத் தேடி வைத்துக் கொள்ளுகிறது எப்படிப் போலே என்றால் பச்சைப் பானையிலே தண்ணீரை வார்த்து அதுக்குக் கனம் பண்ணுகிறாற் போலேயாம் என்றவாறு.

செய்கிற போது நன்மை போலேயிருந்து பிறகு கேடுண்டாக்கு மென்பதாம்.

ஆக அதிகாரம் சூசூ க்குக் குறள் சூளசூ௰

இப்பால் 67. வினைத்திட்பம்

என்பது, நல்ல காரியங்களைச் செய்து முடிக்கிறவனுக்கு வேண்டியது மனது திடமென்பது.

661. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் தரும்[1]
என்பது

ஒரு காரியஞ் செய்கிறத்திலே[2] கெட்டி யென்று சொல்லப் படுகிறத்திலே[3] அவனுடைய மனசு திடமே கெட்டி; அது வல்லாமல் மற்றதெல்லாம் கெட்டியல்ல வென்றவாறு.

1. பெய்திரீஇ என்பது பிறர்ப்பாடம்

1. பிற என்பது பிறரெல்லாம் கொண்டபாடம் 2. செய்கிறதிலே 3. படுகிறதிலே

மற்றதென்றது காரியஞ் செய்கிறத்துக்கு[1] வேண்டின ஆயுதங்கள் சேனை[2] யென்பதாம். க

662. ஊறொரா லூற்றபி னொல்காமை யிவ்விரண்டி
னாறென்ப ராய்ந்தவர் கோள்

என்பது

நீதி பாரா யிருக்கிறவர்களுடைய நினைவு குற்றம் வரத்தக்க காரியங்களைச் செய்யாமையும், செய்யப்பட்ட காரியம் கர்ம வசத்தினாலே பழுது வந்தாலும் அதற்கு விசாரப் படாமலிருக்கிறதும் சாத்திரப் பிரகார[3] மென்றவாறு.

செய்த பிறகு விசாரப்பட்டால், அது தீர்க்கும் வகையறியானென்று பிறரிகழ்வ ரென்பதாம்.

663. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்றா விழுமந் விழுமந் தரும்.

என்பது

செய்யவேண்டிய காரியங்களை முடிந்த பின்னறியும் வகை பண்ணி, அதற்கு முன்னெல்லாம் மறைத்துப் பிறரறியாமற் செய்கிறதே மனசு திடமாவது; அப்படி யல்லாமல் செய்யச்சிலே[4] பிற ரறிந்தால், செய்கிறவனுக்கு ஒருக்காலும்[5] நீங்காத துக்கம் வரு[6] மென்றவாறு.

பகைவ ரறிந்தால் காரியங்களை விகாதம் பண்ணுவரென்பது ௩

664. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்

என்பது

நாமிந்தக் காரியத்தை யிப்படிச் செய்வோ மென்று

---

1. செய்கிறதற்கு 2. சேனை முதலிய வற்றின் திண்மைகள் அச்சு நூல் 3. ஆகிய இவ்விரண்டின் வழி என்பர் நூலோர்-அச்சுநூல் பரிமேலழகருரையும் இதுவே 4. செய்யும் பொழுதே 5. ஒரு காலும் 6. கொக்கும்

கெட்டியாய்ச் சொல்லுகிறது, எல்லார்க்கு மெளிதாயிருக்கும்; சொன்ன காரியத்தை யந்தப்படியே செய்து முடிக்கிறது, எல்லார்க்கு மருமையா மென்றவாறு. ௫

665. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும்

என்பது

எண்ணிக்கையாலே[1] கெட்டிக்காரனாய் மற்று முள்ள லட்சணங்களாலே குறையில்லாதவன், செய்யப்பட்ட குற்ற மில்லாத காரியம், அரசனாலே சந்தோஷப்பட்டு எந்நாளும் நினைக்கப்படு மென்றவாறு.

அரசன் நினைத்தால் செய்தவனுக்குப் பெரிய செல்வம் வந்தெய்து மென்பதாம்.

666. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

என்பது

தாங்கள் நினைத்தபடியே யெல்லாக் காரியத்தையுஞ் செய்து முடித்து அந்தப்பலத்தை யடைவார்கள். நினைத்தவர் கள் கெட்டிமனசை யடையரானா லென்றவாறு.

667. உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள் பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து

என்பது

ஓடுகிற பெரிய தேருக்குக் கடையாணி போலக் காரியத்திலே சமர்த்தனானவன் உருவு கொஞ்சமா யிருந்தாலும் அவ னுருவைக்கண் டிகழ வேண் டா மென்றவாறு.

அச்சினுடைய ஆணி சிறிதாயிருந்தும் பெரிதாயிருக்கிற தேரினுடைய வண்டியைச் சுழல வொட்டாமல் நிறுத்துகிறாப் போலே[2], உருவு கொஞ்சமாயிருந்தாலும் மனசு திடமுள்ளவன் பெரியதான காரியங்களைச் செய்து முடிப்பனென்பதாம். ள

1. எண்ணத்தால் 2. நிறுத்துகிறாற்போலே

668. கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கம் கடிந்து செயல்

என்பது

மனசு தெளிந்து செய்ய வேணுமென்று நினைத்த காரியத்தினாலே[1] ஆலசியம் பண்ணாமல்[2] செய்ய வேணு மென்றவாறு.

மனசு கலங்கினால், செய்வதும் தவிர்வதும் அறியப் போகாது; தெளிந்த காரியத்தை ஆலசியம் பண்ணால் பின்பு நிறைவேறாது என்பதாம். அ

669. துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை

என்பது

காரியஞ் செய்தகையிலே உடம்பு வருத்தத்தினாலே துக்கம் வெகுவாய் வந்தாலும், அதனைப் பொறுத்துச் செய்ய வேணும், பிறகு சுகத்தையும் நன்மையையும் கொடுக்கிற காரியமானாலென்றவாறு. கூ

670. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு

என்பது

காரிய ஆலோசனையிலே தெரிஞ்சு[3] பண்ணுகிற கெட்டி மனசை இது நமக்கு நல்லதென்று கொள்ளாதவர்களை மற்றைக் கெட்டி யெல்லா முண்டாயிருந்தாலும், பெரியோர்கள் எண்ணார்கள் என்றவாறு.

மனது உறுதியில்லாதவர்க்குப் படையரண் நட்பு முதலாகிய திடங்களெல்லா முண்டாயிருந்தாலும், நினைத்த கருமம் முடி

---

1. காரியத்தை - அச்சுநூல் 2. காலம் தாழ்த்தாமல்

3. தெரிந்து

யாதாம்; ஆகவே மனது திடமாகவே சகல காரியமும் முடியு மென்பதாயிற்று. ௰

ஆக அதிகாரம் ௬௭க்குக் குறள் ௬௱௭௰

இப்பால் 68. வினை செயல்வகை

என்பது, மனது திடமுடையவன் காரியங்களைச் செய்கிற வகை யென்பது.

671. சூழ்ச்சி[1] முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுட்[2] டங்குத றீது
என்பது

ஆலோசனைக்கு வேண்டிய வகையெல்லாம் விசாரித்து ஆலோசனை பண்ணி, இனி இதுக்கு[3]த்தப்பில்லை யென்று நிச்சயித்துத் துணிந்த பிறகு, அந்தக் காரியத்தைச் செய்யாமல் ஆலசியம் பண்ணுகிறது பொல்லாதென்றவாறு.

செய்த பிறகு பாத்துக்[4] கொள்ளுவோ மென்றெண்ணின்[5] வெகுகுற்றம் வந்து விளையுமென்பது. க

672. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை
என்பது

ஆலோசனையிலே பாத்து[6] மெத்தெனச் செய்யவேண்டிய காரியத்தை மெள்ளச் செய்யவேணும்; சீக்கிரமாய்ச் செய்ய வேண்டிய காரியத்தைக் கொப்பெனச் செய்ய வேணு மென்ற வாறு. உ

673. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்
என்பது

1. சூட்சி, 2. தாட்சியும் என்பன காகிதச் சுவடி 3. இதற்கு 4. பார்த்து
5. என்னுகிறது என்பன காகிதச் சுவடி

ஒரு காரியஞ் செய்யுங்காலத்துத் தனக்குச் செல்வாக் குண்டானால், பலவந்தத்திலே செய்து முடிக்கலாம்; செல்வாக்கில்லாமல் சமானமானபோதும், எளியனான போதும், சாமமான[1] நல்லவார்த்தையினாலேயும், தானமாகிய இரப்பு வார்த்தையினாலேயும் செய்து முடிக்க வேணுமென்றவாறு. ௩

674. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்

என்பது

செய்யத்தக்க காரியமும் செயிக்க வேண்டின பகையுமென்று சொல்லப்பட்ட யிரண்டும் நிறைவேறச் செய்து முடியாமற் குறைவைத்தால் நெருப்புப் பற்றின விடத்திலே அவித்துச் சேஷம் வைத்தாற்[2] போல் பின்பு அதிகமாய் வளர்ந்து கெடுக்கு மென்றவாறு.

ஆனபடியினாலே செய்ய வேண்டின காரியங்களை நிறை வேறச் செய்யவேணு மென்பதாம். ௪

675. பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருடீர வெண்ணிச் செயல்

என்பது

ஒரு காரியத்தைச் செய்யுமிடத்துப் பொருளையும் ஆயுதங் களையும் காலத்தையும் காரியத்தையும் இடத்தையும் நன்றாக வாராய்ந்து செய்யவேணு மென்றவாறு.

பொருளென்றது சிலவும்[3] ஆதாயமும்; கருவியென்றது தன் சேனையும் மாற்றான் சேனையும்; காலமென்றது தமக்காங் காலமும் பிறருக்காங் காலமும்; காரியமென்றது தாம் வல்ல வினையும்[4]; இடமென்றது தாம் வெல்லுமிடமும் பிறர் வெல்லு மிடமும்; இவ்வைந்தையும் தாம் வெல்லுகிறத்தைத்[5] தப்பாம லெண்ணிச் செய்யவேணு மென்பதாம். ரு

1. சமமான 2. வைற்றாற் என்பன காகிதச் சுவடி

3. செலவும் 4. பிறர்வவ்லவினையும் என்பதை இங்குச் சேர்க்க 5. வெல் லுகிறதைத்

676. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்
என்பது

ஒரு காரியஞ் செய்யுங்காலத்து அது முடிக்கத் தக்க முயற்சியும், அதற்கு வரப்பட்ட இடையூறும், அந்த இடையூறு நீங்கினாற்றானெய்தும் பயனும் சீர்தூக்கி ஆராய்ந்து செய்க என்றவாறு.

சீர

677. செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவா னுள்ளங் கொளல்
என்பது

ஒரு காரியத்தைச் செய்யத் துடங்கினான்[1] செய்யு முறைமையாவது, அந்தக் காரியத்தை முன்னே செய்து பலன் பெற்றவன் மனத்தை யறிந்து கொண்டு செய்ய வேணு மென்றவாறு.

முன் செய்தவன் மனசை யறிந்தால் அறிகிறதும்[2] ஆகிறதும் அறியலா மென்பதாம்.

மி

678. வினையான் வினையாக்கிக் கோட லனைகவுள்
யானையால் யானையாத் தற்று
என்பது

ஒரு காரியஞ் செய்கிறவன் அந்தக் காரியத்தினாலே தானே பின்னையும் ஒரு காரியத்தை முடித்துக் கொள்ள வேணும்; அது எப்படிப் போலே யென்றால், மததாரை[3] யால் நனையப்பட்ட கபோலத்தையுடைய யானை யாலே பின்னை யொரு யானையைப் பிடிக்கிறதினோ[4] டொக்கு மென்ற வாறு.

செய்யப் போற[5] காரியத்தினாலே பின்னையுமொரு காரிய முடிக்கத்தக்க வுபாயம் நினைந்து செய்ய வேண்டு மென்பதாம்.

அ

---

1. தொடங்கினான் 2. அறியிறது என்பது காகிதச் சுவடி 3. மதநீர்ப் பெருக்கு 4. பிடிக்கிறதினோ 5. போகிற

679. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை யொட்டிக் கொளல்

என்பது

காரியஞ் செய்கிறவன் தன் சினேகிதருக்கு நல்லது செய்கிறத்திலும்[1] தன் பகைவரைத் தனக்குறவாகச் செய்து கொண்டு காரியஞ் செய்கிறது நல்ல தென்றவாறு.

சினேகிதருக்கு நன்மை செய்து பகைவரை வெல்லுகிறத்திலும்[2] பகைவரைச் சாம பேதங்களினாலே யுறவாக்கிக் கொள்ளுகிறது மிகவும் நன்றென்றவாறு. ௬௯

680. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து

என்பது

கொஞ்சமான ராச்சியத்திலே யிருக்கிற மந்திரிகள், தங்களிலும் பலவந்தர் வந்து எதிர்த்தால்[3] தங்கள சேனை நடுங்கிறத்துக்குப்[4] பயப்பட்டு, எதிராளியை வணங்கிச் சமாதானம் பண்ணிக் கொள்வர் என்றவாறு.

எளியாரொடு சந்திக்கு[5] வலியாரியை தலரி தாகலின் 'பெறின்' என்றார். எளியராயினார் எதிராளியை வணங்கிச் சமாதானம் பண்ணிக் கொள்ள வேணு மென்பதாம். ௰

ஆக அதிகாரம் ௬௰௮ க்குக் குறள் ௬௱௮௰

இப்பால் 69 தூது

என்பது, எதிராளி யிடத்திலே போய்த் தான் தெரிந்து சொல்லி வருகிறதும், சொன்னது சொல்லி வருகிறதும் அதிலே தான் சொல்லி வருகிறவன் மந்திரியோடொப்பன்; சொன்னது சொல்லி வருகிறவன் மந்திரியினுங் கால்வாசி குணங் குறைந்தவனா மென்றவாறு.

---

1. செய்கிறதிலும் 2. வெல்லுகிறதிலும் 3. 'எதுற்றால்' என்பது காகிதச் சுவடி. 4. நடுங்குகிறதற்கு 5. சமாதானத்துக்கு

681. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு
என்பது

தயை யுடையவனுமாய் நல்ல குடியிலே பிறந்தவனுமாய் ராசாக்கள் சந்தோஷப் படத் தக்க குணமுடையவனுமாய் இருக்கிறவனே தூதனாவானென்ற வாறு. க

682. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று
என்பது

தன்னிட[1] ராசாவினிடத்திலே தயை யுடையவனுமாய்த் தன் ராசாவுக்கு ஆகிற காரியத்தை யறியப்பட்ட[2] அறிவை யுடையவனுமாய் அந்தக் காரியத்தை மறுமண்டலத்து ராசாக்களுடனே சொல்லுகிற போது ஆராய்ந்தறிந்து சொல்லுகிறவனுமாய் இருக்கிறவனே தூதனாவானென்ற வாறு.

இப்படிப்பட்ட தூதுவனுக்கு மந்திரி குணங்களும் வேணு மென்பதாம்.

683. நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி யுரைப்பான் பண்பு
என்பது

வேலாயுதங்களை யுடைய மறு மண்டலத்து ராசாக்களண்டையிலே போய்த் தன் அரசனுக்கு வென்றி தருங் காரியத்தைச் சொல்லுகிறவனுக்கு லட்சணமாவது, நீதி நூலை யறிந்த மந்திரிகளைப் பார்க்கிலும் தானந்த நீதி நூல்களைக் கற்றவனாக வேணு மென்றவாறு.
ங

684. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றின்
செறிவுடையான் செல்க வினைக்கு
என்பது

---

1. தன்னுடைய 2. அறியும்

சுபாவமான[1] அறிவும், கண்டபேர் சந்தோஷப் படதக்க நல்லவடிவும், ஆராய்ந்தறிந்த கல்வியும் இந்த மூன்று குண முடையவன் தூது போக வல்லவ னென்றவாறு.

இவற்றால் நனி மதிப்புடையனாகவே இனிது முடியு மென்பது கருத்து. ௪

685. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாந் தூது

என்பது

வேற்றரசர்க்குத் தன்னரசன் சொன்ன காரியங்களைச் சொல்லுகுற[2] வழி நன்றாய்த் தெரியச் சொல்லியும் பொல்லாத காரியங்களைச் சொல்லுகுற போது கடினவார்த்தைகளைச் சொல்லாமல் நல்ல வசனங்களினாலே அவன் மனது குளிரச் சொல்லியும், தன்ராசாவுக்கு நன்மைரை நடக்கிறவனே தூதனா மென்றவாறு.

பலவிதமான காரியங்களுக்கு உடன்படா விட்டால் அதற்குக் காரணமான தொரு காரியத்தைச் சுருக்கமாகச் சொன்னால், அதற்கு உடன்படுவர்; பொல்லாத காரியங்களுக்கு மனமகிழச் சொன்னால், பொல்லாங்கு தெரியாமலுடன்படுவார்கள்; ஆன படியினாலே தன்காரியம் தப்பாமல் முடியு மென்பதாம். ரு

686. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது

என்பது

நீதி நூல்களைக் கற்றுத் தான் போன கருமத்தைப் பகையாளி மனது சந்தோஷப்படச் சொல்லச்சிலே[4], அவர்கள் கோபித்துக் கொள்கிறத்துக்குப்[5] பயப்படாமற் காலத்துக்குத் தக்க வுபாய மறிகிறவனே தூதனா மென்றவாறு. சு

---

1. இயற்கையான 2. சொல்லுகிற 3. உடன்படாதார் என்பது அச்சு நூல் 4. சொல்லுங்கால் 5. கொள்கிறதற்குப்

687. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்து
எண்ணி யுரைப்பான் றலை

என்பது

வேற்றரசரிடத்துத் தான் செய்யுமுறைமையறிந்து அவர் சந்தோஷவேளை பார்த்துத்தான் சொல்லுகிறத்துக்கு[1] இடமறிந்து, சொல்லுகிற வரிசையை முன்னே விசாரித்துக்கொண்டு, சொல்லுகிறவனே தூதர்களுக்கெல்லாந் தலையானவ னென்ற வாறு. எ

688. தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு

என்பது

தன்னுடைய ராசா சொன்ன வார்த்தையை அவன் சொன்ன படியே வேற்றரசர்க்குச் சென்று சொல் வானிலக்கணமாவது: பொருள் காமங்களாலே சுத்தனாதலும், தனக்கு மாற்றரசனுடைய மந்திரிகள் துணையாதலும், துணிவுடைமையும் என்று சொல்லப்பட்ட இந்த மூன்று குணங்களுடனே கூட மெய்ம்மை யுண்டா யிருக்க வேணு மென்றவாறு.

பொருள் காமங்களிலே சுத்தனாகிறது, திரவிய வாசையினாலேயும் ஸ்ரீ மோகத்தினாலேயும் மனது பேதியாம லிருக்கிறதாம். அ

689. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்[2]

என்பது

தன்னரசன் சொன்ன வார்த்தையை வேற்றரசனுக்குச் சொல்லுகிறவன், தனக்கு வருகிற குற்றத்துக்குப் பயப்பட்டு அவனுக்குத் தாழ்வான வார்த்தையைச் சொல்லப் போகா[3] தென்றவாறு. கூ

1. சொல்லுகிறதற்கு 2. 'ணவர்' என்பது காகிதச் சுவடி 3. சொல்லாத திண்மையுடையவன் அச்சுநூல்; பரிமேலழகருரை

690. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது

என்பது

தன்னரசன் சொன்ன வார்த்தையை வேற்றரசர்க்குச் சொல்லுகிற போது தன் பிராணனுக் கழிவு வந்தாலும் அதற் கஞ்சாமல் தன்னரசன் சொன்ன படியே சொல்லுகிறவனே தூத னாவா னென்றவாறு.

தன்னுயிருக் கஞ்சாமல் அரசனுக்குறுதியாக்க வேணுமென்பது. ய

ஆக அதிகாரம் சுயசுக்குக்குறள் சுளசுய

இப்பால் 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

என்பது, ராசாக்களைச் சேர்ந்திருக்கின்றவர்களுடைய லட்சணங் களைச் சொல்லுகிறது.

691. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்

என்பது

ராசாக்க ளண்டையிலே சேர்ந்திருக்கிறவர்கள், தூர விட்டுப் போகாமலும், மெற்றச் சொச்சனுவாய்[1] இராமலும், நடுவா கத் தீக்காய்கிறவர்களைப் போலே யிருக்க வேணு மென்றவாறு.

மெத்த தூரவிருந்தாற் பலன் வராது மெற்றச்[2] சேர்ந்தி ருந்தால் எண்ணிக்கை யில்லாமற் போ மென்ற வாறு. சு

692. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்

என்பது

தான் சேர்ந்திருக்கப் பட்ட ராசாக்கள் ஆசைப்பட்ட வஸ்த் துக்களைத் தானாசைப் படாம லிருக்க வேணும், அப்படி யிருக்

1. மெத்தச் சேர்ந்து என்று படிக்க 2. மெத்தச்

கிறவர்களுக்கு அந்த ராசாவினாலே நல்ல செல்வம் வருமென்ற வாறு.

அரசன் வேண்டின வஸ்த்துவைப் பதனம் பண்ணி அவன் வேண்டின பொழுது கொடுத்தால் அந்த வஸ்த்துவை அநுபவிச்ச[1] சந்தோஷத்தினாலே அந்த வஸ்த்து கொடுத்தவனுக்கு வெகு சிறப்புச் செய்வ ரென்பதாம். உ

693. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது
என்பது

மந்திரிகள் தங்களைக் காக்க நினைத்தால்[2] பெரிதான குற்றங்களைத் தங்களிடத்திலே வராமல் காக்க வேணும்; அந்தக் குற்றம் வந்ததென்று[3] கேட்ட ராசாவைத்[4] தேற்றுகிறது எவர் களுக்கு மருமை என்றவாறு.

பெரிய குற்றமாவது, ராசா செய்த குற்றங்களைச் சொல்லு கிறது.

அரசனுக் குரித்தான பொருள்களை யெடுத்துக் கொள்ளு கிறது[5] முதலாயின. ஒருவித மாகத் தேற்றினாலும்[6] கடனாளி யைக் கண்டால் பொருள் தோன்றுமாறு போலக் குற்றஞ் செய் தவனைக் கண்டாள் அந்தக் குற்றமுந் தோன்று மென்பதாம். ௩

694. செவிச்சொல்லும் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து
என்பது

அரச னண்டையிலே யிருக்கிறவர்கள், ராசாமுன்னே யொருவன்காதிலே ரகசியஞ் சொல்லுகிறத்தையும்[7] ஒருவன் முகத்தைப் பார்த்து[8]ச் சிரிக்கிறத்தையும்[9] தவிர்ந்திருக்க வேணு மென்றவாறு.

---

1. அனுபவித்த 2. காற்க நினைத்தல் 3. வந்து தென்று என்பது காகிதச் சுவடி 4 கேட்ட ராசாவை - கேட்டு அரசன் ஐயுற்றால் அவனை - அச்சு நூல் 5. கொள்ளுறது என்பது காகிதச் சுவடி 6. தெளிவித்தாலும் 7. சொல்லு கிறதையும் 8. பாத்து என்பது காகிதச் சுவடி 9. சிரிக்கிறதையும்

செய்தொழுகின் தன்குற்றம் கண்டு செய்தனவாகக் கருதுவ ரென்பதாம். ச

695. எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்்பொருளை
விட்டக்கால் கேட்க மறை

என்பது

ராசா வொருவனுடனே ரகசியஞ் சொன்னால் அதைக் காது கொடுத்துக் கேளாமலும், அவனை யதட்டிக்கொள்ளாமலும்[1], இருக்க வேணும்; அவன் தானே சொன்னானாகிற் கேட்கலா மென்றவாறு. ரு

696. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்

என்பது

அரசனுக்குக் காரியஞ் சொல்லும் பொழுது, அவன்குறிப்பை யறிந்து சொல்லுகிறத்துக்கு[2] ஏற்ற காலம் பார்த்து, வெறுப்பில்லாததாய்[3] வேண்டுவது[4] மாயிருக்கிற காரியங்களை அரசன் விருப்பமாய்க் கேழ்க்கும்[5] வகையாற் சொல்லுக வென்ற வாறு

குறிப்பறிதலாவது, காமங் கோபம் இதுகள்[6] மேலே நினை வாயிருக்கையிலே சொன்னாற் பயனில்லை யென்பதாம் சா

697. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்

என்பது

பலன் பெரியதாய் அரசன் விரும்புவனவு மாய காரியங் களை யவன் கேளா விட்டாலும் சொல்லவேணும்; பலனில்லாத காரியங்களை யரசன் கேட்டாலும் சொல்லாமல் விட வேணு மென்றவாறு. எ

1. முடுகிக் கேளாமலும் அச்சு நூல் 2. சொல்லுகிற தற்கு 3. வெறுப் பில்லனவும்; 4 வேண்டுவனவு அச்சு நூல் 5. கேட்கும் 6. இவை

698. இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்

என்பது

இந்த ராசா நமக்கு இளையவனென்றும் இன்ன முறையுடையவ னென்றும் இகழாமல், அரசனுடைய சவுரியத்துக்குத்[1] தக்க படியே நடக்கவேணு மென்றவாறு.

* ஒளி, தாம் உறங்கா நிற்கவும் உலகம் காக்கின்ற அவர் கடவுள் தன்மை* அ

699. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்

என்பது

ராசா நம்முட[2] பேரிலே சந்தோஷமாயிருக்கிறானென்று ராசாவுக்கு வேண்டாத காரியங்களைச் செய்யார், குற்றமற்ற அறிவினையுடையவ ரென்றவாறு. கூ

700. பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்

என்பது

ராசா வண்டையிலே நாம் வெகு நாளா யிருக்கிறோ மென்று நினைச்சு[3] நன்மை யல்லாத காரியங்களைச் செய்தால், அது அவனுக்குக் கேடு தருமென்றவாறு.

அரசன் கோபித்தாற் பிராண காணிவருமென்பதாம். ம

ஆக அதிகாரம் எ0க்குக்குறள் எள

இப்பால் 71. குறிப்பறிதல்

என்பது, ராசா நினைத்த காரியத்தை அவன் சொல்லாமலே யறிகிறது.

1. ஒளிக்கு அச்சு நூல் *அச்சுநூல் பரிமேலழகருரையாம் 2. நம்முடைய 3. நினைத்து

701. கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக் கணி

என்பது

அரசன் நினைத்த கருத்தை[1] அவன் சொல்லாமலே முகத்தினாலேயும் கண்ணினாலேயும் அறிகிறவன், சமுத்திரம் சூழ்ந்த பூமிக்கு ஆபரணமாம் என்றவாறு. க

702. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்

என்பது

ஒருவன் மனதிலே நினைத்ததைச் சந்தேகப்படாமல் ஒருக்கால்[2] தானே நிச்சயமாக அறிய வல்லவன்[3] மனுஷனே யானாலுந் தெய்வத் தோடே சரியாக எண்ணப்படு[4] மென்ற வாறு. உ

703. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்

என்பது

தன்னுடைய குறிப்பினாலே பிறர் நினைத்த காரியங்களை அறியப்பட்டவனை,[5] உறுப்பாகிய பொருள் நாடு சேனை முதலானது[6]களிலே அவன் வேண்டினத்தைக்[7] கொடுத்தாகிலும் தனக்குத் துணையாகக் கொள்க வென்றவாறு. ங

704. குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு

என்பது

1. கருமத்தை - அச்சுநூல் (பரிமேலழகருரையும்) 2. ஒரு கால் (இது அச்சுநூலிலில்லை) 3. வல்லவனை அச்சுநூல். 4. எண்ணுக - அச்சுநூல் 5. அறியுந்தன்மையானா - அச்சுநூல் 6. முதலானவை 7. வேண்டினதைக்

ஒருவன் மனதிலே நினைத்ததை அவன் சொல்லாமல் அறிய *வல்லவர்களும் அறிய மாட்டாதவர்களும் சரியான மனுஷரே*யானாலும் அறிவினாலே‡யேற்றக் குறைச்சல் உண்டு‡ என்றவாறு.

705. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்

என்பது

எல்லா வஸ்துக்களையு மறியவல்ல தன் கண்களால் பிறர் குறிப்பினை யறிய மாட்டாவிட்டால் அவனுக்கு அங்கங்களிலே எல்லாம் சிறப்பான கண்கள் பின்னை யென்ன பலனைச் செய்யு மென்றவாறு.

குறிப்பறிய மாட்டாதவன் பிரயோசனமற்றவ னென்பதாம். ரு

706. *(அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்

என்பது

பளிங்கின் மறைவிலே இருக்கிற வஸ்துவினுடைய நிறத்தை யந்தப்)* பளிங்கு காட்டுமாறு போல, ஒருவன் நெஞ்சிலே நினைத்த நினைவை யவன் முகந்தானே காட்டுமென்றவாறு. சு

707. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்

என்பது

மனதிலே யொருவன் பேரிலே கோபித்தாலுஞ் சந்தோஷித்தாலும் அந்தக் குறிப்பை வாயினாலே சொல்லுகிறத்துக்கு[1] முன்னே முகமறிவிக்கு மென்றவாறு.

---

* —*வல்லவரோடு அறிய மாட்டாதவர் ஒருதன்மையரே - அச்சுநூல் உறுப்பால் ‡ - ‡அறிவினாலேவேறு அச்சுநூல்

1. சொல்லுகிறதற்கு யுள்ளவை சுவடியில் செம்மையில் பிறரால் எழுதப் பட்டுள்ளது; அச்சுநூல்

முகம் சந்தோஷத்துக்கு மலர்ந்தும் கோபத்துக்கு வாடி யிருக்கு[1] மென்பதாம். எ

708. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்

என்பது

மனதிலே நினைத்ததைக் குறிப்பா லறிந்து அந்தக் குறையைத் தீர்க்க வல்லவர்களைக் கண்டால், அவர்கள் முகத்தைப் பார்த்து[2] நிற்கிறதே போது மென்றவாறு.

அவர்கள் முகத்தைப் பார்த்து நின்றால் அவர்கள் இவன் முகத்தைப் பார்த்துக் குறை தீர்ப்ப ரென்பதாம். அ

709. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்

என்பது

அரசனுக்குத் தன்னுடைய பார்வை வேற்றுமையை அறிய வல்ல மந்திரிகளே வேணும்; அப்படிப்பட்ட மந்திரிகள் வேற்று வேந்தரிடைச் சென்றால், அவர்கள் மனத்திலேயிருக்கிற பகையையுஞ் சந்தோஷத்தையுஞ் சொல்லாவிட்டாலும், அவர்கள் கண் பார்வையினாலேயும் முகக்குறிப்பினாலேயும் அறிவார்களென்பதாம். சு

710. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற

என்பது

யாம் சூட்சமான[3] அறிவை யுடையோ மென்றிருக்கிற மந்திரிகள் ராசாக்கள் கருத்தினை யளவிடப்பட்ட[4] கோலாவது, கண்களல்லாமற் பின்னையொன்று மில்லையென்றவாறு.

---

1. வாடியுமிருக்கு - அச்சுநூல்

2. பாத்து என்பது காகிதச் சுவடி 3. சூட்சுமமான - நுட்பமான (அச்சுநூல் 4. அளக்கும்

இங்கிதம் வடிவு தொழில் சொல்லென்பது. முதலாகப்பிறர் மனதை யறியும் பிரமாணங்கள் பலவு முளவாயினும் இவைக ளெல்லாம்[1] மறைக்கப்படும்; கண்கள் மனதுடனே கூடினதான படியினாலே மறைக்கப் போகாதென்பதினாலே கண் பிரித்துக் கூறப்பட்டது. ய

ஆக அதிகாரம் எயக க்குக் குறள் எளய

இப்பால் 72. அவையறிதல்

என்பது, அரசனுடனே யிருந்த சபையினுடைய லட்ச ணத்தை யறிகிறது.

711. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்

என்பது

செஞ்சொல் இலக்கணைச்சொல்[2] குறிப்புச்சொல் என்னும் மூவகைச் சொல்லையும் அறிந்த நன்மையினை யுடையவர், தாமொன்றைச் சொல்ல வேண்டினால், அப்பொழுது சபையை யறிந்து ஆராய்ந்து விசாரித்துச் சொல்லுக வென்றவாறு.

ஆகிற வசனத்தையே சொல்ல வேணும்; ஆகாத வசனங் களைச் சொல்ல வேண்டா மென்பது. க

712. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர்

என்பது

சொற்களினுடைய நன்மையை யறிந்தவர்கள், சபையிலே யொன்றைச் சொல்ல வேண்டினால், ‡அந்தச் சொல்லினுடைய

1. அறிந்தவழி அவாரன் என்பன அச்சுநூல் மேலுமுள்ளன.

2. இலக்கணச் சொல் என்பது காகிதச் சுவடி; குறிப்புரை காண்க; ‡முதல் ‡வரை-அதன் செவ்வியை ஆராய்ந்தறிந்து - அச்சுநூல்

பயனைத் தெரிந்து† வழுவுதலில்லாமற் சொல்லுக வென்ற வாறு.

கேட்டோனுக்கு விருப்பமுண்டாகவும் தனக்கு நல்ல பொருள் பலனாகவும் சொல்ல வேணு மென்பதாம். உ

713. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில்

என்பது

[*சபையினுளடைய அளவை யறியாது ஒன்று சொல்ல நினைப்பவர் சொல்லின் வகையையும் அறியார்; அவர்க்குக் கற்று வல்ல கலையுமில்லை என்றவாறு*.]

வகையை யறியாதவர் வல்லமையுமில்லை யென்றவாறு[1] சபையையறியாமற் சொன்னால்[2] எல்லாராலும் இகழப்படுவ ரென்தாம். ௩

714. ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்

என்பது

அறிவினாலே பெரியவர்களுடைய சபையிலே தானும் அறிவுடையனாயிருக்கவேணும்; அறிவில்லாதாருடைய[3] சபை யிலே* ஒன்று மறியாத மரப்பாவையைப் போலே யிருக்க வேணு* மென்றவாறு.

அறிவில்லாதார் முன்னே தன்னிட[4]கல்வியறிவைச் சொன் னால் அவர்களிகழ்ந்து வாதிப்ப ரென்பதாம்.

வான்சுதை வண்ணம் கொளல்-அறியாமையை மேற்கொளல்[5]
ச

---

‡முதல் ‡வரை யுள்ளவை சுவடியில் பென்சிலால் பிறரால் எழுதப்பட்டுள்ளன அச்சு நூலிற்கண்டவை.

1. இவ்வாக்கியம் அச்சுநூலில் இல்லை 2. சொல்பவர் - அச்சுநூல்
3. அறிவில்லாத வெள்ளைகள் - அச்சு நூல் 4. தன்னுடைய 5. இவ் வாக்கியம் - அச்சுநூல்

* முதல் * வரை வெண்ணிறச் சுண்ணாம்பின் தன்மையைக் கொள்ள வேணும்.

715. நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு

என்பது

நல்ல தென்று சொல்லப்பட்ட குணங்கள் எல்லாத்திலும்[1] நல்லது, தன்னிலும் பெரியவர்கள் சபையிலே தானொன்றினை முந்திச் சொல்லாமலிருக்கின்ற தென்றவாறு. பெரியோர்கள் முன்னே யொன்றைச் சொன்னால், குற்றம் வந்து இகழப் படுவரான படியினாலே, முந்தி யொன்றைச் சொல்லாமல் அடங்கி யிருக்கிறதே நல்ல தென்பதாம். ரு

716. ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு

என்பது

மோட்ச மடைய வேண்டி நல்ல நிலைகளிலே நின்றா னொருவன் அந்த நிலை குலைந்து விழுந்த[2]தோ டொக்கும், பெரிதான நூல்களைக்கற்று அவற்றின் பொருளை யறிந்த பெரியோர்கள் முன்னே ஒருவன் சொன்ன வசனங் குற்றப் படுகிற[3] தென்றவாறு. சா

717. கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து

என்பது

குற்றமற்ற சொற்களையறிந்து சொல்லத்தக்க பெரியவர்கள் சபையிலே பல நூல்களையுங் கற்றறிந்தவர்களுடைய[4] கல்வி விளக்கமாய் எல்லார்க்கும் அறியப்படு மென்றவாறு. எ

1. எல்லாவற்றிலும் 2. 'விழாத' என்பது காகிதச் சுவடி 3. குறைபடுகிறது - அச்சுநூல் 4. கற்றறிந்தவர்களுடைய-சொல்லின் அவர்களுடைய- அச்சுநூல்

718. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள்[1] நீர்சொரிந் தற்று

என்பது

பிறர் சொல்லாமல் கல்வியின் பொருள்களைத்தானே யறிய வல்லவர்கள் சபையில், கற்றவனொருவசனத்தைச் சொன்னால்[2], தானே வளருகிற பயிரினுடைய பாத்தியிலே தண்ணீரை வார்த்தாற்[3] போலா மென்றவாறு.

கற்றார்முன் சொன்னால் மிகவும் அதிகமாமென்பது. அ

719. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்

என்பது

நல்லோர்களிருந்த சபையிலே நல்ல பொருள்களை அவர்கள் மனத்துக் கேற்கச் சொல்லுகிறவர்கள்[4], அறிவில்லாத புல்லரிருந்த சபையிலே நல்ல பொருள்களை மறந்தும் சொல்லாமலிருக்க வேணுமென்றவாறு.

சொன்னா லந்தப்புல்லர் மகிழவே தானும் மகிழ்தலால் நல்லவரையும் நல்ல பொருள்களையும் அறியாரென்பதாம்[5]. கூ

720. அங்கணத்து ளுக்க வமிழ்தற்றால் தங்கணத்தார்
அல்லார்முன் கோட்டி கொளல்

என்பது

நல்லவர்கள் தம்மோடொத்த நல்லவர்களல்லாத புல்லர் சபையிலே யொன்றைச் சொல்லாமலிருக்க வேணும்; சொன்னாற் சாக்கடையிலே விழுந்த அமுதத்தோடொக்கு மென்றவாறு.

சாக்கடையிலே விழுந்த அமுதம் பயன்படாததுபோல, நல்லவர் வசனமும் பிரயோசன மில்லாமற் போமென்றவாறு.

ஆக அதிகாரம் எ௰உக்குக்குறள் எளஉ௰

1. 'பாற்றியுள்' என்பது காகிதச்சுவடி. 2. சொல்லல் - அச்சுநூல் 3. வாத்தாப். என்பது காகிதச் சுவடி 4. சொல்கிறவர்கள் 5. குறிப்புரை காண்க

இப்பால் 73. அவையஞ்சாமை

என்பது சொல்லுதற்குரிய சபையினை யறிந்து சொல்லுகுற[1] போது பயப்படாமலிருக்க வேணு மென்றவாறு,

721. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்
என்பது

நல்ல நூல்களைக்கற்று வல்லவர் ஆனவர்கள், சபையிலே ஒன்றைச் சொல்லுகிறபோது, வழுவுதலில்லாமற் சொல்லுவர்க ளென்றவாறு. க

722. கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார் முற்
கற்ற செலச்சொல்லு வார்
என்பது

கற்றவர் எல்லாரினும் இவர் நன்றாய்க் கற்றவர் என்று உலகத்தாராற் சொல்லப்படுவார்; கற்றவர்க ளிருக்கிற சபையிலே தான் கற்ற நூற்பொருள்களை யவர்கள் மனதுக் கேற்கச் சொல்லப்பட்டவர்க[2]ளென்றவாறு. உ

723. பகையகத்துச் சாவா ரெளியர் அரியர்
அவையகத் தஞ்சா தவர்
என்பது

சண்டையிலே பயப்படாமற் போய் விழுந்து சாகவல்லவர் களுலகத்திலே மெத்த வுண்டு; சபையிலே போய்ப் பயப்படாமற் சொல்ல வல்லவர்கள் கொஞ்ச மென்றவாறு. ங

724. கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்
என்பது

1. சொல்கிற 2. சொல்லவல்லவர் - அச்சுநூல்

பல நூல்களையுங் கற்றவர்களுடைய சபையிலே, தான் கற்ற கல்வியை யவர்கள் மனங் கொள்ளச் சொல்லி, அதிலும் மிகுந்த கல்வியைப் பெரியவர்களிடத்திலே அறிந்து கொள்க வென்றவாறு.

எல்லா மொருவற்குக் கற்கக் கூடாமையால், வேறு வேறான கல்வியுடையார் பலரு மிருந்த சபையிலே, தான் கற்றவற்றைச் சொல்லி, அவர்கள் கற்றதெல்லாம் கற்கப் போகா விட்டால் கேட்டறியலாமென்பது. ச

725. ஆற்றி னளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு

என்பது

சொல்லிலக்கண நெறியான் அளவை நூல்களைக் கற்க; அப்படிக்கற்றவன் வேற்று வேந்தரிடைப் போனால், அவர்கள் சபையிலே அவர்கள் சொன்ன சொற்களுக்குத் தான் பிறிது[1] சொல்லுகிறத்தின்[2] பொருட்டென்றவாறு. மாறுத்தரமாவது ஞாய மார்க்க மென்பதாம்.[3] ரு

726. வாளொ டென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை யஞ்சு மவர்க்கு

என்பது

மனசு திடமில்லாதவர்களுக்கு வாளுடனே யென்ன காரிய முண்டு; அதுபோல நுண்ணிய ராயுஞ்[4] சபைக்குப்பயப்படுகிற வர்களுக்குச் சாத்திரங்களுடனே யென்ன பலனுண்டாகு மென்ற வாறு.

சபைக்குப் பயப்படுகிறவன் நூலுக்குரிய னல்லனென்பதாம். சு

727. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்

என்பது

1. உத்தரம் அச்சு நூல் 2. சொல்கிலதின் 3. இவ்வாக்கியம்அச்சு லில் இல்லை 4. நுண்ணிாரது - அச்சு நூல்

சண்டையிலே பயப்படுகிறவன் கையிலே யிருக்கிற வாள் போலே யாம்; சபையிலே சொல்லப்பயப்படுகிறவன்[1] கற்ற நூலென்ற வாறு.

சண்டை பண்ண மாட்டாதவன் கையிலே வாள் பிரயோசன மில்லாதது போலச் சபையிலே சொல்ல மாட்டாதவன் கற்ற நூலும் பிரயோசன மில்லாமற் போ மென்பதாம். எ

728. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச் சொல்லாதார்

என்பது

நல்லவர்களிருந்த சபையிலே நல்ல நூற் பொருள்களைப் பயத்தி னாலே அந்தச் சபைக் கேற்கச் சொல்ல மாட்டாதவர்கள், பல நூல்களையுங் கற்றாலும் உலகத்தாருக்குப் பிரயோசன மில்லை யென்ற வாறு,

பெரியோர்கள் முன்னே சொல்ல மாட்டாத படியினாலே கல்வியுண்டென்று அறிவாரில்லை யென்பதாம். அ

729. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்தும்
நல்லா ரவையஞ்சு வார்

என்பது

நல்ல நூல்களைக் கற்று அதினுடைய[2] பயனை யறிந்தும், நல் லோர்களிருந்த சபையிலே சொல்லப் பயப்பட்டவர்களை யுல கத்தார் கல்லாதவர்களிலுங் கடையானவர்களென்று சொல்லு வார்க ளென்றவாறு.

தான் கற்ற கல்வியைப் பெரியோர்கள் முன்னே சொல்லாவிட் டாற் றனக்கும் பயனெய்தாதென்றும், பிற ரறியச் சொல்ல மாட்டாத படியினாலே பிறருக்கும் பயன் படாதென்றும், உல கத்தார் கல்லாதவனினும் கெட்டவ னென்றுஞ் சொல்லுவ ரென்பதாம். கூ

1. இது அச்சு நூல் சொல்லப்படுகிறவன் என்பது காகிதச் சுவடி;
2. அவற்றின்

730. உளரெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச் சொல்லா தார்.
என்பது

தான் கற்ற கல்வியைச் சபையிலே சொல்ல மாட்டாதவர்கள், பிராணனுடனே யிருந்தாலும் செத்தாரோ[1] டொப்ப ரென்றவாறு

கற்ற கல்வி பிரகாச மில்லாத படியினாலே யிறந்தா ரென்பதாம். ய

அமைச்சியன் முற்றும்

ஆக அதிகாரம் எயகூக்குக் குறள் எளஈய

இப்பால் அங்கவியல் 74 நாடு

என்பது, ராசாக்க ளாலேயும், மந்திரிகளாலேயும் காக்கப்பட்ட நாட்டி னுடைய லட்சணத்தைச் சொல்லுகிறதென்றவாறு.

731. தள்ளா[1] விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு
என்பது

எந்நாளும் நல்ல பயிர்களை யிடுகிறவர்களும், பெரியோர்களும், கெடாத செய்வ முடையவர்களும் இருக்கிறதே நாடென்றவாறு.

நல்ல பயிர்களாவது, அறு சுவை யுண்டாக்குபவை; பெரியோர்கள் நீதி மார்க்கம் தப்பாமல் நடக்கிறவர்கள் கெடாத செல்வராவது, சத்தியத்துடனே தேடின திரவிய முடையவர்; இவர்களுண்டாகவே அரசனுக்கும் மற்று முண்டான பேர்க்குஞ் செல்வங் குறைபடாதென்பதாம். க

1. செத்தாரோ தானா என்பது காகிதச் சுவடி

732. பெருநம் பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு
என்பது

அளவிறந்த பொருள்களை யுடைய தாய்[1]பிறதேசத்தார் விரும்பத்தக்கதாய்க் கேடில்லாமல் விளையவப்பட்டதே[2] நாடாவ தென்றவாறு.

கேடில்லாமல் விளைகிறது, வெகுமழை பெய்கிறதும் கிளி குருவிகள்[3]பயிரை யுபத்திரவம் பண்ணாமலிருக்கிறதுமாம். வெகு மழைபெய்கிறது, ராச நீதியினாலே; கிளிமுதலானதுகள்[4] வாதை பண்ணுகிறது, ராசாவுடைய அநியாயத்தினாலென்பது. உ

733. பொறையொருங்கு மேல்வருங்காற்றாங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு
என்பது

பிற நாடுகளிலே யிருக்கிற மாடுகள் மனுஷர்கள் எல்லாங் கூடிக் கலகத்தினாலே வந்தால், அதெல்லாம் பொறுத்துக் கொண்டு, தன்ராசாவுக்கு இறையுண்டானதெல்லாங் கொடுக் கப்பட்டதே[5] நாடாவதென்றவாறு.

பிறதேசத்தினின்றும் வந்தவர்களுக்குத் தன்னாடுபோலப் பயன் படுதலென்பதாம். ௩

734. உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு
என்பது

வெகுபசியும் விடாவியாதியும் புறத்தியிலே யிருந்துவந்து உபத்திரவம் பண்ணும்பகையுமில்லாம லிருக்கிறதே நாடென்ற வாறு.

---

1. யுடைமையால் அச்சுநூல் 2. மிகவிளைவதே அச்சு நூல் 3. குருவிபூச்சி இவைகள் - அச்சுநூல் 4. முதலியவை 5. கொடுப்பதே
3

வெகுபசியில்லாயலிருக்கிறது, பயிரிடுகுற[1] குடிகளிருக்கிற படியினாலேயும். வெகுவாய் விளைகுறத்தி[2]னாலேயுமாம். விடாத வியாதியில்லாதது, வெகுகாற்றும் வெகுகுளிரும். வெகு அனலும் பொசிக்கிற[3] வஸ்த்துக்களின் தீமையும் இல்லாமையினாலே ஆம். புறப்பகையில்லாதது, ராசாபொறுமையுடையவனும்[4] நல்ல சேனையுங் காடுங்கோட்டை கொத்தள முதலானது[5] களுடைமையாலு மென்பது.

735. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பும் இல்லது நாடு

என்பது

கபட மனதாயிருக்கிற திரளும், கூட இருந்தே பாழாக்கப் பட்டவர்களும்[6], பக்குவம் வந்தால் ராசாவை வாதை பண்ணப் பட்ட[7] துஷ்டர்களும் இல்லாததே நாடாவதென்றவாறு. ரு

736. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை

என்பது

பகைவராலே கெடுக்கப்படாததாய் ஒருக்காலங்களிலே[8] கேடுவந்தாலும் அப்பொழுதுந் தன் வளப்பங்குன்றாத நாட்டினை யெல்லா நாட்டினுந் தலையென்று பெரியோர்கள் சொல்லுவரென்றவாறு.

கேடறியாதது.[9] ராசா நல்லவனாதலானும்[10] தேவர்கள் பூசை குறைபடாமல் நடக்கிறத்தினாலும் கேடறியார்[11] என்பதாம். கா

---

1. பயிரிடுகிற 2. விளைகிறதி 3. புசிக்கிற 4. [illegible]ல் ஆற்றலும் அச்சு நூல் 5. முதலானவை 6. பாழாக்குபவர்களும் 7. பண்ணும் 8. ஒருகாலத்திலே 9. கேட்டறியாதது என்பது காகிதச் சுவடி 10. ஆற்றலானும் அச்சுநூல் 11. நடக்கிறதினாலும் வரும் - அச்சு நூல்.

737. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு

என்பது

கீழ்நீர் மேனீ ரென்னப்பட்ட தண்ணீர்களும், வாய்ப்பான மலையும், மலையினின்று வரப்பட்ட அருவியானும நல்ல அரணாகிய காவலு முடையது நாட்டிற்கு அவயவமாமென்ற வாறு.

கீழ்நீராவது, துரவு கிணறு மேனீரானது. ஏரிகுளம் வரு புனலாவது ஆறுகயம்[1] இதுகள்[2] உண்டானால் மழையில்லாத காலத்திலேயும் வளமை குன்றாமல் விளையு மென்பதாம்.

738. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து

என்பது

வியாதி யில்லாமையும் செல்வமுடைமையும் விளைவும் நல்ல ருசிகளையுடைய வஸ்த்துக்களும் நல்ல காவலு மென்னப் பட்ட இவ்வைந்தும் நாட்டிற்கு ஆபரணமா மென்றவாறு அ

739. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு

என்பது

நாட்டிலே யிருக்கிறவர்கள் தேடிவருந்தாமல் செல்வம் அடைவிக்கிறத்தையே[3] பெரியோர்கள் நாடென்று சொல்லு வார்கள்; தேடிவருந்தச் செல்வ மடைவிக்கிறது[4] நாடல்ல வென்றவாறு.

740. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு

என்பது

---

1. கயம் அச்சுநூலில்லை 2. இவைகள் 3. அடைவிக்கிறதையே 4. அடைவிக்கிற நாடுகள்-அச்சுநூல்கள்

வேந்தனோடே கூட்டமில்லாத நாடு, முன் சொல்லப்பட்ட செல்வங்களெல்லா முடைத்தாயிருந்தாலும், பலனில்லை என்ற வாறு.

வேந்தனோடே கூட்டமில்லாதது; ராசா குடிகள்பேரிலே தயை யில்லாம லிருக்கிறதும், குடிகள் ராசாபேரிலே விசுவாச மில்லாம லிருக்கிறதுமாம். ராசா தயையில்லா விட்டால் எத்தனை[1] செல்வமிருந்தாலும் வெல்லப் போகாதென்பதாம் ரு

ஆக அதிகாரம் எ௰சக்குக் குறள் எளசய

இப்பால் 75. அரண்

என்பது, அந்த நாட்டுக்குப் பகைவராலே உபத்திரவம் பண்ணப் போகாத காவலையுடைய தென்பது.

741. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்

என்பது

இடம், பொருளேவலென்று சொல்லப்பட்ட மூன்று வகையும்[2] உடையராய்ப் பகைவர்மேலே தண்டு போற[3]வர்களுக்கும் அரண் வேண்டியிருக்கும்; அதுவல்லாமல் தன்பேரில் வருகிற வனுக்கு அஞ்சித் தன்னை வந்தடைகிறவனுக்கும் அரணாகிய காவல் வேணு மென்றவாறு.

அரணில்லாத வழியழிவர்களென்பதாம்.

742. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்

என்பது

மாணிக்கத்தைப் போலே தெளிவாயிருக்கிற நீரும், வெளியாயிருக்கிற நிலமும், மலையும், குளிர்ந்த நிழலையுடைய காடு முடையதே அரணாவ தென்ற வாறு.

1 யெற்றனை என்பது காகிதச்சுவடி 2. அறிவு ஆண்மைபெருமை-466 ஆம்குறள் பரிமேலழகருரை 3. போகிற

நாட்டிலே நல்ல தண்ணியாய்[1] வற்றாமலிருக்கிற நீரும். நெருங்கின காடும், அதற்கப்புறம் நீரும் நிழலுமில்லாத வெளியுமாயிருக்கிறதே அரணாவது நீரும் நிழலுமில்லா விட்டால் பகைவருக் காதர வில்லாமற் போம்; ஆதரவில்லாவிட்டால் வெல்லப் போகா தென்பதாம். உ

743. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கின்
அமைவர ணொன்றுரைக்கு நூல்
என்பது

உயர்வும்[2] அகலமுங் கெட்டியும் அருமையு முடைய மதிலை அரணென்று சொல்லுவர் நூலோர் என்றவாறு.

உயரம் ஏணிக் கெட்டாதது. அகலம், பகைவராலே சுரங்கம் வெட்டப் போகாத அடியகலம், உயர்வகலம் மனுஷர்[3] நின்று சண்டை பண்ணத் தக்கது. கெட்டியாவது கட்டப்பாறை உலக்கை முதலானது[4]களாலே இடிக்கப் போகாதது. * அருமையாவது, கல்லுக்கவன் முதலானதுகளெறியப் போகாதது இப் படிப்பட்ட மதிலை யரணென்று சொல்லப்படு* என்றவாறு. ங

744. சிறு காப்பிற் பேரிடத்த தாகி யுறு பகை
யூக்க மழிப்ப தரண்
என்பது

காக்க[5] வேண்டின வழிகள் கொஞ்சமாய் அகலமான இடத்தை யடைவதாய்த் தன்மேல் வந்த பகைவர் மனது சந்தோஷத்தைக் கெடுக்க வல்லதே யரணாவ தென்றவாறு.

சிறு காப்பாவது, வாசல் வழியல்லாமல் மற்ற விடங்களெல், லாம் காடு மலையுந் தண்ணியுமாய்[6] இருக்கிறது. பேரிடமாவது

---

1. தண்ணீராய் 2. உயரம் 3. அசத்தோர் அச்சு நூல் 4. முதலியவை
5. கவண்டு - காகிதசுவடி * முதல் * வரை யந்திரங்களை யுடைமையால் பகைவர் அணு குதற்கரியது - அச்சுநூல் 6. காண்க - காகிதசுவடி
7. தண்ணீருமாய்

அதிலே யிருக்கப்பட்ட மனுஷர் மாடுகள் சஞ்சரிக்கச் சவுக்கிய மாயிருக்கிறது. பகைவர் மனது கெடுக்கிறது,

மாற்றார் செயிக்குறோம்[1] என்று வந்தவர்கள் பார்த்தவுடனே யித்தைச்[2] செயிக்கிறது அருமையென்று விசாரப்படுகிறது. சு

745. கொளற்கரிதாய்க் கொண்ட கூழ்த் தாகி யகத்தார்
நிலைக் கெளிதா நீர தரண்

என்பது

பகைவால் செயிக்கிறத்துக்கு[3] *அரிதாய்ப் பலவகை ருசிகளையுங் கொடுக்கத் தக்க வஸ்த்துக்களுள்ளதாய் அதற்குள்ளே யிருக்கப்பட்ட பேருக்குச் சவுகுரிய[4]மாயிருந்து சண்டை பண்ணத் தக்கதாய் வளப்பமுடையதா யிருக்கிறதே யரணாவ தென்ற வாறு ரு

746. எல்லாப் பொருளு முடைத்தாய் இடத்துதவு
நல்லா ளுடைய தரண்

என்பது

உள்ளே யிருக்கிற பேர்களுக்கு வேண்டிய வஸ்த்துக்களை யெல்லா முடையதாய்ப் பகைவரா லுபத்திரவம் வந்த பொழுது[5] அதனைப் பரிகரிக்கப்பட்ட[6] நல்ல வீரர்களையுடையதே யரணாவ தென்றவாறு.

நல்ல வீரர்களாவார், ராசாவினிடத்திலே யன்பும் தனம்[7] நீதியும் சண்டைத்தொழில் வல்லவர்களுமாம்.[8] சா

747. முற்றியு முற்றா தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்

என்பது

---

1. செயிக்கிறோம் 2, இதனைச் 3. செயிக்கிறதற்கு * முதல் * வரை பல வன்க உணவுப் பொருள்களுடைடதாய் 4, சௌக்கியம் - அச்சுநூல் 5 வறின் அச்சுநூல் - அச்சுநூல் 6. வரின் அச்சுநூல் 7. பரிகரிக்கும் 8. தரும 9. வீரமுடையவர்-அச்சுநூல்

'போற[1]வறியும் வருகிற வழியும் கொஞ்சமாய்* நெருங்கிச் சூழ்ந்தும், அப்படியிராமல்[2] நெகிழ்ந்த இடம் பார்த்து ஒரு முகமாய்க் கூடிப் பொருதும், உள்ளே யிருக்கிறவர்களுக்கு லஞ்சப் பரிதானங்கள் கொடுத்து உபாய சற்பினை (3) பண்ணியும் செயிக்கிறத்துக்கு[3] அரியதே யரணாவ தென்றவாறு. எ

748. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண
என்பது

சேனைப் பெருமையாலே வந்து சுற்றிக் கொண்ட புறத்தோரையுள்ளே யிருக்கிற பேர் தாங்களிருக்கிற இடம் விடாமல் நின்று பொருது வெல்வதே யரணென்றவாறு, நின்ற விடம் விட்டுப் பேர்ந்தால் அவ்விடத்திலே பொருது செயிப்பரென்பதாம். அ

749. முனைமுகத்து மாற்றவர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்
என்பது

[போர் தொடங்கின மாத்திரத்திலே பகைவர் கெடத்தக்கதாய் உள்ளே இருக்கிற பேர் பண்ணின சண்டை செயம் வரத்தக்கதே அரணாவ தென்றவாறு.] கூ

[குறிப்பு இவ்வுரை சுவடியில் இல்லை; இது அச்சுநூலைப் பார்த்து எழுதியது-என்றும் காகிதச் சுவடியிலெழுதப்பட்டு உள்ளது].

750, எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்
என்பது

---

1. போகிற *முதல் *வரைஉட் புகுவதும் வெளிவருவதும் ஒழியும் வகை; 2. சூழாமல்; 3. கொள்ளுதற்கு - அச்சுநூல்

அரசனுக்கு வேண்டிய காவல் காடு மலை நீர்நிழல் முதலானவைகளெல்லாம் உண்டாயிருந்தாலும், சண்டை பண்ணுகிறதிலே கெட்டி இல்லாதவர்களிடத்திலே அரணில்லை என்றவாறு.

சண்டையிலே கெட்டியாவது, சலியாமலிருக்கிறதும் அளவறிந்து செய்கிறதும் உலகத்திற்கேற்க நடக்கிறதுமாம், ௰

ஆக அதிகாரம் ௭௰ருக்குக் குறள் ௭௱௫௰

இப்பால் 76. பொருள் செயல்வகை

என்பது, மெத்தவும் நாட்டினாலேயும் அரணாலேயும் ஆக்கவும் காக்கவும்[1] படுவதாய்ப் பொருளைத் தேடுகிறது.

751, பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல நில்லை பொருள்
என்பது

ஒரு பிரயோசனமாக எண்ணப்படாதவர்களைப் பிரயோசனமானவர்களாகச் செய்ய வல்ல பொருளே ஒருவனுக்குப் பொருளாகிறது; பின்னை வேறு பொருளில்லை யென்றவாறு.

பிரயோசனமாக எண்ணப்படாதவர்கள், அறிவில்லாதாரும் இழிகுலத்தாருமாம். இவர்களை யறிவுடையாரும் உயர்ந்த குலத்தாரு மாக ஆக்குதலே பொருளாவ தென்பதாம். ௧

752. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு
என்பது

எல்லாக் குணங்களுடைய ராயினும் பொருளில்லாரை எல்லாரு மிகழ்வர்; எல்லாப் பொல்லாங்கு முடையராயினும் பொருளுடையாரை எல்லாரும் புகழ்வ ரென்றவாறு. ௨

1. வற்கவும் காக்கவும் என்பது காசித சுவடியிலுள்ளது

753. பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று

என்பது

பொருளென்று எல்லாராலுஞ் சிறப்பாய்ச் சொல்லப்பட்ட அவியாத விளக்குத் தன்னைச் சத்தியத்துடனே தேடினவர்களுக்கு அவர்கள் நினைத்த தேசத்திலே போய்ப்பகை யென்னு மிருளைக் கெடுக்கு மென்றவாறு. ௩

754. அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

என்பது

செய்கிற காரியத்தைப் பொல்லாங்கில்லாமல் நல்ல வழியிலே செய்து தேடின பொருள், அவனுக்குத் தர்மத்தினையுஞ் சுகமாகிய[1] இன்பத்தினையுங் கொடுக்கு மென்றவாறு.

ஞாய[2]மார்க்கமாக வந்த பொருளினாலே தானமும் பூசையும் பண்ணினால், நெடுங் காலம் செல்வங் குறை படாமல் நின்று இன்பம் பயக்கு மென்பது. ௪

755. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்

என்பது

தான் கொடுக்கிறவனிடத்திலே தயையும், கொடுக்கிறவன் தன்னிடத்திலே யன்புடனே கொடாத பொருளைக்கைக் கொள்ளாமல் விட்டுவிடவேணுமென்றவாறு.[3]

அருளொடு மன்போடு மாவது[4], ஞாய மார்க்கமாக வருகிற பொருள்; அநியாயமாகப் வருகிற பொருள் பச்சைப்பானை[5]

---

1. இது அச்சு நூலிவில்லை 2. நியாய 3. குறிப்புரை ஃகாக
4. ஆவது - வரும் பொருளாவது - அச்சுநூல் 5. பச்சைப்பானை-பசுமட்கலம்

யிலே வார்த்த பால்[1] போலத் *தேடினவனும் பொருளுங்கூடக் கெடுவ ரென்பதாம்.* (தி)

756. உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்

என்பது

ஒருவர் கொடாமற் றானே வந்து சேருகிற பொருளும், *வழியடித்துப் பறித்துக் கொள்ளுகிற பொருளும்*, தன் சத்துருவைக் கெடுத்து யெடுத்துக் கொண்ட பொருளும் ராசா வுடைய பொருளா மென்றவாறு.

ஒருவர் கொடாமல் வருகிற பொருளாவது, நிலத்திலே கண்டெடுத்த பழம் பொருளென்பது. சு

757. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

என்பது

அன்பினாலே பிறக்கப்பட்ட[2] அருளென்கிற பிள்ளை பொருளென்கிற செவிலித்தாயால் வளரு மென்றவாறு.

பொருளால் வளர்வதாவது, வறுமையுற்று வந்தவர்களுக்குத் தன் பொருளைக் கொடுத்து அவர்கள் வறுமையை நீக்கவே அருளுண்டா மென்பது. எ

758. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை

என்பது

தன்கையிலே பொருளுண்டாயிருக்கிறவன் ஒருகாரியத்தைச் செய்ய நினைக்கின்றது, மலைமேலே நின்று யானைகளுடைய சண்டையைப் பார்க்கிறத்துக்கு[1]ச் சமமென்றவாறு.

---

1. நீர் என்பர் பரிமேலழகர் *முதல் *வரை தேடினவனோடு தானும் கொடும்—அச்சுநூல். * முதல் வரை சுங்கமாகிய பொருளும்—அச்சு நூல்
2. பெறப்பட்ட - அச்சுநூல்

மலையின் பேரிலே[1] யிருக்கிறவன் பலமும் வருத்தமுமில்லாமல் யானைப்போர் பார்க்கிறாப் போலே, கைப்பொருளுண்டானவனும் பயப்படாமல் வல்லவர்களை மேவி[2] நினைத்த காரியமும் செய்து முடிப்பனென்பதாம். அ

759. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில்

என்பது

தமக்கொரு காரியம் வேணுமென்று நினைக்கிறவன் பொருளுண்டாகிற வழியைச் செய்யவேணும்; அந்தப் பொருள் சத்துருக்களை யெல்லாம் கொஞ்சமாக்கிப் போடும் ஆயுதம், அதிலுங் கூர்மையான வாயுதம் வேறேயில்லை யென்றவாறு.

பொருளுண்டாகவே பெருமையும்[3] நட்பு முடையராவர்; பெரும்படையுண்டாகவே அதுகண்டு பகைவர் தாமேயடங்குவரென்பது. சு

760. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொருள்
ஏனை-யிரண்டு மொருங்கு

என்பது

ஞாயவழியிலே வருத்தமாய்ப்[4] பொருளைத் தேடினவர்களுக்கு, அறமும் இன்பமும் எளிய பொருள்களா மென்றவாறு.

பொருளினாலே தர்மமுஞ் சுகமு மெளிதாய் முடியு மென்பதாம். ௰

ஆக அதிகாரம் எகூ௰க்குக்குறள் எளகூ௰

இப்பால் 77, படைமாட்சி

1. பார்க்கிறதற்குச் 2. யேவி 3. பெரும்படையும் — அச்சுநூல்
4. மிகஅதிகமாக — அச்சுநூல்

என்பது பொருளாலே வெல்லப்பட்ட[1] சேனையினுடைய நன்மை யென்பது,

761. உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை
என்பது

ஆனை குதிரை தேர் காலாளென்று சொல்லப்பட்ட நாலு வகை யுறுப்புக்களாலும் நிறைந்து, சண்டையிலே காயம் படுகிறத்துக்[2] கஞ்சாமல் நின்று வெல்லப்பட்ட[3] சேனைகள் ராசாவினுடைய செல்வங்கள் எல்லாத்திலும்[4] பெரிதான செல்வ மென்றவாறு.

நல்ல சேனை யுண்டாகவே எல்லாச் செல்வங்களும் வந்தெய்து மென்பதாம்.

762. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது
என்பது

தான் சிறியவனானாலும்[5] ராசாவுக்குச் சண்டையிலே தோர்வை[6] வந்தால், தன்மேலாயுதங்கள் படுகிறத்துக்குப் பயப்படாமல் நின்று காக்க வல்லதிடம், அவன்‡ வங்கிசத்திலே முன்னிருந்த பேருக்குண்டானாலல்லாமலுண்டாகாது‡

என்றவாறு.

[8]மூலப்படையே நல்லதென்பது; மூலப்படைக்கு நாடும் பொருளும் யானையும் குதிரையுங் கொடுத்து ரட்சிக்க வேணு மென்பது. உ

---

1. ஆவதாய் வெல்வதாய் 2. படுகிறதற் 3. [illegible] 8 எல்லா வற்றிலும் 4. சிறிதாய பொழுதும் - அச்சுநூல் 5. தோல்வி 6. படுகிற தற்கும் 7. காக்க 8. குறிப்புரை காண்க ‡முதல் ‡வரை: முன்னோரைத் தொடங்கி வரும் மூலப்படைக்கல்லது உண் டாகாது·அச்சுநூல்

763. ஒலித்தக்கா லென்னா முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்

என்பது

எலிகள் திரளாகக்கூடிக் கடலோசை போலே ஆர்ப்பரித்தாலும் நாகப்பாம்புக் கென்ன பயம்வரும்; அந்த நாகம் ஆக்கிரகிச்சால்[1] எலிகள் தாமே கெட்டுப்போ மென்றவாறு.

இந்த வுவமையாலே வீரரல்லாதார் பலர்கூடி ஆரவாரம் பண்ணினால் வீரனானவன் ஒருவன் அஞ்சான்; அவன் ஆக்கிரகிச்சவுடனே[2] அவர்கள் தாமே கெடுவர் என்பது. வீரரல்லாதார் பலரினும் வீரனாவான் ஒருவனை யாளுகிறதே நல்லதென்பது.

ங

764. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை

என்பது

சண்டையிலே கெட்டோடிப் போகாமல், பகைவர்களாலே வெல்லப் போகாதாகிய பாரம்பரியமாய் வந்த சேவுகத்தை[3] யுடையவர்களாய்க் கெட்டியா யிருக்கிறதே சேனை யென்றவாறு.

வழிவந்த வன்கண்மையா: வெண்பா:

''கன்னின்றா னெந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தா ரென்னையர்-பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
யெய் போற் கிடந்தா னென்னேறு''[4]

என்பதினாலறிக.

சு

765. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை

என்பது

1. ஆக்கிரகித்தல்—மூச்சுவிட்ட அவ்வளவிலே-அச்சுநூல் 2. போர்க்கு எழுந்தவுடனே—அச்சுநூல் 3. சேவகத்தை 4. குறிப்புரை காண்க

யமன்றானே கோபிச்சுக்[1] கொண்டு மேலே வந்தாலும் மன மொத்து நின்று எதிர்க்கத் தக்க வலுமையுடையதே படை யென்றவாறு.

வெதுபடை[2] மன மொத்து நிற்குறதாவது[3] அரசன் மேலன் புடைமை யென்பதாம். ௫

766. மறமான மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே யேமம் படைக்கு

என்பது

கெட்டியும், அபிமானமும், வீரராயினார் நடந்த வழியே நடக்கிறதும், அரசனாலே இவர்கள் நல்லவர்களென்று தெளியப் படுகுறதும்[4] இந்த நாலுமே[5] படைக்கு அரணாவ தென்றவாறு.

இதனாலே பகைவரைக் கடிதிற்கொன்று நிற்றலும், ராசாவுக்குத் தாழ்வு வராமற் காத்தலும், தோற்றோடிப் போனவர்கள் *முதுகில் கூரிய ஆயுதத்தை எடுத்து விசாமையும், பகைவர்க்கு வசப்பட்டுத் தன் அரசனை வஞ்சியாமையும் ஆகிய செய்கைகள் பெறப்பட்டன.* ௬

767. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து

என்பது

மாற்றானால் வகுக்கப்பட்டுத் தன் மேல் வந்த போரை விலக்கும் வகையறிந்து பிரிந்து நின்று அவர்கள் விட்ட ஆயுதங் களைத்[6] தன்மேல் தடுத்துத் தான் அவர்கள்[7] மேலே போறதே[8] படையாவ தென்றவாறு. ௭

---

1. கோபித்து 2. மிகப்பலர்; 3 நிற்கிறதர்க்குக்காரணம்—அச்சுநூல் 4. நம்பப்படுகிறதும்; நாலுகுணமே - அச்சுநூல் *முதல் *வரை: "இருமபி வாளெடாமலுஞ் செய்யும்'' என்ற காகிதச் சுவடிப் பகுதிக்குப் பதில் அச்சு நூலில் உள்ளவை. 5. படைவகுப்பின்; 6. அதன்-அச்சுநூல் 7. போகிறதே; செலவதே அச்சுநூல்

768. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்

என்பது

சேனை பகைவர் மேலே சென்று செயிக்கப்பட்ட[1] திண்மையும் அவர்கள் தன் மேலே வந்தால் பொறுக்கத் தக்க வலுமையும்[2] இல்லாவிட்டாலும் அலங்காரத்தினாலே பெருமை பெறுமென்றவாறு.

அலங்காரமாவது, தேர் யானை குதிரைகளும் கொடிச்சீலை குடை மேளவாத்தியங்களும் *காண்பிக்கப் புறப்பட்டால்[3] பகைவரஞ் சுவர்களென்பதாம்.* அ

769. சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை

என்பது

தன்னைக் கொஞ்சம் பண்ணிக் கொள்ளுகிறதும், மனதிலே விடாத வெறுப்பும், தரித்திரமு மில்லா விட்டால் பகையை வெல்லலா மென்றவாறு.

தரித்திரமாவது, சம்பளங்கொடாதது. செல்லாத் துனியாவது, தன் பெண்சாதி பிள்ளைகளை நினைக்கிறதும், குற்றமான காரியங்களைச் செய்கிறதுமாம். இப்படிச் செய்தால் படை வெல்லாதென்பது. சா

770. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில்

என்பது

சண்டை பண்ணச்சலே[4] வீரரானவர்கள் மெவகுவாயிருந்தாலும், அதற்குத தலைவனான துரை யில்லாவிட்டால் சேனை நில்லா தென்றவாறு.

---

1. கொல்லும்-அச்சுநூல் 2. வல்மையும். 3. பிறப்பட்டால்-என்பது காகிதச்சுவடி. *முதல்* வரை ''பாடு-கண்ட அளவில் பகைவர் அஞ்சும் பெருமை'' என்று அச்சு நூல் 4. பண்ணச்சே-பண்ணுங்கால்

ராசாவில்லாத போது சண்டை பண்ணினாறே[1] பார்க்கிவர்களில்லை யென்று விட்டுப் போவ ரென்பதாம். ம

ஆக அதிகாரம் எய்எ க்குக் குறள் எளஎய

இப்பால் 78. படைச்செருக்கு
என்பது, அந்தச் சேனையினுடைய கெட்டியைச்[2] சொல்லுகிது.

771. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின்றவர்

என்பது

[3]பகைவர்கள் எதிரே நின்ற என்னுடைய வேலின் வாயிலே விழுந்து பிறகு கல்லின் மேலே விழுந்தவர்கள் அநேகம் பேர் உண்டு; நீங்களுங்களுடலிலே பிராணனிருக்க வேண்டினீராகில் என்னுடைய ராசாவினுடனே சண்டை பண்ணுகிறத்தை[4] விடுங்கோளென்றவாறு.

கல்லின் மேலே விழுகிறது ஆயுதங்களுடனே கூட விழுகிறதாம்[5] க

772. கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது

என்பது

காட்டிலே திரிகிற முயலை யெய்து கொன்ற வேலையுடையவனைப் பார்க்கிலும்[5] யானையை யெய்து தப்பிப் போன வேலை யுடையவனே நல்லவ னென்று சொல்லப்படு மென்றவாறு[6]

முயலை யெய்கிறத்திலும்[7] யானை முன்னே நிற்கிறதரிதென்பதாம். உ

1. பண்ணுவதைப்-அச்சுநூல் 2. மிக்க வீரத்தனத்தை அச்சுநூல் 3. குறிப்புரை காண்க 4. பண்ணுகிறதை 5. வேலையுடையவனைப் பார்க்கிலும்-அம்பைஏந்தலினும்-அச்சுநூல் 6. வேலையுடையவனே... என்றவாறு - வேலையேந்துலே நன்று-அச்சுநூல் 7. யெய்கிறதினும்

773\. பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
லூராண்மை மற்றதனெஃகு

என்பது

பகைவர் எதிர்த்த போது[1] அவர்கள் பேரிலே தயையில்லாமல் செயிக்கிறத்தையே[2] பெரிய வாண்மை யென்று சொல்லுவர்; அந்தப் பகைவர்க்குத் தாழ்வு வந்த போது அவர்கள் மேலே தயை வைத்து அந்தக் குறையைத் தீர்க்கிறது அந்த ஆண்மைக்குக் கூர்மை யென்று சொல்லுவரென்றவாறு.

அதெப்படியென்றால்[3] இராவணன் சண்டை பண்ணச்சிலே[4] அவன் சேனை யெல்லாம் போய்த் தனியனா யகப்பட்டபோது ராமசுவாமி கண்டு அவனைக்கொல்லாமல் விட்டு "இன்று போய் நாளைக்கு உன் சேனைகளை யெல்லாங் கூட்டிக் கொண்டு யுத்தத்துக்குவா" என்று அனுப்பி விட்டது போல என்பது. ௩

774\. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்

என்பது

கையிலே யிருந்த வேலைத் தன் மேலே வந்த யானையைப் போட்டுப் பின்னையும் வருகிற யானையைப் போட வேல் தேடுகிறவன், தன் மார்பிலே பட்டுருவியிருக்கிற வேலைக்கண்டு பிடுங்கிக் கொண்டு சந்தோஷப் படுவனென்றவாறு.

கை வேலை யானையினுடனே போக்கினது, யானை செத்ததாம்.[5] சந்தோஷப் படுகிறதாவது தான் தேடின வேல் கிடைத்ததால். ௪

775\. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு

என்பது

1\. யெதுத்த போது என்பது காகிதச் சுவடி 2. செயிக்கிறதையே 3. ஊராண்மையாவது. 4. பண்ணுங்கால் 5. யானையைக் கொல்லுமாறு விடுதல் - அச்சுநூல்

பகைவரைக் கோபிச்சுக்[1] கொண்டு பார்த்த கண் அவர்கள் தன் மேலே வேலை யெறிய அது பொறுக்க மாட்டாமல் கண்ணைச் சிமிட்டினால்[2] அது சேவகனானவனுக்குத் தோல்வி[3]யா மென்ற வாறு. ரு

776. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து

என்பது

தனக்குச் சென்ற பகை[4] யெண்ணியதிலே சண்டை பண்ணிக் காயம் படாத நாளை யெல்லாம் பிரயோசன மில்லாமற் கழிந்து போன நாள்களுடனே வைப்பன் வீரனான சேவகன் என்றவாறு. காயமாவது[5] முகத்திலேயும் மார்பிலேயும் படுகிறதாம். சு

777. சுழலு மிசை வேண்டி வேண்டா வுயிரார்
கழல் யாப்புக் காரிகை நீர்த்து

என்பது

வீரனானவன் பூமியிலே தன்புகழ் நிற்க வேண்டி யுயிர் வாழ் கிறத்தை[6] வேண்டான்; அப்படிப் பட்டவர் காலிலே வீரக்கழல் கட்டுகிறது. அலங்காரமல்ல; அந்தப் புகழே யவர்களுக் கலங் காரமா மென்றவாறு.

778. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்

என்பது

சண்டை வந்த போது பயப்படாமல் அதன் மேலே செல்லும் போர் வீரனைத் தன்னுடைய ராசா வேண்டாமென்று கோபித் தாலும் சேவக மிகுதியினாலே திரும்பா னென்றவாறு. வீரனான வன் சண்டை வந்தால் தோள் தட்டிக் கொண்டு புறப்படுவன் என்பது. அ

---

1. கோபித்து 2. கண்ணைச் சிமிட்டினால் - அந்நோக்கை அழித்து இமைக்குமாயின் 3. தோர்வை என்பது காகிதச்சுவடி. 4. வயசு வ்ழுப்புண் 6. வாழ்கிறதை

779. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்

என்பது

தாங்கள் சொன்ன வசனந்[1] தப்பாத படிக்குப் போய்ச் சாக வல்ல வீரர்களை அது தப்பிச்சென்று[2] சொல்லி யிகழ வல்லவர்கள் யாரென்ற வாறு.

சொன்ன வசனமாவது[3] 'இன்னது செய்யேனாகில் இன்னானாவேன்' என்று சபதம் கூறுகிறது. கூ

780. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்காடு
இரந்து கோட் டக்க துடைத்து

என்பது

ராசா தனக்குச் செய்த நன்றிகளை நினைந்து தன் னாண்டவன் கண்களினாலே நீர் பெருக்கத்தக்கதாகச் சண்டையிலே சாகத் தக்க சாவை யிரப்பாகக் கேட்டுக் கொண்டாகிலும் சாகிறதே நல்ல தென்ற வாறு.

வீட்டிலே பெண் சாதி பிள்ளைகளழப் பழவினை யாலே வாதைப்பட்டுச் சாகிறத்திலும்[4] யுத்தத்திலே *யுதவி செய்கிறது. முன் சினேகிதத்தைப் பற்றி யென்பது*

ஆக அதிகாரம் எயஅக்குக் குறள் எளஅய

இப்பால் 79. நட்பு

என்பது அரசனுக்கு யுத்தத்திலே யுதவி செய்கிறது முன் சினே கத்தைப் போ லறி யென்பது[5]

781. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு

என்பது

---

1. வஞ்சினம்; 2. தப்பியவாறு-அச்சுநூல் 3. வஞ்சினமாவது 4. சாகிறதிலும் *முதல் வரை: தன்னாண்டவன் விசாரப்படச் சாகிறதுநல்லது-அச்சுநூல் 5. அரசனுக்குத் தொழிலிலே உதவி செய்கிற சினேகம்-அச்சுநூல்

சினேகத்தைப் போலே செய்து கொள்ளுகிறத்துக்கு[1] அரிதான காரிய மெது[2]; சினேகம் பண்ணிக் கொண்டால் அது போலே பகைவர் செய்கிற உபத்திரவம் வாராமல் காக்கப்பட்டது ஏது[3] என்றவாறு.

சினேகம் பண்ணுகிறத்துக்கானவன்[4] கிடைக்கிறதும், கிடைத்தால் சினேகம் பண்ணுகிற உபாயமும், சினேகம் பண்ணினால் பிரியாமல் இருக்கிறதும்[5] அருமையாம். நல்ல சினேகிதனுண்டானார் பகைவர் பயப்பட்டுப் பொல்லாங்கு செய்யா ரென்பதாம். க

82. நிறைநீர் நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு

என்பது

அறிவுடையவர்களுடனே யுறவு பண்ணினால் வளர்பிறையைப் போலே நாள்தோறும் அதிகமாம்; அறிவில்லாதாருடனே நட்புச் செய்தால் தேய்பிறைச் சந்திரனைப் போலே நாள் தோறும் குறையு மென்றவாறு.

அறிவுடையாரும் அறிவுடையாரும் சினேகம் பண்ணினால் முன்பு குறைஞ்சு[6] நாளிலே[7] பெருகும்; அறிவில்லா தாரும் அறிவில்லா தாரும் சினேகம் பண்ணினால் முன்பு பெருகிப் பின்பு குறையு மென்பதாம். உ

783. நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு

என்பது

நற் குண முடையவர்களுடனே கொண்டவுறவு, நல்லறிவைக் கொடுக்கப்பட்ட[8] சாத்திரத்தைக் கற்கிற போது பிரயாசமாயிருந்து, கற்று அதன் பொருளை அறிந்த பிறகு, சுகத்தைக் கொடுக்கிறாற்போலே, நட்புச் செய்யு மளவு மருமையாயிருந்து பிறகு நல்ல பலத்தைக் கொடுக்கு மென்றவாறு. ௩

---

1. கொள்கிறதற்கு 2. அரியபொருள்கள் யாவை உள; 3. உபத்திரவம் புகுவதற்கு அரிய காவலான யாவை உள-அச்சுநூல் 4. பண்ணுகிறதுக்கானவன் 5. இருக்க வேணும் என்பது காகிதச் சுவடி 6. குறைந்து 7. பின்பு-அச்சுநூல் 8. கொடுக்கும்

784. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற் சென் றிடித்தற் பொருட்டு

என்பது

ஒருவனுடனே ஒருவன் சினேகம் பண்ணுகிறது, முகத்துக்கு முன்னே சிரிப்பு வரத்தக்க வார்த்தைகளைச் சொல்லி நகைக்கிறதுக்கல்ல; அவனுக்கு வேண்டாத பொல்லாத காரியங்கள் நடக்கிறத்தை[1] யறிந்தால் முந்திச் சொல்லுகிறத்துக்கு[2] என்றவாறு.

முந்திச் சொன்னால் அந்தப் பொல்லாங்கு வராமற் பரிகரிச்சுக்[3] கொள்ளலாமென்பது பாவமும் பழியும் வருகிற நகையாகிய சிரிப்பைப் பண்ணுகிறத்தினாலே[4] பலனில்லை. ௪

785. புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்

என்பது

ஒருவனோ டொருவன் சினேகிதம் ஆகிறத்துக்கு[5]க் கூட்டுறவும் பழகுகிறதும்[6] வேண்டாம்; இரண்டு பேருக்கும் அறிவு சரியாயிருந்தால் அது தானே சினேகத்தைக் கொடுக்கும் என்றவாறு

கூட்டுறவாகிறது, ஒரு வூரிலே யிருக்கிறது பழகுகிறதாவது பலகாலுங்கண்டு பேசுகிறது. ரு

786. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு

என்பது

கண்ட பொழுது முக மலரச் சொல்லுகிறது சினேக மல்ல, மனது சந்தோஷப் பட நடக்கிறதே சினேகமென்றவாறு.

உள்ளும் புறம்பும்[7] ஒத்திருக்கிறதே நட்பாவது. சா

---

1. நடக்கிறதை 2. முந்திக்கண்டித்துப்புத்தி சொ லுகிறதற்கு அச்சுநூல் 3. பரிகரித்துக் 4. பண்ணுகிறதினாலே 5. ஆகிறதற்கு 6. பழகிறது என்பது காகிதச்சுவடி 7. பிறம்பும் என்பது காகிதச்சுவடி

787. அழிவி னவை நீக்கி யாறுய்த் தழிவின்கண்
ணல்ல லுழப்பதாம் நட்பு

என்பது

கேடு வந்தா லதனை[1] விலக்கி நன்மையை வரப்பண்ணி[2] விலக்கவும் போகாத பொல்லாங்குகளைத் தானுங் கூட அனுபவிக்கிறதே சிநேக மாவ தென்ற வாறு. ௭

788. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதாம் நட்பு

என்பது

உடுத்த புடைவை[3] கழன்ற போது கைகள் போய் அந்தப் புடைவை[4] யைக் கெட்டியாய்க் கட்டியுடுத்து அபிமானத்தை நிறுத்தினாற் போலே[5] சிநேகிதனுக்குத் துக்கம் வந்தவுடனே தான் போய் அதனைப் பரிகரித்து அவனை நிறுத்துகிறதே நட்பாவது என்றவாறு. ௮

789. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை

என்பது

சிநேகிதத்துக்கு ராச்சிய மேதென்றால் எந்நாளும் திரும்பாமல் இயல்பாகச் சிநேகம் பண்ணித் தர்மத்தினாலேயும் பொருள்களாலேயும்[6] குறைபடாமல் தாங்குகிறதே[7] நட்பாவ தென்ற வாறு.

எந்நாளும் திரும்பாதது, மறுமை யிம்மைக்குறுதியாகிய அறம் பொருள்களிற் றளர்ந்தால் அந்தத் தளர்ச்சியை நீக்குதலாம். ௯

1. கேடு தரும் தீ நெறிகளை 2. நன்னெறிகளைச் செலுத்தி அச்சுநூல் 3 பிடவை என்பது காகிதச் சுவடி; ஆடை அச்சு நூல் 4. அந்த ஆடையை அச்சு நூல் 6. அவமானத்தை நீக்கியது போலே அச்சு நூல் 5. தருமத்திலேயு ப பொருளிலேயும் - அச்சு நூல் 6. தாங்கிறதே என்பது காகிதசு

790. இனைய ரிவரெமக்கு இன்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு
என்பது

'இவர் நமக்கித்தனை தயை யுடையவர் நாமிவர்க்கு இம்மாத்திர மன்பினர்' என்று சொன்னாலும், சினேகங் கொஞ்சமாய்ப் போமென்றவாறு. ௰

ஆக அதிகாரம் ௭௰௯ க்குக் குறள்

இப்பால் 80. நட்பாராய்தல்

என்பது, சினேகம் பண்ண வேண்டினபேரை யாராய்ந் தறிந்து சினேகம் பண்ணவேணு மென்பது.

791. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு
என்பது

ஒருவனோ டொருவன் சினேகம் பண்ண வேண்டினால்[1] அவன்[2] குணங்களை ஆராய்ந்தறிந்து நட்புச் செய்தால் பிரிகிறதில்லையாம்; ஆராய்ந்து விசாரியாமல் நட்புச்செய்தால் கேடுவரு மென்றவாறு.

நல்ல குணவா னானால் நட்புச் செய்யலாம்; பொல்லாத குணமானாற்[3] சினேகம் பண்ணப்போகா தென்பது. ௧

792. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்
என்பது

குணமும் நடக்கையும்[4] நல்லது என்கிறத்தை[5]ப் பல காலும்

1. நட்பினைவிரும்பி அதில் நிற்பார்க்கு - அச்சுநூல் (பரிமேலழகருரை) 2. ஒருவன் - அச்சுநூல் 3. பொல்லாதவனானால் - அச்சுநூல் 4. நடத்தையும். 5. என்கிறதை

பலவற்றாலும் ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவனுக்குக் கடசியிலே[1] தான் சாகத்தக்க துக்கம் வருமென்றவாறு.

குணமுஞ் செயலும பொல்லாதாயிருக்கிறவனோடேசினேகம் பண்ணினால், அவன்மேற் பகையெல்லாம் தன்மேலே வந்து, அந்தப் பகையினாலே தனக்குப் பிராணகானி வருமென்பதாம். உ

793. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு

என்பது

ஒருவன் குணத்தினையும் வங்கிசப் பிறப்பையுங் குற்றத்தையும் அவனுடைய சினேகிதரையும் ஆராய்ந்தறிந்து சினேகம் பண்ணவேணு மென்றவாறு.

குற்ற மில்லாதார் உலகத்திலில்லை; ஆனபடியினாலே அவன் செய்கிற குற்றம் பொறுக்கத் தக்கதாகில் நட்புக் கொள்ளலாம்; பொறுக்கப்படாதானால் நட்புக் கொள்ள வேண்டா மென்பதாம். ௩

794. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு

என்பது

உயர்ந்த குடியிலே பிறந்து தன்னிடத்திலே யுலகத்தார் சொல்லப்பட்ட[2] நிந்தைக்கு அஞ்சுகிறவனைக் கண்டால் அவனுக்குச் சில பொருள் கொடுத்தாகிலும் நட்புக் கொள்ள வேணு மென்றவாறு.

நல்ல குடியிலே பிறந்தவர்கள் பழியான காரியங்களைச் செய்யார்; பழிக் கஞ்சுகிறவர்கள் பிறர் செய்த பிழை பொறுப்பார்கள்; தாங்கள் குற்றங்களைச் செய்யாமலும்[3] பிறர் செய்த பிழையைப் பொறுக்கிறதுமான குணங்களை யுடையவர்கள் நட்பு மெத்தவும் நல்ல தென்பதாம். ௪

1. கடைசியிலே - முடிவில் 2. சொல்லும் 3. செய்யாமையும்;

795. அழச் சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்

என்பது

தான் உலகவழக்க மல்லாத காரியத்தைச் செய்ய நினைத்தால் அழத்தக்கதான கடின வார்த்தைகளைச் சொல்லி விலக்கியும்[1], செய்தாற் பின்புஞ் செய்யவொட்டாமல் நெருக்கிப் பிடித்தும்[2], நல்ல காரியங்களைச் செய்யாவிட்டால் அதட்டிச் செய்விக்கவும் வல்லவர்களை ஆராய்ந்து பார்த்து நட்புக் கொள்ள வேணு மென்றவாறு. ரு

796. கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்

என்பது

ஒருவனுக்குக் கேட்டிலேயு முறுதியாவது[3] தன்னிட[4] சுற்றத்தார் மனதுகளைப் *பயப்படாம லாராய்ந்து அறிகிறதே; அப்படி ஆராய்கிறவனுக்கு *ஒருநல்லறிவு பிறக்குமென்றவாறு. சிநேகம் ஆனத்தையும்[5] செயல்களையு மாராய்ந்தால் இவனுக்கு நல்லறிவும் அவனுக்கு அடக்கமும் வருமென்பது. சா

797. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்

என்பது

ஒருவனுக்குப் பெறப்பட்ட பேறாவது, அறிவில்லாதவனுடனே சிநேகம் பண்ணினா லதைக் கழியவிட்டுவிடுகிறதே பலனென்றவாறு[6]

---

1. விலக்கவும்; 2. பிடிக்கவும் - அச்சுநூல் 3. ஒருவனுக்குக் கேடு என்பது - அச்சுநூல் 4. தன்னுடைய

* முதல் * வரை; எஞ்சாமல் அளப்பது ஒரு கோல் அக்கேட்டிலும் - அச்சு நூல். 5. சிநேகிதன் மனத்தையும் - அச்சுநூல் 6. விட்டுவிடுகிறதே பலன் - விட்டு அவரின் நீங்குதல் - அச்சுநூல்

அறிவில்லாதவனுடைய சினேகத்தை விடாவிட்டால் அவன் செய்கிற தீங்கினாலே அறிவுடையவனுக்குங் கேடுவருமென்பதாம். எ

798. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்க ணாற்றறுப்பார் நட்பு

என்பது

தன்னுடைய அறிவு[1] குறைஞ்சுபோகிறத்துக்கு[2]க்காரணமாகிய காரியங்களைச் செய்ய நினைக்க வேண்டாம்; தனக்கொருதுன்பப்[3] வந்த போது விட்டுப் போறவர்களுடனே[4]சினேகம் பண்ணவேண்டா மென்றவாறு. அ

799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும்

என்பது

ஒருவனோடொருவன் சினேகமாயிருக்கையிலே ஒருவனுக்குக் கேடுவந்த போது அவனைவிட்டுப் போனால் அவனுடைய சினேகத்தைப் பிராணன் போற[5] போது நினைத்தாலும் நெஞ்சு சுடு மென்றவாறு.

ஆபத்துக் குதவாதவனுடைய சினேகத்தை நினைத்தாலும் பொல்லாங்கா யிருக்கு மென்பது. கூ

800. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு

என்பது

குற்ற மற்றவர்களுடைய சினேகத்தையே பண்ண வேணும்; அறிவில்லாதவர்களுடனே சினேகம் பண்ணினாலும், அவர் வேண்டிய தொன்றைக் கொடுத்தாகிலும் விட்டுவிடவேணும் என்றவாறு.

---

1. ஊக்கம் 2. குறைந்து போகிறதற்கு 3. துக்கம்; 4. போகிறவனுடனே 5 போகிற

குற்றமற்றவர்கள் நட்பு இம்மையிலே கீர்த்தியும், மறுமையிலே புண்ணியமு முண்டாக்கும்; அறிவில்லாதாருடைய சினேகம் துக்கத்தைப் பண்ணிவிக்குற[1] படியினாலே விடவேணு மென்பதாம். ய

ஆக அதிகாரம் அயக்குக்குறள் அஎ

இப்பால் 81. பழமை

என்பது, சினேகிதருடைய பழமையினாலே யவர்கள் செய்த பிழைகளைப் பொறுத்தலாம்.

801. பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு
என்பது

பழமை யென்று சொல்லப்பட்டது ஏது [2] என்றால், ஒருவனுக்குச் செய்ய வேண்டின காரியத்தைச் சற்றுங் குறைபடாமற் செய்ய வுடன்படுகிற நட்பு என்றவாறு.

செய்ய வேண்டினதாவது, சினேகிதனுக்கு வேண்டியதை[3]த் தானே செய்தலும், அவன் பொருளைத் தன்பொருளாகவே பார்க்கிறதும், வணக்கமும் பயமுமில்லாமலிருக்கிறதுமாம். அவர்கள் செய்த குற்றத்தைப் பொறுக்கிறது இது முதலானது பழமை யென்று சொல்லப்படும்.[4] க

802. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்
என்பது

சினேகிதத்துக்கு அவயவமாவது சினேகிதருக்கு உரிமை[5]

---

1. பண்ணுவிக்கிற 2. சொல்லப்படுவதுயாது 3. வேண்டியகாரியத்தை 4. இவ்வாக்கியம் அச்சுநூலில் இல்லை 5. ஒருமை என்பது காகிதச் சுவடி

யாய்ச் செய்யப்பட்டகாரியம்; *அந்தக் காரியத்துக்கு அவயவமாவது அந்தக் காரியத்துக்கேற்றவனாயிருக்கிறது; இது பெரியோர்களுக்கு முறைமை யென்றவாறு*. உ

803. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

என்பது

நல்ல காரியங்களைச் செய்கிறத்துக்குத்[2] தனக்குக்கூடா விட்டாலும் தன்னுடைய சினேகிதர் தனக்குச் செய்யப்பட்ட[3] நல்ல காரியங்களுக்குத் தானுடன் படாவிட்டால் அவனுடைய சினேகம் என்ன பலனாமென்றவாறு ௩

804 விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்

என்பது

தன்னுடைய காரியத்தைச் சினேகிதர் கேளாமற் செய்தால், அதற்குச் சந்தோஷப்பட்டு விரும்பி யிருப்பர், அறிவுடையவர்களென்றவாறு

தன்காரியந் தானறியாமலே செய்து முடிகிறது[4] மிகவும் நன்மையென்பது. ௪

805. பேதைமை யொன்றோ பெருங் கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்

என்பது

தாம் வெறுக்கத் தக்க காரியங்களைத் தன்னுடைய சினேகிதர் செய்தால், அதை அறிவில்லாமற் செய்தானென்றாகிலும், சினேகிதத்தினாலே செய்தானென்றாகிலும், நினைத்துக் கொள்ள வேணும்; அல்லாமற் பகையாய்ச் செய்தானென் நினைக்கப் போகா தென்றவாறு.

---

*முதல் வரை; அதனால் அவ்வுரிமைக்கு உரியராதல் சான்றோர்க்கு முறைமை யென்றவாறு - . ச் நூல 2. * செய்கிறதற்கு 3 செய்யும். 4. செய்து முடியிறது என்பது காகிதச்சுவடி

பழையதான சினேகிதர் கெடும்வகை செய்யா ரென்பது கருத்து.[1] ரு

806. எல்லைக்க ணின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு
என்பது

சினேகம் வேண்டியிருக்கிற பேர், பழையவர்களாயிருக்கிற சினேகிதர், சினேகம் விட்டுப் போறோம்[2] என்றாலும் போக வொட்டாமல் நிறுத்திக் கொள்ளுவார்கள் என்றவாறு.

பழையவர்களாயிருக்கிறவர் நட்பை விட்டாற் கெடுவ ரென்பதாம். சா

807. அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்
என்பது

தன்னுடைய சினேகிதர் தனக்கு அழிவு வரத்தக்க காரியங் களைச் செய்தாலும் அறிவுடையவர்கள் அவர்கள் சினேகம் விடார்களென்றவாறு.

பழையதாய் வந்த சினேகிதர் செய்த குற்றத்தைப் பொறுக்க வேணு மென்பதாம். எ

808. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின்
என்பது

சினேகிதர் செய்த குற்றத்தைத்* தாங்கள் காணா விட்டாலும் பிறர் சொன்னாலும் கேளாம லிருக்கத்தக்கவர் களுக்கு* அவர் குற்றஞ் செய்த நாள்களும் நன்மை செய்த நாள்களோடு[3] ஒக்கும் என்றவாறு.

1. இந்த வாக்கியம் அச்சுநூலில் இல்லை. 2. போகிறோம் *முதல் *வரை: தாங்களேயன்றிப்பிறர் சொன்னாலும் கொள்ளாத உரிமை அறிய வல்லவர்களுக்கு - அச்சுநூல் (பரிமேலழகருரை) 3. செய்தவர்களோடு என்பது காகிதச் சுவடி (திருத்தம் அச்சுநூல்)

குற்றங்களாவன கேளாமல் பொருள்களை யெடுத்துக் கொள்ளு கிறது. வணங்காதது. பயப்படாதது முதலானதுகளாம். அ

809. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு

என்பது*

பழையவர்களான சிநேகிதர்கள் செய்த பிழையைப்பார்த்து அவர்கள் சிநேகத்தை விடாத பேர்களை உலகத்தார் விடாமற் சிந்திப்பார்கள் என்றவாறு.

சிநேகிதர் பிழை பொறுக்கிறதைக் கண்டு நான்செய்த பிழையையும் பொறுப்பர் என்றெண்ணிச் சிநேகம் பண்ணுவர் என்பதாம்]

810. விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பிற் றலைப்பிரியா தார் ‡

என்பது

பழைய சினேகிதர் பிழை பொறுத்து அவரிடத்திலே சினேகம் விடாத பேரைப்[1] பகைவர்களுஞ் சினேகம் பண்ண நினைப்பார்கள் என்றவாறு.

பிழை பொறுத்தலாவது, குற்றஞ் செய்த விடத்தும் முன்புபோல் அன்பு விடாம லிருக்கிறது. ய

ஆக அதிகாரம் அயகக்குக் குறள் அளய

இப்பால் 82. தீ நட்பு

என்பது, பொறுக்கப்படாத * குற்றஞ் செய்தாலும் விடப்[2] போகாத பேருடனே கூடியிருக்கிற இது ஒரு அதிகாரத்திலே அடங்காத படியினாலே* இரண்டு வகைப் படுத்தி முதல்[3] தீநட்புச்

---

* இதற்கு உரை காகிதச் சுவடியில் காணப்பெறவில்லை; அச்சு நூல் பார்த்து எழுதப்பட்டது. ‡ இக்குறள் சுவடியில் காணப்பெறவில்லை. 1. விடாதாருடன் (அச்சு நூல்)

* முதல் * வரை ; குற்றமுடைமையின் விடற்பாலதாய நட்பு, நட்பாராய் தற் கண் சுருங்கச் சொல்லிய துணையான் அடங்காமையின் அதனை - அச்சு நூல் 2. ''இடம்'' என்பது காகிதச் சுவடி 3. முதற்கண

சொல்லுகின்றார். தீநட்பாவது, பொல்லாதகுணத்தாருடனே சிநேகம் பண்ணுகிறது.

811. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது
என்பது

வெகுவான சிநேகமாயிருந்தாலும் பொல்லாத குணமுடையவர்களுடனே கொண்ட வுறவு வளர்கிறத்திலும்[1] குறைந்து விடுகிறதே நல்லதென்றவாறு.

பொல்லாதவர்களுடனே கொண்ட வுறவு அதிகமானாற் கேடுவரும்! குறைதலால் கேடு வரா தென்பதாம். க

812. உறினட் டறிவிலாருஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென்
என்பது

தங்களுக்குப் பிரயோசன மானபோது சிநேகம பண்ணியும்,[2] பிரயோசன மில்லாத போது சிநேகம் விட்டுப் போயுமிருக்கிற[3] அறிவில்லாதாருடைய வுறவைப் பெற்ற தனாலென்ன பலன்! பெறாவிட்டாலென்ன பலனில்லாமற் போமென்றவாறு.

இப்படிப்பட்ட குணமுடையவர்களைப் பிறத்தியாராகப்[4] பார்த்துக் கொள்ள வேணு மென்பதாம். உ

813. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரும் நேர்
என்பது

சிநேகத்தை யெண்ணாமல் பொருள் வருகிறத்தைப்[5] பார்க்கிற சிநேகிதர்களும், கொடுப்பாரை யெண்ணாமற் பொருளையே காரணமாக வெண்ணுகிற வேசிகளும், பிறர் கெடுகிறத்தைப்[6] பாராமல் அவர்கள் மறக்கப்பார்த்து அவர்கள் பொருளைத் திருடிக் கொள்ளுகிற கள்ளருஞ் சரியென்றவாறு. ங

1. வளர்கிறதினும் 2. பண்ணி அச்சுநூல் 3. விட்டுப்போகும்-அச்சு நூல் 4. அயலாராக 5. வருகிறதைப் 6. கெடுகிறதைப்

814. அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார்
 தமரிற் றனிமை தலை

என்பது

பகைவர் சண்டை வாராத முன்னெல்லாம் சிநேகமாயிருந்து சண்டையிலே போட்டு விட்டு வருகிற குதிரையைப்போல, அறிவில்லாதவர்களுடைய சிநேகிதத்திலும் அவரைவிட்டு நீங்கித் தனியேயிருக்கிறது மெற்ற[1] நல்லதென்றவாறு.

அறிவில்லாதவர்களைச் சிநேகமாக நம்பினால் கேடுவரும் அவர்களில்லாவிட்டால் கேடு வராதென்பதாம்.

815. செய்தேம மாசாராச் சிறியவர் புன்கேண்மை
 யெய்தலி னெய்தாமை நன்று

என்பது

சிநேகிதரான துர்ச்சனருக்கு[2] உபகாரங்களைச் செய்திருந்துந் துணையாகாதவர்களுடைய சிநேக மாகிறத்திலும்[3] இல்லாமற் போகிறது நல்லதென்றவாறு.

துணையாகாதது, ஆபத்துக் குதவாமல் விட்டுப் போற[4] தென்பதாம்.

816. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
 ரேதின்மை கோடி யுறும்.

என்பது

அறிவில்லாதவர்களுடைய நெருங்கிய சிநேகத்திலும் அறிவுடையவர்களுடைய பகை கோடி யத்தனை நல்லதென்றவாறு.

அறிவுடையவன் பகையால் ஒரு பொல்லாங்கும் வராது; அறிவில்லாதவன் சிநேகத்தால் பொல்லாங்கே வருமென்பதாம்.

817. நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
 பத்தடுத்த கோடி யுறும்

என்பது

---

1. மெத்த 2. துர்ச்சனர் - கீழ் மக்கள் 3. மாகிறதிலும் (உண்டாகிறதிலும் - அச்சுநூல்)[4] போகிற

தாமறியத் தக்கவர்க ளல்லாமல்[1] முசவிச்சையாய் நகைக்கிறவர்களுடைய சினேகத்தினாலே வருகிற பலத்திலும், *பகைவராயிருந்து அறியத்தக்கவற்றை யறிகிறவர்களுடைய சினேகம்* பத்துக் கோடிமடங்கு நல்ல தென்றவாறு. எ

818 ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்

என்பது

தம்மாலே முடிக்கப்பட்ட[2] காரியத்தை முடியா தென்று சொல்லி ஆலசியம்[3] பண்ணுகிற வர்களுடைய சினேகத்தை யவர்க ளறியாமலே விட்டுவிடவேணு மென்றவாறு.

விடுகிறத்தை[4] அவர்களறிந்தால் அப்பொழுது பரிசரிததுக் கொண்டு பின்னையு முறவா யிருக்க வேண்டுவமென்பதாம். அ

819 கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு

என்பது

சொல்லுகிறதும் செய்கிறதும் ஒவ்வாமல் வேறாக இருக்கிற வர்களுடைய சினேகம், *(நினைவிலேயல்லாமல் கனவிலேயும் ஆகாது என்றவாறு

சொல்லுகிறபோது நன்மையாய்ப்பேசி, காரியத்திலே பகை பண்ணுகிறவர்களுடைய) * சினேகம் ஆகாதென்பது. சு

820. எனைத்துங் குறுகுத லோம்பல் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு

என்பது

தான் தனியே வீட்டிலே யிருக்கிறபோது உறவாடிப் பிறகு சபையிலே யிருக்கிறபோது தன்னை யிகழ்ந்துபேசிப் பழிக்கிற

1. தக்கவராகாத - அச்சுநூல் *முதல் *வரை: பகைவரால்வருவன -
2. முடியும் 3. காலதாமதம் 4. விடுகிறதை
* முதல் * வரை ; காகிதச்சுவடியில் இல்லை ; அச்சுநூல்

வர்களுடைய சினேகம் சற்றும் பண்ணாமற் பரிகரித்து விட வேணு மென்றவாறு.

தனியே யிருக்கிறபோது உறவு செய்து பலர் முன்னே பழிக்கிறவர்கள் தன்னை ஒருக்காலுஞ்[1] சேராமற் காத்துக் கொள்ள வேணு மென்பதாம். ൰

ஆக அதிகாரம் ௮൰ ൰

இப்பால் 83. கூடாநட்பு

என்பது, மனதிலே பகை வைத்துக் கொண்டு அந்தப் பகையைச் சாதிக்கப் பக்குவம் வருமளவும் பொய்யுறவு பண்ணிக் கொண்டிருக்கிற தென்பது.

821. சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு
என்பது

மனதிலே யுறவில்லாமற் பகையாய் வெளியிலே யுறவாயிருக்கிறவர்களுடைய சினேகம், ஒன்றை யொன்றின்மேல் வைத்து ஒன்றாலே வெட்டி நறுக்கப்பட்ட[2] பட்டடையோடொக்கு மென்றவாறு.

பட்டடை நறுக்குகிற[3]பரியந்தம் சுமந்துகொண்டிருந்து பக்குவம் வந்த போது இரண்டாய்த்துணிக்கும்; அது போல மனதிலே பகையும் வெளியிலே யுறவுமாயிருக்கிறவர்கள் பக்குவம் வந்த போது கொல்லுவார்கள். க

822. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்
என்பது

1. ஒருகாலும் 2. நறுக்குவதற்கிடனான - அச்சுநூல் 3. நறுக்கிற- என்பது காகிதச் சுவடி

தனக்கு உற்றார்போல இருந்து மனதிலே யுறவில்லாதாருடைய சிநேகம், ஸ்ரீசெனங்கள் மனது போலத் தமக்கான இடம் பெற்றால் வேறுபடு மென்றவாறு.

மனம்[1] வேறுபடுதலாவது, பழைய*பகையை முடிக்க வேண்டி* யென்பதாம். உ

823. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதல் மாணார்க் கரிது
என்பது

நல்லதா யிருக்கிற[2] பல நூல்களைக் கற்ற விடத்தும் அதனாலே மனசு திரும்பிச் சிநேகமாகிறது பகைவர்களுக் கில்லை யென்றவாறு.

நல்ல நூலாகிறது[3] மனது குற்றந்தீர்க்கிறது[4]; மனது நல்லராகிறது[5] கோபம் விடுகிறது. மனதிலே பகையாயிருக்கிறவர்களைக் கல்வியுடையவர்களென்று சிநேகம் பண்ணலாகாதென்பது. ௩

824. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்
என்பது

கண்டவிடத்து[6] முகத்துக்கு நல்லவனாகச் சிரித்து மனதிலே பகையாயிருக்கிற வஞ்சகரைக் கண்டால் பயப்படவேணு மென்றவாறு.

மனதிலே யிருக்கிற பகையைப் புறத்து வெளிப்படுத்தாமையானும், மனதிலே யிருக்கிற குறிப்பையறிவிக்கிற முகத்தாலேயும் தெரியாமல்[7] மறைக்கப்பட்ட[8] வஞ்சருக்குப் பயப்பட வேணு மென்பதாம். ௪

1. நட்பு - அச்சுநூல்

*முதல் * வரை; பகையேயாதல்-அச்சுநூல் 2. நல்லனவாய; 3. நூலாவன; 4. தீர்ப்பன; 5. நல்லதாகிறது-அச்சுநூல் 6. கண்டபொழுது 7. தோன்றாமையானும் 8. மறைக்கும்-அச்சுநூல்

825. மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று

என்பது

மனதிலே[1] யுறவு கலவாதவரை யாதொரு காரியத்தினுஞ் சொல்லினாலே தெளிகிறது முறைமையல்ல[2] வென்றவாறு.

மனதிலே பகையா யிருக்கிறவர்கள் சொல்லுகிற வார்த்தையை மெய்யென்று நம்ப வேண்டா மென்பதாம். ௫

826. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்.

என்பது

உறவின் முறையாரைப் போலே நல்ல வசனங்களைச் சொன்னாலும், பகைவர் வார்த்தைகளை மெய்யென்று நம்பப் போகா தென்றவாறு.

அவர் சொல் சொன்னபடியே செய்யாகிறத்தை[3] அந்தட்சணத்திலே[4] யறியப்படு மென்பதாம். ௬

827. சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்

என்பது

வில்லினது வணக்கம் எதிர்த்தவர்களுக்குத் தீங்கு செய்யும், அதுபோலப் பகைவர் சொல்லுஞ் சொல்லினுடைய வணக்கத்தையும் நமக்கு நன்மை செய்யு மென்றெண்ண வேண்டா மென்றவாறு.

பகைவர் வணங்குகிறது தீங்கு செய்ய வென்று அஞ்சிக் காக்க வேண்டு மென்பதாம். ௭

828. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார்
அழுதகண் ணீரு மனைத்து

என்பது

---

1. மனத்தினாலே; 2. முறைமைத்தன்று—அச்சுநூல் 3. செய்யாதாகிறதை 4. அந்தக்ஷணத்திலே

பகைவர் குறிப்பை யறிய வல்லவர்களுக்கு அவர் கும்பிடுகிற போதும் அந்தக் கைக்குள்ளே ஆயுதம் மறைவாய் வைத்துக் கொண்டிருப்பர்[1]; அழுகிற போதும் அப்படித் தானே ஆயுதம் *மறைவாய் வைத்துக் கொண்டிருப்பர் *என்றவாறு.

பகைவர், நட்பாகிறது[2] தங்கள் கையாலேயுங் கண்ணாலேயுந் தேறச் செய்து, பிறகு சமயம் பார்த்துக் கொல்லுவார்களென்பதாம்.

829. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று

என்பது

பகையை யறிய வொட்டாமல் புறத்தியிலே யுறவை மெத்தச் செய்து, மனத்திலே தம்மை யிகழப்பட்ட[3] பகைவரைத் தாமுமப்படியே வெளியிலே யுறவாய் மனத்திலே யந்த வுறவை வையாமல் விட்டுவிட வேணுமென்றவாறு.

உள்ளே யொருவகையும் மேலே யொருவகையும் செய்கிறது ஆகாதாலும்[4] வஞ்சகரான[5] பகைவரிடத்திலேயாமென்பதாம். கூ

830. பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்
டகநட் பொரீஇ விடல்

என்பது

தன் பகைவர் தனக்குச் சிநேகிதராய் நடக்கிற காலம் வந்தால், தானு மவரோடு முகத்தாலே யுறவு பண்ணி, மனதிலே யந்த வுறவை விட்டுப் பிறகு அந்த முகத்துறவையும் தவிர வேணு மென்றவாறு.

---

1. இருக்கும்; அச்சுநூல் *முதல்*வரை: மறைந்திருக்தற் கிடனாகும் - அச்சுநூல் 2. தாம் நண்பர் என்பதனை - அச்சுநூல். 3. இகழும் 4. ஆகாது; ஆனாலும் 5 வஞ்சகராலும் என்று சுவடியிலுள்ளது

நட்பாகிற காலமாவது,* பகையை மறக்கிற காலமென்பது* ம

ஆக அதிகாரம் அ௰௩ க்குக்குறள் அளரு

இப்பால் 84. பேதமை[3]

என்பது, யாதொன்றையு மறியாம லிருக்கிறது.

831. பேதமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்
என்பது

ஒருவனுக்குப் பேதமை யென்கிறது ஏதென்றால்,[1] தனக்குக் கேடு வருகிற காரியத்தைச் செய்து, பலன் வருகிகிற காரியத்தை விடுகிற தென்றவாறு.

கேடு வருகிற காரியமாவது, தரித்திரம் பகை பழி பாவங்கள் வருகிறது. பலனாகிறது, புகழறங்கள், பேதமை யென்பது எல்லாக்குற்றங்களினு மதிகமான குற்றமென்பதாம். க

832. பேதமை யுள்ளெல்லாம் பேதமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்
என்பது

ஒருவனுக்குப் பேதமையு ளெல்லாம் மிகப்பேதமையாவது தனக்காகாத ஆசார வொழுக்கத்தின் மேலே ஆசை வைத்துச் செய்கிற தென்றவாறு.

இம்மை மறுமை இரண்டுக்கு மாகாதென்று பெரியோர்கள் சாத்திரத்திலே சொன்ன காரியங்களைச் செய்கிறது மிக பேதமை யென்பது. உ

*முதல்*வரை: தம்மாலும் பகையென்று வெளிப்பட நீக்கலாகாத சமயம் அச்சுநூல் 1. பேதை ம 2. யாதென்றால்-அச்சுநூல்

833. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்

என்பது

நாண வேண்டியத்துக்கு[1] நாணாமையும், நாட வேண்டியத்துக்கு நாடாமையும், எல்லாரிடத்திலும் முறியத்தக்க[2] சொல்லையும் செய்கைகளையு முடைமையும், யாதொன்றினையும் பேணாமையும் பேதையானவன் தொழிலா மென்றவாறு.

நாண வேண்டியது, பகை பழி பாவங்களுக்கு பேண[3] வேண்டியது, குடிப்பிறப்புக் கல்வியொழுக்க முதலானதுகள்[4] என்பதாம். ௫

834. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்

என்பது

மனவசன காரியங்கள்[5] அடங்குதற் கேதுவான சாத்திரங்களைக் கற்றும், அதனுடைய பொருளை[6] யறிந்தும், அந்தப் பொருளைப் பிறருக்குச் சொல்லியும், தானடங்கி யந்த வாசாரத்தின் படியே நடவாத பேதையைப் போலப் பேதையானவர் உலகத்திலில்லை யென்றவாறு.

இந்தப் பேதையைத் தீர்க்க மருந்தில்லை; ஒருவராலு மாகாதென்பது. ௪

835. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு

என்பது

ஒருபிறப்பிலே *பேதையராய் அறிவில்லாமலிருக்கிறவன்* எழுபிறப்புக்களிலே நரகத்திலே பிறந்து துக்கத்தை யனுபவிப்பானென்றவாறு.

---

1. வேண்டியதற்கு 2. முறிந்த-அச்சுநூல் 3. நாண என்று சுவடியில் இருப்பது தவறு 4. முதலானவை 5. காயங்கள் - அச்சுநூல் 6. அவ்வடக்கான் வரும் பயனை - அச்சுநூல் * முதல் * வரை: அறிவில்லாதவனாய் இருப்பவன்-அச்சுநூல்

அறிவில்லாதவன் ஒருபிறப்பிலே செய்த கொடிய வினை யாலே யேழெழு பிறப்பும் நரகமுண்டாமென்பதாம். ரு

836. பொய்படு மொன்னோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்

என்பது

செய்கிற முறைமை யறியாத பேதை யானவன் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கினால் அந்தக் கருமமுங் கெட்டுத் தானுங் குற்றத்தை யடைவா னென்றவாறு.

கருமங்கெடுகிறது, பின்னை யாகாதது; தான்குற்றப் படுகிறது, எல்லாராலுமிகழப்படுதலாம். சு

837. ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை

என்பது

பேதை யானவனுக்கு முன் செய்த புண்ணியத்தினாலே அயி சுவரியம் வந்தால், அவனுக்குரியரல்லாத பேர் அந்த அயிசு வரியத்தை யனுபவிப்பர்; உரியரானவர்கள் பசித்திருப்பா ரென்றவாறு. எ

838. மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்

என்பது

பேதை யானவன் தன் கையிலே யொரு பொருளுண்டாகப் பெற்றாற் பயித்தியக் காரன் கள்ளைக்குடித்து மயங்கினாற் போலு மென்றவாறு.

அறிவில்லாத வனுக்குச் செல்வம் வந்தாற் பயன்வரா தென்பது. அ

839. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்

என்பது

பேதையானவனுடைய சினேகம் மெத்த நல்லது; அதெப்படியென்றால் சிறிது[1] நாளிலே அவனை விட்டுப்பிரிந்தால் அதனாலே குற்றம்வராது; ஆனபடியினாலே நல்லதென்றவாறு.

அறிவுடையவன் சினேகம் பிரிந்தால் வெகுதுக்கம் வரும்.

840. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்

என்பது

பெரியவர்கள் சபையிலே பேதையானவன் போனால், கழுவாத காலைச் சுகத்தைக் கொடுக்கிற படுக்கைக் கட்டிலின் மேலே வைத்ததோ டொக்கு மென்றவாறு.

கழுவாத காலால் மிதித்த[2] அமளி பழிக்கப்படுமாறு போலப் பேதையான் புகுந்த சபையும் பழிக்கப்படும் என்பதாம். ௰

ஆக அதிகாரம் ௪ சக்குக்குறள் அளசய

இப்பால் 85. புல்லறிவாண்மை

என்பது தான் சிற்றறிவினனா யிருந்தே தன்னைப் பேரறிவுடையனாக எண்ணிக் கொண்டு பெரியோர் சொன்ன வுறுதி வசனங்களைக் கைக் கொள்ளாமை யென்பது.

841. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு

என்பது

ஒருவனுக்கு இல்லாமையாகிய தரித்திரத்துக் குள்ளே மெத்தத் தரித்திரமாவது அறிவில்லாமையே; பொருளில்லாமையை அதுபோல் வறுமையாக எண்ணாருலகத்தா ரென்றவாறு.

அறிவாவது, நல்லறிவு. அறிவில்லாதவர்கள் செல்வமுண்டாயிருந்தும் இம்மை மறுமைப்பயன் எய்தார் என்பதாம். ௧

1. சில அச்சு நூல் 2. மெரித்த என்பது சாகிதச்சுவ

(அறிவுள்ளவர்கள் தரித்திரமான போதும் விரத சீலாசாரங்களை விடாமல் நடந்து மறுமைப் பயனையெய்துவர்)

842. அறிவிலான் ஹெஞ்சுவந் தீதல் பிறிதியாது
இல்லை பெறுவான் றவம்

என்பது

புல்லறிவுடையார் மனது சந்தோஷத்துடனே ஒருவனுக்கொருபொருளைக் கொடுத்தால், அது வாங்கிக் கொள்ளுகிறவன் செய்த புண்ணியமே யல்லாமல் அவனுக்கு[2] வேறொன்றுப் இல்லை யென்றவாறு.

கொடுக்கிறவன் இம்மை மறுமைகளை வேண்டிக் கொடுக்க வேணு மென்பதாம்.

43. அறிவிலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது

என்பது

அறிவில்லாதவர்கள் தாமே தம்மை வருத்துகிறது[3] பகைவர்களுஞ் செய்யமாட்டார்க[4] ளென்றவாறு.

பகைவர்கள் தாங்களறிந்து[5] ஒருகாரியத்தைக் காலம் பார்த்துக் கொண்டிருந்து செய்வர்;[6] பழிபாவங்களைப் பகைவர் செய்யமாட்டா ரென்பதாம். ௩

44. வெண்மை யெனப்படுவதி யாதெனின் ஒண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு

என்பது

புல்லறிவுடையவன் என்று சொல்லப்படுகிறது ஏதேன்றால்.

1. இவ்வாக்கியம் அச்சு நூலில் அதிகமாகவுள்ளது 2. இச்சொல் அச்சுப் பிரதியிலில்லை. 3. வருத்தும் வருத்தம்; 4. பகைவர்க்கும் செய்தலரிது; 5 தாமறிந்த - அச்சுநூல் 6. இங்கு "வறுமை" என்ற சொல் அச்சுநூலில் அதிகமாக உள்ளது.

தன்னைந்தானே நல்லறிவுடையவ னென்று சொல்லுகிற மயக்க மென்றவாறு.

வெண்மையாவது, இளமையான வறிவு; முதிர்ந்த வறிவின்மை என்பது.

845. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்

என்பது

புல்லறிவாளர் தாங் கல்லாத நூல்களைக் கற்றேமென்று வெகுமானமாய்ச் சொல்லிக் கொள்ளுகிறது, நன்றாய்க் கற்ற * நூலுக்கும் பிறருக்குச் சந்தேகமாய் எண்ணப் பண்ணு*மென்றவாறு

'கல்லாத நூலைக் கற்றோமென்று சொல்லக் கேட்டு அதனைப் பரீட்சை கேட்கிறபோது வராத படியினாலே, எல்லாம இப்படியல்லோ[2] என்றெண்ணுவார்களாம்'[3]. ரு

846. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி

என்பது

புல்லறிவாளர் தங்களிடத்திலே வரப்பட்ட குற்றங்களை யறிந்தும் கடியாமல். புடவை[3]களாலே தங்கள் சரீரத்தை மறைச்சுக்[4] கொள்ளுகிறது புல்லறிவா மென்றவாறு.

குற்ற மறைத்தலாவது பொல்லாங்குகளைச் செய்யாமலிருக்கிறது. சா

947. அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு

என்பது

---

*முதல *வரை: நூலிலும் பிறருக்குச் சந்தேகத்தை விளைவிக்கும்-அச்சு நூல் சந்தேகமாவது இது இங்கு அச்சுநூலிலுள்ளது. 1 எல்லாம இப்படியல்லோ-அச்சுநூலில வல்லவர் என்று சொல்வதும இங்ஙனம தானிருக்குமோ-அச்சுநூல் 2. என்றெண்ணுவது-அச்சுநூல் 3 பிடவை என்பது காசிதச் சுவடி 4. மறைத்துக்

பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் அதனை மனத்திலே வையாமல் *யறந்து போனவன் புல்லறிவாளனாம்* அந்த வுபதேச வுறுதி யறியாமல்[3] தனக்குத்தானே கேடு தேடி, கொண்ட[2] வனாப் என்றவாறு. எ

848. ஏவவுஞ் செய்கலான் றான்றேறான் அவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்

என்பது

புல்லறிவாளன் தனக்குறுதியான காரியத்தை அறிவுடையார் சொல்லவுஞ் செய்யான் தானும் அறியானாயிருக்கிறவன் உயிர் போகிற பரியந்தம் நிலத்துக்குப் பொறுத்தற்கரிய தொரு நோயா மென்றவாறு

மலைகளையுஞ் சமுத்திரங்களையும் பொறுத்துச் சுமந்திருக்கிற பூமிக்குப்*பாவியானவர்களைச் சுமக்கிறது வெகுவாதையாயிருக்கு*மென்பதாம். அ

849. காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு

என்பது

தானெல்லா மறிந்தே னென்று பெருமை சொல்லிக்கொண்டு பிறரை யறிவிக்கப் போறவன்[1] அவனாலே தான் பழிக்கப்பட்டுத் தானறியாதவனாவான்; அறியாதவன் தான் கொண்ட நெறியை†விடாமல் எல்லாமறிந்தவனாக எண்ணுவான் † என்றவாறு.

புல்லறிவாளர்க்கு எந்தவகையாலும் நல்லறிவு கொள்ளக் கூடா தென்பதாம. கா

850. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்

என்பது

---

*முதல் *வரை: ‡ முதல் ‡ வரை. பாவியானவர்களின் உடம்பு,பெரும் பாரமாயிருக்கும் அச்சுநூல் புல்லறிவாளன்-அச்சுநூல் 1. அறியாமையால்; 2. கொள்வான்; 3. அறியான்-அச்சுநூல் 4. மூடுக்கிறவன்

பெரியோர்களனேகம் பேறுமுண்டென்று *[சொல்லுகிற பொருளைப் புல்லறிவாலே இல்லையென்று சொல்லுகிறவன்

மனுஷனல்லன்; பூமியிலே பேயென்று]* சொல்லப்படு மென்றவாறு.

பெரியோர்கள் உண்டென்பர், தெய்வமும் மறுபிறப்பு இருவினைப்பயனு முதலானவை; இதுகளைத்[1] தன் மதாசாரத் தினாலே இல்லையென்று சொல்லுகிறவன் பேயொடொக்கு மென்பதாம். ம

ஆக அதிகாரம் அ௰ருக்குக்குறள் அளரு௰

இப்பால் 86, இகல்

என்பது, இரண்டு பேர்கள் ஒருவர்க்கொருவர் கோபத்தி னாலே பகையாய்ச் சண்டை பண்ணிக் கெட்டுப் போறத்துக் குக்[2] காரணமாகியது இகல்[3]யென்றவாறு. ௱

851. இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்
என்பது

எல்லாவுயிர்களுக்கும் பிறவுயிர்களோடு கூட்ட மில்லாம லிருக்கிற தென்னும் பொல்லாங்கை வளர்க்கப்பட்ட[4]கோபமே[5] யிகலாமென்றவாறு.

நற்குண மில்லாததே தீக்குணயாம். க

852. பகல்கருதிப் பற்றா செயினு மிகல்கருதி
யின்னா செய்யாமை தலை
என்பது

‡ முதல் ‡ வரை: விடாமையால் அதனை அறிந்த வனாகமுடியும்-அச்சுநூல்
* முதல் * வரை: பிறரால் ''இது சுவடியில் இல்லை என்ற குறிப்புடன எழுதப்பட்டவை - இவை அச்சுநூலிற் கண்டவை. 1. இவற்றை 2. போகிறதற்கு. 3. காரணமாகிய மாறுபாடு - அச்சுநூல் 4 வளர்க்கும 5. குற்றமே - அச்சுநூல்

தன்னொடு கூடாமை *[யைக்கருதி ஒருவன் ஒருவனுக்குப் பொல்லாங்கு செய்தாலும், அவனுடனே பகை பண்ணிக் கொண்டு திரும்பி அவனுக்குப் பொல்லாங்கு செய்யாமல் இருக்]* கிறதே நல்லதென்றவாறு.

இவனும் பொல்லாங்கு செய்தால் பகைவளர்ந்து இரண்டு பேரும் கெடுவர் என்பதாம். உ

853 இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும்

என்பது

பகையென்று சொல்லப்பட்ட[1] துக்கத்தைச் செய்கிற வியாதியை யொருவன் தன் மனதிலே யிருக்கவொட்டாமல் நீக்கி விட்டால், அது அவனுக்கு எந்நாளும் அழியாத புகழைக் கொடுக்கு மென்றவாறு.

பகை மனத்தே யில்லாவிட்டால் எல்லாரும் உறவாவர்; அதனால் நினைத்த கருமம் எல்லாமுடியு மென்பது. ரு

854. இன்பத்து ளின்பம் பயக்கும் இகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்

என்பது

பகையென்று சொல்லப்படுகின்ற துன்பம் எல்லாத்துன்பங்களிலும் அதிகமாம்; அந்தப் பகையில்லாதவனுக்கு அவ்வின்மை[2] இன்பத்துக்கெல்லா மதிகமான[3] வின்பத்தைத் தருமென்றவாறு.

துக்கத்திலுந் துக்கமாகிறது. எல்லாருடனேயும் பகைச்சுக் கொண்டு தன் பெலன்[5] போகிறது. இன்பத்துளின்பமாவது, எல்லாருஞ் சினேகமானால் வேண்டியதெல்லாமெய்துவது மென்பதாம்.

---

* முதல் * வரையுள்ள உரை அச்சுநூல் 1. சொல்லப்படும் 2. இங்கு ''அவ்வின்மை'' என்பது அச்சுநூல் 3. இது அச்சுநூலில் இல்லை 4. பகைத்துக் 5. பலம்

855. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்

என்பது

தன்மனதிலே பகைதோன்றினால் அதனைப் பேணியதிக மாக்காமல் தள்ளிப் போடுகிறவர்களைச் செயிக்கநினைக்கிறவர் கள் யாருமில்லை யென்றவாறு.

பகையில்லாதவர்களை யொருவராலேயும் செயிக்கப்போகா தென்றவாறு. ரு

856. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து

என்பது

பிறரொடு பகை கொள்ளுகிறது தனக்கு நல்லதென்று அதனைச் செய்கிறவனது உயிர்வாழ்க்கை[1] சிறிதுபொழுதிலே பிழைக்கிறதும் வகையறக் கெடுகிறதும் உண்டென்றவாறு. வகையறக் கெடுதலாவது பிராணன் போற[2] தென்பதாம். சு

857. மிகன்மேவு மெய்ப்பொருள் காணா ரிகன்மேவு
மின்னா வறிவி னவர்

என்பது

பகையொடு கூடிய பொல்லாத வறிவினை யுடையார் வெற்றி பொருந்துதலையுடைய நீதி நூற் பொருள்களை யறிய மாட் டார்க ளென்றவாறு.

பொல்லாத வறிவாவது, தனக்கும் பிறர்க்குந், கேடு தரப்பட்ட[4] தென்பதாம். எ

858. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு

என்பது

---

1. உயர் வாட்கை என்பது காகிதச் சுவடி 2. போகிற 3. இது மணக் குடவர் பாடம் மிகன் மேவல் என்பது பரிமேலழகர் பாடம் 4. தருவது

தன்மையிலே பகை தோன்றினா லதனை வளரப் பண்ணாமல் தேய்த்து விடுகிறதே ஒருவனுக்குச் செல்வமாவது; இப்படிச் செய்யாமல் அந்தப்பகையை அதிகம் பண்ணுகிறவனுக்குக் கேடு வருமென்றவாறு. அ

859. இகல்காணா னாக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு

என்பது

ஒருவனுக்குச் செல்வம் வருகிற காலம் வந்தாற் பகையை நினையான்; கேடு வருகிற காலத்து அப் பகையைச் செய்து கொள்ளுவா னென்றவாறு.

பகையினாலே கேடு வருகிறதல்லாமல் பிறராலே கேடு வராதென்பதாம். கூ

860. இகலானா மின்னாத வெல்லா நகலானாம்
நன்னய மென்னுஞ் செருக்கு

என்பது

ஒருவனுக்குப் பகையினாலே பொல்லாங் கெல்லாம் வரும்; சினேக மொன்றினாலே நல்ல நீதி யென்னும் பெருஞ் செல்வங்களெல்லா முண்டா மென்றவாறு.

பொல்லாங்காவது, வறுமை பழி பாவ மென்பதாம். ய

ஆக அதிகாரம் அயகூ க்குக் குறள் அளகூய

இப்பால் 87. பகைமாட்சி

என்பது, 'பலவந்தத்துடனே பகை கொண்டாலும் அறநீதிகளை வழுவாமல் ஞாய மார்க்கமாகச் சண்டை 'பண்ணுகிறதாம்.

861. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேல் மேக பகை[1]

என்பது

1. பறைமென்று சாகிதச் சுவடியிலுள்ளது

தன்னிலும் பெலவானுக்குப் பகையாகாமல் [1] விட்டு விட்டுத் தன்னிலும் பெலகீன னானவனுடனே பகை செய்கவென்றவாறு.

பெலவானாவது நல்ல சிநேகிதரும் நீதியும் நல்லறிவும் * உலகத்துக்கு ஏற்க நடக்கிறதுமாம். இதுகளை[2] யுடைய வரை வெல்லப் போகாது*; இதுகளில்லாதாரை வெல்வார்க்குப் பலன்[3] கெடாமல் எளிதாய் வெல்லலா மென்பது. க

862. அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வான்
என்பரியு மேதிலான் றுப்பு
என்பது

ஒருவன் தன் சுற்றத்தார் மேலே தயையு மில்லாமல் நல்ல துணையு மில்லாமல் சண்டைத் தொழி*[லும் கல்லாம லிருக்கிற வனை வெல்லுகிறவனுக்குப் பலம் எந்த விதத்தி லேயும் கெடாது என்றவாறு.

நல்ல துணைவரும் தயையும் சண் டைத் தொழில்]* வல்ல மையும் இல்லாதவனை எளிதில் வெல்லலாமென்பது. உ

863. அஞ்சும் அறியான் அமைவில னீகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு
என்பது

ஒருவன் பயப்பட வேண்டியத்துக்கு[4]ப் பயப்படான்[5], அறிய வேண்டியத்தை[6] யறியான், பிறருடனே சினேக மிலலாதவன், கொடுக்கிறது மில்லாதவன், இப்படிப்பட்டவனை யெளிதின் வெல்லலா மென்றவாறு.

இந் நாலு குணமுமுள்ளவன், பகையில்லாவிட்டாலுங் கெட்டுப் போவானென்பதாம். எ

---

1. பகையாதலை 2. இவை *முதல் *வரை அச்சுநூலில் இல்லை 3. பலம் †முதல் †வரை அச்சுநூல் பார்த்தெழுதப்பட்டன. 4. பேண்டு[illegible]தற்கு 5. வேண்டாததற்குப் பயப்படுவான்-அச்சுநூல் 6. வேண்டியதை

864. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது

என்பது

ஒருவன் கோபத்தை விடான், நல்லபுத்தியு மில்லாதவன், அவனை வெல்லுகிறவர்களுக்கு[1] மெத்த எளியதென்றவாறு.

கோபமிகுதியுண்டானால் ஆலோசனையும் ரகசியமும் இல்லாமற் போம். இவை இல்லாதவனைக் காலமு மிடமும் பார்க்க வேண்டாம், வெல்லலா மென்பது. ௪

865. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது

என்பது

ஒருவன் நீதி நூலைப் படியான், அதிலே சொல்லப்பட்ட தொழில்களையுஞ் செய்யான், தனக்கு வரப்பட்ட பழியையும் பாரான், சிநேக மில்லாதவன், பகைவர்களுக்கு எளியனாய் நல்லவனா மென்ற வாறு.

எதிராளியை யுபத்திரவப் படுத்தாமல்[2] அதிசீக்கிரமாக மாண்டு போறத்தினாலே[3] நல்லவனாமென்பதாம். ௫

866. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்

என்பது

தன்னையும் பிறரையு மறியாமற் கோபஞ் செய்து கொள்ளுகிறவன், வெகுவாக வாஞ்சையை யுடையவன், இப்படிப் பட்டவனுடைய பகையை விரும்பித் தேடிக் கொள்ள வேணு மென்ற வாறு.

இவன் பகையை வெல்லாமல் தானே கெட்டுப்போவானென்பதாம். ௬

1. வெல்லுதல் - அச்சுநூல் 2 எதிரேயும் பத்திரப்பத்தாமல் - அச்சுநூல் 3. போகிறதினாலே

867. கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை

என்பது

ஒரு காரியத்தைச் செய்ய உத்தேசிச்சு[1] இருந்து அதற்கேலா தைதை[2]ச் செய்கிறவன் பகையைச் சில பொருளைக் கொடுத்தா கிலுங் கொள்ள வேணு மென்றவாறு.

ஏலாத[3] காரிய மாவது, எளியவனான போது வலுமை பண்ணுகிறதும், வலுமையுடையவனான போது பயப்பட்டு அடங்கியிருக்கிறதுமாம். எ

868. குணமிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனா மேமாப் புடைத்து

என்பது

ஒருவன் குணமொன்று மில்லாதவனாய்க் குற்றம் வெகுவா யுடையவனாயின் அவன் பகைவர்க்குத் துணையாவா னென்ற வாறு. குணமாவது, ராசநீதி; படையரண் முதலியன. குற்ற மாவது, ஆவதும் ஆகாததும் அறியாமற் செய்கிறதாம்[4] அ

869. செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்

என்பது

அறிவில்லாதவனுமாய்ப் பயப்படுகிறவனுமாய் இருக்கிற பகை வரை உடையவர்களுக்கு எந்நாளும் நீங்காத வின்ப முண்டா மென்றவாறு.

அறிவில்லாதவனும் பயப்படுகிறவனுமாயிருக்கிறவனை எளி தாய் வெல்லலாம்; ஆனபடியினாலே எல்லா வின்பங்களும் ஒருக்காலே[5] வந்தடையும்; அதனாலே மறுமைக்குஞ் சுக முண்டாமென்பதாம். சூ

---

1 உத்தேசித்து 2. கோரத்தை; 3. யேறாத என்பன காகிதச் சுவடி
4. குற்றம்- அன்பின்மை முதலியன-அச்சுநூல் 5. ஒருகாலே

870. கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்றும்
ஒல்லானை யொல்லா தொளி
என்பது

நூலைக் கல்லாதவனுடனே பகை பண்ணிக் கொள்ளு கிறத்தினாலே[1] வரப்பட்ட கொஞ்சமான பொருளைக் கைக் கொள்ளாதவனை யென்றும் கீர்த்தி[2] யடையா தென்றவாறு.

நீதியறியாதவனை வெல்கிறது எளிதாயிருக்கவும் அது செய்ய மாட்டாதவனைப் புகழ் சேராதென்பதாம். ம்

ஆக அதிகாரம் அ௰எக்குக்குறள் அளஎய

இப்பால் 88. பகைத்திறந்தெரிதல்

என்பது. விடாத பகையை உண்டாக்கிறத்தினாலே[3] வருகிற குற்றமும், முன்னுண்டாயிருந்த பகையைப் புறம்பாக் கிறதும்,[4] அதனாலே செய்கிறதும் தவிர்கிறதும், அதனை விடுகிறகாலமும் அந்தப் பகையை விடாவிட்டால் வருகிற குற்றமும் இது முதலாயினதுகளை[5] ஆராய்த லென்பதாம்.

871. பகையென்னும் பண்பி லதனை யொருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று
என்பது

பகையென்று சொல்லப்படுகின்ற பொல்லாங்கை ஒருவன் விளையாட்டுக் காகிலும் செய்கிறது நல்லதல்ல வென்றவாறு. பகையென்று நினைத்தா லதுவே மனதிலேயிருந்து பொல்லாங் காய்த் தோன்றி விளையாட்டாகச் செய்யப் போனாலும் மெய்யா மென்பதாம். க

1. கொள்ளுகிறதனாலே 2. அபகீர்த்தி என்பது காகிதச் சுவடி 3. 3. உண்டாக்குகிறதினாலே 4. புறம்பாக்குகிறதும்; நட்பாக்குகிறதும்-அச்சு நூல் 5 இத்தியங்களை - அச்சுநூல்

872. வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை

என்பது

ஒருவன் வில்லை யுடையவர்களாகிய ஆயுதங்களைப் பிடித் திருக்கிறவர்களுடனே பகை பண்ணிக் கொண்டாலும், சொல்லை யுடைய வித்துவான்களுடனே பகை கொள்ள வேண்டா மென்றவாறு

ஆயுதங்களைப் பிடித்தவர்களுடனே பகையானால், தனக்கு மாத்திரம் கேடுவரும்; சொல்வல்ல வித்துவான்கள் முதலான வர்களுடனே பகையானால், தன் வங்கிசத்தாருக்குங் கேடு வருகிறது தப்பா தென்பதாம். உ

873. ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்

என்பது

தான் தனியனாயிருந்து பலருடனேயும் பகை பண்ணிக் கொள்ளுகிறவன், பயித்தியக் காரனிலும் அறிவில்லாதவன் என்றவாறு.

தனியனாவது, சுற்றத்தார் சினேகிதர் படை அரண் முதலானதும் இல்லாதது [1] பயித்தியக்காரனுக்குக் கேடுவராது; அறிவில்லாதவனுக்குக் கேடுவரும்; பலரோடும் பகை கொண்டால் மிகவும் கேடுவருமென்பதாம். ங

874. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமை[2]க்கட் டங்கிற் றுலகு

என்பது

பகைவரை யெந்த விதத்தினாலேயும் தனக்குறவாகப் பண்ணிக் கொள்ளவல்ல ராசாவினுடைய குடையின் கீழே தங்கியிருக்கும் உலக மென்றவாறு.

1. முதலியவை இன்மை - அச்சுநூல் 2. தகமை என்பது காகிதச் சுவடி

பகைவரை யுறவாக்கிக் கொள்ள வல்லவனுக்கு எல்லாம் சிநேகமாம்[1] என்பது. சு

875. தன்றுணை யின்றாற் பகை யிரண்டால் தானொருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னொன்று
என்பது

தான் தனியனாய்த் துணையில்லாம லிருக்கையிலே, பகைவரிரண்டு பேரானால், அதிலே[2] தனக்குச் சரிப்போனவ னொருவனையுறவு பண்ணிக் கொண்டு மற்றொருவனைச் செயிக்க வேணு மென்றவாறு.

இருவரும் பகையானால் வெல்லப்போகா தென்பது.

876. தேறினுந் தேறா விடினு மழிவின்கட்
டேறான் பகாஅன் விடல்
என்பது

பகைவரை முன்னே தெளிந்தானாகிலும் தெளியா விட்டாலும், தனக்கு வேறே யொரு காரியத்தினாலே தாழ்வு வருகிறதானால், அப்பொழுது அந்தப் பகைவரைக் கூட்டிக் கொள்ளாமலும் விட்டுவிடாமலும் மத்தியத்திலே[3] நிறுத்தி வைக்க வேணு மென்றவாறு.

முன்னே தெளிந்தாலு மிப்பொழுது உளவாயிருந்து கெடுப்பர்கள்; தெளியாவிட்டாலும் இப்பொழுது விட்டு விட்டால் பகைவர்க்குத் துணையா யிருந்து கெடுப்பார்கள்; ஆனபடியினாலே பிறத்தியாக நிறுத்த வேணுமென்பதாம். சு

877. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து
என்பது

---

1. எல்லாரும் சிநேகமாவர் - அச்சு 2. அப்பகையிரண்டனுள் அச்சு நூல் 3. நொதுமலாக என்க

தன்னிட[1] குறையைத் தாங்களே யறியாத சினேகிதருக்குத் தன் குறையைச் சொல்ல வேண்டாம்; வலுமையில்லாமை பார்த்திருக்கிற பகைவர் முன்னே தன் வலுமை[2] யில்லாமையை வெளிப்படுத்தாமல் அடக்கிக் கொண்டு பலவானென்ன எண்பிச்சுக்[3] கொண்டு இருக்கவேணு மென்றவாறு.

கூடப் பழகியிருக்கிறவர்கள் தன் குறையை யறிந்து தீராவிட்டால், சொன்னத்தினாலே[4] பிரயோசனமில்லை யென்றவாறு.
எ

878. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு
என்பது

தான் செய்கிற காரியத்தின் வகையையறிந்து அது முடிக்கிறத்துக்கு[5] ஏற்றதனை[6] அதிகமாக்கி மறப்பும் பாவமும் வாராமற் றன்னைக் காத்துக்[7] கொண்டால் பகைவரிடத்திலே யுண்டான சந்தோஷம் கெடுமென்றவாறு.

வகையறிதலாவது, *தான் வலவந்தனாய்த் தர்ம உயித்தம்[8] பண்ணுகிறதும், இளைத்தவர்களைக் கொல்லாமல் விடுகிறது மாம்*. அதிகம் ஆக்கிற[9]தாவது பொருள்படைகளை வெகுவாய்ச் சேர்த்துக்[10] கொள்ளுகிறதாம். பகைவர்*சந்தோஷம் கெடுகிறதாவது, இப்படிச் செய்தது இப்படிச் செய்வோமென்று நினைப்பதாம்.†
அ

879. இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து
என்பது

---

1. தன்னுடைய 2. வன்மை 3. எண்பித்து;மெச்சி - அச்சுநூல் 4. சொன்னதினாலே 5 முடிக்கிறதற்கு. 6. ஏற்பத்தன்னை - அச்சுநூல் 7. காற்றுக் என்பது காகிதச் சுவடி. 8. உயித்தம் - போர். * முதல் * வரை : வலியனாய்த்தான் போர் செய்யும்விதமும் மெலியனாய அளவில் போரை ஒழியும் விதமும் 9. ஆகிற 10. சேற்றுக் என்பது காகிதச் சுவடி. *முதல் *வரை; சந்தோஷப்படுகிறதாவது, இவற்றால் வெல்வோம் என்று எண்ணி மகிழ்ந்திருத்தல்

பிடுங்கிப் போட வேண்டின முள்ளுமரத்தைச் சிறியதாயிருக்கையிலேதானே வாங்கிப் போட வேணும்; பெரியதாய்முற்றின பிறகு வாங்கிப்போடப் போனால் அது அவன் கைகளைக் கெடுத்துப் போடும் என்றவாறு

அப்படிப்போலே. களையவேண்டிய பகைவரைக் கொஞ்சமாயிருக்கிற போதே செயித்துவிடவேணும்; அப்படியல்லாமல் பகைவர் பலவந்தரானபிறகு செயிக்கப் போனால் தன்னையே கொல்லுவார்களென்பதாம். சா

880. உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்ப வர்
செம்மல் சிதைக்கலா தார்

என்பது

தன்னுடனே பகை பண்ணிக் கொள்ளுகிறவர் பெலத்தைக் கெடுக்கத்தக்க சத்துவம்[1] உண்டாயிருந்தும், அது அத்தனை இல்லை என்று இகழ்ந்து சும்மா யிருக்கிறவர்கள், தம்முயிரும் உண்டாகப் பெறாரென்றவாறு.

தன்னுயிருண்டாகாதது, பகைவர் பெலவான்களானாற் றன்னைக் கொல்வார்க ளென்பதாம். ம

அஅ அதிகாரம் அமஅக்குக்குறள் அளஅம

இப்பால் 89. உட்பகை

என்பது, மனதிலே பகையை வைத்துக் கொண்டு, தாங்கள் நினைத்த காரியம் முடியுமளவும் உறவு போலேயிருந்து, காரிய முடிந்தவுடனே பகைவரா யிருக்கிறதென்பதாம்.

881. நிழனீரு மின்னாத வின்னா தமர்நீரும்
இன்னாவா மின்னா செயின்

என்பது

ஒருவன் அனுபவிக்க வேண்டிய நிழலும் நீரும் முன்பு நன்றா யிருந்தாலும், பின்பு நோய் செய்தாற் பொல்லாதாம்; அது

1. சத்துவம் - வலிமை

போலச் சுற்றத்தாரானாலும் முன்பு நல்லவர்களாயிருந்து பின்பு பொல்லாங்கு செய்தால் அவர்கள் பகைவராமென்றவாறு. க

882. வாள்போல் பகைவரை யஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு

என்பது

வாளைப்போல் கொல்லுகுறோம்[1] என்று வெளியாயிருக்கிற பகைவர்களுக்குப் பயப்படவேண்டார்; சுற்றத்தார் போல் உறவாயிருக்கிற பகைவர்களுக்குப் பயப்படவேணு மென்றவாறு.

வெளியாய்ப் பகையாயிருக்கிறவர்களை யறிந்து எச்சரிக்கையாயிருந்து தப்பிவிச்சுக்[2] கொள்ளலாம். வெளியிலே உறவாயிருந்து மனதிலே பகையா யிருக்கிறவர்களை யறியப்படாமலுங் காற்கப்[3] போகாமலும் ஆனபடியினாலே அஞ்ச வேணு மென்பதாம். உ

883. உட்பகை யஞ்சித்தற் காக்க தொலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்

என்பது

உட்பகையாயிருக்கிறவர்களுக்குப் பயப்பட்டுத் தன்னைக் காத்துக் கொண்டிருக்க வேணும்; அப்படியிராவிட்டால் தனக்கோர் இடையூறு வந்தபோது குசவன் மண்ணை வெட்டுகிறாப் போலே[4] கெடுப்பார்களென்றவாறு.

காற்கிற[5]தாவது, உட்பகைவர் தன்னைச் சேராமலும், அவர்களுக்கு இடங் கொடாமலும் இருக்கிற தென்பதாம். ங

884. மனமாணா[6] வுட்பகை தோன்றி னினமாணா
ஏதம் பலவுந் தரும்.

என்பது

1. சொல்கிறோம் 2. தப்பித்துக் 3. காக்கப் 4. வெட்டுகிறாற் போலே; வெட்டுங்கருவிபோல அப்பகைவர் - அச்சுநூல் 5. காக்கிற 6. 'மானா' என்று மட்டும் காகிதச் சுவடி.

வெளியிலே உறவு போலே யிருந்து உள்ளேபகையாயிருக்கிற பகைவருண்டானால், அந்தப் பகைவர், உறவில்லாமலே[1] வெந கேடுகளைச் செய்வரென்றவாறு.

உள்ளுறவில்லாதவர்கள் காலம் பார்த்துக்[2] கொண்டிருந்து கெடுப்பரென்பதாம். ௪

885. உறன்முறையா னுட்பகை தோன்றின் இறன்முறையா
ளேதம் பலவுந் தரும்.

என்பது

புறத்தியிலே யுறவாய் உள்ளே பகைவைத்துக் கொண்டிருக்கிறவர்கள் ஒருவனுக் குண்டானால், அந்தப் பகைவர் அவனுக்குப் பிராண[3]பரியந்தம் வருகிற குற்றங்களைச் செய்வரென்றவாறு.

பிராண பரியந்தமாவது[4] உறவாயிருந்தே பகை தெரியாமல் நின்று[5] வஞ்சனைகளைச் செய்தலும் மந்திரிகள் முதலாயினாரைப் பிரித்தலுமாம். ௫

886 ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்ற லரிது

என்பது

பகை தனக்குள்ளானவர்களிடத்திலே பிறந்தால், அவன் சாகாமலிருக்கிறது அருமை யென்றவாறு.

பொருள் படைகளாற் பெரியவனானாலும் உட்பகையை வெல்லப் போகா தென்பதாம். ௬

887. செப்பின் புணர்ச்சிபோல் கூடினுங் கூடாதே
உட்பகை யுற்ற குடி

என்பது

செப்பை மூடினால் மேலே யொன்று போலேயிருந்து

---

1. சுற்றத்தார்வசமாகாமைக்கு துவாரப 2. பாத்து - காத்தெ வடி
3. பிராணஹானி-அச்சு நூல் 4. அக்குற்றங்கள், புறப்பணக்கு-அச்சுநூல்
5. ''இங்கு கொல்லுதல் முதலிய'' என்பவை அச்சு நூலில்

உள்ளே வேறாயிருக்கும்; அதுபோல் வெளியே உறவாய் உள்ளே பகையாய் இருக்கிறவர்கள்[1] கூடார்களென்றவாறு. ௭

888, அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி

என்பது

முன்னே வளர்ந்த குடியானலும் உட்பகை யுண்டானகுடி அரத்தாலே அராவப்பட்ட இரும்பு போலே தேய்ந்து போமென்றவாறு. ௮

889. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை யுள்ளதாங் கேடு

என்பது

எள்ளிலே பாதியத்தனை யுட் பகை யுண்டானாலும் பெருமை யெல்லா மழிந்து கெடுவர்க[2] ளென்றவாறு.

உட்பகை கொஞ்சமாயிருந்தாலும், தனக்கும் பக்குவம் வந்த போது பெரிதாய் வளர்ந்து, ஒருவன் பெருமை யெல்லாம் கெடுக்கு தென்பதாம். ௯

890. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று

என்பது

மனமொருமித்து உறவு செய்யாதவனுடனே கூடி வாழ்கிறது ஒரு வீட்டிலே பாம்புடனே கூடியிருக்கிறாப் போலே யாமென்றவாறு.

பாம்பும் மனுஷனும் ஒரு குடிசையிலே யிருந்தால் எப்போதாகிலும் கடித்துக் கொல்லு[3] மென்பதாம்.

ஆக அதிகாரம் ௮௰௯க்குக் குறள் ௮௱௯௰

1. இங்கு ''மனத்தில் தம்முள்'' என்பவை அச்சு நூல் 2. அழிபவருங் கேடு அச்சிறிய உட்பகையினிடத்ததாம்-அச்சுநூல் 3. கொல்லுதல் உறுதி-அச்சுநூல்

இப்பால் 90. பெரியாரைப் பிழையாமை

என்பது. சாத்திரத்தினாலேயும் ஆசாரத்தினாலேயும் தவசினாலேயும் பெரியோர்களானவர்களையும், அயிசுவரிய பெலங்களாலே பெரியவர்களானவர்களையும், இகழ்ந்து பேசாமலிருக்கவேணும்; இகழ்ந்து பேசினால் சீக்கிரத்திலே கெடுவரென்பதாம்.

891. ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை

என்பது

தாங்க ளெடுத்த காரியமெல்லாம் முடிக்க வல்லர்களை அவமானம்பசாம[1]லிருக்கிறதே, தனக்குத் தீங்கு வாராமல் காக்கிற[2] காவலிலே யெல்லாம் அதிகமான காவலென்றவாறு

நினைத்த கருமங்கள் முடிக்கவல்லவர்களை யிகழ்ந்தவனுக்கு அப்பொழுதே கேடுவரு மென்பதாம். க

892. பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும்

என்பது

சாத்திரம் நீதி தவசுகளாலே பெரியோர்களானவர்களை இகழ்ச்சி[3] செய்தா லந்த இகழ்ச்சி[3] பெரியவர்களாலே அவனுக்கு எந்நாளும் நீங்காத துக்கத்தைக்[4] கொடுக்கும் என்றவாறு.

நீங்காத துக்கமாவது, இம்மையிலே தீராமல் மறுமையிலேயும் அனுபவிக்கிற நகர துக்கங்களாம். உ

893. கெடல்வேண்டிற் கேளாது செய்க[5] அடல் வேண்டின்
ஆற்று பவர்க ணிழுக்கு

என்பது

1. அவமதியாமல் - அச்சுநூல் 2. காற்கிற என்பது காகிதச்சுவடி;
3. இகட்சி என்பது காகிதச்சுவடி. 4. துன்ப - அச்சுநூல். 5. செய்து
6. விடல் - காகிதச்சுவடி.

ஒருவன் தனக்குக் கேடுவேண்டினால், மறுமண்டலத்து ராசாக்களுடனே சண்டை பண்ணிக் கொள்ளவேணும்; துக்கம் வேண்டினால் பெரியவர்களுக்குப் பொல்லாங்கு செய்க[1] என்றவாறு.

அந்தப் பெரியோர்களுக்கு யமனும்பயப்பட்டுக் காலம் பார்த்திருப்ப னென்பது. ௩

894. கூற்றத்தைக் கையால் விளித்தற்று லாற்றுவார்க்
காற்றாதார் இன்னா செயல்

என்பது

மூவகையாற்றல்[2] உடைய பெரியவர்களுக்குப் பெரியதனம்[3] இல்லாத சிறியவர்கள் பொல்லாத காரியங்களைச் செய்கிறது,[4] தானே[5] கூற்றுவனைக் கைகாட்டி யழைக்கிறதுக்குச் சரி யென்றவாறு.

வலுமை யுடையவர்கள் எளியாரை நியம் போட்டு[6] உபத்திரவம் பண்ணுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்குப் பொல்லாங்கு செய்தால் கொப்பெனக் கெடுவரென்பதாம். ௪

895. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்

என்பது

பகைவற்கு வெய்ய[7] பெலமுடைய ராசாவினாலே கோபிக்கப்பட்டவர்கள் தப்பிப்போய் எங்கேயும் பிழைக்க மாட்டார்க ளென்றவாறு.

அரசனுக்குப் பகையானவனை வைத்துக் காக்கத்[8] தக்கவர்கள் ஒருத்தருமில்லை யென்பதாம்.

---

1. செய்ய-காகிதச் சுவடி. 2, அறிவு ஆண்மை பெருமை (குறள் 466 பரிமேலழகருரை) 3. பெருந்தன்மை; அவை-அச்சுநூல். 4. தாம் முற்பட்டுத் தீமைகளைச் செய்தல் -அச்சுநூல் 5. தானேவருகிற 6. நியம்போட்டு (?) 7. வல்தாய்; 8. கார்க்க -காகிதச்சுவடி

896. எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்

என்பது

காட்டுக்குள்ளே போனவன் ஒருவன் காடு பத்திக்[1] கொண்டு சுடப்[2]பட்டாலும் ஒருவகையாலே தப்பிப் பிழைக்கலாம்; தவசினாலே பெரியவர்களுக்குக் கோபம் வரத்தக்கதாக நடந்தவர்கள், எந்த விதத்தினாலேயும் பிழைக்க மாட்டார்கள் என்றவாறு.

தீச்சுட்டால் மருந்துகளினாலே யாற்றலாம்; பெரியோர்கள் கோபிச்சு[3]க் கொண்டால் அதை யொருவராலும் மாற்றப்[4] போகாது; அந்தக் கோபத்தினாலே பொல்லாங்கு வரச் செய்தவன் கெடுவனென்பதாய். சா

897. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்றாம்
தகைமாண்ட தக்கார் செறின்

என்பது

சாபானுக்கிரக சமர்த்தராகிய தபசிகள் ராசாவைக் கோபிச்ச[5] காலத்தில்[6] ராசாவினுடைய வுறுப்பும் அவன் ராச்சியமும் அவன் தேடிவைத்த பெரும் பொருளும் என்ன பிரயோசனமாம்; ஒரு பிரயோசனமும் ஆகாமல் விருதாவாய்க் கெட்டுப்போ மென்றவாறு.

உறுப்பாவது, நாடு அரண் படை அமைச்சர் முதலானவை, அரசன் அயிசுவரிய கெருவத்தினாலே அருந்தவர் மாட்டுப் பிழை செய்தால், அவர்கள் கோபத்தினாலே அரசன் செல்வமெல்லாம் வெந்து விடுமென்பதாம். ம

898. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து

என்பது

1. பற்றிக் 2. அடப்-அச்சுநூல் 3. சோபித்து 4. ஆற்றப்-அச்சுநூல்
5. சோபித்த 6. கோபித்தால்-அச்சுநூல்

மலைக்குச் சமானமான அருந்தவர், ஒருவன் செய்த குற்றத்தினாலே, அவனைக் கெட நினைத்தாராகில்,* நிலையா யிருக்கப்பட்ட செல்வங்களும் அவனுங் கூடக் கெடுவரென்றவாறு.*

வெய்யிலும் மழையுங் காற்றும் பொறுத்து மலை போலே சரியாமல் நிற்கப்பட்ட அருந்தவர் கோபித்தால்[1] வெகு பொருளைத் தேடி வைத்துக் கொண்டு நமக்கழிவில்லை யென்கிறவர்களும் கொப்பெனக் கெடுவர்களென்பதாம். அ

899. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வெந்து[2] கெடும்

என்பது

காக்கிறத்துக்கு[3] அரிதாகிய பெரிய விரதங்களுடையார் கோபிச்சால்[4] அவர்கள் பெருமையினாலே இந்திரனானாலும் தன் பதி[5] யிழந்து கெட்டுப் போவார்களென்றவாறு. மகா விரதம் உடையவர்கள் கோபிச்சால்[6] எப்படிப்பட்ட செல்வரு மழிந்து போவரென்பதாம். †ஈ

900. இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்

என்பது

நல்ல தவசையும் பொறுமையையு முடைய அருந்தவர் கோபித்தால் மாளவரப்பட்ட செல்வங்களை[7] யுடையவர்களானாலும் தப்பிப்பிழைக்க மாட்டார்கள் என்றவாறு.

* மாள வரப்பட்ட செல்வமாவது, வெள்ளாண்மை வியாபாரங்களால் வரப்பட்ட செல்வம் நல்ல வழியே வந்த

---

* முதல் * வரை: நிலைபெற்றாத் போலுஞ் செல்வர் தம் குடியோடும் மாய்வர் - அச்சு நூல் 1, கோபிற்றால் என்பது காகிதச் சுவடி. 2. வேந்து என்பது சரியான பாடம் 3. காக்கிறதற்கு 4. கோபித்தால் 5. பதவி. 6. கோபித்தால் 7. மிகப் பெரியசார்பினை - அச்சு நூல் † முதல் † வரை சார்பு- அரண் படை பொருள் நட்பு என்பவை சீர்-தவம்-அச்சுநூல் பரிமேலழகருரை

செல்வமுடையவர்களானாலும் அருந்தவர் கோபித்தாற் கடிதிற் கெடுவரென்பதாம்* ம

ஆக அதிகாரம் கூய க்குக்குறள் கூளா

இப்பால் 91 பெண்வழிச் சேறல்

என்பது, தன்வழியே நடக்கிற[1] பெண்சாதி வழியே தானும் நடக்கிறதாம்.

901. மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது

என்பது

இன்பத்தை வேண்டித் தன் பெண் சாதியை விரும்பி அவள் சொன்னபடியே கேட்டு நடக்கிறவன், தனக்குத் துணையான தர்மத்தினைச் செய்ய மாட்டான்; உத்தியோகங்களைச் செய்து பொருளைத் தேடினவர்களும் * அந்தப் பொருளைக் கெடுத்து அந்தப் பெண் வழி யின்பத்தையே விரும்புவார்க* ளென்றவாறு

பெண்ணாசையை விரும்பினவர்களுக்கு அறமும் பொருளுஞ் சேரா தென்பது க

902. பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்

என்பது

தன் னாண்மையை விட்டு மனையாளது பெண்மையை விரும்பினவனுடைய பெரிய செல்வம், உலகத்திலே யுண்டான ஆண் பிள்ளைகளுக்கெல்லாம் நாண முண்டாகத் தக்கதாக, அவனுக்கு நாணத்தைக் கொடுக்கு மென்றவாறு.

பெண்வழியே நடக்கிறவன் தன் செல்வத்தைக் கொடுக்கவும் அனுபவிக்கவும் தனக்குச் சுதந்திர மில்லாத படியினாலே. அந்தச் செல்வத்தைக் கொடுக்கிறதும் அனுபவிக்கிறதும்[2] அவளான படியினாலே, ஆண் பிள்ளைகளுக் கெல்லாம் நாணமா

1. நடத்தற்குரிய - அச்சு நூல் * முதல் * வரை அதற்கிடையூறென்று இகழும் பொருளும் அவ்வின்பமே - அச்சு நூல் 2. இச் சொல அச்சு நூலி லில்லை.

மென்பது

903. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்
என்பது

ஒருவன் தன் *பெண் சாதிக்குப் பயப்பட்டுவணங்கி நடக்கிறவன்*, அப்படி நடவாமல் நல்லவர்களாய பெரியவர்களிருக்கிற சபையிலே போனால், அவனுக்கு எந்நாளும் நாணமுண்டா[1] மென்றவாறு.

பெண்சாதிக்கு அஞ்சி நடக்கிறவனை யாரும் எண்ணார்கள்; அதனாலே யெல்லாக்குற்றமும் விளையுமென்பது. ௩

904. மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.
என்பது

தன் பெண் சாதிக்குப் பயப்பட்டு நடக்கிறவனுக்குமறுமைப் பயனில்லை; அவனுடைய ஆண்மை சவுரியம் நல்லவர்களாலே கொண்டாடப்படா என்றவாறு.

இல்லறம் செய்கிறத்துக்கு[2]த் தான் கர்த்தனல்லாத படியினாலே மறுமைப் பயனில்லை யென்பது. சூரியம் வல்லவனானாலும். மனையாளுக்கு அஞ்சுகிறத்தினாலே[3] இகழ்வார்கள்[4] என்பது ௪

905. இல்லாளை யஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்
என்பது

தன் மனையாளுக்குப் பயப்படுகிறவன், தான் தேடினபொருளேயானாலும், நல்லவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்கிறத்துக்கு[5] எந்நாளும் அஞ்சுவான் என்றவாறு.

நல்லாராகிறவர்கள்; தேவர்கள், அருந்தவர்கள், பெரியோர்கள்.

*முதல் *வரை: பெண் சாதியிடத்துத் தாழ்தற்கு ஏதுவாகிய அச்சம்-அச்சுநூல் 1. நாணுதலைக்கொடுக்கும் - அச்சுநூல் 2. செய்கிறதற்கு 3. அஞ்சுகிறதனாலே 4. இவ்விறுதி வாக்கியம் அச்சு நூலிலில்லை. 5. செய்தலை

தகப்பன், குருக்கள், நல்லவுறவின் முறையார் முதலாயி னார். நல்ல காரியங்கள் செய்தலாவது; இவர்கள் வேண்டியது கொடுத்தலாம். ரு

906. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லாள்
அமையார்தோ ளஞ்சு பவர்

என்பது

தன்னுடைய பெண்சாதி தோளுக்குப் பயப் படுகிறவன்[1], வீரத்துவ முண்டாகிய தேவர்களைப் போல் இந்தலோகத்திலே வாழ்ந்தாலும், அவனுக்கு ஆண்மையில்லை யென்றவாறு.

பகைவரை வென்றாலும் தன் பெண் சாதிக்குப் பயப்படு கிறவனுக்கு ஆண்மையில்லை என்பதாம்,

907. பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து

என்பது

நாணமில்லாமற் றன் பெண்சாதி சொன்ன வேலையைச் செய்துகொண்டு திரிகிறவன்[2] ஆண்மையினும். நாணமுடைத் தாயிருக்கிற பெண்மையே பெருமையுடையதாமென்றவாறு.

ஆண்பிள்ளையைத் தன் சொற்படிக்கு நடக்கப் பண்ணுகிற படியினாலே பெண்மையே பெரியதென்பதாம். ௬

908. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.

என்பது

'தாம் நினைத்தபடி யல்லாமல் தம் பெண்சாதி சொற்படிக்கு நடக்கிறவர்கள், தம்மொடு சினேகம் பண்ணினவரது குறையை முடிக்க மாட்டார்; அதல்லாமல் மறுமைக்கு உறுதியான தர்மங்களையுஞ் செய்து கொள்ள மாட்டார்களென்றவாறு.

1. படுகுறவனை என்பது காகிதச்சுவடி 2 திரிகுறவன் என்று சுவடியி லுள்ளது

பெண்சாதி சொற்படி நடக்கிறவர்கள் இம்மை மறுமைக்கு வேண்டுவன செய்யமாட்டா ரென்பதாம் . அ

909. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்

என்பது

தர்மம் செய்கிறதும், அந்தத் தர்மம் செய்து முடிக்கிறத்துக்கு வேண்டிய பொருள்கள் தேடுகிறதும், இது இரண்டிலும் புறத்தியான[2] இன்பஞ் செய்கிறதும் தன் மனையாளேவல் செய்கிற[1] வனுக் குண்டாகா வென்றவாறு.

பெண் சாதி சொன்னபடி செய்கிறவனுக்குத் தான் வேண்டியபடி செய்யக்கூடா தென்பதாம். சு

910. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்

என்பது

காரியத்தை நன்றாய் விசாரித்துச் செய்கிற ஆலோசனையையும், அதனாலே வரப்பட்ட செல்வத்தையு முடையவர்களுக்குத் தன் மனையாளைச் சேருகிறத்தினாலே[3] எக்காலத்தும் உண்டாகா தென்றவாறு,

மனையாளைச் சேர்ந்த வழியும் காரியா காரியங்களை யறிகிற ஆலோசனையை விடாம லிருக்க வேணு மென்பதாம். ய

ஆக அதிகாரம் கூய கக்குக் குறள் கூளய

இப்பால் 92. வரைவின் மகளிர்[4] .

என்பது, தன்னுடைய போகத்தை விலை கொடுப்பார் யாவர்க்கும் ஏற்கக் கொடுக்கிற தல்லாமல், இவர்கள் நல்லவர்கள்

1. முடிக்கிறதற்கு 2. வேறாய 3, சேருகிறதினாலே விளையும் பேதைமை-அச்சு நூல் 4. மகளீர் என்றே இச் சொல் காகிதச் சுவடியிலுள்ளது..

பொல்லாதவர்கள் என்று எண்ணாமல்[1] பணமே காரணமாக வாஞ்சிக்கிற பரஸ்ரீகள்[2] குணங்களைச் சொல்லுகிறதென்பதாம்.

911. அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும்

என்பது

ஒருவன் மேலே தயையா (னா) சைப்படாமல் பொருளையே காரணமாக வாஞ்சிக்கிற பரஸ்ரீகள் அவன் பொருள் தங்கள் கையிலே யகப்படும் அளவும் அவன்மேலே விசுவாசம் போலே யிருந்து சொல்லுகிற வார்த்தை, பிறகு அவனுக்குப் பொல்லாங்கு தரு மென்றவாறு.

பரஸ்ரீகள் முதலிலமிர்தம் போலே யிருந்து கைப்பொருள் மாண்ட பிறகு விஷம் போலே யாவார்கள் என்றவாறு. க

912. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்

என்பது

ஒருவன் கைப்பொருளை யறிந்து[3] அந்தப் பொருள் தமக்கு வந்தெய்து மளவும் அவனுக்கு நண்மை சொல்லப்பட்ட[4] பரஸ்ரீகள் செய்கைகளை யாராய்ந்தறிந்து அவர்களைச் சேராமல் விட வேணு மென்றவாறு. உ

913. பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று

என்பது

கொடுப்பாரை விரும்பாமற் பொருளையே விரும்புகிற பொது மகளிருடைய இணக்கம், இருளாயிருக்கிற வீட்டிலே திக்கற்றுக்[5] கிடக்கிற பிணத்தைக் கூலிக்கு எடுக்கிற தோடொக்கும் என்றவாறு.

---

1 என்ற வரம்பில்லாமல் - அச்சுநூல் 2. மகளிரின் - அச்சுநூல் 3. அளந்தறிந்து 4. சொல்லும் 5. திக்கெற்றுங்;

பிணம் எடுக்கிறவன்[1] மனதிலேயே அருவருப்பாயிருந்துங் கூலிக் காக எடுக்கிறாற்போலே[2], பரஸ்ரீகள் காதியும் செயலும்* கண்டு அருவருப்பா யிருந்தும் இளமையும் அழகும் பார்த்து[3] அவர்களை விரும்புவார் இணங்கா தொழிக* வென்பதாம். ௩

914. பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
ஆயு மறிவி னவர்

என்பது

தனக்கின்ப மானவர்களை யிகழ்ந்து பொருள் கொடுப்பாரையே விரும்பப்பட்ட பரஸ்ரீகளுடைய புல்லிய நலத்தைத் தயையொடு கூடிய பொருளை யாராய்ந்து சொல்லும்[4] அறிவினை யுடையார் தீண்டார் என்றவாறு. ௪

915. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர்

என்பது

பொருள் கொடுக்கிறவர்களுக்கெல்லாம் பொதுவான ஆசையினையுடைய பரஸ்ரீகளது கொஞ்சமான[5] போகத்தை மதி நன்மையினாலே நல்ல வறிவை யுடையவர்கள் தீண்டா ரென்றவாறு.

மதி நலமாவது, முன் செய்த புண்ணியத்தினாலே வருகிற அறிவாம்; இது போலே கல்வி முதலான வற்றினாலே வருகிற அறிவு பயன்படா தென்பதாம். ௫

916. தந்நலம்[6] பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்

என்பது

ஆடல் பாடலழகுகளினாலே சந்தோஷித்துத் தங்களுடைய

1. எடுக்குறவன்; 2. எடுக்குறாப்போலே 3. பாத்தும் - காகிதச் சுவடி. *முதல் *வரை: கண்டு அகத்தால் அருவருப்பார யிருந்தும் பொருளுக் காகப் புறத்தால் தழுவுவர்: அதனையொழிக - அச்சுநூல். 4. செய்யும் 5. புல்லிய-அச்சுநூல். 6. தன்னலம் என்பது காகிதச் சுவடி

புல்லிய போகத்தைப் பொருள் கொடுப்பார்க் கெல்லாம் விரிக்கப் பட்ட[1] பரஸ்ரீகள் தோளை, அறிவொழுக்கங்களால் ஆன தம் புகழை உலகத்திலே பரப்ப வேண்டினவர்கள், தீண்டா ரென்ற வாறு.

பரஸ்ரீகளுக்கு ஆடல் பாடல் முதலானவை யழகென்பதாம். சு

917. நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்

என்பது

நெஞ்சிலே பிறிதொன்றை யாசைப்பட்டு அது காரணமாகக் கொடுப்பாரை யுடம்பாற் புணரும் பரஸ்ரீகள் தோளை நிறைந்த மதியுடைய நெஞ்சமில்லாதவர்கள் சேர்வ ரென்றவாறு.

பொருள்காரணம் அல்லாமல்[2] புணர்ச்சிகாரணமில்லாதவர்கள் என்று அறிந்து, அறிவுடையார் சேரார்; அறிவில்லாதவர் சேர்வரென்றவாறு. எ

918. ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு

என்பது

வடிவு சொற் செயல்களால் வாஞ்சிக்க வல்லவர்களான பரஸ்ரீகள் முயக்கம், அந்த வஞ்சனைகளை ஆராய்ந்தறிய மாட்டாதவர்களுக்குப் பெண்மை[3]யென்று சொல்லுவர்கள் நூலோ ரென்றவாறு.

அறிவில்லாதவர்களுக்குப் பரஸ்ரீகள், முன்பு நல்லவர்போலே யிருந்து, பின்பு பிராணனையும் கொள்ளுவர் என்பதாம். அ

919. வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு

என்பது

1. பரப்பும் - அச்சுநூல் 2. இல்லாமல் என்பது காகிதச் சுவடி
3. உயிர்கொள்ளும் பெண்மைஎன்றிருத்தல் தகும்: அணங்குதாக்கு - அச்சுநூல்

உயர்ந்தோரிழிந்தோர்களென்றெண்ணமல் பொருள் கொடுப்பாரையெல்லாம் புணரப்பட்ட பரஸ்ரீகளின் தோள்கள், குற்றத்தை அறியமாட்டாத கீழ்மக்கள் புகுந்து அழுந்தப்பட்ட[1] நரகமாம், பரஸ்ரீகளைச் சேருகிற தென்றவாறு. ௲

920. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு

என்பது

பரபுருஷன்மேலே மனதாயிருக்கிற பெண் சாதியுங் கள்ளுக் குடிக்கிறதுஞ், சூதமாடுகிறதும் இந்த மூன்றும் திருமகளாலே துறக்கப்பட்டவர்களுக்குச் சினேக மென்றவாறு.

பரஸ்ரீகளைச் சேருகிறவர்களிடத்திலேயும் சூத[2]மாடுகிறவர்களிடத்திலேயும் கள்ளுக்குடிக்கிறவர்களிடத்திலேயும் லட்சுமியிரா ளென்பதாம். ய

ஆக அதிகாரம் ௯௰௨க்குக் குறள் ௯௱௨௰

இப்பால் 93. கள்ளுண்ணாமை

என்பது, ஆசாரமும் அறிவும் கெடுக்கிறத்துக்கு[3]க்காரணமான கள்ளைக் குடியாமலிருக்க வேணும். அந்தக்கள்ளைக் குடித்தால் அறிவுமாசாரமு மிழப்ப ரென்பதாம்[4]

921. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்

என்பது

கள்ளைக் குடிக்க வேணுமென்று வாஞ்சையா யிருக்கிறவர்கள் தமக்கு வருகிற நன்மை துன்மைகளை[5] யறியமாட்டார்கள்: முன்னுண்டான செல்வத்தையும்[6] பிரகாசத்தையுமிழப்ப ரென்பதாம்.

1. அழுந்தும 2. சூது 3. கெடுக்கிறதற்கு. 4. இறுதிவாக்கியம் அச்சுநூலில் இல்லை 5, தின்மை என்பது பெரு வழக்கு (தீமை) 6. இதற்குக் குறளில் செய்யுஇல்லை

922. உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்

என்பது

அறிவுடைய ரானவர்கள் கள்ளினை யுண்ணாமலிருக்க வேணும்; அந்தக் கள்ளைக் குடித்தாற் பெரியோர்களெல்லாம் கள்ளுண்டவனை யிகழ்வார்கள்; கள்ளுண்பவர் அறிவும் ஆசாரமு மிழப்பரென்றவாறு. உ

923. ஈன்றாள் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி

என்பது

என்ன செய்தாலுங் கண்டு சந்தோஷப் படுகிற தாய் முன்னே ஆனாலுங் கள்ளுண்டு களிக்கிறது[1] பொல்லாதாயிருக்கும்; ஒரு குற்றமும் பொறாத பெரியோர்கள் முன்னே கள்ளுண்டு களிக்கிறது என்னமாயிருக்கு[2] மென்றவாறு.

கள்ளுண்டால் அறிவும் நாணமும் இழந்துவிடும்: அது கண்டால் தாய் ஆனவளுக்கும் பொல்லாதாயிருக்கும்; தாய்க்கும் பொல்லாதானால் உலகத்தாருக்கும் பொல்லாதாகிறது சொல்லவேண்டாமென்றவாறு. ௩

924. நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு

என்பது

கள்ளென்கிறது எல்லார்க்குங் குற்றமாயிருக்கும்; இந்தக் கள்ளைக் குடிக்கிற[3]வர்களுக்கு நாணமென்று சொல்லப்படுகிற ஸ்ரீயெதிரேநில்லாமல் வெட்கி யப்பாலே போவாள் என்றவாறு

கள்ளைக்குடிக்கிறவர்களுக்கு நாணமும் அபிமானமுங் கெட்டுப் போ மென்ற வாறு.

---

1. களிக்குறது என்பது காகிதச்சுவடி 2. அவருக்கு யாதாயிருக்கும்-அச்சு நூல் 3. குடிக்குற; 4. படுகுற-காகிதச்சுவடி

925. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்
என்பது

பொருளைக் கொடுத்துத் தன்னுடம்பை* மறப்பிக்கத் தக்க கள்ளைக் கொண்டு குடிக்கிறவர்கள்* முன் செய்த தீவினை யாலே† செய்கிற தறியாமல் கள்ளைக் குடித்துக் கெட்டுப் போவார்கள் என்றவாறு.

அறிவுடையார் கள்ளைக் குடியார்; அறிவில்லாதவர்கள் கள்ளுக் குடிப்ப ரென்ற வாறு. ரு

926. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்
என்பது

தூங்(கு)கிறவனும் செத்தவனும் கள்ளுக்குடித்தவனும் நஞ்சு தின்றவனும் இந்த நாலு பேரும் சரி யென்னலாம்[1]; சரியானாலும் தூங்(கு)கிறவனை யெழுப்பினால் எழுந்திருப்பான்; செத்தவன் சுவாச மில்லாமற் சும்மா[2] கிடப்பான்; விஷந்தின்றவன் மணி மந்திர அவுடதங்களினாலே[3] பிழைப்பான்; கள்ளுக்குடித்தவன் இவர்களைப் போலே சும்மா இராமல் நல்லோர்கள் பெரியோர்கள் முதலான பேரை உபத்திரவப் பண்ணுவான்; ஆன படியினாலே சரியல்ல வென்பதாம். சா

927. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்
என்பது

ஒருவரு மறியாமல் மறைந்திருந்து கள்ளைக் குடித்தாலும் பிறகு அந்தக் கள்ளினாலே அறிவு மயங்கினது கண்டு, இவன் கள்ளுக் குடித்தா னென்று உள்ளூரா ரெல்லாருஞ் சிரிப்பார்க ளென்ற வாறு. எ

---

* முதல் * வரை: மறப்பதனைக் கொள்ளுதல் - அச்சுநூல் † முதல் † வரை செய்கிறதறியாமையைத் தனக்குக் காரணமாக வுடைத்து - அச்சுநூல்.

1. என்னலாம்; 2. சும்மாய்; 3. அமிழ்தங்களினாலே - காகிதச்சுவடி

928. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉ மாங்கே மிகும்

என்பது

மறைந்து நின்று கள்ளைக் குடித்து நான் கள்ளுக் குடிக்கிற தில்லை யென்று சொல்லித் தன்னுடைய ஆசார வொழுக்கங் களைச் சொல்லுகிறத்தை[1] விட்டுவிடும்; அது பிறகு எல்லாரு மறிந்து வெகு குற்றங்களாக, அவனை யிகழ்வார்களென்றவாறு.
அ

929. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

என்பது

கள்ளுக் குடித்தவனைக் கள்ளுக் குடியாதவன் கள்ளுக்குடிக் கிறது ஆகாதென்று திட்டாந்திரங்களைக் காட்டித் தெளிவிக் கிறது, தண்ணீர்க்குள்ளே மூழ்கிக் கிடக்கிறவனை விளக்கைப் பிடித்துக் கொண்டு தேடுகிறத்தோ[2] டொக்குமென்றவாறு

தண்ணீர்க்குள்ளே விளக்கு நில்லாதது போலக் கள்ளுக் குடிக்கிறவனுக்கு நீதி மார்க்கஞ் சொன்னா* லவனுங் கெட்டுப் போவா னென்பதாம்.*
கூ

930. கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கா
லுண்ணான்கொ லுண்டதன் சோர்வு

என்பது

கள்ளுக் குடிக்கிறவன் ஒருத்தன், தான் கள்ளைக் குடியாத போது, பின்னை யொருவன் கள்ளைக் குடித்து மயங்கிக் கிடக் கிறவனைக் கண்டு, நான் குடிக்கிற போதும் இப்படி அறிவு மயங்கிக் கிடப்பேன் என்று நினையாதே, அவன் மயக்கத்தையே பாத்துக்[3] கொண்டிருப்பா னென்றவாறு. அறிவுடையவர்கள், கள்ளுண்டு மயங்கினவனைக் கண்டாகிலும் கள்ளுண்ணாமல் விடவேணு மென்பதாம்.
ம

ஆக அதிகாரம் கூயடு க்குக்குறள் கூளாகூ0

1. சொல்கிறதை 2. தேடுகிறதோ 3. பார்த்துக் *முதல் * வரை: அவன் பவத்துக் காரணம் செல்லாது - அச்சுநூல்

இப்பால் 94. சூது

என்பது, தர்மார்த்த காமங்களுக்கு* விகாதமானது சூதாடுகிற தென்பதாம்.*

931. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
 தூண்டிற் பொன் மீன்விழுங்கி யற்று

என்பது

சூதாடுகிறத்திலே[3] கெட்டிக் காரனாய்த் தான் வெல்லத் தக்கவனானாலும், சூதினை விரும்ப வேண்டாம்; அதேதென்றால் சூதாடிப் பொருள் தேடிக் கொண்டு சுகமாயிருந்தவர்களில்லை; சூதினாலே பொருள் தேடினவர்கள் தூண்டிலிலே குத்தியிருக்கிற மீனைத் தண்ணீர்க்[4]குள்ளே யிருக்கிற மீன் விழுங்கிச் செத்தாற் போலே[5] கெட்டுப் போவார்களென்றவாறு. க

932. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொல்
 நன்றெய்தி வாழ்வதோ ராறு

என்பது

சூதாடுகிறவன் ஒருக்கால்[6] ஒரு பொருளை வென்று, பிறகு அந்த ஆசையினாலே இன்னம் வெல்லுவோமென்று நூறு பொருளை யிழந்து, தரித்திரனாய்க் கெட்டுப் போவன்; இது வல்லாமல் சூது அறமும் பொருளுமுண்டாய் வாழ்கிற நெறியல்ல[7] என்றவாறு. உ

933. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
 போஒய்ப் புறமே படும்

என்பது

1. காமியங்களுக்கு என்பது காகிதச் சுவடி 2. விகாதமான சூதின இயல்பு-அச்சு நூல் 3. சூதாடுகிறதிலே 4. தண்ணியுக; 5. செத்தாப் போலே - காகிதச் சுவடி 6. ஒருகால் 7. சூதுபொருளால் அறமும் இன்பமும் எய்தி வாழ்கிற நெறி ஆகாது - அச்சு நூல்

சூதப் பாச்சிகை[1]யிலே வரப்பட்ட ஆதாயத்தை[2] மெய்யென்று நம்பிச் சூதாடினால், அவன் பொருளும் அவனுக்குப் பொருள் வருகிறவழியும் அவனைவிட்டு நீங்கி, அவன் பகைவரிடத்திலே போய் நிற்கும் என்றவாறு.

சூதமாடுகிற[3]வனுக்குத் தன்னுடைய திரவியத்தையும் அது வருகிறவழியையும் அறிந்து காக்கக் கூடா[4]தென்பதாம் கூ

934. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்

என்பது

சூதை விரும்பியாடுகிறவனுக்கு அந்தச்சூது அவனுக்கு முன் இல்லாத துக்கங்கள் பலவு முண்டாக்கி, முன்உண்டான கீர்த்தியை யெல்லாங் கெடுத்து, வெகு தரித்திரத்தைக் கொடுக்கும் என்றவாறு. ச

935. கவறுங் கழகமுங்[5] கையுந் தருக்கி
இவறியார் இல்லாகி யார்

என்பது

முதலிற் சூதாடினவன் பிறகுவிட்டுவிட்டேன் என்று சொன்னவன்[6] சூதாடுகின்ற இடத்திலே வந்தால் சூத மாடாமற் சும்மா இருக்கமாட்டான்; அவன்கையிலே சூதத்[7]தொழிலிருக்கு மென்றறிய வேணு மென்றவாறு.

936. அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார்

என்பது

சூதமாடுகிறவன் இம்மையிலே வயிறு நிறையச் சாப்பிட்டாலும் எந்நேரமும் துக்கப்படுவன்; மறுமையிலே நரகத்திலே

1. சூதாடுகருவி 2. சூதாயத்தை - அச்சுநூல் 3. சூதாடுகிற - அச்சுநூல் 4. இயலாது 5. கலகமும் என்பது காகிதச் சுவடி 6. சொன்னவிலும் - அச்சுநூல் 7. சூதுத் - அச்சுநூல்

விழுவனென்றவாறு.

937. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்
என்பது

ஒருவன் அறம் பொருளின்பங்கள் செய்யாமல் சூதம் ஆடு கிறத்திலே[1] பொழுது போக்கினானாகில், அந்தச்சூதம்[2] அவன செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கடிக்கு மென்ற வாறு.

ஆகவே சூதமாடாமல் அறம்பொருளின் பங்களையே செய்ய வேணுமென்பதாம்.

938. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது
என்பது

சூதாடினவனுக்கு அந்தச் சூதம் செய்கிற காரியம் அவன் பொருளை யெல்லாங் கெடுத்துப் போட்டுப் பொய் சொல்லத் தக்கதாகப்பண்ணித் தயையையுங் கெடுத்து இம்மையிலேயும் மறுமையிலேயும் துக்கம் பண்ணுவிக்கும்[3] என்றவாறு.

939. உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்
என்பது

ஒருவன் சூதத்தை வினோதமான தொழிலென்று ஆடினா னாகில், அவனுடைய பிரகாசமும் கல்வியும் செல்வமும் நடை யுடைபாவனையும்[4] ஆகாரமும் இந்த ஐந்து வகையுங் கெட் டுப்போ மென்றவாறு.

940. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர்
என்பது

---

1. ஆடுகிறதிலே 2. சூது 3. பண்ணிவிக்கும் என்பது காகிதச் சுவடி
4. உடையும் - அச்சுநூல்

சூதாடுகிறவனுக்குக் கைப்பொருளை யெல்லாம் இழந்து போமளவும் சூதமாடவேணுமென்று விருப்ப முண்டாயிருக்கும்; அதுபோல உடயபாலே* வியாதி நரை மரணம் என்று சொல்லப்பட்ட* மூவகைத்துன்பங்களை அனுபவிக்கும் அளவும் அந்தவுடம்பின்மேல் சீவனுக்கு ஆசையுண்டாயிருக்கு மென்றவாறு. ௰

ஆக அதிகாரம் கூ௰சக்குக்குறள் கூளசு௰

இப்பால் 95. மருந்து

என்பது, முன் செய்த பொல்லாங்குகளினாலேயும், உண்பன தின்பன நக்குவன பருகுவன ஒவ்வாதாகிய காரணங்களினாலேயும், மனுஷர்க்கு வருகிற வாத[1] பித்தியம்[2] சிலேற்றுமம்[3] என்னப்பட்டது[4] முதலான வியாதிகள் வினைமுடிவிலே யல்லா மற்றீராதாயினும், மற்ற இடையூறுகளான் வரப்பட்ட* வியாதிகளைத் தீர்க்கும் மருந்தினுடைய* குணங்களைச் சொல்லுகிறதாம்

941. மிகினுங் குறையி னுநோய் செய்யும் நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று

என்பது

வாத பித்தஞ் சிலேற்றுமம் என்று சொல்லப்பட்ட மூன்றும் அதிகமானாலும்[5] உபத்திரவப் படுத்தும் என்றவாறு. இதுகளிலே ஒன்று மிஞ்சினாலும் குறைஞ்சாலும்[6] வேதை[7] பண்ணுமென்பது க

942. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது
அற்றது போற்றி யுணின்

என்பது

*முதல் *வரை - அச்சுநூலில் இல்லை. 1. வாயு. 2. பித்தம் 3. சிலேட்டுமம் - ஐங்பகுதி 4. என்னும் *முதல் *வரை - அச்சுநூலிலில்லை †முதல் †வரைக் - கூறுபாடு - அச்சுநூல் 5. குறைச்சலானாலும் - இச்சொல் அச்சுநூலில் அதிகம் 6. குறைந்தாலும் 7. வேதனை

ஒருவன் முன் சாப்பிட்ட வஸ்த்துக்கள் செரித்ததைக் குறிப் பாலறிந்து பிறகு சாப்பிட்டால், அவனுக்கு மருந்தென்கிறது வேண்டா மென்றவாறு.

குறிப்பா லறிகிறதாவது: சரீரந்தளருகிறது, பொறிகள் கலங்குகிறது, பசிமிகுதல் முதலாயின. பசி மிகுந்தபிறகு சாப்பிடு கிறவனுக்கு வியாதி வராதென்பது கருத்து. உ

943. அற்றா லளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு

என்பது

முன்சாப்பிட்டது செரித்தபிறகு மட்டாகச் சாப்பிட்டால், அவன் சரீரம் வியாதியில்லாமல் நெடுநாள் நிற்குமென்றவாறு

பெறுதற்கருமை யாகிய மனுஷயாக்கையைப் பெற்றும், சீக்கிரமாய் விழுந்து போனால், தர்மம் வராது. நெடுநாள் நின் றால் தர்மார்த்தங்கள் தேடிக் கொள்ளலா மென்பது. ௩

944. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து

என்பது

முன்சாப்பிட்டது செரித்ததை யறிந்து, பிறகு பசிக்கிற போது உண்ணுகிறத்திலே[1] தன் சரீரத்துக்கு இதமான பதார்த் தங்களைச் சாப்பிட வேணு மென்றவாறு.

மிகப்பசித்தபிறகு சாப்பிட வேணு மென்றது, தான் கொண்ட விறுத[2] நியமங்கள் தப்பாதே நடந்த பிறகு சாப்பிட வேணு மென்றவாறு. ௪

945. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு

என்பது

வாதபித்தஞ் சிலேற்றுமம்[3] என்னப்பட்ட மூவகையும் அதி கப்படாத வஸ்த்துக்களைத் தன் மனது வேண்டிய படியல்லாமல்

1. உண்ணுகிறதிலே 2. விரத 3. சிலேத்துமம்

வியாதி வராத படிக்குப் பிரமாணமாய்ச்[1] சாப்பிட்டாலவனுக்கு வியாதிகளாலே துக்கமும் வாதையும் வராதென்பதாம். ரு

946. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையாக ணோய்[2]
என்பது

பசியறிந்து சற்றுக் குறையாய்ச் சாப்பிடுகிறவனிடத்திலே இன்பமான சுகமிருக்கும்;[3] அது போலே வெகுவாகச் சாப்பிடுகிறவனிடத்திலே வியாதி வாங்காமலிருக்கு[4] மென்றவாறு.

இன்பஞ்சுகமாவது[5], வாதபித்த சிலேற்றுமங்கள்[6] தங்களிருப்பிடம் விட்டு மிஞ்சாமலிருக்கிறதாம். சா

947. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்
என்பது

தன் சரீரப் பிரகிருதி[7]யும் அதற்கேற்ற வுணவும், அது சாப்பிடுகிற காலமும் அறிந்துண்ணாமல் வேண்டிய பொழுது வேண்டிய வஸ்த்துவைத் தன் வயிறு நிறைய வுண்டால் அவனுக்கு லக்கமில்லாத வியாதிகள் வருமென்றவாறு. எ

948. நோய்நாடி நோய்முத னாடி யதுதுணிக்கும்[8]
வாய்நாடி வாய்ப்பச் செயல்
என்பது

வயித்தியனானவன் வியாதி படுகிறவனைப் பார்த்து இது என்ன வியாதி யென்றும், இன்னத்தினாலே[9] வந்ததென்றும் அறிந்து, அது வருத்துகிற வுபத்திரவம் தீர்க்கும் வழியையு மறிந்து, பிறகு மருந்து கொடுக்க வேணு மென்றவாறு.

1. இச்சொல்அச்சுநூலில்இல்லை (அளவாக) 2. பிற்சேர்க்கை - குறள் 946 ல் காண்க. 3.இன்பம் நீங்காதிருக்கும் - அச்சுநூல் 4. நீங்காமல் நிற்கும் - அச்சுநூல் 5. இன்பமாவது - அச்சுநூல் 6. சிலேட்டுமங்கள் 7. இயல்பு 8. தணிக்கும் என்பதே பிறர் கொண்டபாடம் 9. இன்னதினாலே

அது தீர்க்கும் வழியாவது, அறுத்தல் சுடல் இரத்தம் வாங்கல் கழுவுதல் முதலானதாம். அ

949. உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல்

என்பது

வியாதிப்படுகிறவன்[1] குணத்தையும், வியாதியினுடைய குணத்தையும், அது தன்னாலே தீருகிறத்துக்கு[2] ஏற்ற காலத்தினையும், வயித்திய சாத்திரம் படித்தவனறிந்து செய்ய வேணுமென்றவாறு.

வியாதிபடுகிறவன் குணமாவது, பெலம் அறிவு வேதனைகளாம். வியாதியினுடைய குணமாவது, சாத்தியமசாத்தியம்[3] கூ

950. உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து

என்பது

வியாதிக்கு மருந்தாவது: அந்த வியாதிப்பட்டவன், அதைத் தீர்க்கப்பட்டவன், அவனுக்கு ஆயுத மாகிய மருந்து, அண்டையிலே யிருக்கிறவன் *இவை நாலும் வியாதியைப்போக்கடிக்கும்* என்றவாறு

வியாதிப் படுகிறவன் குணம் நாலாவது: பொருளுடைமை வயித்தியன் சொன்னபடி நடக்கிறது, வியாதியினுடைய நிலையை யறிகிறது, மருந்து தின்கிற வேதைக்குப்பயப்படாமல் பொறுக்கிறது. வயித்தியன் குணம் நாலாவது: வியாதியைக் காண்கிறத்துக்கு[4]ப் பயப்படாமலிருக்கிறது, ஆசாரியனிடத்திலே படித்த கல்வியினாலே சூட்சமான[5] அறிவுண்டாயிருக்கிறது, எந்நாளும் வயித்தியம் பண்ணுகிறது மனதிலே கபடமில்லாமல் சுத்தனாயிருக்கிறதுமாம. மருந்தின வகை நாலாவது: பலவியாதிகளுக்குமானது, சுவை யதிகமாயிருக்கிறது, வியாதியைத் தீர்க்

1. வியாதியஸ்தவ - அச்சுநூல் 2. தீருகிறதற்கு 3. தீர்க்கக் கூடியது, தீர்க்கமுடியாதது *முதல் *வரை: என்னும் நான்கு பகுதியையுடைய நான்கு திறந்தது அச்சுநூ. 4 காண்கிறதற்கு 5. சூக்குமமான

றத்தினாலே[1] பேர் பெறுகிறது, எளிதாய்த் தேடிக் கொள்ளு கிறதாம். அண்டையிலே யிருக்கிறவன் குணம் நாலாவது: வியா திப் படுகிறவன் மேலே பட்சமுண்டாயிருக்கிறது, மனசும் வசன மும் சுத்தமாய்க் கபடமில்லாமலிருக்கிறது, வயித்தியன் சொன்ன படியே செய்கிறது. கெட்டியாய் அறிவுடைய வனாயிருக்கிற தாம். இவை நாலும் கூடினாலல்லாமல் வியாதி தீராதென்பது. ௰

ஆக அதிகாரம் கூ௰ருக்குக் குறள் கூளரு௰

அங்கவியல் முற்றும்

(ஒழி பியல்) இப்பால் 96. குடிமை

என்பது, உயர்ந்த குடியின்கட்* பிறந்தாரிடத்திலே யல்லாமல் மற்றவர்களிடத்திலே நல்ல வங்கிச மில்லை யென்பது.*

951. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு

என்பது

*[செம்மையாய் நடக்கிறதும் நாணமும் நல்லகுடியிலே பிறந் தாரிடத்திலே அல்லாமல் மற்றவர்களிடத்திலே சுபாவமாக உள வாகா].*

செம்மையாய் நடக்கிறதாவது, கருத்தும் சொல்லுகிறதும் செய் கிறதும் ஒன்றுக் கொன்று மாறுபடாமற் சரியாயிருக்கிறது. நாணமாவது, பகை[2]பழி பாவங்களுக்குப் பயப்பட்டுச் செய்யா மலிருக்கிறதாம். இது நல்லகுடியிலே பிறந்தவர்களுக்கு ஒருவர் கற்பியாமல் சுபாவமாக வுண்டாம். மற்றவர்களுக்குக் கற்பித் தாலும் நீடோட[3] நில்லாவென்பதாம். க

---

1. தீர்க்கிறதினாலே *முதல் *வரை: பிறந்தாரதுதன்மை - அச்சுநூல். † முதல் † வரை: அச்சுநூல் பார்த்தெழுதியது. 2. பகை - அச்சுநூலிலில்லை 3. நெடிது - அச்சு நூல்

952. ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்
என்பது

உயர்ந்த குடியிலே பிறந்தவர்கள் தமக்குரித்தான ஆசாரமும் சத்தியமும் நாணமும் ஆகிய இந்த மூன்றும்[1] தப்பாமல் நடப் பார்களென்றவாறு. உ

953. நகைஈகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு
என்பது

நல்ல குடியிலே பிறந்தாரிடத்திலே தரித்திர ரானவர்கள் வந்தால் முகமலர்ந்து சந்தோஷமாயிருக்கிறதும், உண்டான மாத்திரம் கொடுக்கிறதும், நல்ல வார்த்தை சொல்லுகிறதும், அவர்களை யிகழாமல் இருக்கிறதுமான இந்த *நான்குகுணமும் நல்ல குடி யிலே பிறந்தவர்களுக்குச்* சுபாவமாக உண்டாக்கும்[2] என்ற வாறு. ௩

954. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்
என்பது

அநேகங் கோடி திரவியங்கள் வருகிறதானாலும் நல்ல குடி யிலே பிறந்தவர்கள் தங்களுடைய ஆசார வொழுக்கங்கள் கெடத்தக்க காரியங்களைச் செய்யா ரென்றவாறு. ௪

955. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இன்று
என்பது

பாரம்பரியமாய் நல்லதாயிருக்கிற குடியிலே பிறந்தவர்கள் தங்கள் திரவியம் குறைந்து கொடுக்கிறத்துக்கு[3] இல்லாமற் போனாலும், தரித்திரரைக் கண்டால் நல்ல குணங்களி னின்று நீங்காமல் நல்ல வார்த்தை சொல்லுவர்களென்றவாறு.

1. மூன்றின்கண்ணும் - அச்சுநூல்.* முதல்* வரை அச்சுநூலில் இல்லை
2. உண்டாம் - அச்சுநூல் 3. கொடுக்கிறதற்கு

பாரம்பரியமாய் நல்ல குடியாவது, தகப்பன், பாட்டன் இருப்பாட்டன்[1], முப்பாட்டன் முதலான பேர் நல்லவர்களா யிருக்கிறதாம். ரு

96. சலம்பற்றிச் சார்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்

என்பது

குற்றமில்லாத நல்ல குடியிலே பிறந்து அந்தக் குடிக்கேற்க வாழ வேணு மென்று நினைத்திருக்கிறவர்கள், தங்களுக்குத் தரித்திரம் வந்த போதும், அது தீர வேணுமென்று, இழிவான காரியங்களைச் செய்யா ரென்றவாறு.

இழிவான காரியங்களாவன, தங்கள் குடிக்கு ஏர்வை[2] யல்லாத காரியங்க ளென்பதாம். சு

957 குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து

என்பது

நல்ல குடியிலே பிறந்து நல்லவர்களாயிருக்கிறவரிடத்திலே கொஞ்சமான குற்ற முண்டானால்[3] ஆகாசத்திலே திரிகிற சந்திர னிடத்திலே யிருக்கிற மறுவைப் போலப் பெரியதாகத் தோன்று மென்றவாறு.

பெரியதாகத் தோன்றுகிறது உலகமெல்லாம் பிரகாசமா மென்பதாம்.[4] எ

958. நலத்தின் கணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தினக ஊணயப் படும்

என்பது

நல்லகுலத்திலே பிறந்தவனிடத்திலே தயையில்லாவிட்டால், அவனை அந்தக் குலத்திலே[5] சந்தேகப் படுவார்களுலகத்தா ரென்றவாறு.

சந்தேகப்படுகிறதாவது, இவனிந்தக் குலமாமோ அல்லவோ என்பதாம்[6]

1. இருபாட்டன் 2. ஏற்றவை 3. முண்டாயினும் அது 4. ட வெளிப்படுதல் 5. குலப்பிறப்பிலே 6. என்றெண்ணுவது

959. நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்

என்பது

நிலத்தினுடைய நன்மையை யதிலே முளைத்த முளை காட்டும்; அப்படிப் போலக் குலத்தினுடைய நன்மையை அதிலே பிறந்தவர்களின் வாயிற் சொற்கள் காட்டும் என்றவாறு.

முளைநன்றாய்ப் பெரிதா யிருந்தால் அவ்விடம் நல்ல நிலமென்றறியலாம்; நல்ல வசனமும் நல்ல குணமும் உண்டாயிருந்தால், அவனை நல்ல குலவா னென்றறிய வேணுமென்பது. சுூ

960. நலம் வேண்டி னாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு
என்பது

ஒருவன் தனக்கு நன்மையை வேண்டினானானால் பகை[1] பழிபாவங்களுக்குப் பயப்பட்டு நாணுடையனாயிருக்க வேணும்; நல்ல குலமுடையனாக வேண்டினால், தன்னைவணங்கினவர்களுக்குத் தானும் வணக்க முடையவனாயிருக்க வேணுமென்றவாறு.

நன்மையாவது, புகழ் புண்ணியங்களாம். ய

ஆக அதிகாரம் சுூ௫சுூ க்குக்குறள் சுூளசுூய

இப்பால் 97. மானம்

என்பது. எந்நாளும் தன்னுடைய நல்ல நடக்கையைக் கைவிடாமலிருக்கிறதும் கர்ம வசத்தாலே தனக்கொரு குற்றம் வந்தால் பிராணனை விடுகிறதுமாம். இது நல்ல குலத்தார்க்கு வேண்டுவதாம்.

---

1. தன் - அச்சுநூல

961. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்

என்பது

செய்யாத[1] காரியங்களைச் செய்தால் அழிவில்லாத பெரிய செல்வம் வருமானாலுந் தங்குடிக்குத் தாழ்வு வரப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டா மென்றவாறு.

பிராணன் போறதாக[2] வந்தா விழிவான காரியங்களைச் செய்து பிழைக்கலாமென்று சொல்லுவர், வேதம் படித்த பேர். அதனை ஆகா தென்று மறுத்துப் பிராணன் போனாலும் இழிவான காரியஞ் செய்யலாகாது; சரீரம் அநித்தியம்; மானம் கெட்டால் அபகீர்த்தி போகா தென்பதாம். க

962. சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்

என்பது

தனக்குக் கீர்த்தி வரவேணு மென்று செய்கிற விடத்திலேயும், தம் குடிக்கு ஒவ்வாத காரியங்களைச் செய்யார், அபிமானத்தையும் புகழையும் நிறுத்துபவர்கள் என்றவாறு. உ

963. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு

என்பது

நல்ல குடியிலே பிறந்தவர்களுக்குப் பெரிய செல்வமுண்டான போது எல்லாருக்கும் வணங்கி நடந்து கொள்ள வேணும்; தரித்திரம் வந்த காலத்திலே* வணங்காமல் விரத சீலங்களுடனே கூடியிருக்க வேணும் என்றவாறு.

செல்வம் வந்த காலத்திலே வணங்காவிட்டால், கீழானவன் என்று சொல்லுவார்கள்;* தரித்திரம் வந்த காலத்திலே வணங்கினால் தாழ்வாக எண்ணுவார்கள்.

1. செய்யத்தகாத 2. போகிறதாக 3. மறுக்கிறார் - அச்சுநூல்

*முதல் *வரை: அச்சுநூலிற் கண்டவை.

964. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை

என்பது

நல்ல குடியிலே பிறந்தவர்கள் தங்களுடைய ரங்களை விட்டுத் தாழ்ந்து நடந்தால், தலையிலே யிருந்து தரையிலே விழுந்த மயிரோ டொப்ப ரென்றவாறு.

தலையிலே மயிரிருக்கிறபோது கோதவும் முடிக்கவும் படும்: தாழவிழுந்தால் கையாலும் தீண்டாமல் இகழ்வார்கள்[1]: அது போலே ஆசாரத்தை விட்டவனும் இகழப்படுவனென்பதாம். ௪

955. குன்றினனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றின வளைய செயின்

என்பது

*நல்ல குடியிலே பிறந்து மலைபோல வுயர்ந்த பெருங்குற்றமான* காரியங்களை யொரு குன்றிமணி மாத்திரஞ் செய்தாலும் தாழ்ந்து கெட்டுப் போவார்களென்றவாறு. ரு

966. புகழின்றால் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை

என்பது

அபிமானத்தை விட்டுத் தன்னை யவமானம் பேசுகிறவர்[2] பின்னை[3] ஒருவன் போய் நிற்கிறநிலை, இந்தவுலகத்திலே கீர்த்தியில்லை; மறுமையிலே தேவலோக மில்லை[4] யென்றவாறு.

இம்மை மறுமை யிரண்டும் இழக்கத் தக்கதாகிய மானம் கெடுக்கிறத்தினாலே[5] என்ன பலனுண்டா மென்றவாறு. சு

என்பது

1. இகழப்படும்-அச்சுநூல் *முதல் *வரை; குடிப்பிறப்பால் மலை போல உயர்ந்தோரும் தாழ்தற்கேதுவான அச்சுநூல் 2. யவமதிப்பார் அச்சுநூல் 3. பின்னே; 4. தேவலோகத்துக்குச் செலுத்தாது - அச்சுநூல் 5. கெடுகிறதினாலே

667. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று

என்பது

தன்னையிகழ்வார் பின்னே திரிந்து பொருள் பெற்று வாழ்கி றத்திலும்[1] அவர்கள் பிறகே[2] திரிந்து அனுசரியாமல் கெட்டுப் போனா னென்று சொல்லுகிறது நல்ல தென்றவாறு. எ

968. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து

என்பது

உயர்ந்த குடிப்பிறப்பும் அபிமானமும்[3] அழியவந்த போது பிராணனை விடவேணு மல்லாமல், பிரயோசன மில்லாத சரீரத்தைக் காக்கிறது[4] இனிமேலும் சாகாமலிருக் கிறத்துக்கு மருந்தாமோ என்றவாறு.

பிராணனை விட்டாகிலும் அபிமானத்தைக் காக்க[5] வேணு மென்பதாம். அ

969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா னன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

என்பது

கவரிமான் தன்மயிர்களிலே ஒரு மயிரறுந்தாலும் பிராணனைவிடும்: அதுபோல் அபிமானங் கெடவந்தால் உத்த மரானவர்கள் பிராணனை விடுவார்களென்றவாறு.

பிராணனும் அபிமானமுஞ் சரியல்ல; பிறந்து பிறந்திறக்கிற தான சீவனை விட்டாகிலும் பேராமல்[6] நிற்கிற அபிமானத்தைக் காக்க[7] வேணுமென்பதாம்.

970. இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழு தேத்து[8] முலகு

என்பது

---

1. வாழ்கிறத்திலும் 2. பின்னே 3. மானம் என்றிருக்க வேண்டிய விடங்களில் அபிமானம் என்றுள்ளது. 4. காற்கிது 5. காற்க - காகிதச்சுவடி 6. பெறாமல் - அச்சுநூல் 7. கார்க்க 8. தேற்று - காகிதச் சுவடி

தமக்கொரு குற்றம் வந்த பொழுது அத்தைப்[1] பொறுத்துக் கொண்டு உயிர்வாழாமற் பிராணனை விட்டவர்களுடைய கீர்த்தியை எந்நாளும் உலகத்தார் கொண்டாடுவார்க ளென்றவாறு. ௰

ஆக அதிகாரம் ௯௰௭க்குக் குறள் ௯௱௭௰

இப்பால் 98. பெருமை

என்பது, செய்கிறத்துக்கு[2] அரிதாகிய காரியங்களைச் செய்கிறதும், அபிசு வரியத்தினாலே கெர்வியாம லிருக்கிறதும், பிறருடைய குற்றங்களைச் சொல்லாமலிருக்கிறதும், ன்னிருந்த நிலையினும் அதிகமான ஆசாரமாய் நடக்கிறதும், முன்னிருந்த ஆசாரங்களிலே 'குறைபடாமலிருக்கிறதும்* பெருமைக் குணமா மென்பதாம்.*

971. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்து மெனல்
என்பது

ஒருவனுக்குக் கீர்த்தியாவது, பிறராலே செய்தற் கருமையாகிய காரியங்களைச் செய்து கொள்ள வேணு மென்று மென்மேலும்[3] நினைக்கிறதாம்; ஒருவனுக்குக் குற்றமாகிறது, நல்ல காரியங்களைச் செய்யாமல் இழிவான காரியங்களைச் செய்து பிழைக்கிற தென்றவாறு.

செய்தற்கருமை யாவது: தர்மந்தானம் விரதஞ் சிலாசாரம் இதுகளைச் செய்யவே பெருமையுண்டாம் என்பது.[4] க

972 பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்
என்பது

1. அதனைப். 2. செய்கிறதற்கு 3. மேன்மேலும் *முதல் *வரை; ஆகியநற்குணங்களால் பெரியாரது தன்மை - அச்சுநூல் 4. இவ்வாக்கியம் அச்சுநூலில் இல்லை.

எல்லாமனுஷருக்கும் பிறப்புச் சரியானாலும், அவரவர்கள் செய்கிற தொழில் வேற்றுமையினாலே சிறப்பாகிய தன்மைகள் சரியாகா என்றவாறு.

செய்கிற தொழில்களாவன, நன்மையான காரியங்களைச் செய்கிறதும், தீமையான காரியங்களைச் செய்கிறதுமாம்[1]. ௨

973. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்

என்பது

செய்தற்கரிய காரியங்களைச் செய்யமாட்டாதவர் உயர்ந்த விடத்திலே யிருந்தாலும் பெரியவர்களாகார்; செயற்கரிய விரத சீலாசார தானதர்மங்களைச் செய்யப்பட்ட[2] பெரியோர்கள் தாழ்ந்த விடத்திலே யிருந்தாலும் சிறிய ராகா ரென்றவாறு.

சிறியவர்கள் செல்வ முண்டாயிருந்தாலும் பெரியவராகார்; பெரியவர்கள் தரித்திரவான்களானாலுஞ் சிறியராகா ரென்ற வாறு. ௩

974. ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு

என்பது

கபடமில்லாத மனதையுடைய ஸ்ரீகள் பதிவிரதாபாவங் கெடாமல் காத்துக்கொண்டு நடக்கிறாப் போலே, பெருமைக் குணம் வேண்டினவர்களும் தன்னுடைய நீதிநெறி முறைமை கெடாமல் தன்னைத்தான் காத்துக்கொண்டிருக்கவேணு மென்ற வாறு.

பதிவிரதாபாவ முண்டான ஸ்ரீகள் பிரகாசமானாற் போல் நீதி நெறி முறைமை யுள்ளவர்களும் பெரியவர்களாவ ரென்பதாம். ௪

975 பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல்

என்பது

1 இச்சிறப்புரை அச்சுல்ல இல்லை 2. செய்யும்

பெருமையுடையவர்கள் தரித்திர ரானாலும் செய்தற்கரி தான தங்கள் நடக்கையை விடாமல் செய்வர்களென்றவாறு.

நல்ல நடக்கையை விட்டாற் பெருமைபோமென்பதாம். ரு

976. சிறியா ருணர்ச்சியு ளில்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு

என்பது

பெரியவர்களை வணங்கி நடந்து *அவர்களைத் தனக்குத்துணை யாக்கிக் கொள்ள வேணு* மென்கிற நினைவு சிறியவர்களுக் கில்லை யென்றவாறு.

சிறியவர்கள் தங்கள் செல்வமும் கல்வியும் கண்டு மகிழ்ந் திருப்பார்களென்பது கருத்து. சு

977. இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்

என்பது

பெரியாரிடத்திலே சேர்ந்திருக்கத்தக்கதான[1] சிறப்புச் சிறிய வர்களுக் குண்டானாலும் அதனைச் செய்யாமல் விட்டுத் தன் கருத்தினையுஞ்[2] செல்வத்தினையும் அதிகமாகப் பாத்துக் கொண்டு இறுமாந்திருப்பார்களென்றவாறு. எ

978. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து

என்பது

பெருமை யுடையவர்கள் செல்வ[4]முண்டான காலத்திலேயும் இறுமாப்பில்லாமல் வணங்கி நடப்பர்கள்; சிறுமைக் குண முடையவர்கள் செல்வம்[5] இல்லாத போதும் தன்னைத் தானே மகிழ்ந்துகொண் டிருப்பர்க ளென்றவாறு. அ

---

*முதல் *வரை: அவர்களிபல் வினைக் கொள்வோ - அச்சுநூல் 1 பொருந்தியுள்ள 2. கல்வியினையும் 3. பார்த்துச் 4. அச்சிறப்பு; 5. அஃது அச்சுநூல்

979. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்

என்பது

பெருமைக் குணமாவது, செல்வ முண்டானாலும் வறுமை வந்தாலும் இது முன் செய்த வினையென்று மகிழாமலிருக்கிறது: சிறுமைக் குணமாவது, செல்வ மில்லாத போதும் செல்வமுள்ளவனாகத் தன்னைத்தானே மகிழ்ந்துகொண்டிருக்கிற தென்றவாறு கூ

980. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்

என்பது

பெருமைக் குணமுடையார் பிறர் குற்றத்தை மறைத்துக் குணத்தையே சொல்லுவர்கள்; சிறுமைக்குண முடையவர்கள் பிறர் குணங்களை மறைத்துக் குற்றத்தையே சொல்லுவர்களென்றவாறு. ௰

ஆக அதிகாரம் கூ௰அக்குக்குறள் கூளஅ௰

இப்பால் 99. சான்றாண்மை

என்பது, பெருமையுளடங்காத பல* குணங்களையுந்தன்னுடைய நன்மையினாலே யுண்டாக்கிக் கொண்டுநடக்கிறதாம்*.

981. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு

என்பது

தனக்குத்[1] தக்கது இதுவென்றறிந்து நல்ல குணங்களுடனே கூடியிருக்கிறவர்களுக்கு எல்லா நற்குணங்களு மியல்பாயிருக்குமென்றவாறு.

சிறிது[2] குணங்களில்லாவிட்டாலுஞ் சாந்த குணமுடையவர்க்கு எல்லாக் குணங்களு முண்டெனப்படுமென்பதாம். க

*முதல் *வரை; குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை; அச்சுநூல். 1. நமக்குக்; 2. சில அச்சுநூல்

982. குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று

என்பது

சான்றோர் நலமாவது குணங்களா லாகிய நலமே! நலம் இதல்லாமல் அவயவங்கள் நலமும் செல்வநலமும் நலமல்ல வென்றவாறு.

அவையவ நலமுஞ் செல்வ நலமும் உண்டாயிருந்தும் குண நல மில்லா விட்டால் ஒரு பிரயோசனமுமில்லை யென்பதாம். உ.

983 அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்

என்பது

எல்லாரிடத்திலேயுந் தயையா யிருக்கிறதும், பழிபாவங் களுக்கும் பயப்படுகிறதும், எல்லாருக்கு முபகாரம்பண்ணு கிறதும், பழையவர்கள் மேலே சிநேகம் விடாமலிருக்கிறதும், எப்போதும் மெய் சொல்லுகிறதும், இந்த அஞ்சும்[1] *சால்பு என்கிற பாரத்தைத் தாங்குகிற தூண்களாம் என்றவாறு.

இந்த ஐந்து குணங்களும் இல்லாதவர்* சான்றோ ரென்னப்படா ரென்பதாம். ௩.

984 கொல்லா நலத்தது நோன்மை பிறர் தீமை
சொல்லா நலத்தது சால்பு

என்பது

நோன்பாவது ஒரு சீவனையுங் கொல்லாமலிருக்கிறதாம்; அதல்லாமல் மற்றது[2] எல்லாம் நோன்பல்ல; இதுபோல் பிற ருடைய குற்றங்களைச் சொல்லாமலிருக்கிறதே சால்பென்ப தென்றவாறு.

நோன்புக்குக் கொல்லாத விரதம் பெரியதானாற்போலப்

1. ஐந்தும் *முதல் *வரை: அச்சுநூலிற்கண்டெழுதியவை 2. அதல்லாத மற்றவை - அச்சுநூல்

பிறர் குற்றம் சொல்லாமலிருக்கிறதே சால்பிற்குச் சிறந்ததென்றவாறு. ௪

985. ஆற்றுவா ராற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை

என்பது

ஒரு கருமத்தைச் செய்து முடிக்கிறவன் பெலமாவது அந்தக் காரியத்துக்குத் துணையானவர்களை வணங்கிக் கூட்டிக், கொள்கிறதாம்; *அது போலச் சான்றோரென எண்பிச்சுக்[1] கொள்ளுகிறவர்களும் தன்பகைவரை வணங்கிப் பகைதீர்த்துக் கொள்ளவேணு மென்றவாறு*

986. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்

என்பது

சான்றோர்[2] என்லப்பட்ட பொன்னை உரை யறிகிறத்துக்குக்[3] கல்லேதென்னிற் றன்னிலும் பெரியோர்களுடனே பண்ணுகிற சினேகத்தைத் தன்னிலும் கொஞ்சமானவனுடனே சினேகம்[4] பண்ணாமலிருக்கிறதென்றவாறு. † ௬

87. இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு

என்பது

தனக்குப் பொல்லாத காரியங்களைச் செய்தவர்களுக்குத் தான் நன்மையைச் செய்யாவிட்டால் அவன் சான்றாண்மை என்ன பிரயோசனத்தைச் செய்யு மென்றவாறு.

பொல்லாங்கு செய்தவர்களுக்கு நல்லது செய்யாவிட்டால் அவர்கள் சான்றோரெனப்படா[5] ரென்பதாம். ௭

---

*முதல் *வரை: குறிப்புரை காண்க 1. எண்பித்துக், 2. சால்பு 3. யறிகிறதற்குக் 4. தோல்வி என்று குறளில் உள்ள சொல்லுக்குச் சிநேகம் என்ற பொருள் பொருந்தாது † குறிப்புரை காண்க 5. என்னப்படுவர் என்ற பொருந்தாவுரையுளது காகிதச் சுவடியில்; இங்ஙனம் திருத்தப்பட்டது.

988. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்
என்பது

சான்றோ ரென்று சொல்லப்பட்ட பெல முண்டாயிருந்தால் அவர்களுடைய தரித்திரம் குற்றமாகா தென்றவாறு.

நல்ல குணமுடையவன் தரித்திரனாயிருந்தாலும் பெரியவ னென்று சொல்லப்படு மென்பதாம். அ

989. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்
என்பது

சான்றாண்மை யாகிய கடலுக்குக் கரை யென்று சொல்லப் பட்ட பெரியோர்கள், உலகமாகிய பூமி பேர்ந்தாலும் சான்றோர்கள் தங்கள் நிலையிற் பிரியா ரென்றவாறு. கூ

990. சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்
தாங்காது மன்னோ பொறை
என்பது

பல குணங்களாலேயும் நிறைந்த சான்றவர் தங்கள் நிலைமை கெட்டாற் பூமி பாரம் பொறா தென்றவாறு.

சான்றோர்கள் தங்கள் நிலைமை கெடுகிறது மில்லை; பூமி பாரம் பொறாம லிருக்கிறது மில்லை யென்பதாம் ௰

ஆக அதிகாரம் ௯௰௯க்குக் குறள் ௯௱௯௰

இப்பால் 100. பண்புடைமை

என்பது, பெருமை சான்றாண்மைகளிற்றாம் வழுவாமலிருந்து எல்லாரியல்பு மறிந்து ஒத்து நடக்கிற தாம்.

991. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு
என்பது

எல்லாருக்கு மெளியனாய் நன்மை யுடையனா யிருந்தால் பண்புடைமை யென்கிற குணம் தானே வந்து சேரு மென்றவாறு க

992. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு

என்பது

பிறரிடத்திலே அன்புடைய னாயிருக்கிறதும், நல்ல குடியிலே பிறந்து உலகத்துக் கேற்க நடக்கிறதும் ஆகிய இந்த இரண்டு குணமும் ஒருவனுக்குண்டானால் அவனைப் பண்புடையவனென்று சொல்லுவார்களென்றவாறு. உ

993. உறுப்பொத்தன் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு

என்பது

பெறுதற்கரிய மனுஷ சரீரத்தை யெடுத்தாலும் நல்ல குணமில்லா விட்டால் பெரியவர்களுடனே சரியல்ல, நல்ல குணமு நல்ல செயல்களு முண்டாயிருக்கிறதே நல்லவர்களுடனே சரி யென்றவாறு. ங

994. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு

என்பது

நீதியையும் தர்மத்தையும் விரும்பி யிருக்கிற படியினாலே பிறருக்கும் தமக்கும் பலனாகிறவர்களுடைய நன்மையை உலகத்தார் கொண்டாடு வார்களென்றவாறு. ச

995. நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு

என்பது

ஒருவனை விளையாட்டுக்கு இகழ்ந்து பேசுகிறதும் பொல்லாதாயிருக்கும்; ஆனபடியினாலே பிறருடைய குணங்களை யறிந்து நடக்கிறவர்களிடத்திலே பகை யுண்டானாலும் அது பகையாகாது; நல்ல குணமே யுண்டா மென்ற வாறு.

பிறர் குணங்களை யறிந்தவர்கள் பொல்லாங்கு செய்யாமல் நன்மையையே செய்வார்கள்; அதனாலே பகையுமுறவாயிருக்கு மென்பதாம். ரு

996. பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்
என்பது

பண்புடையவர்களான நல்ல குணமுடையவர்க ளுண்டாகிறபடியினாலே உலகவியற்கை எந்நாளு முண்டாய் வருகிறது; பண்புடையவர்க ளில்லாவிட்டால் உலகவியற்கை மண்ணிலே புகுந்து கெட்டுப்போ மென்றவாறு. சு

997. அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்
என்பது

மனஷருக்குரியதான பண்பு இல்லாதவர் அரத்தின்கூர்மை போலும் கூர்மையான புத்தியுடைய ராயிருந்தாலும், ஓரறிவாகிய மரத்துக்குச் சரி யென்றவாறு.

அரமானது தன்னுடனே சேர்ந்தவற்றைப் பொடி யாக்குறாப்[1] போலே,கூர்மை யான புத்தியிருந்தாலும் தயையில்லாத பேர் தங்களைச் சேர்ந்தவர்களைக் கெடுப்பரென்பதாம். எ

998. நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை
என்பது

தன்னுடனே சினேகம் பண்ணாமல் பொல்லாங்கு செய்கிறவர்களுக்கும் தான் நல்லவனாய் நன்மையைச் செய்யாவிட்டால், அறிவுடையவர்களுக்குக் குற்றமா மென்றவாறு,

எல்லாருக்கும் நன்மையைச் செய்யவே அறிவுடையவனா மென்பதாம், அ

1. யாக்குவது

999. நகவல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்

என்பது

நன்மையாய் ஒருவனுடனே சினேகம் பண்ணி மகிழமாட்டாதவனுக்குப் பகற்பொழுதும் இருளாயிருக்குமென்றவாறு.

பண்பில்லாதவன் உலகவியற்கை யறிய மாட்டாமையால் உலக மிருளாயிருக்கு மென்பது. கூ

1000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று

என்பது

நல்ல குணமில்லாதவன் முன் செய்த நல்வினையாலே யிப்போ[1] வந்த பெரிய செல்வம்ஒருவர்க்கும் பிரயோசன மாகாமற் கெட்டுப் போறது[2] எப்படிப் போலே என்றால், நல்ல பாலைக் காயாத பானையிலே வார்த்தால் அது கெட்டுப் போனாப் போலே[3] யென்றவாறு.

கெட்டபால் ஒருவருக்கும் ஆகாதது போல் நற்குணமில்லாதவன் செல்வமும் ஒருவர்க்கும் பயன் படாதென்பதாம். ய

ஆக அதிகாரம் ளக்குக் குறள் சது

இப்பால் 101 நன்றியிற் செல்வம்

என்பது நல்ல குணமில்லாதவன் தேடின பொருள் தேடினவனுக்கும் பிறருக்கும் பயன்படாமற் போற[4] படியினாலே அவன் குற்றத்தை அந்தப் பொருளின் மேலே வைத்துச் சொல்லுகிறதாம்.

1001. வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்

என்பது

1. இப்பொழுது 2. போகிறது 3. போகிறது போலே 4. போகிற

தன் மனையெல்லாம் நிறையப் பொருளைத் தேடிவைத்தும் லோபத்தாலே அந்தப் பொருளை யனுபவியாதவன். பிராண னுடனே யிருந்தாலும் செத்தவனோ டொப்பன். அந்தப் பொரு ளாலே அவனுக்குப் பிரயோசன மொன்றுமில்லை யென்றவாறு.

தேடின பொருளைப் பிராணனுடனே யிருக்கச்சிலே[1] தான தர்மங்களிலே சிலவழிச்சு,[2] தானும் பொசியா[3]விட்டாற் செத்துப் போன பிறகு அந்தப் பொருளால் இவன் செய்யப்போவ தொன்றுமில்லை யென்றவாறு. க

1002. பொருளானா மெல்லாமென் றீயா திவறும்
மருளானா மாணாப் பிறப்பு
என்பது

பொருளொன்று முண்டானா லதனாலே யெல்லா முண்டென் றறிந்து பொருளைத் தேடிப் பிறர்க்கீயாமல் அதன் மேலே ஆசை வைத்தால், அவன் பேயாய்ப் பிறப்ப னென்ற வாறு.

பொருள் தேட அறியாதவன், அதனைச் சிலவழிச்சுப்[2] பலன் கொள்ள வறியாத மயக்கத்தினாலே பசித்து வந்தவர்களுக்குக் கொடான்? ஆனபடியினாலே இவனும் பேயாய்ப் பிறந்து பசி யடங்காமல் திரிவ னென்பதாம். உ

1003. ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை
என்பது

யாம் வெகுவாகப் பொருள் தேட வேணு மென்று நினைத்துப் பொருள்தேடி வைத்து அதன்பயனாகிய கீர்த்தியையும் தர்மத் தையும் விரும்பாதவன் பிறந்தது பூமிக்குப் பாரமா மென்ற வாறு.

பொருள் தேடினவன் தர்மத்தைச் செய்யாது வைத்துக் காக்கிற[4] துக்கத்தையும், அந்தப் பொருள் கெட்டுப்போனால் வருகிற துக்கத்தையும் அறியாதவன் பூமிக்குப் பாரமாம். ந

1, இருக்குங்கால் 2. செலவழித்து 3. புசியா 4. காக்கிற

1004. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரான்
நச்சப் படாஅ தவன்

என்பது

ஒரு பொருளையுங் கொடுத்தறியாதவனை ஒருவரும் ஏற்றார் கள்[1] அவன் செத்துப் போன பிறகு* ஈண்டு ஒழிந்து நிற்பதாக* அந்தப் பொருளை நினைப்பனோ வென்ற வாறு.

செத்த பிறகு நினைக்கிற தாவது, கீர்த்தியுண்டாயிருக்கிறது.[2] பொருளைக் கொடுத்தனுக்குக் கீர்த்தியுண்டாம்; கொடாத வனுக்கு இம்மை மறுமை யிரண்டிலேயும் அந்தப் பொருளாலே பிரயோசன மில்லை யென்பதாம். ௪

1005. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்[3]

என்பது

பொருளைப் பிறருக்குக் கொடுக்கிறதும் தான் அனுபவிக் கிறதுமாகிய இந்த இரண்டும் இல்லாதவனுக்கு அநேகங் கோடி திரவிய முண்டானாலும், ஒன்று மில்லை யென்றவாறு. ரு

1006. ஏதம் பெருஞ்செல்வம் தான்றுவ்வான் தக்கார்க்கொன்
றீத லியல்பிலா தான்

என்பது

தான் அனுபவிக்கிறதும் கொடுக்கிறதும் இல்லாதவனுடைய செல்வம் அவனுக்கு வெகுதுக்கமா மென்றவாறு.

பெரியோர்களுக்குக் கொடுக்கிறத்துக்கும்[4] தான் அனுபவிக் கிறத்துக்கும்[5] யோக்கிய மாகிய பொருளைப் புதைத்து வைத்துச் சிறை செய்கிற படியினாலே அந்தப் பொருளுக்கு அவனொரு

---

1. ஏத்தார்கள் விரும்பார் *முதல் *வரை அச்சு நூல் 2. இவ்வாக்கியம் அச்சுநூலில் இல்லை 3. மென் என்று காகிதச் சுவடியிலுள்ளது. 4. கொடுக்கிறதற்கும் 5. அனுபவிக்கிறதற்கும்

வியாதியாமென்பதாம். அவனுக்குத் துக்கமாகிறது தேடுகிறது மாம்.[1] ௬

1007. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகு[2]நலம்
பெற்றா டமியள்மூத் தற்று

என்பது

ஒரு பொருளுமில்லாதார்க்குக் கொடாதவன் செல்வம் விருதாவிலே போகுறது[2] எப்படிப் போலவென்றால் நல்லவடிவையும் குணத்தையுமுடைய யெவ்வன[3] வயசு ஸ்ரீ கொடுப்பாரும் புருஷனு மில்லாமல் தனியாயிருந்து காலம்*விருதாவிலே கழிந்து போலத்தோ[4] டொக்கு* மென்றவாறு.

காலங்கழிந்தாற் பின்னை வாராது; பொருளுடையவனுக்கும் தன் பெலன் போய் வயசு முதிர்ந்தால் பிறகு கொடுக்கக் கூடா தென்பதாம். ௭

1008. நச்சப் படாதவன் செல்வம் நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று

என்பது

தரித்திர ரானவர்களுக்கு ஒன்றுங் கொடாதவன் செல்வம் பெற்றிருக்கிறது, நடுத்தெருவிலே விஷமான எட்டி மரம் பழுத்தாப்[5] போலே யென்றவாறு. ௮

1009. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா திட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

என்பது

ஒருவன் பொருளைக் கொடாமலிருக்கிற நிமித்தியமாய்ச் சுற்றத்தார் மேலும் சினேகிதர் மேலும் அன்பில்லாமலும்[1] தான் வேண்டுவன வற்றையும் அனுபவியாமல் தன்னை வருத்தியும்,

---

1. இறுதிவாக்கியம் அச்சு நூலிலில்லை. 2. மிகு என்பது, அச்சுநூல் 3. போகிறது; (போவது) 4. யௌவன 5. போனதோ 6. பழுத்தது *முதல் *வரை: மூத்ததன்மைத்து - அச்சுநூல் 7. அன்புசெய்தலையொழிந்து-அச்சுநூல்

இரக்கிறவர்களுக்குக் கொடாமலும் தேடிவைத்த பொருள், அவன் வங்கிசத் தாருக்கு மாகாது; அதனைப் பிறர் கொண்டு போயனுபவிப்பார்க ளென்றவாறு.

பிறராவார், அரசன் கள்ளர் அன்னியரென்பதாம். ௯

1010. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து

என்பது

புகழுடைத்தாகிய செல்வத்தினை யுடையவர் கொடுக்கிறத்தினாலே[1] தரித்திரம் வாராது; வந்தாலும் கொப்பெனத்[2] தீரும்; அது என் போல வென்னில், உலகத்தை யெல்லாம் நிறைக்கப்பட்ட[3] மழை யொரு வேளை யில்லாமற் போனாலும், கொஞ்ச நாளையிலே வெகு மழை பெய்யு மென்றவாறு. ௰

ஆக அதிகாரம் ளக க்குக் குறள் சத ௰

இப்பால் 102 நாணுடைமை

என்பது நல்ல குணங்களையுடையவர்கள் தங்களுக்காகாத காரியங்களுக்கு நாணிப்பயப்படுகிற[4] தென்றவாறு.

1011. கருமத்தா னாணுத னாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற

என்பது

நல்லவர்களுடைய நாணமாவது, பொல்லாத காரியங்களுக்குப் பயப்படுகிறது; இது வல்லாமல் நல்ல முகத்தையுடைய குலத்திரிகள்[5] நாணுகிறது அதின் பிறகு என்றவாறு.

பாலத்திரிகள்[6] நாணுகிறது நாணமல்ல; பொருள் வாங்க வேண்டியென்பது. க

---

1. கொடுக்கிறதினாலே 2. விரைவில் 3. நிலைநிறுத்தும் - அச்சுநூல் 4. நாணுகிறதன்மை - அச்சுநூல் 5, குலஸ்திரீகள்-குலமகளிர் 6. பொது மகளிர்

1012. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு

என்பது

உண்ணுகிறது முடுக்கிறது முதலாக மற்று முண்டான தெல்லாம், மனுச சீவனுக் கெல்லாம் சரியானாலும்[1], நல்லவர் களுக்கு அழகாவது நாண முடைய தென்றவாறு. உ

1013. ஊனைக் குறித்த வுயிரெல்லாம் நாணொன்று
நன்மை குறித்தது சால்பு

என்பது

எல்லா வுயிர்களும் உடம்பைத் தமக்கு நிலையாகக் கொண் டிருக்கும்; அதுபோல் நாண மென்னப்பட்ட நன்மையுடையதே நற்குணமென்றவாறு. ங

1014. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேல்
பிணியன்றோ பீடு நடை

என்பது

பெரியோர்களுக்கு நாணுடைமையே ஆபரணமாம்; அந்த ஆபரண மில்லாவிட்டால் அவருடைய பெரியதனம்[2] கண்டவர் களுக்குப் பிணியாமென்றவாறு.

பொறுமை[3] யில்லாதவன் பெரியதனம்[2] பிணியாமென்பது[3]
ச

1015. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு

என்பது

பிறருக்கு வருகிற பழியும் தமக்கு வருகிற பழியும் சரியாக வெண்ணி அதற்கு நாணுகிறவர்களை உலகத்தார் நாணமிருக்கு மிடம் என்று சொல்லு வார்களென்றவாறு.

1. ஒத்ததெனினும் 2. பெருமித நடை - அச்சுநூல் 3. நாணம் என்றிருத்தல் தகும்.

பிறர்பழியும் தன்பழியும் சரியாக வெண்ணுகிறது, பிறருக்கு வந்தது தனக்கு வந்ததாகப் பார்த்து[1] நாணுகிறதாம். ரு

1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்

என்பது

பெரியோர்கள் நாணுடைமையையே தமக்குப் பொருளாகக்[2] கொள்வர்; அதல்லாமற் பெரியதான பூமியைக் கொள்ள நினையாரென்றவாறு. சா

1017. நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டால்
நாண்டுறவார் நாணாள் பவர்

என்பது

நாணுடைய நன்மையை யறிந்து அதனைவிடாமல் நடக்கிறவர்கள் அந்த நாணங் கெட வந்தால் பிராணனை விடுவார்கள்; நாணத்தை விடார்கள்; பிராணன் போகு[3]தென்றாலும் நாணத்தை விடார்களென்றவாறு. எ

1018. பிறர்நாணத் தக்கது தானாணா னாயின்
அறநாணத் தக்க துடைத்து

என்பது

கேட்டவர்களுங் கண்டவர்களும் நாணத்தக்க பழியை ஒருவன் தானாணாமற் செய்தால்,* அவனைத் தர்மம் விட்டு நீங்கிப் போம்* என்றவாறு.

பழிபாவங்களுக்கு நாணாதவர்களைத் தர்மம் சேராதென்பது கருத்து. அ

1019. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை

என்பது

---

1. இச்சிறப்புரை அச்சுநூலில் இல்லை பாத்து என்பது காகிதச் வடி
2. பாதுகாப்பாக - அச்சுநூல் 3. போகிற *முதல் *வரை: அந்நாணமை அவனைத்தருமம் விட்டு நீங்கத் தக்க குற்றத்தினையுடையது

ஒருவனுக்கு ஆசாரந் தப்பினால் அது அவன் குடிப் பிறப் பொன்றையே கெடுக்கும்; நாணங் கெட்டால் அது அவனுடைய நன்மைகளை யெல்லாங் கெடுக்கு மென்றவாறு.

ஆசாரங் கெடுக்கிறத்திலும்[1] நாணமழிகிறது பொல்ல தென்பதாம். ௯

**1020.** நாணகத் தில்லா ரியக்கம் மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று

என்பது

மனதிலே நாணமில்லாத மனுஷர் நடமாடித் திரிகிறது, மரப் பாவை சூத்திரக் கயிற்றினாலே[2] *உயிருண்டானது போலே ஆடுகிறத்தோ[3] டொக்கு* மென்றவாறு.

நாணமில்லாதவர் செத்த பிணத்தோ டொப்ப ரென்பதாம்.

ஆக அதிகாரம் ௱௨ க்குக் குறள் ௲௨௰

இப்பால் 103 குடி செயல் வகை

என்பது. ஒருவன் தான் பிறந்த குடியை யுபாயமாகக்[4] செய் கிறதாம்.[5]

**1021.** கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்

என்பது

தன் குடியை யதிக மாகிறத்தின்[6] பொருட்டுத் தொடங்கிய[7] காரியம்* முடியாத முன்னே தன்* கருமம் செய்கிறத்துக்குக்[8] கையொழியே னென்று சொல்லுகிறவனுக்கு, அது போலே பெருமையான காரியம் வேறொன்று மில்லை யென்றவாறு. ௧

---

1. கெடுகிறதிலும் 2. கயத்தினாலே என்று காகிதச் சுவடியிலுள்ளது. 3. ஆடுகிறதோ 4. உயரக். *முதல் *வரை: உயிருடையதாக மயக்கினாற் போலும் - அச்சுநூல் 5. செய்தலின்திறம் - அச்சுநூல் 6. மாக்குகிறதின் 7. துடங்கிய என்பது காகிதச் சுவடி, 8. செய்கிறதற்குக் 4. †முதல் †வரை: முடியாமையின் எண்ணிய - அச்சுநூல்

1022. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டின்
நீள்வினையா னீளுங் குடி

என்பது

முயற்சியும் நிறைந்த வறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டையு முடையதாய் எந்நாளு மிடைவிடாதே செய்கிற கருமத்தாலே ஒருவன் குடி யுயரு மென்றவாறு.

நிறைந்த வறிவாவது சுபாவமாயிருக்கிற அறிவுடனே பிறிதொன்றைக் கண்டறிகிறதுமாம். உ

1023. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்

என்பது

ஒருவன் தன் குடியை யுயரச் செய்ய வேணு மென்று நினைத்து அதற் கேற்ற கருமங்களைச் செய்கிறவனுக்குத் தெய்வம் பிடவை[1] யைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு சகாயமாய் வந்து முன்னிற்கு மென்ற வாறு. ௩

1024. சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு

என்பது

தன் குடியை யுயரச் செய்ய வேணு மென்று அதற்கேற்ற காரியங்களைச் செய்யப் போனால், அந்தக் கருமம் தனக்குத்தானே முடியு மென்றவாறு.

தெய்வந் துணையானால் சீக்கிரமாக எல்லாக் காரியமும் முடியு மென்பதாம். ௪

1025. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாய்ச்[2] சுற்று முலகு

என்பது

1. புடைவை - ஆடை 2. 'சுற்றமாச்' என்பது பிறர் கொண்டபாடம்,

குற்றமான காரியங்களைச் செய்யாமல் தன் குடியை யுயரச் செய்கிறவனை உலகத்தா ரெல்லாரும் தங்களுக்கு நல்ல வுறவாகச் சுற்றிக் கொண்டிருப்பார்க ளென்றவாறு.

குற்றமாவது தர்ம நீதிகள் தப்பி நடக்கிறதாம். ரு

1026. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்

என்பது

ஒருவனை நல்ல ஆண்மையை யுடையவன் என்று சொல்லுகிறது தான் பிறந்த குடியை* யுயரச் செய்கிறதே* யென்றவாறு.

குடியினை யுயரச் செய்த லாவது, தன் வங்கிசத்திலே பிறந்தவர்களை யுயரச் செய்து தன் வழியே நடக்கப் பண்ணிக் கொள்கிறதாம். சு

1027. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை

என்பது

சண்டை பண்ணுகிற போர்க்களத்திலே அநேகம்பேர் போய் நின்றாலும் சண்டை பண்ணி வெல்லுகிறவர்கள்[1] பெலவான்கள் ஆனாற்போலக்[2] குடியிலே பிறந்தவர்கள் பலரானாலும்† குடியைத் தாங்குறவன்[3] நல்லவனென்றவாறு.†

குடியைத் தாங்குகிறவனே பெரியவனென்பதாம். எ

1028. குடிசெய்வார்க் கில்லைப் பருவம் மடிசெய்து
மானங் கருதக் கெடும்

என்பது

1. குற்றமாவன தர்மநீதிகளுக்கு மறுதலையாய செயல்கள் *முதல் *வரை: ஆளுந்தன்மையைத் தனக்கு உளதாக்கிக் கோடல் - அச்சுநூல், பரிமேலழகருரை. 2. வெல்லுகிறது; 3. மேலதானாற் போல - அச்சுநூல் 4. தாங்குகிறவன் †முதல் †வரை: அதன் பாரம்பொறுத்தல் அச்சுவல்லார் மேலதாம் - அச்சுநூல்; பரிமேலழகருரை

தன் குடியை யுயரச் செய்கிறவன் அத்தைச்[1] செய்யாமல் காலத்தை நோக்கி மடியினைச் செய்துகொண்டு[5] மானத்தை நினைத்தானாகில் குடி கெடும், குடி செய்கிறவன் காலம் பாராமற் செய்ய வேணு மென்ற வாறு.

'காலம் நோக்கிற' தாவது; பனி குளிர் வெய்யிலென்று பின்னைச் செய்கிறோமென்கிறது மானமாவது, இந்தக்குடியிலே பிறந்தவர்க ளெல்லோருஞ் சுகமே யிருக்க நான் பிரயாசப் படுவேனோ என்று நினைக்கிறதாம். இப்படி நினைத்தாற் குடி யுயரா தென்பது.

அ

1029. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு

என்பது

தன் குடியி லுண்டான குற்றத்தைப் போக்கடிக்கப் படுகிறவனுடைய வுடம்பு துக்கத்துக் கிருப்பிடமாமென்றவாறு.

என் குடியிலுள்ளா ரெல்லாரும் இன்ப முற்று உயரவே, யான் இம்மையிலே கீர்த்தியும் மறுமையிலே தேவலோகமும் பெறுகிற படியினாலே, இந்த வுடம்பு வருத்தம் நல்லதென்று சொல்லுவ ரறிவுடையவ ரென்பதாம்.

கூ

1030. இடுக்கண்கால் கொன்றிடர் வீழ மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி

என்பது

குடியைத் தாங்க வல்ல நல்ல பிள்ளை பிறவா விட்டால் அந்தக் குடி குற்றமாகித் தோன்றிக் கெட்டுப்போ மென்றவாறு.

ய

ஆக அதிகாரம் ளா - க்குக் குறள் சநக0

1 அதனைச் 2 அச்சு நூலில் இது அதிகம் 3. நோக்குகிற 4. "கோஃடிட" என்பது இவ்வுரையாசிரியர் பாடமாகலாம் 4. அதனைச் 5. அச்சு நூலில் இது அதிகம்.

இப்பால் 104. உழவு

என்பது, வாணிகர்க்கும் வேளாளர்க்கு முரித்தாகிய* பயிரிடுகிற லட்சணஞ் சொல்லுகிறது*

1031. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை

என்பது

உழுது பயிரிடுகிறவ னுடம்பு வருத்தத்தைப் பார்த்து[1] அந்தத் தொழிலைச் செய்யாமல் மற்றைத் தொழிலைச் செய்து திரிந்து பொருளெய்திய விடத்தும் உண்கிறத்துக்காக[2]ப் பயிரிடுகிறவ னண்டைக்கு வர வேணுமாகையினால் உழுது பயிரிடுகிறதே பெரிய தொழிலென்றவாறு.

மற்றைத் தொழில்களெல்லா மதின் பிறகென்பதாம். க

1032, உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து

என்பது

உழுகிற தொழிலைச் செய்ய மாட்டாமல் மற்றைத் தொழில் களைச் செய்து திரிகிறவர்களை யெல்லாந் தாங்குகிற[3] படியினாலே உழுகிறவர்கள் உலகத்துச் செனமாகிய தேரைத் தாங்குகிற[4] அச்சு ஆணியாமென்றவாறு. உ

1033. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

என்பது

எல்லாரு முண்ணத் தக்கதாக உழுது பயிரிட்டுத் தாமும் உண்டு வாழ்கிறவர்களே வாழ்கிறவர்கள், மற்றவர்களெல்லாரும் பிறரைத் தொழுது அதனாலே தாம் உண்கிறத்துக்கு உழுதுண்கிறவர்களைப் பின் செல்லுவரென்றவாறு.

*முதல் *வரை; உழுதற்றொழில்-அச்சுநூல் 1. பாத்து என்பது காகிதச் சுவடி 2. உண்கிறதற்காக 3. தாங்கிற - காகிதச்சுவடி 4. உண்கிறதற்கு

பிறரைத் தொழுது அவர்கள் கொடுக்க வாங்கிக் கொண்டு தம் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளுகிறவர்கள் தமக்குரிய ரல்லரென்பது. ௯

34. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்

என்பது

உழுகிற தொழிலாலே நெல்லை யுடையார், பல வேந்தர் குடை நீழலதான பூமியெல்லாம், தங்கள் ராசாவின் குடையின் கீழே காண்பரென்றவாறு.

உழுது பயிர் இடுகிறத்தினாலே[1] தங்கள் ராசாவுக்குச் செல்வம் பெருகி யுலகமெல்லாம் அவனுதாக[2]க் காண்ப ரென்பதாம். இரக்கிறவர்களுக்கு உறவும் பூமியாள்கிறவனுக்குச் செல்வமும் உழவோ ரென்பதாம். ௪

1035. இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்

என்பது

தன்கையாலே உழுது பயிரிட்டு உண்கிறவர்கள், பிறரைத் தாமிரவார்; தங்களைக் கேட்டு இரக்கிறவர்களுக்கு அவர் வேண்டினத்தை[3] யொளியாமற் கொடுப்பர்க ளென்றவாறு.

உழுகிறவர்கள் செல்வம் பழுதுபடா தென்பதா ரு

1036. உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை

என்பது

உழுகிறவர்கள் கை மடங்கி அந்தத் தொழிலைச் செய்யா விட்டால், எல்லாரும் வேண்டி யுண்ணத்தக்க வுணவுந் துறந்தவர்களுக்கு அந்தத் துறவறத்திலே நிற்கிறது மில்லாமற் போமென்றவாறு.

---

1. இடுகிறதினாலே 2. அவனதாக 3. வேண்டினதை

உழுது பயிரிடுகிறதில்லாவிட்டால் உலகத்திலே இம்மை மறுமை வீடு என்கிறதில்லை[1]யென்பது ௬

1037. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்
என்பது

ஒரு நிலத்தை யுழுகிறவன் ஒரு பலப்[2]புழுதிமண் கஃசாகத்தக்க தாகக் காயவிட்டால்[3], அதிலே யிடுகிற பயிருக்கு ஒரு பிடி எருவும் போடாமல் தானே நன்றாய்ப் பணைத்து விளையு மென்றவாறு. ௭

1038. ஏரினு நன்றா லெருவிடுதல் கட்ட[4]பின்
நீரினு நன்றதன் காப்பு
என்பது

பயிருக்கு உழுகிறதும் எருப் போடுகிறதும் நல்லது; உழுது எருப் போட்டுப் பயிரிட்ட பிறகு, களை பறித்து வேலி கட்டிக் காக்கிறது[5] தண்ணீர் நிறைக்கிறத்திலும்[6] நல்லதென்றவாறு.

பயிரிடுகிறவனுக்கு உழுதல் எருப்போடுதல் களைபறித்தல் தண்ணீர்கட்டல் மாடுமேயாமற் காத்தல் என்று சொல்லப்பட்ட ஐந்து வகையுஞ் செய்ய வேணுமென்பது. ௮

1039. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்
என்பது

அந்த நிலத்தை யுடையவன் நாள் தோறும் போய்ப் பார்த்து அந்தப் பயிருக்குச் செய்ய வேண்டினது செய்யாமல் மடிந்திருந்தால், அந்தப் பயிர் அவன் பெண் சாதியைப் போலே தன்னிலே[7] வெறுத்துக் கொண்டு அவள் அவனுடனே பிணங்கிப் போ மென்றவாறு.

---

1. என்கிற பயன்கள் நிகழா - அச்சநூல் 2. அந்த: 3. காயா விட்டால்; 4. நட்ட; 5. கார்கிறது - காகிதச்சுவடி. 6. நிறைக்கிறதிலும் 7. தன்னுள்ளே - அச்சநூல்

பெண்சாதியைச் சேராமல் விட்டுப் பிரிந்திருந்தால், அவள் வெறுத்துப் பிணங்கி வாடியிருக்கிறாப்போலே, பயிரும் அன்றாடன்[1] பாராவிட்டால் வாடி யிளைத்து விளையாமற் போமென்பதாம். ௬

1040. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லா ணகும்

என்பது

நான் தரித்திரனென்று விசாரப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களைக் கண்டு பூமி யென்னப்பட்ட தேவி தன்னுள்ளே சிரிப்ப ளென்றவாறு.

உழுது பயிரிட்டுண்ணாத[2] படியினாலே சிரிப்பளென்பதாம். ൰

ஆக அதிகாரம் ளரு க்குக் குறள் சதசம

இப்பால் 105. நல்குரவு

என்பது, தான் போசிக்க[3] வேண்டினது ஒன்று மில்லாதது[4] என்பதாம்.

1041. இன்மையி னின்னாத தியாதெனி னின்மையின்
இன்மையே யின்னா தது

என்பது

ஒருவனுக்குத் தரித்திரம் போலே பொல்லாதது ஏதென்றால் தரித்திரமே பொல்லாத தென்றவாறு. ௧

1042. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்

என்பது

தரித்திர மென்று சொல்லப்பட்ட பாவி யொருவனுக்கு வந்தால், அவனுக்கு இம்மை யின்பமும் மறுமைப்பயனு

1. நாடோறும் அச்சுநூல். 2. குண்ணமாட்டாது. 3. அனுபவிக்க: மில்லாமை - அச்சுநூல்

மில்லையா மென்றவாறு.

இம்மையின்பமாவது, வேண்டிய வஸ்த்துக்களை யனுபவித்த லாம். மறுமைப் பயனாவது தான தர்மங்களைப் பண்ணுதலாம். உ

1043. தொல்வரவும் தோலுங் கெடுக்கும் தொகையாக
நல்குர வென்னு நசை

என்பது

ஒருவனுக்குத் தரித்திர மென்று சொல்லப்பட்ட குற்றம், தன் வங்கிசத்தார் நடந்த நல்ல நடக்கையையும் அதற்கேற்ற நல்ல வசனங்களையும் கெடுக்கு மென்றவாறு.

தரித்திரம் வந்தால் இழி தொழில்களையும் இழிவான வசனங்களையும் செய்வர் என்றவாறு[1]. ங

1044. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்

என்பது

பொல்லாத வசனங்களைச் சொல்லாத நல்ல குடியிலே பிறந்தவர்களுக்குத் தரித்திரம் வந்தால், அது பொல்லாத வசனங்களைச் சொல்லத் தக்கதாய் நல்ல குணங்களை மறப்பிக்கு மென்றவாறு.

தரித்திரம் வந்தால் நல்ல குணங்களை மறந்து விடுவரென்பதாம். ச

1045. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்

என்பது

தரித்திர மென்னப்பட்ட துன்பத்திலே பல துன்பங்களும் வந்து விளையு மென்றவாறு. ரு

1. இச்சிறப்புரை அச்சுநூலில் இல்லை

பல துன்பமாவது, தரித்திரனானவன் அயிசுவரியவான்கள் வாசலிலே நிற்கிற துன்பமும், அவர்களைக் காண்கிற துன்பமும், கண்டால் அவர்கள், இன்று நாளை யென்று மறுக்கிற துன்பமும், அவர் கொடுக்கிற துன்பமும், கொடுத்தால் அது கொண்டு வந்து சாப்பிடத் தக்கது உடுக்கத் தக்கது தேடுகிற துன்பமும் இது முதலாயின. ரு

1046. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்

என்பது

மெய்யான சாத்திரத்தை யறிந்து நல்ல பொருளைச் சொன்னாலும், நல்கூர்ந்தாரான தரித்ரர் சொல் பொருளில்லாதாய்த் தோன்று மென்றவாறு.

பிரயோசன மில்லாததாவது. தரித்திரன் சொல்லை அயிசுவரிவான் விரும்பிக் கேட்டால் அவன் குறையைத் தீர்க்கவேணு மென்று பயப்பட்டு யாரும் கேளார்கள்: ஆனபடியினாலே பிரயோசன மில்லாததாய் முடிதல். சு

1047. அறஞ்சாரா நல்குர வீன்ற யாலும்
பிறன்போல நோக்கப் படும்

என்பது

தர்மத்துடனே கூடாத தரித்திரத்தை யுடையவன் றன்னைப் பெற்ற தாயானாலும்[1] பிறத்தியானைப் போலப் பார்ப்பள்[2] என்றவாறு.

தரித்திரம் தர்மத்துடனே கூடாதாவது, காரியங்காரணம் இரண்டு மொன்றாய்க் கூடி நினைத்தபடியே முடியாததாம். தரித்திரனானவன் தான் வாங்கிக் கொள்ளுகிறதே யல்லாமல் கொடுக்கக் கூடாத படியினாலே, சுற்றத்தாரையும்[3] துறப்பரென்பது. எ

1, தாயாலும்; 2. பார்க்கப்படுவன்; 3, சுற்றத்தாரும் அவனைத்-
அச்சுநூல்

1048. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலு நிரப்பு

என்பது

நேற்றுக் கொல்லுகிறது போலே வந்து பொல்லாத காரியத்தைச் செய்த தரித்திரம், இன்றைக்கும் என்னிடத்தில் வருகிறதோ[1] வந்தாலதற்கு நானென்ன செய்வ னென்றவாறு.

பொல்லாத காரிய மாவது, முன் சொல்லிய துன்பங்களாம்
அ

1049. நெருப்பினுட் டுஞ்சலு மாகும் நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது

என்பது

மந்திரம் மருந்துகளினாலே ஒருவனுக்கு நெருப்புக்குள்ளே நித்திரை பண்ணலாம்; தரித்திரம் வந்தால் ஒன்றிலேயுப் நித்திரை வாரா தென்றவாறு.

நெருப்பினும் தரித்திரம் பொல்லாதென்பதாம். கூ

1050. துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று

என்பது

அனுபவிக்க வேண்டும் பொருள்களில்லாதவர்கள் தங்களாற் செய்யத் தக்கதாவது, துறந்து சன்னாசம் பண்ணுகிறதே; அது செய்யாவிட்டரல் பிறத்தியார் வீட்டிலே யிருக்கிற உப்புக்கும் காடிக்கும் கூற்றுவனா மென்றவாறு.

தரித்திரனானவனுக்கு மான மழியாமற் செய்யவேண்டினது துறவேயாம்; சுற்றத்தார் சேராமல் துறந்தாலும் தான் துறந்தவன் கனம் பெறுவ னென்பது. ய

ஆக அதிகாரம் க்குக் குறள் சதறுய

1. வருகுதோ - காகிதச்சுவடி

இப்பால் 106. இரவு

என்பது. இரந்துண்டு பிழைக்கிறத்தை[1]ச் சொல்லுகிறதாம்.

1051. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று

என்பது

தரித்திரவான்கள் தமக்கு இரத்தற் கேற்றவர்களைக் கண்டால் அவரிடமிரக்க; அவர்களில்லையென்று ஒளித்தால்[2] அவர்களுக்குக் குற்றமில்லாமல்[3] இரக்கிறவர்களுக்குக்[4] குற்றமில்லையென்ற வாறு.

இரத்தற் கேற்றவர்களாவது, கேட்கிறத்துக்கு[5] முன்னே அறிந்து கொடுக்கிறவர்களும், கேட்டது மறாமற் கொடுக்கிறவர்களுமாம். க

1052. இன்ப மொருவற் கிரத்தல் இரந்தவை
துன்ப முறாஅ வரின்

என்பது

இரக்கிறதும் சுகமாம், இரக்கப்பட்ட பொருள் இரக்கிறவனைத் துக்கப்படுத்தாமல் வந்தா லென்றவாறு.

துக்கப்படாமல் வருகிறதாவது, கொடுக்கிறவர்கள் இன்று நாளை யென்று திருப்பாமலும் அபிமானம் அழிய வைது திட்டாமலும் கொடுத்தாற் சுகமென்பதாம். உ

1053. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து

என்பது

ஒளியாமற் கொடுக்க வல்லவர்களுமாய், இரக்கிறவன் மனதறிந்து கொடுக்கிறவர்களுமாய் இருக்கிறவர்கள் முன்னே நின்று இரக்கிறதும், தரித்திரத்துக்கொரு அழகா மென்றவாறு

1. பிழைக்கிறதை 2. ஒளித்தாராயின்: 3. குற்றமாவதல்லது 4. தமக்கு - அச்சுநூல். 5. கேட்கிறதற்கு

தரித்திரர் கேட்ட பொருள் கொப்பென[1] வந்தால் அது மிகவும் நன்மையாம். ௩

1054. இரத்தலு மீதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு

என்பது

தன்னுடைமையை இரக்கிறவர்களுக்குக் கொடாமல் ஒளிக்கிறத்தைக்[2] கனாவிலேயும் அறியாதவர்களிடத்திலே போய் ஒரு பொருளை இரக்கிறது, தான் கொடுக்கிறத்தோடு[3] ஒக்கு மென்ற வாறு.

ஒழியாமல்[4] கொடுக்கிறத்தினாலே[5] தன் புகழ் கெடாது. அதனாலே கொடுக்கிறத்துக்குச்[6] சரியா மென்பது. ௪

1055. கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது

என்பது

இரக்கிறவர்கள் தன் குறையைச் சொல்ல மாட்டாமல் முன்னே நின்ற மாத்திரத்திலே, அது வறிந்து தமக்குளது ஒளியாமற் கொடுக்கிறவர்கள் சில பேர் உலகத்திலே உண்டு. ஆனபடியினாலே இரக்க வருகிறார்க ளென்றவாறு.

அப்படிக் கொடுக்கிறவர்களில்லாவிட்டால் மானத்தை விடாமல்[7] பிராணனை விடுவ ரென்பது. ௫

1056. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும்

என்பது

தமக்குள்ள பொருளை யொளிக்கிறதாகிய வியாதியை யில்லாதவரைக் கண்டால் அபிமானம் விடாம லிருக்கிற பேர்க்கு,

1. குப்பென - அச்சுநூல். 2. ஒளிக்கிறதை. 3. கொடுக்கிறதோடு.
4. ஒளியாமல் அச்சுநூல் 5. கொடுக்கிறதனாலே 6. கொடுக்கிறதற்குச்
7. அச்சு நூலிற் கண்டது

இரப்பினாலே வரப்பட்ட துக்கங்களெல்லாம் ஒருக்காலே[1] கெட்டுப் போமென்றவாறு.

ஒளிக்கிறதாவது கெட்டவற் குதவாதது. சு

1057. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து

என்பது

தன்னை யவமதியாமலும் பொல்லாத வார்த்தைகளைச் சொல்லாமலும் கொடுப்பாரைக் கண்டால், இரக்கிறவன் மனது தன்னுள்ளே வெகு சந்தோஷத்தை யடையு மென்றவாறு.

அவமானம் பேசாதவர்கள் நல்ல வசனம் சொல்லுவர்கள்; அதனாலே சந்தோஷமாமென்பது. எ

1058. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று

என்பது

தரித்திரத்தினாலே இரக்கிறவர்க ளில்லாவிட்டால் குளிர்ந்த இடத்தை யுடைய உலகத்துக்குள்ளே செனங்கள் பிறந்து சஞ்சரிக்கிறது, உயிரில்லாத மரப்பாவை சூத்திரக் கயிற்றினாலே[2] கூத்தாடுகிற மரப்பாவை யோடொக்கு மென்றவாறு.

இரக்கிறவர்களுக்குக் கொடுத்துப் புகழும் புண்ணியமும் செய்து கொள்ளாதவர்கள் செத்தாரோ டொப்பரென்பதாம்.

'ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்கண்ணவர்'[3] என்று சாத்திரங்களிலேயும் சொல்லும். அ

1059. ஈவார்க ணென்னுண்டாம் தோற்ற மிரந்துகோள்
மேவா ரிலாஅக் கடை

என்பது

---

1. ஒருகாலே;சேர-அச்சநூல் 2. கயத்தினாலே - காகிதச்சுவடி 3. இது இக்குறளுரையில் பரிமேலழகர் காட்டிய மேற்கோள்

அயிசு வரிப வான்களிடத்திலே தரித்திரவான்கள் வந்து இரவா விட்டால் கொடுக்கிறவர்களுக்கு என்ன புகழுண்டாம் ஒரு கீர்த்தியுமில்லை யென்றவாறு.

கொடுக்கிறதில்லா விட்டால் கீர்த்தியு மில்லையாம்.

1060. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி
என்பது

கொடுக்கிறவர்களுக்குப் பொருளுதவாத போது 'இவன் நமக்குக் கொடுக்க வில்லை' என்று கோபிச்சுக்[1] கொள்ளாம லிருக்க வேணும்; அப்படிக் கோபிச்சுக் கொள்ளாம லிருந்தால் அவன் தரித்திரம் நாளிலே விட்டுப் போமென்றவாறு.

நாம் பொருள் கொடுக்கிறத்துக்கு[2] இத்தனைப் பிரயாசைப் படுகிறோமல்லோ அப்படியல்லோ அவனும் வருத்தப்படுகிறான் என்றெண்ணிக் கோபியாமல் இருக்கவேணும். அப்படி நற் குணமா எண்ணினால் அதனாலே அவன் வறுமை தீருமென்பது தாம்.

ஆக அதிகாரம் ளாக்குக்குறள் சதசுய

இப்பால் '07 இரவச்சம்

என்பது, அபிமானங் கெடுகிறதாகிய இரப்புக்குப் பயப்படுகிற தாம்.

1061. கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும்
என்பது

தமக்குள்ள பொருளை ஒளியாமல், இரவலராய் வந்தது நாம் செய்த புண்ணிய மென்று சந்தோஷப்பட்டுக்,

1. கோபித்துக் 2. தேடுகிறத்துக்கு-அச்சுநூல்

கொடுக்கிற *கண் போலச் சிறந்தவ*ர்களிடத்திலேயும் இரவாமலிருக்கிறது இரந்து கொண்டு செல்வ மெய்துகிறத் திலுங்[1] கோடி நன்மை யென்றவாறு. சு

1062. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்

என்பது

இந்த வுலகத்தைப் படைத்தவன், இதிலே பிறக்கிற சீவன் களுக்குச் செல்வத்துடனே வாழ விதியாமல், இரந்து பிழைக்க என்று படைத்தானானால், அவனும் இரக்கிறவர்களைப் போலே யெங்கும் இரந்து திரிந்து கெட்டுப் போக வேணு மென்றவாறு.

சீவன்களுக் கெல்லாம் ஆயிசும் வேண்டிய வுண்டியும் அதற் கேற்ற தொழிலும் பழவினை வசத்தினாலே† வருகிறது; அப்படியல்ல ஒருவன் படைத்தானென்றால்,† சிலபேர்க்கு இரக்கிற தொழிலைக் கற்பித்த படியினாலே, அவனும் இரந்து கெடுவனென்பதாம். செய்தது அனுபவிக்க வேணும் என்கிற நாயத்தினாலே இரப்பைப் படைத்தவனும் கெடவேணும்.

உதாரணம் முற்பகை செய்யின் பிற்பகை விளையுமென்பது.
உ

1063. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்

என்பது

தரித்திரத்தினாலே வந்த துக்கத்தை முயற்சியாலே நீக்கக் கடவோம் என்று *நினையாமல் இரந்துண்டு நீக்கக் கடவோம் என்று* நினைக்கிற கெட்டி வலுமையைப் போல் வேறு வலுமை யில்லை யென்றவாறு.

---

*முதல் *வரை அச்சு நூல் 1. அடைகிறதிலுங் - அச்சுநூல். †முதல் †வரை; கருவொடு கலந்த அன்றே அவன் கற்பிக்குமன்றே அவற்றுள் - அச்சு நூல் (பரிமேலழகருரை) *முதல் *வரை: அச்சுநூலிற்கண்டது (பரிமேலழகருரை)

வறுமை தீருகிறத்துக்கு[1] ஞாயமான முயற்சி யுற்சாகமு மிருக்க, ஞாயமல்லாத இரப்பாலே† தீரநினைக்கிறதே வலுமை யென்பது†

1064. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு

என்பது

உண்ண உடுக்க இல்லாமல் தரித்திரம் வந்த போதும், பிறரிடத்திலேபோய் இரக்கிறத்துக்கு[2]ச் சம்மதியாத நன்மை, எல்லாவுலகமுங் கொள்ளாத பெருமையுடைய தென்றவாறு.

தரித்திரம் வந்தவிடத்தும் இரவாமல் முயற்சியாலே பிழைக்கிறது உத்தமமாமென்பது. ச

1065. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்

என்பது

ஞாயமான முயற்சியால் தான் கொண்டுவந்தது தெளிந்த தண்ணி[3] போலே யிருக்கிற புல்லரிசிக்கூழானாலும் அத்தை[4]ச் சாப்பிடுகிறத்துக்கு[5] மேலே அதிலும் நல்லதில்லை யென்றவாறு.

தான் தேடிவந்த பொருள் எத்தனைக் கொஞ்சமானாலும் குற்றமான இரப்பாலே வந்த தல்லாமல் தன்னு[6]தான படியினாலே[7] அமுதத்தோ டொக்கு மென்பதாம். ரு

1066. ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்
கிரவி னிளிவந்த தில்

என்பது

தண்ணீர் இடையாமல் வருத்தப்படுகிற பசுவைக் கண்டு தர்மபுத்தியாய் நினைச்சு[8] இந்தப்பசுவுக்குத் தண்ணீர் குடுங்கோள்[9] என்று கேட்டாலும், அந்த இரப்பைப் போல் நாவுக்குக்

†முதல் †வரை; தீர்க்க நினைக்கிறதனால் வன்மை ஆயிற்று. 1. தீருகிற தற்கு 2. இரக்கிறதற்கு 3. தண்ணீர் 4. அதனை 5. சாப்பிடுகிற தற்கு 6. தன 7. தனது டைமை ஆதலின் - அச்சுநூல் 8. நினைத்து 9. கொடுங்கோள்

குற்றமானது வேறொன்று மில்லை யென்றவாறு.

தர்யத்துக் கானாலும் இரந்து செய்யலாகா தென்பதாம்.

1067. இரப்பன்[1] இரப்பாரை யெல்லாம் இரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று

என்பது

இரக்கிறவர்களை யெல்லாம் தானிரந்தாலும்[2], தமக்குள்ளது ஒளிக்கிறவர்களை யிரக்கவேண்டா மென்ற[3]வாறு.

ஒளிக்கிறவர்களை யிரந்தால் அபிமானம் கெடப் பேசுவார்கள்; ஆனபடியினாலே ஒளிக்கிறவர்களை யிரக்கலாகாதென்பதாம். எ

1068 இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

என்பது

தரித்திர மென்கிற சமுத்திரத்தை இரப்பு என்னும் படவினாலே[4] தாண்டுவோம் என்று இரப்பென்னும் படவிலே[5] ஏறிக்கொண்டு தரித்திரமென்னுங் கடலிலே ஓடுகிறபோது தன்பொருளை ஒளிக்கிறவனென்கிற கெட்டித்தரைபட்டவுடனே[6] பிளந்துபோமென்றவாறு.

இரக்கிறவன், இல்லையென்று ஒளிக்கிறவனைக் கண்டவுடனே, கெடுவ னென்பதாம். அ

1069. இரவுள்ள உள்ள முருகும் கரவுள்ள
உள்ளதூஉ மின்றிக் கெடும்

என்பது

---

1. இரப்பான் - காகிதச்சுவடி. 2. யானிரவாநின்றேன் நீங்களிரந்தாலும் 3. என்றுகூறி - அச்சுநூல் 4. படகினாலே 5. படகிலே. 6. தரையோடுதாக்குமாயின் அப்படகு

* ஐசுவரியவான்கள் முன்னே தரித்திரர்கள் போய் நின்று இரந்து நிற்கிற கொடுமையை நினைந்தால் என் மனசு உருகும்:*

அயிசுவரியவான்கள் பொருள் இருக்கச்சிலே[1] இல்லை யென்கிற கொடுமையைத் நினைத்தால் அவ்வுருகுமளவு தானுமின்றிப்† பிராணன போமென்றவாறு.

இரப்பை நினைத்தால் உருகுமென்றும் ஒளிக்கிறவர்களை நினைத்தால் கெடுவரென்றும் சொன்னார் பிறரும்[2]. கூ

1070. கரப்பவர்க்கு யாங் கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்

என்பது

ஒளிக்கிறவர்கள் இல்லை யென்று சொன்னவுடனே இரக்கிறவன் பிராணன் போம்; இரக்கிறவன் தாவென்று கேட்டபொழுது ஒளிக்கிறவன் பிராணனும் போகாநிற்கும். பிராணன் போனாற் பின்னை இல்லை யென்று எப்படிச் சொல்லுவானென்றால் ஏழு புரையிலே ஒரு புரைக்குள்ளே ஒளித்திருக்குமென்றவாறு.

ஒளித்திருக்கிறதாவது, இரக்கிறவன் கேட்டத்துக்கு[3] என்ன சொல்லு வோமென்று ஏங்கியிருத்தலாம். இரக்கிறவனுக்குப் பிராணன் போற[4] தாவது; 'இவனில்லை யென்றானே. இனி நாமென்ன செய்வோம்' என்று ஏங்கி யிருத்தலா மாதலால் இரப்பினும் இல்லை யென்கிறது பொல்லாதா மென்பது ய

ஆக அதிகாரம் ளஎ க்குக் குறள் சதளய

இப்பால் 108. கயமை

என்பது, நற்குணங்கள் ஒன்றுமில்லாத துர்ச்சனர் குணங்களைச்[5]

---

*முதல் *வரை: †முதல் †வரை – அச்சுநூல் 1. இருக்குங்கால் 2. பிறர் என்றது நாலடியாரை (குறிப்புரைகாண்க) 3. கேட்டதற்கு 4. போகிற 5. தன்மைகளைச் - அச்சுநூல்

சொல்லுகிறதாம்.

1071. மக்களே போல்வர் கயவர் அவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்

என்பது

துர்ச்சனர் வடிவாலே மனுஷரோடொப்பர், வடிவொத்தாலுங் குணமொவ்வாது: இப்படி யொப்பாரை மிருக சாதியிலேயும் விருட்ச சாதியிலேயுங் கண்டதில்லை யென்றவாறு.

துர்ச்சனரைக் குணங்களா லறிகிற தல்லாமல் வடிவா லறியப்படா தென்பதாம். க

1072. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்

என்பது

தமக்குறுதியான காரியங்களை யறிகிறவர்களைப் பார்க்கிலும் அதை யறியாத துர்ச்சனர் நல்லவர்கள்; அதேனென்றால் தனக் குறுதியான காரியங்கள், இம்மை மறுமை மோட்சங்களுக் குரித்தாகிய புகழ் தர்மம் ஞானம் இதுகளை[1]யறிந்து செய்கிற வர்கள் வெகுதான தர்மங்களைப் பண்ணப் பெற்றோ மில்லை என்றும், செய்கிறத்துக்கு[2] என்ன விகாதம் வருமோ என்றும், இதுகளிலே[3] தப்பிதம் வந்தால் பகை பழி பாவம் என்ன வருமோ வென்றும் மனதிலே விசாரப் படுவர். துற்செனர், புகழ் தர்மம் ஞானங்களைச் செய்யாமல் பகை பழி பாவங்களைச் செய்யா நின்றும் ஒரு விசாரமு மில்லாமலிருப்பார்க ளென்ற வாறு.

துற்செனர் பகை பழி பாவங்களுக்கு அஞ்சாரென்ப தாம். உ

1073. தேவ ரனையர் கயவர் அவருந்தா
மேவன செய்தொழுக லான்

என்பது

---

1. இவற்றை 2. செய்கிறதற்கு 3. இவற்றிலே

தேவர்களும் கயவரும் சரி யொப்பர்[1]; அதெப்படி யென்றால், தேவர்கள் எப்படிச் செய்தாலும் தெண்டிப்பாரில்லை; துற்செனரும் தங்களைத் தெண்டிப்பாரில்லை யென்று தாங்கள் நினைத்தபடியே செய்கிறத்தினாலே[2] யென்றவாறு. துற்செனர் செய்வது தவிர்வது அறியாமல் வேண்டியபடியே செய்து கெடுவர்களென்பதாம். ௩

1074. அகப்பட்டி யாவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்

என்பது

கீழானவன். தன்னிலுங் கொஞ்சமானவன் துற்மார்க்கனாய் நடந்தால், அவனைக்கண்டு அவன் முன்னே தன் நடக்கைகளைக் காட்டித் தானவனிலும் பெரியவனென்று இறுமாந்து கொண்டிருப்ப னென்றவாறு. ௪

1075. அச்சமே கீழ்கள தாசாரம்[3] எச்சம்
அவாவுண்டேல் உண்டாஞ் சிறிது

என்பது

துற்செனருடைய ஆசாரங் கண்டால் பயம் வரும்; அதேனென்றால் *துற்செனன் ஆசாரமாயிருக்கிறது*, மனதிலே கபடமெண்ணிக் கொண்டு ஆசாரம் பண்ணுவார்கள். அது தெளிய அறிந்து கபடமில்லாவிட்டால் சிறிது[4] நாள் ஆசாரமாய் நடந்த பிறகு கெட்டுப் போவார்களென்ற வாறு.

துற்செனருடைய ஆசாரத்தை மெய்யென்று நம்ப வேண்டாமென்பதாம். ௫

1076. அறைபறை யன்னர் கயவர் தாங்கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்

என்பது

1 சரியொப்பர்-அச்சுநூல் 2. செய்கிறதினாலே; செய்வர் - அச்சுநூல் 3. ஆசாரம்-ஒழுக்கம் *முதல் *வரை: அச்சுநூலில் இல்லை; ''அவர்கள் என்றுளது 4. சில

கயவர் தாங்கள் கேட்ட ரகசியத்தை எங்கெங்கும் எல்லாக்கு கும் சொல்லுவர்; அதனாலே அடிக்கப்பட்ட கிடு கோ டொப்ப ரென்ற வாறு.

ரகசியங்களைப்[1] பிறரறிந்தாற் குற்றம் வருமென்பது.[2] | சு

1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு

என்பது

துற்செனர் தங்கள் தாடையை[3] நெருங்க அடிக்க வல்லவர்களை யுடைய வர்க்கல்லாமல் மற்றவர்களுக்குச் சாப்பிட்டுக் கழுவின கையைத் தெறிக்கச் சொன்னாலும் தெறியாரென்றவாறு[4].

துற்செனர் தங்களை யடிச்சு[5] உதைக்கிறவர்களுக்கு எல்லாப் பொருளும் கொடுப்பர்; நல்லதனமாகச் சொல்லி இரப்பாய்க் கேட்டாலும் ஒரு துரும்புங் கொடார்க ளென்பதாம். எ

1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படுங் கீழ்

என்பது

தரித்திர னானவன் வந்து தன் குறையைச் சொன்னவுடனே தங்களாலான மாத்திரம் உபகாரம் பண்ணுவார்கள், பெரியோர்கள்; துற்செனர் கரும்பைப் போலே யடிச்சு[5] நருக்கினவர்* களுக்குத் தங்கள் பொருளெல்லாங் கொடுப்ப ரென்றவாறு. அ

1079. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்

என்பது

பிறர் செல்வத்தினாலே பட்டும் பவ்வந்தியும்[6] உடுத்துக் கொள்ளு கிறத்தையும்,[7] பலருடனே கூடச் சாப்பிடுகிறத்தையும்[8] துற்

1. மறை-இரகஸ்யங்கள்; 2. வருமென்று மறைத்துச் சொல்லிய சொல் அச்சுநூல் 3. தாடையில் 4. தெறியாதென்ற வாறு - காகிதச் சுவடி 5. அடித்து நெருக்கினவர்-அச்சுநூல் 6. பவ்வந்தி 7. துகில் என்பது பரிமேலழகருரை கொள்ளுகிறதையும் 8. சாப்பிடுகிறதையும்

செனன் கண்டால், அதற்குப்[1] பொறாமல், அவர்கள் பேரிலே குற்றமொன்று மில்லாவிட்டாலும் குற்றமுண்டாக்க வல்லவர் களா மென்றவாறு.

துற்செனன் பிறர் செல்வங்களைக் கண்டால் பொறுப்பற்று[2] அவர்களுக்குக் கேடு தேடுவ னென்பதாம். கூ

1080. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து

என்பது

துற்செனர்களுக்கு ஏதாகிலுமொரு துக்கம் வந்தால், அதுவே மனதிலே யெண்ணிக் கொண்டு தங்களைப் பிறருக்கு விற்றுக் கொள்ளுகிறத்துக்கு[3] உரியவர்; அது வல்லாமற் பின்னையொன் றுக்கும் உரிய ரல்ல ரென்றவாறு.

ஒரு குற்றமாவது[4] *உண்கிறது மிகவுமில்லாவிட்டால் வித்துக்[5] கொண்டானாலும் மெற்ற[6]வுண்ணவேணுமென்று நினைப்பர்; பின்னையும்* எந்த இழிதொழில்[7] ஆனாலுஞ் செய் வர்கள் துர்க்குணமறிந்து யாவரும் கொள்ளார்கள்; கொள்ளா விட்டாலும் வலியக்கொண்டு[8] கொள்ளுங் கோள் என்று சொல்லு வர்களென்பது. ௰

கயவர் ஒருதொழிலுக்கு முதவார் என்பது கருத்து

ஆக அதிகாரம் ளஅக்குக்குறள் சதஅ௰

பொருட்பால் முற்றும்

---

1. அவற்றைப் 2. பொறுப்பத்து என்பது காகிதச் சுவடி. பெருமை; யுற்ற 3. கொள்ளுகிறதற்கு 4. துக்கமாவது *முதல் *வரை: உணவில்லாமை போல்வது; கயவர்-அச்சுநூல் 5. விற்றுக் 6. மெத்த, நிறைய 7. பழி தொழில்-காகிதச்சுவடி 8. வலியச்சென்று என்றிருக்கலாம் இது அச்சுநூல்

இப்பால் வெண்பா:

"அரசிய லைமைந் தமைச்சிய லீரைந்
துருவல் லரணிரண்டொன் றொண்கூழ் - இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை"

[குறிப்பு:- இது திருவள்ளுவ மாலைச் செய்யுள் எண் 26: போக்கியார் பாடியது: காலிங்கருரையிறுதியிலும் இச் செய்யுள் கொடுக்கப்பட்டுள்ளது].

இனி, காமத்துப்பால்

என்பது, இனி அந்தப் பொருளைத்துணைக் காரணமாக வுடைய இன்பங்கூறுகின்றார்.

இன்பமாவது ஐம்புலன்களும் ஒருகாலத்து ஒருபொருளை நுகர்கின்ற இன்பமாம். வடநூலுக்குள்ளே போசராசன், "சுவை பலவென்று சொன்னான்[1] நான் கூறுகின்றது இன்பச்சுவை யொன்றையுமே,[2] இது புணர்ச்சி பிரிவு என இருவகைப்படும். புணர்ச்சியைக் களவென்றும், பிரிவைக் கற்பென்றும் பிரசித்தியாக[3] உலகநடையோடு ஒப்பும் ஒவ்வாமையு மாகக் கூறுகின்றார்.

களவாவது, பிணிமூப்பிறப்பில்லாமல் எந்நாளும் ஒரு சரியாய் உருவும் திருவும் பருவமும் குலமும் குணமும் அன்பும் முதலானதுகளினாலே[4] சரியொத்திருக்கிற தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் கொளவதுமன்றித் தாங்களே ஒருவர்க்கொருவர் எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது.

இதனையேழதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி[5] முதலிலே தகையணங்குறுத்தல் *[கூறுகின்றார்.

## 109. தகையணங்குறுத்தல் குறிஞ்சி

அஃதாவது நாயகன் சிங்கார வனத்திலே விளையாடப் போனவிடத்திலே]* தனியே நின்றாளொரு நாயகியைக் கண்டு,

1. சொல்லுவார் சொல்லுக; 2. எனமிகுத்துக் கூறினான் என்பது தொடர்ந்து அச்சுநூலிலுள்ளது (பரிமேலழகருரை) 3. வகுத்து-அச்சுநூல் 4. முதல்பவர்றுடல். *முதல் *வரை அச்சுநூல் 5. நுடங்கி;

விருப்பமாய்த் தானே வந்து பார்த்து.[1] அவளுடைய சவுந்தரியம் தன்னை வருந்துகிறதைச்[2] சொல்லுகிறது இது கண்டவுடனே யுண்டானதாதலால் முதலிலே கூறுகின்றார்.

1081. அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை[3]
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு

என்பது

தலைமகளுருபு முதலியன முன்கண்டறியாதனவாய் மிகவும் சிறப்பாயிருந்தது கண்டு தலைமகன் சந்தேகப்படுகிறது[4].

இந்த நீண்ட காதணியை யுடையவள் இந்தத் தோப்பிலே யிருக்கிற தேவதாஸ்திரீயோ[5] அல்லாமல் ஒரு மயிலோ அல்லாமல் ஒருமனுஷ ஸ்திரீயோ[5] இவளை இன்னாளென்று நிச்சயிக்கப் படாமல்[6] என்னெஞ்சு மயங்குகின்றதென்றவாறு.

சித்திரத்தில்[7] எழுதப்படாத வடிவான படியினாலே தேவதாஸ்திரீயோ என்றும், நிறத்தினாலேயும்[8] சோலையிலே நிற்கிறத்தினாலேயும்[9] மயிலோ வென்றும், தன் மனது அவள்மேலே ஆசைப்பட்ட படியினாலேயும் அவள் தன்னைப் பார்த்தபடியினாலேயும் மனுஷஸ்திரீயோ வென்றும் சந்தேகப்பட்டதாம்.

1082. நோக்கினா ணோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து*

என்பது

மனுஷஸ்திரீ யென்று நிச்சயம் பண்ணின தலைமகன் அவள் பார்வையினாலே தனக்கு வந்த வருத்தம் சொல்லுகிறது

இப்படிப்பட்ட அழகுடையவள் எனக்கெதிரே நின்று

1. பாத்து-காகிதச் சுவடி 2. வருத்துகிறதை 3. இது பரிமேழகர் தந்த பாடம் கனங்குழைஅச்சுநூல் 4. ஒவ்வொரு குறளுக்கும் பரிமேலழகர் கொடுத்த துறையை இவ்வுரை யாசிரியர் தன் சொந்த நடையில் தந்துள்ளார் 5. ஸ்திறியோ என்பது காகிதச் சுவடி 6. மாட்டாமல் 7. எழுதலாகாத 8. சாயலும் 9. நிற்கிறதினாலேயும்

பார்த்தல் தானே தாக்கிவருத்தும் அணங்கு தன்னுடனே எதுத்து[1] வருத்தம் பண்ணிச் சண்டை பண்ணுகிறத்துக்குச்[2] சேனையையுங் கூட்டிக் கொண்டு வந்தாப் போலே[3] யிருக்கிற தென்றவாறு. ௨

1083. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு

என்பது [இதுவுமது]

கூற்றுவ னென்று சாத்திரத்தினாலே சொல்லுகிறத்தைப்[4] பண்டு கேட்டறிந்த தல்லாமல் கண்டறியேன்; இப்பொழுது கண்டறிந் தேன்; அதெப்படி யென்றால் *பெண்மையா யிருக்கிற ஸ்ரீயி னுடைய பெரிய கண்களாயிருக்கு மென்றவாறு.*

பெண்மையாவது, நாணம் மடம் அச்சம் பயிர்ப் பென்னும் நான்கு குணங்களோடு கூடியது. பெண்மையால் இன்பம் பயத் தல் உண்டாயினும் துக்கம் பண்ணுகிறது வெகுவான படியி னாலே கூற்றுவன் என்று கூறினான் ௩

1084. கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்

என்பது (இதுவுமது)

பெண்மை யென்கிற பெருமையை யுடைய இந்த ஸ்திரீக்குக் கண்கள் தம்மைக் கண்டவர்கள் பிராணனை யுண்ணத்தக்கதாக அமர்ந்தன[5] வென்றவாறு.

ஸ்திரீயினுடைய கண்கள் குணத்துக்கும் மென்மைக்கும் ஒவ் வாமற் பொல்லாதனவா யிருந்தன என்பதாம். ௪

1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்று முடைத்து

என்பது (இதுவுமது)

---

1. எதிர்த்து 2. பண்ணுகிறதற்குச் 3. வந்தாற்போலே 4. சொல்லு கிறதைப் 5 அமர்த்திருந்தன *முதல் *வரை: பெண்மையுடனே பெரிய அமர்த்த கண்களையுடையது அச்சுநூல்

என்னை வருத்துகிறபடியினாலே கூற்றுவனோ? என்னைப் பார்த்த[1] படியினாலே கண்ணோ? சுபாவமாகப் பயப்படுகிற படியினாலே மானோ? இன்ன தென்றறியேன்; பெண்சாதியிட[2] கண்களின் பார்வை இந்த மூன்று வகையை யுடையதாயிருக்கு மென்றவாறு.

இவள் கண்கள் இன்பமும் துன்பமும் ஒருக்காலே[3] செய்யா நின்ற தென்பதாம்.

1086. கொடும்புருவம் கோடா மறைப்பி னடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண்

என்பது (இதுவுமது)

பிரியாத சினேகத்தை யுடைய புருவங்கள் அந்தக் கண்களை மறைத்தால் அது இந்தப் புருவத்தைக் கடந்து வந்து எனக்கு நடுக்கத்தை யுடைய துக்கத்தைப் பண்ணமாட்டா என்றவாறு.

அந்தப்புருவம் மறையாவிட்டால் பார்வையினாலே துக்கம் வருமென்பதாம். அ

1087. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்

என்பது

அந்த ஸ்திரீயினுடைய முலைகளினாலே வரப்பட்ட வருத்தத் தைச் சொல்லுகிறது

அந்த ஸ்ரீயினுடைய முலைகளின் மேலே பிடவை[4] போட்டி ருக்கிறது. அந்த முலைகள் கண்ட பேரைக் கொல்லப் போகு தென்று[5] மூடியிருக்கிறது. மதம் பட்ட யானை கண்ட பேரைக் கொல்லப் போகுதென்று முகத்தை மறைத்து வைப்பார்கள், அது போலே என்றவாறு.

முலைகள் கொல்லுகிறதாவது, கண்ட இளைஞர் வருத்தமுறு கிறதாம். எ

1. பாராத-காகிதச்சுவடி 2. யுடைய 3. ஒருங்கே-அச்சுநூல் 4. புடைவை
5. போகிறதென்று

1088. ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரு முட்குமென் பீடு

என்பது

முகத்தினாலே வருகிற வருத்தம் கூறுகிறது.

போர்க்களத்திலே வந்து எதிர்த்தவர்கள்[1] எல்லாம் என்னுடைய பெலத்துக்குப் பயப்பட்டு ஓடிப் போவார்கள்; அப்படிக் கொத்த கெட்டி வலுமை இவளுடைய முகத்துக்கு மாத்திரமே பயப்பட் டழிந்த தென்ற வாறு.

பயப்படுகிறது, மதியழிகிறதாம். அ

1089. பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்கு
அணியெவனோ வேதில தந்து

என்பது

ஆபரண நலத்தினாலான வருத்தம் கூறியது. இவள் பார்வை புறத்தியிலே[2] மான்பிணையோ டொத்த பார்வையையும், உள்ளே நாணத்லதயு முடைய இவளுக்கு இதுவே ஆபரணமாயிருக்க வேறே ஆபரணங்களை அணிகிறத்தினாலே[3] என்ன பலனுண் டென்றவாறு.

மான்பார்வை, பயப்பட்டுப் பார்க்கிறதாம். கூ

1090. உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்த லின்று

என்பது

தலைமகள் குறிப்பறியப் பட்டவன்[4] சொல்லுகிறது காய்ச்சசப்பட்ட கள்ளுந் தன்னைக் குடித்தவனைக் களிப்பிக்கிற தல்லாமல், காமத்தைப் போலே கண்டவர்களை மகிழப்பண்ணமாட்டா தென்றவாறு.

காமம் கண்டவர்களை யெல்லாம் மகிழப்பண்ணு

---

1. எதிர்த்தவர்கள் 2. புறத்தே 3. அணிகிறதினாலே 4. குறிப்பறிந்தவன்

மென்பதாம். ம

ஆக அதிகாரம் ளசூ க்குக் குறள் சத சாய

இப்பால் 110. குறிப்பறிதல்

என்பது, தலைமகன் தலைமகள் குறிப்பினை யறிதலும் தோழி குறிப்பினை *அத்தோழி அவ்விருவர் குறிப்பினையு* மறிதலு மாம்.

1091. இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய் நோக்கொன் றந்நோய் மருந்து

என்பது

தலைமகன் தலைமகள் மனதுக்குறிப்பினை அவள் பார்வை யால் அறிந்தது

இவளுடைய கண்களின் பார்வைகள் இப்பொழுது என்மேல் இரண்டு வகை யாச்சுது[1]; அதெப்படி யென்றால், ஒரு பார்வை என்னை வாதை செய்விக்குது[2]; ஒரு பார்வை அதற்கு மருந்தாய் அந்த வாதையைத் தணிப்பிக் கிறதாச்சுது[3] என்ற வாறு.

வாதை செய்விக்கிறதாவது, அவன் மனதிலே யிருக்கிறகாம விகாரத்தை வெளியாக்குகிறது. வாதையைத் தணிப்பிக்கிறதா வது, தன் பேரிலே தயைவைக்கிறதாம். சு

1092. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கம் காமத்திற்
செம்பாக மன்று பெரிது

என்பது (இதுவுமது)

இவள் கண்கள் நான் காணாத படிக்கு என்னைப் பார்க்கிற பார்வை புணர்ச்சியிலே பாதியல்லாமல் அதிகமாக வேணு மென்று பார்க்கிற தென்றவாறு

*முதல் *வரை அச்சு நூல் 1. ஆயிற்று 2. செய்விக்கிறது 3. தாயிற்று

நான் பார்க்கிற போது தான் பாராமல் நாணியிருந்தும், நான் பாராத போது *[உற்று நோக்கியும் வருதலால் ''களவு கொள்ளும் என்றான். உ

1093. நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்

என்பது

பார்வையினாலும் நாணினாலும் அறிந்தது. நான் பாராத போது] *தான் என்னை அன்போடு நோக்குவள்.

நான் பார்த்தால் *[1] மனதிலே யொன்றை நினைத்துக் கொண்டு நாணி நிற்பள்; அவள் பார்வை அன்பென்கிற பயிருக்கு வார்த்த தண்ணியாயிற்று[2] என்றவாறு.

அவள் பார்வையினாலே ஆசை அதிகமா மென்பது. ௩

1094. யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்

என்பது

நாணினாலும் மகிழ்ச்சி[3] யினாலும் அறிந்தது: நான் தன்னைப் பார்க்கிற போது தான் என்னெதிரே பாராமல் வணங்கி நிலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும், அதையறிந்து நான் பாராவிட்டால் தானென்னைப் பார்த்துத் தன்னுள்ளே மகிழ்ந்து சற்றே நகைப்ப ளென்றவாறு.

மகிழ்கிறது, புணர்தற் குறிப்பாமென்பது. ௪

1095. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்

என்பது (இதுவுமது)

என்னைச் செவ்வையாய்ப் பாராமல் ஒரு கண்ணைச் சிமிட்டி

---

*முதல் *வரை பிறரால் எழுதப்பட்டுள்ளன; அச்சு நூல் 1. அச்சு நூலிலில்லை 2. தண்ணீராயிற்று 3. மகிட்சி என்பது காகிதச் சுவடி

னாப் போலே[1] பார்த்துத் தன்னுள்ளே மகிழ்ந்து சிரிப்பாள் என்றவாறு.

மகிழ்கிறது இவளைப் புணர வேண்டு மென்பதாம்.[2] ௫

1096. உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொல்
ஒல்லை யுணரப் படும்

என்பது

தோழி சொல்லுதற[3] வசனத்தை யறிந்ததலை மகள்[4] தன்னுள்ளே சொல்லியது.

புறத்தியிலே பிறத்தியார் போலக் கடின வசனங்களைச் சொன்னோம்[5]; உள்ளே பகையில்லாதவர் வசனத்தைக் குறையுடையவர்களாலே கொப்பென அறியப்படு மென்றவாறு;

கடுஞ்சொல்லாவது, இவ்விடம் காவல் மிகுதியுடையது[6]. புணர்ச்சிக்கு இடமல்ல, வரவேண்டா மென்பதாம். ௬

1097. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போ னோக்கும்
உறாஅர் போன் றுற்றார் குறிப்பு

என்பது (இதுவுமது)

பிறகு சினேகம் பண்ண வேணு மென்று மனதிலே நினைத்து முந்திக் கடின வார்த்தைகளைச் சொன்னதும், கோபமான பார்வையும், பிறத்தியார் போலே யிருந்து *உறவாகிறத்துக்குக்[7] குறிப்பென்றவாறு*.

முன்னே கடின வசனஞ் சொன்னாரென்று பயப்பட வேண்டா மென்பதாம். ௭

1098. *[அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப்
பசையினள் பைய நகும்

1. சிமிட்டினாற் போலே (சுருங்கினாள் போல) என்க 2. இனி இவளைப் பெறுதல் நிச்சயம் என்பது குறிப்பெச்சம் அச்சுநூல் (பரிமேலழகருரை) 3. சொல்கிற 4. தலைமகன் என்பர் பரிமேலழகர் 5. சொன்னாலும் 6. அச்சுநூலிற் கண்டது 7. உறவாகிறதற்குக் *முதல் *வரை: நட்பாயினார்க்கு ஒரு குறிப்புப் பற்றி வருவன-அச்சுநூல்

என்பது, தன்னைப் பார்த்து மகிழ்ந்த தலைமகளைக் கண்டு தலைமகன் கூறியது.

என்மேல் கோபம்போல் சொன்ன வார்த்தையைப் பொறுக்க மாட்டாமல் நான் பிரியம் வரத்தக்கதாகப் பார்த்த பார்வையை அவளறிந்து மனது சந்தோஷப்பட்டுத் தன்னுள்ளே நகையா நின்றாள்; நுடங்கிய இயல்பையுடையவளுக்கு அந்த நகையி னாலே தோன்றுகின்றதொரு நன்மைக் குறிப்புண்டு என்ற வாறு.

அந்த நன்மைக் குறிப்பாவது, தன்மேலே தயையுடையவன் என்பதாம். அ*1

1099. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள

என்பது

தோழி மதியுடன் படுகிறவள்[1] தன்னுள்ளே சொல் லியது. முன்னறியாதார்போல் ஒருவரையொருவர் பொதுநோக் கத்தால் நோக்குதல், இக்காதலையுடையார் கண்ணேயுண்டா மென்றவாறு.

பொதுநோக்காவது, எல்லாரையும் ஒரு சரியாய்ப் பார்க்கிற தாம். புறத்திலே ஒருசரியாய்ப் பார்த்தாலும் உள்ளே காதலா ரிட(த்திலே) யன்புண்டாமென்பது. கூ

1100. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில

என்பது (இதுவுமது)

*முதல்*வரை 1098ஆம் குறட்குரை காகிதச்சுவடியில் இல்லை; அச்சு நூலினின் றெடுக்கப்பட்டது. 1. மதியுடம்பாடு-குறிப்புரை காண்க.

தாமிருவரும் ஒருவர் கண்களோ டொருவர் கண்கள் ஒக்கப் பார்த்தால், வாயினால் சொல்லுகிற சொற்களென்ன பயனு டைத்தாமென்றவாறு.

பார்வையினாலே யிரண்டுபேரும் ஒருமித்தால் அதுவே அமை யும்; மனதிலே தயையில்லா விட்டால், வாயினாலே சொல்லு கிற சொற்கள் ஒருபயனு மில்லாமற் போமென்பது. ய

ஆகஅதிகாரம் ளாUக்குக் குறள்சதூள

இது புணர்தனிமித்தியம்

இப்பால் 111. புணர்ச்சிமகிழ்தல்

என்பது, அப்படிக் குறிப்பாலறிந்து புணர்ந்த தலைமகன் புணர்ச்சியை மகிழ்ந்து கூறுகிறதாம்.

1101. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள

என்பது இயற்கைப் புணர்ச்சியினுடைய கடைசியிலே சொல்லு கிறது.

கண்ணினாலே கண்டு செவியினாலேகேட்டு நாவினாலே யுண்டு மூக்கினாலே மோந்து மெய்யாகிய உடம்பாலே தீண்டி அனுபவிக்கப்பட்ட ஐம்புலனும் நல்ல வளையலையுடைய இந்த ஸ்ரீயினிடத்திலேயுண்டாச்சுது[1] என்றவாறு.

வேறு வேறு காலங்களிலே வேறுவேறு பொருள்களாலனு பவிக்கப்பட்ட வைம்புலனும் ஒருகாலத்திலே இவளிடத்திலே யனுபவிக்கப்பட்டன என்பதாம்.

1102 பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து

என்பது இடந்தலைப்பாட்டின்கண் சொல்லியது;

வாயு பயித்தியம் சேற்றுமம்[2] இது முதலான வியாதிகளுக்கு

1. யுண்டாயிற்று 2. வாதபித்த சிலேத்துமம்

மருந்தாவது அதுகளுக்கு[1] மாறானதாம்; அப்படியல்லாமல் இந்த ஸ்ரீயாலே வந்த வியாதிக்கு இவள்தானே மருந்தானாள் என்றவாறு.

அவளைக்கண்டு வருந்திய வியாதிக்கு அவளைச் சேர்ந்து அந்த வியாதியைத் தீர்ந்தானாமெனபது உ

1103. தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு

என்பது நிரதிசய வின்பந்நிற்குரிய நீ யிந்தச் சிற்றின்பத்திற்கு இச்சிக்கிறது தகாதென்ற பாங்கற்குச் சொல்லியது;

ஐம்புலன்களும் அனுபவிக்கிறத்துக்குத்[2] தான் விரும்பிய ஸ்ரீயினுடைய மெல்லிய தோளிலே தூங்குகிற[3] நித்திரையைப் போல வருத்தப்படாமல் பெறலாமோ, சிற்றின்பத்தைத் துறந்த யோகிகளால் எய்தப்பட்ட சொர்க்கலோக மென்றவாறு.

ஸ்ரீயினுடைய சுகம் எளிதாய்எய்தும்; சொர்க்கத்தை யடைகிறவர்கள், வெய்யிலும் குளிரும் பனியும் பசியும் நெடுங்காலம் பொறுத்து வருந்தியே அச் சுகத்தை யடைவர்கள் என்றவாறு. ங

1104. நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றா ளிவள்

என்பது பாங்கற் கூட்டத்திறுதிக்கட் சொல்லியது:

தன்னை விட்டு நீங்கினாற் சுடும்: சேர்ந்தாற் குளிரும்; இப்படிப்பட்ட நெருப்பை எனக்குக் கொடுக்கிறத்துக்கு[4] இவள் எந்த உலகத்திலே தேடிக் கொண்டாளென்றவாறு.

அவளைக் கூடாத பொழுது துக்கப்படுகிறதனாலே அனலென்றும், சேர்ந்து மகிழ் வுற்றத்தினாலே[5] குளிர்ச்சி யென்பதுமாம். ச

---

1. அவைகளுக்கு 2. அனுபவிக்கிறதற்கு; அனுபவிப்பவர்க்கு-அச்சுநூல் 3. தூங்கிற என்பதுமாகிதச்சுவடி. 4. கொடுக்கிறதற்கு 5. வுற்றதினாலே

1105 வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்

என்பது தோழியிற் கூட்டத் திறுதிக்கட் சொல்லியது:

மெத்தவும் பிரியமான பொருள்களைப் பெறாமல் அவற்றின்மேல் விருப்ப முண்டான பொழுது அந்தப்பொருள் தானே வந்து சுகத்தைப் பண்ணுமாறு போல, இன்பத்தைப் பண்ணும், எப்பொழுதும் பெற்றுப் புணர்ந்தாலும் பூவினை யணிந்த கூந்தலையுடைய ஸ்ரீ தோள்க ளென்றவாறு.

ஸ்ரீகளைப் புணரப் பின்னையும் ஆசையதிகமாமென்றவாறு. ரு

1106. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்

என்பது (இதுவுமது) தன்னைப் புணராமல் வாடுகிற என்னுயிர் அவளைப் புணர்ந்தபோதெல்லாம் துளுக்கிற[1] படியினாலே இந்த ஸ்ரீக்குத் தோள்கள் தீண்டத்தக்கதொரு அமுதத்தினாலே செய்யப்பட்டதென்றவாறு.

துளுக்கிறதாவது[2] இன்பத்தினாலே மகிழ்கிறதாம். சு

1107. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு

என்பது இவளை நீ* மணந்து கொண்டு உலகோர் தமது

*குறிப்பு இந்தச் சுவடியில் பக்கம் 740 இல் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

இதுவரையுந்தான் இந்தச்சுவடியில் இருக்கிறது

இனிவரும் பகுதிகள் : பாரதீயஞான பீடம் தமிழ்வரிசை நெ 1. தொகுத்தவர்: பேராசிரியர் அ. சக்கரவர்த்தி: உரையாசிரியர்; கவிராஜபண்டிதர்; சாது அச்சகம், இராயப்பேட்டை சென்னை என்னும் நூலிலிருந்து நிறைவு செய்யப் பெற்றது

இரண்டு நூல்களுக்குமே பாட பேதங்கள் நிரம்ப இருக்கின்றன.

1. தளிர்க்கிற (துள்ளுகிற- அச்சு நூல்) 2. துள்ளுகிறதாவது (அச்சு நூல்)

பார்த்துண்ணும் இல்லறத்தோடு பொருந்த வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது:

அழகிய மாமை நிறத்தையுடைய இந்த ஸ்திரீயினுடைய புணர்ச்சியின்பம், தன்னுடைய ஊரிலேயிருந்து தான்செய்கிற தொழிலினாலே வந்தபொருளைப் பிதிரர்தெய்வம் விருந்து சுற்றத்தார், இவர்களுக்குக் கொடுத்துத் தன்பங்கைத் தான் சாப்பிட்டதோடொக்கும் என்றவாறு.

இல்லறம் செய்கிறவர்கள் பெறுகிறபலனை எனக்கு இவள் புணர்ச்சியே தரும் என்று மணந்து கொள்ள உடன்படாதவன் சொன்னதாம் எ

1108. வீழும் இருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு

என்பது ஒத்த அன்புடைய உங்களுக்கு ஒருபொழுதும் விடாதபுணர்ச்சியே இனியதென்று சொன்ன தோழிக்குச் சொல்லியது.

நீ சொல்லுகின்ற தொக்கும்; ஒரு பொழுதும் நெகிழாமையிற் காற்றினாலேயும் பிரிக்கப்படாத முயக்கம், ஒருவரையொருவர் ஆசைப்படுகிற இருவருக்கும் இனிதே என்றவாறு.

களவிற்புணர்ச்சியை மகிழ்ந்து, மணந்து கொள்ளச் சம்மதியாதவன் கூறியவாறு. அ

1109. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்

என்பது கரத்தல்[1] வேண்டாமையின் இடையறா[2] வில்லாத கூட்டமே இன்பப் பயனுடைத்தென்ற தோழிக்குச் சொல்லியது:

புணர்ச்சி இனிதாதற் பொருட்டு வேண்டிய பிணக்கும், அந்தப் பிணக்கு மட்டறிந்து தீருகிறதும், அதன்பிறகு புணருகிறதும் என இவையே காமத்தை விடாதே எய்தியவர்கள் பெற்ற பலனென்றவாறு.

1. மறைத்தல் 2. தடை

புருஷர்களுக்குப் பிரிவென்கிற தொன்றுணடு. அது பரந்தை யரைச் சேருகிறதும், அதையறிந்து பெண்சாதி பிணங்கி நிற் கிறதும், தன்மேலே தப்பில்லை யென்று சொல்லி அப்பிணக் கைத் தீர்க்கிறதும், பிற்பாடு இரண்டுபேரும் சம்மதித்துப் புணர் கிறதும் என இவை முன்மணந்தவர்கள் பெற்றபலன்; அப்பயன் இருதலைப்புள்[1]ளின் ஒருயிராய உழுவலன்புடைய[2] எமக்கு வேண்டா என அம்மணந்தெய்தலை இகழ்ந்து கூறியவாறு.

1110. அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்
செறிதோறும் சேயிழை மாட்டு

என்பது புணர்ந்துடன் போகிறவன்[3] தன்னுள்ளே சொ நூல்களாலும் நல்ல அறிவினாலும் பொருள்களை அறிய அறிய முந்தின அறிவில்லாமை கண்டாற்போலச்சிவந்த இழையினை யுடையாளை இடைவிடாது செறியச் செறியக் காதல் அவ ளிடத்திலே காணப்படுகின்றது என்றவாறு.

களவிற் புணர்ச்சியில் அநேக இடையூறுகளால்[4] எய்தப் பெறாமல் ஆசையுற்றவன் இதுபொழுது இடைவிடாமற் புணர்ந்த மகிழ்ச்சியினாலே அளவில்லாத ஆசையுண்டாயிற் றென்பதாம். இப்புணர்ச்சி மகிழ்தல் தலைமகளுக்கு முண்டானா லும் அவளிடத்திலே குறிப்பாலாகிற தல்லாமல் வசனத்தாலே ஆகிறதில்லை. ம

ஆக அதிகாரம் ளயகக்குக் குறள் சதளய

இப்பால் 112. நலம் புனைந்துரைத்தல்

என்பது, தலைமகன் தலைமகள் நலத்தைப் புனைந்து சொல்லு கிறது.

1111. நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள்

என்பது இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கட் சொல்லியது.

1. இரண்டுதலைகளை யுடையபறவை 2. மிகுந்த அன்பு 3. குறிப் புரை காண்க 4. இடையீடுகள், தடைகள்

அனிச்சப்பூவே நீ நன்றாய் வாழ்வாயாக; நீ எல்லாப் பூவினும் மென்மை யுடையை யாயினும், எம்மாலே காதலிக்கப்பட்டவள் நின்னைப் பார்க்கிலும் மெல்லிய ளென்றவாறு க

1112. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று

என்பது இடந்தலைப்பாட்டின்கண் சொல்லியது

பொல்லாத நெஞ்சே! நானே காணப் பெற்ற இவள் கண்களைப் பலராலும் காணப்படும் பூக்களை ஒக்கும் என்று நினைத்துத் தாமரை குவளை நீலோற்பலம் முதலிய பூக்களைக் கண்டு மயங்கா நின்றாய்; நின் அறிவிருந்தவாறென்? என்றவாறு. உ

1113. முறிமேனி முத்த முறுவல் வெளிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு

என்பது

கூட்டுதலுற்ற பாங்கனுக்குத் தலைமகன் தலைமகளியல்பு கூறியது.

மூங்கில் போலும் தோளினை யுடையவளுக்கு நிறம் தளிர் போலேயிருக்கும்; பல் முத்துக்கள் போலே யிருக்கும்; சுபாவமாகிய மணம் சுகந்த வாசனையாயிருக்கும்; கண்கள் வேலாயுதம் போலிருக்கும் என்றவாறு. ங

1114. காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு
மாணிழை கண்ணொவ்வே மென்று

என்பது பாங்கற் கூட்டத்துச் சென்று சார்தலுறுவான் சொல்லியது.

குவளைப் பூக்கள், இவள் கண்களைக் கண்டால் இவற்றுக்குச் சரியொவ்வே மென்று நினைந்து, நாணித் தலையை யிறைஞ்சி நிலத்தைப் பார்க்கும்.

நல்ல வியற்கையுடையவளிசை கண்களைக்காணாதபடி

யினாலே தனக்குச் சரியில்லை என்று இறுமாந்து ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றன என்றவாறு. ச

1115. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை

என்பது பகற்குறிக்கண் பூவணிகண்டு சொல்லியது

இந்த ஸ்திரீ தன்மென்மையை அறியாது, அனிச்சப்பூவைக் காம்பினடியைக் களையாமல் முடித்தாள்: இனி, இவளிடைக்கு நல்ல பறைகள் ஒலியா[1] என்றவாறு.

அனிச்சப் பூவினுடைய காம்பின் அடிச்சுமையைப் பொறாமல் இடை முரியும்; முறிந்தால் அதற்குயான் ஏது செய்வேன் என்று விசாரப்பட்டான் என்பதாம். நு

1116. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்

என்பது இரவுக் குறிக்கண் சந்திரனைக் கண்டு சொல்லியது.

ஆகாசத்திலே இருக்கிற மீன்கள், தங்களுக்குப் பதியாயிருக்கிற சந்திரனையும் என்னுடைய ஸ்திரீ முகத்தினையும், இது சந்திரன் இதுமுகம் என்று அறிய மாட்டாமல் தங்கள் நிலையினைவிட்டுக் கலங்கித் திரிகின்றன என்றவாறு.

சந்திரனைப் போலே உள்ளது முகம் என்பதாம். சா

1117. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து
என்பது இதுவுமது

அந்த மீன்கள் அப்படிக் கலங்குகிறதற்குக் காரணம் யாது? முன் குறைந்த கலை நிரம்பியே விளங்குஞ் சந்திரனுக்குள்ள மறுப் போல, ஸ்திரீ முகத்திலே மறுஉண்டோ என்றவாறு.

1. நீய பறை ஒலிக்கும்; செத்தார்க்குரிய நெய்தற்பறை ஒலிக்கும் என்க.

தேய்கிறதினாலேயும் வளர்வதனாலேயும் மறு உண்டான தினாலேயும், சந்திரனும் முகத்துக்குச் சரியன்று என்பதாம். ௭

1118. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி

என்பது இதுவுமது

சந்திரனே வாழ்வாயாக! இந்த ஸ்திரீ முகத்தைப் போல் நான் மகிழும்வகை யொளி விட வல்லையாகில், மேன்மேலே என் ஆசை யுடையை யாவாய்.

மறுவுடைமையினாலே, ஸ்திரீகள் முகத்தைப் போலப் பிரகாசிக்க மாட்டாய்; ஆனபடியினாலே காதலிக்கவும் படாய் என்பதாம். ௮

1119. மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி

என்பது இதுவுமது.

சந்திரனே! மலர் போலுங் கண்ணை யுடையாளின் முகத்தை யொக்க விரும்பினை யானால், யான் அன்றிப் பலர் காணத் தோன்றா தொழிக என்றவாறு.

முகத்தினுடைய நலமெல்லாந் தானே கண்டு அனுபவித்தானாத லால், பலர்காணத் தோன்றலை இழித்துக் கூறினான்; தோன்றின் நீ அதற்கு ஒவ்வாய் என்பதாம். ௯

1120. அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்

என்பது, உடன்போக்குரைத்த தோழிக்கு வழியருமை சொல்லி மறுத்தது.

உலகத்திலே மெத்தென்று சொல்லப்பட்ட அனிச்சப்பூவும், அன்னப் பட்சியின் இறகும், ஸ்திரீகள் காலுக்கு நெருஞ்சி முள்ளுப் போலே, வருத்தஞ் செய்யும் என்றவாறு.

இப்படி மெத்தென்ற பாதம், கடினமாகிய தரையிலேயும் கல்லிலேயும் நடக்கமாட்டாது என்பதாம்.

[1]ஆக அதிகாரம் ளாகஉக்குக்குறள் சதளஉ௰

இப்பால் 113. காதற் சிறப்புரைத்தல்

என்பது, தலைமகன் தன் காதல் மிகுதி கூறலும் தலைமகள் தன் காதல் மிகுதி கூறலுமாம்.

1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்

என்பது, இயற்கைப்புணர்ச்சியினுடைய கடைசியிலே தலைமகன் தன் நயப்பு[2] உணர்த்தியது.

மெத்தென்ற வார்த்தையையுடைய இந்தஸ்திரீயினுடைய வாலிய[3] பல்லிலே ஊறி வருகிற வாய்நீர் பாலுந் தேனுங் கலந்தாற் போலும் என்றவாறு.

அதிகமாகிய தித்திப்பையுடையது என்பதாம். க

1122. உடம்பொ டுயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு

என்பது, பிரிந்து போகப் பயப்பட்டவன் சொல்லுகிறது:

உடம்புக்கும் உயிருக்கும் உறவு எத்தனையுண்டோ அத்தனையுண்டு, இந்தஸ்திரீக்கு மெனக்கும் உறவு என்றவாறு.

உடம்புமுயிருங்கூடி யின்பங்களை யனுபவிக்கிறாற்போல, இந்தஸ்திரீயும் நானும் கூடிச் சுகமனுபவித்தோம்; இவளை விட்டுப் பிரிய மாட்டேன் என்பதாம். உ

1. இங்ஙனம் வேறொருவரால் நூல்முடிவுரை சுவடியிலெழுதப்பட்டுள்ளது (அச்சுஉரையில் இல்லை) 2. அன்பு 3. வெண்மையான

1123. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்

என்பது, இடந்தலைப்பாட்டின்கண் தலைமகள் நீங்கினபோது சொல்லியது;

என் கண்ணிலே கருப்பு விழியிலே யிருக்கிற பாவாய்! நீ அவ்விடத்தை விட்டு அப்பாலே போ; நீ போகாவிட்டால், என்னாலே வாஞ்சிக்கப்பட்ட நல்ல முகத்தையுடையவளுக்கு இருக்க இடமில்லை என்றவாறு,

நான் இந்த ஸ்திரீயைக் காணாவிட்டாலும், இவள் என் கண்ணுக்குள்ளே யிருக்கிற தல்லாமல் அப்பாற் போகிறதில்லை; ஆனபடியினாலே உன்னுடனே கூடியிருக்க இடமில்லை; நின்னைப் பார்க்கிலும் நல்லவளான படியினாலே நீ அவளுக்கு அந்த இடத்தைக் கொடுத்து அப்பாலே போவாய் என்பதாம்.

௬

1124. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாதல்
அதற்கன்ன ணீங்கு மிடத்து

என்பது, பகற்குறிக்கண் புணர்ந்து நீங்குவான் சொல்லியது:

தெரிந்த இழையினை யுடைய இவள் எனக்குப் புணருமிடத்து உயிருக்கு உடம்போடு கூடி வாழ்கிறதோ டொக்கும் இவள் பிரிந்த போது உயிர் உடம்பை விட்டு நீங்கிச் சாகிறதோ டொக்கும் என்றவாறு. ௪

1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்

என்பது, ஒருவழித் தணந்து வந்த தலைமகன் பிரிந்த போது எம்மையும் நினைத்து அறிவையோ' என்ற தோழிக்குச் சொல்லியது:

நல்ல சண்டையைப் பண்ணுங் கண்ணையுடையாள் குணங்களை யான் மறந்தேனாயின் நினைப்பேன்; ஒரு க்ஷணமாகிலும் மறந்தறியேன்; ஆனபடியினாலே நினைக்கிறதையும் அறியேன் என்றவாறு.

குணங்களாவன: நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு. ௫
சொல்லப் போகிறது தலைமகள் வசனம்[1]

1126. கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்

என்பது, ஒரு வழித் தணப்பின்கண் தலைமகனைத் தோழி இயற்பழிப்பள்[2] என்றஞ்சி அவள் கேட்கத் தன்னுள்ளே சொல்லியது;

என்காதலர் யான் காணாமாற் பொருள் தேடப் போயினா ரென்று நினைத்தாலும், என் கண்களை விட்டுப் போகார்; யான் அறியாமற் கண்ணை மூடினால் வருத்தப்படுகிறது மில்லை; ஆன படியினாலே என்னுடைய காதலர் மெத்த சூட்சும மானவர் என்றவாறு.

இடைவிடாமல் நினைக்கிறதினால் எப்பொழுதும் முன்னே தோன்றுகிற படியினாலே, கண்ணுள்ளே இருக்கிறார் என்றும், மூடினால் போகாரென்றும் கூறினாள். ௬

1127. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து

என்பது, இதுவுமது

காதலர் எப்பொழுதும் என்னுடைய கண்ணிலே இருக்கிற படியினாலே, கண்ணிலே மையிடுகிறது மில்லை; அது ஏன் என்றால் மையிடுகிற நேரமும் அவர் மறைவர் என்றெண்ணி என்றவாறு. ௭

1128. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து

என்பது, இதுவுமது

---

1. கூற்று 2. இயற் பழித்தலாவது-தலைமகனது தன்மையைப் பழித்துப் பேசுதல்

காதலர் என் நெஞ்சினுள்ளே இருக்கிறாரான படியினாலே, நான் சாப்பிடுகிற போது வெம்மையுள்ள வஸ்த்துக்களைச் சாப்பிடுவதற்குப் பயப்படுகிறேன், அவருக்கு வாதை அதனால் வருமோ என்றஞ்சி என்றவாறு.

எப்பொழுதும் என் நெஞ்சில் இருப்பவரைப் பிரிந்து போனாரென்று எண்ணுவது என்னபுத்தி என்பது குறிப்பு. அ

1129. இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர்

என்பது, நாயகன் பிரிந்து போனது[1] பொறாமல் வருந்திய தலைமகளைக் கண்டு தோழி தலைமகனைப் பழித்தமை அறிந்து, தலைமகள் இயற்படச் சொல்லியது:

என் கண் இமைத்து மூடினால், கண்ணுக்குள்ளே இருக்கிற காதலர் மறையப் போகிறார் என்று கண் சிமிட்டேன்; இப்படியிருக்கையிலேயும் அவரைத் "துயிலா நோய் செய்தார், அன்பிலர்" என்று சொல்லுவர், இந்த ஊரார் என்றவாறு.

ஒரு பொழுதும் பிரியாதவரைப் பிரிந்தாரென்று பழிக்க வேண்டா மென்பதாம். கூ

1130. உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர்

என்பது, இதுவுமது.

காதலர் எந்நாளும் என் மனத்திலே சந்தோஷத்துடனே இருப்பர்; அதையறியாது "அவர் பிரிந்து போயினார்; அன்பில்லாதவர்" என்று சொல்லுவர், இந்த ஊரார் என்றவாறு.

பிரியாமையும் அன்பும் உடையாரை அவை இல்லாதவ

---

1. பிரிந்துபோவது வரைவிடைவைத்து அதாவது திருமணம் செய்து கொள்வதற்கு வேண்டிய பொருளைத்தேடப் பிரிதல்.

ரென்று பழிக்க வேண்டாம் என்பதாம். ம

ஆக அதிகாரம் ளகங. க்குக் குறள் சதளங ம குறிஞ்சி முற்றும்

இப்பால் 114. நாணுத்துறவுரைத்தல் (பாலை)

என்பது, பிரிந்து போன தலைமகன் தோழிக்குத் தன்னுடைய நாணம் துறக்கிறதைச் சொல்லுகிறதும், அறத்தொடு நிற்பிக்க லுற்ற தலைமகள் தன்நாணம் விடுகிறதைச் சொல்லுகிறதுமாம்.

1131. காம முழந்து வருந்தினார்க் கேமம்
மடலில்ல தில்லை வலி

என்பது, பிரிந்தவன் சொல்லியது:

தனக்கு அரியராய ஸ்திரீகளோடு காமத்தை அனுபவித்துப் பிறகு அந்தக் காமம் பெறாமல் துக்கப்படுகிற புருஷர்களுக்கு மடலூர்கிறதல்லாமல் பின்னையொன்றும் பலம்[1] இல்லை என்றவாறு.

மடலூர்கிறதாவது, தலைவன் அந்த ஸ்திரீயைப் போலே படத்திலே எழுதிக்கொண்டு அதைப் பார்த்துக் காம வருத்தம் தீருகிறதாம். க

1132. நோனா வுடம்பு முயிரு மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து

என்பது, நாணமுடைய உமக்கு மடலூர்கிறது முடியாதென்று விலக்குகிறவளுக்குச் சொல்லியது:

காம வருத்தத்தினைப் பொறாத உடம்புமுயிரும் மடலூற நினையாநின்றன, அதனை விலக்கும் நாணத்தைக் கெடுத்து என்றவாறு.

1. வலிமை

அறிவு முதலாயின நீங்கவும் நாணம் நீங்காது; அதுவும் இது பொழுது நீங்கிற்று என்பதாம்

1133. நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல்

என்பது, நாணமும் நல்லாண்மையும் உடையவர்களுக்கு மடலூர முடியா தென்றவளுக்குச் சொல்லியது:

நாணமும் நல்ல ஆண்மையும் பண்டு உடையேன்; இப்போது காமம் மிகுந்த படியினாலே, நாணமும் ஆண்மையும் இழந்து, காமம் மிக்கவர் ஏறும் மடலினை யுடையேன் என்றவாறு.

நாணமிழக்கிறதாவது, இழிவான காரியங்களைச் செய்யத் துணிகிறது. நல்லாண்மையாவது, ஒன்றுக்கும் தளராமல் இருக்கிறது. ௩

11`4. காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை

என்பது, நாணமும் நல்லாண்மையும் காம வெள்ளத்திற்குப் படகான படியினாலே அவை விட்டு நீங்கா என்றவளுக்குச் சொல்லியது;

நான் காம வெள்ளத்தைக் கடக்கிறதற்குப் படகாகக் கொண்ட நாணத்தையும் நல்லாண்மையையும், காமமாகிய வெள்ளம் இழுத்துக் கொண்டு போகின்றது என்றவாறு.

காமத்தைக் கடக்கிறதற்கு நாணமும் ஆண்மையும் தெப்பமாகா என்பதாம். ௪

1135. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை யுழக்குந் துயர்

என்பது, இந்த ஆற்றாமையும் மடலும் உமக்கு எப்படி வந்தன என்றவளுக்குச் சொல்லியது:

மாலைப் பொழுதிலே அனுபவிக்கும் துயரினையும், அதற்கு மருந்தான மடலினையும், முன்னே அறியேன்; இப்பொழுது எனக்கு மாலைபோலத் தொடர்ந்த சிறுவளையினை யுடையவள் தந்தாள் என்றவாறு.

காமம் எப்பொழுது முண்டானாலும் மாலைப் பொழுதிலே அதிகமாத லுடைமையின், மாலையுழக்குந் துயர் என்றார். ரு

1136. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்

என்பது, படலூரும் பொழுது, இன்றைக்கும் கழிந்தது என்றவளுக்குச் சொல்லியது:

உன்பேதை காரணமாக என் கண்கள் ஒரு பொழுதும் தூங்குகிறதில்லை; அதனால் எல்லாரும் தூங்குகிற நடு இரவிலும் நான் மடலூர்கிறதையே நினைய நின்றேன் என்றவாறு. சா

1137. கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்

என்பது, பேதைக்கு என் கண் படலொல்லா என்பது பற்றி 'அறிவில்லாரான ஸ்திரீகளிலும் அஃதுடைய புருஷர்களன்றே பொறுப்பவர்கள்' என்றவளுக்குச் சொல்லியது:

சமுத்திரம் போலக் கரையில்லாத காம நோயினை அனுபவித்தும், மடலூராமற் பொறுத்திருக்கின்ற பெண் பிறப்புப் போல், மிக்க தகுதியையுடைய பிறப்பு உலகத்தில் இல்லை என்றவாறு.

பிறப்பு விசேடத்தால் அவ்வடக்கம் எனக்கில்லை; நீ அதனை அறிகின்றிலை என்பதாம்

இவ்வேழும் தலைமகன் சொன்னது; மேல் தலைமகள் கூற்று.
எ

1138. நிறையரியர் மன்னளியே ரென்னாது காம
மறையிறந்து மன்று படும்

என்பது, காவல் மிக்குக் காமம் பெருகிய போது சொல்லியது:

இவர் நிறை[1] யால் நாம் மிஞ்சி நடத்தற்கரியர் என்று பயப்படாமல் மிக அளிக்கத்தக்கார் என்று எண்ணாமல், மகளிர் காமமும் மறைத்தலைக் கடந்து வெளிப்படுவதாயிற்று என்றவாறு.

காமத்தை எப்படி மறைத்தாலும் வெளிப்படு மென்பதாம். அ

1139. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு

என்பது, இதுவுமது

நான் முன் அடங்கியிருந்த படியினாலே எல்லாரு மென்னை அறியார்கள்; இனி அப்படி நில்லாமல் நானே வெளிப்பட்டு அறிவிப்பேன் என்று நினைத்தால், என்காமம் இவ்வூர் மறுகின்[2] கண் மயங்கிச் சுழலாநின்றது என்றவாறு.

மயங்குதல், அம்பலாதல்; மறுகுதல், அலராதல் என்பதாம் கா

1140. யாங்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு

என்பது, செவிலி[3]க்கு அறத்தொடு நின்று வைத்து, யான் நிற்கிறது எப்படி என்று நகைத்த தோழியொடு வாடித்தன்னுள்ளே சொல்லியது:

அறிவில்லாதவர் நான் கேட்கிறது மல்லாமல் கண்ணாலே காணுமாறும் என்னை நகையா நின்றார்; அதே னெனில் யான் அனுபவிக்கிற காம நோயைத் தாமும் அனுபவிக்க வில்லையென்று தலைவி வருந்தினாள் என்றவாறு

1. நிறை-மனவடக்கம் 2. மறுகு வீதி 3. செவிலி - தலைமகளை வளர்த்ததாய்

அவரும் என்போல் வேதனைப் பட்டால் அறிவார் என்ப தாம். ய

ஆக அதிகாரம் ளகுச க்குக் குறள் சஉளசய

இப்பால் 115. அலரறிவுறுத்தல்

என்பது, பலரும், "இவள் தன் நாயகனைப் பிரிந்து வாடுகிறாள்" என்று அவர் கூறுவதைத் தலைவனுக்குத் தோழி சொல்லி யறியப் பண்ணுகிறது.

1141. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்

என்பது, நீ பிரிந்து போனது வெளிப்பட்டு எல்லாரும் அறிந்து அலராக வார்த்தை சொல்லுகிறார்கள் என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது:

அப்படி எல்லாரும் "இவள் வருந்துகிறாள்" என்று சொல்லவே, என்னுடைய பிராணன் நிற்கிறது; அதனை நான் செய்த பாக்கியத்தாலே பலரும் அறியார் என்றவாறு.

இவள் வருந்துகிறாள் என்று சொல்லக் கேட்டபடியினாலே இவள் வருத்தம் தீர்க்க வேணு மென்று தன் சீவன் இருக்கிறது; இல்லாவிடின் பிரிந்த பொழுதே போம் என்பதாம். க

1142. மலரன்ன கண்ணா ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்

என்பது இதுவுமது,

மலரைப் போலும் கண்ணையுடையவளது எய்தற்கருமை அறியாமல் இந்தவூரார் அவளை எளியவளாக்கி அலராகிய வசையைச் சொல்லி எனக்கு உபகாரத்தைச் செய்கின்றார் என்றவாறு.

உபகாரம் செய்தலாவது, தன் பிராணனை நிறுத்துகிறதாம். உ

1143. உறாஅதோ வூரறிந்த கௌவை[1] யதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து

என்பது, இதுவுமது.

எனக்கும் தலைமகளுக்கும் கூட்டம் உண்டானதை இந்த ஊரார் அறிந்த படியினாலே, இவர்கள் சொல்லுகிற வார்த்தையைக் கேட்ட என்னுடைய மனது, அவள் கூட்டத்தைப் பெறாமலிருந்தாலும் பெற்றதுபோல் இன்பமுடையதானது என்றவாறு. இன்பமானது, அவள் கூட்டத்தை நினைக்கிற சந்தோஷமாம். ௩

1144. கவ்வையாற் கவ்விது காமம் அதுவின்றேல்
தவ்வென்னுந் தன்மை யிழந்து

என்பது, இதுவுமது.

என்னுடைய காமம் இந்த ஊரார் சொல்லுகிற வசை வார்த்தையாலே அதிகமாயிற்று, அவர்கள் சொல்லாமல் இருந்தால், முன்பு நினைத்த மட்டிலேயும்இராமல் அடங்கிச் சுருங்கிப் போம் என்றவாறு. ௪

1145. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

என்பது இதுவுமது.

கள்ளைக் குடிக்கிறவனுக்குக் களிக்குந்தொறும் கள்ளுண்டல் நன்றாயிருக்கும்; அதுபோல் எனக்குக் காமம் பலரும் வசை சொல்லுகிற பரியந்தம் நன்றாம் என்றவாறு. களிப்பு, மிகுந்த சந்தோஷம். ௫

1146. கண்டது மன்னு மொருநாள் அவர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று
என்பது *

1. கௌவை - அலர்

* பரிமேலழகர் துறைவிளக்கம் இங்கிருந்து குறள் 1155 வரை கொடுக்கப் பெறவில்லை.

யான் காதலனைக் கண்ணாலே காணப் பெற்றது ஒரு நாளேயாயினும், அலராகிய வசை ஒருநாளல்லாமல், சந்திரனை இராகு மறைக்கிறது உலகமெங்கும் பிரகாசமானாற்போல் எங்கும் பரவிற்று என்றவாறு. சா

1147. ஊரவர் கௌவை யெருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்

என்பது

இந்தக் காம நோயாகிய பயிர், இந்தவூர் ஸ்திரீசனங்கள் சொல்லுகிற வசை வார்த்தை எருவாகவும், அந்த வசையைக் கேட்டுத் தாயானவள் கோபித்துக் கொண்டு சொல்லுகிற வார்த்தை தண்ணீராகவும் வளராநின்றது; இனி ஊரவர் சொல்லுகிறதும் தாய் சொல்லுகிறதும் பொறுக்க வேணும் என்றவாறு. எ

1148. நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல்

என்பது

அயல் மனுஷர் சொல்லுகிற வசையினாலே நாம் காமத்தை அடக்குவோம் என்று நினைக்கிறது, நெய்யை வார்த்து நெருப்பை அவிக்க நினைக்கிறதற்குச் சரி என்றவாறு.

வசையாலே அதிகமாகிறதல்லாமல் அடங்காது என்பதாம். அ

1149. அலர்நாண வொல்வதோ அஞ்சலோம் பென்னார்
பலர்நாண நீத்தக் கடை

என்பது

தன்னை எதிர்ப்பட்ட போது 'உன்னை விட்டுப் பிரியேன் நீ பயப்பட வேண்டாம்' என்றவர், எல்லாரும் நாணத் தக்கதாக நம்மைப் பிரிந்து போனார்; இனி நாம் பலராலே சொல்லப் பட்ட வசைக்கு அஞ்சக் கூடுமோ கூடாது என்றவாறு.

பலரும் விசாரப்படப் பிரிர்தவரை மறத்தல் கூடாதென்ப தாம். ரு

1150. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை யெடுக்குமிவ் வூர்

என்பது

நாயகனுடனே கூடப் போகிறதற்குக் காரணமாய் நாம் பண்டே விரும்புவதாய அலரைச் சொல்லுகிறார்; இனி நாம் அவரை விரும்பினால் அதற்கு உடன் படுவார்; ஆகையால் இவ்வலர் நமக்கு நன்றாயிற்று என்றவாறு.

இந்த இருபது பாட்டும் புணர்தல் நிமித்தம்

ஆக அதிகாரம் ளசுருக்குக்குறள் சதளறு

இப்பால் கற்பியல்;

[முதற்கண் 116. பிரிவாற்றாமை*]

என்பது, தலைமகன் பிரிந்து போதற்குத் தலைவி ஆற்றாளாந் தன்மை.

1151, செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை

என்பது

நீ என்னைப் பிரியாமல் இருக்கிற வார்த்தை யுண்டானால் அதை எனக்குச் சொல்! அதல்லாமல் நீ பிரிந்து போய் விரைந்து வருகிறதானால், அந்த வார்த்தையைப் பிரிந்த பிறகும் பிராணனுடனே இருக்கிற பேருக்குச் சொல் என்றவாறு.

நாயகனைப் பிரிந்தவுடனே உயிர் போகிறது உத்தமமான கற்பு; பிரிந்தபின்னும் பிராணினிருக்கிறது மத்திமான கற்பு என்பதாம். க

*தொடர்புபற்றி பதிப்பாசிரியர் சேர்த்தது.

1152. இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு

என்பது

இவர் இத்தனை நாளும் போலே யல்லாமல், இப்பொழுது நம்மிடத்திலே இனிதான பார்வை உடையரான படியினாலே, அவர் பிரிவுக்குப் பயப்படுகின்றேன் என்றவாறு.

நாம் இவரைப் பிரிய வொட்டாமற் புணர்ச்சியிலே மகிழ்ச்சி செய்யவேணும் என்பது கருத்து. உ

1153. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்

என்பது

பிரிந்து போகேன் என்ற தம் சொல்லும், பிரிந்தால் நம் ஆற்றாமையும் அறிந்த காதலர் கண்ணும் ஒரோ வழிப்பிரிவு நிகழ்தலான், அவர் சொல்லும் தலையளியும் பற்றி நம்மிடத்திலே அன்புடையவர் எனத்தேறுகிறது அரிது என்றவாறு. ௩

1154. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு

என்பது

நம்மைக் கண்டபொழுதே நம்பிக்கை சொல்லி ஆணையிட்டு உன்னை விட்டுப் பிரிகிறதில்லை நீ அஞ்ச வேண்டாமென்றவர் தாமே பிறகு பிரிந்து விட்டுப் போனால் அவர் சொன்ன வார்த்தையை மெய்யென்று நம்பினவர்க்குத் தப்புண்டோ என்றவாறு.

சொல்லுகிறதுஞ் செய்கிறது மொவ்வாமைக் குற்றம் அவர்க்கெய்தும்; எய்தாவகை அழுங்குவி[1] என்பது கருத்து ௪

---

1. அழுங்குவித்தல்-தடுத்தல்

1155. ஓம்பி ன மந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு
என்பது

என்னுயிரைக் கொல்லாமற் காத்தியாயின் என்னுயிரை ஆள அமைந்தவருடைய பிரிவை நிறுத்துவாயாக, அப்படி நிறுத்துவார் இல்லாமல் அவர் பிரிந்து போனால், என்னுயிரும் போய்விடும்; உயிர் போனால் பிறகு நாயகனைக் கூடுகிறதருமை யாம் என்றவாறு.

ஆளுதற்கமைதல், எனக்கு இறைவராயிருத்தல். ரு

1156. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்
நல்குவ ரென்னு நசை

என்பது, தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்து சொல்லிய தோழிக்குத் தலைமகள் சொல்லுகிறது:

நம்முடைய விரகவாசை மிகுதி* அறிந்த தலைவர் தாமே நம் முன்னே நின்று தம்முடைய பிரிவினைச் சொல்லுவரானால், இப்படிப்பட்ட கெட்டி மனதுடையவர் பிறகு நம்முடைய ஆற்றாமை அறிந்து வந்து நம்மைச் சேருவர் என்னும் ஆசை விட்டுப்போ மென்றவாறு.

இப்போது விட்டுப் போகிறவர் திரும்பி வந்து நம்மைச் சேருகிறது எங்கே என்பதாம். சு

1157. துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறையிறவா நின்ற வளை
என்பது†

நாயகன் என்னை விட்டுப் பிரியப் போகிறதை அவன் எனக்குச் சொல்லாத முன்னே என் முன்கையிலே நின்று

*கவவுக்கடுமை என்பர் பரிமேலழகர். †இங்கிருந்து பரிமேலழகர் தந்த துறை விளக்கம் 1160ஆம் குறள் வரை கொடுக்கப்பட வில்லை.

ழலுகிற[1] வினைகள் அறிந்து எனக்குச் சொல்லா நின்றன; நீ யறிவிக்க வேண்டாம் என்றவாறு.

வளைகள் அறிதலாவது, கையிலே இந்தண்டைக் கந்தண் டையுழலுகிறதனாலே யறிந்த தென்றும், நாயகன் பிரிந்து போகிறா னென்று கேட்டவுடனே சரீரம் வாடிக் கை வளைகள் கழன்று தாழ விழுகிறதனாலே யறிவித்த தென்றுமாம்.

'நீ அவன் பிரிவைக் கெட்டியாக உண்டாக்குவித்து வந்து சொல்லுகிறதினாலே, நீயும் இந்த வளைகள் செய்தனவே செய்தாய்' எனப்புலந்து சொன்னதாம். எ

1158. இன்னா தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னா தினியார்ப் பிரிவு

என்பது

ஸ்திரீகளுக்குத் தங்கள் குறிப்பையறியும் தோழியர் இல்லாத ஊரிலே இருந்து வாழ்கிறது பொல்லாதாயிருக்கும்; அதிலும் பொல்லாதாயிருக்கும் தங்கள் நாயகனைப் பிரிகிறது என்றவாறு. அ

1159. தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ

என்பது

நெருப்புத் தன்னைத் தொட்டாற் சுடுமல்லாமல் காம நோய் போலப் பிரிந்தவர்களைச் சுடமாட்டுமோ? மாட்டாது என்றவாறு.

காமம் எத்தனை தூரத்திலே யிருந்தாலும் சுடும் என்பதாம். ந

1160. அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்

என்பது, தலைவியர் பிரிவாற்றியிருப்பர்; நீ அப்படி யிருக்க வில்லை என்ற தோழிக்குச் சொல்லியது:

1. நின்றுழலுகிற-நின்றும் கழலாநின்ற (பரிமேலழகர்)

நாயகன் பிரிவு சொல்லிய போது அதற்குச் சம்மதித்து, அவன் பிரிந்து போகிற போது வருகிற துக்கத்தையும் நீக்கிப் பிரிந்துபோன பிறகு வந்த துக்கத்தையும் பொறுத்துப் பின்னையும் இருந்து உயிர் வாழ்கிற ஸ்திரீகள் உலகத்திலே பலர் என்றவாறு.

பண்டு புருஷனுடனே கூடி இன்பமாயிருக்கிறவர்கள் அந்த இன்பமும் இழந்து துன்புற உடன்படுதல் அரிது; நாயகன்போன பரஸ்தலங்களிலே அவனுக்கு என்ன உபத்திரவம் வருமோ என்றும், அவர் வருகிற பரியந்தம் நான் எப்படித் தனியே யிருப்பேன் என்றும், அவர் எப்போது வருவார் என்றும் இப்படிப் பட்ட துக்கங்கள் பலவுமுண்டு; இவற்றைப் பொறுத்துப் பிராணனுடனே இருக்கிறது அரிதாம். பிரிந்து போனபிறகு அவர் வருகிற பரியந்தம் மனதுக்குள்ளே இருக்கிற காம விகார வேதனையையும், புறத்திலே சந்திரன் குயில் தென்றல் யாழிசை குழலிசை முதலாயின வந்து அந்நோயை வளர்ப்பதையும் பொறுத்திருக்கிறவர் உலகத்திலே ஒருவரும் இல்லை என்பதாம். ௰

ஆக அதிகாரம் ௱௧௬ க்குக் குறள் ௲௱௬௰

இப்பால் 117. படர்மெலிந்திரங்கல்

என்பது, நாயகன் பிரிந்து போனதினாலே தலைமகள் தன்னுடைய துக்கத்தை எப்பொழுதும் நினைத்தலின், அதனால் மெலிந்திரங்குதல்; நாயகனும் நாயகியைப் பிரிந்து போன விடத்திலே அவளை நினைத்துக் கொண்டு விசாரப்படுகிறதுமாம்.

1161. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும்

என்பது, காம நோயை வெளியாக்குகிறது உன்னுடைய நாணத்துக்கு ஏலாதென்ற தோழிக்குச் சொல்லியது:

இந்தக் காம நோயைப் பிறர் அறியாமல் யான் வெட்கத்தினாலே மறைக்கிறேன். இப்படி மறைக்கச் செய்யும் இந்தக் காம நோய் அந்த நாணத்தைக் கடந்து இறைக்கிறவர்களுக்கு ஊற்றுத் தண்ணீர் அதிகமாகிறாப் போலே அதிகமாகிறது என்றவாறு.

இப்படி அதிகமாகிறதை மறைக்கிறது எப்படி என்பதாம். க

1162. காத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலு நாணுத் தரும்

என்பது, இவ்விடத்திலே யிருக்கிறவ ரறியாமல் மறைத்தல்

நாயகன் அறியத் தூது விடல் இரண்டனுள் ஒன்று செய்ய வேணும் என்ற தோழிக்குச் சொல்லியது:

இந்தக் காம விரக நோயை மறைக்கவு மாற்றேன்; இந்த நோயைத் தந்தவர்க்குச் சொல்ல வேணுமென்றாலும் எனக்கு வெட்கமாயிருக்கிறது; இதற்கு என்ன செய்வேன் என்றவாறு.

காம நோய் ஒரு காலைக் கொருகால் அதிகமாதலிற் கரத்தலு மாற்றேன் என்றும், நாயகன் அண்டைக்குத் தூது அனுப்பினால் இன்னும் பிராணனுடனிருக்கிறாள் என்றறியப் படும். ஆதலால் நாணுத் தருமென்றும் கூறினாள். உ

1163. காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனா உடம்பி னகத்து

என்பது இதுவுமது

காம நோயும், அதனைச் செய்தவர்க் கறிவிக்கிறதற்கு ஒட்டாத வெட்கமும், என்னுடைய உடம்பிலே உயிர் காவடித் தண்டாக அதன் இருபுறத்தும் தூங்கா நிற்கும் என்றவாறு. தூங்குகிறதாவது, காமமும் நாணமும் ஒன்றற் கொன்று அதிக மாகாமல் சரியாயிருக்கிறதாம். ங

1164. காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில்

என்பது (இதுவுமது)

யாவர்க்கும் உளவாய் வருகின்ற காமக் கடலும் புணையும் என்னும் இரண்டனுள்ளும் எனக்குண்டாகின்றது காமக் கடலே; அதனை நீந்தும் அரணாகிய தெப்பமில்லை என்றவாறு

தெப்பமாவது நாயகிக்கு நாயகனும், நாயகனுக்கு நாயகியும். ௪

1165. துப்பி னெவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினு ளாற்று பவர்

ன்பது, தூது விடாதது கண்டு தோழியொடு புலந்து சொல்லியது:

இன்பமான காரியத்தைச் செய்வதற்கு உரிய சினேகிதரிடத்திலே துன்பமான பொல்லாங்கைச் செய்யவல்லவர்கள், துன்பஞ் செய்வதற்கு உரிய பகைவரிடத்திலே என்ன செய்வார்களோ என்றவாறு.

தனக்கு உறவாயிருக்கையிலேயும் தன்வாதையைக் கண்டும் தூதனுப்பாமல் இருக்கிறவள், தனக்குப் பகையானால் என்ன செய்வாளோ என்பதாம். ௫

1166. இன்பங் கடன்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்ப மதனிற் பெரிது

என்பது, காமத்தினால் இன்பமுற்றவர்களுக்கு அதனினாய துன்பமும் வரும் என்ற தோழிக்குச் சொல்லியது:

காமம் புணர்வால் இன்பஞ் செய்கிறது கடல் போலப் பெரிதாயிருக்கும்; அந்தக் காமமே புணராமற் பிரிந்தால் அதனாலே வருகிற துக்கம் அந்த இன்பக் கடலினும் பெரிய கடலாயிருக்கும் என்றவாறு.

1167. காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்

என்பது, காமக்கடல் நீந்தப்படும் என்றாட்குச் சொல்லியது:

காமமாகிய கடலை நீந்தாமல் இருக்க வில்லை; நீந்தியும் அதற்குக் கரைகாணேன்; அதற்குக் கரைகாணாக்காலம் எல்லாரும் நித்திரை பண்ணுகிற அரையிருள்; அப்பாதி ராத்திரி

யிலேயும் ஒருவரும் துணையில்லாமல் நான் மாத்திரம் தனியே இருக்கிறேன்; இது என்வினைப்பயன் என்றவாறு.

கரைகாணாதது ஒரு காலைக் கொருகால் அதிகமாகிறது.

1168. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
என்னல்ல தில்லை துணை

என்பது, இரவின் கொடுமை சொல்லி யிரங்கியது:

இந்த இராத்திரி யானது இந்த வுலகத்திலே இருக்கிற சீவன் களையெல்லாம் தானேநித்திரை போகப் பண்ணின படியினாலே என்னையல்லாமல் வேறு துணையில்லை என்றவாறு.

நான் துணை யாகிறது, நித்திரையில்லாமல் விழித்துக் கொண்டிருத்தல்; ராத்திரியும் எங்கும் பரவியிருக்கிறது ஆதலின் நானே துணையானேன் என்பதாம். அ

1169. கொடியார் கொடுமையிற் றாங்கொடிய இந்நாள்
நெடிய கழியு மிரா

என்பது இதுவுமது

இந்த ராத்திரிக் காலங்கள் நாயகனோடு கூடி இன்பமுற்ற நாள்களிலே கொஞ்சமாயிருந்து, நாயகனைப் பிரிந்து வருத்தப் படும் நாளில் பெரியனவாய், அக்கொடியார் கொடுமைக்கு மேல் கொடுமை செய்கின்றன என்றவாறு.

நாயகனைப் பிரிந்த வருத்தத்தினாலே ராத்திரிக் காலம் நெடியதாய்ப் பொல்லாதாய் இருக்கின்றது என்பதாம். கூ

1170 உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண்

என்பது, உன்கண்கள் பேரழகு அழிகின்றன ஆதலின் நீ அழ வேண்டா மென்ற தோழிக்குச் சொல்லியது.

யனது போலக் காதலர் உள்ள தேசத்துக்குக் கொப்பெனப் போகத் தக்க வாயின் என்கண்கள் இங்ஙனம் வெள்ளமாகிய தந்நீரை நீந்தா என்றவாறு.

மனதிற்குச் செலவாவது நினைக்கிறதான படியினாலே, உள்ளம் போலக் கண்கள் கடிதிற் செல்லமாட்டா என்பது கருத்து. ய

ஆக அதிகாரம் ளாசஎ க்குக் குறள் சதளஎய

இப்பால் 118. கண்விதுப்பழிதல்[1]

என்பது, கண்கள் நாயகனைக் காணாமல் வருந்தி வாடி விசாரப்படுகிறது.

1171. கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது

என்பது, நின்கண்கள் வருந்துகின்றன; நீயாற்றவேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது:

இத்தணியா வியாதியை நான் அறிந்தது, இந்தக் கண்கள் காதலரை எனக்குக் காட்டின படியிவாலே யன்றோ? இப்போது நம்மைக் காட்டச் சொல்லித்தாம் அழுகின்றது எப்படி என்றவாறு.

இப்பொழுதும் தாமே காட்டுகிறதல்லாமல் நாம் காட்டுகிறது எங்கே என்பதாம். க

1172. தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பிரிந்துணராப்
பைதல் லுழப்ப தெவன்

என்பது இதுவுமது

மேல்வருகிறதை ஆராய்ந்து அறியாமல் அன்று காதலரைப் பார்த்து நின்ற கண்கள், இன்று இத்துக்கம் நம்மாலே வந்ததான படியினாலே பொறுக்க வேணு மென்று எண்ணாமல் விசாரப்படுகிறது என்கருதி என்றவாறு.

1. விதுப்பு - விரைவு

மேல் வருகிறதாவது, நாயகன் பிரிந்து போய் வருத்துதல், முன்னே வருவதை யறிந்து காவாதவர்கள், அது வந்தால் பொறுக்க வேணுமல்லாமல் விசாரப் பட்டால் தீராது என்பதாம். உ

1173. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து

என்பது இதுவுமது

இந்தக் கண்கள் அன்று தாமே காதலரை விரைந்து நோக்கி இன்றும் தாமே இருந்து அழுகிற இது நம்மாலே சிரிக்கத் தக்க வியல்பை யுடைத்து என்றவாறு,

வருகிற காரியத்தை முன்னே அறிந்து பரிகரித்துக்கொள்ளாதவர் பலராலும் நகைக்கப் படுவர் என்பதாம். ௩

1174. பெயலாற்றா நீருலந்த வுண்க ணுயலாற்றா
வுய்வினோ யென்க ணிறுத்து

என்பது இதுவுமது

இந்தக் கண்கள் யான் கடைத்தேற மாட்டாமலுக்கேதுவாகிய ஒழிவில்லாத நோயை என்னிடத்திலே நிறுத்தித்தாம் அழமாட்டாமல் நீர் வற்றிவிட்டன என்றவாறு.

நோயை நிறுத்துதலாவது, பிரிந்து போகிறதும் பின்பு வந்து கூடாமையும் உடையாரைக் காட்டியதனால் நோயை நிலை பெறச் செய்தல். இன்னாத காரியத்தை எமக்கு முன்பு செய்த படியினாலே, தமக்குப் பொல்லாங்கு தானே வந்தது என்றவாறு.

தமக்குப் பொல்லாங்காவது தாமே வருந்திவாடுகிறது. ச

1175. படலாற்றா பைதலுழக்குங் கடலாற்றாக்
காமநோய் செய்தவென் கண்

என்பது இதுவுமது

எனக்குக் கடலினும் பெரிதாகிய காமநோயைச் செய்த என் கண்கள், அந்தப் பாவத்தினாலே தாமும் நித்திரையில்லாமல்

நுக்கப்பட்டு அழுகின்றன என்றவாறு.

காமநோய் பார்வையினால் வந்தபடியினாலே, அதைக் கண்கள் செய்ததாகக் கூறினாள். ரு

1176. ஓவு வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
தாஅ மிதற்பட் டது

என்பது இதுவுமது.

இந்தக் காமநோயினைச் செய்த கண்கள் தாமுந் துயிலாமலழு கிறது மிக நன்று என்றவாறு.

தம்மாலே வருத்தமுற்ற எமக்கு அவ்வருத்தம் தீர்ந்தாற் போன் றது என்பதாம். சா

1177. உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்

என்பது இதுவுமது

அன்று காதலரை ஆசைப்பட்டுக் கண்டகண்கள், இன்று தூங் காமல் அழுங்கலாகிய துன்பத்தினை யனுபவித்துத் தம்முள்ளே யிருக்கிற நீர் அற்றேபோக என்றவாறு.

கண்கள் அழுதழுது நீரற்றுப் போகு மென்பதாம். எ

1178. பேணாது பெட்டா ருளர்மன்றோ மற்றவர்க்
காணா தமைவில கண்

என்பது, ''காதலர் பிரிந்து போனவரல்லர்; அவர் இங்கேதானே யிருக்கிறார்; அவரைக் காணுமளவும் நீ பொறுக்க வேணும்'' என்றதோழிக்குச் சொல்லியது:

மனத்தில் ஆசையில்லாமல் பேச்சு மாத்திரத்தில் ஆசையுடைய வர் இங்கேயிருக்கிறார்; அவராலே பலன் என்ன? அவரைக் கண்கள் காணாதமைகின்றன வில்லை என்றவாறு.

சொன்னபடி செய்யாதவர்களாலே ஒரு பிரயோசனமுமில்லை என்பதாம். அ

1179. வாராக்கால் துஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
ஆரஞ ருற்றன கண்

என்பது, ''நீயுமாற்றி நின்கண்களும் துயில்வன வாதல்வேண்டும் என்ற'' தோழிக்குச் சொல்லியது:

காதலர் வாராத நாளிலே வரவு பார்த்துத் தூங்காது, வந்த நாளிலே அவர் பிரிந்து போகப்போகிறார் என்கிற பயத்தினாலே தூங்கா; ஆனபடியினாலே இரண்டு வகையாலேயும் என் கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தையுடையன என்றவாறு.

என்கண்களுக்கு எந்நாளும் நித்திரையில்லை யென்பதாம். சு

1180. மறைபெற லூரார்க் கரிதன்றா லெம்போல்
அறை பறை கண்ணா ரகத்து

என்பது, ''காதலரை இந்த ஊரார் பழியாமல் அவர் கொடுமையை மறைக்க வேண்டும்'' என்ற தோழிக்குச் சொல்லியது: யான் காதலர் கொடுமையை மறைத்துக் கொண்டிருக்கவும் என் கண்கள் வாடிப் புலர்ந்திருக்கிறதினால், இந்தவூரார்க்கு நான்மறைக்கிறதை அறிகிறது மெத்தஎளிதுஎன்றவாறு.

உள்ளே யிருக்கிறதைப் புறத்தியாருக்கு அறியப் பண்ணுகிறதினாலே அறை பறை கண் என்றார் ம

பாலை நிலம் முற்றும்

ஆக அதிகாரம் ளகஅ க்குக்குறள் சநகஅய

இப்பால் 119. பசப்புறு பருவரல்[1]

என்பது, நாயகன் பிரிந்து போனதைப் பொறுக்க மாட்டாமையினாலே உடம்பு வேறுநிறமாய் வெளுத்துப் பசலை பூக்கிறதாம்.

1. பசப்பு - பிரிவாற்றாமையான் வருவதோர் நிறவேறுபாடு. பருவரல் துன்பம்

1181. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற

என்பது, முன்பு நாயகன் பிரிந்து போனதற்குச் சம்மதித்த நாயகி பிற்பாடு அதுபொறுக்க மாட்டாமற் பசந்தவழித்தன் னுள்ளே சொல்லியது:

என்னை நயந்தவரை என்னிடத்திலே வைத்திருக்கப் பொறாமல் அவர் பிரிந்து போதற்கு உடன் பட்டநான். அவர் பிரிந்து போனபிறகு அதுபொறுக்க மாட்டால் பசலையான என் இயல்பை யார்க்குச் சொல்வேன் என்றவாறு. க

1182 அவர்தந்தார் என்னுந் தகையா லிவர்தந்தென்[1]
மேனிமே லூரும் பசப்பு

என்பது, ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பது படச் சொல்லியது.

யான் பொறுத்துக்கொண்டிருக்கவும் இந்தப் பசலை நிறம் தன்னை உண்டாக்கினார் அவர் என்னும் பெருமிதத்தால் என் உடம்பு மேலெல்லாம் பரவா நின்றது என்றவாறு. உ

1183. சாயலு-நாணு மவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையுந் தந்து

என்பது, அழகும் நாணும் அழியாமற்பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது:

நாயகன் பிரிந்தவன்றே என் அழகையும் நாணத்தையும் தாம் வாங்கிக் கொண்டு, காம நோயினையும் பசலையையும் எனக்குத் தந்து போனார் என்றவாறு. கூ

1. இவர்தந்து - மேற்கொண்டு

1184. உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு

என்பது*, பிரிந்து போனவர் சொன்ன சொற்களை யான் மனத்திலே நினைக்கிறேன்; வசனத்தாலே சொல்லுகிறதும் அவர் நன்மைகளையே; இப்படிச் செய்யாநிற்கவும் பசலை வந்தது கள்ளமாயிருந்தது என்றவாறு.

யான் பொறுத்துக் கொண்டிருக்கவும் பசலை எப்படிவருகிறது என்பதாம் ௪

1185. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது

என்பது, காதலர் பிரிந்து அணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலை என்ற தோழிக்குச் சொல்லியது;

என்னுடைய நாயகன் பண்டு பிரிந்து உங்கே[1]போகவும் இங்கே என்மேனி பசலை யூர்கின்ற தன்றோ; இப்போதும் அப்படி யல்லாமல் வேறொன்றாமோ என்றவாறு. ௫

1186. விளக்கற்றம்[2] பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு

என்பது இதுவுமது,

விளக்கு அவிந்து வருகிறது பார்த்துக் கொண்டிருந்து இருள் வருகிறது போல், நாயகன் பிரிந்து போகிறது பார்த்துக் கொண்டிருந்து பசலை வரு மென்றவாறு. ௬

1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு

என்பது இதுவுமது.

---

* இங்குப் பரிமேலழகர் தந்த துறைக் குறிப்பு. 1. உங்கே - மிக்க தொலையும் மிக்க அண்மையுமில்லாத நடுவிடம், 2. அற்றம் - மெலிவு

முன்னொருநாள் நாயகனைக் கட்டித் தழுவிக்கொண்டிருந்த நான் அறியாமல் விட்டு நெகிழ்ந்தேன்; நெகிழ்ந்தவுடனே பசலை வந்து அள்ளிக் கொள்வது போல் என்மேனி யெல்லாம் நிறைந்தது என்றவாறு எ

1188. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்

என்பது, நீ இப்படிப் பசக்கலாகாதென்ற தோழியொடு புலந்து சொல்லியது.

இவள் பொறுத்திராமல் பசலை யானாள் என்று என்னைப் பழிக்கிறவர்களல்லாமல் இவளைத் துறந்து விட்டுப்போனார் அவர் என்று சொல்லுகிறவர் ஒருவருமில்லை என்றவாறு அ

1189. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின்

என்பது இதுவுமது.

நாயகன் தான் பிரிந்து போனதற்கு நான் உடன்படும்வகை சொல்லியவர், இன்று உன் கருத்தால் நல்லநிலையினராவராயின், என்மேனி பட்டதுபடப் பசப்பதாக என்றவாறு.

முன் பிரிவின் கொடுமை அறியாத வென்னைப் பிரிவுக்கு உடன்படுத்தினவர் (இக் கொடுமைப் படுத்தினவர்) நன்றாயிருக்க என்பதாம். கூ

1190. பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின்

என்பது*

அன்று தம் குறையைச் சொல்லிக் கூடினவருக்கு இன்று நல்காமையைச் சினேகிதர் † தூற்றாராயின், பசலையானாள் என்று பேர் பெறுகிறது எனக்கு நல்லது என்றவாறு.

அவரியல்பைப் பழித்துக் கூறாது இன்னும் பசந்தாளிவள்

---

* இங்குப் பரிமேலழகர் தந்த குறிப்பு இல்லை. † என்றது தோழியை

என்று என்மீது குறை கூறின் அதுயான் பிரிவுத்துய ராற்றும் வழி என்பதாம், ௰

ஆக அதிகாரம் ளககூக்குறள் சநளகூ0

இப்பால் .20. தனிப்படர்மிகுதி

என்பது, நாயகன் தனியேயிருந்து வருந்துகின்றதின்றி நாயகிதான் தனியேயிருந்து வருந்துகின்றதைச் சொல்லு கின்றதாம்.

1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி

என்பது, "நாயகன் உன்னிலும் பொறாராய்க் கடுகவருவர். நீயும் அவரோடு பேரின்ப மனுபவிப்பாய்" என்ற தோழிக்குச் சொல்லியது:

தம்மால் காதலிக்கப்படும் கணவர் தம்மைக் காதலிக்கப் பெற்ற மகளிர் காமநுகர்ச்சி என்னும் பரலில்லாத பழத்தினைப் பெற்றார் என்றவாறு.

இப்பரலில்லாத பழம் யாம் பெற்றிலேம் என்பதாயிற்று. க

1192. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கு மளி

என்பது, இதுவுமது

அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தால் தம்மை இன்றி யமையா மகளிர்க்கு அவரை இன்றியமையாக் கணவர் அள வறிந்து வந்து செய்யும் தலையளி[1] காலபக்குவம் அறிந்து மழை பெய்தாற் போலும் என்றவாறு.

காலபக்குவத்துக்கு மழையில்லாவிட்டால், அந்த மழை யாலே பிழைக்கிறவர்கள், இறந்து போவது போலச் சொன்ன

1. தலையளி - சிறந்தஅன்பு

பிரமாணத்திற்கு நாயகன் வாராமற் போனால் நாமும் பிராணனை விடுவோம் என்பதாம். உ

1193. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு
என்பது இதுவுமது

தம்முடைய நாயகனாலே வாஞ்சிக்கப்பட்ட ஸ்திரீகளுக்கு நம்பிக்கை சொல்லி, நாயகன் பிரிந்தால், நம்மை நினைந்து கடுக வருவார்; அவர் வந்தால் நாம் இன்புற்று வாழ்வோம் என்று சந்தோஷம் இருக்கும் என்றவாறு.

அவர் வராவிட்டால் இறந்துவிடுவேன் என்பதாம். ௩

1194. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின்
என்பது*

கற்புடைய மகளிரால் நன்கு மதிக்கப் படுவாரும் தம்முடைய கணவரால் விரும்பப்படாவிட்டால், அது அவர் தீவினைப் பயன் என்றவாறு.

தீவினையுடைய எனக்கு அந்நன்கு மதிப்பால் பலனில்லை என்பதாம். ச

1195. நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை
என்பது*

நம்மாலே காதல் கொள்ளப்பட்டார் தாமும் நம்கண் காதல் கொள்ளாவிட்டால், அவர் நமக்கு என்ன இன்பத்தைச் செய்வர் என்றவாறு.

அவர் காதல் கொள்ளாவிட்டால் நாம் காதல் கொண்டது

*இங்குப் பரிமேலழகர் தந்த குறிப்பில்லை *இங்கும் பரிமேலழகர் தந்த துறைக்குறிப்பு இல்லை; ஆனால் அடுத்துவரும் இருகுறள்களுக்கும் "இதுவுமது" என்றுள்ளது! (குறிப்புரைகாண்க)

துக்கமே யாம் என்பதாம். ரு

1196. ஒருதலையா னின்னாது காமம்காப் போல
இருதலை யானு மினிது

என்பது இதுவுமது

ஸ்திரீகள் புருஷர்கள் என்னு மிரண்டிடத்திலேயும் ஆசை யுண்டாயிருந்தால், அது நல்லது; ஒருவரிடத்திலே உண்டாய் ஒருவரிடத்திலே ஆசையில்லாவிட்டால், அது நன்றாகாது; இருவரும் ஒத்ததே இன்பமாம் என்றவாறு.

1197. பருவரலும் பைதலுங் காணான்கொல் காமன்
ஒருவர்க ணின்றொழுகு வான்

என்பது இதுவுமது.

காமம் அனுபவித்தற்குரிய ஸ்திரீ புருஷர்கள் இரண்டு பேரிடத்திலும் சரியாய் நில்லாமல், ஒருவரிடத்திலே நின்று பொருகின்ற மன்மதன், அவ்விடத்தில் உண்டான பசலையையும் தனிமையையும் காணானோ என்றவாறு.

எல்லாரிடத்திலேயும் நடக்கிற தெல்லாம் அறிகிற மன்மதனும் என்னிடத்திலே வேறானான்; இனியான் பிழைக்கிற விதம் எப்படி என்பதாம். எ

1198. வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணா ரில்

என்பது, தலைமகன் தூதுவரக் காணாமல் சொல்லியது:

தம்மால் விரும்பப்பட்ட காதலரிடத்து நின்றும் ஒரு நல்ல வார்த்தை வாராமலே பிரிவாற்றி உயிர்வாழ்கிற ஸ்திரீகளைப் போல் கெட்டி மனசுடையவர்கள் இந்த உலகத்தில்லை என்றவாறு. அ

1199. நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு

என்னாலே காதலிக்கப்பட்ட காதலர், என்னிடத்திலே அன்பிலரே யாயினும், அவர்திறத்து ஒரு சொல்லும் செவிக்கு இன்பமாம் என்றவாறு. அவர் வாரலர் என்னுஞ் சொல்லாயினும் அமையும்; அந்த வார்த்தையுங் கேட்டிலேன் என்பதாம். கூ

1200. உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅய் வாழிய நெஞ்சு

என்பது, தலைமகன் தூது வராதது கண்டு தான் தூது விட நினைத்தவள் நெஞ்சொடு சொல்லியது.

உன்னுடன் கூடாதார்க்கு உன் துக்கத்தைச் சொல்ல லுற்ற நெஞ்சே! நீ பிரிவு பொறுக்க மாட்டாவிட்டால் உனக்குத் துயரஞ் செய்கின்ற கடலைத் தூர்க்க நினைப்பாயாக; அது எளிது என்றவாறு.

நீ சொல்லுகிறது அளவில்லாத வியாதியானபடியினாலேயும், கேட்பார் உன்னிடத்திலே உறவிலரான படியினாலேயும், அது முடியாது; முடிந்தாலும் பயனில்லை என்பது கருதாது முயலா நின்றாய் என்பதாம். ய

ஆக அதிகாரம் ளஉ0 க்குக் குறள் சஙஉள

இப்பால் 121. நினைந்தவர் புலம்பல்

என்பது, முன்கூடியிருந்த போது பெற்ற இன்பத்தை நினைந்து, பள்ளியறையிலே தலைமகள் தனியா யிருக்கிறதும், பாசறையிலே தலைமகன் தனியாயிருக்கிறதுமாம். இவர்கள் இருவரும் தனிமையாயிருந்து வருந்துகிறது.

1201. உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது

என்பது. தூதாக வந்த பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது: முன் கூடிய நாளை யின்பத்தைப் பிரிந்த போது நினைத்தாலும் அப்பொழுது கூடிய இன்பம் பெற்றாற் போல் நீங்காத

மகிழ்ச்சியைச் செய்தலால். குடித்தாலல்லாமல் மகிழ்ச்சியைச் செய்யாத கள்ளினுங் காமம் இன்பமுடையது என்றவாறு. க

1202, எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்

என்பது, இதுவுமது.

தனக்குப் பிரியமானவரைப் பிரிந்த போது அவர்களை நினைத்தால் அந்த நினைவினாலே வருந் துக்கமில்லையாம்; ஆனபடியினாலே காமம் எப்படியும் நல்லதாம் என்றவாறு. உ

1203. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்

என்பது, தலைமகனை நினைக்கின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது :

எனக்குத் தும்மல் எழுவது போலிருந்து கெடாநின்றது; அதனாலே காதலர் என்னை நினைப்பார் போன்று நினையாராகல் வேண்டும் என்றவாறு. ௩

1204. யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே யவர்

என்பது (இதுவுமது)

எம்முடைய நெஞ்சிலே அவர் எப்பொழுதும் இரா நின்றார்; அவர் நெஞ்சிலும் யாமும் இராமோ என்றவாறு ச

1205. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல்

என்பது (இதுவுமது)

தம்முடைய நெஞ்சிலே யாம் போக வொட்டாமல் எம்மைக் காவல் கொண்ட காதலர் தாம், எம்முடைய நெஞ்சிலே எப்பொழுதும் வருதற்கு நாணாரோ என்றவாறு ரு

1206. மற்றியா னென்னுளேன் மன்னோ வவரொடியான்
உற்றநாள் உள்ள உளேன்

என்பது, ''அவரொடு புணர்ந்த நாளை யின்பத்தை நினைந்து மாய்ந்து போகா நின்றாய்; அந்த இன்பத்தை மறந்துவிடு'' என்ற தோழிக்குச் சொல்லியது:

யான் அவரோடு புணர்ந்த நாளை யின்பதை நினைக்கிறதினாலே யிந்தத் துக்கமாகிற வெள்ளத்துக்குள்ளே பிழைத்திருக்கிறேன்: அந்த இன்பத்தை நினையாவிட்டால் பின்னை யெதனாலே பிராணனுடனே யிருப்பேன் என்றவாறு. சு

1207. மறப்பி னெவனாவன் மற்கொன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும்

என்பது (இதுவுமது)

அந்த இன்பத்தை மறக்கவறியேனாகி நினையா நிற்கவும், பிரிவு என் உள்ளத்தைச் சுடா நின்றது; அப்படிப் பிரிவாற்றாத யான், அந்த இன்பத்தை மறந்தால், இறந்து போகிற தல்லாமல் எதனாலே யிருக்கப் போகிறே னென்றவாறு. எ

1208. எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றோ
காதலர் செய்யுஞ் சிறப்பு

என்பது, ''இந்தத் துக்கமறிந்து வந்து காதலர் நினக்கு இன்பஞ் செய்வர்'' என்ற தோழிக்குச் சொல்லியது:

காதலரை நாம் எத்துணையும் மிக நினைந்தாலும் அதற்கவர் கோபித்துக் கொள்ளார்; காதலரெனக்குச் செய்யு மின்பமாவது அம்மாத்திர மன்றோ என்ற வாறு.

கோபித்துக் கொள்ளாமை யாவது, நாம் நினைக்கிறதற்கு உடன்பட்டு நம் நெஞ்சிலே யிருக்கிறது அ

1209. விளியுமென் னுயிர் வேறல்ல
ரளியின்மை யாற்ற நினைந்து

என்பது*

முன்பெல்லாம் நாமிருவரும் வேறல்லே மென்று சொல்லுவாரது அளியின்மையை நினைந்து, என்னுயிர் அழியா நின்றது என்றவாறு.

அவர் வேறல்லேம் என்ற உறுதி பற்றி யிருந்த தென்னுயிர் என்பதாம். கூ

1210. விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி

என்பது

மதியே! என் நெஞ்சில் இடைவிடாது இருந்தே விட்டுப் போயினாரை யான் என் கண்ணள வாயினும் எதிர்ப்படும் வகை நீ படா தொழிவாயாக என்றவாறு.

மதியே! உறுதி சொன்ன நாயகனைக் கண்களாற் காணு மளவும் மறையாதிருக்க வென்று நினைந்ததாம். ய

ஆக அதிகாரம் ளஉக க்குக் குறள் நஉளய

இப்பால் 122. கனவு நிலையுரைத்தல்

என்பது, தலைமகள் தான் கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுகிறது. அந்தக் கனவும் நினைவு மிகுதியினாலே காணப்பட்டதாம்.

1211. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து

என்பது, தலைமகன் தூதுவரக் கண்டவள் சொல்லியது:

யான் வருத்தப் படுகிறது அறிந்து அது தீரக் காதலர் விடுத்த தூதினைக் கொண்டு என்னிடத்திலே வந்த கனவுக்கு

*இங்கும் அடுத்த குறட்கும் பரிமேலழகர் தந்த துறைக் குறிப்பில்லை

யான் விருந்தாக எதைச் செய்வேன் என்றவாறு.

விருந்து என்பது புதிதாய் வந்தவர்களுக்குச் செய்யுமுபசாரம் அது கனவுக்கு ஒன்று காணாத படியினாலே யாது செய்வே னென்றாள். க

1212. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்

என்பது, தூது விட நினைத்தவள் சொல்லியது:

தூங்காம லிருக்கிற கயல்போலும் என் கண்கள் யான் இரந்தாற்றுஞ்சுமாயின், கனவினிடையே காதலரைக் காணலாம்; கண்டால் அவருக்கு யான் வருந்தியிருக்கிற தெல்லாம் யானே விரியச் சொல்வேன் என்றவாறு.

தூதுவரோடு சொல்லி யனுப்பினால் சுருங்கச் சொல்ல வேண்டும் தான் சொன்னால் மனதில் உண்டான தெல்லாம் சொல்லலாம் என்பதாம். உ

1213. நனவினா[1] னல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர்

என்பது, ஆற்றாளெனக் கவன்ற[2] தோழிக்கு ஆற்றுவல் என்பது படச் சொல்லியது:

நனவிலே வந்து என்னைச் சேராதாரைக் கனவிலே காண்கிறதினாலே என் உயிர் நிற்கிறது; இல்லாவிட்டால் இறந்து போம் என்றவாறு.

1214. கனவினா னுண்டாகுங் காமம் நனவினா
னல்காரை நாடித் தரற்கு

என்பது இதுவுமது.

நனவிலே வந்து சேராதவரை அவர் போன விடந் தேடிக் கொண்டு வந்து கனவு தருதலால், அந்தக் கனவினிடத்திலே

1. நனவு-விழிப்புநிலை 2. கவன்ற-வருந்திய

எனக்கின்ப முண்டாகா நின்றது என்றவாறு. ச

1215. நனவினாற்[1] கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது
என்பது இதுவுமது,

முன்பு நினைவினாலே[1] காதலரைக் கண்டு கூடியனுபவித்த இன்பமும், அப்பொழுதே இனிதாயிற்று; இன்று கனவிலே கண்ட இன்பமும் கண்ட பொழுதே இனிதாயிற்று; ஆனபடியினாலே. எனக்கு இரண்டு வகையும் ஒத்துச் சரியாயிருந்தன என்றவாறு ரு

1216. நனவென ஒன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன்
என்பது இதுவுமது

நனவென்று சொல்லப்படுகின்ற ஒருபாவி இல்லாவிட்டால், கனவிலே வந்து கூடிய காதலர் என்னைவிட்டுப் பிரியார் என்றவாறு.

1217. நனவினா னல்காக் கொடியார் கனவினா
னென்னெம்மைப் பீழிப் பது
என்பது*

ஒரு நாளும் நனவிலே வந்து கூடாத பொல்லாதவர் தினந் தினமும் கனவிலே வந்து நம்மை வருத்துகிறது என்ன வியைபு யற்றி என்றவாறு. எ

1218. துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து
என்பது

என் நெஞ்சை விடாமல் இருக்கிற காதலர் நான் தூங்குகிற பொழுது வந்து என்தோள் மேலராய்ப் பிறகு விழிக்கிறபோது திரும்பி என் நெஞ்சிலே இருப்பர் என்றவாறு.

1. நனவில் *இங்கும் அடுத்த மூன்று பாடல்களுக்கும் பரிமேலழகர் தந்த துறைக் குறிப்பு இல்லை.

ஒருகாலும் என்னைவிட்டுப் பிரியாதாரை நீ பொல்லாங்கு சொல்ல வேண்டா என்பதாம். அ

1219. நனவினா னல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர்

என்பது

தமக்கு ஒரு காதலர் இல்லாத படியினாலே அந்தக் காதலரைக் கனவினாற் கண்டறியாத ஸ்திரீகள் தாம் அறிய நினைவில்[1] வந்து கூடாத காதலரை அன்பிலர்எனநோவர் என்றவாறு ச

1220. நனவினா னந்நீத்தா ரென்பர் கனவினாற்
காணார்கொ லிவ்வூ ரவர்

என்பது

இவ்வூரிலே இருக்கிற ஸ்திரீகள் நினைவிலே[1] நம்மை விட்டுப் போனார் என்று நம்முடைய காதலரைக் கொடுமை சொல்லாநிற்பர்; அவர் கனவின்கண் வருகிற தறியார் என்றவாறு.

கனவிலே கண்டறியாதவர்கள் நனவில் வந்தாலும் பிராணனை நிற்கப் பண்ணுகிற நாயகனைக்குறை சொல்லுவார்கள். ய

ஆக அதிகாரம் ளஉஉக்குக்குறள் சதஉளஉய

இப்பால் 123. பொழுதுகண்டிரங்கல்

என்பது, சாயங்காலம் வந்தது கண்டு தலைமகள் விசாரப்படுதலாம்.

1221. மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது

என்பது[2]

மாலைப் பொழுதே! நீ முன்னாள்களிலே வந்த மாலையோ வென்னின் அல்லை; நாயகனைப் புணர்ந்து பிரிந்திருக்கிறவர்கள் உயிரைக் கொண்டுபோகிற கடைசிக்காலமாய் இருந்தாய்

1. நனவில் என்க

1. இவ்வதிகாரம் 10 குறள்களுக்கும் பரிமேலழகர் தந்த குறிப்பு இவ்வுரையில் கொடுக்கப் பெறவில்லை.

என்றவாறு. க

1222. புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ண தோநின் றுணை

என்பது

மயங்கின மாலைப்பொழுதே! நீயு மெம்மையப்போல வாடின கண்களையுடையையா யிருந்தாய்; நின் காதலரும் என் காதலர் போல் வன்கண்ணரோ என்றவாறு.

மயங்குகிறதாவது, பகலும் இரவும் தம்முள் விரவியிருத்தலாம் கலங்குதலும் தோன்ற நின்றது. உ

1223. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்

என்பது

இந்த மாலைப் பொழுது, காதலர் என்னுடனே கூடியிருக்கிற நாளெல்லாம், எனக்குப் பயந்து வந்தது; இப்போது காதலர் பிரிந்த படியினாலே, பயப்படாமல் என்னைக் கொல்லுவதாகிய துன்பத்தை மேன்மேலும் உண்டாக்கிக் கொண்டு வருகின்றது என்றவாறு.

1224. காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்

என்பது

காதலர் கூடியிருக்கிற போதெல்லாம் என் உயிர் தளழக்க வந்த மாலைப்பொழுது அவர் இல்லாத போது கொல்லுகிற கொலைக்களத்திலே கொலைஞர் வருமாறுபோல் வாரா நின்றது என்றவாறு. ச

1225. காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை

என்பது

காலையும் மாலையும் அவர் கூடின நாளைப்போல் வாராமல், இப்போது வேறாய் வாராநின்றன; யான் காலைக்குச் செய்த உபகாரம் என்ன? மாலைக்குச் செய்த பகையென்ன என்றவாறு.

காலைப்பொழுது விரகவேதனை செய்யாதிருக்க, மாலைப் பொழுது வருத்தஞ் செய்கிறபடியினாலே பகையா மென்பதாம் ரு

1226. மாலைநோய் செய்தல் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்

என்பது

முன்பெல்லாம் நட்பாய் எனக்கு இன்பஞ்செய்து வந்த மாலைப் பொழுது, இப்போது பகையாய்த் துன்பஞ் செய்கிறதை, நாயகன் பிரிதற்கு முன்னேயறியேன் என்றவாறு.

அறிந்தால், காதலரைப் பிரிந்து போகவொட்டேன் என்பதாம். சா

1227. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்

என்பது

இந்தக் காமநோயாகிய பூ, காலைப் பொழுதிலே அரும்பிப் பகலெல்லாம் பெரிய அரும்பாகி முதிர்ந்து, மாலைப்பொழுதிலே மலரா நிற்கும் என்றவாறு. எ

1228. அழல்போலும் மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை

என்பது

முன்னெல்லாம் இனியதாய்ப் போந்த ஆயன் குழல், இது பொழுது, நெருப்புப் போலச் சுடுவதாய மாலைக்கு

தூதுமாய், அந்த மாலை வந்து என்னைக் கொல்லுதற்குக் கொல்லும் படைக்கலமுமாயிற்று என்றவாறு. அ

1229. பதிமருண்டு பைத லுழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து

என்பது

இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கித் துக்கப்பட்டேன்; இனிக் கண்டவர்களும் மதி மயங்கும் வகை மாலை வரும் பொழுது, இந்த ஊரார் எல்லாரும் மதி மயங்கி நோயுடையவர் களாவர் என்றவாறு. கூ

1230. பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர்

என்பது

காதலர் பிரிவைப் பொறுத்துப் பிராணனுடனே இருந்த என் உயிர், பொருளியல்பே தமக்கியல்பாக உடையவரை நினைந்து, இந்த மாலைப் பொழுதிலே இறந்துபோகா நின்றது என்றவாறு.

பொருள் தேடப் பிரிந்து போனவர் சொன்ன பருவத்துக்கு வாராமையின், அவர் வராதது பொருள் முடியாத படியினாலே யல்லவா? பொருளையே நினைந்தாரல்லாமல், தான் சொன்ன பருவத்தை நினைந்தாரல்லர் என்பதாம். ய

ஆக அதிகாரம் ளஉங க்குக் குறள் சதஉளகய

இப்பால் 124. உறுப்பு நலனழிதல்

என்பது, தலைமகள்தன் கண்ணும் தோளும் முகமும் முதலான அவயவங்கள் தம் அழகழிதல்; இது நாயகனை நினைந்து வருந்து கிறதினாலே யாம் என்பது.

1231. சிறுமை நமக்கொழியச் சேட்சென்றா ருள்ளி
நறுமலர் நாணின கண்

என்பது, பிரிவாற்றாமல் அழகழிந்த தலைமகட்குத் தோழி சொல்லியது :

இந்த ஆற்றாமை நம்மிடத்திலேயே நிற்கத் தூரத்தில் போன காதலரை நீ நினைந்து அழுகிறதினாலே, நின் கண்கள் பிரகாசம் அழிந்து[1] முன்னே தமக்கு நாணின மலர்களுக்கு இப்பொழுது தாம் நாணா நின்றன என்றவாறு. க

1232. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண்

என்பது இதுவுமது

பசப் பெய்தன் மேல் நீர் வார்கின்ற நின் கண்கள், நம்மால் விரும்பப்பட்ட வரது சேராமையைப் பிறருக்குச் சொல்லுவ போலா நின்றன: இனி நீ பொறுத்திருக்க வேண்டும் என்றவாறு. உ

233. தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்

என்பது இதுவுமது

காதலர் கூடிய நாள் இன்பமிகுதியாற் பூரித்த நின் தோள்கள் இப்போது அவர் பிரிந்து போனதை யெல்லாரு மறியச் சொல்லுகிறது போலே வாடியிரா நின்றன; இது தகாதென்றவாறு. ௩

1234 பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்

என்பது இதுவுமது

அன்றும் நாயகனைப் பிரிந்த தோள்கள், அவராற் செய்யப்பட்ட அழகேயன்றிப் பழைய இயற்கை யழகையும் இழந்து வாடி வளைகள் கழன்று போகா நின்றன என்றவாறு. ௪

1. இழந்து (பரிமேலழகருரை)

1235. [கொடியார் கொடுமை யுரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்]*
என்பது இதுவுமது

கட்டிக் கொண்டிருக்கிற கை நெகிழ்ந்தாலும் பொறாதவளுக்கு இத்தனை நாள் பிரிந்தால் எப்படியோ வென்று நினையாத கொடிய நாயகனுடைய கொடுமையைச் சொல்லா நின்றன, வளைகளும் கழன்று பழைய இயற்கையழகும் இழந்த இத் தோள்கள் என்றவாறு.

அவரோடு கலந்த தோள்களே சொல்லுவனவானால் அயலார் சொல்லுதல் சொல்ல வேண்டுமோ என்பதாம். ரு

1236. தொடியொடு தோணெகிழ நோவ லவ
கொடிய ரெனக்கூற னொந்து
என்பது†

நான் பொறுத்துக் கொண்டிருந்தாலும், என் வயத்திலே நில்லாமல் வளைகள் கழலுமாறு தோள்கள் மெலிய அவற்றைக் கண்டு, நீ காதலரைக் கொடியர் என்று சொல்லுதலைப் பொறாது நோகின்றேன் என்றவாறு.

யானாற்றேன் ஆகில் அது அவர் வாராததற்கன்று, நீ கூறுகின்றதற்க என்பதாம். எனவே நீ அவரைக் கொடியர் என்று சொல்ல வேண்டாம் என்பதாம். சா

1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து
என்பது†

பொல்லாதவர் என்கிறவர்க்கு, நெஞ்சே! நீ போய் என் வாடிய தோளினால் விளைந்த சண்டையைச் சொல்லி, வெகுமானம் பெறவல்லையோ; வல்லையானால் அதற்குச் சரியானதொன்று

---

*இக்குறள் சுவடியில் தரப்படவில்லை.

†இங்குப் பரிமேலழகர் தந்த துறைக் குறிப்பு இல்லை.

†இங்கும் பரிமேலழகர் தந்த துறைக் குறிப்பு இல்லை

பிரிவில்லை என்றவாறு. ௭

1238. முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்

என்பது* தலைமகன் தன்னுள்ளே சொல்லியது:

தன்னைக் கெட்டியாய்க் கட்டிக் கொண்ட என் கைகளை நெகிழ்த்தவுடனே, நாயகியுடைய முகம் பசலை பூத்தது; அப்படிப்பட்ட முகம் இந்தப் பிரிவிற்கு யாது செய்யுமோ என்றவாறு.

ஆகவே கடிதிற் செல்ல வேண்டுமென்பது கருத்து. ௮

1239. முயங்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்
என்பது இதுவுமது

அப்படிக் கைகளை நெகிழ்த்த போது, நடுவே சிறுகாற்று நுழைந்தது; அந்தக் காற்றுப் பொறாமல் நாயகியுடைய கண்கள் பசலை பூத்தன; அப்படிப்பட்ட கண்கள், மலைகளும் காடும் நாடுகளும் இவைகளெல்லாம் நடுவேயிருக்க எப்படிப் பொறுத்தன என்றவாறு.

1240. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு
என்பது இதுவுமது.

குளிர்ந்த காற்றுப் பட வந்த கண்ணின் பசப்புத் தனக்கயலாயிருக்கிற நுதல் பசலை பூத்தது கண்டு துன்பமுற்றது என்றவாறு.

முன்பு தான் புணர்ந்திருந்த நாளையில் புல்லின கை நெகிழவே உறுப்பு நலனழியும்; அப்படியிருக்கவே இப்பொழுது நாம் பிரிந்து நெடுநாளாகையால் பசப்பு முதலானது வந்து நாயகியை

*வினை முடிந்து மீடலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது தன்னுள்ளே சொல்லியது

வருத்தா நிற்கும்; ஆதலின் யாம் கடிதிற் போய் நாயகியைச் சேரவேண்டும் என்பதாம். ௰

ஆக அதிகாரம் ளஉச க்குக்குறள் சஙஉளசய

இப்பால் 125. நெஞ்சொடு கிளத்தல்

என்பது, பிரிவு பொறாமல் வருந்திய வழி, தன் குறை சொல்லு தற்கு ஒருவரையும் காணாமல் செய்ய வேண்டிய வகையறி யாது,' தலைவி நெஞ்சொடு சொல்லியதாம்.

1241. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து

என்பது, தன் ஆற்றாமை தீருந் திறன் நாடியது:*

நெஞ்சே! இந்தக் காம நோயினைத் தீர்க்கும் மருந்தொன்றை நீயே யறிந்து எனக்குச் சொல்லாயோ என்றவாறு. க

1242. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு

என்பது, தலைமகனைக் காண்பதில் விருப்பமிகுதியாற் சொல்லியது:

என் நெஞ்சே! நீ வாழ்வாயாக; நாயகன் நம்பேரிலே காதலில்லாத போது, நீ அவர் வரவு பார்த்து வருந்துவது, நின் பேதைமை யல்லாமல் பிறிதில்லை என்றவாறு.

யாம் அவர்பாற் செல்லுதலே அறிவாவது என்பதாம். உ

1243. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பிரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில்

என்பது இதுவுமது

நெஞ்சே! அவரண்டைக்குப் போகாமலும்; பிராணனை விடாம லும் இருந்து, காதலர் வரவை நினைந்து, நீ வருந்துகின்றது

*இங்குப் பரிமேலழகர், ''தலைமகன் தூதுவரக்காணாது சொல்லியது'', என்பர்

என்ன? இத்துன்ப நோய் செய்தவரிடத்திலே நமக்கு இரங்கி வரக் கருதல் உண்டாகாது என்றவாறு. ௩

1244. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று

என்பது இதுவுமது

நெஞ்சே! நீ அவர்பால் செல்லலுற்றாயாயின், இக்கண்களையும் உடன் கொண்டு போவாயாக; அல்லாமல் நீ மாத்திரமே போனால், இக்கண்கள் தாம் அவரைக் காண்டல் வேண்டி நீ காட்டென்று என்னைத் தின்பன போன்று வாதைப்படுத்தா நிற்கும் என்றவாறு.

1245. செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்றா லுறாஅ தவர்

இதுவுமது என்பது

நெஞ்சே! யாம் தம்மை நினைக்கத் தாம் நம்மை நினையாத காதலரை, வெறுத்தாரென்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலிநமக்குஉண்டோ? இல்லை என்றவாறு. ரு

1246. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் நெஞ்சு

என்பது *நெஞ்சினைக் கழறியது

நெஞ்சே! யான் அவரோடு பிணங்கினால், அந்தப் பிணக்கைப் புணர்ச்சியினாலே நீக்க வல்ல காதலரைக் கண்டால், பொய்யே யாயினும் ஒருகால் பிணங்கி அவரை விட்டுப் பிரியமாட்டாய்; நீ அவரைப் பொல்லாதவர் என்று பொய்க்காய்வு காயா நின்றாய்; இதனை விட்டு அவர் பக்கல் போகத் துணிவாயாக என்றவாறு. சா

1247. காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு

என்பது நாண் தடுத்தலின் அச்செலவு ஒழிவாள் சொல்லியது

*தலைமகன் கொடுமை நினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக்கழறியது பரிமேலழகர்

நல்ல நெஞ்சே! காமம் விடமாட்டா யாகில் நாணாகிய வெட்கத்தை விடு; வெட்கத்தை விடமாட்டாயாகில் காமத்தை விடு; இரண்டும் விடமாட்டாயாகில், இரண்டையும் உடல் தாங்கும் வலிமை எனக்கில்லை என்றவாறு இரண்டையும் விடாது பெண்மையை நிலைபெறுத்தலின் நல்லை என்னும் குறிப்பிற்று என்பதாம். எ

1248. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் நெஞ்சு

என்பது இதுவுமது

என் நெஞ்சே! இந்த ஆற்றாமையை அறியாத படியினாலே வந்து புணர்தல் செய்யாரென்று கருதி, அதனை அறிவிக்க நம்மைப் பிரிந்து போய் அவர் பின்னே ஏங்கிச் செல்கிற நீ ஒன்று மறியாய் என்றவாறு.

ஆற்றாமையறிந்தும் வாராமற் போயினாரை, அதனைக் காணாதவழி அவர் பின்னே சென்றுரைக்கவருவரென்று கருதினமையின் பேதை யென்றார். அ

1249. உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் நெஞ்சு

என்பது இதுவுமது

என் நெஞ்சே, காதலர் நின் அகத்தராக, அதுமுன்பெல்லாம் கண்டுவைத்திருந்தும், இப்பொழுது நீ புறத்திலே தேடுகிறது யாரிடத்து என்றவாறு.

நின் அகத்து இருக்கின்றவரை அறியாது, புறத்துத் தேடிச் சேறல் நகையுடையது; அதனை ஒழி என்பதாம். சு

1250. துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
இன்னும் இழந்துங் கவின்

என்பது, அவரை மறந்தாற்றல் வேண்டும் என்பது படச் சொல்லியது:

நம்மைக் கூடாதபடி துறந்து போயினாரை நாம் நம்முள்ளே உடையோமாக, அவரை விட்டுப்பிரியமாட்டாமல் நம் அகக் கவினு†மிழப்போம் என்றவாறு.

நம்மைத்துறந்து போயினாரை நாம் மறத்தல் மாட்டே மாதலின், மெய்யழகு அழிந்தது மல்லாமல் நின்ற நிறையும் இழப்போம் என்பதாம். ௰

ஆக அதிகாரம் ளஉ௰க்குக்குறள் சஉளரு௰

இப்பால் 126. நிறையழிதல்

என்பது, தலைமகள் மறைக்கத்தக்கவற்றை வேட்கை மிகுதி யால் மறைக்க மாட்டாமல் வாய்விடுதல்.

1251. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு

என்பது, நாணும் நிறையும் அழியாமல் நீ பொறுக்கவேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது:

நாணமாகிய தாழ்ப்பாளிட்ட நிறை யென்னுங்கதவைக் காம மென்னுங் குந்தாலி பிளந்து போடா நின்றது என்றவாறு.

காம மிகுதியினால் யான் ஆற்ற மாட்டேன் என்றவாறு க

252, காம மெனவொன்றோ கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில்
என்பது*

எல்லாரும் தொழிலொழிந்து சும்மா இருக்கிற பாதி இராத்திரியிலேயும், என் நெஞ்சத்தை ஒறுத்துத் தொழில் கொள்ளா நின்றபடியினாலே, காமம் என்று சொல்லப்பட்ட ஒன்று தயையில்லாததாய் இருந்தது என்றவாறு. உ

---

† அகக்கவின் - நிறை நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை

*இங்குப் பரிமேலழகர் தந்த குறிப்பு இல்லை

1253. மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும்

என்பது, ஸ்திரீகள் காமம் மறைக்கப்படும் என்றவளுக்குச் சொல்லியது:

இந்தக் காமத்தை யான் என்னுள்ளே மறைக்க நினையா நின்றேன்; அது நில்லாமல் தும்மல் போல வெளிப்பட்டுவிடுகின்றது என்றவாறு. ௩

1254. நிறையுடையேன் என்பேன்மன் யானோவென் காமம்
மறையிறந்து மன்று படும்
என்பது இதுவுமது

யான் நிறையுடையேன் என்றிருப்பேன்; அப்படியிருக்கவும் இன்று என்காமம் மறைக்கிறதைக் கடந்து வெளிப்படாநின்றது என்றவாறு.

மன்று படுதல் - பலரு மறிதல் ௪

1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றா ரறிவதொன் றன்று
என்பது*

தம்மை விட்டுப் போனார் பின்னே போகாது, தாமும் விட்டுப் பிரிந்து நிற்கும் நிலைமை, காம நோயினை யுறாதார் அறிவதல்லாமல், காம நோயினை யுற்றவர்கள் அறிவதொன்றன்று என்பதாம். பின்செல்லுகிறதாவது, விடாமல் நினைத்திருக்கிறதாம். ௫

1256. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
எற்றென்னை யுற்ற துயர்
என்பது

என்னைவிட்டுப் பிரிந்தார் பின்னே நான் போக வேண்டுதலால், என்னை அடைந்த துயர் மிகவும் நன்றென்றவாறு.

*இங்கும் அடுத்த குறட்கும் பரிமேலழகர் தந்த துறைக் குறிப்பு இல்லை.

இக்காமநோய் யான் சொல்லவும் கேட்கவும் ஆவதொன் றன்று; மிகக் கொடிது என்பதாம். சா

1257. நாணென வொன்றோ அறியலம் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின்

என்பது, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு பிணங்கி யிராமல் மதிமயங்கிப் புணர்ந்த காரணம் என் என்றவளுக்குச்[1] சொல்லியது:

நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பினவற்றைச் செய்யுமளவில், நாணம் என்று ஒன்றையு மறிய மாட்டேமா யிருந்தேம் என்றவாறு. எ

1258. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை

என்பது இதுவுமது

நம்முடைய நிறையாகிய காவலை அழிக்கிற சேனையாவது, பலபொய் சொல்லவல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்களன் றோ? அப்படியான பின்பு அந்தக் காவல் நிற்குமோ? நில்லாது என்றவாறு. அ

1259. புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சம்
கலத்த லுறுவது கண்டு

என்பது இதுவுமது

அவர் வந்தபோது பிணங்கி இருக்கக் கடவேன் என்று கருதி, முன்நில்லாது அப்பாலே போயினேன்; போன இடத்தி லேயும் என் நெஞ்சு நில்லாமல் அவருடனே கூட நினைத்தது ஆனபடியினாலே இனிப்பிணங்கியிருக்கிறது முடியாதென்று புல்லினேன் என்றவாறு. கூ

1260. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்

என்பது இதுவுமது

1. என்ற தோழிக்கு

நிணத்தை நெருப்பிலே போட்டால் அது உருகுகிறதுபோலத் தம் காதலரைக் கண்டவுடனே நிறை அழிந்து உருகும் நெஞ்சினையுடைய ஸ்திரீகளுக்கு, நம் நாயகனுடனே பிணங்கி இருப்போ மென்கிறது உண்டாமோ? ஆகாது என்றவாறு.

யான் அத்தன்மையே னாகலின் எனக்கு அஃது இல்லை என்பதாம். ய

ஆக அதிகாரம் ளஉயசாக்குக்குறள் சநஉளசாய

இப்பால் 127. அவர்வயின் விதும்பல்

என்பது, தலைமகனும் தலைமகளும் பிரிந்தபோது ஒருவரையொருவர் காணவேண்டி ஆசையினாலே விசனப் படுகிறதைச்[1] சொல்லுகிறதாம்.

1261. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்

என்பது, தலைமகள் தலைமகனைக் காணவேண்டி விசாரத்தினால்[2] சொல்லியது:

அவர் நம்மைப் பிரிந்து போன நாள்களைச் சுவரிலே கிழித்து வைத்து, அவற்றைத் தொட்டு எண்ணி எண்ணி விரல்கள் தேய்ந்து போயின; அதுவு மல்லாமல் அவர்வரும் வழியைப் பார்த்துப் பார்த்துப் கண்களும் பிரகாசம் மறைந்து போயின; இப்படியாகியும் அவர் வரவில்லை யென்றவாறு. க

1262. இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற்
கலங்கழியும் காரிகை நீத்து

என்பது[3]

விளங்கா நின்ற இழையினையுடையாய்! காதலரை இன்று மறப்பேனாயின், தோள்வளைகள் கழன்றுபோம் என்றவாறு.

1. காண்டற்கு விரைதல். 2. விதுப்பினால் - பரிமேலழகர் 3. ருந்து குறள் 1267 வரை பரிமேலழகர் தந்த துறைக்குறிப்பு இல்லை.

அவரை மறவாமல் நினைந்தேனாயின் மறுமையிலே அவரை அடைந்து இன்புறலாம்; ஆனபடியினாலே மறக்கமாட்டேன் என்பதாம். உ

1263. ஊனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்

என்பது

இன்பம் அனுபவிக்கிறதை விரும்பாமல் வெல்லுதலை நினைந்து நாம் துணையாகிறதை இகழ்ந்து, தம்ஊக்கம் துணையாகப் போயினார்; அதனைவிட்டுத் திரும்பிவருவாரென்கிறதினாலே நான் இன்னும் பிராணனுடனே இருக்கிறேன் என்றவாறு.

அவர் வாரா ரென்பதறிந்தால் அன்றே இறந்து போவே னென்பதாம். ௩

1264. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு

என்பது

நம்மேல் ஆசையை விட்டுப் பிரிந்து போனவர்மேல் கூடிய காமத்துடனே வருகிறதை நினைந்து என்நெஞ்சு வருத்தம் ஒழிந்து மென்மேலும் சந்தோஷத்தை அடையா நின்றது என்றவாறு.

1265. காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்குமென் மென்றோட் பசப்பு

என்பது

கண்கள் சந்தோஷப் படும்வகை என் கணவனை யான் காண் பேனாக; அப்படிக் கண்டபின் என் தோளிலே பூத்த பசலை தானே நீங்கும் என்றவாறு.

கேட்டதனாலே நீங்கா தென்பதாம் ரு

1266. வருகமற் கொண்க னொருநாட் பருகுவன்
பைதனோ யெல்லாங் கெட

என்பது

இத்தனை நாளும் வாராத நாயகன் ஒருநாள் என் கண் எதிரே வருவானாக; வந்தால் என் காம நோயெல்லாங் கெட அமிர்தத்தை[1] ஐம் பொறிகளானும் பருகக் கடவேன் என்றவாறு.

பருகுகிற தாவது: கண்களினாலே அவர் வடிவம் பார்த்தும், காதினாலே வசனத்தைக் கேட்டும். மூக்கினாலே மோந்தும், வாயினாலே முத்தமிட்டும், மெய்யினாலே தழுவியும் இன்புறுதல். சா

1267. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்

என்பது

கண்போலச் சிறந்த நம் நாயகன் வந்தால் அவர் கொப்பென வரவில்லை என்று பிணங்கி யிருப்பேனோ? அஃதல்லாமல் பிரிவாற்றாமை நோக்கிப் புல்லுவேனோ இந்த இரண்டு வகையும வேண்டுதலான் இரண்டையும் கலந்து செய்வேனோ யாது செய்யக் கடவேன் என்றவாறு. எ

1268. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து

என்பது, வேந்தனைச் சேவிக்கிற தலைமகன் சொல்லியது.[2] நம்முடைய வேந்தன் சண்டை பண்ணி வெல்வானாக; அவன் வென்றால் நாமும் மனைவியைச் சேர்ந்து மாலைப் பொழுதிற்கு அங்கு விருந்து அயர்வே[3] மாக என்றவாறு.
விருந்தாவது, புதியதாய் வருகிறது. அ

1. என்றது தலைவனை 2. குறிப்புரை காண்க 3. அயர்வேம் - கொண்டாடுவோம்

1269. ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு

என்பது[1]

தேசாந்திரத்திலே பிரிந்துபோ யிருக்கிற நாயகன் திரும்பி வரும் நாளைக் குறித்து அவர் வருமளவும் பிராணனுடனே இருக்கிற ஸ்திரீகளுக்கு, ஒரு நாள் அநேக நாள்கள் போலே நெடிதாகக் காட்டும் என்றவாறு. சா

1270. பெறினென்னாம் பெற்றக்கா லென்னாம் உறினென்னாம்
உள்ள முடைந்துக்கக் கால்

என்பது,

நாயகி நம் பிரிவாற்றாமல் மனது நொந்து இறந்துபட்ட வழி, நம்மைப் பெறக்கடவளானாலென்ன? பெற்றாலென்ன? பெறாவிட்டா லென்ன? மெய்யுறப் புணர்ந்தா லென்ன? இவை யொன்றானும் பலனில்லை என்றவாறு.

நான் சொன்ன காலத்துக்கு முன்னே போய்ச் சேர வேண்டும் என்பதாம். ய

ஆக அதிகாரம் ளஉஎ க்குக்குறள் சநஉளஎ ய

இப்பால் 128. குறிப்பறிவுறுத்தல்

என்பது, தலைமகன் தலைமகள் தோழி என்ற இவருள் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்தல் என்பதாம்.

1271. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்கண்
உரைக்க லுறுவதொன் றுண்டு

என்பது, பிரிந்து கூடிய தலைமகன் வேட்கை மிகவினால்[2] புதுமை பாராட்டத் தலைமகள் இது ஒன்றுடைத்தென்று அஞ்சிய வழி அதனை அவள் குறிப்பாலறிந்து அவன் அவட்குச் சொல்லியது:

---

1. இங்கும் அடுத்த குறளிலும் பரிமேலழகர் தந்த இதுவுமது என்ற குறிப்புத் தரப்படவில்லை 2. ஆசை மிகுதியால்

உன் மனத்திலே இருக்கிறதை நீ சொல்லாமல் மறைத்தாலும் அதற்கு நின் கண்கள் உடன்படாதே, உன்னையல்லாமல் எமக்குச் சொல்லுவதொரு காரியம் உண்டாயிரா நின்றது; இனி நீயே அதனை எமக்குத் தெளியச் சொல்லுவாயாக என்றவாறு. க

1272. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது

என்பது, நாணத்தினால் அவள் அது[1] சொல்லாத வழி, நாயகன் தோழிக்குச் சொல்லியது:

என் கண் நிறைந்த அழகினையும் மூங்கிலையொத்த தோள்களையு முடைய நின் பேதைக்கு மற்றைப் பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவின்றி மிகுந்த தென்றவாறு. உ

1273. மணியுட்[2] டிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியுட்[3] டிகழ்வதொன் றுண்டு

என்பது இதுவுமது

கோக்கப்பட்ட பளிங்கு மணிக்குள்ளேயிருந்து புறத்திலே காண்பிக்கிற நூல் போல, இந்த ஸ்திரீயினுடைய ஆபரணத்துக்குள்ளேயிருந்து புறத்திலே பிரகாசிக்கிற குறிப்பு ஒன்றுண்டு என்றவாறு அணி, புணர்ச்சியினால் வந்த அழகு; அதனை யான் அறியேன் நீ அறிந்து சொல் என்பது கருத்து ௩

1274. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு

என்பது இதுவுமது

அரும்பினுள்ளே இருக்கிற வாசனை புறத்திலே மணந்து தோன்றாது போல, உன்னுடைய பேதை என்னுடனே நகக்கருதும் நகை வாயினுள்ளே யல்லாமல் வெளிப்படாததொரு குறிப்புண்டு என்றவாறு.

---

1. பிரிவச்சம் 2. மணியில் என்பதும் 3. அணியில் என்பதும் பிறர்பாடம்

நகை, புணர்ச்சி யின்பத்தால் நிகழ்வது. ௪

1275. செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து

என்பது, இதுவுமது

நெருங்கிய வளைகளை யுடையவள், என்கண் இல்லாத தொன்றனை மனத்திலே நினைத்துக் கொண்டு, அது காரண மாக என்னை மறைத்துப் போன குறிப்பு, என் மிகுந்த துக்கத் தினைத் தீர்க்கிற மருந்தொன்றுடைத்து என்றவாறு.

மறைத்தற்குறிப்பு - தானும் உடன் போக்கு உட்கொண்டது. ரு

1276. பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து

என்பது*

வெகுவாய்ப் பிரியவசனங்கள் சொல்லி மிகவும் சந்தோஷத் துடனே கூடியிருக்கிறது, பிரிந்து போகிற துக்கத்துக்கு நாம் பொறுத்துக் கொண்டு இருக்க வேண்டிச் செய்கிறது போலும் என்றவாறு.

பிரிந்து போதற் குறிப்பினால் செய்கின்ற தாகலான், இக்கலவி முடிவில் இன்னாதாகும் என்பதாம். சா

1277. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினும்
முன்ன முணர்ந்த வளை

என்பது†

குளிர்ந்த துறையினை யுடையவன் நம்மை உடம்பினாலே கூடியிருந்தே மனத்தால் பிரிந்தமையை, அவன் குறிப்பால் அறிதற்குரிய நம்மைப் பார்க்கிலும், இந்த வளைகள் முன்னே அறிந்தன என்றவாறு.

---

*இங்குப் பரிமேலழகர் தந்த துறைக் குறிப்பு இடம் பெறவில்லை †இங்கும் அடுத்த குறட்கும் பரிமேலழகர் தந்த இதுவுமது தரப்படவில்லை

வளைகள் அறிதலாவது, அவர் குறிப்பறிந்து சரீரம்வாடின படியினாலே வளைகள் கழன்று போதல். எ

1278. நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து
என்பது

நேற்றுப்பிரிந்து போனார் எம் காதலர்; யாம் பசலை கொண்டு ஏழுநாளாயிற்று என்றவாறு.

பசந்து ஏழுநாளாவது, நாயகன் குறிப்பால் பிரிந்து போகப் போகிறான் என்று முன்னேயறிந்தது. அ

1279. தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது

என்பது, தலைமகள் குறிப்பறிந்த தோழி அதனைத் தலைமகனுக்கு அறிவித்தது.

யான் நின்பிரிவைத் தெளிவிக்கவும் தெளியாது, அவர் பிரிய யான் இங்கே யிருப்பின் இவை நில்லா எனத் தன் வளைகளையும் பார்த்து, அதற்கு ஏதுவாக வாடுமெனத் தன் தோள்களையும் பார்த்துப் பிறகு இந்த இரண்டும் நிகழாமல் நீர் நடந்து காக்க வேணும் எனத்தன் பாதங்களையும் பார்த்தாள்; அவள் இப் படிச் செய்த குறிப்பு உன்னுடன் கூட வருகிறதாயிருந்தது என்றவாறு. கூ

1280. பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினாற்
காமநோய் சொல்லி யிரவு

என்பது, தலைமகன் பிரியாமைக் குறிப்பினைத் தோழிக் கறிவுறுத்தது:

ஸ்திரீகள் தங்கள் காம நோயைத் தோழிகளுக்கும் வாயாற் சொல்லாமல் கண்ணினாற் சொல்லி, அது தீர்க்க வேண்டித் தோழியை வேண்டிக் கொள்ளாமல் கூடப் போக நினைந்து

தங்கள் பாதங்களை வேண்டிக் கொள்கிறது, தங்களுக்கியல்பாகிய பெண்மை மேலும் பின்னையும் ஒரு பெண்மையுடைத்து என்று சொல்லுவர் அறிந்தோர் என்றவாறு. ௰

முல்லை நிலம் முற்றும்

௱உக அதிகாரம் ளஉஅ க்குக் குறள் சநஉளஅ

இப்பால் 129. புணர்ச்சி விதும்பல்

(மருத நிலம்)

என்பது, தலைமகனும் தலைமகளும் புணர்ச்சிக்கண் விரைதல், மேல் புணர்ச்சி மிகுதியினாலே தலைமகன் பிரிந்து போகத் தக்கதாக நினைத்த குறிப்பை யறிந்த தலைமகள் அவருடனே போகாமற் பின்னையும் புணர்ச்சியை விரும்புதலால், இது குறிப்பறிவுறுத்தலின் பின் வைக்கப்பட்டது.*

1281. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு

என்பது, பிரிதற் குறிப்பாயினனோடு[1] நீ பிணங்காமலிருக்கிற காரணம் என்ன என்று நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது:

நினைத்தவுடனே களிக்கிறதும் கண்டவுடனே மகிழ்கிறதும் கள்ளுண்டவர்களுக்கில்லை, காமமுடையவர்களுக்குண்டு என்றவாறு. களித்தல், அறிவ[2]ழியாதது; மகிழ்தல், அஃதழிந்தது.

1282. தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையும்
காம நிறைய வரின்

என்பது இதுவுமது.

ஸ்திரீகளுக்குக் காமம் பனையளவிலும் பெரிதாக உண்டாமாயின், அவரால் தினையளவும் தம் காதலரோடு பிணங்காமை வேண்டப்படும் என்றவாறு.

---

*இங்ஙனம் அதிகார முறை வைப்புக்குக் காரணம் முன்னும் கூறப்படவில்லை பின்னும் கூறப்பெறவில்லை 1. தலைவனோடு 2. உணர்வு-பரிமேலழகர்)

1283. பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணா தமையல கண்

என்பது இதுவுமது

நம்மை அவமதித்துத் தான் வேண்டினபடியே செய்தாலும் நாயகனை என் கண்கள் காணாமல் அமைகின்றனவில்லை என்றவாறு.

1284. ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு

என்பது இதுவுமது

தோழீ! காதலரைக் காணாமுன் அவர் செய்த தவற்றை நினைந்து பிணங்கி இருக்க வேண்டுமென்று சென்றேன். அவரைக் கண்டபின் என் நெஞ்சு பிணங்குகிறதை மறந்து கூடுதற்கே சென்றது என்றவாறு.

1285. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்[1]
பழிகாணேன் கண்ட விடத்து

என்பது இதுவுமது

முன்னே எல்லா வடிவையும் கண்டிருந்து எழுதுகிற போது அஞ்சனக் கோலினது இயல்பைக் காண மாட்டாத கண்ணைப் போலக் கொண்கனைக் காணாத விடத்தெல்லாம் அவன் செய்த குற்றங்களைக் கண்டிருந்து அவனைக் கண்டவிடத்திலே அந்தக் குற்றங்களைக் காண மாட்டேன் என்றவாறு. ரு

1286. காணுங்காற் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை

என்பது இதுவுமது

1. கணவன்

நாயகனை யான் காணும் பொழுது அவன் குற்றங்களைக் காணேன்; அவனைக் காணாத போது அவன் செய்த குற்றங்களைக் காணகிறதே யல்லாமல் வேறொன்றையும் காணேன் என்றவாறு.

1287. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்த லறிந்தென் புலந்து

என்பது இதுவுமது.

தம்மை இழுத்துக்கொண்டு போகிறது அறிந்து வைத்து ஓடுகின்ற தண்ணீரிலே நீஞ்சு[1]கிறவர்கள் செயல்போலப் பிணக்கு முடிவு போகாமை யறிந்துவைத்து நாயகனோடு பிணங்கிப் பெறுகிறது என்ன என்றவாறு. எ

1288. இளித்தக்க இன்னா செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு

என்பது தோழி[2] தலைவனுக்குச் சொல்லியது:

வஞ்சகா! தன்னை யுண்டு களித்தார்க்கு இகழ்ச்சியைச் செய்யினும் அவரால் மேன்மேல் விரும்பப் படுவதாகிய கள்ளைப் போலும் நின்மார்பு என்பதாம்.

இன்னாதன, நாணின்மை ஒழுக்கமின்மை முதலாயின. அ

1289. மலரினு மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்

என்பது தலைமகன்[3] சொல்லியது:

காம வின்பம் மலரினும் மெல்லியதாயிருக்கும்; அப்படி மெல்லிதாயிருக்கிறதை அறிந்து அதனுடைய செவ்வியைப் பெறுவார் உலகத்திலே சிலர் என்றவாறு. கூ

1. நீந்து 2. தலைமகன் புணர்ச்சி விதுப்பறிந்த தோழி என்ப பரிமேலழகர்

1. உணர்ப்பு வயின்வாரா வூடற்கண் தலைமகன் என்பர் பரிமேலழகர் குறிப்புரை காண்க)

1290 கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுத
லென்னினும் தான்விதுப் புற்று.

என்பது இதுவுமது

காதலி முன்னே யொருநாள் புணர வேண்டிச் சென்ற என்னுடனே தன்கண் மாத்திரத்தினாலே பிணங்கி. என்னிலும் முந்நித் தான் புணரவேண்டி, அந்தப் பிணக்கை மறந்து என்னுடனே கூடினாள் என்றவாறு.

கண்ணினாலே பிணங்குதல், கண் சிவந்து பார்க்கிறது ம

ஆக அதிகாரம் ளஉகூ க்குக்குறள் சநஉளகூ0

இப்பால் 130. நெஞ்சொடு புலத்தல்

என்பது, பிணங்கக் காரண முண்டான வழியும், பிணங்க நினையாமல், புணரக் கருதுகின்ற நெஞ்சுடனே, தலைமகள் பிணங்கலும், தலைமகன் பிணங்கலுமாம்.

1291. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது

என்பது, தலைமகனிடத்திலே தப்புண்டான போதும் பிணங்க நினையாத நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது:

நெஞ்சே! அவருடைய நெஞ்சு நம்மை நினையாமல் அவருக்காய் இருக்கிறது கண்டும், நீ எமக்காய் நில்லாமல் அவரை நினைக்கிற காரணம் யாது? என்றவாறு. க

1292. உறாஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
செறாஅரெனச் சேறியென் னெஞ்சு

என்பது இதுவுமது

[*என் நெஞ்சே, மேலும் நம்மிடத்திலே அன்பில்லாதவரை உள்ளவாறறிந்தவிடத்தும், நாம் போனாற் கோபித்துக்

கொள்ளார் என்பது பற்றி, அவர்பக்கல் போகாநின்றாய் அதுவும் அறிவில்லாமையாம் என்றவாறு. உ

1293 கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்

என்பது இதுவுமது]*

நெஞ்சே, என்னிடத்திலே நில்லாமல், நீ நினைத்தபடியே அவரிடத்திலே போதற்குக் காரணம் கெட்டவர்களுக்கு உறவின் முறையார் உலகத்திலே இல்லை என்னும் நினைவோ? அல்லாமல் உன் சுபாவமோ சொல்லுக என்றவாறு.

கெட்டதாவது - மனமழிவது[1] ௩

1294. இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று

என்பது இதுவுமது

நெஞ்சே! நீ அவரைக் கண்ட பொழுதே இன்பம் அனுபவிக்க நினைக்கிறதல்லாமல் அவர் செய்த குற்றத்தை நினைத்து, அது தரும் வகை பிணங்கி நின்று பின்பு இன்பம் நுகரக் கருதாய்; அப்படிப்பட்ட உன்னோடு எண்ணுவார் யார்? யான் அது செய்யேன் என்றவாறு. ௪

1295. பெறாஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் னெஞ்சு

என்பது, வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது:

என் நெஞ்சு காதலரைச் சேராத நாள் அதற்கு வருத்தப்படும்; சேர்ந்தால், அவர் பிரிந்து போகப் போகிறார் என்றெண்ணி, அப்பிரிவிற்கு வருத்தப்படும்; ஆதலால் எந்நாளும் துக்கத்தையே யுடையது என்றவாறு. ரு

---

*முதல் *வரை அச்சுநூல் 1. மானமழிவது என்றிருத்தல் வேண்டும்.

1296. தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு
என்பது இதுவுமது

என் நெஞ்சு ஈண்டிருந்தது, காதலரைப் பிரிந்திருந்து அவர் கொடுமைகளை யான் தன்னோடு நினைத்தக்கால் அவ்வள வறிந்து என்னைத் தின்பது போலத் துன்பஞ் செய்தற்கே என்றவாறு.

1297. நாணு மறந்தேன் அவர்மறக் கல்லாவென்
மாணா மடநெஞ்சிற் பட்டு
என்பது இதுவுமது.

தன்னை மறந்த காதலரைத் தான் மறக்க மாட்டாத மாட்சிமை யில்லாத மடநெஞ்சுடனே கூடி என் பிராணனிலும் அதிகமாய் இருக்கிற நாணத்தையும் மறந்துவிட்டேன் என்றவாறு. எ

1298. எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
முள்ளு முயிர்க்காத னெஞ்சு
என்பது இதுவுமது

உயிர்மேலே ஆசையுடைய என்நெஞ்சு, நம்மை இகழ்ந்து போனாரென்று அவரை நாமும் இகழ்ந்தோமானால் பிறகு நமக்கு இளிவாமென்று நினைந்து அவரையே நினையாநின்றது என்றவாறு. அ

1299. துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி

என்பது, உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைமகள்[1] சொல்லியது;

ஒருவருக்குத் துக்கம் வந்த காலத்து, அது தீர்த்தற்குத் தமக்கு உரித்தாயிருக்கிற நெஞ்சு துணையாகா விட்டால், வேறு துணையாவார் ஒருவருமில்லை என்றவாறு. ௯

1. தலைமகன் - பரிமேலழகர். உணர்ப்பு வயின் வாராவுடல் - தீர்க்க முடியு மாறு வராத (அதாவது தீர்க்க முடியாத) ஊடல்.

1300. தஞ்சந்[1] தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி

என்பது இதுவுமது

தமக்குரித்தாகிய நெஞ்சு ஒருவர்க்கு உறவல்லாவிட்டால் மற்ற வர்கள் கூறவல்லராதல் சொல்லவேண்டுமோ என்றவாறு.

ஆக அதிகாரம் ளகூ௰க்குக் குறள் சஉகூ

இப்பால் 131, புலவி

என்பது, இருவர் நெஞ்சும் உணர்ச்சி விதும்பாது பிணங்க நினைத்த வழி ஒருவரோ டொருவர் பிணங்குகிறதாம்.

1301 புல்லா திராஅப் புலத்தை யவருறும்
அல்லனோய் காண்கம் சிறிது

என்பது, நாயகனைச் சேவித்த தோழி தலைமகளோடு நகை யாடிச் சொல்லியது:[2]

நீ அவரொடு விரைவில் கூடாதே; பிணங்கி இரு; அவரது விரக துக்கத்தை நாம் சிறிது பார்ப்போம் என்றவாறு. க

1302. உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல்

என்பது, புலவி யொழிந்து வாயில் நேரும் வரை அவள்[3] சொல் லியது:

பிணக்குக் கலவி யின்பத்துக்கு இனிதாயிருக்கும்: அதுவும் கல விக்கு வேண்டின மட்டிலே செய்ய வேணும்: அப்படிச் செய் யாமற் பின்னையும் பிணங்கினால், இன்பமில்லாமற் போம்: அதெப்படி யென்னின், கறிக்கு உப்பு மட்டாய்ப் போட்டால் ருசியாய் இருக்கும்; உப்பு அதிகமானால் ருசியில்லாமற் கெட் டுப் போம் என்றவாறு.

1. விரையாமல் 2. குறிப்புரைகாண்க 3. தோழி

1303. அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்

என்பது, பரத்தைய ரிடத்தினின்றும் வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது:

தம்மைச் சேராமல் வாடி யிருக்கிற ஸ்திரீகளைப் பிணக்கு நீக்கக் கூடாமல் புருஷர்கள் செல்லுதல், முன்னே துக்கப்பட்டுக் கெட்டவர்களைப் பின்னையும் வெகு துக்கங்களைச் செய்வித்தாற் போலும் என்றவாறு. ௩

1304, ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று

என்பது இதுவுமது

பிணங்கி யிருக்கிற பரத்தையரைப் பிணக்குத் தீர்த்துக் கலவி செய்யாதொழிதல். தண்ணீரில்லாமல் வாடுகிற கொடியை வேரறுத்த தோடொக்கும் என்றவாறு.

1305. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து

என்பது, தலைமகளைப் பிணக்கு நீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது:

நற்குணங்களையே யுடைய தலைவர்க்கும் அழகாவது, பூவைப் போன்ற கண்களையுடைய நாயகிகளின் நெஞ்சிலே உண்டாகிற பிணக்கு மிகுதியன்றே என்றவாறு. ரு

1306 துனியும் புலவியு மில்லாயிற் காமம்
கனியுங் கருக்காயு மற்று

என்பது இதுவுமது

முதிர்ந்த பிணக்காகிய கோபமும் இளைய பிணக்காகிய புலவியும் இல்லாவிட்டால், காமம் செவ்வி முதிர்ந்த பழமும் இளங்காயும் போலும் என்றவாறு.

இவ்விரண்டும் வேண்டும் என்று வியந்து கூறியவாறு. ரு

1307. ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று
என்பது இதுவுமது.

இன்பத்தைக் கொடுக்கின்ற இந்தப்பிணக்கின் கண்ணே எனக்கொரு துன்பமும் உண்டாகா நின்றது. இனிப்புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோ என்று கருதுதலான் என்றவாறு. எ

1308. நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதல ரில்லா வழி
என்பது தலைமகன் கூற்று*

இவர் நம்முடைய நிமித்தமாக நொந்தார் என்று அந்த விசாரத்தை அறியும் அன்புடையார் இல்லாத போது, ஒருவர் விசாரப் படுகிறதனாலே என்ன பயன் என்றவாறு. அ

1309. நீரும் நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது
என்பது இதுவுமது

பிராணனுக்கு வேண்டியிருக்கிற நீரும் நிழலிலே இருந்ததானால் மெத்தவும் நன்றாய்ச் சீவனுக்குத் தாகத்தையடக்கும்; அது போலப் பிணக்கும் அன்புடையவர்களிடத்திலே நல்லதாம்; அன்பில்லாதவர்களிடத்திலே நன்றாகாது என்றவாறு. கூ

1310. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா
என்பது இதுவுமது.

தான் பிணங்கி இருக்கவும், அதனைத் தீராமல் சும்மா இருக்கிறவருடனே கூட வேணுமென்று, என் நெஞ்சு முயலுதற்கு ஏது, ஆசை மாத்திரமே என்றவாறு

*உணர்ப்பு வயின்வாரா ஊடற்கண் தலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது என்பது பரிமேலழகர் துறைக் குறிப்பு

அன்பும் அருளும் இல்லாதாரைக் கூடுவோமென்று முயலுதல் வியர்த்தமாம் என்பதாம். ய

ஆக அதிகாரம் ளஙக க்குக்குறள் சஙஙக

இப்பால் 132. புலவிநுணுக்கம்

என்பது, தலைமகனும் தலைமகளும் ஓர் அமளியிலே கூடியிருக்கிறபோது, அவனிடத்திலே பிணங்குகிறதற்கு ஒருகாரணம் இல்லாவிட்டாலும், காதல் மிகுதியினாலே ஒருகாரணம் உண்டாக்கிக் கொண்டு, அதனை அவன்மேலேற்றிப் பிணங்கியிருத்தல்.

1311. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு

என்பது, உலாவித்திரிந்த தலைமகன் பள்ளியறையிலே வந்தானாகத் தலைமகள் சொல்லியது.

பெண்ணியல்பை யுடையா ரெல்லாரும் தங்கள் கண்களினாலே நின் மார்பைப் பாரா நின்றார்கள்; ஆதலால் அவர்கள் பார்வையினாலே எச்சிலா யிருக்கிற உன்மார்பை யான் தீண்டேன் என்றவாறு. க

1312. ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து

என்பது, தலைமகள் தோழிக்குக்* கூறியது:

யான் தம்மொடு பிணங்கிப் பேசாமல் இருக்கிறது கண்டு காதலர் தும்மினார், தம்மைச் சதாயுசு[1] என்று சொல்லிப் பேசுவோம் என்று கருதி யென்றவாறு. உ

1313. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று

என்பது தோழிக்குத் தலைமகன் சொல்லியது:*

---

*குறிப்புரை காண்க 1. தீர்க்காயுசு என்பதும் மரபு;

வளைய மாலையைச் சூடினும் கோபிச்சுக்[1] கொள்ளுகிறாள், இல்லாத பூ அணிகிறது ஒருத்திக்குக் காட்ட வேண்டி என்று என்றவாறு

இப்படிப் பிணங்குகிறவளுக்குக் காரணம் தானே யுண்டாம் என்பதாம். ௩

1314. யாரினுங் காதல மென்றேனா வூடினாள்
யாரினும் யாரினு மென்று
என்பது இதுவுமது

காமம் நுகர்தற்குரிய இருவராயினார் யாவரினும் யாம் மிக்க காதலையுடையேம் என்பது கருதி, யாரினும் காதலையுடையேம் என்றேனாக, உன்தோழி அது கருதாது, என்னால் காதலிக்கப் பட்ட ஸ்திரீகள் எல்லாரிலும் யான் நின்மேல் உற்ற காதலை யுடையேன் என்றேனாகக் கருதி, அம்மகளிர் யாரினும் யாரினும் எங்கண் காதலுடைய ராயினீர் என்று சொல்லிப் பிணங்கினாள் என்றவாறு.

யான் அன்பு மிகுதியாற் சொல்லியதனைக் கருத்து வேறு படக் கொண்டதல்லது, பிறிது காரணமில்லை என்பதாம்.

1315. இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்
என்பது இதுவுமது

காதல் மிகுதியினால், இந்தப் பிறப்பிலே யாம் பிரியேம் என்று யான் சொல்லக் கேட்டு, மறுமைப் பிறப்பிலே பிரி வேன் என்றெண்ணித் தன் கண்கள் நிறைய நீர் சோர அழு தாள் என்றவாறு ரு

1316. உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீ ரென்
றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்
என்பது இதுவுமது

பிரிந்த காலத்து நினனை இடைவிடாது நினைந்தேன் என்

1. கோபித்துக்

னுங்கருத்தினால், உன்னை நினைத்தேனென்று சொன்னேன். அதுகேட்டு, ஒருகால் மறந்து ஒருகால் நினைத்திரோ வென்று சொல்லிப் பிணங்கினாள் என்றவாறு. ச

1317. வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழூதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று
என்பது இதுவுமது

கூடியிருக்கையிலே நான் தும்மினேன் என்று கண்டு வாழ்த்தினாள்; அப்படி வாழ்த்தினவள் திரும்பி,'உம்மை யார் நினைத்தார்களோ அதனாலே தும்மினீர்' என்று கூறிப் புலந்து அழுதாள் என்றவாறு. எ

1318. தும்முச் செறுப்ப வழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ வென்று
என்பது இதுவுமது

எனக்குத் தும்மல் வந்தது; அது கண்டு யார் நினைத்தாரென்று பிணங்கப் போகிறாளென்று, அந்தத் தும்மலை அடக்கினேன்; அப்படி அடக்கியும் ''உம்மை நினைத்தவளை மறைக்க வேண்டித் தும்மலை அடக்கினீர்'' என்று பிணங்கி அழுதாள் என்றவாறு. அ

1319. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரிந்நீர ராகுதி ரென்று
என்பது இதுவுமது.

இப்படிப் பிணங்கின தன்னை வணங்கிக் கொண்டாடுகிற போதும் கோபிப்பள், மற்ற ஸ்திரீகள் பிணங்கின போது இப்படி வணங்கிக் கொண்டாடுவீர் என்று சொல்லி என்றவாறு. க

1320. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று
என்பது இதுவுமது

என் வசனங்களையும் செய்கைகளையும் கண்டு தான் கோபிக்கிறதனாலே பேசாமலிருந்து, தன் அவயவங்களுடைய ஒப்பில்லாத அழகை நினைந்து அவற்றையே பார்த்தாலும், என்னைக் கோபிப்பள்' 'எந்த ஸ்திரீயை நினைந்தோ என்னை அவமதித்துப் பார்த்தீர்' என்று சொல்லி என்றவாறு.

தான் எல்லாரினும் அதிகமான அழகு என்று பார்க்கவும், தன்னை அவமதித்துப் பார்க்கிறாரென்று பிணங்கினாள் என்பதாம். ய

ஆக அதிகாரம் ளஙயஉ க்குக்குறள் சநஙளஉய

இப்பால் 133. ஊடலுவகை

என்பது, அப்படிப்பட்ட பிணக்கினாலே தமக்கு இன்பம் பிறந்தவழி, அதற்கு ஏதுவாகிய பிணக்கைத் தலைமகளும் தலைமகனும் உவத்தலாம்,

1321. இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு

என்பது தலைமகள் காரண மின்றிப் பிணங்கினதைக் கேட்ட தோழி, "இப்படி நீ பிணங்கினது ஏன்?" என்று கேட்டவட்குத் தலைவி சொல்லியது:

நாயகனிடத்தில் தப்பில்லாவிட்டாலும் நமக்கு அவர் தலையளி[1] செய்கின்ற முறை, அவரோடு ஊடுதலை விளைக்க வற்றாகின்றது என்றவாறு. ச

1321. ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்

என்பது தலைமகள் கூற்று[2]

பிணங்குகிறது காரணமாக நம்மிடத்திலே யுண்டாகிற சிறிய துனியினாலே காதலர் செய்யும் தலையளி வாடுமானாலும் பெருமை யடையும் என்றவாறு. உ

1. மிக்க அன்பு 2. குறிப்புரை காண்க

1323. புலத்தலிற் புத்தேளா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.
என்பது இதுவுமது

நிலத்துடனே நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலரிடத்திலே, பிணங்குகிறது போல நமக்கு இன்பந் தருவதொரு தேவலோகம் உண்டோ? இல்லை என்றவாறு. ௩

1324. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை

என்பது. 'அப்புலவி இனி எதனால் நீங்கும்?' என்றதோழிக்குத் தலைமகள் கூறியது:

காதலரைப் புல்லிக்கொண்டு பின்விடாமைக்கு ஏதுவாகிய அப்பிணக்கினிடத்திலே யுண்டாம், என்மனத்தைக் கெடுக்கும் ஆயுதம் என்றவாறு. ௪

1325. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலி னாங்கொன் றுடைத்து

என்பது, தலைமகன்* தன்னுள்ளே சொல்லியது;

புருஷர் தம்மிடத்திலே தப்பில்லா விட்டாலும் தப்புஉள்ளவர்கள் போலே பிணங்கப்பட்டுத் தாம்விரும்பிய ஸ்திரீகளுடைய தோள்களைக் கூடப்பெறாமல் வருந்துகிறபோதும், அவருக்கு அத்தன்மையதோரின்பம் பயத்தலுடையது என்றவாறு. ௫

1326. உணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது
என்பது இதுவுமது

சீவன்களுக்கு மேல் உண்கிறதிலும் முன்உண்டு செரிக்கிறதே சுகமாவது போலக் காமத்துக்குமேல் புணருகிறதிலும் பிணங்கி

*தலைமகளை யூடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையால்-என்பது பரிமேலழகர் துறைக்குறிப்பு

இருக்கிறது இன்பமாம் என்றவாறு. சா

1327. ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னும்
கூடலிற் காணப் படும்.
என்பது இதுவுமது.

காமம் அனுபவிக்கும் இருவருள் பிணங்குகிறதில் தோற்றவர் வென்றவராம்; அது அப்போது அறியப்படாதாயினும், புணருகிற போது அவர்களால் அறியப்படும் என்றவாறு. எ

1328 ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு
என்பது இதுவுமது,

இப்பொழுது இவள் முகம் வெயர்க்கக் கூடிய கலவியின்கண் உண்டாய இன்பத்தைப் பிறகு அவள் பிணங்கி யாம் பெற வல்லேமோ என்றவாறு. அ

1329. ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா
என்பது இதுவுமது.

நல்ல இழையினை யுடையவள் என்னோடு இன்னும் பிணங்க வேணும்; அந்தப் பிணக்கைத் தீர்க்கிறதற்கு இந்த இராத்திரியானது வெகுகாலம் நீட்டிக்கவேண்டும் என்றவாறு.

அவள் பிணங்குகிறதற்கும் யான் வணங்கிப் பிணக்குத்தீர்த்தற்கும் பொழுது விடியாமல் இருக்கவேணு மென்பதாம். ௯

1330. ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்
என்பது இதுவுமது.

காமம் அனுபவிக்கிறதற்கு இன்பமாவது, அதற்குரியவர் ஆராமையாலே பிணங்கி யிருக்கிறதாம்; அளவறிந்து பிணக்கு நீங்கித் தம்முட்கூடி முயங்குதல் கூடுமாயின் அம்முயக்கம் அப்

பிணக்கின்பமாம் என்றவாறு. அவ்விரண்டின்பமும் யான் பெற்றேனென்பதாம். ௰

ஆக அதிகாரம் ௱௩௰௩க்குக் குறள் ௲௩௱௩௰

ஈண்டுப் பிரிவினை வடநூன் மதம் பற்றிச் செலவு ஆற்றாமை விதுப்புப் புலவி என நால்வகைத் தாக்கிக் கூறினார். அவற்றுட் செலவு பிரிவாற்றாமையுள்ளும், ஆற்றாமை படர்மெலிந்திரங்கல் முதல் நிறையழிதல் ஈறாயவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின் விதும்பல் முதல் புணர்ச்சி விதும்பல் ஈறாயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடு புலத்தல் முதல் ஊடலுவகை ஈறாயவற்றுள்ளும் கண்டு கொள்க. அஃதேல் வடநூலார் இவற்றுடனே சாபத்தினானாய நீக்கத்தினையும் கூட்டிப் பிரிவினை ஐவகைத்து என்றாராலெனின், அஃது அறம்பொருள் இன்பம் என்னும் பயன்களுள் ஒன்று பற்றிய பிரிவன்மையானும், முனிவராணையான் ஒருகாலத்து ஒருகுற்றத்து ளாவதல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டு ஒழிக்கப்பட்டதென்க.

## பிற்சேர்க்கை I

சிலகுறள்கட்குச் ஜைநருரை

''திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைந சமய சித்தாந்த விளக்கமும'' என்ற நூலில் காண்டபவை:

**குறள் 1. அகரமுதல (பக்கம் 74)**

உலகில் அகரமுதலாகிய எண் எழுத்து ஆகிய எல்லா எழுத்துக்களும் ஆதிபகவனை முதலாகவுடையன.

......... உலக என்பதில் ஏழாம் வேற்றுமையுருபு தொக்கது. எண் எழுத்துக்கள் ஆதிபகவனிடத்திலிருந்தே உண்டானவை யாதலின் அக்கடவுள் அவற்றிற்கு மூலபுருஷராயினார். பரிமேலழகர் பகவானுக்கு அகரத்தை உவமை கூறியிருக்கின்றார். குறளாசிரியர் அக்கடவுள் வாழ்த்திலேயே ''தனக்குவமையில்லாதான் றாள்சேர்ந்தார்க்கல்லான் மனக்கவலை மாற்றலரிது'' என்று கூறியிருப்பதால், பரிமேலழகர் ஆதிபகவானுக்கு அகரத்தை உபமானமாகச் சொல்லுவது பொருந்தாது. ஆதிபகவான் உபமாதிதர் என்பதை மேற்கூறிய குறளில் ஸ்பஷ்டமாக ஆசிரியர் சொல்லியிருக்கிறார்.

**2. கற்றதனாலாய (பக்கம் 82)**

(மிகுதியான) கேவல ஞானத்தையுடைய அருகக்கடவுள் பாத கமலங்களை மனிதர் வணங்காராகில் அந்தப் பகவானால் அருளப்பட்ட அக்ஷரங்கள் முதலான கல்வியைக் கற்றதனால் பயனில்லை. வால்—மிகுதி; அறிவன்—கேவல ஞானத்தையுடையவன். கேவல ஞானம்—திரிகாலவுணர்ச்சி.

**3. மலர்மிசை (பக்கம் 118)**

தாமரை மலரின் மேல் நடந்தவனாகிய அருகக் கடவுளின் பெருமை பொருந்திய பாத கமலங்களை அடைந்தவர்கள் எல்லாவுலகங்களுக்கும் மேலாகிய மோக்ஷஸ்தானத்தில் எக்காலத்திலும் சலனமின்றி வாழ்வார்கள், ஆதிபகவான் மலர்மீது

நடந்ததை "மலர்மிசை நடந்தோன் மலரடி யல்ல தென்—றலைமிசையுச்சி தானணிப் பொறாது" என்னும் சிலப்பதிகாரம் நாடு காண்காதை 204—205 வரிகளாலும், "விரிபூந்தாமரை மேற்சென்ற திருவாரடி யேத்தி" என்னும் சீவகசிந்தாமணி 2814 ஆம் செய்யுளடியாலும் அறியலாம்

### 4. வேண்டுதல் (பக்கம் 90)

விருப்பு வெறுப்பு இல்லாத அருகக்கடவுள் பாதத்தைச் சேர்ந்தவர்க்கு எக்காலத்திலும் பிறவித்துன்பங்கள் உண்டாவனவல்ல.

### 5. இருள்சேர் (பக்கம் 84)

அருகக்கடவுளது (நான்கு வேதங்களின்) மெய்ம்மையைச் சேர்ந்த கீர்த்தியை தியானம் செய்பவரிடத்து மித்தியாத்வ மென்னும் மயக்கத் தாலுண்டாகிற நல்வினை தீவினை யிரண்டும் உண்டாக மாட்டா. மித்யாத்வம் என்பது பொய்யை மெய் யென்று நம்புவது. (நான்கு வேதங்கள்: 1. பிரதமாநுயோகம்; 2. காணாநுயோகம்; 3. சரணாநுயோகம்; 4. திரவ்யாநுயோகம்)

### 6. பொறிவாயில் (பக்கம் 92—99)

மெய்வாய் கண்மூக்குச் செவியென்னும் பஞ்சேந்திரியங் களையும் அவித்த அருகக்கடவுளது மெய்யான ஒழுக்கவழியிலே நின்றவர் நீடூழிவாழ்வர்.

ஐந்தவித்தானது மெய்யான ஒழுக்க வழியாவது, பகவான் நின்ற தவத்தின் மார்க்கம்.

ஆதிபகவான் பஞ்சேந்திரியங்களையும் அவித்து மகாதபஸைத் தாங்கிப் ப்ரதிமாயோகத்தில் நின்றார். (ப்ரதிமா யோகமாவது பிரதிமை போல அசைவற்றிருந்து தவம் செய்தல்) இன்னும் பகவான் ஐந்தவித்தான் என்பது, ஐவரை வென்றோன் அடியினையல்லது, கைவதைக் காணினும் காணாவென்கண்" என்ற சிலப்பதிகாரம் நாடுகாண் காதை 198 ஆம் வரியாலும்,

பொறிவாயிலைந்தவித்த புனிதனீயே'' என்னும் ஜீவஸம் போதனை 1 ஆவது அத்தியாயம் 29 ஆம் செய்யுளடியாலும் உணரப்படும்.

### 7. தனக்குவமை (பக்கம் 100-115)

தனக்கு ஒருவிதத்திலும் நிகரில்லாத (சமவசரண சாம்பிராஜ்ய) விபூதியை யுடைய அருகக் கடவுள் பாதகமலங்களைச் சேர்ந்தவர்க்கல்லது, மற்றையவர்க்கு மனக்கவலை நீக்கமுடியாது.

### 8. அறவாழி (பக்கம் 115)

தர்மசக்கரத்தையுடைய அருகக் கடவுளது பாதத்தை அடைந்தவர்க்கல்லாமல் சதுர்க்கதிப் ப்ரமாணமாகிய பிறவிக் கடலைக் கடத்தல் (மற்றவர்க்கு) முடியாது. சதுர்க்கதிகளாவன, நரக விலங்கு மனுஷ்ய தேவகதிகளாம்.

### 9. கோளில் பொறியில் (பக்கம் 125)

பஞ்சேந்திரிய வுணர்ச்சி யில்லாத பொறிகளையுடைய பிரதிமை போல, எண் வகைப்பட்ட குணங்களையுடைய அருகக்கடவுளது பாதகமலங்களை வணங்காத தலையும் துதியாத நாவும் பிரயோஜன மில்லை.

பண்ணவன் எண்குணன் பாதந்தில் பாம் பொருள்— சிலப்பதிகாரம் நாடுகாண் காதை 183 ஆம் வரி

### பொது

ஜைந சமயத்தில் கடவுள் வணக்கமுறை நான்குவகையாக அமைந்துள்ளது. சீவகசிந்தாமணி 382 ஆம் பாடலில், ''நல்லறத்திறைவனாகி நால்வகைச் சரணம் எய்தி'' என்பதன் உரையில் நச்சினார்க்கினியர் நால்வகைச் சரணம் ஆவன: அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்ம சரணம் என்பர். இந்நான்கு வணக்கங்களையும் திருக்குறளாசிரியர் கடவுள் வாழ்த்தில் கூறியிருக்கிறார். ஏழுசெய்யுட்களில் அருகசரணமும், ''கோளில் பொறியில்'' என்ற குறளில் சித்த சரணமும், ''பொறிவாயில்'' என்ற குறளில் சாதுசரணமும்.

''அறவாழி என்ற குறளில் தர்மசரணமும் அமைந்துள்ளன.

## 10. பிறவிப் பெருங்கடல் (பக்கம் 123)

அருகக் கடவுளின் பாதங்களைச் சேர்ந்தவர் பஞ்ச பரிவர்த்தனைகளாகிய சம்சாரக்கடலை நீந்திக் கடப்பார்; சேராதவர் அந்த சம்சாரக் கடலைக் கடக்காமல் அதில் அழுந்துவர்.

பஞ்ச பரிவர்த்தனைகளாவன: திரவியம், க்ஷேத்திரம், காலம், பாவம், பவம் என்பனவாம்,

''வீசுடல மெறி திரையின் மேவு கடன் மருவுபுணை'' என்னும் திருக்கலம்பகம் (செ. 53)'' வினையைக் கொடுக்கின்ற தேக மாகிய மோதுகின்ற அலையோடு பொருந்திய பிறவிக்கடலுக்குப் பொருந்திய தெப்பமாம் அருகனுடைய பாதங்கள்'' என்று பொருள்படும்.

## 18. சிறப்பொடு (பக்கம் 139)

மழைபெய்யாவிட்டால் இவ்வுலகில் தேவர்கட்கும் சிறப் பொடு உத்ஸவங்களும் பூஜையும் நடைபெறா. பூசனை முதலியன நடத்துவது அருகக்கடவுளுக்கும் அவர் அடியார் களாகிய இருபத்து நான்கு யக்ஷன் யக்ஷி முதலான தேவர்கட்கு மாகலின் ''வானோர்க்கும்'' என்றார்.

## 19. தானந்தவம் (பக்கம் 139)

மழைபெய்யாவிடில் உலகத்தில் தானமும் தவமும் நிலை பெறமாட்டா. தானமாவது, ஆகாரதானம், அபயதானம் ஔஷததானம் சாஸ்திரதானம் என்பவை.

## 20. நீரின்றமையா (பக்கம் 139)

உலகமானது நீரின்றி யமையாது; அங்ஙனம் அமையா தெனின் எவ்வகைப்பட்ட மேம்பாட்டினை யுடையோர்க்கும் மழையின்றி யாதொரு ஒழுக்கமும் நடவாது. ஒழுக்கமாவது: குணவிரதம் 3, சிக்ஷாவிரதம் 4, ஆக 7.

## 21: ஒழுக்கத்து (பக்கம் 150)

ஒழுக்கத்து - (திரயோதச சாரித்திரமாகிய) சிலாசாரத்தினால், நீத்தார் - முற்றுந் துறந்தவர், வேண்டும் - விரும்புகிற, விழுப்பத்து பரிசுத்தமாகிய தசதர்மமே, பெருமை – அவர்க்குப் பெருமையாகும்; (இது) பனுவல் - நூற்களினது, துணிவு - துணிபாம்; திரயோதசசாரித் திரமாவது, பஞ்ச மகாவிரதம்* பஞ்சஸமிதி திரிகுப்தி ஆகிய பதின்மூன்றுமாம். பஞ்ச சமிதி; ஈர்யா ஸமிதி, பாஷாஸமிதி, ஏஷணா ஸமிதி, ஆதானநிக்ஷேபணா ஸமிதி, வ்யுத் ஸர்க்க ஸமிதி என ஐந்தாகும். திரிகுப்தி: காயத்தின் அடக்கம், வாக்கின் அடக்கம், மனோவடக்கம்

தசதர்மம்-உத்தமக்ஷமை, உத்தமமார்த்தவம், உத்தம ஆர்ஜ்ஜவம், உத்தம சத்தியம், உத்தமசௌசம், உத்தமஸம்யமம், உத்தம தவம், உத்தமதியாகம், உத்தம ஆகிஞ்சின்யம், உத்தம பிரம்மசரியம் என.

## 23 இருமைவகை (பக்கம் 141)

சம்ஸாரம் மோக்ஷமென்னும் இரண்டினது துன்பவின்பங்களின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து இப்பிறப்பின்கண் மோக்ஷமார்க்கானுஷ்டானமாகிய துறவறத்தைத் தரித்தவரது மகிமையே உலகத்தில் உயர்ந்தது. சம்ஸாரம் என்பது ஜீவன்கள் சுகதுக்கங்களோடு கூடி சதுர்க்கதியில் சுழலுந் தன்மை மோக்ஷம் என்பது கர்மத்தின் கொடுமையால் ஜீவன்கள் நித்தியானந்த சுகத்தில் நிலைத்திருக்கும் தன்மை.

## 25 ஐந்தவித்தானாற்றல் (பக்கம் 193 - )

(புலன்களிற் செல்லுகின்ற) ஐந்தாசைகளையும் ஒழித்துக் காதி கர்மாதிகளை வென்ற மகா முனிவரது (கேவல) ஞானவன்மைக்கு அகன்ற பொன்னுலகத்துள்ள தேவர்க்குத் தலைவனாகிய தேவேந்திரனே போதுமான சாக்ஷியாம்.

---

* விளக்கம் மேற்படி நூல் பக்கம் 151-154 காண்க)
(அச்சுநூல் பக்கம் 16-17 காண்க)

முனிவர்க்குக் கேவல ஞானம் உண்டான அளவில் இந்திராதி தேவர்கள் கேவல பூஜை செய்வார்களாதலால். அதனை விளக்குதற்கு இந்திரனே சாலுங்கரி என்றார். இங்ஙனம் கேவல பூசை செய்யப் படுதல் திரு நூற்றந்தாதி 11 ஆம் செய்யுளால் உணரப்படும்.

27. சுவையொளி (பக்கம் 173 - 192)

சுவை-ரசமும், ஒளி-(பார்வை பிரகாசமும், ஊறு-ஸ்பரிஸமும் ஓசை-சத்தமும், நாற்றம்-கந்தமும், என்றும்-என்று சொல் லப்பட்ட ஐந்தின் - (ஐம்புலனுக்கும் பிரதானமாகிய மெய்வாய் கண் மூக்குச் செவி யென்னும்) (வர்ண ரஸ கந்தஸ்ப ஸ ' களுடன் கூடிய) புத்கலத்தினது, வகை-கூறுபாடுகளை, தெரிவான்கட்டே-ஆராய்ந்தறியும் ஞானியினிடத்தே, உலகு-உலகத்தினது தத்து வம் விளங்கும்.

புத்கலமென்பது அணுத்திரள், அணுவும் வர்ண ரஸகந்த ஸ்பரிசங்களுடையது, சத்தமென்பது புத்கலஸ்கந்தங்களில் உண் டாகாநின்றது. புத்கலத்தின் கூறுபாடாவது ஸ்தூலஸ்தூலம் ஸ்தூலம், ஸ்தூலஸூக்ஷ்மம் என ஆறுவித ஸ்கந்தங்களாம், 'தெரிவான்கட்டே, என்றதனால் ஜீவ புத்கலசம் பந்தமுள்ள புரு டனைக் குறித்துக் காண்பித்தலால் அவன் தெரிதற்குக் காரண மாகிய ஜீவபுத்கலங்கள் செல்லல் நிற்றல் இவ்விரண்டிற்கும் ஏது வாகிய தர்மாதர்மமும், செல்லல் நிற்றல் இவைகட்கு இடந் தரும் ஆகாயமும், ஜீவபுத்கலங்கள் உற்பத்திஸ்திதிவினாசம் இவைகளைக் குறிக்கும் காலமும், ஆகியவைகள் நிறைந்தது உலகமாம் என்பதும், இவ்வித ஜீவ புத்கலதர்ம அதர்ம ஆகாய காலாம் ஆகிய தத்துவங்களை அறியும் ஞானியினிடத்தே உலகம் அடங்கி யிருக்கிறது என்பது பொருளாம்.

குறிப்பு: ஜைந சமய வேதம் ஜீவபுத்கலமுதலான ஷட்திரவி யங்கள் நிறைந்தது லோகமென்றும், லோகமானது ஒருவரால் சிருஷ்டிக்கப்பட்டதல்ல வென்றும் அநாதியாகவுள்ள தென்றும் துணிவாய்க் கூறுகின்றது (பக்கம் 192)

39. **அறத்தான்** (பக்கம்217)

அறத்தான்-இல்லற துறவற தர்மங்களினால், வருவது படப் பட்டது. இன்பம்-சௌக்கியம் (அதாவது. இல்லறத்தினால் வருவது புண்ணிய தர்மோதயமாகிய தேவாதி சுகஸ்வரூபத்தை யளிக்கும் சம்ஸார சுகமாகும்: துறவறத்தால் நிச்சயஸ்வரத் மோர்த்தமாகிய மோக்ஷ சுகமாகும்): மற்றெல்லாம்-இந்த இரண்டு அறங்களிலும் சேராதவைகளெல்லாம் (அஞ்ஞானத்தி னாலேற்படுவன வெல்லாம்) புறத்த-அதர்மமாகிய பாபச்செயல் களாம், (அவற்றால்) புகழுமில- (ஆத்மாவுக்குப்) புகழ்ச்சியு மில்லை.

47. **இயல்பினான்** (பக்கம்) ௨ சு)

கிருகஸ்தாஸ்ர மத்துக்குரிய தர்மார்த்த காம இயல்போடு கூடி வாழ்பவன் என்பான். (இல்வாழ்க்கைக்கு இயல்பு அறம் பொருள் இன்பத்துடன் வாழ்வது)

50. **வையத்துள் (பக்கம் 44)**

இல்வாழ்க்கையில் அதற்குரிய கொல்லாமை முதலான விரதங் களில் வழுவாமல் வாழ்பவன் மறுமையில் சுவர்க்கத்தில் தேவ னாகப் பிறப்பான்.

61. **பெறுமவற்றுள் (பக்கம்) ௬௬**

பெறுமவற்றுள்-ஒருவன் பெறும் பேறுகளுள், அறிவு-இயற்கை யறிவைக் கொண்டு அறிந்த-(கல்வியின் ஞானத்தை) அறிந்து கொண்ட, மக்கட் பேறல்ல-மக்கட் பேறுகளல்லாமல், பிற- மற்ற மக்கட் பேறுகளை; யாம் அறிவதில்லை-(புத்தியுள்ளவர் களாய்) நாம் உணர்வதில்லை,

ஒருவன் பெறும் மக்கட் பேறுகளுள் இயற்கை அறிவைக் கொண்டு கல்வியை அறிந்து கொண்ட மக்களை மதிப்பது போன்று பிறமக்களை யாம் மதிப்பதில்லை - என்பது இதன் கருத்து.

**123. செறிவறிந்து (பக்கம்145)**

செறிவு-நெருக்கமான (நுகத்தளவு தூரத்தை), அறிந்து-முன் பார்த்து, ஆற்றின்-நல்வழியில், அறிவு-ஞானத்தினால், அறிந்து-ஜீவன்களுக்குத் துன்பம் வராத விரதத்தைத்) தெரிந்து, அடங்கப்பெறின்-(அஸ்த பாதாதிகளை மெதுவாக இயங்கச் செய்து அமைதியாய் நடந்து) அடங்கப் பெற்றால், (அது) சீர்மை - சிறப்பை, பயக்கும் - (அவனுக்குத்) தரும். (காயத்தின் அடக்கம் என்பது ஜீவன்களுக்குத் துன்பம் வராமல் காப்பாற்றி ஒழுகுவது)

**245. அல்லலருளாள் (பக்கம் 43)**

அருள் ஆள்வார்க்கு - அருளையுடையவருக்கு; அல்லல்-துன்பம் இல்லை-எப்போதுமில்லை; அதற்கு வளி - கனோததி, ௳ன வாத, தனுவாத மென்னும மூன்று மகா காற்றுக்களால் சூழப் பெற்று, மல்லல்-நிலை பெற்றிருக்கும், மா-பெரிய, ஞாலம்-உலகம், கரி-சாக்ஷி. இதன் கருத்து: வலி பொருந்திய மூன்று மகா காற்றுக்களின் ஆதாரங்களால் நிலை பெற்றிருக்கும் உலகத்திற்கு அபாயமில்லாதது போல, அருளை ஆளுகின்றவருக்கு யாதொரு துன்பமுமில்லை என்பதாம்.

**255. உண்ணாமை (ருக)**

ஊன்-மாமிசத்தை-உண்ணாமை - புசியாமையினால், உயிர்-ஆத்மா, நிலை- (பாரம்பரியத்தால்) சாஸ்வதமாகவுள்ள மோக்ஷத்தில் உள்ளது- (எப்பொழுதும் நிலை பெற்றது) இருப்பதாம். உண்ண-மாமிசத்தைப் புசிக்க, அளறு-(அவனை விழுங்கிய நிகேதம் என்றும்) நரகம், அண்ணாத்தல் செய்யாது-பின் உமிழ்தற்கு வாய் திறவாது.

**269. கூற்றங்குதித்தலும் (பக் ௬௫)**

நோற்றலின்-தவத்தின் வலிமையால், ஆற்றல் தலைப்பட்டவர்க்கு- (கேவல) ஞானத்தின் பெருமையை அடைந்தவர்க்கு, கூற்றங் குதித்தலும் கைகூடும்-யமனைக் கடத்தலும் சித்தியாகும். யமனைக் கடத்தலாவது, பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடு

இவைகளினின்றும் நீங்கி வீடு பெறுவதாகும்.

### 323 ஒன்றாகநல்லது (பக் 142)

ஒன்றாக-முதலாவதாக, கொல்லாமை-கொலை செய்யாமை, நல்லது - நன்று; அதன் பின்சார் - அதன் பிறகு சார்ந்த, அப்பொய்யாமை- அந்தப் பொய் சொல்லாமையும், மற்று-பிறவும் (கள்ளாமை, பெண்வழிச் சேறல், அவாவறுத்தல் ஆகியவைகளும் நன்று-நன்மையாகும். ஆசிரியர் பஞ்ச மகா விரதங்கள் ஐந்தையும் இந்தக் குறட்பாவில் விளக்கியுள்ளார்.

*பஞ்சமகா விரதம்: சிறிய கொலை பொய்களவொடு காமம் பொருளைத் துறத்தலோ டைந்து என்பது அருங்கலச் செப்பு 86 ஆம் செய்யுள்

### 343 அடல்வேண்டும் (பக்கம் 148)

(மோட்சத்தை யடைபவர்) ஐந்தன்-பஞ்சேந்திரியங்களின் விஷயங்களுக்குரிய, புலத்தை - ஐம்புலன்களையும், அடல் வேண்டும் - கெடுத்தல் வேண்டும். (கெடுக்கும் போது) வேண்டிய வெல்லாம்-மனத்தினால் விரும்பப் படும் விஷயங்கள் எல்லாவற்றையும், ஒருங்கு - ஒருமிக்க, விடல் வேண்டும்- வெறுத்து விடுதல் வேண்டும்.

### 346 யான் எனது

இதன் கருத்து, ''யான் எனது என்னும் அகங்காரத்தை யொழிபவன் தேவர்க்கும் அடைதற்கரிதாகிய மோக்ஷத்தை அடைவான்.

### 350 பற்றுக (பக்கம் 229)

பற்றற்றான் - எப்பொருள் களிடத்திலும் பற்றில்லாத அருகக்கடவுளின், (அதாவது அவரால் அருளிய) பற்றினை - (சமயத்தரிசன ஞான சாரித்திரங்கள் என்னும் இரத்தினத் திரயங்களால் பெறுதற்குரிய மோக்ஷ மார்க்கத்தின்) விருப்பத்தை பற்றுக - (இதுவே நல்வழி யென்று மனத்தில்) கொள்ளுக;

(அங்ஙனம் கொண்டு) அப்பற்றை - அதன் சம்பந்தமாகிய உபாயத்தை, பற்றுவிடற்கு-கர்மபந்தம் விடுகிறதற்கு, பற்றுக - மேற் கொண்டொழுக.

இதன் கருத்து: பற்றற்றான் சொல்லிய இரத்னத்திரயங்களால்* பெறும். முத்தி வழியைப் பற்றக் கடவர் என்பதாம்.

**358 பிறப்பென்னும் (பக் உகூ)**

பிறப்பிற்குக் காரண மென்னும் ஞானாவரணாதிகர்மங்கள் கெட்டொழிய மோக்ஷத்திற்குக் காரண மென்கிற பரஞ்சோதி சொரூபமாகிய தனது சுத்தாத் மனை திரிலோகத்தையும் திரிகால உணர்ச்சியையும் காணவல்லது (கேவல) ஞானமாகும்.

**377 வகுத்தான் (பக் உ)**

வகுத்தான் - (கர்மங்களை வகுத்தருளியவனாகிய அருகக் கடவுள், வகுத்த - (ஞானாவரணீய அஷ்ட கர்மங்களின் கூறுபாடுகளைப் பிரிவு செய்தருளிய, வகையல்லால் - அக்கர்மங்களின் ஏதுக்களல்லாமல், கோடி - (அனுடவிக்கப்படும் பொருள்கள்) கோடியை, தொகுத்தார்க்கும் - சேர்த்தவர்க்கும், துய்த்தல் - அநுபவித்தல், அரிது - உண்டாகாது.

**423. எப்பொருள் யார் (பக்கம் 220)**

எப்பொருள் - (கடவுள் சாஸ்திரம் முனிவர் தத்துவம் ஆகிய) எந்தப் பொருள்களை, யார் யார் வாய்க் கேட்பினும் - எவரெவர் வாயினால் கேட்ட போதிலும், அப்பொருள் - அப்பொருள்களுக்குள்ளே, மெய்ப்பொருள் - (மெய்க் கடவுளால் அருளிய) ஜீவாதி தத்துவங்களின் உண்மைப் பொருள்களை, காண்பது - பொய்யின்றாகக் காணவல்லது, அறிவு - நன் ஞானம்.

**619 தெய்வத்தான் (பக்௬உ)**

தெய்வத்தால் - அருகக் கடவுளால், ஆகாதெனினும் (யாதொரு அபிஷ்டமும்) பெறலாகாதெனினும், முயற்சி -

*நற்காட்சி, நன் ஞானம், நல்லொழுக்கம் பக்கம் (234)

முயற்சியால், தன்மெய் - தனது உடம்பை, வருத்த - உழைப்பிக்க, (அவ்வருத்தத்திற் கேற்ற) கூலிதரும் - (ஊழ்) பயன் கொடுக்கும். இதன் கருத்து: கடவுளாலாவதொன்று மில்லை; முயற்சியால் வினைக்குத் தக்களவு பயனுண்டாகும் என்பதாம். கடவுள் யாதொரு பொருளையும் தருவதில்லை என்பது ஜைந சமயசித்தாந்தம்.

## 901 மனைவிழைவார் (பக்௪௬)

மனை - தம்மனையாளை, விழைவார் - இன்பங் காரணமாக விரும்பியவர், மாண் பயன் - மாட்சிமை பொருந்தி மோக்ஷ பலனை, எய்தார் - அடையமாட்டார்கள், (அவர்கள்) வினை - (பொருள் சம்பாதிக்கும்) தொழிலை, விழைவார் - விரும்புகின்றவராவர். வேண்டாம், பொருளும் - (வீடு பெறுதற்குப் பகையென்று) இகழ்கின்ற பொருளும், அது - அத்தன்மையதே. இதன் கருத்து: மனையாளை விரும்பியவர் பொருள் சம்பாதிக்கும் தொழிலில் ஆசையுடையவர்; இவர்கள் மோட்சத்தை அடையார் என்பதாகும்.

## 945 மாறுபாடில்லாத (பக்கம் 70)

மறுத்து - (புலால் கலந்த மருந்து முதலிய ஆகாரங்களை) நீக்கி, மாறுபாடில்லாத - விகற்பமில்லாத, உண்டி - பரிசுத்தமுள்ள மருந்து முதலிய வுணவுகளை, உண்ணின் - (ஒருவன்) உண்பானாயின், உயிர்க்கு - அவனுயிர்க்கு, ஊறு - கொலைச் சார்பினால் உண்டாகிற பாடு - துன்பம், இல்லை - உண்டாவதில்லை.

## 946 இழிவறிந்து பக்கம் (71)

இழிவறிந்து - (புலால் மிஸ்ரமுள்ள மருந்து முதலியவைகள்) குற்ற மென்றறிந்து, உண்பான் கண் - (பரிசுத்த முள்ள மருந்து முதலிய வுணவுகளை) உண்பவனிடத்து, இன்பம் போல் - இன்பத்தைப் போன்று, கழிபேரிரையான்கண் - வியாதிகளுக்க மிகப் பெரிய அனுகூல மென்று புலால் கலப்புள்ள மருந்து முதலியவைகளை உண்பவனிடத்து, நோய் - துன்பம், நிற்கும் - நீங்காது தங்கும்.

## பிற் சேர்க்கை II

### குறிப்புரை

1. சருவக்கியன் - சர்வக்ஞன் - எல்லாவற்றையும் அறிபவன் ''சகல லோக பதார்த்தங்களை உள்ளங்கையில் மூன்று ரேகையைப் பிரத்தியக்ஷமாகக் காண்பது போலக் கண்டு சகல ஜனங்களுக்கும் சொல்லுகிறவனா கையால் சர்வக்ஞன் என்று அருகக் கடவுள் குறிக்கப்படுவர்'' (தி-ஆ. பக்கம் 111)

7. சரி - உவமை. சர்வேசுவரன் - எல்லாவற்றிற்கும் மேலாயிருப்பவன்

8 தரும சக்கரத்தை முத்திரையாகவுடைய ஜினேசுவரனுடைய - என்று அச்சு நூலில் உள்ளது. பிறவாழி - பிறப்பென்னும் கடல்

9. கடையிலா அறிவு முதலிய எட்டையும்: அநந்த ஞானம், அநந்த தரிசனம், அனந்த வீரியம், அநந்த சுகம், அதிருக்ஷ்மத்துவம், அவகஹனத்துவம், அகுருலகுத்துவம், அவ்வியாபாதத்துவம் என்பர்.

ஞானாவரணீய வினை விலகுதலால் கடையிலா வறிவும், தரிசனாவரணியம் விலகுதலால் கடையிலாக் காட்சியும், வேதனீயம் விலகுதலால் அவ்வியாமாதத்துவமும், மோகனியம் விலகுதலால் சம்யக்த்வமும் (கடையிலா இன்பமும்), ஆயுஷ்யம் விலகுதலால் அவககனத்துவமும், நாமவினை விலகுதலால் அதிருக்குமத்துவமும், அந்தமாயம் விலகுதலால் வரம்பற்ற ஆற்றலும் கோத்திரவினை விலகுதலால் அகுருலகுத்துவமும் வெளிப்படும் - (திரவியசங்கிரகம் பக்கம் 35)

23. சங்காரம் - சம்சாரம் - ஜீவன்கள் சுகதுக்கத்தோடு கூடி சதுர்க்கதியில் சுழலும் தன்மை (தி.ஆ. பக்கம் 141)

24. உரன் என்பதற்கு அறிவு என்பர் (தி.ஆ. பக்கம் 147)

26. இதுகளை - இவற்றை; சங்கார - சம்சார

27. இது முதலானதுகளை - இவை முதலியவற்றை. சுகந்தம் - நறுமணம், துர்க்கந்தம் - தீ நாற்றம்

36. அனித்தியகாலம் - இறக்குங்கால். ஆயிசு - ஆயுள். நிர்ணயம்- உறுதி.

62. ஓரறிவுயிர் இரண்டு - சூக்கும ஏகேந்திரியம், தூல ஏகேந்திரியம்; முதலதுகண்ணுக்குத் தோன்றாது; அடுத்தது மரம் செடிகொடி முதலியன.

ஐந்தறிவுயிர் இரண்டாவன - மனதையுடைய ஐயறிவுயிர்கள்; மனதில்லாத ஐயறிவுயிர்கள். முதலது சக்ஞிபஞ்சேந்திரிய ஜீவன்கள்; அடுத்தது அசக்ஞிபஞ்சேந்திரிய ஜீவன்கள் எனப் படும். (குறள் 354 இன் குறிப்புரை காண்க)

அதிகாரம் 8. அன்புடைமை

அச்சுநூலில் பின்வருமாறு விளக்கம் உள்ளது:-

வாழ்க்கைத் துணையாகிய மனையாள் பேரிலேயும், நல்ல புதல்வரிடத்திலேயும் இதர ஜீவன்களிடத்திலேயும் தயையுண்டா யிருக்க வேண்டும்; அவர்களிடத்தில் தயையில்லாவிட்டால் இல்லற (தர்ம)ம் நன்றாய் நடவாது என்பதாம்.

73. அச்சுநூலில் பிற்கண்டவை அதிகமாகவுள்ளன: —

உயிர் உடம்போடு கூடினல்லது அன்பு பிறவாது. எலும்பு சதையுடைய பஞ்சேந்திரிய ஜீவன்களுக்கே அன்புபிறக்கும்; மற்ற இந்திரிய ஜீவன்களுக்கு அன்பு பிறவாது; அந்த அன்பினாலே தொடர்ச்சியுண்டாம்.

80. அச்சுநூல் பின்வருமாறு :—

அன்புள்ளவனே உயிருடன் இருக்கிறவன்: அஃதாவது அன்புள்ளவனே சித்தகதியில் ஜீவஸ்வரூபமுடையவன்; அன்பு இல்லாதவன் எலும்புகளைக் கூட்டித் தோலினால் போர்த்து

வைத்த உடம்புக்குச்சரி; தோலாலே போர்த்தது பிணம் என்பதாம்.

### அதிகாரம் 9 விருந்தோம்பல்

"அஃதாவது விருந்தாகவந்த அசம்பாதன்,[1] விரதிகன்,[2] யதி[3] என்ற மூன்று பேருக்கும் நாலுவித தானம்[4] கொடுத்து ரக்ஷித்தல் என்பதாம்"— அச்சுநூல்

அச்சுநூல் விளக்கவுரை பின்வருமாறு:

இம்மூவருள் முதலிரண்டு வகையினர் இல்லறத்தார். இல்லறத்தோர் பதினொரு வகைப்படுவர். இவர்கள் சிராவகர் எனப்படுவர்.

1. முதனிலைச்சிராவகர் சம்யக் தரிசனம் (நற் காட்சி) அதாவது ஜிநதர்மத்தில் திடமான நம்பிக்கையும் பக்தியும் உள்ளவர். இவர் இல்லறத்தார்க் கென்று விதிக்கப்பட்ட விரதங்களை அனுஷ்டிக்காமலும் அனுஷ்டிக்கச் சக்தியில்லாதவராயும் இருப்பதால் அசம்யத சம்யக்திருஷ்டி என்று அழைக்கப்படுவர்.

2. இவர் நீங்கலாக மற்ற இரண்டு முதல் பதினொருநிலை வரையிலுமுள்ள சிராவகர் நற்காட்சியோடு தத்தமக்குரிய விரதங்களை அனுஷ்டிப்பதால் விரதிகன் எனப்படுவர். இவர் சம்யதன் என்றும் கூறப்படுவர்.

3. மேற்கண்ட இருவரும் நீங்கலாக, முற்றுந்துறந்த முனி, யதி எனப்படுவர்.

4. நாலுவித தானங்கள் ஆகாரதானம் (ஆகாரம்-உணவு); ஔஷததானம் (ஔஷதம்-மருந்து) அபயதானம் (அடைக்கலம்); சாஸ்திரதானம் (நூல்கள்)

81. இக்குறட்குப் பின் வருமாறு அச்சு நூலில் உரை உள்ளது. (பக்கம் 46) துறவறத்திற்குக் காரணமான இல்லறத்தி லிருந்து நீதியுடன் பொருள் தேடி வாழ்கிறது ஏனெனில் அதிதிகளை யுபசரித்துத் தானம் கொடுத்து உபகாரம் பண்ணுவதற்கு

82. இக்குறட்குப் பின் வருமாறு அச்சு நூலில் உரை உள்ளது (பக்கம் 46) அதிதிகள் பாஹ்யத்தில் இருக்கச் சாவாது பிழைக்க வைக்கும் அமிர்தமாயினும் அந்த யதீசுவரர்களை விட்டுத் தான் மாத்திரம் பொசிக்கப் போகாது; அவர்களையும் கூப்பிட்டு நவ புண்ணியத்துடன் தானம் இட்டுச் சாப்பிடவேணும்.

[குறிப்பு : அதிதிகள் - விருந்தினர். பாஹ்யம் - வெளியில் - நவபுண்ணியம் : 1. எதிர் கொண்டழைத்தல் 2. உயர்ந்த தூய இடத்தில் இருக்கச் செய்தல் 3. பாதங்களைக் கழுவுதல் 4. அர்ச்சித்தல் 5. நமஸ்கரித்தல் 6. மனம் 7. வாக்கு; 8. காயம் ஆகியவை தூய்மையாக யிருத்தல் 9. தூய உணவு கொடுத்தல் (சீவகசிந்தாமணி 2828 செய்யுள் நச்சினார்க்கினியருரை மேற்கோள் காண்க)] (அச்சுநூல் பக். 47]

84. இக்குறட்குப் பின் வருமாறு அச்சுநூலில் உரை உளது. (பக்கம் 47) சந்தோஷத்தோடு ரிஷீந்திரருக்குத் தானம் கொடுக்கும் வீட்டில் மகாலட்சுமி சந்தோஷமாக வாசம் செய்வாள். தானம் கொடுத்த புண்ணியத்தால் ஐசுவரியம் வளரும் என்பதாம்.

85. இக்குறட்குப் பின் வருமாறு அச்சுநூலில் உரை உளது. (பக் 48) அதிதிகளுக்குப் பக்தியோடு தானம் கொடுத்து மீந்ததைச் சாப்பிடுகிறவன் நிலத்திற்கு விதைவிதைக்க வேண்டுமோ தான புண்ணியத்தால் தேவர்கள் இரத்தின மழை பொழிகிறதும் போகபூமியில் பிறக்கிறதும் முதலானவை ஆம்என்றவாறு.

101. இக்குறட்குரிய சிறப்புரை பின் வருமாறு அச்சுநூலில் காணப்படுகிறது; (பக்கம் 54) செய்யாமல் செய்த உதவியாவது: போக பூமியா யிருந்து கர்மபூமியாய் மாறின காலத்து விவரமறியாத ஜனங்களுக்கு ஜீவனோபாயம், கல்வி, தானம் செய்கிறது முதலானவை கற்பித்தல் போல்வது.

152. இதற்குரிய சிறப்புரை அச்சிட்ட நூலில் பின்வருமாறுளது. (பக்கம் 68) பொறுத்தாலும் மனத்திலே நினைவிருக்கும்; ஆகையால் நினையாமல் இருப்பது நன்று.

174. அச்சுநூல் பக்கம் 73-74; கிரியாக லாபம் (தமிழ் உரையுடன் பக்கம் 55-56' காண்க.

சம்யக் தரிசனம் உடையவர்கள். ஜிநதர்மத்தில் திடமான நம்பிக்கையும் பக்தியும் உடையவர்கள்.

சம்யக் தரிசனம் - நற்காட்சி

இருபத்தைந்து குற்றங்கள் : [1]மூவகை மூடமும், [2]எட்டு மதங்களும், [3] ஆறு அவிநயமும், [4]ஐயம் முதலிய எட்டுத் தோஷங்களுமாம்.

[1]மூவகை மூடமாவன : உலகமூடம், தேவமூடம், பாசண்டி மூடம் என்பன.

உலக மூடம் ஆவது, கடல் ஆறு முதலியவைகளில் நீராடுவதனால் புண்ணியம் பெறலாம் என்பதும், வேள்வியில் ஆடு முதலியன பலியிடுதல் முதலியன.

தேவமூடம் ஆவது, கடவுள் தன்மையற்ற சிறு தெய்வங்களை வணங்குதல், தேவதைகள் நம்மைக் காப்பாற்றும் என்று நம்பிப் பிரார்த்தனை செய்தல் முதலியன.

பாசண்டி மூடம் ஆவது, பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவம் செய்பவர் முதலாகிய பாஷண்டிகளிடம் இருந்து மயங்கி விரும்புதல் முதலியன.

[2]எட்டுமதங்கள் ஆவன: பிறப்பு, குலம், வல்லமை, செல்வம், சிறப்பு, வடிவழகு, தவம், அறிவு இவற்றால் பெருமை கொள்ளுதல்

[3]ஆறுஅவிநயம்ஆவன; அச்சம், ஆசை, உலோபம், அன்புடைமை, மிச்சை (மித்யா - பொய்), பாசண்டிகள் நூல்,

தெய்வம் மெச்சி வணங்கல்

ஐயம் முதலிய எட்டு தோஷங்கள் ஆவன, ஐயமின்மை, அவா வின்மை, உவர்ப்பின்மை, மயக்கமின்மை, செய்பழிநீக்கல், திரிந்தாரை நிறுத்தல், அன்புடைமை, அறிவிளக்கஞ் செய்தல் என்னும் எண்வகைக் குணங்கட்கு மாறான ஐயம் அவா, உவர்ப்பு, மயக்கம் முதலிய எட்டு.

218. இடனில் பருவம் – தகுதியில்லாத காலம்;(செல்வம் சுருங் கிய காலம் என்பர் பரிமேலழகர்.)

222. நல்லார் என்று பாடங் கொண்டவர் பரிதியார். (திருக் குறள்-உரைக் கொத்து அறத்துப்பால் - 1969 ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள் - பக்கம் 199). அதற்கேற்றவுரை அச்சு நூல் பக்கம் 86 இல் கொடுக்கப்பட்டது பின் வருமாறு:—

முனி ஏற்கிறதான வீடு கணிகை விபசாரி முதலியோர், இப் பொழுது நல்ல ஒழுக்கமாக நடந்தாலும் அவர்களிடம் தானம் வாங்குகிறது தீது; கொடுக்கிறது மேலுலகத்துக்கு நல்லநெறி யில்லை என்று சொல்லுவார்கள் உண்டானாலும் கொடுக்கிறதே நல்லது. மற்ற தருமங்கள் எல்லாவற்றிலும் கொடுக்கிறதே நல்ல தருமம்.

232. அச்சுநூலிற் கண்ட உரை பின்வருமாறு: (பக்க 90)

உலகத்தார் புராணத்துக் கீர்த்தியாகச் சொல்லுகிற தெல்லாம் அதிதிகளுக்குத் தானம் கொடுத்துத் தான்தேடிய பொருளைப் புத்திரனுக்குக் கொடுத்துத் துறந்து போகி யதியாகின்றதே; அதுவேபெருமை; அந்தப் புகழே நிலையானது.

233. அச்சுநூலிற் கண்டஉரை: (பக்கம் 90)

பெரிதான உலகத்துப் பிரகாசமான புகழுடம்புபோல ஒரு பொருளும் நிலைத்திராது,

234. அச்சுநூலிற் கண்டஉரை: (பக்கம் 90)

பூமியெல்லையிலே தன்னுடைய கீர்த்தியே அதிகம் என்று

சொல்லும் யதியைத்தேவர்கள் துதிக்கமாட்டார்கள்; இகழ்ச்சி பண்ணுவார்கள்; தன்னைத்தான்மெச்சுவது கெர்வம்; அந்தயதி நல்லகதியும் இல்லாது கெடுவான் என்பதாம்.

235. அச்சுநூலிற் கண்டஉரை (பக்கம் 90)

அரியகேடும் சாக்காடும்வந்தாலும், இராத்திரிபோலச் சரீரமும் செல்வம் முதலியவும் நிலையில்லை யென்று சந்தோஷமாகநினைத்துப் போகிறது பெரியோர்க்கு ஆகும். ஜீவஸ்வரூபம் தவிர மற்றவைகளை நிச்சயமாக நினையார்கள் என்றவாறு.

249. சம்யக் ஞானம்—நல்லறிவு

ஆறுவிதவஸ்து—சீவன், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம் என்பன. இவை ஷட் திரவியம் எனப்படும்.

உயிர் திரவியம், உருவம் முதலிய பண்புகள் இல்லாதது; பொருள்களை அறியும் உணர்வு இதற்குண்டு.

புற்கலம் என்பது அணுக்களின் கூட்டம். இதற்கு நிறம் முதலான பண்புகள் உண்டு.

தன்மம் என்பது ஓராற்றல்; பொறிகளுக்குப் புலனாகாது இந்த ஆற்றலால் உயிரும் புற்கலமும் இடம்விட்டு இடம் பெயர்கின்றன.

அதன்மம் என்பதும் பொறிகளுக்குப் புலனாகாத; ஆற்றல். இவ்வாற்றலால் உயிரும் புற்கலமும் ஓரிடத்தில் நிலைபெற்று நிற்க முடிகிறது.

இவ்விரண்டு திரவியங்களும் உலகமுழுவதும் எள்ளுக்குள் எண்ணெய் போல் பரவியுள்ளன.

ஆகாயம் என்ற திரவியம் உயிர்முதலான பொருள்கள் இருப்பதற்கு இடம்தருகிறது. ஆகாயம் இல்லாதஇடமேயில்லை.

காலம்; பொருள்களில் ஏற்படும் வேறுபாடுகளுக்கு இந்தக் காலதிரவியமே நிமித்தமாகும்.

(ஆசாரியர் குந்தகுந்தர் தத்துவப்பரப்புமையம், குந்தகுந்த நகர் 604502 வெளியீடு ஆகம ஞானமலர் 1, சுவடி 2, பாடம் 6, திரவியம் (பக்கம் 19-21) காண்க. திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைந சமய சித்தாந்த விளக்கமும் என்றநூல் பக்கம் 25 காண்க. மேருமந்தரபுராணம் 69, 70, 71, 83, 88, 93 ஆம்செய்யுட்கள் சீவன்முதலிய ஆறு திரவியங்களைப்பற்றிக் கூறுவனவாம்

261. இக்குறளுரையில் ''உற்றநோய்'' என்பதற்கு உரையில்லை; ''தம் உயிர்க்கு வரும் துன்பங்கள்'' என்பது பொருள். நோன்றல் - பொறுத்துக்கொள்ளுதல்; குறைக்கிறது என்று உரையிலுள்ளது.

264. உத்தமக்ஷமை முதலிய பத்துத்தருமங்கள்:- (பக்கம் 152- 153 தி.ஆ)

**உத்தமக்ஷமை:** தன்னை அறுத்தாலும் அறுப்பவனுக்கு நிழலைத் தருகின்ற மரம்போலத் துன்பங்களைச் செய்தவர்களுக்கும் நன்மையுண்டாகுமாறு தர்மோபதேசம் செய்தல்.

**உத்தமமார்த்தவம்:** வணக்கமுடையவராய் எல்லா உயிர்களிடத்தும் சமநோக்குடையராயிருத்தல்.

**உத்தம ஆர்ஜவம்;** உள்ளும் புறம்பும் இரத்தின தீபத்துக்குச் சமானமாகி மேலான குணமுடையவராயிருத்தல்

**உத்தம சத்யம்;** உயிர்களுக்கு உறுதிபயப்பனவாகிய உண்மை மொழிகளையே கூறுவது.

**உத்தமசவுசம்** ஆகாதென்று நீக்கப்பட்ட வஸ்துக்களின்மேல் மனம் செல்லாத பரிசுத்த தருமகுணம்.

**உத்தமஸமயமம்;** மெய் வாய்கண்மூக்குச்செவி மனம் என்னும் ஆறு விஷய வழிகளிற் செல்லாமல் தடுத்துச் சீவன்களை அருளுடன் உபசரித்தல்.

**உத்தமதபசு:** பாஹ்யதவம் ஆறு, அப்யந்தா தவம் ஆறு ஆகப்பன்னிரண்டு தவத்தையும் செய்தல் (விரிவு ஜைநசமயசித்தாந்த விளக்கம் என்னும் நூல் பக்கம் 153 - 154 காண்க).

**உத்தம ஆகிஞ்சன்யம்** யாதொன்றின் மேலும் பற்றின்றித் துறத்தல்.

**உத்தமத்தியாகம்;** பரமாகமங்களை வியாக்கியானம் பண்ணியருளும் சாஸ்திரதான சக்தி.

**உத்தமபிரமசரியம்:** ஸ்திரீகளைத் துதித்தல், அவர்களை விரும்பிப் பார்த்தல், அவர்களுடைய மொழிகளை விரும்பிக்கேட்டல், அவர்களுடன் சிரித்தல், அவர்களுடன் உறைதல் ஆகியவற்றினின்று நீங்கி விளங்குவது.

அடிக்குறிப்பு:

267. **சுக்கிலதியானம்** ஆவது நான்கு வகைப்படும் 1. **ப்ரதக்த்வ விதர்க்கவீசாரம்** - உயிர், உடல், அதற்குக காரணமான வினை முதலியன வேறு வேறு தன்மைகளை யுடையன என்று அவற்றை நன்றாகத் தர்க்கம் செய்து அறிந்து பற்றறத் திகழ்தல்: 2. **ஏகத்வவிதர்க்க வீசாரம்:** ஆன்ம ஸ்வரூபத்தை மட்டும தியானித்தல்; இவ்விரண்டும் காதி கர்மங்களை நாசம் செய்யும் தன்மையன: 3. **சூக்ஷம க்ரியா ப்ரதிபாதி :** காதிவினை* கெட்டவுடன் தேவர்களியற்றிய கந்தகுடி முதலியவற்றை விட்டுத் தனியே சென்று தபோயோகத்தில நின்று மனவசன காயங்களாகிய யோகங்களைச் சூட்சுபமாகச்செய்தல். 4. **வ்யுபரதக் க்ரியா நிவ்ருத்தி:** அகாதி வினை†யையும் வென்று முத்தியடைதல் (கிரியாகலாபம். பக்கம் 46-47)

*காதிவினை. ஞானாவரணீயம் 5, தரிசனாவரணீயம் 9; மோஹனீயம 28; அந்தராயம் 5; ஆக 47.

†அகாதிவினை : வேதனியம் 2; ஆயுஷ்யம் 4; நாமம் 93; கோத்திரம் 2; ஆக 101

**ஞானாவரணீயம்** : உயிரின் இயற்கையான அறிவை விளங்க வொட்டாமல் மறைப்பது (ஆவரணீயம் - மறைத்தல்).

**தரிசனாவரணீயம்** : உயிரின் இயற்கையான தரிசனத்தை விளங்க வொட்டாமல் மறைப்பது.

**மோஹனீயம்** : கட்குடியனைக் கள் மயக்குவது போல உயிரைமயங்கச் செய்வது.

**அந்தராயம்** : தானம் லாபம் முதலியவற்றைப் பெறவொட்டாமல் தடுப்பது.

**வேதனீயம்** : உயிருக்கு இன்பதுன்பங்களை உண்டு பண்ணுவது.

**ஆயுஷ்யம்** : காலிற் பூட்டிய இரும்புத்தலை போல உயிரை நாற்கதிகளிலும் தங்கிச் சுழலச் செய்வது.

**நாமம்** : ஓர் ஓவியன் பல சித்திரம் வரைவது போல, உயிருக்கு உடல் முதலிய அவயவங்களை அமையச் செய்வது.

**கோத்திரம்** : சிறிதும் பெரிதும் ஆகிய பாண்டங்களைச் செய்யும் குயவனைப் போல, உயிரைத் தூய உச்ச நீச குலங்களிற் பிறக்கச் செய்வது.

ஆன்ம குணத்தைக் கெடுப்பது காதி வினையே யாகும்.

ஞானாவரணீயம் கெட்டதனால் க்ஷாயிக ஞானத்தையும்,
தரிசனாவரணீயம் கெட்டதனால் க்ஷாயிக தரிசனத்தையும்,
மோஹனீயம் கெட்டதனால் க்ஷாயிக சம்யக்த்வத் தினையும்,
க்ஷாயிக சாரித்திரத்தினையும்,

அந்தராயம் கெட்டதினால், க்ஷாயிக தானம். க்ஷாயிக லாபம், க்ஷாயிக போகம், க்ஷாயிக உபபோகம், க்ஷாயிக வீரியமும், அடைந்து பகவான் தன்மை பெறுதல் முறைமை: (க்ஷாயிக ஞானம் - கேவல ஞானம் - கடையிலா ஞானம் - அனந்தஞானம்) (கிரியாகலாபம், பக்கம் 37 39 காண்க) (ஆகமஞானமலர் - சுவடி 4, பாடம் 5 காண்க)

(சுக்கிலதியானம் - பரிமேலழகருரை - 356 ஆம் குறள் உரை காண்க)

## 33 ஆம் அதிகாரம் கொல்லாமை

**எழுவிதவுயிர்கள்:** நுண்ணிய ஓரறிவுயிர்: பருத்த ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், மனதோடு கூடிய ஐயறிவுயிர், மனமில்லாத ஐயறிவுயிர் (அச்சு நூல் பக்கம் 125) குறள் 62க்குரிய உரை - குறிப்புரை காண்க)

322. தான் சாப்பிடுகிறதையாகிலும் பசித்த பேருக்குப் பகுந்து கொடுத்து - என்றவிடத்து அச்சு நூலில், ''தான் சம்பாதிக்கின்றதைச் சாஸ்திரத்தில் உபதேசித்த பேருக்குப் பகுந்து கொடுத்து'' என்றுளது.

மேலும் சிறப்புரையில், ''கொல்லாத படியாய்க் காத்தல்'' என்றவிடத்து அச்சுநூலில், ''கொலை வராமல் க்ஷாயிகம் காத்தல்'' என்றுளது.

335. புத்திர மித்திர களத்திராதிகளை - மக்கள், நண்பர், மனைவி முதலானவர்களை நிச்சயம் - உறுதி.

345. **உடம்புகள் ஐந்துவகை** : ஔதாரிகம், வைக்ரீயிகம், ஆஹாரகம், தைஜஸம், கார்மணம் என.

**ஔதாரீகம்:** இந்திரியங்களால் அறியக்கூடிய ஸ்தூலசரீரம்.

**வைக்ரீயிகம்:** சிறிதாயும் பெரிதாயும் லேசாயும் கனமாயும் அநேக பிரகாரங்களால் விகார மடையக்கூடிய சரீரம்.

**ஆஹாரகம்,** சூக்கும பதார்த்தங்களை அறிதற்காக பிரமத்த குண ஸ்தானத்திலுள்ள மகாமுனிகளுடைய உடம்பினின்று புறப்படும் சரீரம்.

**தைஜஸம்,** பிரகாசத்தையுடைய சரீரம்.

**கார்மணம்** ஞானாபரணீயம் முதலிய எட்டுக் கருமங்களின் சேர்க்கையால் உண்டாகிய சரீரம்.

**இந்திரியங்கள் ஐந்து** : மெய்வாய் கண் மூக்குச் செவி.

**கரணம் மூன்று** : மனம், வாக்கு, காயம் (இவை பலப் பிராணன்கள்).

உச்வாசம் - சுவாசம் விடுதல்.

நிச்வாசம் - சுவாசம் ஒடுங்குதல் (இழுத்தல்).

346. குரு ஆகம தெய்வபக்தி - இறைவனும், நூலும், குருவும் வழிபாட்டுக்குரியவர். அருகன் அருளிய நூல்வழி ஆன்மசாதனை செய்து காட்டும் பற்றற்ற துறவியர்களே குரு எனப்படுவர். அறவழியில் செல்ல வழிகாட்டியாக வுள்ள **அருகன் நூலும்** அருகனைப் போல வழிபாட்டுக் குரியது. இந்நூல்கள் ஆகமம் அல்லது பரமாகமங்கள் எனப்படும் பரமாகமங்களை நான்கு வகைப்படுத்தி அவற்றை நான்கு அது யோகங்கள் என்பர். அவை 1. பிரதாது யோகம், 2. கரணாது யோகம். 3. சரணாது யோகம், 4. திரவியாது யோகம் என்பன (விரிவை ஆகம ஞானமலர், சுவடி 5. நான்கு அது யோகங்கள் பார்க்க)

352. **சங்கை (ஐயம்) முதலிய 25 குற்றங்கள்** - குறள் 174க் குரிய குறிப்புரையில் காண்க.

**நிச்சங்கை ஐயமின்மை முதலிய எட்டு:—**

நிச்சங்கை (ஐயமின்மை) நீர்க்காம் க்ஷை (அவாவின்மை); நீர் விசிகித்ஸை (உவர்ப்பின்மை); அமூட த்ரஷ்டித்வம் (மயக்க மின்மை); உபகூஷஹனம் (செய்பழி நீக்கல்); ஸ்திதிகரணம் (திரிந் தாரை நிறுத்தல்); வாத்ஸல்யம் (அன்புடைமை) மார்க்க ப்ர பாவனை (அறவிளக்கம் செய்தல்)

**க்ஷாயிக சம்யக் தரிசனம் :**

நற்காட்சி, சம்யக்த்வம், சம்யக்தரிசனம் என வழங்கும் **சம்யக்த்வம் மூன்று வகைப்படும்:-**

அவை உபமை சம்யக்த்வம், வேதக சம்யக்த்வம், க்ஷாயிக சம் யக்த்வம்

**உபமை சம்யக்த்வம்** என்பது, ஐயமின்மை (நிச்சங்கை) முதலிய எண்வகைக் குணங்களையுடையது, ஐயம் (சங்கை) முதலிய இருபத்தைந்து குற்றங்களின் நீங்கியது.

**க்ஷாயிக சம்யக்த்வம்** என்பது அறந்தானு பந்தி குரோதம், மானம் மாயம், லோபம், மித்யாத்வம், சம்யக் மித்தியாத்வம் சம்யக்த்வ ப்ரக்ருதி ஆகிய ஏழு சப்த பிரகிருதிகளை அறவே விடுவது.

சந்தேகம் விபரீதம் முதலிய குற்றங்களின்றி நூல்களை அறிவது ஸம்யக் ஞானம் (நல்லறிவு) ஆகும். அவற்றைச் சந்தேக மறத் தெளிதல் ஸம்யக் தரிசனம் ஆகும்.

**நாலுகதிகள் :** மனிதகதி, நரககதி, விலங்கு கதி, தேவகதி என்பன.

354\. சக்நி பஞ்சேந்திரிய சீவன் ; தசப்பிராணன்களுடன் சீவிப்பவனாகிய ஆன்மா (திருக்குறள் ஆராய்ச்சி ஜைந சமய சித்தாந்த விளக்கம் பக் 187, 188)

(மனவாக்குக் காயமாகிய பலப்ராணந் 3; இந்திரியப் பிராணன் 5; ஆயுஷ்ய பிராணன் 1; உச்வாச நிச்வாச 1. ஆக 10)

**நற்காட்சி :** உயிர் முதலான ஏழு தத்துவங்களில் அசையாத நம்பிக்கை யிருத்தல்.

**ஏழு தத்துவங்கள் :** உயிர் (ஜீவன்); உயிரல்லது (அ ஜீவன்) ஊற்று (ஆஸ்ரவம்); கட்டு (பந்தம்); செறிப்பு (ஸம்வரை); உதிர்ப்பு (நிர்ஜரை); வீடு (மோட்சம்) (ஆகம ஞானமலர், பாடம் 3).

355\. சீவாதி பொருள்கள் : உயிர், புற்கலம் தன்மம், அதன்மம், ஆகாயம் காலம் என இவை. (குறள் 249க்குரிய குறிப்புரை காண்க).

சுத்தாத்மஸ்வரூபம் ' தூய ஆன்மாவின் உருவம்

கேவலக் ஞானம் : திரிகால வுணர்ச்சி (சீவகசிந்தாமணி செ. 30 60)

363. 'துறவு என்பதற்கு அச்சுநூலில் துறக்கம் என்றுளது. துறக்கம் ஆவது சுவர்க்கம்; அளவிற்கு உட்பட்ட சுகத்தை யுடையது என்பர் (2 - 9 - 5 இன் ஈடு வியாக்கியானம்); தேவர் உலகு.

2. விரதம் என்பதற்கு அச்சு நூலில் வித்தம் என்றுளது. வித்தம் என்றால் செல்வம் என்று பொருள்.

3. ஆசையில்லாதவனே என்றவிடத்து அச்சு நூலில் ஆசையில்லாத அருகனே என்றுள்ளது.

364. ஆசையில்லாமை[4] மெய்ம்மையை[5] என்ற இரு சொற்கள், இருக்க வேண்டிய இடத்தில், அச்சு நூலில் ''மோக்ஷம்' என்றுளது. இது பொருந்தாது. (அது - ஆசையில்லாமை; வாய்மை - மெய்ம்மையை என்று பதம் பிரித்து உரை காண்க)

374. அறிவு[1] என்ற மூன்றிடங்களிலும் காகிதச் சுவடியில் வெற்றி யென்றே யுள்ளது வெற்றி என்றதன் காரணம் ஆய்வுக்குரியது

381. துர்க்கம் - மலைமேல் கோட்டை; காடு

389. கீழ் + தங்கு (கீழ்த்தங்கு) - கீட்டங்கு; திகடசக்கர என்ற கந்த புராணத் தொடக்கம் காண்க.

426. கயப்பூ - முன் மலர்தலும் பின் குவிதலும் உடையன. கோட்டுப்பூ - முன்மலர்தலும் பின் குவிதலு மின்றி ஒரே நிலையில் இருப்பனவாம்.

517. மூன்று - வினை முதல் (இவன்); கருவி (இதனால்) வினை (இதனை) என்ற வற்றால் இக்குறளிற் குறிக்கப் பட்டன

533. அச்சுநூலிற் கண்டவுரை பின்வருமாறு:

பொச்சாப்பாகிய மறப்புடையவர்களுக்குக் கீர்த்தியில்லை. அவ்வின்மை இந்நீதி நூல் உடையவர்களுக்கேயன்றி, உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்தது.

539. இகழ்ச்சியில் கெட்டார்க்குக் காலிங்கர் உரையில் ''பாரதத்தில் நூற்றுவரையும், இராமாயணத்து இராவணனையும் பிறரையும் எண்ணிக் கொள்க'' என்றுளது.

548. தாழ்ந்தவிடம் - பாவமும் பழியும் எய்தி நிற்கும் நிலை (பரிமேலழகருரை)

565. பேயைக் கண்டால் பயப்படுமாறு போலக் குற்றம் உண்டாம் என்ற விடத்தில், அச்சுநூலில், பேயால் காணப்பட்டாற் போல்வதொரு குற்றமுடைத்து என்றுள்ளது. பின்னர்க்கண்டது பரிமேலழகருரை.

573. ''யாழ்குழலாகியதும்'' என்ற இடத்தில் பாலையாழ் முதலாகியதும் என்று அச்சுநூலில் காணப்படும். மிடற்றில் ...ஐந்து - பின்வரும் சீவக சிந்தாமணி 735 ஆம் செய்யுளுரையில், நச்சினார்க்கினியர் காட்டிய மேற்கோள் பாடலான் அறியப்பெறும்:-

''எடுத்தல் பாட் டுச்சம்ரம்; எண்படுத்தல் மந்தம்;
தடுத்து நலிதல் சமமாம்;- தொடுத்தியன்ற
தள்ளாத கம்பிதம் தானடுக்கல்; நற்குடிலம்
உள்வாங்கிப் பாட லுணர்''

உச்ச ஸ்தாயியில் பாடுதல் - எடுத்தல்;
மந்தமாகப் பாடுதல் - மந்தம்;
இடைப்பட்ட நிலையில் பாடுதல் - சமம்,
நடுங்கல் - கம்பிதம்;
உள்வாங்கிப் பாடுதல் - குடிலம்

வண்ணங்கள் 76 ; (வண்ணம் நான்கடியான் வருவது) பெருவண்ணம் 6; இடைவண்ணம் 21; வவப்பு

வண்ணம் 49 (சிலப்பதிகாரம், அரங்கேற்று காதை, அடியார்க்கு நல்லாருரை)

591. ஊக்கம் என்பதற்கு அறிவுடையவர்கள் என்று காகிதச் சுவடியிலுள்ளது. அடுத்த குறளுரையில் ஊக்கமாகிய அறிவுடைமை என்பர்.

600. உரம் - அறிவு உள்ள வெறுக்கை என்பதற்கு ஊக்க மிகுதி என்று பரிமேலழகர் பொருள்தந்தார். உள்ளம் ஊக்கம்; வெறுக்கை - மிகுதி. காகிதச் சுவடியில் உள்ள வெறுக்கை என்பதற்கு ''மிகுத்ததே பொருள் ஆவது'' என்ற உரைஉளது. வெறுக்கை - பொருள். அஃது என்ற சுட்டு, பரிமேலழகர் உரைப்படி ஊக்க மிகுதியையும் இச் சுவடியில் பொருளையும் குறிக்கும்.

608. இடிபுரிந்து என்பதற்கு அச்சுநூலில் ''சுற்றத்தார் கழறுதலை மிகச் செய்து'' என்று உரையுளது. காகிதச் சுவடியில் ஆகாத விசேஷங்களைப் பேசி என்றுளது. அச்சு நூல் பரிமேலழகருரையை யொட்டியது. சிறப்புரையில் ''முன்னிகழ்ந்து பேசினபடியினாலே'' என்றிருப்பதால் ''இடி புரிந்து'' என்பதற்குக் காகிதச் சுவடியுரை ''முன் இகழ்ந்து பேசி'' என்றிருத்தல் தகும். (விசேஷங்களை - விஷயங்களை)

610. ''அடியளந்தான்'' என்பது வாளா பெயராய் நின்றது என்பர் பரிமேலழகர். இச்சுவடியில் ''சகல லோகத்தையும் அறிந்த சுவாமி'' என்று தம் சமயத்திற் கேற்பவுரைக்கப் பட்டுள்ளது.

624. காகிதச் சுவடியில் தவறு பட உள்ள பகுதி பின்வருமாறு அச்சுநூலில் உள்ளது:-

மருங்கு ஏற்றியும் மூக்கு ஊன்றியும் தாள் தவழ்ந்தும் சேற்றிலிருந்து அரிதின் உய்க்குமாறு போலத் தன்மெய் வருத்தம் பாராது முயன்று உய்ப்பானுக்கு இடையூறு

வாராது என்பதாம்

**66ஆம் அதிகாரம் வினைத்தூய்மை ;**

என்பது, செய்யப்படும் காரியங்கள் பொருளேயன்றி அறமும் புகழும் கொடுத்து நல்ல ஆதல் - அச்சுநூல்

711. **செஞ்சொல்** - வெளிப்படைச் சொல்; நிலம் நீர் என்றாற் போல்வன.

**இலக்கணச்சொல்** - ஆக்கச் சொல், உரிய பொருளை விட்டு அப்பொருளோடு தொடர்புடைய பிறிதொரு பொருளை யுணர்த்துவது. ஊர் அடங்கிற்று என்பதில் ஊர் என்பது, ஊராரை உணர்த்துதல் போல்வன.

**குறிப்புச்சொல்** - குறிப்பினால் பொருளுணர்த்துஞ்சொல்; ''உவர்க்கடலன்ன செல்வர்'' என்பது பிறர்க்குப் பயன் படாத செல்வமுடைய உலோபிகளைக் குறிக்கும். ''அலங் குளைப்புரவி ஐவரொடு சினைஇ' என்றதுள் ஐவர் என் னும் தொகைக்குறிப்புச் சொல் பாண்டவரை உணர்த் திற்று.

719. இங்குக்கண்ட சிறப்புரைக்குப்பதிலாக அச்சு நூலிற் கண்டது:

கற்றவர் அறிவிலார் சபையில் பேசினால் அவரைச் சபை யின் தன்மை அறிந்திலர் என்று நல்லோர் இகழ்வர்; அவர் சொல்லும் பொருள்களை அறிய மாட்டாமையால் புல்லோர் அலக்ஷியம் செய்வர்.

755. அச்சுநூற் பொருள்: —

தாம் குடிகளிடத்திலே செய்யும் அருளோடும், அவர் தம்மிடத்திலே செய்யும் அன்போடும் கூடாத பொருளை அரசர் கைக்கொள்ளாமல் விட்டுவிட வேணும்.

762. மூலப்படையே நல்ல தென்பது என்பதற்கு முன், அச்சு நூலில், 'மூலப்படை கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்

படை, துணைப்படை, பகைப்படை என்னும் அறுவகைப் படையுள் என்றுளது. (பரிமேலழகருரையும் காண்க.)

764. இப்பாடல், புறப்பொருள் வெண்பா மாலை, வாகை படலம், 22ஆம் பாடல் ஆகும். இதன் பொருள்;—

எந்தை - என் தந்தை, கல் நின்றான் - கல்லிலே பொருந்தினான்; கணவன் - என் கணவன், களம்பட்டான் - போர்க்களத்திலே இறந்தான்; என் ஐயர் - என் தமையன்மார், முன் நின்று - பகைவரை எதிர்த்து நின்று, மொய் அவிந்தார் - இறந்தனர்; என்ஏறு - என் மகன், பின் நின்று - தன் சேனை அழிந்த பின்னரும் கலங்காது நின்று, கை போய்க் கணை உதைப்ப - தன் கைகள் மட்டும் அம்புகளைச், செலுந்த; காவலன் மேல் ஓடி - பகையரசன் மேல் எதிர்த்துச் சென்று; எய் போல் கிடந்தான் - (பகைவர் எய்த அம்புகள் தன் உடல் முழுதும் தைக்க) முள்ளம் பன்றி போலக் கிடந்தான்.

போரில் பின்னிடாது பகைவனை யெதிர்த்து அவனால் விழுப்புண்பட்டுக் கிடக்கின்ற வீரனின் தாய் கூற்றாக அமைவது, இப்பாடல். இது வாகைத்திணையில் ஏறாண் முல்லை என்னும் துறை.

'மாறின்றி மறங்கனலும், ஏறாண்குடி யெடுத்துரைத் தன்று'' என்பது கொளு.

எதிரில்லாமல் ஒழியும்படி சினம் மிகுகின்ற மேன் மேல் அதிகரிக்கின்ற ஆண்மைத் தன்மையை யுடைய குடியொழுக்கத்தை யுயர்த்துச் சொல்லியது - என்பது இக் கொளுவின் பொருள்.

குறிப்பு: கல் நின்றான் என்றது, போரில் இறந்து நடுகல்லிலே பெயரும் பீடும் பொறிக்கப்பட்டுச் சிறப்பெய்தினான் என்பதாம்.

771. காகிதச் சுவடியில் முற்பகுதியில் ''தெவ்விர்' என்பதைத் 'தெவ்வர்' என்றும், 'என்னை' என்பதை 'ஐன்' என்றும்

கொண்டு பொருள் தரப்பட்டது. காலிங்கரும் 'வறுதே என்முன் வந்து நில்லன் மின்... ...எனது முன்னே வந்து நின்று ...' என்றார். என்னை என்ற ஈரிடத்திலும் காலிங்கர் 'என்' என்றே கொண்டார். பரிதியாரும் அங்ஙனமே. இச்சுவடியில் முதல் 'என்னை' என்பதற்கு 'என்னுடைய ராசா' என்றும், அடுத்த 'என்னை' என்பதற்கு 'என்னுடைய வேல்' என்றும் பொருள் தரப்பட்டது.

சிறப்புரை காகிதச் சுவடியில் பின்வருவது;—

'கல்லின்கண் நின்ற — பெயர் பொறிக்கப்பட்டுநின்ற ; கல்லில் தெய்வ வடிவாய் ஆவேசித்து நின்ற'

899. மகாவிரத முடையவர்கள் - துறவிகள், மகாவிரதங்கள் நூற்றுக் கோடி (சீவக சிந்தாமணி செ. 2818) [தி.ஆ பக். 142) முனிவர்க்குக் கேவல ஞானம் உண்டான அளவில் இந்திரன் அவதி ஞானத்தால் அறிவன்; அறிந்து கேவல பூஜை செய்வன் (தி.ஆ.பக்கம் 194-195 பார்க்க) எனவே இந்திராதி தேவர்கள் பூசிக்கும் பெருமை வாய்ந்தவர்கள் ஆதலின் பெரிய விரதங்களையுடைய துறவிகள் தேவர்களினும் சிறந்தவராதல் துணிபு.

985. *முதல் * வரை; இது கருத்துரையாகும். இது அச்சு நூலில் இல்லை. இந்த இடத்தில் அச்சு நூலில், 'சான்றோர் தம் பகைவரைப் பகையை யொழிக்கும் கருவியும் அதுவே' என்றுள்ளது. இது குறளிற் கண்ட 'சான்றோர் மாற்றாரை மாற்றும் படை' என்பதன் உரையாகும்.

986. இவ்வுரையிலும் பிற் பகுதி கருத்துரையாதல் கூடும். அச்சுநூல் உரை பின்வருமாறு:-

சால்பு என்னப்பட்ட பொன்னின் அளவு அறிகிறதற்கு உரை கல்லாகிப செயல் ஏதென்றால், தன்னிலும் பெரியோர்களிடம் கொள்ளும் தோல்வியைத் தன்னிலும் தாழ்ந்தவரிடமும் கொள்ளல் என்றவாறு.

1069. 'இரப்பை நினைத்தால் நம் உள்ளம் உருகுகின்றதே' இரந்து பெறும் யாசகர் மனம் எவ்வாறு இருக்குமோ' என்றார் பிறரும் - இங்ஙனம் அச்சு நூலில் உள்ளது. இது பின் வரும் நாலடியார் (305) பாடலின் மொழிப் பாகும்:-

> ''இரவினை, உள்ளுங்கால் உள்ள முருகுமால்
> என்கொலோ, கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு''

இப்பாடற்பகுதி பரிமேலழகருரையில் கொடுக்கப்பட்டுள் ளது.

1099. **மதியுடம்பாடு:** தோழி தலைவனுக்கும் தலைவிக்கும் கூட்டம் உண்டானமையைத் தன்னுணர்வினாலாராய்ந்து அறிதல்.

1101. **இயற்கைப்புணர்ச்சி:** ஒரு தலைவன் தலைவியை ஒரு பொழிலில் தற்செயலாய்த் தனியிருத்தலைக் கண்டு காதல் கொண்டு புணர்வது இவ்வியற்கைப் புணர்ச்சி நிகழ்வதற்கு முன் தலைவனிடத்தில், காட்சி ஐயம் தெரிதல் தேறல் என்ற நான்கு செய்திகள் நிகழும் (குறள் 1081 ஐயம்)

1102. **இடந்தலைப்பாடு:** தலைமகன் முன்னாட் கூடிய இடத்திலே வந்து தலைவியை எதிர்ப்படுதல்

1104. **பாங்கற்கூட்டம்:** பாங்கனால் தலைவன் தலைவியைச் சென்றெய்துதல்.

1105. **தோழியிற்கூட்டம்:** தலைவியது தோழியை இரந்து அவள் வழி முயன்று தலைவியைக் கூடுதல்

1109. **ஊடல்:** தலைவனும் தலைவியும் ஒத்துக் கூடுங்காலத்து மனதிற்கு ஒவ்வாத பரத்தையிற் பிரிவு முதலியவற்றான் தலைவி தலைவன் மீது மனம் வேறு பட்டிருத்தல் **உணர்தல்:** ஊடியதைத் தணிக்கக் கருதிய தலைவன்

காரணம் காட்டியோ அல்லது வேறு வகையாலோ தெரிவிக்கத் தலைவி தெளிதல்.

1110. உடன் போகின்றான் - உடன் போக்கு நிகழ்த்துகிறவன் உடன்போக்கு: தலைவியைப் பெற்றோர் அயலானுக்குத் தம்மகளை மணம் பேசியோ, தலைவன் தலைவியைக் காண முடியாதவாறு கடுங்காவற்குட்படுத்தியோ இது போன்றவற்றால் தலைவிக்கு ஆற்றாமை பெருகும். இதனைஅறிந்த தலைவன் தோழியொடு சூழ்வன்; உடன் அழைத்துச் செல்ல உடன்படுவன். தோழி தலைவியை உடன்போக்குக்கு இணையச் செய்வள். தலைவன் தலைவியைத் தன் ஊர்க்கு அழைத்துச் செல்வன்.

1115. பகற்குறி: தலை மகன் கொடுத்த தழையை யேற்ற தலைமகளைத் தோழி தலைமகனுடன் பகலில் குறிப்பிட்ட இடத்தில் தலைவியை இருக்குமாறு செய்தல்.

1116. இரவுக்குறி . தலைவன் தலைவியை இரவுப் பொழுதில் குறிப்பிட்ட இடத்தில் கூடுதல்.

1125. ஒருவழித்தணத்தல் : தலைமகளைக் களவொழுக்கத்தால் தலைவன் புணருங்கால் அலர் எழும்; அந்த அலர் அடங்கச் சிலநாட்கள் தலைமகனைப் பிரிந்து உறைவன் இதுவே ஒரு வழித்தணத்தல். (அலராவது, களவுப் புணர்ச்சியைப் பலர் அறிந்து பேசுதல்)

114. நாணுத்துறவுரைத்தலாவது

நாணத்தை விட்டமை தோன்றும் பேச்சுப் பேசுதல்.

அறத்தொடு நிற்றலாவது. தலைவியின் களவொழுக்கத்தை முறையே வெளிப்படுத்துதல். அதாவது, தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்கும், பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்கும், செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும், நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நிற்கும்.

1139. சிலர் அறிந்து புறங்கூறலும் பழித்தலும், அம்பல், பலர் அறிந்து தூற்றுதல் - அலர்

1141: பாக்கியம் - தெய்வம் என்று பொருள் கூறுவர் பரிமேலழகர் புண்ணியம் என்று மணக்குடவர் உரை வகுப்பர்.

1195. பரிமேலழகர் தந்த துறைக்குறிப்பு :

[1]அவர் மேற் காதலுடைமையின் அவர் கருத்தறிந்து ஆற்றினாய்' என்ற தோழிக்குச் சொல்லியது.

1268. பரிமேலழகர் தந்த துறைக்குறிப்பு:—

வேந்தற் குற்றுழிப்பிரிந்த தலைமகன் வினை முடிவு நீட்டித்துழி தலை மகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

1289. அதன் செவ்வி - காம வின்பத்தின் நலன்

அடிக்குறிப்பு: உணர்ப்புவயின் வாரா ஊடல் ஆவது தலைவனால் தெளிவிக்கப்படும் தன்மையில் நில்லாத வூடல்.

1301. பரிமேலழகர் துறைக்குறிப்பு : வாயிலாகச் சென்ற தோழி தலைமகள் வாயில் நேர்தற் பொருட்டு அவளோடு நகையாடிச் சொல்லியது. (வாயிலாக - தலைவனோடு தலைவியைப் பொருந்தச் செய்வதற்குத் தூதாக].

1312. பரிமேலழகர் துறைக்குறிப்பு : தலைமகள் நீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.

1313. பரிமேலழகர் துறைக்குறிப்பு: தலைமகளது புலவிக்குறிப் பினைக் கண்டு. ''நீயிர் கூடியொழுகா நிற்கவும். இது நிகழ்தற்குக் காரணம் யாது'' என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

1322. பரிமேலழகர் துறைக்குறிப்பு 'புலவாக்காலும் அத்தலையணி பெறலாயிருக்க அஃது இழந்து புலவியான் வருத்துவதென்னை' என்றாட்கு அவள் சொல்லியது.

# குறள் முதற்குறிப்பகராதி

(எண் - குறளெண்)


அஃகாமை 178
அஃகி 175
அகடாரா 936
அகப்பட்டி 1074
அகரமுதல 1
அகலா 691
அகழ்வாரை 151
அகனமர்ந்து 84
அகனமர்ந்தீத 92
அங்கணத்து 720
அசையியற் 1098
அச்சமுடை 534
அச்சமே 1075
அஞ்சாமையல்லாற் 497
அஞ்சாமையீகை 382
அஞ்சுமறியா 863
அஞ்சுவதஞ்சாமை 428
அஞ்சுவதோரு 366
அடக்க 121
அடற்றகை 786
அடல்வேண்டு 343
அடுக்கிய கோடி 954
அடுக்கிவரினும் 625
அடுத்தது 706
அணங்குகொல் 1081
அணியன்றோ 1014
அந்தணர்நூற் 543
அந்தணரென் 30
அமரகத்தாற் 814
அமரகத்துவன் 1027
அமிழ்தினு 64
அமைந்தாங் 474
அரங்கின்றி 401
அரம்பொருத 888
அரம்போலும் 997
அரிதரோ 1153
அரிதாற்றி 1160
அரியக 503
அரியவற்று 443
அரியவென் 537
அருங்கேட 210
அருஞ்செவ்வி 565
அருட்செல்வ 241
அருமறைச 847
அருமைற 611
அரும்பய 198
அருவினை 483
அருளல்லதி 254
அருளில்லார்க் 247
அருளென்னு 757
அருளொடும் 755
அருள்கருதி 288
அருள் சேர்ந்த 249
அருள் வெஃகி 176
அலந்தாரை 1303
அலரெழ 1141
அலர்நாண 1149
அல்லலறா 245
அல்லவை 96
அல்லற்பட் 555
அவர்தந்தார் 1182
அவர்நெஞ் 1291
அவாவில்லார்க் 368
அவாவினை 367
அவாவென்ப 361
அவிசொரிந் 252
அவையறிந் 711
அவையறியார் 711
அவ்வித் 167
அவ்வியநெஞ் 169
அழக்கொண்ட 659
அழச்சொல்லி 795
அழல்போலு 1228
அழிவதூஉ 467
அழிவந்த 807
அழிவினவை 787

அழிவின்றறை 764
அழுக்கற் 170
அழுக்காறவா 35
அழுக்காறுடையார்க் 165
அழுக்காறுடையான் 135
அழுக்காறெனு 168
அழுக்காற்றின் 164
அளவல்ல 289
அளவளா 523
அளவறிந்தார் 288
அளவறிந்து 479
அளவின்கண் 286
அளித்தஞ்சல் 1154
அறங்கூறா 181
அறஞ்சாரா 1047
அறஞ்சொல்லு 185
அறத்தாறிது 37
அறத்தாற்றின் 46
அறத்தான் 39
அறத்திற்கே 76
அறத்தினூஉங் 32
அறம்பொருள் 501
அறவாழி 8
அறவினையா 321
அறவினையு 909
அறனழீஇ 182
அறனறிந்தான்ற 635
அறனறிந்துமூத்த 441
அறனறிந்து வெஃகா 179
அறனாக்கம் 163
அறனியலான் 147
அறனிழுக்கா 384
அறனீனு 754
அறனெனப் 49
அறனோக்கி 189
அறன்கடை 142
அறன்வரையா 150
அறிகிலா 1391
அறிகொன் 638
அறிதோ 1110
அறிந்தாற்றி 515
அறிவற்றம் 421
அறிவிலார் 843
அறிவிலான் 842
அறிவினா 315
அறிவினு 203
அறிவின்மை 841
அறிவுடையாராவி 427
அறிவுடையாரெல்லா 430
அறிவுரு 684
அறுவாய் 1117
அறைபறை 1076
அற்கா 333
அற்றதறிந்து 944
அற்றமறைக்கும் 980
அற்றமறைத்தலோ 846
அற்றவரென்பா 365
அற்றாரழிபசி 226
அற்றாரைத் 506
அற்றார்க்கொன் 1007
அற்றா லளவறிந் 943
அற்றேமென் 626
அனிச்சப்பூ 1115
அனிச்சமு 1120
அன்பகத் 78
அன்பறி வாராய்ந்த 682
அன்பறிவு தேற்றம் 153
அன்பில னான்ற 862
அன்பிலா 72
அன்பிற்கு 71
அன்பின் வழிய 80
அன்பின் விழை 111
அன்பீனு 74
அன்புடைமை—இவ் 992
அன்புடைமை—வேந் 168
அன்பு நா 983
அன்பு மறனு 49
அன்புற் றமர்ந்த 75
அன்பொரீஇ 1091
அன்போ டியைந்த 76
அன்றறிவா 33
ஆகா றள 478
ஆகூழா 371
ஆக்கங் கருதி 463
ஆக்கமதர் 594
ஆக்க மிழந் 593
ஆக்கமுங் 642
ஆங்கமை 740
ஆபயன் 560
ஆயுமறிவின 918
ஆய்ந்தாய்ந்து 972
ஆராவியற்கை 370

ஆவிற்த 1066
ஆள்வினையு 1022
ஆற்றாரு 493
ஆற்றி னளவறிந் தீக 477
ஆற்றி னளவறிந்து 725
ஆற்றி னிலைதளர்ந் 716
ஆற்றி னொழுக்கி 48
ஆற்றின் வருந்தா 468
ஆற்றுபவர்க்கு 741
ஆற்றுவா—இக 891
ஆற்றுவா—பசி 225
ஆற்றுவா—பணி 985
இகலானாம் 860
இகலிற்கெதிர் 858
இகலின் மிக 856
இகலெதிர் 855
இகலென்ப 851
இகலென்னும் 853
இகல்கானான் 859
இகழ்ச்சியிற் 539
இகழ்ந்தெள்ளா 1057
இடமெல்லா 1064
இடனில் 218
இடிக்குந் 447
இடிப்பாரை 418
இடிபுரிந் 607
இடுக்கட் 654
இடுக்கண் கால் 1030
இடுக்கண்வருங் 621
இடும்பைக்கிடும்பை 623
இடும்பைக்கே 1029
இடைதெரிந்து 712
இணருழ்த்து 650
இணரெரி 308
இதனை 517
இமைப்பிற் 1129
இமையாரின் 906
இம்மைப் 1315
இயல்பாகு 344
இயல்பினா 47
இயல்புளிக் 545
இயற்றலு 385
இரக்க 1051
இரத்தலி 229
இரத்தலு 1054
இரந்து 1062
இரப்ப 1067
இரப்பாரை 1058
இரப்பான் 1060
இரவா 1035
இரவுள்ள 1069
இரவென்னு 1068
இருணீங்கி 352
இருநோக் 1091
இருந்துள்ளி 1243
இருந்தோம்பி 81
இருபுனலு 737
இருமனப் 920
இருமை 23
இருவேறுலகத் 374
இருள்சே 5
இலக்க 627
இலங்கிழாய் 1262
இலமென்றசைஇ 1040
இலமென்றுவெஃ 174
இலர்பல 270
இலனென்று 205
இலனென்னு 223
இல்லதெ 53
இல்வாழ்வா 41
இல்லாரை 752
இல்லாளை 905
இல்லாள்கண் 902
இல்லைதவ 1331
இவறலு 432
இழத்தொறூஉ 940
இழிவறிந் 946
இழுக்கலுடை 415
இழுக்காமை 536
இழைத்த 779
இளித்தக்க 1288
இளிவரின் 970
இளைதாக 879
இளைய 698
இறந்தமைந்த 900
இறந்த வெகுளி 531
இறந்தார் 310
இறப்பே 977
இறவீனு 8C
இறுதி 690
இறைகடியன் 564
இறைகாக்கும் 547

இற்பிறந்தார் கண்ணல்ல 951
இற்பிறந்தார் கண்ணேயு 1044
இனத்தாற்றி 565
இனம்போன் 822
இனிய வுளவாக 100
இனியன்ன 1294
இளைத்துணைத் 87
இனையரிவ 790
இன்கணுடைத் 1152
இன்சொலா லீத்தளிக்க 387
இன்சொலா லீரம் 91
இன்சொலினி 99
இன்பங் கடல் 1166
இன்பத்துள் - பயக்கும் 854
இன்பத்துள் - விழை 629
இன்ப மிடையறா 369
இன்ப மொருவற் 1052
இன்பம் - இடும் 628
இன்பம் - வினை 615
இன்மை யிடும்பை 1063
இன்மையென 1042
இன்மையொரு 988
இன்மையினின்னாத 1041
இன்மையி னின்னாது 558
இன்மையு 153
இன்றி யமையாச் 961
இன்றும் 1048
இன்னா செய்தாரை 314
இன்னா செய்தார்க் 987
இன்னா திரக்கப் 224
இன்னா தினனில் 1158
இன்னா மை 630
இன்னா வெனத் 316
ஈட்ட மிவறி 1003
ஈத லிசைபட 231
ஈத்துவக்கு 228
ஈர்ங்கை 1077
ஈவார்கண் 1059
ஈன்ற பொழுதின் 69
ஈன்றாள் பசி 656
ஈன்றாள் முகத் 923
உடம்பா டிலாதவர் 890
உடம்பொடுயி 1122
உடுக்கை 788
உடுப்பதூஉம் 1079
உடைசெல்வம் 939
உடைத்தம் 473
உடைமையு 89
உடையரெனப் 591
உடையார்முன் 395
உட்கப் படாஅர் 921
உட்பகை யஞ்சித் 883
உணர்வதுடை 718
உணலினு 1326
உண்டார்க 1090
உண்ணற்க 922
உண்ணாது 160
உண்ணாமை யுள்ள 255
உண்ணாமை வேண்டும் 257
உதவிவரைத் 105
உப்பமைந் 1302
உயர்பகலந் 743
உயிருடம்பின் 330
உயிர்ப்ப 880
உய்த்த 1287
உரபொரு 600
உரனென்னுந் 24
உரனசைஇ 1263
உருவுகண் 667
உருளாய 933
உரைப்பா 232
உலகத்தா 850
உலகத்தோ 140
உலகந் தழீஇய 425
உலைவிடத் 762
உவக்கா 1185
உவந்துறைவற் 1130
உவப்பத் 394
உழந்துழந் 1177
உழவினார் 1036
உழுதுண்டு 1033
உழுவாருலகத் 1032
உழைப்பிரிந்து 530
உள போன் 574
உளரெனினும் 730
உளரென்னும் 406
உளவரை 480
உள்ளக்களித் 1281
உள்ளத்தார்காத 1249
உள்ளத்தா லுள்ள 282
உள்ளத்தாற் பொய்யா 298
உள்ள மிலாதவர் 594

| | | | |
|---|---|---|---|
| (உள்ள முடைமை | 592) | ஊருணி | 215 |
| உள்ளபோன் | 1170 | ஊழி பெயரினும் | 189 |
| உள்ளற்க | 7798 | ஊழிற் பெரு | 380 |
| உள்ளிய தெல்லாம் | 309 | ஊழையும் | 620 |
| உள்ளிய தெய்தல் | 540 | ஊறொரால் | 662 |
| உள்ளினுந் | 1201 | ஊனைக் குறித்த | 1013 |
| உள்ளினேன் | 1316 | எச்சமென் | 1004 |
| உள்ளுவ தெல்லாம் | 596 | எட்பக வன்ன | 889 |
| உள்ளுவன் - உரைப்ப | 1184 | எண்சேர்ந்த | 910 |
| உள்ளுவன் • மறப்பின் | 1125 | எண்ணித் | 461 |
| உள்ளொற்றி | 927 | எண்ணிய | 666 |
| உறங்குவது | 339 | எண்ணியார் | 494 |
| உறன் முறையான் | 885 | எண்ணென்ப | 392 |
| உறாஅ தவர்க் கண்ட | 1292 | எண்பதத்தா லெய்த | 991 |
| உறாஅதவர் போல் | 1096 | எண்பதத்தா னோரா | 548 |
| உறாஅதோ | 1143 | எண்பொருள | 424 |
| உறாஅர்க் | 1200 | எதிரதாக் | 429 |
| உறினட் | 812 | எந்நன்றி | 110 |
| உறினுயி | 778 | எப்பொருளும் | 695 |
| உறுதோ | 1106 | எப்பொருளெத் | 355 |
| உறுபசியு | 734 | எப்பொருள்யார் | 423 |
| உறுபொருளும் | 756 | எய்தற்கரிய | 489 |
| உறுப்பமைந் | 761 | எரியாற் | 896 |
| உறுப்பொத்தல் | 993 | எல்லாப் | 746 |
| உறுவது | 813 | எல்லார்க்கு நன்றாம் | 125 |
| உறைசிறியார் | 680 | எல்லார்க்கு மெல்லாம் | 582 |
| உற்றநோய் நீக்கி | 442 | எல்லா விளக்கும் | 299 |
| உற்றநோய் நோன்றல் | 261 | எல்லைக்க | 806 |
| உற்றவன் | 950 | எவ்வ துறைவ | 426 |
| உற்றா னளவும் | 949 | எழுதுங்காற் | 1285 |
| *ஊக்கமுடைமை | 592 | எழுபிறப்புந் | 62 |
| ஊக்கமுடையான் | 486 | எழுமையெழு | 107 |
| ஊடலிற் றோற்றவர் | 1327 | எளிதென | 145 |
| ஊடலிற் றோன்றும் | 1322 | எள்ளாத | 470 |
| ஊடலினுண்டாங் | 1307 | எள்ளாமை | 281 |
| ஊடலுணங்க | 1310 | எள்ளினிளி | 1298 |
| ஊடலுணர்தல் | 1109 | எற்றிற்குரியர் | 1080 |
| ஊடற்கட் | 1284 | எற்றென் றிரங்குவ | 655 |
| ஊடிப்பெறுகுவம் | 1328 | எனைத்தானு நல்லவை | 416 |
| ஊடியவரை | 1304 | எனைத்தானுமெந் | 377 |
| ஊடி யிருந்தேமா | 1312 | எனைத்திட்ப | 670 |
| ஊடுக மன்னோ | 1329 | எனைத்துங் | 820 |
| ஊடுதல் | 1330 | எனைத் துணைய | 144 |
| ஊணுடை | 1012 | எனைத்து நினைப் | 1208 |
| ஊதிய | 197 | எனைத்தொன் | 1202 |
| ஊரவர் | 1147 | எனைப்பகை | 270 |

| | |
|---|---|
| எனைமாட்சித் | 750 |
| எனை வகையான் | 514 |
| என்பிலதனை | 77 |
| என்றுமொருவு | 652 |
| என்னைமுன் | 771 |
| ஏதம்பெருஞ் | 1006 |
| ஏதிலா ரானத் | 837 |
| ஏதிலார் குற்றம் | 190 |
| ஏதிலார் போலப் | 1099 |
| ஏந்திய | 899 |
| ஏமுற் றவரினும் | 873 |
| ஏரினு நன்றால் | 1038 |
| ஏரினுழாஅ | 14 |
| ஏவவுஞ் | 848 |
| ஐந்தவித்தான் | 25 |
| ஐயத்தி | 353 |
| ஐயப்படாஅ | 702 |
| ஐயுணர் | 354 |
| ஒட்டார் பின் | 967 |
| ஒண்ணுதற் | 1088 |
| ஒண்பொருள் | 760 |
| ஒத்த தறிவான் | 214 |
| ஒப்புரவி னால் | 220 |
| ஒரு தலையான் | 1196 |
| ஒருநா | 1269 |
| ஒரு பொழுதும் | 337 |
| ஒருமைக்கண் | 398 |
| ஒருமைச் செயல் | 835 |
| ஒருமை மகளிரே | 974 |
| ஒருமையு ளாமை | 126 |
| ஒலித்தக்கா | 763 |
| ஒல்லுங் கருமம் | 818 |
| ஒல்லும் வகை | 33 |
| ஒல்லும்வா யெல் | 673 |
| ஒல்வ தறிவ | 477 |
| ஒழுக்கத்தி னெய்துவர் | 132 |
| ஒழுக்கத்தி னொல்கார் | 136 |
| ஒழுக்கத்து நீத்தார் | 21 |
| ஒழுக்க முடைமை | 133 |
| ஒழுக்க முடையவர்க் | 139 |
| ஒழுக்கமும் | 952 |
| ஒழுக்கம் விழுப் | 131 |
| ஒழுக்காறாக் | 161 |
| ஒளியார் முன் | 714 |
| ஒளியொருவற் | 971 |
| ஒறுத்தாரை | 15 |
| ஒறுத்தார்க் | 156 |
| ஒறுத்தாற்றும் | 579 |
| ஒற்றினா | 583 |
| ஒற்றுமுரை | 581 |
| ஒற்றொற்றித் | 588 |
| ஒற்றெற் றுணரா | 589 |
| ஒன்றாக நல்லது | 323 |
| ஒன்றாமை | 886 |
| ஒன்றா வுலகத் | 233 |
| ஒன்றானுந் | 128 |
| ஒன்றெய்தி | 932 |
| ஒன்னார்த் | 264 |
| ஓஒதல் | 653 |
| ஓஒ வினிதே | 1176 |
| ஓதி யுணர்ந்தும் | 834 |
| ஓம்பி னமைந் | 1155 |
| ஓர்த்துள்ளம் | 357 |
| ஓர்ந்துகண் | 541 |
| கடலன்ன | 1137 |
| கடலோடா | 496 |
| கடனறிந்து | 687 |
| கடனென்ப | 981 |
| கடாஅ வுருவொடு | 585 |
| கடாஅக் களிற் | 1087 |
| கடிதோச்சி | 562 |
| கடிந்த | 658 |
| கடுஞ்சொல்லன் | 566 |
| கடுமொழியுங் | 567 |
| கடைக்கொட்கச் | 663 |
| கணைகொடிதி | 279 |
| கண்களவு | 1092 |
| கண்டது | 1146 |
| கண்டாங் | 1171 |
| கண்டா ருயி | 1084 |
| கண்டுகேட் | 1101 |
| கண்ணிறைந்த | 1272 |
| கண்ணிற் கனிகலங் | 575 |
| கண்ணிற் றுனித்தே | 1290 |
| கண்ணின் பசப்போ | 1240 |
| கண்ணின்று | 184 |
| கண்ணுங் கொளச் | 1244 |
| கண்ணுடைய | 393 |
| கண்ணுள்ளார் | 1127 |
| கண்ணுள்ளிற் | 1126 |
| கண்ணொடுகண் | 1100 |
| கண்ணோட்டத் | 155 |

கண்ணோட்டமில் 577
கண்ணோட்டமென் 571
கதங்காத்துக் 130
கதுமெனத் 1173
கயலுண்கண் 1212
கரத்தலு 1162
கரப்பவர்க் 1070
கரப்பிடும்பை 1056
கரப்பிலாநெஞ் 1053
கரப்பிலார் 1055
கரப்பினுங் 1271
கரவதுவந் 1061
கருமஞ்சிதையா 578
கருமஞ் செய 1021
கருமணியிற் 1123
கருமத்தா 1011
கருவியுங் 631
கலங்காது 668
கலந்துணர்த்தும் 1246
கல்லாத மேற்கொண் 845
கல்லாதவரிற் 729
கல்லா தவரும் 403
கல்லாதா னொட்பங் 404
கல்லாதான் சொற் 402
கல்லார்ப்பிணிக் 570
கல்லா வொருவன் 405
கல்லான் 870
கவறுங் 935
கவ்வையாற் 1144
கழாஅக்கால் 840
களவினா 283
களவின்கண் 284
களவென்னுங் 287
களித்தறியேன் 928
களித்தானைக் 929
களித்தொறுங் 1145
கள்வார்க்குத் 290
கள்ளுண்ணாப் 930
கறுத்தின்னா 312
கற்க கசடறக் 391
கற்றதனா லாய 2
கற்றறிந்தார் 717
கற்றாரு 722
கற்றார்முன் 724
கற்றில னாயினுங் 414
கற்றீண்டு 356
கற்றுக்கண் 686
கனவினா 1214
கனவினு 819
காக்க 122
காக்கை 527
காட்சிக் 386
காணாச் 866
காணாதாற் 849
காணிற் 1114
காணுங்காற் 1286
காண்க மன் 1265
காதலகாதல் 440
காதல ரில்வழி 1224
காதலர் தூதொடு 1211
காதலவரில 1242
காதன்மை 507
காமக்கடல் 1164
காமக் கடும்புனலுய்க்கு 1134
காமக் கடும்புனனீந்தி 1167
காமக்கணிச்சி 1251
காமமு நாணு 1163
காமமுழந்து 1131
காமமென 1252
காமம் விடு 1247
காமம் வெகுளி 360
காலங்கருதி 485
காலத்தி னாற் 102
காலாழ் களரி 500
காலைக்குக் 1225
காலை யரும்பிப் 1227
கான முயலெய்த 722
குடம்பை 338
குடிசெய்வல் 1023
குடிசெய்வார்க் 1028
குடிதழீஇக் 544
குடிபுறங் 549
குடிப்பிறந்தார் 957
குடிப்பிறந்து குற்றத் 502
குடிப்பிறந்து தன்கண் 794
குடிமடிந்து 604
குடியாண்மை 609
குடியென்னுங் 601
குணநலஞ் 982
குணநாடிக் 504
குணமென்னுங் 29
குணனிலனாய்க் 868

| | |
|---|---|
| குணனுங் | 793 |
| குலஞ்சுடுங் | 1019 |
| குழலினிது | 66 |
| குறிக்கொண்டு | 1095 |
| குறித்தது | 704 |
| குறிப்பறிந்து | 696 |
| குறிப்பிற்குறிப்புணரா | 705 |
| குறிப்பிற் குறிப்புணர் | 703 |
| குற்ற மிலனாய்க் | 1025 |
| குற்றமே | 434 |
| குன்றன்னார் | 898 |
| குன்றி னனையாரும் | 965 |
| குன்றேறி | 758 |
| கூடிய காமம் | 1264 |
| கூத்தாட் | 332 |
| கூழுங் | 554 |
| கூறாமை | 701 |
| கூற்றங் | 269 |
| கூற்றத்தைக் | 894 |
| கூற்றமோ | 1085 |
| கூற்றுடன்று | 765 |
| கெடல்வேண்டிற் | 893 |
| கெடாஅவழி | 809 |
| கெடுங்காலைக் | 799 |
| கெடுப்பதூஉங் | 15 |
| கெடுவல் யான் | 116 |
| கெடுவாக | 117 |
| கெட்டார்க்கு | 1293 |
| கேடறியாக | 736 |
| கேடில் | 400 |
| கேடும் | 115 |
| கேட்டார்ப் | 643 |
| கேட்டினும் | 796 |
| கேட்பினும் | 418 |
| கேளிழுக்கங் | 808 |
| கைம்மாறு | 211 |
| கையறியாமை | 925 |
| கைவேல் | 774 |
| கொக்கொக்க | 490 |
| கொடியார் | |
| கொடுமையிற் | 1169 |
| கொடியார் | |
| கொடுமையுரை | 1235 |
| கொடுத்தலுங் | 525 |
| கொடுத்துங் | 867 |
| கொடுப்ப தழுக் | 166 |
| கொடுப்பதூஉம் | 1005 |
| கொடும்புருவம் | 1086 |
| கொடையளி | 390 |
| கொலைமேற் | 551 |
| கொலையிற் | 550 |
| கொலைவினைய | 329 |
| கொல்லாநலத்தது | 984 |
| கொல்லாமை | 326 |
| கொல்லான் | 260 |
| கொளப்பட்டேம் | 699 |
| கொளற்கரிதாய்க் | 745 |
| கொன்றன்ன | 109 |
| கோட்டுப்பூச் | 1313 |
| கோளில் | 9 |
| சமஞ்செய்து | 118 |
| சலத்தாற் | 660 |
| சலம்பற்றிச் | 956 |
| சாதலி னின்னாத | 230 |
| சாயலு நாணு | 1183 |
| சார்புணர்ந்து | 359 |
| சால்பிற்குக் | 986 |
| சான்றவர் | 990 |
| சிதைவிடத் | 597 |
| சிறப்பறிய | 590 |
| சிறப்பீனுஞ் செல்வமுமீ | 31 |
| சிறப்பீனுஞ் செல்வம் | 311 |
| சிறப்பொடு | 18 |
| சிறியா | 976 |
| சிறு காப்பிற் | 744 |
| சிறுபடையான் | 498 |
| சிறுமை நமக் | 1231 |
| சிறுமை பல | 934 |
| சிறுமையுஞ் | 769 |
| சிறுமையுணீங்கிய | 98 |
| சிறைகாக்குங் | 57 |
| சிறைநலனுஞ் | 499 |
| சிற்றின மஞ்சும் | 451 |
| சிற்றின்பம் | 173 |
| சினத்தைப் | 307 |
| சினமென்னுஞ் | 306 |
| சீரிடங் காணின் | 821 |
| சீரினுஞ்சீ | 962 |
| சீருடைச் | 1001 |
| சீர்மை | 195 |
| சுடச்சுடரும் | 267 |
| சுவையொளி | 27 |

| | |
|---|---|
| சுழலு மிசை | 777 |
| சுழன்றும் | 1031 |
| சுற்றத்தால் | 524 |
| சூழாமற் | 1042 |
| சூழ்ச்சி | 671 |
| சூழ்வார் | 445 |
| செப்பமுடையவ | 112 |
| செப்பின் | 887 |
| செயற்கரியசெய் | 26 |
| செயற்கரியயாவுள | 781 |
| செயற்கை | 637 |
| செயற்பால செய்யா | 437 |
| செயற்பால தோரும் | 40 |
| செயிரிற்றலை | 258 |
| செய்கபொருளை | 759 |
| செய்தக்க | 466 |
| செய்தேமஞ் | 815 |
| செய்யாமற்செய்த | 101 |
| செய்யாமைசெற் | 313 |
| செய்வானை | 316 |
| செய்வினை | 677 |
| செருக்கும் | 431 |
| செருவந்த | 369 |
| செல்லாமை | 1151 |
| செல்லாவிடத்து | 302 |
| செல்லான் | 1039 |
| செல்லிடத்துக் | 301 |
| செல்வத்துட் | 411 |
| செல்விருந்து | 86 |
| செவிகைப்ப | 389 |
| செவிக்குணவு | 412 |
| செவிச்சொல்லும் | 694 |
| செவியிற் | 426 |
| செவியுணவின் | 413 |
| செறாஅச்சிறு | 1097 |
| செறிதொடி | 1275 |
| செறிவறிந்து | 123 |
| செறுநரை | 488 |
| செறுவார்க்கு | 869 |
| செற்றவர் | 1256 |
| செற்றா ரெனக் | 1245 |
| செற்றார்பின் | 1255 |
| சென்றவிடத் | 422 |
| சொலல்வல்லன் | 647 |
| சொல்லுக சொல்லிற் | 200 |
| சொல்லுகசொல்லை | 645 |
| சொல்லுதல் | 664 |
| சொல்லப்பயன் | 1078 |
| சொல்வணக்கம் | 827 |
| சொற்கோட்டம் | 119 |
| ஞாலங்கருதினுங் | 484 |
| தகுதி | 111 |
| தக்காங்கு | 561 |
| தக்காரினத்த | 446 |
| தக்கார்தகவில | 114 |
| தஞ்சந்தமரல்ல | 1300 |
| தணந்தமை | 1233 |
| தண்ணந்துறைவன் | 1277 |
| தந்தைமகற் | 67 |
| தந்நலம் | 916 |
| தந்நெஞ்சத் | 1205 |
| தமராகி | 529 |
| தம்பொரு | 63 |
| தம்மிலிருந்து | 1107 |
| தம்மிற் பெரி | 444 |
| தம்மிற்றம் | 68 |
| தலைப்பட்டார் | 348 |
| தலையினிழிந்த | 964 |
| தவஞ்செய்வார் | 266 |
| தவமறைந் | 274 |
| தவமுந் | 262 |
| தவறில | 1325 |
| தள்ளா | 731 |
| தற்காத்துத் | 56 |
| தனக்குவமை | 7 |
| தனியே | 1296 |
| தன்குற்றம் | 436 |
| தன்றுணை | 875 |
| தன்னுயிர்க் | 318 |
| தன்னுயிர் தானறப் | 268 |
| தன்னுயிர் நீப்பின் | 327 |
| தன்னூன் | 251 |
| தன்னெஞ் | 293 |
| தன்னைத்தான்காக் | 305 |
| தன்னைத்தான் காதல | 209 |
| தன்னையுணர்த்தி | 1319 |
| தாமின் புறுவ | 399 |
| தாம்வீழ்வார் தம் | 1191 |
| தாம் வீழ்வார் மென் | 1103 |
| தாம் வேண்டின் | 1150 |
| தார் தாங்கிச் | 767 |
| தாளாண்மையில் | 614 |

| | |
|---|---|
| தாளாண்மையென் | 613 |
| தாளாற்றித் | 212 |
| தானந்தவ | 19 |
| திறனல்ல | 157 |
| திறனறிந்து | 644 |
| தினற்பொருட்டாற் | 256 |
| தினைத்துணை நன்றி | 104 |
| தினைத் துணையாங் | 433 |
| தினைத் துணையு | 1282 |
| தீப்பால | 206 |
| தீயவை செய் | 208 |
| தீயுவை தீய | 202 |
| தீபளவன்றித் | 490 |
| தீயினாற் | 216 |
| தீவினையா | 202 |
| துஞ்சினார் | 926 |
| துஞ்சுங்காற் | 1218 |
| துணைநல | 651 |
| துப்பார்க்குத் | 12 |
| துப்பினெவ | 1165 |
| துப்புரவில் | 1050 |
| தும்முச் | 1318 |
| துளியின்மை | 557 |
| துறந்தார்க்குத்துப் | 263 |
| துறந்தார்க் குத்துவ் | 42 |
| துறந்தார் படிம | 586 |
| துறந்தார் பெருமை | 22 |
| துறந்தாரின் | 159 |
| துறப்பார் | 378 |
| துறைவன் | 1157 |
| துனியும் | 1106 |
| துன்பத்திற் | 1299 |
| துன்பமுற | 669 |
| துன்புறாஉந் | 94 |
| துன்னாத் | 1250 |
| துன்னியார் | 188 |
| தூஉய்மை | 364 |
| தூங்காமை | 383 |
| தூங்குக | 672 |
| தூய்மை | 688 |
| தெண்ணீரடு | 1065 |
| தெய்வத்தா | 619 |
| தெய்வந் | 55 |
| தெரிதலுந் | 634 |
| தெரிந்த | 462 |
| தெரிந்துணரா | 1172 |
| தெருளாதான் | 249 |
| தெளிவிலதனை | 464 |
| தென்புலத்தார் | 43 |
| தேரான் பிறனை | 508 |
| தேரான் தெளிவும் | 510 |
| தேவரனையர் | 1073 |
| தேறற்க | 509 |
| தேறினுந் | 876 |
| தொகச்சொல்லித் | 685 |
| தொடங்கற்க | 491 |
| தொடலைக் | 1135 |
| தொடிநோக்கி | 1279 |
| தொடிப்புழுதி | 1037 |
| தொடியொடு | 1236 |
| தொடிற் சுடின் | 1159 |
| தொட்டனைத் | 396 |
| தொல்வரவுந் | 1043 |
| தொழுத | 828 |
| தோன்றிற் | 249 |
| நகல்வல்ல | 999 |
| நகுதற்பொருட் | 784 |
| நகையீகை | 953 |
| நகையுமுவகை | 304 |
| நகையுள்ளும் | 995 |
| நகைவகைய | 817 |
| நசைஇயார் | 1199 |
| நச்சப்படாதவன் | 1008 |
| நடுவின்றி | 171 |
| நட்டார் குறை | 908 |
| நட்டார்க்கு | 679 |
| நட்டார் போல் | 826 |
| நட்பிற்கு வீற்றி | 789 |
| நட்பிற்குறுப்புக் | 802 |
| நண்பாற்றா | 998 |
| நத்தம் போற் | 235 |
| நயந்தவர்க்கு | 1181 |
| நயந்தவர் நல் | 1232 |
| நயனில சொல்லி | 197 |
| நயனிலனென் | 193 |
| நயனீன்று | 97 |
| நயனுடையான் | 219 |
| நயனொடு | 994 |
| நயன்சாரா | 194 |
| நலக்குரியார் | 149 |
| நலத்தகை | 1305 |
| நலத்தின்கண் | 958 |

| | |
|---|---|
| நலப் வேண்டி | 960 |
| நல் குரவு | 1045 |
| நல்லவை | 375 |
| நல்லாண்மை | 1026 |
| நல்லார் கண் | 408 |
| நல்லாறெனப் | 324 |
| நல்லாறெனினுங் | 222 |
| நல்லாற்றா | 242 |
| நல்வினத்தி | 460 |
| நவிறொறும் | 783 |
| நற்பொருள் | 1046 |
| நனவினாற் கண்ட | 1215 |
| நனவினானந்நீத் | 1220 |
| நனவினா னல்காக் | 1217 |
| நனவினா னல்காத | 1213 |
| நனவினா னல்காரை | 1219 |
| நனவென | 1216 |
| நன்மையும் | 511 |
| நன்றறிவாரிற் | 1072 |
| நன்றாகு மாக் | 328 |
| நன்றாங்கால் | 379 |
| நன்றாற்ற | 469 |
| நன்றிக்கு | 138 |
| நன்றி மறப்பது | 108 |
| நன்றென்ற | 715 |
| நன்றே தரினு | 113 |
| நன்னீரை | 1111 |
| நாங்காதல் | 1195 |
| நாச்செற்று | 335 |
| நாடாது | 791 |
| நாடென்ப | 739 |
| நாடொறு நாடி | 553 |
| நாடோறு நாடுக | 520 |
| நாணகத் | 1020 |
| நாணாமை | 833 |
| நாணாலுயிரை | 1017 |
| நாணு மறந்தே | 1297 |
| நாணென | 1257 |
| நாணென்னு | 924 |
| நாணொடு | 1133 |
| நாண்வேலி | 1016 |
| நாநல | 641 |
| நாளென | 334 |
| நிணந்தீயி | 1260 |
| நிலத்தியல்பா | 452 |
| நிலத்திற் | 959 |
| நிலவரை | 234 |
| நிலை மக்கள் | 770 |
| நிலையஞ்சி | 325 |
| நிலையிற் | 124 |
| நில்லாத | 331 |
| நிழனீரு | 881 |
| நிறைநீர | 782 |
| நிறைநெஞ்சம் | 917 |
| நிறைமொழி | 28 |
| நிறையரியர் | 1138 |
| நிறையுடைமை | 154 |
| நிறையுடையே | 1254 |
| நினைத்திருந்து | 1320 |
| நினைத்தொன்று | 1241 |
| நினைப்பவர் | 1203 |
| நீங்கான் | 864 |
| நீங்கிற் றெறூஉ | 1104 |
| நீரின்றமை | 20 |
| நீரு நிழல | 1309 |
| நுணங்கிய | 417 |
| நுண்ணிய நூல் | 373 |
| நுண்ணியம் | 710 |
| நுண்மாண் | 407 |
| நுனிக் கொம்பர் | 476 |
| நூலாரு | |
| நெஞ்சத்தார் | 1128 |
| நெஞ்சிற் | 276 |
| நெடுங்கட | 17 |
| நெடுநீர் | 605 |
| நெடும்புனலுள் | 495 |
| நெய்யா | 1148 |
| நெருநலுள | 336 |
| நெருநற்று | 1278 |
| நெருப்பினும் | 1049 |
| நோக்கினா ணோக்கி | 1093 |
| நோக்கினாணோக்கெதிர் | 1082 |
| நோதலெவன் | 1308 |
| நோயெல்லாம் | 320 |
| நோய் நாடி | 948 |
| நோவற்க | 877 |
| நோனாவுடம்பு | 1132 |
| பகச் சொல்லிக் | 187 |
| பகல்கருதிப் | 852 |
| பகல்வெல்லுங் | 481 |
| பகுத்துண்டு | 322 |

பகை நட்பாக் 874
பகை நட்பாங் 830
பகைபாவ 461
பகைமையுங் 709
பகையகத்துச் சாவார் 723
பகையகத்துப்பேடி 727
பகையென்னும் 871
பசக்கமற் 1189
பசந்தாளிவ 1188
பசப்பென 1190
படலாற்றா 1175
படியுடையார் 606
படுபயன் 172
படைகுடி 381
படைகொண்டார் 253
பணியுமா 978
பணிவுடைய 95
பணைநீங்கிப் 1234
பண்டறியேன் 1083
பண்ணென்னாம் 573
பண்பிலான் 1000
பண்புடை 996
பதிமருண்டு 1229
பயனில 192
பயனில்சொல் 196
பயன்மரம் 216
பயன்றூக்கிப் 912
பயன் றூக்கார் 103
பரிந்தவர் 1248
பரிந்தோம்பிக் காக்க 132
பரிந்தோம்பிப்பற் 88
பரியது 699
பரியினு 376
பருகுவார் 811
பருவத்தோ 482
பருவரலும் 1197
பலகுடை 1034
பலசொல்லக் 649
பல நல்ல 823
பல் குழுவும் 735
பல்லவை 720
பல்லார்பகை 151
பல்லார் முனியப் 191
பழகிய செல்வமு 937
பழகியநட்பெவன் 803
பழிமலைந்து 657
பழியஞ்சிப் 144
பழுதெண்ணு 631
பழைமை 809
பழையமெனக் 700
பற்றற்றகண்ணும் 521
பற்றற்றகண்ணே 194
பற்றற்றே 275
பற்றிவிடாஅ 34[illegible]
பற்றுக 3[illegible]
பற்றுள்ள 438
பனியரும்பிப் 1223
பன்மாயக் 1258
பாடுபெறுதி 1[illegible]7
பாத்தூண் 22
பாலொடு 1121
பிணிக்கு 1102
பிணியின்மை 738
பிணையேர் 1089
பிரித்தலும் 633
பிரிவுரைக்கும் 1156
பிழைத்துணர்ந்தும் 417
பிறப்பென்னும் 358
பிறப்பொக்கு 972
பிறர்க்கின்னா 319
பிறர்நாண 1018
பிறர்பழியும் 1015
பிறவிப்பெருங் 10
பிறன்பழி 186
பிறன்பொருளாள் 141
பிறன்மனை 148
புகழின்றாற் 966
புகழ்ந்தவை 538
புகழ்பட 237
புகழ்புரிந் 59
புக்கிலமைந் 340
புணர்ச்சி 785
புத்தே ளுலகத் 213
புரந்தார் 780
புலத்தலிற் 1323
புலப்பலெனச் 1259
புலப்பேன்கொல் 1267
புல்லவையுட் 719
புல்லா திராஅப் 1187
புல்லிக்கிடந் 1187
புல்லிவிடாஅப் 132
புறங்குன்றி 27

புறங்கூறிப் 183
புறத்துறும் 79
புறந்தூய்மை 298
புன்கண்ணை 1222
பெண்ணியலா 1311
பெண்ணினாற் 1280
பெண்ணிற் 54
பெண்ணேவல் 907
பெயக்கண்டு 580
பெயலாற்றா 1174
பெரிதாற்றிப் 1276
பெரிதினிது 839
பெரியாரைப் 892
பெருக்கத்து 963
பெருங்கொடையான் 526
பெருமைக்கு 505
பெருமை பெருமித 979
பெருமை யுடையவ 975
பெரும்பொருளாற் 732
பெறாஅமை 1295
பெறினென்னாம் 1270
பெறுமவற்றுள் 61
பெற்றாற் பெறிற் 58
பேணாது பெட்டாருள் 1178
பேணாது பெட்ப 1283
பேணாது பெண் 902
பேதை பெருங் 816
பேதைப் படுக்கு 372
பேதைமையுலெல் 832
பேதைமையென்ப 831
பேதைமையொன்றோ 805
பேராண்மை 773
பொச்சாப் பார்க் 533
பொச்சாப்புக் 532
பொது நலத்தார் 915
பொது நோக் 528
பொய் படு 836
பொய்ம்மையும் 292
பொய்யாமைபொய் 296
பொய்யாமையன்ன 297
பொருடீர்ந்த 199
பொருட் பெண்டிர் 913
பொருட் பொருளார் 914
பொருணீங்கிப் 246
பொருண்மாலை 1236
பொருளல் லவரைட் 751
பொருளல் லவற்றைப் 351
பொருளற்றார் 248
பொருளாட்சி 252
பொருளானா 1002
பொருளென்னு 753
பொருள்கருவி 675
பொருள்கெடுத்துப் 938
பொள்ளென 487
பொறியின்மை 618
பொறிவாயி 6
பொறுத்த 152
பொறையொருங்கு 733
போற்றினரியவை 693
மகன்றந்தைக் 70
மக்கண் மெய் 65
மக்களே போல்வர் 1071
மங்கல மென்ப 60
மடலூர்தல் 1136
மடிமடிக் 606
மடிமை 608
மடியுளாள் 617
மடியை 602
மடுத்தவா 624
மணிநீரு 742
மணியிற் றிகழ் 1273
மண்ணோ டியைந்த 576
மதிநுட்ப 635
மதியு மடந்தை 1116
மயிர்நீப்பின் 969
மருந்தாகி 217
மருந்தோ 968
மருவுக 800
மலரன்ன கண்ணாண் 1113
மலரன்னகண்ணா ளருமை 1142
மலரினு 1289
மலர்காணின் 1112
மலர்மிசை 3
மழித்தலு 280
மறத்தல் 303
மறந்தும் 204
மறப்பினு 134
மறப்பினெவ 1207
மறமான 766
மறவற்க 49
மறைந்தவை 5187

| | |
|---|---|
| மறைபெற | 1180 |
| மறைப்பேன் மற்காம | 1253 |
| மறைப்பேன் மன் | 1161 |
| மற்றியான் | 1206 |
| மற்றுந் தொடர்ப் | 345 |
| மனத்தது | 278 |
| மனத்தானா | 453 |
| மனத்தி னமையா | 825 |
| மனத்துக்கண் | 34 |
| மனத்துளது | 454 |
| மனத்தொடு | 295 |
| மனநலத்தி | 459 |
| மனநல நன்கு | 458 |
| மனநல மன் | 457 |
| மனந்தூயார்க் | 456 |
| மனந்தூய்மை | 455 |
| மனமாணா | 884 |
| மனைத்தக்க | 51 |
| மனைமாட்சி | 52 |
| மனையாளை | 904 |
| மனைவிழைவார் | 901 |
| மன்னர்க்கு | 556 |
| மன்னர்விழைப | 692 |
| மன்னுயிரெல் | 1168 |
| மன்னுயிரோம்பி | 244 |
| மாதர் முகம்போ | 1118 |
| மாலை நோய் | 1226 |
| மாலையோ | 1221 |
| மாறுபாடில் லாத | 945 |
| மிகச் செய்து | 829 |
| மிகன் மேவன் | 857 |
| மிகினும் | 941 |
| மிகுதியான் | 158 |
| முகத்தா | 93 |
| முகத்தி னினிய | 824 |
| முகத்தின் முதுக் | 706 |
| முகநக | 787 |
| முகநோக்கி | 708 |
| முகைமொக்குள் | 1274 |
| முடிவு | 676 |
| முதலிலார்க் | 449 |
| முயக் கிடைத் | 1239 |
| முயங்கிய | 1238 |
| முயற்சி | 616 |
| முரண்சேர்ந்த | 492 |
| முறிமேனி | 1113 |
| முறைகோடி | 559 |
| முறைசெய்து | 388 |
| முறைப்படச் | 640 |
| முற்றாற்றி | 748 |
| முற்றியு | 747 |
| முனைமுகத்து | 749 |
| முன்னுறக் | 535 |
| மேலிருந்து | 973 |
| மேற்பிறந்தா | 409 |
| மைய லொருவன் | 838 |
| மோப்பக் | 90 |
| யாகாவா | 127 |
| யாங் கண்ணிற் | 1140 |
| யாண்டுச் | 895 |
| யாதனின் | 341 |
| யாதானு | 397 |
| யாமு | 1204 |
| யாமெய்யாக் | 300 |
| யாரினுங் | 1341 |
| யானென | 346 |
| யானோக்குங் | 1094 |
| வகுத்தான் | 377 |
| வகைமாண்ட | 897 |
| வகையறச் | 465 |
| வகையறிந்து தன் | 878 |
| வகையறிந்து வல் | 721 |
| வசையிலா | 239 |
| வசையென்ப | 238 |
| வசையொழிய | 240 |
| வஞ்சமனத் | 271 |
| வருகமற் | 1266 |
| வருமுன்னர்க் | 453 |
| வருவிருந்து | 83 |
| வரைவிலா | 919 |
| வலியார்க்கு | 861 |
| வலியார்முன் | 250 |
| வலியி னிலைமை | 273 |
| வழங்குவ | 955 |
| வழிநோக்கான் | 865 |
| வழுத்தினா | 1317 |
| வறியார்க்கொன் | 221 |
| வன்கண் | 632 |
| வாணிகஞ் | 120 |
| வாய்மை | 291 |
| வாராக்கால் | 1179 |
| வாரி | 512 |

| | | | |
|---|---|---|---|
| வாழ்தலுயிர்க் | 1124 | வினைக்குரிமை | 518 |
| வாழ்வார்க்கு | 1192 | வினை செய்வார் | 584 |
| வாளற்றுப் | 1261 | வினைத்திட்ப | 664 |
| வானொடென் | 726 | வினை பகை | 674 |
| வாள்போல் | 882 | வினையான் | 678 |
| வானின் | 11 | வினை வலியு | 471 |
| வானுயர் | 272 | வீழப்படுவார் | 1194 |
| வானோக்கி | 542 | வீழுநர் | 3193 |
| விசும்பிற்றுளி | 16 | வீழு மிருவர்க் | 1108 |
| விடாஅது | 1230 | வீழ்நாள் | 38 |
| விடு மாற்றம் | 689 | வீழ்வாரின் | 1198 |
| விண்ணின்று | 13 | வீறெய்தி | 665 |
| வித்துமிடல் | 85 | வெண்மை | 844 |
| வியவற்க | 439 | வெருவந்த | 563 |
| விருந்து | 82 | வெள்ளத் - மலர் | 595 |
| விருப்பறாச் | 522 | வெள்ளத் - விடும்பை | 622 |
| விரைந்து | 648 | வேட்ட | 1105 |
| விலங்கொடு | 410 | வேட்பத்தார் | 646 |
| வில்லேருழவர் | 872 | வேட்பன | 697 |
| விழித்தகண் | 775 | வேண்டற்க வெஃகி | 177 |
| விழுப்புண் | 776 | வேண்டற்க வென்றிடி | 931 |
| விழுப்பேற்றி | 162 | வேண்டாமை | 363 |
| விழைதகையான் | 810 | வேணடிய | 265 |
| விழையார் | 814 | வேண்டினுண் | 342 |
| விளக்கற்றம் | 1186 | வேண்டுங்கால் | 362 |
| விளிந்தாரின் | 143 | வேண்டுதல் | 4 |
| விளியுமென் | 1209 | வேலன்று | 546 |
| வினை கலந்து | 1268 | வேலொடு | 552 |
| வினைக்கண்வினைகெடல் | 612 | வைத்தான் | 1001 |
| வினைக்கண் வினையுடை | 519 | வையத்துள் | 50 |